ஸ்ரீகலாவின்

வா... நாளை நாமாக...

வா! நாளை நாமாக!!!

VAA! NAALAI NAAMAGA!!!

ஸ்ரீகலா SRIKALA

ஸ்ரீகலாவின்
வா... நாளை நாமாக...
வா! நாளை நாமாக!!!
VAA! NAALAI NAAMAGA!!!
ஸ்ரீகலா SRIKALA

ஸ்ரீகலாவின் “வா! நாளை நாமாக...!!!

Contents

நாளை : 1
நாளை : 2
நாளை : 3
நாளை : 4
நாளை : 5
நாளை : 6
நாளை : 7
நாளை : 8
நாளை : 9
நாளை : 10
நாளை : 11
நாளை : 12
நாளை : 14
நாளை : 15
நாளை : 16
நாளை : 17
நாளை : 18
நாளை : 19
நாளை : 20
நாளை : 21
நாளை : 22
நாளை : 23
நாளை : 24
நாளை : 25

நாளை : 26
நாளை : 27
நாளை : 28
நாளை : 29
நாளை : 30

நாளை : 1

சென்னை மாநகரத்தின் மேல் அன்று ஏனோ வருணபகவான் தன் கருணை பார்வையைப் பதித்திருந்தார் போலும். காலை ஏழரை மணிக்கே இரவானது போல் கார்மேகங்கள் சூழ்ந்து கொண்டு மழை கொட்டோ கொட்டென்று கொட்டி கொண்டிருந்தது. வெளியே காற்று சூறாவளியாய் சுழன்றடிக்க, ஆர்ப்பாட்டமாய் மழை பெய்த போதும் அடையாரில் இருந்த அந்த வீடு அதற்கு நேர்மாறாய் அமைதியாய் இருந்தது.

“குறை ஒன்றுமில்லை மறை மூர்த்திக் கண்ணா
குறை ஒன்றுமில்லை கண்ணா”

பூஜையறையில் இருந்து கசிந்து வந்த பாடலின் வரிகள் காதில் விழ... வரவேற்பறையில் அமர்ந்திருந்த கமலாவின் கண்கள் அங்கிருந்தே படியே பூஜையறையில் மூன்றடி உயரத்தில் இருந்த வெங்கடாசலபதியின் உருவத்தின் மீது நிலைத்தது.

‘குறை ஒன்றுமில்லைன்னு சொல்ல எனக்கு ஆசையா தான் இருக்கு... ஆனால்...’ கண்கள் லேசாகக் கலங்க அப்படியே வெறித்துப் பார்த்தவாறு இருந்தவரின் அருகில் அமர்ந்த ராகேஷ்,

“மாம்... ஸ்கூலுக்கு லேட்டாயிருச்சு... டிபன் எடுத்து வைங்க...” என்றபடி காலில் ஷூவை மாட்ட...

“சாரிடா... இதோ வந்துட்டேன்...” கலங்கிய கண்களை அவனுக்குக் காட்டாமல் எழுந்தவரின் கையைப் பிடித்துத் தடுத்தவன்,

“மாம்... தினமும் இதையே நினைச்சிட்டு இருந்து உங்க உடம்பை கெடுத்துக்காதீங்க... உங்களுக்கு நாங்க இருக்கோம். எங்களைக் கவனிங்க...” பதினைந்து வயது பையனுக்கு இருக்கும் பொறுப்பு... இருபத்தைந்து வயது

நிரம்பியவனுக்கு இல்லையே என்று அவர் உள்ளுக்குள் மறுகியவாறு,

“அட்வைஸ் போதும் பெரிய மனுசா... சாப்பிட வா...” சூழ்நிலையை மாற்ற எண்ணி அவர் கேலி பேச,

“போங்க மாம்...” லேசாய் வெட்கப்பட்டுக் கொண்டே செல்லமாய்ச் சிணுங்கிய மகனை பார்த்து சிரித்தபடி சமையலறை நோக்கி சென்றார். தன் பின்னோடு வந்த மகனுக்கு அவனுக்குத் தேவையானதை பரிமாறியவரை பார்த்து,

“மாம் நான் எக்சாமுக்கு படிக்கணும்... ப்ளீஸ் நீங்க ஊட்டி விடுங்களேன்...” கையிலிருந்த புத்தகத்தில் பார்வையைப் பதித்தபடி ராகேஷ் சொல்ல... அவனின் விருப்பத்தைச் சிரித்தபடி அவர் நிறைவேற்றினார்.

அவனுக்கு ஊட்டி விடும் போதே அவரின் நினைவு அவரையும் மீறி வேறோருவனிடத்தில் வந்து நின்றது. அவனுக்கும் இது போல் ஊட்டி விட்டு எத்தனை நாளாயிற்று... அது மட்டுமா அவன் இந்தக் குடும்பத்தோடு இணக்கமாய் இணைந்து பேசி, சிரித்து மகிழ்ந்து எத்தனை வருடங்களாகி விட்டது. இதையெல்லாம் அவன் தெரிந்தே வேண்டுமென்றே செய்கிறானா? இல்லை அவன் தன்னை மறந்து நடந்து கொள்கிறானா? இல்லை அவனின் இயல்பே அது தானா? என்பது மட்டும் அவருக்கு இன்று வரை புரியாத புதிர். ஆக மொத்தம் அவன் இந்த வீட்டின் உறவுகளை மறந்து வெகுநாட்கள் ஆகிவிட்டது.

“கமலா...” என்றபடி அங்கு வந்தமர்ந்த கந்தனின் குரலில் தன் நினைவலைகள் அறுபட...

“வாங்க...” என்றவர் கணவருக்குத் தேவையானதை எடுத்து வைத்து பரிமாறப் போக, அவரின் கையைப் பிடித்துத் தடுத்த கந்தன்,

“நீ ராகேஷுக்கு ஊட்டி விடு... நானே போட்டு சாப்பிட்டுக்கிறேன்...” அன்புடன் சொன்னவர் தனக்கு

வேண்டியதை எடுத்து போட்டு சாப்பிட... கமலாவின் கைகள் மகனுக்கு ஊட்டிவிட்டாலும் அவரின் கண்கள் கணவரை அளவெடுத்தது.

ஐம்பத்தேழு வயதுக்கு அதிக முதிர்ச்சியுடன், உடம்பு தளர அமர்ந்திருந்தவரை பார்க்கும் போது அவருக்குக் கண்களில் நீர் சுரந்தது. வயதுக்கு வந்த மகன் ஊரை சுற்றிக் கொண்டு கேளிக்கையில் மூழ்கியிருக்க... கணவன் தூக்கமின்றி உழைக்கிறாரே என்று வருத்தம் கமலாவின் மனதை வருத்தியது.

“மாம் பை... டாட் பை...” ராகேஷின் குரலில் அவனைப் பார்த்தவர் தன் மன வருத்தத்தை ஒதுக்கி வைத்து விட்டு அவனுக்கு விடை கொடுத்தார்.

“எங்கே உன் சீமந்திர புத்திரன்... நைட்டாவது வீட்டுக்கு வந்தானா?இல்லை?” கணவனின் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் அவர் தலை தானாகக் குனிய... அதிலேயே பதிலை தெரிந்து கொண்டவரின் முகம் கோபத்தில் சிவந்தது.

“என்னைக்கும் போல் நேத்தும் வீட்டுக்கு வரலையா?ச்சே... இவன் திருந்தவே மாட்டானா? படிச்சு முடிச்சதும் தொழிலை கையில் எடுப்பான் பார்த்தேன்... ம்ஹூம்... அதைச் செய்யவே இல்லை... சரி கொஞ்ச நாள் விட்டு பிடிக்கலாம்ன்னு பார்த்தா... படிப்பு முடிஞ்சு ரெண்டு வருசமாகுது... இன்னைக்கு வரைக்கும் கம்பெனி பக்கம் வரல. சரி படிப்பாவது ஒழுங்கா முடிச்சானா? அதுவுமில்லை... எல்லாத்திலேயும் அரியர்... அதையும் திருப்பி எழுதுற வழியைக் காணோம்... எல்லாம் என் தலையெழுத்து... தோளுக்கு மேல் வளர்ந்த பிள்ளையை வச்சிட்டு இன்னமும் நான் கஷ்டப்படணும்ன்னு எனக்கு விதிச்சிருக்கு... எல்லாம் நீ கொடுக்கும் இடம்... அவனுக்குச் செல்லம் கொடுத்து கொடுத்தே கெடுத்து வச்சிருக்க...” நொந்து போனவராய் அவர் கோபத்துடன் புலம்ப,

“நான் என்னங்க செய்வேன்... கவிதாவையும், ராகேஷையும் வளர்த்த மாதிரி தானே இவனையும் வளர்த்தேன்...” முந்தானையால் கண்களில் வழிந்த கண்ணீரை துடைத்துக் கொண்டே கமலா பதிலளிக்க... மனைவியின் கண்ணீரை கண்டதும் கந்தனின் மனம் பாகாய் உருகி விட்டது.

“சரி சரி... அழாதே கமலா...” அவரின் தோளில் கை வைத்து ஆறுதல் அளித்தவர், அவரை அங்கே இருந்த நாற்காலியில் அமர வைத்து அவருக்குப் பருக தண்ணீர் எடுத்து கொடுத்தவர் தானும் அவரருகில் உள்ள நாற்காலியில் அமர்ந்து,

“சாரி கமலா... உன் மனசை தேவையில்லாமல் வருத்தப்பட வச்சிட்டேன். வர வர எனக்கு ஹெல்த் ப்ராப்ளம் ஒண்ணு மாத்தி ஒண்ணு வந்துட்டே இருக்கு” அவர் சொல்லும் போதே...

“என்னங்க சொல்றீங்க...? டாக்டர் கிட்ட செக்கப் போனீங்களா?” கமலா பதற,

“போகாமல் இருப்பேனா?அதுவும் எனக்காக இல்லைன்னாலும் என்னை நம்பியிருக்கிற உனக்காகவும், ராகேஷுக்காகவும் போகாமல் இருப்பேனா? செக்கப் பண்ணிட்டு தான் இருக்கேன்” மனைவிக்கு ஆறுதல் கூறியவர், “நாளைக்கே எனக்கு ஏதாவது ஒண்ணுன்னா...” என்றவரின் வாய் மூடி தடுத்த கமலா பரிதாபமாய் அவரைப் பார்க்க,

“நெருப்புன்னா வாய் வெந்துடாது கமலா. அப்படி ஏதாவது ஒண்ணுன்னா... கம்பெனியை அவன் பார்க்கணுமா வேணாமா? இப்படி ஊரை சுத்திட்டு இருந்தா எப்படி? அதிலும் நம்ம மாப்பிள்ளை சத்யன் பத்தி உனக்கே தெரியும். பேரில் மட்டும் தான் சத்யம்... வாக்கிலோ, செயலிலோ கொஞ்சமும் சத்யம் கிடையாது. நான் எப்படா மண்டைய போடுவேன்... நம்ம சொத்தை சுருட்டலாம்ன்னு காத்திட்டு இருக்கான். வருங்காலத்தை நினச்சா எனக்கு ரொம்பப் பயமாயிருக்கு கமலா. அதிலும் உன்னையும்,

ராகேஷையும் நினைச்சு தான் எனக்கு ரொம்பவே கவலையாயிருக்கு” மனதின் வேதனை அவரின் முகத்திலும், குரலிலும் தெரிந்தது.

கந்தன் – கமலா இருவருக்கும் மூன்று பிள்ளைகள். கவிதா தான் மூத்தவள் அவளின் கணவன் சத்யன். அவர்களின் குழந்தை சரண். இரண்டாவது மகன் தான் கதிரோவியன். படித்து முடித்துவிட்டு ஊரை சுற்றிக் கொண்டிருக்கிறான். மூன்றாவது மகன் ராகேஷ் பத்தாவது படிக்கின்றான். கந்தனுக்கு ஏராளமான தொழில்கள், நிலம்புலன்கள் என்று ஏகப்பட்டது இருக்கிறது. எல்லாவற்றையும் கந்தனே நிர்வகித்து வருகிறார்.

கதிர் அவருக்கு உதவுவான் என்று எதிர்பார்த்தால் அவனோ நண்பர்களுடன் ஊரை சுற்றுவதையும், கேளிக்கைகளில் ஈடுபடுவதையும் தன் முழுநேர தொழிலாகக் கொண்டுள்ளான். அவனை நினைத்து தான் அந்தப் பெற்றோருக்கு மிகுந்த கவலை. எல்லாம் இருந்தும் அவர்களின் ஒரே கவலையாய் புற்றுநோய் கிருமியாய் அவர்களின் மனதை அவன் அரித்துக் கொண்டிருந்தான்.

அவனின் இந்த நிலைக்கு முக்கியக் காரணம் கமலாவின் தந்தை... அதாவது அவனின் தாத்தாவே காரணம். கதிரின் பதினெட்டாவது பிறந்தநாளின் போது அவனுக்கு என்று சில கோடி பணத்தை வங்கியில் போட்டு பரிசாகக் கொடுத்தார். அதிலிருந்து மாதா மாதம் வரும் வட்டி தொகையை அவனின் செலவுக்கு என்று வருமாறு வகைச் செய்து கொடுத்திருந்தார் அந்தப் பெரியவர். அன்றிலிருந்து ஆரம்பித்தது அவனுக்கு ஏழரை சனி. அவனுக்கு மட்டுமா... அவனது வீட்டாருக்கும் சேர்த்து தான். பேரனுக்கு நல்லது செய்வதாய் நினைத்து... அந்த முதியவர் தன்னையும் அறியாமல் தீமை செய்துவிட்டார். இளம்வயதில் கை நிறையப் பணம், கெட்ட சகவாசம் எல்லாம் சேர்த்து அவனைக் கெட்ட வழியில் செல்ல வைத்தது.

பணத்தை அள்ளி கொடுத்த தாத்தா என்னவோ இறந்து போனார். ஆனால் அந்தப் பணத்தின் விளைவால் அவனுக்கு ஏற்பட்ட தீய பழக்கங்கள் அன்று போல் மாறாமல் இன்று வரை தொடர்ந்து வருவது தான் கொடுமையின் உச்சம். ஆரம்பத்தில் அவனைப் பற்றித் தெரியாமல் இருந்த கந்தன் அவனின் பழக்கத்தை அறிந்து அவனைத் திருத்த முயற்சிக்க... அவரின் முயற்சி அனைத்தும் தோல்வியில் தான் முடிந்தது. அறிவுரை சொல்லியோ, அடித்தோ திருத்தும் நிலையை அவன் எப்போதோ தாண்டியிருந்தான். எல்லாப் பணக்கார வீட்டுப் பிள்ளைகள் போல் தறுதலையாய், ஊதாரியாய், நாளை என்பதைப் பற்றிய கவலை இல்லாதவனாய் வளர்ந்து நின்றவனை யாராலும் தட்டி கேட்க முடியவில்லை.

பழையதை இருவரும் நினைத்து பார்த்துக் கொண்டிருக்கும் போது அந்நேரம் வாசல் பக்கம் நிழலாட... இருவரின் கவனமும் வாசல் பக்கம் திரும்பியது. இவ்வளவு நேரம் அவர்களின் புலம்பல்களுக்கு எல்லாம் காரணமான கதிரோவியன் தான் அங்கே வந்து கொண்டிருந்தான். தலை கலைந்து, உடைகள் கசங்கி, கண்கள் சிவப்பேறி இருக்கத் தள்ளாடிய நடையுடன் வந்தவனைக் கந்தனின் கண்கள் வெறுப்புடன் பார்த்தது என்றால்... கமலாவின் கண்கள் ஆதங்கத்துடன் பார்த்தது.

“கதிர்...” அவனை ஓடி வந்து தாங்கி கொண்டவர், “என்னடா இது காலையிலேயே இப்படிக் குடிச்சிட்டு வந்து நிற்கிற” அவனிடம் வருத்தப்பட,

“நான் குடிக்கவே இல்லை மாம்... இங்கே பாருங்க...” அவர் முகத்தருகே குனிந்து ஊதியவன் மூச்சில் மதுவின் நெடி அப்பட்டமாய் அடித்தது. என்ன பேசுவது என்று தெரியாமல் திகைத்து நின்றிருந்தவரை விலக்கி விட்டு மாடியேறிய மகனை வெறித்துப் பார்த்தபடி அவர் அப்படியே நிற்க,

“கமலா...” கந்தன் அவரின் தோளை உலுக்க... கமலா கணவன் தோள் சாய்ந்து கதறிவிட்டார்.

“தினமும் நடப்பது தானே... இதில் கவலைப்பட என்னயிருக்கு?” அவர் ஆறுதல் சொல்ல,

“இவனுக்கு என்ன குறைச்சல்ங்க... ஏன் இப்படிக் குடிச்சு குடிச்சு குட்டிச்சுவராய் போறான்...? எங்கே இருந்து இந்தப் பழக்கம் பழகினான்?” கமலா புலம்ப...

‘உன் பையனுக்குக் குடி மட்டுமா இருக்கு...’ மனதுக்குள் நினைத்த கந்தன் அடுத்த வார்த்தையை மனதுக்குள் போட்டு புதைத்துக் கொண்டார்.

“சரி நான் அவனுக்குக் காபி கொண்டு போய்க் கொடுத்துட்டு வர்றேன்...” என்று நகர்ந்த கமலாவை தடுக்கும் வகைத் தெரியாமல் பார்த்துக் கொண்டு நின்றிருந்தார் கந்தன்.

கதிரின் அறைக்கதவை திறந்து கொண்டு உள்ளே நுழைந்த கமலாவின் கண்ணில் பட்டது... அறையின் மூலைக்கு ஒன்றாய் சிதறிக் கிடந்த அவனின் உடைகள் தான்.

‘என்ன பிள்ளையோ... போட்டிருக்கிற ட்ரெஸ்ஸை கூட ஒழுங்கா அழுக்குக் கூடையில் எடுத்து போட கூடாது...’ மனதுக்குள் புலம்பியவாறு அங்கிருந்த டீபாயில் காபி கோப்பையை வைத்தவர், கட்டிலில் ஆவென்று வாயை திறந்தபடி உறங்கும் மகனை பார்த்தார். சிவந்த மேனியும், அசாத்திய உயரத்துடன், அதற்கேற்ற உடல்வாகுடன் கம்பீரத்துடன் இருந்த மகனை பார்த்தவர் மனம் ஒரு கணம் பெருமிதத்தில் விம்ம... மறு கணம் அவனின் நிலை அறிந்து கவலைக்குள்ளானது.

‘ஏண்டா ராஜா... உனக்கு என்ன தான்டா குறை?ஏன் நீ மட்டும் இப்படியிருக்கிற?’ அவனின் நெற்றியில் சிலும்பி படர்ந்திருந்த தலை முடியை கோதி கொடுத்தவர் மனம் ஆற்றாமையில் தவித்தது. கொஞ்ச நேரம் அவனின்

அருகில் அமர்ந்தவர் சிறிது நேரம் சென்று பெருமூச்சு ஒன்றை விட்டபடி எழுந்தார்.

அவனின் உடைகளைச் சேகரித்தவர் அவனின் சட்டைப் பை மற்றும் அவனின் பேண்ட் பையில் கை விட்டு ஏதேனும் பொருள் வைத்திருக்கிறானா? என்று சோதித்துப் பார்க்க... அந்தக் கடவுள் அவரையே சோதனைக்கு உள்ளாக்கினார். அவனது பேண்ட் பையில் கையை விட்டவர் கையில் ஏதோ தட்டு பட... அதை எடுத்து பார்த்தவர் இதயம் ஒருமுறை நின்று துடித்தது.

‘கதிர் நீயாடா இப்படி?நீயா? நீயா?’ அவரின் மனம் ஓயாது புலம்ப... ஏதோ பேய் துரத்தியது போல் அவனின் அறையை விட்டு வேகமாய் வெளியில் வந்தவர் நேரே தனது அறைக்குச் சென்றார். அங்கே கந்தன் அலுவலகத்துக்குச் செல்ல தயாராகிக் கொண்டிருந்தவர் மனைவியின் வருகை உணர்ந்து திரும்பினார்.

“உன் மகனுக்குப் போதை தெளிஞ்சதா?இல்லை...” அவர் இழுக்க... அவருக்குப் பதில் சொல்லும் மனநிலையில் கமலா இல்லை. ஒன்றும் பேசாமல் கட்டிலில் அமர்ந்தவர் கண்களில் கண்ணீர் மட்டும் ஆறாய் பெருகி ஓடியது. மனைவியின் நிலை கண்டு கந்தனின் கண்கள் ஒரு நொடி சுருங்கி விரிந்தது.

“கதிரை பத்தி தான் உனக்குத் தெரியுமே. அவன் போக்கில் அவனை விட்டுவிடு. அவனாகத் திருந்தினா தான் உண்டு” அவர் அருகில் அமர்ந்து ஆறுதலாய் பேச...

“அவன் திருந்த மாட்டாங்க... திருந்தவே மாட்டாங்க...” மனதின் வேதனையை முகத்தில் தேக்கி கூறிய மனைவியைப் புரியாமல் பார்த்தார் அவர். என்றும் மகனுக்குப் பரிந்து பேசும் கமலாவின் இந்த வார்த்தைகள் கேட்டு அவருக்கு ஆச்சிரியமே...

“ஏன் என்னவாச்சு?”

“கதிர்... கதிர்...” திக்கி திணறிய கமலா தன் கைகளை விரித்துக் காண்பிக்க... அதிலிருந்த பொருளை பார்த்ததும் கந்தனும் ஒரு கணம் அதிர்ந்து தான் போனார். ஏனெனில் அதிலிருந்தது கருத்தடை சாதனத்தின் அட்டை பெட்டி.

கதிரின் நடவடிக்கை அவருக்கும் அரசல் புரசலாய் காதில் விழுந்து கொண்டு தான் இருந்தது. ஆனால் அவனை எப்படித் திருத்துவது? என்று தெரியாமல் தான் அவர் முழித்துக் கொண்டிருந்தார். மகனின் நடத்தையைப் பற்றி மனைவியிடம் கொஞ்சமும் மூச்சு விடவில்லை. ஏனெனில் மகன் வீடு வரை இந்த அசிங்கத்தைக் கொண்டு வர மாட்டான் என்ற நம்பிக்கை அவருக்கு இருந்தது. அந்தளவுக்கு அவனுக்குத் தாயிடத்தில் அன்பு உண்டு என்று அவருக்குத் தெரியும். ஆனால் இன்று அந்த நம்பிக்கையையும் அவர் மகன் தகர்த்தெறிந்து விட்டானே...

“உனக்கு இப்போது தான் தெரியும். எனக்கு முன்னமே தெரியும்...” சொன்னவர் மனைவியின் முகத்தை நிமிர்ந்து பார்க்க முடியாமல் ஜன்னல் பக்கம் போய் நின்றார்.

“ஏன் என்னிடம் இருந்து மறைச்சீங்க?” கண்களில் கண்ணீர் மல்க கேட்ட மனைவியைத் துயரத்துடன் பார்த்தவர்,

“அவன் உனக்காவது நல்ல மகனாய் இருக்கட்டுமே என்ற நப்பாசையில் தான்...” அதற்கு மேல் பேச முடியாமல் அவருக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது.

“தோளுக்கு மேல் வளர்ந்த பிள்ளை... இனி மேலும் அவன் நம் பேச்சை கேட்பான் என்று நினைக்காதே... அவனை அவன் போக்கில் விட்டுவிடு” கந்தனின் வார்த்தை ஒவ்வொன்றிலும் தோற்று போன வலியிருந்தது.

“இல்லைங்க... அவனை இப்படியே சீரழிஞ்சு போன்னு என்னால் விட்டு விட முடியாது” கண்களை அழுந்த

துடைத்துக் கொண்டு அழுத்தமாய்ச் சொன்ன கமலாவை அவர் ஆழ்ந்து பார்க்க...

“அவனுக்குக் கல்யாணம் பண்ணி வைக்கலாம்ன்னு முடிவு பண்ணியிருக்கேன்...” முடிவாய் சொன்ன மனைவியைப் பார்த்து,

“வாட்...” திகைத்து போய் வெளிவந்தது அவரின் வார்த்தைகள்.

“முட்டாளா நீ?இவனை நம்பி ஒரு பெண்ணின் பாவத்தைச் சம்பாதித்துக் கொள்ளாதே... இவனால் அந்தப் பெண் சுகப்படுமா? இல்லை துக்கப்படுமா? நீயே யோசிச்சு பாரு. சராசரி அம்மாவாய் நீ பேசாதே... எந்நேரமும் போதை, பெண்கள்ன்னு கூத்தடிக்கிறவன் எப்படி ஒரு பெண்ணின் கழுத்தில் தாலி கட்டி அவளுக்கு மட்டும் அடங்கிப் போய் வாழ்வான்னு நீ நம்பற. எனக்குக் கதிர் மேல நம்பிக்கை இல்லை. இவனை நம்பி இவனுக்குக் கல்யாணம் பண்ணி வைக்க நினைக்காதே...” அவர் அடக்கப்பட்ட கோபத்துடன் பேச,

“இல்லைங்க... அம்மா, அப்பாவால் திருத்த முடியாதவனை மனைவியின் அன்பு, காதல் திருத்தி விடும்ங்க... எனக்கு நம்பிக்கையிருக்கு... கல்யாணமானா கதிர் திருந்திருவான்” என்ற கமலாவை எரிச்சலுடன் பார்த்தவர்,

“நீ எந்தக் காலத்தில் இருக்க... இவனாவது திருந்துவதாவது... என்னமோ போ... நீயுமாச்சு... உன் புள்ளையுமாச்சு... இடையில் என்னை இழுக்காதே...” கோபத்துடன் மொழிந்தவர், “நான் கிளம்பறேன்...” என்று மனைவியிடம் விடை பெற்றவர் அறையை விட்டு வேகமாய் வெளியேறினார். கணவன் செல்வது கூட அறியாமல் மகனின் எண்ணத்தில் மூழ்கியிருந்தார் அந்த அன்பு தாய்.

மதியம் உணவு வேளையின் போது கீழிறங்கி வந்த கதிரை கண்ட கமலா, “கதிர் இங்கே வா... உன்னிடம் ஒரு

விசயம் பேசணும்”

“என்ன மாம்?” என்றபடி அவர் அருகில் வந்தமர்ந்த கதிரிடம் அவன் போட்டிருந்த வாசனை திரவியத்தின் நறுமணத்தை மீறி மதுவின் வாடை அடித்தது. கமலாவிற்குக் குமட்டி கொண்டு வந்தது. இருந்தாலும் சகித்துக் கொண்டு,

“கதிர் உனக்குக் கல்யாணம் பண்ணி வைக்கலாம்ன்னு இருக்கேன்” தீர்க்கமாய் அவனைப் பார்த்தபடி அவர் சொல்ல...

“வாட்... மேரேஜா?எனக்கா?” கொஞ்சமே கொஞ்சம் திகைத்து போனவனாய் அவன் கேட்க...

“உனக்குத் தான்...” அழுத்தமாய் அவர் சொல்ல... அவனோ ஏதோ நகைச்சுவை கேட்டது போல் வாய் விட்டுச் சிரித்தான்.

“எனக்கு இப்போ தான் ட்வென்ட்டிபைவ் ஆகுது... அதுக்குள்ளே மேரேஜுக்கு என்ன அவசரம்?இன்னும் கொஞ்ச நாள் போகட்டும் மாம்...” என்றவனின் கேள்விக்குப் பதில் பேசாமல் கமலா மௌனம் காக்க... அவரை ஆழ்ந்து பார்த்தவனின் கண்கள் அவரைக் கண்டு கொண்டதில் மின்னியது.

“உங்க திட்டம் எனக்குப் புரியாமல் இல்லை மாம்...” அவரைக் கூர்ந்து பார்த்தபடி சொல்லியவன், “ஓகே உங்க இஷ்டப்படி நான் கல்யாணதுக்குச் சம்மதிக்கிறேன். பட் ஒன் கண்டிசன்... கல்யாணத்துக்கு அப்புறமும் நான் இப்படியே தான் ஜாலியா இருப்பேன். என்னைத் திருத்துறேன்னோ... இல்லை நான் செய்றது பிடிக்கலைன்னோ வர்றவ கண்ணைக் கசக்கினா... அடுத்தச் செகண்ட் டிவோர்ஸ் தான். இதுக்கு யார் சம்மதிக்கிறாளோ அவளை எனக்குக் கல்யாணம் பண்ணி வைங்க... எனக்கு யாரை பத்தியும் கவலை கிடையாது. நான் இப்படித் தான்... கல்யாணத்துக்கு அப்புறம் திருந்திருவான்... திருத்திடலாம்ன்னு நினைச்சீங்க...

அப்புறம் வேற கதிரை தான் பார்ப்பீங்க” அழுத்தமாய்ச் சொன்னவன் அவரின் பதிலை எதிர்பாராமல் வாயிலை நோக்கி சென்றான். அவனின் வார்த்தையில் விக்கித்துப் போய் அமர்ந்திருந்தார் கமலா.

நிறை குறைகளோடு ஏற்றுக் கொள்ள வேண்டுமாம்...
அவள் அவனை மட்டும்...
அதே நிறை குறைகளோடு ஏற்றுக் கொள்வானா...
அவன் அவளை மட்டும்...??????

நாளை : 2

“கமலா உன் பிள்ளை இன்னைக்குக் கொஞ்சம் நிதானமா இருக்கிற மாதிரி தெரியுது... உலகம் தலைகீழா சுத்த போகுது” நக்கலாய் கேட்ட கந்தனை முறைத்து பார்த்தார் கமலா.

“அவன் ஒழுங்கா இல்லைன்னாலும் குறை சொல்றீங்க... அவன் ஒழுங்கா இருந்தாலும் குறை சொல்றீங்க... அவன் எப்படித் தான் இருக்கணும் உங்களுக்கு?” கணவனிடம் கடு கடுத்த கமலா... மாடிப்படியில் இறங்கி வரும் கதிரை பூரிப்புடன் பார்த்தார்.

பாலாடை நிறத்தில் முழுக்கை பருத்தி சட்டையும், இளம் நீலநிற ஜீன்சும் அணிந்து, முழுக்கை சட்டையை முழங்கை வரை ஏத்தி விட்டுக் கொண்டே அவன் இறங்கி வந்த அழகை பார்த்துக் கொண்டே இருக்கலாம் போலிருந்தது அவருக்கு. என்று அவர் அவனின் மறுபக்கத்தை அறிந்து கொண்டாரோ அன்றிலிருந்து அவர் அவனிடம் அழுது புலம்பி இரவு மட்டும் அவனை எங்கும் தங்காமல் பார்த்துக் கொண்டார். எவ்வளவு நேரமானாலும் சரி இரவு அவன் வீட்டிற்கு வந்து விட வேண்டும் என்று சத்தியம் வாங்காத குறையாகக் கெஞ்சி கேட்டு அவனின் சம்மதத்தை வாங்கிக் கொண்டார். அந்த மட்டும் அவன் தன் பேச்சை கேட்டு சமத்தாய் நடந்து கொண்டது கமலாவிற்குச் சற்றுப் பெருமையாகக் கூட இருந்தது.

“என்னங்க... நான் பேசும் போது நீங்களும் அவனுக்குக் கொஞ்சம் எடுத்து சொல்லுங்க...”

“ஒரு பெண்ணின் வாழ்க்கையைக் கெடுக்கிறதுக்கு நீ கூப்பிடுற... அந்தப் பாவக் காரியத்துக்குத் துணை போக நான் தயாராய் இல்லை... நீயே உன் அருமை புள்ளை கிட்ட பேசு” மனைவியிடம் சொல்லியவர் கையிலிருந்த செய்தித்தாளில் முகத்தைப் புதைத்துக் கொண்டார்.

“ஹாய் மாம்...” என்றபடி அன்னையின் அருகில் அமர்ந்தவன்... தந்தையைப் பார்த்ததும் முகத்தைச்

சுருக்கினான். அறிவோடு கண்டிக்கும் தந்தையை விட... அன்பாய் அரவணைத்துச் செல்லும் தாயை அவனுக்கு எப்பவுமே பிடிக்கும்.

“என்ன பெருசு இன்னைக்கு ஆபிஸ் போகாம இங்கே இருக்கு?” அம்மாவிற்கு மட்டும் கேட்கும் வண்ணம் அவர் காதில் அவன் கிசுகிசுக்க...

“அவர் உன்னைத் திட்டுவதில் தப்பே இல்லைடா...” அவனின் காதை செல்லமாய்த் திருகியவர், “கதிர்... இதைப் பிரிச்சு பாரு...” என்று ஒரு கவரை அவனின் கையில் திணிக்க...

“வாட் மாம்...?” அவன் புரியாமல் அவரைப் பார்த்தான்.

“அதில் உனக்குப் பார்த்திருக்கும் பொண்ணோட ஃபோட்டோ இருக்குடா... பார்க்க மகாலட்சுமி மாதிரி அழகாயிருக்கா கதிர்...” அதைப் பிரித்துப் பார்க்கும் ஆர்வம் அவன் மனதில் தோன்றிய அந்த நொடி... அவரின் ‘மகாலட்சுமி’ என்ற வார்த்தையில் அதை அப்படியே அவர் கையில் கொடுத்தவன்,

“உங்க குடும்பக் குத்து விளக்கை நீங்களே வச்சுக்கோங்க... உங்களுக்குப் பிடிச்சியிருக்கு தானே... அப்போ மேற்கொண்டு பேசுங்க... நான் பார்க்கணும்... பழகணும்ன்னு என்னிடம் எதுவும் எதிர்பார்க்காதீங்க. கல்யாணத்துக்கு நாள் பார்த்து சொல்லுங்க... தாலி கட்ட நான் வர்றேன்...” என்றவன் பேச்சு வார்த்தை முடிந்தது என்பது போல் எழ...

“கதிர்... சாப்பிட்டுட்டு போடா...” கமலா சொல்ல...

“நோ மாம்... இன்னைக்கு எனக்கு ஒரு பார்ட்டி இருக்கு... நான் அங்கே போய்ப் பார்த்துக்கிறேன்...” என்றவன் தாயின் பதிலை எதிர்பாராமல் கையில் சாவியைச் சுழற்றிக் கொண்டு, வாயில் புதுப்படப் பாடல் ஒன்றை முணுமுணுத்தபடி வெளியில் செல்ல...

“இவனுக்குப் போய் இவ்வளவு நல்ல பெண்ணைப் பார்த்திருக்கிறியே... பாவம் அந்தப் பெண்...” கந்தன் ஆற்றாமையில் பெருமூச்சு விட...

“ஏன் என் பையனுக்கு என்ன குறைச்சல்?”

“எல்லாமே குறைச்சல் தான்...” கந்தனின் பேச்சில் கமலாவிற்குக் கோபம் வந்தது.

“சும்மா சும்மா என் பையனை குறை சொல்லாதீங்க. எனக்கு நம்பிக்கையிருக்கு... இந்தப் பெண் கழுத்தில் மூணு முடிச்சு போடும் போது எல்லாம் சரியாகி விடும்”

“அந்தப் பெண்ணுக்கு அது தாலி கயிறு இல்லை... தூக்கு கயிறு...” எரிச்சலுடன் கந்தன் புலம்ப...

“என்னங்க நீங்க... நீங்களே இப்படி நம்ம பையனை பத்தி பேசினா மத்தவங்க பேசாம என்ன செய்வாங்க?நானே இந்த ஒரு மாசமா அலசி ஆராய்ஞ்சு இந்தப் பெண்ணைச் செலெக்ட் பண்ணியிருக்கேன்... இந்த நேரத்தில் நீங்க இப்படி அபசகுனமா பேசினா எப்படி?” கமலா வருத்தத்துடன் சொல்லியவர் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டார்.

கமலா சொல்வது உண்மை தான்... உள்ளூரில் பெண் எடுத்தால் பிரச்சினை வந்துவிடும் என்று தன் சொந்தத்தில் விசாரித்து மணப் பெண்ணை ஹைதராபாத்தில் இருந்து பேசி முடித்திருக்கிறார். பெண் வீட்டாருக்கும் இவர்களின் குடும்பப் பாரம்பரியம் கண்டு திருப்தியுற்றுச் சம்மதம் சொல்லிவிட்டனர். அவர்கள் இன்னமும் நேரில் கதிரை பார்க்கவில்லை. பார்த்தால் தான் தெரியும் அவனின் மறுபக்கம்.

“நான் அதுக்குச் சொல்லலம்மா...” மனைவியை ஆறுதலாய் அணைத்து கொண்டவர், “சரி கமலா... உன் இஷ்டம்... இனி நான் எதுவும் பேசல போதுமா?கதிர் கொஞ்சம் அப்படி இப்படி இருந்தாலும் நீ வரப் போற

மருமகளிடம் கொஞ்சம் அனுசரித்துப் போகணும். உன்னால் முடியுமா?”

“என்னங்க இப்படிக் கேட்டுட்டீங்க... என் மருமக எனக்கு மகள் மாதிரிங்க... நான் அவளை நல்லா பார்த்துப்பேன்... இதை நீங்க சொல்லவே வேணாம்...” என்றவர், “எனக்கு மருமக பொண்ணு கிட்ட பேசணும் போலிருக்கு... ஃபோன் போட்டு கொடுங்களேன்... அப்படியே நிச்சயத்துக்கு நாளையும் குறிச்சிடுவோம்...” மனைவியின் சொல் கேட்டு உடனே பெண் வீட்டாரை அழைத்துப் பேசி நிச்சயத்துக்கு நாளை குறித்தவர்... பின்பு அலைப்பேசியை மனைவியிடம் கொடுத்தார்.

“அம்மாடி நல்லாயிருக்கியாம்மா...” அன்பொழுக மருமகளிடம் கேட்டவர், “எனக்கு அப்புறம் கதிரை நீ தான்ம்மா பார்த்துக்கணும். அவன் கொஞ்சம் முரட்டு குழந்தை மாதிரி... அன்பா பக்குவமா எடுத்துச் சொன்னா கேட்டுக்குவான்... நீதான் அவனுக்கு எல்லாமுமாய் இருக்கணும்...” அவரின் பேச்சிற்கு மறுப்பக்கம் வந்த பதிலில் அகமகிழ்ந்து போனார் அவர்.

“ரொம்பச் சந்தோசம்... நீ எங்க வீட்டுக்கு வர்ற போற நாளுக்காக ஆவலுடன் காத்திருக்கிறேன்...” என்றபடி அலைப்பேசியை அணைத்தவர், கணவரிடம்...

“ரொம்ப நல்ல பொண்ணுங்க...” என்க,

‘ம்ஹூம்... உன் பையன் வண்டவாளம் தெரிஞ்சா... இந்த நல்ல பொண்ணு எப்படி மாறுவாளோ தெரியலையே...?’ மனதில் நினைத்த கந்தன், அதை மனைவியிடம் சொல்லவில்லை.

“என்னங்க... நாம நாளைக்கே நம்ம குலதெய்வத்தைப் போய்க் கும்பிட்டு வர்றலாம்ங்க... எல்லாம் நல்லபடியா நடக்கிறதுக்கு அந்தத் தெய்வம் தான் துணையா இருக்கணும்...” மனைவியின் இந்தக் கூற்றை அவர் சரியென்று ஏற்றுக் கொண்டார். அவருக்குமே கொஞ்ச நாளாய் மனதில் ஏதோ ஒரு சஞ்சலம் ஆட்டி படைத்தது

கொண்டிருக்கிறது. அது என்னவென்று தான் அவருக்கும் புரியவில்லை. அதனால் மன நிம்மதிக்காகத் தன் சொந்த ஊருக்கு சென்று வரலாம் என்று நினைத்தார். அதனால் கமலா சொன்னதும் உடனே சம்மதம் தெரிவித்துவிட்டார்.

ஊருக்கு சென்று நல்லபடியாய் சாமியை கும்பிட்டு விட்டு கந்தன், கமலா இருவரும் சென்னைக்குத் திரும்பி கொண்டிருந்தனர். வெகுநாட்களுக்குப் பின் இருவரின் மனதிலும் இது நாள் வரை ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்த சஞ்சலங்கள் மறைந்து அமைதியாய் இருந்தது. இருவரின் மனதிலும் சந்தோசமே நிறைந்திருந்தது. அது அணையப் போகும் விளக்கின் பிரகாசம் போல் என்பது அவர்களுக்கு ஏனோ அந்தச் சமயம் புரியவில்லை. புரிந்த போதோ??????

****

“ஹாய் பேபி... கெட் இன்...” வலது கையால் காரின் கண்ணாடியை இறக்கி விட்டவன், தன் இடது கையை ஆட்டி அந்தப் பெண்ணைத் தன் காரில் ஏற சொன்னான் கதிர். பேருந்து நிறுத்தத்தில் நின்றிருந்த அந்தப் பெண் சுற்றும் முற்றும் பார்வையை ஓட்டியபடி வேகமாய் ஏறி அவனருகில் அமர்ந்தாள்.

கதிரின் கண்கள் அவளின் மேனியில் ரசனையுடன் மேய்ந்தது. இருபத்தியொரு வயது இருக்கலாம்... அழகு என்றால் அப்படியொரு அழகு. அவளை அழகாய் படைப்பதற்காகப் பிரம்மன் மிகவும் மெனக்கெட்டு இருப்பான் என்பது அவளின் ஒவ்வொரு அங்கத்திலும் பிரதிபலித்தது.

“உன் பேர் என்ன?” அவளிடம் பேச வேண்டும் என்ற ஆவல் அவனின் மனதை தூண்ட அவளிடம் பேச்சுக் கொடுத்தான். பொதுவாக இந்த மாதிரி பெண்களிடம் அவன் அதிகம் பேச மாட்டான். காசுக்கு வந்தாயா... வேலையை முடித்தாயா... போய்க்கிட்டே இரு... இது தான் அவன் பாலிசி. ஆனால் இந்தப் பெண்ணின் அழகோ

அவனை மிகுந்த மயக்கத்தில் ஆழ்த்தியது. அவன் அந்தளவுக்கு அவளிடம் மயக்கம் கொண்டிருந்தான்.

“மோகினி...” அவளின் குரலில் பல குயில்கள் கூவியது போலிருந்தது அவனுக்கு.

“மயக்கும் மோகினி” வாய்க்குள் முணுமுணுத்தவன், “உனக்கேத்த பேரு தான்... எந்தக் காலேஜ்...?” கதிரிடம் ஒரு குணம் என்ன தான் பெண்ணாசை இருந்தாலும் விலை மாந்தரிடம் அவன் போக மாட்டான். இந்த மாதிரி பணத்துக்காக வரும் கல்லூரி பெண்கள், மற்றும் வேலைக்குப் போகும் பெண்கள் என்று குடும்பப் பெண்களிடம் மட்டுமே அவன் தன் ஆசையையை, மோகத்தைத் தீர்த்து கொள்வான்.

“காலேஜ் நேம் எல்லாம் எதுக்கு?” சிணுங்கலாய் அவள் கேட்க...

“அது சரி... நாம பார்க்க போற வேலைக்குக் காலேஜ் பேரு எல்லாம் எதுக்கு... இது மட்டும் போதாதா?” என்றவனின் இடது கை அவளின் இடையில் தழுவி அவளைத் தன் புறம் இழுத்தது. அவளும் தன் புன்னகையால் அவனை வசீகரித்தபடி அவன் இழுத்த இழுப்பிற்கு வளைந்து கொடுத்தாள்.

வழக்கமாய் வரும் விருந்தினர் மாளிகையில் காரை நிறுத்தியவன் அவளை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றான். இந்த மாளிகை அவனின் நண்பனுடையது. இங்கு எந்தவொரு பயமும் இல்லாமல் சந்தோசமாய்ச் சுகத்தை அனுபவித்துவிட்டுப் போகலாம் என்பதால் கதிர் எப்போதுமே இங்குத் தான் வருவது. இதில் எல்லாம் கதிர் ரொம்பவே முன் ஜாக்கிரதை உள்ளவன் தான்.

அறைக்குள் நுழைந்தவுடன் கதிர் பொறுமையின்றி அவளை இறுக்கி அணைத்து தன் வேகத்தை முரட்டுத்தனமாய்க் காண்பிக்க...

“ப்ளீஸ் மெதுவாங்க...” அவளின் கெஞ்சலோ, சிணுங்கலோ அவனின் காதில் விழுந்ததாய் தெரியவில்லை. தன் காரியத்தில் கண்ணாய் அவன் இருக்க... அவள் தான் அவனைப் பொறுத்துக் கொண்டு அமைதி காத்தாள். காதலுக்கும் காமத்துக்கும் வித்தியாசம் தெரியாமல் அவளின் அழகில் மூழ்கி மோகத்தில் முத்தெடுத்தவன்... தன் தலையில் அடுத்து விழப் போகும் இடியை கொஞ்சமும் உணராது இருந்தான்.

****

“சார்...” ஓட்டுனர் தன் தலையைச் சொரிய... கந்தன் அவனைப் பார்த்து,

“என்னய்யா...?”

“அவசரமா...” மீண்டும் அவர் தலையைச் சொரிய...

“சரி சரி... நீ போப்பா...” என்க... ஓட்டுனர் அவசரத்துடன் காரை அந்தத் தேசிய நெடுஞ்சாலையில் ஓரமாய் நிறுத்திவிட்டு செல்ல...

அவன் சென்றதும் அருகில் உறங்கும் மனைவியை ஆதரவாய் பார்த்தார் கந்தன். மெல்ல மனைவியின் தலையைக் கோதி கொடுத்தவருக்கு ஏனோ மனைவி தூங்கும் அழகில் கல்யாணம் பண்ணி வந்த புதிதில் இருந்த கமலாவின் நியாபகம் வர... தனது வலது கையால் அவரைப் பாசத்துடன் அணைத்துக் கொண்டார். கார் நின்றதால் விழித்த கமலா கணவரின் செயலில் நாணி,

“என்னங்க இது... கையை எடுங்க...” வெட்கத்தில் அவரின் வார்த்தைகள் மெதுவே வந்தது.

“ஏன் என் பொண்டாட்டியை தானே கட்டி பிடிச்சியிருக்கேன்... வேற யாரையும் இல்லையே?” உல்லாசமாய்ப் பேசியவர் சிரிக்க,

“வேற யாரையும் கட்டி பிடிப்பீங்களா?அவ்வளவு தைரியம் உங்களுக்கு இருக்கா?” கோபமாய்க் கமலா கேட்டதைக்

கண்டு கந்தன் வாய் விட்டு சிரித்தார்.

“நான் கோபப்படுறது உங்களுக்குச் சிரிப்பா இருக்கா...” போலியாய் கோபித்தவரை தன்னோடு அணைத்துக் கொண்ட கந்தன்,

“எனக்கு நீ மட்டும் தான் கமலா...” உணர்வுப்பூர்வமாய் அவர் சொல்ல... அதில் மனம் நெகிழ்ந்த கமலா... அவர் நெஞ்சில் நிம்மதியுடன் சாய்ந்து கண்ணை மூடினார்.

அப்போது பின்னால் வேகமாய்த் தாறுமாறாய் லாரியை ஓட்டி கொண்டு வந்த அந்தக் குடிகார ஓட்டுனர் நின்று கொண்டிருந்த இவர்களின் காரின் மீது பின்னால் இருந்து பெரும் சத்தத்துடன் மோதினான். மோதிய வேகத்தில் அந்த லாரியின் ஓட்டுனர் தூக்கி எறியப்பட்டு அந்த இடத்திலேயே இறந்து போனான். பின்னால் இருந்த கந்தன், கமலா இருவரும் அதிகமாய் அடிபட்டுக் கொஞ்சம் கொஞ்சமாய்த் தங்கள் உயிரை இழந்து கொண்டிருந்தனர். மனதில் நிறைவேறாத எண்ணங்கள் இருந்ததாலோ என்னமோ அவர்களின் உயிர் ஊசலாடி கொண்டிருந்தது.

“அய்யா... அம்மா...” என்று கத்தியபடி பதறியடித்துக் கொண்டு வந்த ஓட்டுனரின் குரல் அவர்கள் இருவருக்கும் கேட்டாலும் அவர்களால் பதில் சொல்ல முடியாத நிலையில் இருவரும் இருந்தனர். அவர்களின் உயிர் இன்னும் கொஞ்ச நேரத்தில் போய்விடும் என்று அவர்கள் இருவருக்கும் புரிந்து போனது.

இருவரின் நெஞ்சிலும் தங்கள் மக்கள் மூவரின் எண்ணங்களே வியாபித்திருந்தது. கெட்டவன் என்று தெரியாமல் தன் கணவனை நல்லவன் என்று நம்பி வாழும் கவிதாவின் அறியாமை, பதினைந்து வயது நிரம்பிய போதும் இன்னமும் விளையாட்டு பிள்ளையாய், சிறுவனாய் இருக்கும் ராகேஷ் என்று அவர்களின் மனதில் பல நினைவுகள் எழுந்தாலும் இறுதியில் அவர்களின் எண்ணம் வந்து நின்ற இடம் கதிர்.

கதிர் என்று தனது அக்கா மற்றும் தம்பிக்கு உறுதுணையாய் இருக்கப் போகிறான்... அவன் என்று திருந்தி நல்லவனாய் தொழிலை பெருக்கி வல்லவனாய் நல்ல மனிதனாய் மாறப் போகிறானோ என்ற நிறைவேறாத பல ஆசைகளை மனதில் சுமந்து கொண்டு... அந்த அன்பான பெற்றோரின் உயிர் இரண்டும் தம் மக்களின் நலனை எண்ணி பரிதவித்துப் பிரிய மனமில்லாமல் இவ்வுலகத்தை விட்டு பிரிந்து மேலே சென்றது. வாழும் போது அன்னியோன்யமாய் வாழ்ந்த அந்தத் தம்பதியினர் உயிர் நீக்கும் போதும் ஒருவரை ஒருவர் அணைத்தபடி ஒன்றாய் தங்கள் உயிரை நீத்தனர்.

உயிர் பிரியும் அந்த நேரத்திலும் அவர்களின் வாய் இரண்டும் ஒரே நேரத்தில், 'கதிர்' என்று முணுமுணுத்தது. அவனை நினைத்து அந்த நேரத்திலும் அவர்களின் கண்களின் ஓரம் கண்ணீர் வழிந்தது.

****

"என்னது உங்க அப்பா, அம்மா இறந்துட்டாங்களா?" சத்யனின் குரல் குதூகலத்துடன் ஒலித்தது. மறுபக்கம் கவிதாவின் தேம்பிய குரல்,

"ஆமாங்க... நீங்க வரும் போது சரணையும் ஸ்கூலில் இருந்து கூட்டிட்டு வந்துடுங்க... எனக்கு என்ன பண்றதுன்னு தெரியல... அழுகை அழுகையாய் வருது" தேம்பியபடி சொன்னவளின் கவலை அவளின் நிலையை அவனுக்கு எடுத்து சொல்ல... அவன் தனக்குள் பொங்கிய உற்சாகத்தை உடனடியாய் கட்டுக்குள் கொண்டு வந்து மனைவியிடம் இருந்து மறைத்தவன்,

"இப்போ வந்துர்றேன் செல்லம்... நீ கவலைப்படாதே... உனக்கு நானிருக்கேன்..." அவனின் போலி வார்த்தையைக் கூட உணர முடியாமல்,

"நீங்க இருக்கீங்கன்னு தான் நான் தைரியமா இருக்கேன்... சீக்கிரம் வந்துடுங்க..." என்ற மனைவியிடம்

சரியென்று சொல்லி வைத்த சத்யன் உல்லாசமாய் விசிலடித்துக் கொண்டு தன் இருக்கையில் இருந்து எழுந்தான். மேலதிகாரியிடம் சென்று விடுப்பு கேட்டுக் கொண்டு மகனை அழைத்து வந்தவன்... அடுத்தப் பத்து நிமிடங்களில் குடும்பத்துடன் காரில் ஏறியிருந்தான். அவனின் கையில் கார் பெங்களூரில் இருந்து சென்னைக்குச் சீறிப் பாய்ந்தது.

மாமனார், மாமியார் இறந்தது அவனுக்குப் பெருத்த நிம்மதியாய் இருந்தது. அவன் கவிதாவை காதலித்துக் கல்யாணம் பண்ணி கொண்டதே இந்த வசதி வாய்ப்புக்காகத் தான். ஆனால் இன்று வரை அந்த வசதி வாய்ப்புகளை அனுபவிக்க அவனுக்கு வாய்ப்பு வரவே இல்லை. மகளுக்குச் சீராய் அத்தனை செய்த கந்தன்... அவனை வீட்டோடு மாப்பிள்ளையாய் தங்களுடன் வைத்துக் கொள்ள மட்டும் மறுத்துவிட்டார்.

“அதான் மாப்பிள்ளை நல்லா படிச்சியிருக்கிறார்... நல்ல வேலையில் கை நிறையச் சம்பளம் வாங்குறாரு... வேறென்ன வேணும்... தள்ளி இருந்தா தான்ம்மா உறவுக்கு மதிப்பு இருக்கும்” என்று அவன் தொழிலை கையில் எடுக்க நினைக்கும் போது இதைக் கூறித் தடுத்துவிட்டார். கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை என்ற ஆங்காரம் அவனின் மனதில் இன்று வரை இருந்து கொண்டே இருக்கிறது. அதுவும் இன்றோடு ஒரு முடிவுக்கு வந்துவிடும் என்று நினைத்த அவன் மனம் மகிழ்ச்சியில் கும்மாளமிட்டது.

மூத்த மச்சினன் சரியான தண்ணி வண்டி, பொம்பளை பொறுக்கி... அவனுக்குத் தண்ணியையும், பொண்ணையும் காட்டி விட்டால் போதும்... முழுநேரமும் போதையில் கிடப்பான். சின்ன மச்சினன் சின்னப் பையன்... அவனை எளிதில் சமாளித்து விடலாம். கவிதா கணவன் சொல்லே மந்திரம் என்று வாழ்பவள். அதனால் கந்தனின் தொழில் சாம்ராஜ்யம் எளிதில் தன் கைவசமாகும் என்று அவன் நம்பிக்கை கொண்டான். அவனின் அத்தனை நம்பிக்கையையும் எதிர்பாராத

ஒருத்தரின் வருகையால் ஆட்டம் காண போவதை அவன் அப்போது அறிந்திருக்கவில்லை.

****

கவிதா பலமுறை தன் தம்பி கதிருக்கு அழைத்துப் பார்த்துவிட்டாள். அவன் அலைப்பேசியை எடுப்பதாய் இல்லை. வந்திருந்த உறவினர்களுக்குப் பதில் சொல்லவும் முடியாமல், தன் மடியில் புரண்டு புரண்டு அழும் ராகேஷை கட்டுப்படுத்தவும் முடியாமல், துக்கத்தை வெளிப்படையாய் காட்டி கதறி அழவும் முடியாமல் என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்து போயிருந்தாள் அவள்.

தாய், தந்தை இறந்தது கூடத் தெரியாமல் பெண்ணிடம் போதை கொண்டு மயங்கியிருந்த கதிர் அப்போது தான் உறக்கத்தில் ஆழ்ந்தான். அவனின் அலைப்பேசி சைலென்ட் மோடில் இருந்ததால் கவிதாவின் அழைப்பு எதுவும் அவனின் காதை எட்டவில்லை. அவனோடிருந்த மோகினி தான் உறக்கம் கலைந்து எழுந்தவள் அவனின் அலைப்பேசி மின்னி மின்னி அதிர்வதைக் கண்டு அவனை எழுப்பினாள்.

“என்ன பேபி...?” என்றவன் அவள் பதில் பேசும் முன் அவளின் இதழை முற்றுகையிட்டு இருந்தான். அவனின் வலிமையில் மயங்கி அவளும் அலைப்பேசியை மறந்து அவனோடு ஒன்றினாள். சிறிது நேரம் கழித்து அவன் அவளை விடுவிக்க அப்போது தான் அவளுக்கு அலைப்பேசியின் நியாபகம் வர... அவனின் அலைப்பேசியை எடுத்து அவனின் கையில் திணித்தாள்.

அதை எடுத்து பார்த்தவன் கண்ணில் அக்காவின் அத்தனை அழைப்புகள் கண்ணில் பட எரிச்சலுடன் அதை அணைத்து வைத்தான். அம்மாவின் பேச்சை கேட்டு கவிதா அவனுக்கு எப்போதுமே அறிவுரை செய்யத் தான் அழைப்பாள். அது தான் அவனின் எரிச்சலுக்குக் காரணம். அவனுக்கும் அறிவுரைக்கும் தான் காத தூரமே..

“என்ன...?” அவனின் முகத்தின் எரிச்சலில் அவள் கேட்க,

“ஒண்ணுமில்லை...” என்றவன் தன் பர்சில் இருந்து பணத்தை அள்ளியெடுத்து அவள் கையில் திணிக்க... அவள் புரியாமல் அவனைப் பார்க்க...

“என்ன சொன்னதை விட அதிகமாய் இருக்கா?ஏன்னா அந்தளவுக்கு நீ சொர்க்கத்தையே எனக்குக் காட்டியிருக்க... தேங்க்ஸ் பேபி” என்றவன் அவளின் இதழில் நீண்ட முத்திரையைப் பதித்து அவளை விட...

“எப்போன்னாலும் கூப்பிடுங்க சார்...” அவள் புன்னகையுடன் விடைபெற... அவள் சென்றதும் அருகிலிருந்த மது பாட்டிலில் மிச்சம் இருந்ததைத் தன் வாயில் சரித்துக் கொண்டவன் வீட்டிற்குக் கிளம்ப ஆயத்தமானான்.

வீட்டின் முன் காரை நிறுத்திவிட்டு கீழே இறங்கியவன் கண்ணுக்கு அங்குக் குழுமியிருந்த கூட்டம் வித்தியாசமாகத் தெரிந்தது. தள்ளாடியபடி உள்ளே சென்றவன் காதில் பெண்களின் அழுகை குரல் கேட்க... அவரசமாய் உள்ளே நுழைந்தவன் கண்ணில் தாயும், தந்தையும் உயிரற்ற உடலாய் படுக்க வைக்கப்பட்டு இருந்தது பட... மனம் அதிர வேகமாய்ச் செல்ல முயற்சித்தவனின் கால்கள் போதையில் தடுமாற மெதுவாய் அதன் அருகில் வந்தான்.

அவன் தன் தந்தையின் உடலை கூடக் கவனிக்கவில்லை. தாயின் பாதத்தின் அருகில் பொத்தென்று கீழே அமர்ந்தான். எப்போதும் புன்னகையுடன் ‘கதிர்’ என்றழைக்கும் அம்மா இப்போது உயிரோடு இல்லை என்பதை அவனால் நம்ப முடியவில்லை. அவரின் பாதத்தை இரு கைகளால் பிடித்தவன் அவரின் முகத்தையையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

‘அழு’ என்று அம்மாவின் மீது எல்லையற்ற அன்பு வைத்திருந்த அவனின் மனம் கட்டளையிட்டாலும்... மது எனும் அரக்கனுக்கு அடிமையாகி மரத்து போய்

மழுங்கியிருந்த மூளையோ அதைச் செய்யவிடாமல் தடுத்தது. மூளையின் கட்டளையில்லாமல் கண்கள் ‘நான் என் வேலையைச் செய்ய மாட்டேன்’ என்று வேலை நிறுத்தம் செய்ய... பெற்றோரின் இறப்பிற்குக் கூடக் கண்ணீர் வடிக்க முடியாமல் மதுவின் போதையில் கண்கள் சொருக அமர்ந்திருந்தான் அவர்களின் அன்பு மகன் கதிரோவியன்.

அம்மா!!! என்னுயிர் நீயே அம்மா...!
சிற்றின்ப சாகரத்தில் மூழ்கியே
நான் எனை தொலைத்தேன்...
தொலைத்தது என்னை மட்டுமா?
உனையும் சேர்த்தல்லவா...!!!

தொடரும்...!!!

நாளை : 3

கதிரின் வரவை உணர்ந்த கவிதா தன் மடியில் படுத்து அழுது கொண்டிருந்த ராகேஷை அருகிலிருந்த உறவினர் பெண்மணியிடம் ஒப்படைத்து விட்டு அழுத தன் விழிகளை அழுந்த துடைத்துக் கொண்டு எழுந்தவள் வேகமாய்த் தனது மூத்த தம்பியை நோக்கி வந்தாள். அவனருகில் வந்தவள் அவன் தோளில் கை வைத்து,

“கதிர்...” என்றழைக்க... அவனோ அதை உணர கூட முடியாமல் திக்பிரம்மை பிடித்துப் போய் அமர்ந்திருந்தான்.

“கதிர்...” சற்று அழுத்தத்துடன் அவள் குரல் அழைக்க... அவன் அவளை ஏறிட்டுப் பார்த்தான். அழ கூட முடியாமல் பரிதவிப்புடன் பார்த்த அவனின் கண்களைக் கண்டவளுக்கு அவன் சிறியவனாய்... தன் மகனை போல் தோன்ற, “கதிர்...” என்று கதறலோடு அவனைத் தன்னோடு அணைத்து கொண்டாள்.

“தம்பி... நம்ம உறவுக்காரங்க, ஆபிஸ் ஸ்டாஃப் எல்லோரும் வந்துருக்காங்க. இந்த நிலைமையில் அவங்க உன்னைப் பார்த்தா தப்பா நினைப்பாங்க. அக்கா கூட வாப்பா...” அவள் அழைக்க... அவள் பேச்சிலிருந்த உண்மையை உணர்ந்தவனாய் அவள் சொல்படி கேட்டான்.

வெகு வருடங்களுக்குப் பின் தன் சொல் பேச்சை கேட்கும் சகோதரனை நினைத்து சந்தோசப்படுவதா? இல்லை இறந்த பெற்றோரை நினைத்து துக்கப்படுவதா? என்று அவளுக்குத் தெரியவில்லை. பொங்கிய கண்ணீரை துடைத்துக் கொண்டு அவனை அழைத்துக் கொண்டு அவனின் அறைக்குச் செல்ல முற்பட்டாள். அந்நேரம் பார்த்து எங்கோ இருந்து சத்யன் அவளை நோக்கி ஓடி வந்தான். அவனின் கைப்பிடியில் குழந்தை சரண் இருந்தான்.

“கவி... கதிரை எங்கே அழைச்சிட்டுப் போற?காரியம் எல்லாம் அவன் தானே பண்ணனும்?” நிலைமை புரியாமல் பேசிய கணவனைக் கண்டு அவளுக்குச் சிறிது எரிச்சல் வந்தது.

“அவனை இப்படியே அழைச்சிட்டு வர சொல்றீங்களா?”

“இப்படியே வர வேண்டியது தானே...” கொஞ்சமும் சளைக்காமல் பேசிய கணவனை ஆழ்ந்து பார்த்தவள்,

“எங்க குடும்ப மானம் காற்றில் பறக்கணும்ன்னு நீங்க நினைக்கிறீங்களா?அது தான் உங்க விருப்பமா?” நிதானமான அவளின் கேள்வியில் அவன் சற்று திகைத்து தான் போனான்.

அவள் கேட்டது போல் அவன் நினைத்தது என்னமோ உண்மை தான். கதிரின் நிலை கண்டு எல்லோரும் அவனை எள்ளி நகையாட வேண்டும். அவனின் நிலையை எல்லோருக்கும் பிரகடனப்படுத்தி விட்டால் அதன் பின் சொந்தக்காரர்கள், தொழில் என்று எல்லா இடங்களிலும் கதிருக்கு அவப்பெயர் ஏற்பட்டு விடும். அதன் பிறகு எந்த முயற்சியும் இல்லாமல் இந்தச் சாம்ராஜ்யம் மொத்தமும் தன் கைவசம் வந்துவிடும் என்று அவன் எண்ணியிருந்தான்.

“அய்யோ செல்லம்... நான் அப்படி நினைப்பேனா... நீ உன் தம்பியை கூட்டிட்டு போம்மா...” அவளிடம் தன்மையாகப் பேசி அவளை அனுப்பியவன், ‘போடி போ... எல்லாம் என் கைக்கு வரட்டும்... அப்போ என்னுடைய உண்மையான குணத்தை நான் காட்டுறேன்டி...’ வன்மையாய் மனதில் கருவி கொண்டான்.

கதிரின் அறைக்குள் நுழைந்த கவிதா நேரே குளியலறைக்குச் சென்று ஷவரை திறந்து விட்டவள், தன் தம்பியிடம் துண்டை கொடுத்து, “போதை தெளியற வரைக்கும் நல்லா குளிச்சிட்டு வாடா...” என்றவள் கதவை சாத்திவிட்டு வெளியேறினாள்.

குளிர்ந்த நீரில் தலையைக் கொடுத்து கொண்டிருந்தவனுக்குப் போதை கொஞ்சம் கொஞ்சமாய் இறங்கியது. போதை இறங்க... இறங்க... மனதின் வேதனை, பாரம் மூளைக்கு ஏற... பெற்றோரின் இழப்பை எண்ணி அவன் கண்களில் வழிந்த கண்ணீரானது நீரோடு கலந்து வெளியேறியது. பெற்றோர்களின் இழப்பை கூட உணர கூட முடியாமல் தான் இருந்த நிலையை எண்ணி மனதுக்குள் வெட்கியவன் கண்களில் கண்ணீர் ஆறாய் பெருக்கெடுத்து ஓடியது. இத்தனை வருடங்களில் அவன் என்றுமே தான் செய்ததைத் தவறு என்று நினைத்தது இல்லை. இன்று முதன் முறையாகத் தான் ஏதோ செய்யக் கூடாத பெரிய தவறை செய்துவிட்டதாக எண்ணி குற்றவுணர்ச்சியில் தவித்தான்.

“அம்மா... அப்பா...” ஊமையாய் கதறியது அவனது நெஞ்சம். இனி அவர்களைப் பார்க்கவே முடியாது என்கிற நிதர்சனத்தை அவனின் மனம் ஏற்க மறுத்தது. எவ்வளவு நேரம் தான் குளியறையில் இருக்க முடியும்... வெளியில் வந்தவன் அங்கே கவிதா எடுத்து வைத்திருந்த வேஷ்டியை எடுத்து கட்டி கொண்டு கீழே வந்தான்.

அக்காளின் கணவன் சத்யன் தன் தந்தையின் உதவியாளர் மூர்த்தியிடமும், வக்கீல் ராஜனிடமும் பேசி கொண்டிருந்ததைப் பார்த்தபடி அவர்கள் அருகில் வந்தவன், மூர்த்தியிடம்...

“அங்கிள்... நீங்க தான் எல்லாக் காரியத்தையும் கூட நின்னு பார்த்துக்கணும்... எனக்கு... எனக்கு என்ன பண்றதுன்னு தெரியல...” என்றவனைப் பார்த்து ஆறுதலாய் அவனின் கையைப் பிடித்த மூர்த்தி,

“நான் பார்த்துக்கிறேன் தம்பி... நீங்க கவலைப்படாதீங்க...” என்றவரின் முகத்தில் அதீத சோகம் தென்பட்டது. கந்தனின் இழப்பு எப்பேற்பட்டது என்று அவருக்கு மட்டும் தான் தெரியும்.

சத்யன் கதிரின் தெளிவான பேச்சை ஆவென்று வாயை பிளந்தபடி கேட்டுக் கொண்டிருந்தான். இவ்வளவு சீக்கிரம்

அவனிடத்தில் இந்தளவுக்குத் தெளிவை சத்யன் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. இனி வரும் நாட்கள் தனக்குச் சாதகமாய் அமையாது என்பதை உணர்ந்தவன் அடுத்துச் செய்ய வேண்டியது என்ன என்று நிதானமாக மனதுக்குள் திட்டம் தீட்டினான்.

அடுத்து வந்த காரியங்கள் மளமளவென்று நடைபெற்றது. உயிரோடு உலா வந்த கந்தனும், கமலாவும் அவர்களின் வீட்டில் புகைப்படச் சட்டத்திற்குள் நிழல் படமாய்ப் புன்னகைத்தனர். பதினாறாம் நாள் காரியங்கள் முடிந்தும் பெற்றோரின் இழப்பின் வேதனை மனதை வாட்ட... அவர்களின் படத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த கவிதா, கதிர், ராகேஷ் மூவரும் சத்யனின் வரவை உணர்ந்து திரும்பி பார்த்தனர்.

“கவி... அவங்க தான் சின்னப் பிள்ளைங்கன்னா... நீயும் அவங்களோடு சேர்ந்துட்டு அழுது கிட்டே இருந்தா எப்படி? அவங்க ரெண்டு பேரையும் சாப்பிட கூட்டிட்டு வா... அப்படியே நீயும் சாப்பிடு...” மனைவியிடம் கூறியவன் மச்சினர்கள் இருவரையும் அழைத்துக் கொண்டு உணவு மேஜைக்கு வந்தான்.

“கவி... நீ இங்கேயே இரு... நான் மட்டும் பெங்களூருக்கு போய் வேலையை ரிசைன் பண்ணிட்டு, சரணோட டிசி வாங்கிட்டு வந்துர்றேன்...” தலையும் இல்லாமல் வாலும் இல்லாமல் மொட்டையாகச் சொன்னவனை ஒன்றும் புரியாமல் மூவரும் பார்க்க...

“என்ன அப்படிப் பார்க்கறீங்க?உங்க அப்பா, அம்மா இல்லாததால நானும், கவியும் இங்கேயே தங்கியிருந்து அவங்களோட ஸ்தானத்தில் இருந்து உங்க ரெண்டு பேரையும் கவனிச்சிக்கப் போறோம்” உற்சாகமாகச் சொன்னவனைக் கதிர் மறுத்துக் கூறாமல் எதுவும் பேசாமல் உணவை உண்டான்.

“உண்மையா தான் சொல்றீங்களா?” கவிதா மகிழ்ச்சியுடன் கணவனைப் பார்த்து கேட்க...

“உண்மையா தான் சொல்றேன் செல்லம்... எல்லாம் உனக்காகத் தான்...” அவள் தலையில் வாளி வாளியாகப் பனிக்கட்டியை அள்ளி கொட்டினான். அதை உண்மை என்று நம்பி அவனைப் பார்த்து நன்றியுடன் புன்னகைத்தாள் அவனின் மனைவி.

“அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம் மாமா...” சத்யனின் திட்டத்திற்கு எதிராக அபஸ்வரம் போல் ராகேஷின் குரல் ஒலித்தது. சத்யன் அவனை யோசனையாக ஏறிட்டான். கதிரும், கவிதாவும் கூட அவனை யோசனையாய் பார்த்தனர்.

“நாங்க ஒண்ணும் சின்னப்பிள்ளைகள் இல்லை மாமா. என்னைக் கவனிச்சுக்க எனக்குத் தெரியும். அப்படி முடியலைன்னா என்னோட அண்ணன் கதிர் பார்த்துக்குவாங்க... அதே போல் அண்ணனும் அவங்களைப் பார்த்துக்குவாங்க... அதனால நீங்க ஊருக்கு கிளம்பலாம்....”

‘பிள்ளைப்பூச்சின்னு நினைச்சோமே... பயப்புள்ள இந்தப் போடு போடுது’ மனதுக்குள் ஆங்காரமாய் நினைத்த சத்யன், “பார்த்தியா கவி... உன் தம்பி பேசுறதை... இதுக்கு மேலேயும் நாம இங்கே இருக்கணுமா?” அவன் தன் மனைவியை உசுப்பேத்தி விட்டான். அவள் எடுத்துச் சொன்னால் ராகேஷ் கேட்பான் என்று எண்ணினான்.

“அதானே... டேய் ராகேஷ் நீ இப்படிப் பேசுவேன்னு நான் கொஞ்சம் கூட நினைக்கல... எங்களுக்கு என்ன தலையெழுத்தா... இங்கே இருக்கணும்ன்னு... ஏங்க இன்னமும் ஏன் இங்கே இருக்கீங்க?கிளம்பலாம் வாங்க...” அவள் சத்தமில்லாமல் சத்யனின் திட்டத்திற்குப் பெரிய ஆப்பு வைத்தாள்.

“அவன் ஏதோ சின்னப் பையன் இப்படிப் பேசறான்... நீ வேற எதுக்குச் செல்லம் கோபப்படுற...” சத்யன் அவளைச் சமாதானப்படுத்த...

“நீங்க வேணா இருங்க... என்னால் ஒரு நிமிசம் கூட இங்கே இருக்க முடியாது. முளைச்சு மூணு இலை விடல... இவன் எல்லாம் பேசி நான் கேட்கணும்ன்னு எனக்கு விதிச்சியிருக்கு...” என்று கவிதா முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்ள... சத்யன் வேறுவழியின்றி அவளை அழைத்துக் கொண்டு பெங்களூருக்குக் கிளம்பினான்.

இதையெல்லாம் ஒருவித அமைதியுடன் பார்த்துக் கொண்டிருந்த கதிர் தனது அறைக்குச் சென்றான். அவனைத் தொடர்ந்து ராகேஷ் அவனின் பின்னே சென்றான்.

“ஏன் ராக்கி... இப்படி எல்லாம் பேசின?மாமா, அக்கா மனசு என்ன பாடுபடும்? அவங்க இருந்தா நமக்கும் கொஞ்சம் தைரியமா இருக்கும்ல...” கதிரின் பேச்சிற்க்கு,

“மாமா வேணாம் அண்ணா... நம்மள நாமே பார்த்துக்க முடியாதா... எனக்கு ஏதாவது ஒண்ணுன்னா நீங்க பார்த்துக்க மாட்டீங்களா அண்ணா...” உருக்கமாய்க் கேட்ட ராகேஷை மன நெகிழ்வுடன் தன்னுடன் அணைத்துக் கொண்டான் கதிர்.

“நிச்சயமா ராக்கி...” தம்பியிடம் சொன்னவன் மனதில்... தன்னை நம்பியிருக்கும் தம்பியை நன்கு பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற பொறுப்பு புதிதாய் முளைத்தது.

வெகுநாட்களுக்குப் பின் சிறிது நேரம் தம்பியிடம் மனம் விட்டு பேசி கொண்டிருந்த கதிரின் அலைப்பேசி அழைக்க... எடுத்து பார்த்தவன் கவிதாவின் அழைப்பு என்றதும் உடனே எடுத்துப் பேசினான்.

“கதிர் நான் சொல்றதை கவனமா கேட்டுக்கோ... ரொம்ப நேரம் என்னால் பேச முடியாது. சரண் பசிக்குதுன்னு சொன்னதால உங்க மாமா அவனைக் கூட்டிட்டு ஹோட்டலுக்குப் போயிருக்காங்க... கிடைச்ச கேப்பில் தான் நான் உன் கிட்ட பேசறேன்...” நீளமாய் விளக்கம் கொடுத்த அக்காவின் பேச்சு அவனுக்குச் சுத்தமாய்ப் புரியவில்லை.

“கதிர்... ராகேஷ் பேசியதுக்காக நான் கோபிச்சிட்டு வரல... அப்படிக் கோபப்படுற மாதிரி நடிச்சேன்... நானும், அவனும் சேர்ந்து தான் திட்டம் போட்டு இந்த மாதிரி நடிச்சோம். உங்க மாமா நல்லவர் இல்லை கதிர்... எனக்குமே அவரோட குணம் இப்ப தான் புரிஞ்சது...” அவள் சொல்லும் போதே அவளுக்கு அழுகை வந்தது. வழிந்த கண்ணீரை துடைத்துக் கொண்டு மேலே பேசினாள். அவளின் நிலை அப்படி என்றால் மறுபக்கம் கேட்டுக் கொண்டிருந்த கதிர் அதிர்ந்து போயிருந்தான்.

“அப்பா, அம்மா இறந்த அன்னைக்கே நம்ம வக்கீல் அங்கிள் கிட்ட சொத்து பத்தி விசாரிச்சு இருக்காரு... நம்ம மூர்த்தி அங்கிள் கிட்டேயும் உன்னைப் பத்தி தப்பா பேசி... அவன் எதுக்கும் உதவாதவன்... இனிமேல் அவர் தான் கம்பெனியை பார்த்துக்கப் போறதா சொல்லியிருக்காரு... முதல்ல இதை நான் நம்பல... ராகேஷ் தான் அவரோட நடவடிக்கையைக் கண்காணிச்சு எனக்கு எல்லாத்தையும் சொன்னான். அத்தோட அப்பாவுக்கும் அவருடைய குணம் நல்லா தெரியும்... எனக்காகத் தான் பொறுமையா இருந்தாருன்னு ராகேஷ் சொன்னான்” தனது அக்கா கணவனின் மறுபக்கம் தெரிந்து கதிர் பேச முடியாமல் வாயடைத்துப் போனான்.

“என்ன தான் அவர் எனக்குக் கணவன்னாலும்... அவர் செய்றதை எல்லாம் பொறுத்துக்க முடியாது. என்னோட கூடப்பிறந்தவங்க உங்களுக்கு அவர் துரோகம் பண்றதை என்னால் ஏத்துக்க முடியாது. அதுக்காக நான் அவரை விட்டுட்டு வரவும் முடியாது. என் விதி இது தான்னு சகிச்சிட்டு வாழ பழகிக்குவேன். கதிர்... இனியும் விளையாட்டு பிள்ளை மாதிரி இருக்காம கொஞ்சம் பொறுப்போட நடந்துக்கோடா. இந்தக் குடியை எல்லாம் விட்டுட்டு தொழிலை கவனி. ராகேஷ் சின்னப் பையன். அவனுக்கு ஒரு எடுத்துக்காட்டா நீ இருக்கணும்... அவன் உன்னைப் பார்த்து கெட்டுப் போகக் கூடாது... மூர்த்தி அங்கிள், ராஜன் அங்கிள் என்ன சொல்றாங்களோ அதன் படி கேட்டு நட... அவங்க ரெண்டு பேருக்கும் நம்ம

குடும்பத்தின் மேல் பாசம் இருக்கு. அதை விட விசுவாசம் அதிகமா இருக்கு. சரி கதிர்... மாமா வந்துட்டாங்க... நான் வச்சிறவா?" அவளின் பேச்சில் இருந்த உண்மை அவனின் மனதை சுட... தான் இருக்கும் நிலையை எண்ணி தனக்குள் அவமானமாய் உணர்ந்தான்.

"எல்லாத்தையும் நான் பார்த்துக்கிறேன் அக்கா..." அவளுக்கு உறுதி கூறி வைத்தவனுக்கு... எப்படித் தான் இதையெல்லாம் சமாளிக்கப் போகிறோம் என்று மலைப்பாக இருந்தது.

"அண்ணா..." ராகேஷ் அழைக்கவும் அவனைப் பார்த்தான் கதிர். சின்னப் பையன் அவனுக்கு இருக்கும் அறிவில் கொஞ்சம் கூடத் தனக்கு இல்லையே எண்ணி மனதுக்குள் நொந்தான். அவனுக்கிருக்கும் பொறுப்பு, ஆட்களை எடை போடும் திறமை தனக்கு இல்லாமல் போனதை எண்ணி தனக்குள் வெட்கினான்.

"நான் பார்த்துக்கிறேன் ராக்கி... நீ கவலைப்படாதே..." புன்சிரிப்புடன் சொன்ன அண்ணனை கண்டு சந்தோசம் அடைந்தவனாய் தனது அறைக்குச் சென்றான் ராகேஷ். அவனின் சந்தோசத்திற்கு அல்பாயுசு என்பதை அந்தக் கணம் அவன் உணர்ந்திருக்கவில்லை.

மறுநாள் காலையில் அலுவலகத்துக்கு வந்த கதிருக்கு ஆரத்தி எடுத்துச் சுற்றாத குறையாக மிகப் பெரிய வரவேற்பு கொடுத்தார் மூர்த்தி.

"தம்பி நீங்க வந்ததுல ரொம்பச் சந்தோசம்..." என்றவர் கந்தனின் அறைக்கு அழைத்துச் சென்று அங்கிருந்த நாற்காலியில் அவனை அமர வைத்து அழகு பார்த்தார்.

"அப்பாவோட நீண்ட நாள் கனவு தம்பி இது... இன்னைக்குத் தான் நிறைவேறி இருக்கு" என்று மகிழ்ந்தவர், "இதைப் பார்த்துச் சந்தோசப்படத் தான் அப்பா இல்லை..." என்றவர் தன் கண்களைத் துடைத்துக் கொண்டார். அவரின் பேச்சில் அவர் தன் தந்தையின் மீது

கொண்டிருந்த பாசம், அன்பு, எல்லாம் தெரிந்ததை அவனும் கண்டு கொண்டான்.

“அங்கிள்... எனக்குப் பிசினெஸ்ன்னா என்னன்னே தெரியாது... நீங்க தான் கூட இருந்து ஹெல்ப் பண்ணனும்” அவரிடம் தயக்கமாய் அவன் சொல்ல...

“இதுக்கு ஏன் தம்பி இவ்வளவு தயங்குறீங்க?இதை விட எனக்கு வேறு வேலை என்ன? நான் எப்பவும் உங்க கூடவே இருப்பேன்...”

“தேங்க்ஸ் அங்கிள்... இன்னைக்கு என்ன வேலை?” என்று ஆர்வமாய் அவன் கேட்க... அவர் இன்றைய வேலையைப் பட்டியலிட்டு அவனிடம் சொல்ல... அதைக் கேட்ட அவனுக்கு மலைப்பாக இருந்தது.

“என்ன தம்பி என்ன யோசனை?” அவன் ஏதோ நினைவில் இருப்பதைக் கண்ட அவர் கேட்க,

“நத்திங் அங்கிள்... நீங்க சொல்லுங்க...” என்றவன் அவரின் பேச்சை கவனிக்கலானான். அவர் சென்றதும் மேஜையில் இருந்த கோப்பை எடுத்து பார்த்தவனுக்கு ஏதோ புரியாத மொழியில் எழுதி இருப்பதைப் போல் அதிலிருந்த எழுத்துகள் தெரிய... அதை அப்படியே மேஜையில் தூக்கியெறிந்து விட்டு தலையை இரு கைகளால் தாங்கி கொண்டான்.

மதியம் வரை நேரத்தை நெட்டி தள்ளியவனுக்கு ஒவ்வொரு நொடியும் கடக்க மூர்த்தியின் உதவி தேவைப்பட்டது. அடிக்கடி அவரிடம் உதவி கேட்பது அவனுக்கே ஒரு மாதிரியாகத் தான் இருந்தது. ஆனால் அவர் அதையெல்லாம் கண்டு கொள்ளாமல் அவனுக்கு ஒவ்வொன்றையும் சிரத்தையுடன் கற்று கொடுத்தார். அவர் என்னமோ நல்லாசிரியராய் மாறி கற்றுத் தந்தார் தான் இல்லை என்பதற்கில்லை... ஆனால் அவனோ ஒரு மக்கு மாணவன் என்பதை உணராமல் போனது தான் அவர் செய்த தவறு.

“தம்பி... இப்போ ஒரு முக்கியமான கிளையன்ட் மீட்டிங் இருக்கு... அது சம்பந்தப்பட்ட பைல் இது. படிச்சு பாருங்க... அரைமணி நேரத்தில் நான் வந்து கூட்டிட்டு போறேன்...” என்றவர் அறையை விட்டு வெளியேற... அவன் அந்தக் கோப்பை பிரிக்கக் கூட மனமில்லாமல் அப்படியே அமர்ந்திருந்தான். வந்த ஒரே நாளிலேயே அவனுக்கு அலுவலகம் வேப்பங்காயாய்க் கசந்தது.

கூட்டத்தில் அவன் சரிவரப் பேசாமல் சொதப்ப... அங்கிருந்தவர்களின் நகைப்பிற்கு அவன் ஆளானான். எல்லோர் முன்னும் ஆடைகளற்று நிர்வாணமாய் நிற்பது போல் அவமானமாய் உணர்ந்தான். சட்டென்று மூர்த்தி அந்த நிலைமை தன் கையில் எடுத்துக் கொண்டு அதை அழகாய் கையாண்டு வெற்றிகரமாகப் பேசி முடித்தார்.

அதிலும் வந்திருந்த ஒரு இளம்பெண் இவனைப் பார்த்து பார்த்து நமட்டுச் சிரிப்பு சிரித்ததில் அவனின் ரத்த அழுத்தம் தாறுமாறாய் ஏறியது. பெண் என்பவள் தனக்குக் கீழானவள், ஆண்களின் அடிமை, தனது இச்சைக்கு வடிகாலாகும் ஒரு போதை வஸ்து என்றிருந்தவனுக்கு அந்தப் பெண்ணின் சிரிப்பு எரியும் நெருப்பில் எண்ணெய் வார்த்தது போலிருந்தது.

‘மவளே நீ மட்டும் தனியே என்னிடம் மாட்டியிருந்த... அப்போ தெரிந்திருக்கும் இந்தக் கதிரின் சங்கதி’ மனதுக்குள் அவளைக் கருவியவன் வெளியில் அவளை முறைத்துப் பார்த்தான்.

மாலையில் அலுவலகத்தில் இருந்து கிளம்பியவன் வீட்டிற்குச் செல்லாமல் நேரே மதுபான கடைக்குச் சென்றான். பெற்றோரின் இழப்பிற்கு, அந்தப் பெண் அவனைக் கேவலமாய்ப் பார்த்ததற்கு, தான் எதற்குமே லாயக்கு இல்லாமல் உதவாக்கரையாக இருப்பதற்கு என்று ஏதேதோ காரணங்களை மனதுக்குள் அடுக்கியவன் அதையெல்லாம் போக்குவதற்காக அன்று அளவுக்கு அதிகமாய்க் குடித்தான். ஆக மொத்தம் அவன்

குடிப்பதற்கு அவனுக்கு ஒரு சாக்கு வேண்டும் அவ்வளவு தான்.

ராகேஷ் அண்ணனின் வருகைக்காகத் தவிப்புடன் காத்திருந்தான். சோகத்தில் சுருண்டு போயிருக்க வேண்டியவன்... இப்போது சகோதரன் வராததால் கவலை கொண்டு அவனுக்காய் வாசலில் விழி வைத்து நின்றிருந்தான். கதிரின் காரை கண்டதும் மகிழ்வுடன் அதன் அருகே செல்ல, அதிலிருந்து தள்ளாடியபடி இறங்கிய கதிரை கண்டு திகைத்துப் போனான் அவன். பழைய குருடி கதவை திறடி என்பது போல் வந்து நின்ற அண்ணனை கண்டு அவனுக்கு வருத்தமாய் இருந்த அதேசமயம் தாயை நினைத்து பார்த்து இன்னமும் வருந்தினான். கதிர் மீதான தாயின் கவலை இப்போது அவனுக்கு நன்கு புரிந்தது.

“அண்ணா... ஏன் இப்படிக் குடிச்சு குடிச்சு கெட்டு போறீங்க?” வருத்தத்துடன் சொன்னவன் அவனை வீட்டினுள் அழைத்து வந்தான்.

“எனக்கு மனசுக்குக் கஷ்டமாயிருந்தது ராக்கி... அதான் குடிச்சேன்... இன்னைக்கு ஆபிசில் என்ன நடந்தது தெரியுமா?” ஒன்று விடாமல் தம்பியிடம் கூறியவன், “என்னை மாதிரி உதவாக்கரை எல்லாம் உயிர் வாழவே லாயக்கு இல்லாதவங்க ராக்கி... எனக்கு மனசு வெறுத்து போச்சு...” என்று புலம்பியபடி வந்தவனை அறைக்குள் அழைத்து வந்து படுக்க வைத்தான் ராகேஷ். கதிரின் நிலை குறித்து அவனின் கண்களில் கண்ணீர் வழிந்தது.

காலையில் எழும் போதே தலையெல்லாம் பாரமாய் இருக்க... எழ முடியாமல் எழுந்த கதிர் காலைக் கடன்களை முடித்துவிட்டு கீழே இறங்கி வந்தான். வாசலில் ஏதோ சத்தம் கேட்க வேகமாய் அங்கே சென்றான். அங்கு இவனை விட நாலைந்து வயது மூத்த இளைஞன் ஒருவன் நின்று கொண்டிருந்தான்.

“யார் நீங்க என்ன வேணும்?” அவனை அடையாளம் தெரியாமல் மேலும் கீழும் பார்த்தபடி கதிர் கேட்க...

அவனோ இவனைச் சரியாய் அடையாளம் கண்டு கொண்டவனாய்,

“நீங்க கதிர் தானே... ரைட்?” கதிர் யோசனையாய் ஆமோதிப்பது போல் தலையசைத்தான்.

“உங்களுக்குப் பார்த்திருக்கும் பெண்ணின் அண்ணன் நான்...” என்று தன்னை அவன் அறிமுகப்படுத்திக் கொள்ள... கதிருக்கு அவன் அன்னை கூறியது நியாபகம் வர...

“உள்ளே வாங்க...” என்று அவன் அழைக்க... அந்த அண்ணனாகப் பட்டவனும் மறுப்புச் சொல்லாமல் உள்ளே வந்தவன் அங்கிருந்த சோபாவில் அமர்ந்தான்.

“நான் சுத்தி வளைச்சு பேச விரும்பல... இழவு நடந்த வீட்டில் பேச கூடாத விசயம் தான்... இருந்தாலும் என் தங்கச்சியோட வாழ்க்கையை நினைத்து என்னால் பேசாமலும் இருக்க முடியல...” என்றவன் கொஞ்ச நேரம் நிறுத்தி பின் தொண்டையைச் செறுமி கொண்டு, “என் தங்கையை உங்களுக்குக் கல்யாணம் பண்ணி கொடுப்பதில் எங்களுக்கு இஷ்டமில்லை...” என்றவனின் பேச்சில் முதலில் அதிர்ந்த கதிர் பின் நிதானமாய்,

“ஏன்...?” ஒன்றை வார்த்தையில் கேள்வி கேட்டவன் ஆழ்ந்து எதிரில் இருப்பவனைப் பார்த்தான்.

“அதாவது உங்க பெற்றோர் மீது நம்பிக்கை வைத்து தான் இந்தக் கல்யாணத்துக்குச் சம்மதித்தோம். ஆனால் அவர்கள் போன பின்... உங்களை நம்பி எங்க பொண்ணைக் கொடுப்பதில் எங்களுக்கும் விருப்பமில்லை... அதை எல்லாம் விட என் தங்கைக்கும் உங்களைக் கல்யாணம் பண்ணி கொள்வதில் கொஞ்சமும் இஷ்டமில்லை” அவனின் பேச்சில் கதிருக்கு ஆத்திரம் எல்லையைக் கடந்தது.

“என்னை நம்பி பொண்ணு கொடுக்க விருப்பம் இல்லாதவங்க எதுக்குக் கல்யாணத்துக்குச் சம்மதம்

சொன்னீங்க... அப்படி என்னடா குறையை என்னிடம் கண்டீங்க?" கோபமாய் இரைந்தவனைப் புன்னகையுடன் பார்த்தவன்,

"என்ன குறையா?ஒண்ணா... இரண்டா... முதல்ல நீ ஒரு குடிகாரன்... அடுத்து பொம்பளை பொறுக்கி... அதற்கடுத்து உங்க அப்பா கட்டி காத்த தொழிலை திறம்பட நடத்த தெரியாமல் அதையும் இழந்து நடுத்தெருவில் நிற்க போகும் ரொம்பபபபப நல்லவன்..." அவன் ஒவ்வொன்றாய் சொன்ன விதத்தில்,

"ஏய்..." என்று அவனை அடிக்கப் பாய்ந்தான் கதிர். அவனை ராகேஷும், அங்கே சமையல் வேலை செய்யும் துரையும் சேர்ந்து பிடித்துக் கொண்டனர்.

"எதுக்குத் தேவையில்லாத பேச்சு... என் தங்கையின் ஜாதகத்தையும், ஃபோட்டோவையும் கொண்டு வந்து கொடு... நான் கிளம்பிட்டே இருக்கேன்..." அவன் சவடாலாய் சொல்ல...

"ராக்கி... இவனோட தங்கை ஜாதகத்தை அம்மா வைத்திருக்கும் இடம் உனக்குத் தெரியுமில்லையா? உடனே எடுத்துக் கொண்டு வந்து கொடு... இவன் ஒரு நிமிசம் கூட நம்ம வீட்டில் இருக்கக் கூடாது" கதிர் கோபமாய்க் கர்ஜிக்க... அடுத்தச் சில நிமிடங்களில் ராகேஷ் அண்ணன் சொன்னதைச் செய்தான்.

"இந்தா உன் தங்கச்சி ஜாதகம்... உன் தங்கை இல்லைன்னா என்ன எனக்கு வேறு பெண்ணா கிடைக்காது... போடா வெளியே..." கதிர் வாயிலை நோக்கி கையைக் காட்ட...

"நல்லவேளை என் தங்கை தப்பித்தாள்... உன்னை மாதிரி திறமையில்லாத ஒருவனைக் கல்யாணம் பண்ணுவதற்குப் பதில் கல்யாணமே பண்ணாமல் இருப்பது எவ்வளவோ மேல்... உன் தொழில் நிலைமை உனக்குத் தெரியுமா?உன் அப்பா இல்லாமல் இந்த இருபது நாளில் அது எந்தளவுக்குச் சரிந்து

கொண்டிருக்கிறது என்பதை நீ அறிவாயா? உன்னை மாதிரி ஒண்ணுமில்லாதவனைக் கல்யாணம் பண்ண என் தங்கச்சிக்கு விருப்பமில்லை... அவள் விருப்பத்துக்கு மாறாய் நாங்க நடப்பதும் இல்லை...” என்றவன் வாயிலை நோக்கி செல்ல...

“ஒரு நிமிசம்...” என்று அவனைக் கை நீட்டி தடுத்த கதிர்...

“உன் தங்கையே என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ன்னு என்னைக் கெஞ்சினா கூட எனக்கு அவள் வேணாம்... அதையும் அவளிடம் சொல்லிடு...” ஆக்ரோசமாய் உருமியவனைக் கேவலமாய் ஒரு பார்வை பார்த்த அந்த அண்ணங்காரன்,

“என் தங்கை... போயும் போயும் உன்னை...” கதிரை மேலும் கீழுமாய் ஒரு மாதிரி பார்த்தவன், “ம்ஹூம்... அதுக்குச் சான்சே இல்லை...” என்று உதட்டை பிதுக்கி பரிகாசமாய்ச் சொல்லிவிட்டு அவன் செல்ல... அதில் கதிர் அவமானத்தில் துடிதுடித்துப் போனான். தம்பியின் முகத்தைப் பார்க்க கூட முடியாமல் நேரே தன் அறைக் கதவை அறைந்து சாத்தியவன், கூண்டு புலி போல் அங்குமிங்கும் நடை போட்டான்.

நேற்று அவமானப்படுத்திய பெண்ணை விட... தனக்கு நிச்சயம் பேசிய பெண் தன்னை நிராகரிக்கக் கூறிய காரணங்களைக் கேட்டு அவன் ஆத்திரத்தின் உச்சியில் இருந்தான். அருகிலிருந்த அலமாரியை திறந்து மதுபான பாட்டிலை எடுத்தவன் அதைத் திறந்து தன் வாயில் சரித்தான். ஒரே மூச்சில் அதைக் குடித்து முடித்தவன் கண்கள் ஆத்திரத்தில் தீக்கங்கு போல் ஜொலித்தது. அந்த முகமறியா பெண்ணின் மேல் கொண்ட ஆத்திரத்தை எல்லாம் கையிலிருந்த மதுபாட்டிலில் காண்பித்தவன் அதைத் தரையில் ஓங்கி அடித்தான். அது அவனின் மனம் போல் சுக்குநூறாய் உடைந்து சிதறியது.

மது எனும் போதை
பெண் எனும் மாயை
பணம் எனும் கடவுள்

உணர்ந்தேன் உன்னாலே...
பெண்ணே உணர்ந்தேன் உன்னாலே!!!

நாளை : 4

அலுவலக வளாகத்தில் காரை நிறுத்திவிட்டு இறங்கிய கதிருக்கு எப்போதும் போல் இப்போதும் உடலும், மனதும் உதறல் எடுத்தது. முதல் நாள் பள்ளிக்குச் செல்லும் மாணவன் நிலையில் அவனின் மனம் இருந்தது. ஏனெனில் இந்த இடைப்பட்ட ஒரு மாத காலத்தில் எவ்வளவு சொதப்ப முடியுமோ அந்தளவுக்கு அவன் சொதப்பியிருந்தான்.

அன்று அவனுக்குப் பேசி முடித்த அந்தப் பெண் தன்னை நிராகரித்த வலியில் வாழ்கையில் வெற்றி பெற்றே ஆக வேண்டும் என்று மனதுக்குள் வெறித்தனமாய் நினைத்தவன்... முதலில் மது, மாது என்று எல்லாப் பழக்கத்தையும் மிகுந்த சிரமப்பட்டு மூட்டை கட்டி வைத்தான். அதன் பின் தினமும் அலுவலகத்துக்கு வந்தான்... நிர்வாகத்தைப் பார்த்துக் கொண்டான். எல்லாம் சரியாகத் தான் நடந்தது... அது அவனளவில் மட்டுமே.

ஊழியர்களுக்கு இடையில் நடந்த பிரச்சினையில் தலையிட்டு நல்ல பெயர் வாங்குகிறேன் பேர்வழி என்று பேச தெரியாமல் பேசி அவர்களின் பகையைச் சம்பாதித்துக் கொண்டான். அடுத்து அவர்கள் சார்பாக அனுப்பட்ட எல்லா டெண்டரும் புறக்கணிக்கப்பட்டுப் பெருத்த நஷ்டங்களை ஏற்படுத்தியது. ஏனெனில் அதில் குறிப்பிட்ட தொகை எல்லாம் அவன் சொன்னதே... என்ன தான் மூர்த்திக் கூட இருந்தாலும்... அவன் பல இடங்களில் தொழில் ரீதியாகப் பலத்த அடியை வாங்கினான். அதில் மேலும் மேலும் கடன் சுமை கூடி கொண்டே போனது. மூர்த்திக்குமே என்ன செய்வது என்று தெரியவில்லை. ஆக மொத்தம் ஒருவித குழப்பமான நிலையில் அவனது நிர்வாகம் சென்று கொண்டிருந்தது. இந்தக் குழப்ப நிலையை மட்டும் ஊழியர்கள் அறிந்தால் அவ்வளவு தான்... எப்போது வேண்டுமென்றாலும் போராட்டம்

நடத்துவார்கள்... அந்தளவுக்கு மோசமான முதலாளியாய் அவன் இருந்தான்.

இதையெல்லாம் விட அவனைப் பெரியதாய்ப் பயமுறுத்தியது வாடிக்கையாளர் கூட்டம். வெளியில் அவனைப் பேச சொன்னால் மணிக்கணக்கில் சொற்பொழிவு ஆற்றுவான். ஆனால் இந்த மாதிரி கூட்டத்தில் அறிவுப்பூர்வமாய்ப் பேசுவதற்குள் அவனுக்குப் போதும் போதும் என்றாகி விட்டது. அவன் படித்த கான்வென்ட் ஆங்கிலம் கூட அவனுக்கு மறந்து விடும் போலிருந்தது. அவன் படும் பாட்டைச் சகிக்க முடியாமல் ஒருநாள் மூர்த்தி அவனிடம்,

“தம்பி... நான் ஒண்ணு சொன்னா கோபிச்சுக்க மாட்டீங்களே...” பீடிகை போட,

“அங்கிள் உங்களைப் போய் நான் கோபிப்பேனா... என்னன்னு சொல்லுங்க அங்கிள்?”

“என்னோட மகள் நிர்வாகத்தைக் கரைத்து குடித்தவள். பிசினஸ் கன்சல்டிங் ஏஜென்சி வைத்து நடத்தி கொண்டிருக்கிறாள். நீங்க ஓகே சொன்னா... உங்களுக்கு உதவியாக அவளை அழைக்கலாம்... அவள் என்னை விடப் புத்திசாலி... உங்களுக்கு ரொம்பவும் உதவியாய் இருப்பாள்”

“ம்... நீங்க சொல்றது நல்லா தான் இருக்கு. பட்... சொந்தமா தொழில் பண்றவங்க நாம கூப்பிட்டா வருவாங்களா?” அவன் யோசனையுடன் அவரைப் பார்த்தான். அவனின் பேச்சிலேயே அவனின் சம்மதம் தெரிய...

“அதெல்லாம் நான் சொன்னால் கேட்டு கொள்வாள். நாளைக்கே வர சொல்றேன்... உங்களுக்குப் பிடித்தால் மேற் கொண்டு அவளிடம் பேசுங்க...”

“அய்யோ அங்கிள்... இதில் பிடிச்சியிருக்கு... பிடிக்கலங்கிறது எல்லாம் முக்கியம் இல்லை.

அப்பாவோட தொழிலை பழைய மாதிரி தூக்கி நிறுத்துறது தான் முக்கியம். அவங்களை வர சொல்லுங்க...” அவனின் பொறுப்பான பேச்சில் அவருக்குப் பூரிப்பாய் இருந்தது.

“கட்டாயம் தம்பி... எனக்கு அவள் மேல் நம்பிக்கை இருக்கு... நீங்க நினைச்சதை அவள் செய்வாள்...” என்றவர் அவனிடம் விடை பெற்றுக் கொண்டு வெளியேற... அவனோ எதையோ சாதித்த மனப்பான்மையில் பெருத்த நிம்மதியுடன் நாற்காலியில் சாய்ந்தான்.

****

“அப்பா அவர் என்ன சொன்னார்...? சம்மதித்து விட்டாரா?” மூர்த்தி வந்ததும் அவரிடம் பரப்பாய் கேட்டவளை பார்த்து... தன் கட்டை விரலை உயர்த்திச் சிரித்தார் மூர்த்தி. அவரின் செயலிலேயே காரியம் வெற்றி என்பதை அறிந்த அவள் நிம்மதியுடன் கலகலவெனச் சிரித்தாள்.

அசட்டுத்தனம் இல்லாத சலங்கையின் நாதம் போல் இனிமையாய், அழகாய் சிரித்த அவளைப் பரிவுடன் பார்த்துக் கொண்டிருந்தார் மூர்த்தி. ‘இவளுக்குத் தான் கதிர் தம்பி மேல் எவ்வளவு அக்கறை, பாசம். இதை அந்தத் தம்பி உணர்ந்து கொள்ளுமா? இவளின் முயற்சிக்கு அவரிடம் ஏதேனும் பிரதிபலிப்பு இருக்குமா? அப்படி இல்லையென்றால் அந்த ஏமாற்றத்தை இவளால் தாங்க முடியுமா? கடவுள் தான் இவளுக்குத் துணையிருக்க வேண்டும்’ மனதுக்குள் மகளுக்காக தெய்வத்திடம் வேண்டி கொண்டார்.

“என்னப்பா யோசனை...?”

“உனக்குக் கதிர் தம்பி மேல் ஏன் அவ்வளவு அக்கறைன்னு யோசிக்கிறேன்?”

“அப்பா... எல்லாம் தெரிந்தும் நீங்க இப்படிப் பேசுவது ரொம்பக் கஷ்டமாயிருக்கு” முகத்தைச் சுருக்கி கொண்டு பேசியவளை ஆதரவாய் பார்த்தவர்,

“எனக்குக் கதிர் தம்பியையும் நல்லா தெரியும்... அதேசமயம் உன்னையும் நல்லா தெரியும்... கதிர் தம்பி கிட்ட எனக்கு விசுவாசம் இருந்தாலும்... எனக்கு உன் மேல் இருப்பது அன்பும், அக்கறையும். அதனால் தான் சொல்கிறேன்... கதிர் தம்பி நீ நினைக்கும் அளவுக்கு நல்லவிதம் கிடையாது. உனக்குச் சில வேளை இந்த முயற்சியில் தோல்வியும் வரலாம்... அப்படியொரு தோல்வி வந்தால் அதைத் தாங்கிக்கக் கூடிய சக்தி உனக்கு இருக்கா?” அவர் முயற்சி என்று எதைக் குறிப்பிடுகிறார் என்பதை அறிந்த அவள் நேர் பார்வையாய் அவரைப் பார்த்தாள்.

“நீங்க நேரிடையாவே பேசலாம்ப்பா... என் காதல் தோல்வியடைந்தால் என்ன செய்யப் போறேன்னு தானே கேட்கிறீங்க...? என் காதல் தோல்வியடையாதுப்பா... என்னுடைய உண்மையான காதல் அவரை என்னிடம் கொண்டு வந்து சேர்க்கும். அப்படியே அது தோல்வியடைந்தாலும்... அது பத்தி எனக்குக் கவலையில்லை. இப்போ தோல்வியில் துவண்டிருக்கிற அவரை இந்தச் சமுதாயத்தில் உயர்ந்த நல்ல இடத்தில் உட்கார வைக்கணும்... அது தான் என்னுடைய இப்போதைய குறிக்கோள். அதை மட்டும் செஞ்சிட்டு நான் விலகி போயிருவேன்...” ஆரம்பத்தில் உறுதியாய் சொன்னவள் இறுதியில் முடிக்கும் போது அவளின் குரல் உடைந்தது.

“அம்மாடி... நீ கவலைப்படாதேம்மா... எல்லாமே நல்லபடியா நடக்கும். தம்பிக்கு உன்னை விடப் பொருத்தமான பெண்ணை எங்குத் தேடினாலும் கிடைக்காது என்பது எனக்கும் தெரியும். ஆனால் உன் காதலும், அன்பும் விழலுக்கு இறைத்த நீர் போலாகி விடக் கூடாதும்மா... அதைத் தான் நான் சொன்னேன்...” அவளின் கவலை கண்டு அவருக்கு வருத்தமாய்

இருந்தது. விளையட்டுப் பிள்ளையான கதிர் இவளின் காதலை புரிந்து கொள்வானா என்ற கவலையே அவரை வாட்டி வதைத்தது.

“கடைசியா ஒரு முறை யோசிச்சுக்கோம்மா...” மனமே இல்லாமல் அவளைப் பார்த்து கேட்டார் அவர்.

“முன்னே வச்ச காலை பின்னே வச்சு பழக்கமில்லை இந்த மதியழகிக்கு...” கம்பீரமாய் அவரிடம் சொல்லியவள் அங்கிருந்து சென்றாள். அவள் போவதை பெருமூச்சுடன் பார்த்துக் கொண்டிருந்தார் மூர்த்தி. இது நல்லதற்கா? இல்லை கெட்டதற்கா? என்று அவருக்கு இன்னமும் விளங்கவில்லை.

தனது அறைக்குள் வந்த மதியழகி கட்டிலில் அமர்ந்தாள். அவளின் மனம் முழுவதும் கதிரே நிறைந்திருந்தான். என்று அவள் அப்பா அவனைப் புகைப்படமாய் அவளிடம் காண்பித்தாரோ அன்றிலிருந்து அவன் மேல் பித்தாய் மாறி போனாள். அவனைப் பற்றிப் பலவாறாகக் கேள்விப்பட்ட போதும் அவளை அவனிடத்தில் அணுக வைத்ததும் அந்தக் காதல் தான். அவளின் அப்பா அவனின் குண இயல்புகளை விளக்கி அவளை எச்சரித்த போதும் அதையெல்லாம் தூக்கியெறிந்து விட்டு அவள் மனம் மீண்டும் மீண்டும் அவனைத் தான் நாடியது. அப்படி எச்சரிக்கை கொடுத்த தந்தை கூட இப்போது அவளுக்கு உதவுவது குறித்து அவளுக்குப் பெருத்த சந்தோசமே...

‘ஏண்டா... நீ அந்தளவுக்கு மோசமானவனா? ஃபோட்டோவில் ஒண்ணுந் தெரியாத பேபி மாதிரி இருந்த... ஆனா கேள்விப்பட்ட விசயம் எல்லாம் நீ கேடின்னுல சொல்லுது. பார்ப்போம்... பார்ப்போம்... உன்னை நேரில் வந்து பார்த்து நீ வில்லனா? ஹீரோவா? ன்னு நான் முடிவு பண்றேன்’ நம்பிக்கையுடன் நினைத்த மதியழகி மறுநாளின் விடியலுக்காக ஆர்வமுடன் காத்திருக்க ஆரம்பித்தாள்.

பிரமாண்டமாய் இருந்த அந்தக் கட்டிடத்தைப் பரசவசத்துடன் பார்த்தபடி உள்ளே சென்றாள் மதியழகி.

ஏனென்றால் அவளின் அவன் அங்கே அல்லவா இருக்கிறான்... அதான் இந்தப் பரவசத்திற்குக் காரணம். கோவிலினுள் நுழைவது போல் பயப்பக்தியுடன் நுழைந்தவளை வாயிலிலேயே வரவேற்றார் மூர்த்தி.

“வாம்மா... தம்பி உனக்காகத் தான் காத்திட்டிருக்கு...” என்றவர் அவளை உள்ளே அழைத்துச் செல்ல... அவனை நேரில் பார்க்க போகும் ஆர்வத்தில் அவள் படபடப்பாய் அவரைப் பின் தொடர்ந்தாள்.

கதவை தட்டி விட்டு உள்ளே நுழைய இவர்களைக் கண்டதும் நாற்காலியில் இருந்து எழுந்தவனைக் கண்டு அவள் கண்ணிமைக்க மறந்தாள். ‘இவன் ஹீரோவே தான்...’ என்று அவள் மனம் முணுமுணுத்தது.

அழகும் கம்பீரமுமாய் இருந்த அவனின் உருவம் அவளது நெஞ்சில் அவளையும் கேட்காமல் பசை போட்டது போல் ஒட்டி கொண்டது. அவனை அணு அணுவாய் ரசித்துப் பார்த்து தன் மனப்பெட்டகத்தில் பத்திரமாய் அவனின் உருவத்தைச் சேமித்துக் கொண்டாள் அவள். தன்னளவு அவனிடத்தில் ஏதும் பிரதிபலிப்பு இருக்கிறதா என்று அவன் முகத்தில் தேடி பார்த்தவள்... அதில் அவள் தேடியது காணாமல் சற்று ஏமாற்றம் அடைந்தாள்.

“வாங்க அங்கிள்...” மூர்த்தியை உற்சாகமாய் வரவேற்றவன், அவரின் பின்னே வந்த அவளைப் பார்த்து தயக்கத்துடன், “வாங்க...’ என்றான். முதல் முறையாய் ஒரு பெண்ணைப் பார்த்து கதிர் தயங்கி இருக்கிறான் என்றால் அது இவளிடத்தில் மட்டுமே.

இருவரும் அமர்ந்ததும் தானும் அமர்ந்த கதிர் அவர்களை நிமிர்ந்து பார்த்தான். அதிலும் மதியை தான் அவன் சற்று உற்றுப் பார்த்தான். வெகு சாதாரண உடையில்... ரொம்ப ரொம்பச் சுமாரான ஒரு பெண்ணை மூர்த்தியின் மகளாய் அவன் கற்பனை பண்ணி கூடப் பார்க்கவில்லை. அதில் அவனுக்குக் கொஞ்சம் ஏமாற்றமே...

முகத்தில் மேக்கப்பும், உதட்டுச் சாயமும், நவநாகரீக உடையும், நுனி நாக்கு ஆங்கிலமுமாய் வலம் வரும் பெண்களிடத்தில் மட்டுமே பழகியவனுக்கு... தழைய தழைய புடவை கட்டி, முதுகு வரை நீண்டிருந்த கூந்தலை இறுக்கி பின்னி அதில் மல்லிகை பூவை வைத்து மங்களகரமாய் இருந்தவளை அவனுக்கு எப்படிப் பிடிக்கும்?

கதிரின் முகத்தில் ஒரு நொடி தோன்றி மறைந்த ஏமாற்ற உணர்வை கண்டு கொண்ட மதியின் முகம் கூம்பி போய்விட்டது. அவனைக் கவர்ந்திழுக்கும் அழகுடன் தான் இல்லையோ என்று மனதுக்குள் கேள்வி எழ அவள் மிகவும் சோர்ந்து போனாள். எல்லாம் ஒரு நொடி தான் சட்டென்று தன் உணர்வுகளை மறைத்தவள் அவனைக் கம்பீரமாய்ப் பார்த்தாள். அந்த நொடி அவனும் தன் பார்வையை அவள் மேல் தான் பதித்திருந்தான்.

‘டேய் கதிர்... அடங்குடா... அவள் என்ன அழகி போட்டிக்கா வந்திருக்கா... அவளின் அழகை பத்தி ஆராய்ச்சி பண்ணிக்கிட்டு இருக்க?பிசினெஸ் பார்க்கிறதுக்கு அழகு எதுக்கு? அறிவு இருந்தா போதாது?’ ஏமாற்றம் அடைந்த மனதை சமாதானப் படுத்தியவன் மூர்த்தியை பார்த்தான்.

“இவள் என் மகள் மதியழகி...” என்றவர் மதியின் கையிலிருந்த கோப்பை வாங்கி அவனிடத்தில் கொடுத்தார்.

“இதுயென்ன அங்கிள்?” அவன் புரியாமல் அதை வாங்க...

“மதியின் சர்ட்டிபிகேட்ஸ்...” அவரின் பதிலில் வாங்கிய வேகத்தில் அதை அவரிடம் திருப்பிக் கொடுத்தவன்,

“அய்யோ அங்கிள்... இதை வாங்கிப் பார்க்கும் அளவுக்கு எனக்கு அறிவும் இல்லை... தகுதியும் இல்லை” சிரித்தபடி சொன்னவனுக்குப் புரியவில்லை... ஒரு பெண்ணின் முன்னால் தன்னைத் தானே தரம் தாழ்த்தி கொள்கிறோம்

என்று. தன் மனதில் உள்ளதை மறைக்காமல் உரைத்த அவனைக் கண்டு அவளுக்குப் பாவமாய் இருந்தது.

“நீங்க உங்க வேலையை இன்னையில் இருந்து ஆரம்பிக்கலாம்...” என்றவனைப் பார்த்து ஆமோதிப்பாய் அவள் தலையசைத்தாள்.

அடுத்த மூணு மணி நேரத்தில் அவனின் தொழில் பற்றிய அத்தனை விவரங்களையும் அவனின் மேஜையின் மீது அவள் அடுக்கிய போது அவன் பிரம்மிப்பாய் அவளைப் பார்த்தான். முதன்முறையாய் காமமில்லாத ஒரு பார்வையை அவளின் மேல் தான் பதித்திருப்பதை அவன் உணரவில்லை. இவ்வளவு அறிவான பெண்ணை அவன் இது வரை கண்டதில்லை. அவளிடத்தில் மரியாதை வந்த அளவுக்கு அதை விட அதிகமாய் அவளிடத்தில் பயமும் சேர்ந்து வந்தது. ஆம் பயமே தான்... அது அவளின் அறிவை கண்டு. அவனுக்கும் அறிவுக்கும் தான் வெகு தூரமே... அதனால் விளைந்த பயமே அது.

அவன் கண்ணில் தோன்றிய ஒவ்வொரு உணர்வுகளையும் அவன் மனதுக்குள் இருந்து படித்த மாதிரி அவள் உணர்ந்தாள். முதலில் அவன் கண்ணில் தோன்றிய பிரமிப்பு, மரியாதை எல்லாம் சாதரணமாய் எடுத்துக் கொண்ட அவளால் அவனின் பயத்தை அது மாதிரி எடுத்துக் கொள்ள முடியவில்லை. அவனின் பயம் கலந்த பார்வை அவளின் உயிர் வரை சென்று வலித்தது. பொதுவாக ஆண்களுக்கு அறிவான பெண்ணை விட அறியாமையாய் இருக்கும் பெண்ணைத் தான் பிடிக்கும். முதல் முறையாய் தன் அறிவை அறவே வெறுத்தாள் அவள்.

“குட்... குட்... கிரேட்...” என்று அவளைப் பாராட்டியவன், “எப்படிங்க இப்படி?எனக்கும் கொஞ்சம் சொல்லி கொடுங்க... எனக்கு இது எதுவுமே புரிய மாட்டேங்குது” குழந்தைத்தனமாய்க் கேட்டவனை அப்படியே அள்ளி அணைத்து ஆதரவளிக்க வேண்டும் போல் அவளின்

மனம் பரபரத்தது. முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள் அவள்.

“அதுக்குத் தானே வந்திருக்கேன்...” புன்னகைத்தபடி சொன்னவளை நிம்மதியுடன் பார்த்தான் கதிர்.

“தம்பி ஆபிஸ் ஸ்டாபையும் அறிமுகப்படுத்தி விட்டு வந்திர்றேன்...” மூர்த்திச் சொல்லவும்...

“ஷுயுர் அங்கிள்... அப்படியே இனி எனக்குப் பதிலா இவங்க தான் ஆக்டிவ் மேனேஜரா இருப்பாங்கன்னு சொல்லிடுங்க... அப்ப தான் வொர்க்கர்ஸ் இவங்களுக்குப் பயப்படுவாங்க...” அவன் சொல்லவும் அவர் ஆமோதிப்பாய் தலையசைத்தவர் மதியை அழைத்துக் கொண்டு வெளியேறினார்.

“என்ன மதிம்மா... உன் முகம் ஏன் சரியில்லை?” வெளியில் வந்ததும் அவர் கேட்க... அவரின் கேள்வியில் அவளின் கண்களில் கண்ணீர் துளிர்த்தது.

“அவர் என்னைப் பார்க்கும் பார்வையில் பிரமிப்பு இருக்கு... மரியாதை இருக்கு... பயம் இருக்கு... ஆனால்... ஆனால்... காதல் மட்டும் இல்லையேப்பா...” கண்களில் துளிர்த்த நீரை நாசுக்காய் துடைத்துக் கொண்டு அவள் துக்கத்துடன் சொல்ல...

“முதல் சந்திப்பிலேயே எதுவும் நடந்து விடாதும்மா... கொஞ்சம் பொறுமையாய் தான் ஹாண்டில் பண்ணனும்” அவர் எடுத்து சொன்னாலும் அது அவளின் மூளைக்குச் சென்று அடையவில்லை.

எடுத்தவுடன் அவன் அவளைக் காதல் பார்வை பார்க்க வேண்டாம்... ஆனால் ஒரு பெண்ணாகக் கூட அவளை அவன் ஆர்வமாய்ப் பார்க்கவில்லையே. எல்லோரையும் திரும்பி பார்க்க வைத்த அவள் அழகு... அவள் காதலிக்கும் அவனின் மனதை சென்றடைய வில்லையே. அந்த விதத்தில் அவளுக்கு அது பெருத்த அடியாக இருந்தது. இப்படி நினைப்பது அவளுக்கு அவமானமாய் இருந்த

போதிலும் காதல் கொண்ட மனம் அப்படித்தான் நினைப்பேன் என்று பிடிவாதம் செய்தது.

“எல்லாம் நல்லபடியா நடக்கும் மதி...” அவளின் மனநிலை புரிந்தோ என்னமோ அவர் ஆறுதல் சொல்ல அதில் தெளிந்தவள்,

“வாங்கப்பா... போகலாம்” அடுத்த வேலையைப் பார்ப்பதற்காக அவருடன் இணைந்து நடந்தாள்.

மதிய உணவு இடைவெளி வரை எல்லாம் நல்லபடியாகச் சென்றது. உணவை முடித்துக் கொண்டு உள்ளே நுழைந்த கதிர், அங்குக் கணினியில் கண்ணைப் பதித்திருந்த மதியின் முன் தயக்கத்துடன் அமர்ந்தான். அவனைக் கண்டதும் அவள் நிமிர்ந்து பார்க்க,

“நான் உங்க கிட்ட ஒண்ணு கேட்கலாமா?” அவனின் தயக்கத்தை அவள் யோசனையுடன் பார்த்தாள். மறு நொடி அவள் முகம் பூவாய் மலர்ந்தது. ஒருவேளை அப்படியும் இருக்குமோ? என்று அந்த நினைவில் அவள் மனம் சந்தோசத்தில் இறக்கை கட்டி பறந்தது.

“சொல்லுங்க...” தன் உற்சாகத்தை மறைத்துக் கொண்டு அவள் கேட்க, அவன் மேலும் தயங்க,

“எதுவா இருந்தாலும் சொல்லுங்க... நமக்குள் எதுக்குத் தயக்கம்?” என்றவளின் பேச்சில் அவன் மன தைரியம் வர பெற்றவனாய், தன் மனதில் நினைத்ததை வாய் விட்டுச் சொன்னான். அவன் சொன்னதைக் கேட்டு அவளின் விழிகள் இரண்டும் வெளியில் தெறித்து விடுவது போல் அகல விரிந்தது.

“வாட்...??????”மனதின் அதிர்ச்சியை அவள் முகம் அப்படியே பிரதிபலித்தது.

மாயக்கண்ணனாய் என் மனதை கொய்தவனே!!!
உன் விழி வழியே என்னை மாயம் செய்தவனே!!!
உன் விழி வீச்சில் என்னைக் காயம் செய்தவனே!!!
மாயம், காயம்... இரண்டும் ஒரு சேர தாங்குமோ...

காதல் கொண்ட என் பேதை நெஞ்சம்...??????

நாளை : 5

“நான் அப்படி என்ன கேட்டுட்டேன்னு இப்படி ஷாக்காகுறிங்க?” கதிரின் கேள்வியில் சற்றுச் சுதாரித்துத் தனது அதிர்ச்சியை மறைத்துக் கொண்டு நாற்காலியில் சாய்ந்தமர்ந்த மதி, இரு கைகளையும் கட்டி கொண்டு அவனை ஆழ்ந்து பார்த்தாள்.

“என் வயசை தெரிஞ்சிக்கிட்டு இப்ப உங்களுக்கு என்னவாகப் போகுது?” அவனை உறுத்து விழித்தாள் அவள்.

“நீங்க தப்பா நினைச்சிட்டீங்க... நான் வேற மாதிரி எண்ணத்தில் கேட்கல...” அவன் பதறியதில் அவள் கொஞ்சம் நிம்மதியடைந்தாள்.

“பெண்கள் கிட்ட வயசையும், ஆண்கள் கிட்ட வருமானத்தையும் கேட்க கூடாதுன்னு உங்களுக்குத் தெரியாதா சார்?”

“என்னை எதுக்குச் சார்ன்னு கூப்பிடுறிங்க?அது வேற யாரையோ கூப்பிடுற மாதிரி இருக்கு? சும்மா என்னைப் பேர் சொல்லி கதிர்ன்னே கூப்பிடுங்க” தான் கேள்வி கேட்டதை மறந்துவிட்டு வேறு ஒன்றுக்கு தாவிய அவனைக் கூர்ந்து பார்த்தவள்... அதிலிருந்தே அவனின் அலைபாயும் மனதை கண்டு கொண்டாள். ஒரு வெற்றிகரமான தொழிலதிபனா வருவதற்கு இந்த மாதிரி அலைபாயும் மனது இருக்கக் கூடாது... முதலில் இதை அவனிடம் மாற்ற வேண்டும் என்று நினைத்து கொண்டாள்.

“ஓகே நீங்க சொல்ற மாதிரி கூப்பிடறேன்...” எந்தவித பாசாங்கும் இல்லாமல் சட்டென்று ஒத்துக் கொண்ட அவளை அவனுக்கு மிகவும் பிடித்துப் போனது.

“தட்ஸ் குட்...” என்று அவளை மெச்சி கொண்டான் அவன்.

“அதே மாதிரி நீங்களும் எண்ணி வாங்க, போங்கன்னு சொல்லாம... வா, போன்னே பேசுங்க” அவள் சொன்னதற்குப் பதில் சொல்ல முடியாமல் அவன் ஞே என்று விழித்தான். ஏனெனில் அந்தளவுக்கு அவள் மேல் மதிப்பு, மரியாதை வைத்திருக்கிறான். அப்படிப்பட்டவன் அவளைப் போய் வா, போ என்று பேசுவதா? ம்ஹூம்... அது ரொம்பக் கஷ்டமாச்சே...!

“நான் எப்படி உங்களை...?” அவன் தட்டுத் தடுமாற...

“ஏன் முடியாது?நான் உங்க கிட்ட கை நீட்டி சம்பளம் வாங்குகிற தொழிலாளி. நீங்க என்னைப் போய் வாங்க, போங்கன்னா நல்லாவாயிருக்கு?”

“ம்... அப்படி ஒண்ணு இருக்குல்ல...” என்று யோசித்தவன், “சரி... நீங்க... சாரி... நீ சொல்ற மாதிரி கூப்பிடறேன்” அவனின் வார்த்தையில் அவளின் முகம் மலர்ந்தது. அவனும் புன்னகையுடன் எழ,

“நீங்க கேட்ட கேள்விக்குப் பதிலை கேட்காமல் போறீங்களே” அவள் சொல்லவும் தான் அவனுக்கு அது நியாபகம் வந்து அவள் முன் பழைய மாதிரி அமர்ந்தான்.

“நிச்சயம் உங்களை விட நான் வயதில் சின்னவள் தான்... ஆமாம்... இப்போ எதுக்கு இது?” உண்மையில் அவள் அவனை விட இரண்டு வயது சின்னவள் தான்.

“ஓ...” என்றவன் மனதில், ‘ஆனாலும் வயசை சொல்ல மாட்டேங்கிறாளே...’ என்ற எண்ணம் ஓட தான் செய்தது.

“இல்ல... பார்க்க சின்னப் பெண்ணா இருக்க... பட் நீ இவ்வளவு திறமையா இருப்பது எப்படின்னு எனக்கு ஒரே ஆச்சிரியமா இருக்கு”

“வயசுக்கும் திறமைக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கா?” இரு புருவங்களை உயர்த்திக் கேட்டவளை அவன் புரியாமல் பார்த்தான்.

“எல்லாமே அனுபவம் தான் காரணம் கதிர்... நான் சின்ன வயசில் இருந்து தொழில் பார்த்துக்கிட்டு இருக்கேன்... அந்த அனுபவம் இருக்கு. அதிலும் அப்பா கிட்ட இருந்து கத்துக்கிட்டது நிறைய... போகப் போக உங்களுக்கும் எல்லாம் புரியும்” அவள் சொல்ல சொல்ல அவன் பிரம்மிப்பாய் அவளைப் பார்த்தான்.

அவனின் அந்தப் பார்வையில் அவள் பேசுவதை நிறுத்திவிட்டு அவனைப் பார்த்தாள். அவன் தன்னைப் பிரம்மிப்பாய் பார்ப்பதை அவள் விரும்பவில்லை. தன் தொழில் திறமையை அவனிடம் காட்டாமல் மறைக்க வேண்டும் என்று எண்ணினாலும் இப்போதைக்கு அது முடியாத காரியம். ஏனெனில் அவளின் உதவி அவனுக்கு முழுதாய் தேவை. அதனால் அவள் தன் திறமை முழுவதையும் காட்டி தான் அவனின் நிலையை உயர்த்த வேண்டும். தன் நிலையைக் குறித்து அவளுக்கே எரிச்சலாக இருந்தது. பேச்சை மாற்ற விரும்பியவள்,

“கதிர்... எல்லா டீடைல்சும் கம்ப்யூட்டரில் சேவ் பண்ணியிருக்கேன்... பார்க்கறீங்களா?” அவள் சொல்லவும் அவன் ஆர்வமாய்ச் சரி என்றான்.

தான் பார்த்துக் கொண்டிருந்த கணினியை அவன் புறம் திருப்பியவள், “இந்தப் போல்டரில் கம்பெனி டீடைல்ஸ் அதனோட வரவு, செலவு எல்லாம் இருக்கு. இது உங்களோட நிலங்கள் அதனோட வருமானம் எல்லாம் இருக்கு. இது வொர்க்ஸ் செலரி பத்தின விவரங்கள். இன்னும்...” என ஒவ்வொன்றாய் அவனுக்கு எடுத்து சொல்லி புரிய வைக்கும் போது அன்றைய வேலை தினம் முடிந்திருந்தது.

“ஹோ... இவ்வளவு தானா?ரொம்ப ஈஸியா இருக்கே” சிறுவனாய் குதூகலித்தவனை அவள் தாயின் பரிவுடன் பார்த்தாள்.

தான் நினைத்த அளவுக்கு அவன் ஒன்றும் மோசமில்லை என்பதை... அவன் கேட்ட கூர்மையான கேள்விகளில் அவள் கண்டு கொண்டாள். அவனிடம் விசயமிருக்கு...

ஆனால் அவனைப் பொறுப்பாய் நடத்தி செல்ல தான் ஆளில்லை என்பதை உணர்ந்தாள். தான் அவனுக்குச் சிறந்த வழிகாட்டியாய் இருக்க வேண்டும் என்று மனதில் உறுதி எடுத்து கொண்டாள்.

“இவ்வளவு தான் கதிர்...” புன்னகையுடன் சொன்னவள், “அப்புறம் கம்ப்யூட்டருக்குப் பாஸ்வேர்ட் போட்டு வச்சிருங்க... அது தான் சேஃப்” அவள் சொல்லி முடிக்கும் முன் அவன்,

“மதியோவியன்...” என்றவனைப் புரியாமல் அவள் பார்க்க...

“நானும், நீயும் சேர்ந்து தான் இதை யூஸ் பண்ண போறோம்... அதனால தான் இந்தப் பெயர்...” சொல்லியபடி அழகாய் வசீகரமாய்ச் சிரித்தவனைக் கண்டு அவளின் இதயம் தடம் புரண்டது.

இதை அவன் உணர்ந்து சொன்னானா? இல்லை உணராமல் சொன்னானா? அதெல்லாம் அவளின் மூளைக்கு எட்டவில்லை. இருவரின் பெயரையும் அவன் சேர்த்து சொன்னதற்கே ஏதோ இருவரும் மணப்பந்தத்தில் இணைந்தது போல் அவளின் மனம் சந்தோசப்பட்டது. அவனையே கண்ணிமைக்காமல் அவள் பார்க்க,

“ஹலோ...” அவள் கண் முன் சொடக்கு போட்டவனைக் கண்டு,

“எ... என்ன...” அவளுக்குப் பேச்சு வராமல் திணறியது.

“கூப்பிட்டுட்டே இருக்கேன்... பேசாம இருந்தியா அதான்...”

“ஓ...” என்று தன்னைச் சமாளித்துக் கொண்டவள், “ஓகே மீதியை நாளைக்குப் பார்க்கலாம்...” அவள் சொல்லும் போதே மூர்த்தியும் அங்கு வந்துவிட்டார். இவள் இருக்கும் தைரியத்தில் அவர் வெளி வேலைகளைப் பார்க்க போய்விட்டார். வந்தவர் அவனிடம் சிறிது நேரம் பேசியிருந்து விட்டு மகளுடன் வீட்டிற்குக் கிளம்பினார்.

அன்றைய நாள் நன்றாகப் போனதால் கதிருக்கு மனதில் உற்சாகம் கொப்பளித்தது. அதே உற்சாகத்துடன் வாயில் விசில் அடித்தபடி வீட்டிற்குள் நுழைந்தவனை அதிசயமாய்ப் பார்த்தான் ராகேஷ்.

“என்னடா ஆன்னு பார்க்கிற?” என்றபடி அவனின் வாயை மூடினான் கதிர்.

“அண்ணா... நீங்களா இது?” இன்னமும் ஆச்சிரியம் விலகாமல் அவன் கேட்டான். ஏனென்றால் தினமும் அலுவலகம் விட்டு வந்ததும் ஏதாவது அவனிடம் சொல்லி புலம்புவது தான் கதிரின் முக்கிய வேலை. அந்தளவுக்கு அவன் மனம் சோர்ந்திருப்பான்.

“எஸ்... நானே தான்...” என்றவன், “இன்னைக்கு மூர்த்தி அங்கிள் பொண்ணு கம்பெனிக்கு வந்திருந்தாடா... என்ன திறமை தெரியுமா?சான்சே இல்லடா... வந்த ஒரு நாளிலேயே எல்லாத்தையும் சரி பண்ணிட்டா... என்னவொரு ஸ்பீட்...” அவளைப் பற்றிச் சிலாகித்துப் பேசியவனை ராகேஷ் நம்ப முடியாமல் பார்த்தான். அவன் அறிந்த கதிர் பெண்களைப் பெருமையாய் பேசி பார்த்ததில்லை.

“அப்படியாண்ணா...” ராகேஷுக்கும் ஆச்சிரியமாய் இருந்தது.

“ம்... ம்...” அவன் மேலே பேசும் முன் அவனின் அலைப்பேசி அழைத்தது. அதை உயிர்ப்பித்துக் காதில் வைத்தவன் உற்சாகமாய்,

“சொல்லுங்கக்கா...” ஏனெனில் கவிதா தான் அழைத்திருந்தது.

“நான் நல்லாயிருக்கேன்... நீ, ராகேஷ் எல்லாம் எப்படி இருக்கீங்க?சாரிடா... உங்களைப் பக்கத்துல இருந்து என்னால கவனிச்சுக்க முடியல...”

“நாங்க என்ன சின்னக் குழந்தைகளா கவனிக்கிறதுக்கு...? அதெல்லாம் பத்திரமா

இருந்துக்குவோம்... உங்களுக்கு ஒண்ணு தெரியுமா... இன்னைக்கு மூர்த்தி அங்கிள் பொண்ணு ஆபிசுக்கு வந்திருந்தா...”

“மூர்த்தி அங்கிள் பொண்ணா...” கவிதா இழுக்கவும்...

“ம்... அவர் மகள் தான்...” என்றவன் மதியின் அருமை, பெருமைகளை அவிழ்த்து விட...

“எப்படியோ கதிர்... நீ இந்தளவுக்கு ஆபிஸ் போய் வேலை பார்க்கிறதே ரொம்பச் சந்தோசமாயிருக்கு. இதில் உனக்குத் துணைக்கு ஆளும் கிடைச்சியிருக்கு... நீ நல்லபடியா முன்னேறி நல்ல நிலைக்கு வரணும்... அது தான் என்னோட ஆசை...” என்றவள், “மாமா ஏதும் அங்கே வந்தா... பார்த்து பேசி திருப்பி அனுப்பிடு... ஹெல்ப் கேட்கிறேன் அது இதுன்னு அவரிடம் மாட்டிக்காதே...” தன் கணவனைப் பற்றித் தானே இப்படிப் பேசுவது அவளுக்குத் துக்கமாகத் தான் இருந்தது. ஆனாலும் தம்பிகளின் நலன் கருதி அவள் இப்படிப் பேசி தானாக வேண்டும்.

அக்காவின் வருத்தம் கதிரையும் எட்டியதோ என்னமோ அவனும் ஒரு சில நிமிடம் மௌனம் காத்தான். “அக்கா கவலைப்படாதீங்க... நான் மாமாவை டீல் பண்ணிக்கிறேன்...” அவளுக்கு ஆறுதல் சொன்னவன்... ‘மாமாவின் நினைவுக்கு ஒரு முடிவு கட்ட வேண்டும்’ என்று மனதுக்குள் உறுதி எடுத்தான்.

“சரி கதிர்... உன் மேல் எனக்கு நம்பிக்கையிருக்கு... ஆமா... ராகேஷ் எங்கே?” கவிதா கேட்கவும் தன் முகத்தை ஆர்வமாய்ப் பார்த்துக் கொண்டிருந்த ராகேஷை பார்த்தபடி,

“இங்கே தான் இருக்கான்... பேசுங்க...” என்றவன் தன் தம்பியிடம் அலைப்பேசியை நீட்ட... ராகேஷ் அதை வாங்கிப் பேசி கொண்டே அங்கிருந்து நகர்ந்தான்.

கதிர் நிம்மதியான மனநிலையில் சோபாவில் சாய... அங்கே மாட்டி வைக்கப்பட்டிருந்த பெற்றோரின் புகைப்படம் அவன் கண்ணில் பட்டது. அவன் கண்கள் அதை விட்டு நகராமல் நிலைக்குத்தி நின்றது. என்றோ தான் தொலைத்த அம்மாவின் அன்பான அரவணைப்பிற்கும், அப்பாவின் பாதுக்காப்பான காவலுக்கும் அவனின் மனம் ஏங்கியது. எல்லாம் இருந்தும் ஏதோ இல்லாதது போல் மனம் முழுவதும் பாரமாய் இருந்தது. தன் மனநிலையைக் கணித்தது போல் அவர்கள் இருவரும் தன்னைக் கண்டு ஆறுதலாய்ப் புன்னகைப்பது போலிருந்தது அவனுக்கு.

****

மறுநாள் அலுவகத்துக்கு வந்த மதி மிகவும் படபடப்புடன் இருந்த கதிரை கண்டு யோசனையாய் புருவத்தைச் சுருக்கினாள். அவள் வரவை உணர்ந்து நிமிர்ந்தவன்,

“மதி உன்னைத் தான் எதிர்பார்த்திட்டு இருந்தேன்...” இருக்கையை விட்டு எழுந்து அவளருகில் வந்தவன், “நீ தான் மதி எனக்கு ஹெல்ப் பண்ணனும்...” அவளின் கையைப் பிடித்துக் கொண்டு சொல்ல... எதிர்பாராத அவனின் கை தீண்டலின் அவளின் இதயம் தாளம் தப்பியது. அவனின் தொடுகையில் பனிப்பாறையாய் குளிர்ந்து நின்றாள். மனதுக்குப் பிடித்தவனின் முதல் தொடுகை அவளின் மனதை என்னென்னமோ செய்ய...

“ப்ளீஸ் கதிர்...” என்றபடி அவனின் பிடியிலிருந்து தன் கையை உருவி கொள்ள முயல... அவனோ அதை உணராதவனாய்,

“நீ முதல்ல வந்து உட்காரு...” என்று சொல்லியவன் போகிற போக்கில் அவளின் கையை விட்டு விட்டு தன் இருக்கையில் போய் அமர்ந்தான். தன்னை மெல்ல சமன்படுத்திக் கொண்டவள், அவன் முன்னே போய் அமர்ந்தாள்.

“என்ன விசயம் கதிர்... ஏன் இவ்வளவு டென்சனா இருக்கீங்க?”

“என்னது டென்சனா?தலையே போற காரியம் இது” என்றவனைப் புரியாமல் அவள் பார்க்க...

“இன்னைக்கு முக்கியமான கிளையன்ட் மீட்டிங்... வர்றவன் சைனாக்காரன் வேற... சும்மாவே நான் பேசுறது எவனுக்கும் புரியாது... இதில் இந்தச் சைனாக்காரனுக்கு எங்கே புரிய போகுது?” நெற்றியை அழுந்த தேய்த்து விட்டபடி கவலையுடன் அவன் சொல்ல... ‘விசயம் இது தானா?’ என்பது போல் அவள் கலகலவெனச் சிரித்தாள்.

“எனக்குத் தலை போறது உனக்கு அவ்வளவு சிரிப்பாவா இருக்கு?” போலி கோபத்துடன் முறைத்தவனைக் கண்டு அவள் சிரிப்பை நிறுத்தினாலும் அவளின் இதழோரம் சிரிப்பில் துடித்தது.

“பின்னே இதுக்குப் போய் யாரவது டென்சனாவாங்களா?” என்றவள், “சைனாக்காரன் என்ன அமெரிக்காக்காரன் வந்தாலும் பூன்னு சூப்பரா ஊதி தள்ளிறலாம்... டோன்ட் வொர்ரி...” அவள் சொல்லவும்,

“உண்மையாவா சொல்ற?” அவன் வியப்பில் விழி விரிக்க...

“அட... உண்மையா தான் பாஸ் சொல்றேன்...” என்றவள், தன் கையிலிருந்த கோப்பை அவனிடம் கொடுத்தவள், “மீட்டிங்குக்குத் தேவையான எல்லாக் குறிப்பும் இதில் இருக்கு... முக்கியமான சில பாய்ண்ட்சை தனியே எழுதி வச்சிருக்கேன்... படிச்சு பாருங்க... புரியலன்னா... கேளுங்க... பதில் சொல்றேன்...”

“ஓ... சூப்பர்... சூப்பர்...” என்றவன் அவளின் கையிலிருந்ததை வாங்கிப் படிக்க ஆரம்பித்தான். நொடிகள் நிமிடங்களாகி அரைமணி நேரமாகியிருந்தது. அவன் நிமிரும் வழி இல்லை... இது தான் சந்தர்ப்பம்

என்று அவள் அவனை ரசித்துப் பார்த்து கொண்டிருந்தாள்.

“மதி...” என்று அவன் திடீரென்று கூப்பிடவும் திடுக்கிட்டு போனவளாய் அவனை நிமிர்ந்து பார்க்க, “இதுல கொஞ்சம் சந்தேகம்...” அவன் கேட்கவும் அவள் மகிழ்ந்து போனவளாய் அவனுக்கு அதை எடுத்து சொல்ல... அவன் சிரத்தையுடன் கேட்டுக் கொண்டான்.

“ஓகே இப்போ தைரியமா மீட்டிங் அட்டென்ட் பண்ணலாமா?” அவள் அவனைப் பார்த்து கேட்க...

“ம்... ம்...” யோசனையாய் இழுத்தவன், “என்னால் இதைச் சக்சஸ்புல்லா முடிக்க முடியுமா?” இத்தனை நாள் பட்ட அடி அவனைச் சிறு குழந்தையாய் மாற்றியிருந்தது.

“வை நாட் கதிர்... உங்களால் முடியலைன்னா வேற யாரால் முடியும்...? நிச்சயம் உங்களால் முடியும்” அவனுக்குத் தைரியமூட்டியவள், “ஓகே இப்போ நான் தான் கிளையன்ட்டுன்னு வச்சுக்கோங்க... என்னிடம் பேசுங்க பார்க்கலாம்...”

“ம்... என்று சிறிது நேரம் யோசித்தவன்... சரியென்று தலையசைத்து அவளிடம் பேச ஆரம்பித்தான். அவன் ஆரம்பித்த விதத்தில் அவள் அசந்து தான் போனாள்.

‘இவ்வளவு திறமையை வச்சிட்டு ஒண்ணும் தெரியாத மாதிரி இருக்கானே... இல்லை அவனின் திறமையை அவனே உணரவில்லையா?’ என்ற கேள்வி அவளுள் எழுந்தது. அவனுக்குச் சிறு துண்டுகோள் தான் தேவை... அதைத் தான் செய்தால் அவன் வாழ்வில் பிரகாசம் அடைந்து விடுவான் என்ற நம்பிக்கை எழுந்தது அவள் மனதில்.

அவனை மேலும் மேலும் தூண்டும் விதமாய் அவள் மாற்றிக் கேள்வி கேட்க... சில நேரங்களில் அவனும் சளைக்காமல் பதில் சொன்னான்... சில நேரம் தெரியாமல் விழித்தான். அவனின் திறமை கண்டு

தாயாய் மாறி அவனைப் பாராட்டியவள்... அதே சமயம் அவனின் தவறுகளைச் சுட்டி காட்டி நல்லாசிரியராய் மாறி அவனைக் கண்டித்து எடுத்து சொல்லவும் தயங்கவில்லை.

“கதிர் ஆல் த பெஸ்ட்...” என்று சொல்லி அவனைக் கூட்டத்திற்கு அனுப்பும் போது அவன் பரிதாபமாய் அவளைப் பார்த்தான். அவனின் பார்வையில் அவள் அவனை என்னவென்று பார்க்க...

“நீயும் வாயேன்...” அவனின் பேச்சில் அவளுக்குச் சிரிப்பு வந்தது. முயன்று தன்னை அடக்கி கொண்டு,

“எத்தனை நாள் நான் உங்க கூட வர முடியும் கதிர்... நீங்க தான் தனியா எல்லாத்தையும் பேஸ் பண்ணியாகணும்...”

“ஏன் நீ என் கூட வர முடியாது... நீ இங்கே என் கூடவே இருந்திடு... உன் பிசினெஸில் வர்ற வருமானத்தை விட நான் அதிகமா உனக்குத் தர்றேன்...” ஏதோ வேகத்தில் அவன் சொல்ல... அவன் முற்பாதி பேச்சில் அவள் இன்பமாய் அதிர்ந்து போனாள்.

“இல்லை கதிர்... உங்களுக்குப் பழக்கமாகிற வரைக்கும் தான் நான் இங்கே இருப்பேன்... எனக்கு என் பிசினெஸ் தான் முக்கியம்... சரி அது எதுக்கு இப்போ?டைம் ஆகுது பாருங்க... நீங்க போங்க...” என்றவளை கண்டு கோபத்துடன் வலது காலை தரையில் உதைத்தவன் முகத்தைத் தூக்கி கொண்டு அங்கிருந்து நகர்ந்தான்.

‘ஹய்யோ... என்ன அவஸ்தை இது?’ தலையில் கையை வைத்துக் கொண்டு அப்படியே நாற்காலியில் அமர்ந்து விட்டாள்.

நேரம் செல்ல செல்ல அவளுக்குக் கவலை அதிகமானது. முதல் நாள் பரீட்சைக்குச் சென்ற மகனின் வரவை ஒரு தாய் எவ்வளவு ஆவலுடன் எதிர் பார்த்து காத்திருப்பாளோ அதைப் போல் அவனின் வரவுக்காக அவள் பரபரப்புடன் காத்திருந்தாள். சுமார் ஒன்றரை மணிநேரம் கழித்து

வந்தவன் ஒன்றும் பேசாமல் அவளின் முன் வந்து நின்றான். அவனின் அமைதி அவளின் வயிற்றில் புளியை கரைத்தது.

“என்ன கதிர்... சரியா பண்ணலையா?” அவளின் கேள்விக்குப் பதில் சொல்லாமல் அவளின் முகத்தையே அவன் பார்க்க...

“ஓ... சரியா பண்ணல அப்படித்தானே...” என்று அவனிடம் கேட்டவள், “இட்ஸ் ஓகே கதிர்... பிறக்கும் போதே எல்லோரும் நடக்கத் தெரிந்து பிறப்பதில்லை... இனி வர்ற மீட்டிங்ல பார்த்துக்கலாம்... இதுக்கு எல்லாம் வெக்ஸ் ஆகாதீங்க...” அவள் பேசி கொண்டு இருக்கும் போதே...

“ஹுர்ரே...” என்று கத்தியபடி அவளை அணைத்து கொண்டவன், “சக்சஸ்... சக்சஸ்... நீ சொல்லி கொடுத்தது தப்பாகுமா மதி... நீ என்னோடு இருக்கும் வரைக்கும் எனக்கு எப்பவுமே வெற்றி தான்...” அவள் காதோடு மகிழ்வுடன் அவன் சொல்ல... அவளோ அவனின் திடீர் அணைப்பில் திகைத்தாலும்... அவளின் காதல் கொண்ட நெஞ்சம் மயங்க தான் செய்தது. அவனின் தொடுகையில் உடலும், உள்ளமும் உருக பரவசமாய் நின்றிருந்தாள் அவள்.

அழிவதும் பெண்ணாலே கண்டேன் அவளிடம்
ஆவதும் பெண்ணாலே கண்டேன் உன்னிடம்
நான் ஆணாய் கர்வம் கொண்டேன் உன்னாலே!!!

நாளை : 6

“ரொம்ப நல்லாயிருக்கு கதிர்... நீ கம்பெனியை நடத்துற லட்சணம்... ரொம்ப நல்லாயிருக்கு...” எகத்தாள குரலில் மதி அவசரமாய்க் கதிரை விட்டு விலகி நின்றாள். அவள் முகம் அவமானத்தில் கன்றி சிவந்து, யாரையும் நிமிர்ந்து பார்க்க முடியாமல் அவளின் தலை தானாகக் குனிந்தது. ஆனால் கதிருக்கு அந்த உணர்வு ஏதுமில்லை போலும் நிதானமாய்த் திரும்பி பார்த்தான்.

“பரவயில்லையே கதிர்... வெளியில் போய்க் கூத்தடிக்க நேரமில்லைன்னு ஆபிசுக்குள்ளேயே பொண்ணைக் கூட்டிட்டு வந்து கூத்தடிக்கிற போல... ரொம்ப முன்னேற்றம் தான்...” இருகைகளையும் மெலிதாகத் தட்டியபடி உள்ளே வந்தான் சத்யன். அவன் முகத்தில் அவ்வளவு ஒரு கேலி, கிண்டல், நய்யாண்டி...

“நான் வர்றேன் கதிர்...” அவனை நிமிர்ந்து கூடப் பார்க்க முடியாமல் அவள் அறையை விட்டு வெளியேற எத்தனிக்க,

“மதி நில்லு...” என்ற கதிரின் அழைப்பை காதில் வாங்காதவாறு அவள் வேகமாய் வெளியேறி சென்றுவிட்டாள்.

சத்யன் தன்னை அவமரியாதை செய்தது கூட அவனுக்கு வருத்தமாய் இல்லை... அதை அவன் பெரிதாக எடுத்து கொள்ளவும் இல்லை. ஏனெனில் அவன் அப்படிப்பட்டவன் தான்... அதை மறுப்பதற்கு இல்லை. ஆனால் மதியை பேச சத்யனுக்கு என்ன உரிமையிருக்கு? அதிலும் அவளைப் பற்றி ஒன்றும் தெரியாமல் வாய்க்கு வந்ததைச் சத்யன் எப்படிப் பேச முடியும்? சத்யனின் பேச்சு கண்டு கதிரின் கோபம் ஏகத்துக்கும் எகிறியது.

“முதல்ல கதவை தட்டிட்டு உள்ளே வர்ற மேனர்சை கத்துக்கோங்க மாமா...” கதிரின் பேச்சில் சத்யனின் முகம் கறுத்தது. “அப்புறம் மாமா... மதி நீங்க நினைக்கிற மாதிரி பொண்ணு கிடையாது. அவள் நம்ம மூர்த்தி அங்கிள்

பொண்ணு. என்னைப் பேச உங்களுக்கு முழு உரிமை இருக்கு... ஆனா என்னிடம் வேலை பார்க்கும் ஸ்டாஃப்பை பேச உங்களுக்கு எந்த உரிமையும் இல்லை" நறுக்கு தெறித்தார் போன்று கதிர் பேசிய பேச்சில் சத்யன் அயர்ந்து நின்றான்.

'முழுநேரமும் போதையில் மூளை மழுங்கி போய்க் கிடக்கும் இவன்... என்னைப் பார்த்து எப்படி எல்லாம் பேசுறான்?இவனுக்குப் பதிலடி கொடுக்காமல் இருந்தால் நான் சத்யனே கிடையாது' என்று மனதுக்குள் வன்மமாய் நினைத்தவனின் வார்த்தைகள் அந்த அம்பின் கூர்மையுடன் வெளிவந்து கதிரை மிகச் சரியாய்த் தாக்கியது..

"ஓ... அவள் மூர்த்தியோட பொண்ணா...? காவலில்லாத சொத்தை அப்பனும், மகளும் சேர்ந்து அமுக்கலாம்ன்னு ப்ளான் போடுறாங்களா? ச்சீ... அவனுக்குக் கொஞ்சமும் வெட்கம் இல்லை... பொண்ணை வச்சு சொத்தை வளைக்க நினைக்கிறதுக்கு..." சத்யன் பேசி முடிக்கவில்லை... அவனின் சட்டையைக் கொத்தாகப் பற்றியிருந்தான் கதிர். அவனின் முகம் ஆத்திரத்தில் சிவந்து போயிருந்தது.

"திரும்பத் திரும்பச் சொல்றேன்... என்னைப் பேசுங்க... தேவையில்லாமல் அவளைப் பேசுற வேலை வச்சுக்காதீங்கன்னு... என்னோட அக்காவோட புருசனா போயிட்டீங்க... இல்ல நடக்கிறதே வேற..." அவனின் ஆக்ரோசத்தைக் கண்டு கொஞ்சமும் பயப்படவில்லை சத்யன்.

"என்ன மச்சான்... உன்னைப் பத்தி எனக்குத் தெரியாது? உன் கூட ஒருத்தி இருக்கான்னா அவள் என்ன பத்தினியாவா இருப்பா?" அவன் கேலி குரலில் சொல்ல... கதிரின் பிடி இன்னமும் இறுகியது.

"நீங்க சொன்னாலும் சொல்லலைன்னாலும் அவள் நல்லவள் தான்... பத்தினி தான். சொந்த வீட்டுக்குள்ளேயே திருட நினைக்கிற உங்களை விட

அயோக்கியன்... இங்கே யாருமில்லை. அதை மனசில் வச்சிட்டு பேசுங்க” கதிரின் பேச்சில் சத்யனின் முகம் பேயறைந்தது போலானது.

“கதிர்... நா... நான் அப்படி எல்லாம் கிடையாது...” அவனுக்கு வார்த்தைகள் குழறியது.

“எனக்கு எல்லாம் தெரியும் மாமா... நான் அக்கா கிட்ட உங்களைப் பத்தி பேசாம இருக்கணும்ன்னா அது நீங்க நடந்துக்கிற விதத்தில் தான் இருக்கு...” கவிதாவை குறிப்பிட்டு கதிர் சொன்னதும் சத்யன் பதறிவிட்டான். பின்னே காதல் கொண்டு கைபிடித்த மனைவி அவனைக் கேவலமாய் எண்ணினால்...??? அதைத் தாங்கி கொள்ளும் சக்தி அவனுக்குக் கிடையாதே... அவளிடமும் நல்ல பெயர் வாங்க வேண்டும்... இந்தச் சொத்துக்களும் சத்தமில்லாமல் அவனின் கைக்கு வர வேண்டும்... இது தானே அவனின் ஆசை.

“இப்போ என்ன சொல்லிட்டேன்னு இப்படியெல்லாம் பேசுற மச்சான்... உன் நல்லதுக்குத் தான் நான் சொன்னேன்... உன் விளையாட்டுத்தனத்தைத் தொழிலில் காட்டாமல் இருன்னு சொன்னேன்... அது தப்பா கதிர்?” அப்பாவியாய் கேட்டவனைக் கண்டு அடித்துத் துவம்சம் பண்ண வேண்டும் போல் ஆத்திரம் எழ தான் செய்தது கதிருக்கு. கவிதாவின் முகத்திற்காகக் கதிர் அமைதி காத்தான்.

“அதெல்லாம் நான் பார்த்துக்கிறேன்... அப்புறம் என்ன மாமா விசயம்?இவ்வளவு தூரம் வந்திருக்கீங்க?” எதையும் காட்டி கொள்ளாமல் கேட்டவனிடம், ‘உன் சொத்தை அபகரிக்க வந்தேன்’ என்றா சொல்ல முடியும்...?

“ஆபிஸ் விசயமா வந்தேன் கதிர்... அப்படியே உன்னைப் பார்த்திட்டு போகலாம்ன்னு வந்தேன்” நிலைமையைச் சமாளித்தான் சத்யன்.

“அப்படியா மாமா... ரொம்பச் சந்தோசம்... எனக்கு வெளியில் வேலையிருக்கு...” என்றவன் சத்யனின்

முகத்தைப் பார்க்க...

“சரி கதிர்... நீ உன் வேலையைப் பாரு... நான் கிளம்பறேன்” என்ற சத்யன் கிளம்ப,

“ஒன் மினிட் மாமா... அடுத்தத் தடவை வரும் போது அக்காவை கூட்டிட்டு வாங்க...” அவன் சொன்னதைக் கேட்டு வெறுமனே தலையசைத்து விட்டுச் சென்றான் சத்யன். அவன் போவதை ஒருவித வெறுப்புடன் பார்த்துக் கொண்டு நின்றிருந்தான் கதிர்.

சத்யன் சென்றதும் தான் அவனுக்கு மதியின் நியாபகம் வந்தது. வேகமாய் வெளியில் வந்தவன் அவள் எங்கே சென்றிருக்கக் கூடும் என்று ஒரு கணம் யோசித்தவன், மூர்த்தியின் அறையை நோக்கி சென்றான். அவன் நினைத்தது போல் அவள் அங்கே தான் இருந்தாள். மேஜையின் மீது இரு கைகளை ஊன்றி அதில் தலையைக் கவிழ்ந்து அமர்ந்தவள் முன் வந்து நின்றவன்,

“சாரி மதி...” என்க, அவனின் குரலில் திடுக்கிட்டு நிமிர்ந்தவள் அவனைக் கண்டதும் எழ போனாள்.

“வேணாம்... நீ உட்காரு...” என்றவன் அவள் அமர்ந்ததும், அவளின் எதிரிலிருந்த இருக்கையில் தானும் அமர்ந்தான்.

அவனை நிமிர்ந்து பாராமல் அவள் தலையைக் குனிந்து அமர்ந்திருக்க... அவன் அவளையே பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தான். இருவருக்கும் இடையில் ஒருவித சங்கடமான அமைதி நிலவியது.

“மாமா பேசியதுக்காக நான் மன்னிப்பு கேட்டுக்கிறேன்...” வருத்தமான குரலில் அவளிடம் மன்னிப்பு கேட்டான்.

“இட்ஸ் ஓகே...” அவனுக்காய் அவள் அதைப் புறம் தள்ள...

“தப்பெல்லாம் என் பெயரில் தான்... முன்னே நான் கொஞ்சம் அப்படி இப்படித்தான்... அதனால் தான் அவர் தப்பா பேசிட்டாரு...” தன்னுடைய தவறான பழக்க

வழக்கங்கள் எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தி இருக்கிறது என்பதை அறிந்த அவன் குற்றவுணர்வில் தவித்தான்.

சத்யன் பேசியதை கூடத் தவறாக எண்ண முடியவில்லை அவளால். ஆனால் கதிரின் சுய வாக்குமூலம் கேட்டு அதிர்ந்து போய் அவனைப் பார்த்தாள். அவனின் அப்படி இப்படித்தான் என்பதன் அர்த்தம் கொஞ்சம் கொஞ்சமாய் அவளின் மூளையில் ஏறி, நெஞ்சில் இறங்கி வலியை ஏற்படுத்தியது.

‘கடவுளே! குடிகாரன் என்று மட்டும் தானே நினைத்தேன்... ஆனால் இவன் என்னடா என்றால்... ஏதேதோ சொல்கிறானே... எல்லோரும் சொன்ன போது கூட நம்பாமல் இவன் தான் வேண்டும் என்று இவனை நம்பி நான் இங்கே வந்தது சரியா? இதெல்லாம் தெரிந்ததற்கு அப்புறமும் இவன் எனக்கு வேண்டுமா?’ அவனின் பெண்கள் சகவாசம் கேட்டு அவளின் மனம் சுக்குநூறாய் உடைந்து போனது. அவளின் கண்களில் கண்ணீர் கரகரவென வழிந்தது. அதைத் துடைக்கும் எண்ணம் கூட இல்லாமல் அவள் அப்படியே அமர்ந்திருந்தாள்.

“மதி ஐம் ரியலி சாரி... இது போல் இனி நடக்காமல் பார்த்துக்கிறேன்... நீ தப்பா நினைச்சுக்காதே... இனி அவர் இங்கே வர மாட்டார்” தன் மாமா பேசியதுக்குத் தான் அவள் கண்ணீர் விடுகிறாள் என்று எண்ணி அவன் பதற...

“கதிர் எனக்குத் தலைவலிக்கிற மாதிரி இருக்கு... எனக்கு ஹாப் டே லீவ் வேணும்” அவனுக்குப் பதிலளிக்காமல் அவள் வேறு பேச,

“ஓ தலைவலிக்குதா?ஓகே நீ போகலாம் மதி... நல்லா தூங்கி ரெஸ்ட் எடு” என்றவன், “நாளைக்கு நீ வருவ தானே...?” கண்ணில் எதிர்பார்ப்புடன் ஆவலாய் கேட்டவனைப் பார்த்து அவளுக்குத் துக்கம் பொங்கியது.

நெஞ்சு நிறையக் காதலை வைத்துக் கொண்டு அவன் பெண் பித்தன் என்று தெரிந்தும் அவன் கூட வேலை செய்வதில் அவளுக்கு மனம் ஒப்பவில்லை. அர்த்தமற்ற

இந்தக் காதலால் தான் மிகவும் தரமிறங்கி விட்டது போலிருந்தது அவளுக்கு. இப்படிப்பட்ட ஒருவன் தனக்கு வேண்டுமா? என்ற கேள்வியே அவளின் மனதில் வியாபித்திருந்தது. அதற்கான விடை கிடைக்கும் வரை அவனின் முகத்தில் அவள் விழிக்க முடியாது.

“ம்... ம்...” என்று மௌனமாய்த் தலையசைத்து விட்டுச் செல்லும் அவளைப் பரிதாபமாய்ப் பார்த்தபடி நின்றான் கதிர்.

நேரே வீட்டிற்கு வந்தவள் தன் தந்தைக்குத் தான் அழைத்தாள். மறுமுனையில் அவர் எடுத்தும், “அப்பா... ஏன்ப்பா மறைச்சீங்க?” மொட்டையாக அவள் கூறியதும் அவருக்கு ஒன்றும் புரியவில்லை.

“என்ன மறைச்சேன்ம்மா...?”

“அவருக்கு... அவருக்குப் பெண்கள் கூட...” அதற்கு மேல் அவளால் பேச முடியவில்லை. தொண்டைக்குள் துக்கப் பந்து அவஸ்தையாய் உருண்டு வார்த்தையை வெளிவர விடாமல் அடைத்தது.

“நான் தான் ஏற்கெனவே சொன்னேனே மதி... அவனுக்கு எல்லாக் கெட்ட பழக்கங்களும் உண்டுன்னு”

“கெட்ட பழக்கம்ன்னா... நான் இதை எதிர்பார்க்கவில்லை...” சொல்லும் போதே அவள் குரல் நடுங்கியது. அவளின் உணர்வுகள் புரிந்தார் போல் அவர் அமைதி காத்தார். இரு நொடி சென்று,

“இப்போ என்ன முடிவெடுக்கப் போற மதி?” அவரின் வார்த்தையில் அவள் பதில் தெரியாமல் விழித்தாள்.

காதலியாய் அவளால் அவனைப் புறம் தள்ள முடியவில்லை. அவன் எப்படிப்பட்டவனாக இருந்தாலும் அவன் தனக்கு வேண்டுமென்று அவள் காதல் மனம் நினைத்தது. ஆனால் தொழிலில் ஜெயித்த ஒரு வெற்றி பெற்ற தொழிலதிபர் மதியழகியின் அறிவோ,

‘இப்படிப்பட்ட ஒருவன் உனக்குத் தேவையா?உன் அழகிற்கும், அறிவுக்கும் இவனை விடப் பல மடங்கு திறமை வாய்ந்தவர்கள் உன்னைத் தேடி வருவார்கள். அப்படியென்ன இவனிடத்தில் கண்டாய்? அவன் உனக்கு வேண்டாம்’ என்று அறிவுரை கூறி அவளை விரைவில் முடிவெடுக்கச் சொல்லி அறிவுறுத்தியது.

“இப்பவும் ஒண்ணும் கெட்டுப் போகல மதி... அவனை விட்டு விலகி வந்துடு... நாளைக்குத் திருமணத்துக்குப் பின்னால் அவன் மாறாமல் இருந்தால் அது உனக்குத் தான் மிகவும் கஷ்டம்” தந்தையின் எச்சரிக்கை அவளின் மனதிலும் பதிய தான் செய்தது. ஆனால் அவளால் அவனை மறக்க முடியுமா???

“எனக்கு யோசிக்க ஒரு ரெண்டு நாள் டைம் கொடுங்கப்பா...” அவள் கெஞ்சலில் அவர் சரியென்று சொன்னவர் அலைப்பேசியை அணைத்து விட்டார். மதியோ மனதில் எழுந்த வலியை மறைக்க முடியாமல் ஓவென்று கதறியழ ஆரம்பித்தாள்.

மறுநாள் அலுவகத்திற்குள் நுழைந்த கதிரின் கண்கள் மதியை தான் தேடியது. எங்கும் அவளைக் காணாமல் அவனுக்கு ஏமாற்றமாய் இருந்தது. மூர்த்தியை அழைத்துக் கேட்ட போது, அவள் தொழில் சம்பந்தமாய் வெளியூர் சென்றிருக்கிறாள் என்று சொன்னார்.

‘நான் தான் அவளை எங்கும் போக வேண்டாம்... இங்கேயே இரு என்றேனே... ஏன் இப்படிப் பண்ணுகிறாள்?’ அவளில்லாமல் அவனுக்குப் பைத்தியம் பிடித்தது போலிருந்தது. ஆனாலும் அவன் தன் அலுவலக வேலைகளை எப்போது போல் செய்து கொண்டிருந்தான். ஏனெனில் அவள் வந்து அவனைத் திட்ட கூடாதே... அதற்காகவே கூடுதல் சிரத்தை எடுத்துச் செய்தான்.

நாட்கள் இரண்டு நாள் முடிந்து ஐந்து நாட்களும் முடிந்து போனது. ஆனால் போனவள் தான் இன்னமும் திரும்பிய பாடாய் இல்லை. மூர்த்தியிடம் கேட்டால் சரியான பதிலில்லை. இனிமேல் அவள் வர மாட்டாள் என்பது

அவனுக்கு மெதுவாய் உறைக்க ஆரம்பித்தது. தன்னுடைய தவறான நடத்தை தெரிந்த பின் தான் அவள் தன்னைத் தவிர்க்கிறாள் என்பது அவனுக்கு நன்கு புரிந்து போனது. அவளைக் குறித்து அவன் மனதில் ஆத்திரம் எழுந்த அதே சமயம், மனதுக்குப் பாரமாகவும், கஷ்டமாகவும் இருந்தது.

அன்றைய இரவு அவனையும் அறியாமல் அவனின் கைகள் காரை மதுபான கடையை நோக்கி செலுத்தியது. ஐந்து நட்சத்திர ஹோட்டலில் இருந்த பாரில் அமர்ந்து மூக்கு முட்ட குடித்தவன் வெகுநேரம் கழித்தே வெளியில் வந்தான். தள்ளாடியபடி வந்தவனை ஒரு பெண்ணின் இரு கரங்கள் தாங்கி கொண்டது.

“யாரது?” குழறலாய் ஒலித்தது அவனின் குரல்.

“நான் தான் சார் மோகினி...” அந்த மோகினி என்பவள் மயக்கும் மோகன புன்னகையுடன் அவனைப் பார்த்தாள்.

மற்ற நாளாய் இருந்திருந்தால் அவளின் கன்னக்குழியில் கதிர் தொபக்கடீர் என்று விழுந்திருப்பான். ஆனால் இன்று அவனிருந்த மனநிலையில் அவளின் கைகளை வெறுப்பாய் தள்ளி விட்டான். இது மாதிரி பெண்களுடன் பழகியதால் தானே மதி தன்னை விட்டு சென்று விட்டாள் என்று அவன் மனதில் ஆழப்பதிந்து போனது தான் இந்த மாற்றத்திற்குக் காரணம்.

“ஓ... மோகினியா....?” என்றவன், “ஓகே பை மோகினி...” அவளிடம் விடைப்பெற்று திரும்பியவன் மீண்டும் தள்ளாடி கீழே விழப் போக... இப்போதும் அவனை ஒரு பெண்ணின் கைகள் அவனை விழுந்து விடாமல் தாங்கி கொண்டது.

“நோ மோகினி... நானே போய்க்குவேன்...” என்றவன் அவளின் கையைத் தட்டிவிட முயன்றபடி அவளின் முகத்தைப் பார்க்க... பார்த்தவன் இன்ப அதிர்ச்சியில் அப்படியே நின்றான்.

“மதி... நீ... எப்படி இங்கே?” தன் முன் நின்றவளை அவன் கண்ணிமைக்காமல் பார்த்தான். அவள் அவனுக்குப் பதிலளிக்காமல் அப்படியே நின்றாள்.

“நீ மதி தானே...” என்றவன் அவளைக் கூர்ந்து பார்த்தான்.

அழகிய இளஞ்சிவப்புச் சுடிதாரில், தலைமுடியை சிறிய கிளிப்பில் அடக்கி விரித்துப் போட்டு, கை, காது, கழுத்து என எல்லாவற்றிலும் வைரங்கள் மின்ன, குதிகால் செருப்பு அணிந்து, கையில் விலையுயர்ந்த அலைப்பேசி வைத்துக் கொண்டு அவனைப் பார்த்து கொண்டிருந்தவள் சாயலில் மதியை போல் தோன்றினாலும், அவளின் இந்தப் பணக்கார மிடுக்கு மதியிடம் இல்லை என்பது அவனின் மூளைக்குத் தாமதமாய்ப் புரிய,

“சாரி நீங்க மதின்னு நினைச்சு...” அவன் குழறியபடி பேச, அவனுக்குப் பதில் கூறாமல் அவள்,

“ஆதர்ஷ்...” என்று யாரையோ அழைக்க...

“எஸ் மேம்...” என்றபடி அவர்கள் முன்னால் வந்து நின்றான் இளைஞன் ஒருவன்.

“இவரோட பேண்ட் பாக்கெட்டில் இல்லை சேர்ட் பாக்கெட்டில் கார் சாவி இருக்குதான்னு தேடி பாருங்க...” அவள் உத்தரவிட... கதிர் தானே முன் வந்து தன் கார் சாவியை அவளிடம் நீட்டினான்.

“நீ நிச்சயம் மதி தான்...” என்றான் கதிர் உறுதியான குரலில்.

“ஆதர்ஷ்... இவரோட வீடு தெரியும் தானே... அங்கே காரை கொண்டு வந்து சேர்த்துடுங்க... நான் இவரை அழைச்சிட்டு வர்றேன்...” அவள் சொன்னதும் ஆதர்ஷ் என்றழைக்கப்பட்டவன் மறுப்பேச்சு இல்லாமல் கார் சாவியை வாங்கிக் கொண்டு அங்கிருந்து நகர, அவள் மௌனமாய்க் கதிரை அழைத்துக் கொண்டு தன்னுடைய காருக்கு சென்றாள்.

“நீ இவ்வளவு பணக்காரியா?” காரை பார்த்ததும் அதன் விலையைத் தெரிந்து கொண்டவன், அதைத் தடவி கொண்டே கேட்க... அவள் அதற்கும் பதில் பேசாமல் அவனைக் காரில் அமர வைத்து, மறுப்பக்கம் ஏறி காரை கிளப்பினாள்.

“மதி...” அவன் அழைத்ததற்கு அவளிடம் பதிலில்லாமல் போக... “நீ மதி தான் எனக்கு நல்லா தெரியும். ஏன் மதி என்னைப் பார்க்க வரல? நான் பொம்பளை பொறுக்கின்னு தானே என்னை நீ அவாய்ட் பண்ற... உனக்கு ஒண்ணு தெரியுமா... என் அப்பா, அம்மா இறந்ததுக்கு அப்புறம் நான் எந்தப் பெண்ணையும் தொட்டது கிடையாது. இப்போ உன் மேல் சத்தியமா சொல்றேன்... இனிமேல் எந்தப் பெண்ணையும் நான் தொட மாட்டேன்... ஏன்னா எனக்கு உன்னோட பிரெண்ட்ஷிப் முக்கியம். என்னைக் கைட் பண்ண நீ வேணும்... ப்ளீஸ் மதி... நீயும் என்னை வெறுத்துடாதே... உன்னை விட்டா எனக்கு யாரு இருக்கா?” சிறு குழந்தையாய் அவன் கெஞ்ச... அதற்கும் அவள் அவன் புறம் திரும்பவில்லை.

போதையில் இருந்த அவனும் அவள் தன் பேச்சை கேட்க வேண்டும் என்று எண்ணவில்லை. தன் மனதில் உள்ளதை அவன் பாட்டிற்குப் புலம்பி கொண்டு வந்தான். காரை ஓட்டி கொண்டிருந்த அவளின் கண்கள் கண்ணீரை சொரிந்து கொண்டிருந்ததை அவன் காண வாய்ப்பில்லை.

அவனின் வீடு வந்ததும் அவனைக் கைத்தாங்கலாய் அழைத்துக் கொண்டு வந்தவளை கண்டு ராகேஷ் திகைத்துப் போய்ச் சோபாவில் இருந்து எழுந்தான்.

“நீங்க... நீங்க?” அவன் முகம் சந்தோசத்தைத் தத்தெடுத்தது.

“ஷ்...” வாயில் விரல் வைத்து அவனை அடக்கியவள், கண்களால் ஆமோதிப்பது போல் தலையாட்டினாள்.

“உன் அண்ணாவை அவர் ரூமுக்கு அழைச்சிட்டு போ ராகேஷ்...” என்றவளை பார்த்து,

“நீங்களும் வாங்க...” ராகேஷ் சொல்ல... இருவரும் சேர்ந்து கதிரை அவனின் அறைக்கு அழைத்துச் சென்றனர். அதற்குள் கீழே அழைப்புமணி சத்தம் கேட்க,

“நீங்க இருங்க... நான் யாருன்னு பார்த்துட்டு வர்றேன்...” ராகேஷ் அவளின் பதிலை எதிர்பாராமல் கீழே செல்ல... வந்தது ஆதர்ஷாகத் தான் இருக்கும் என்று எண்ணியவள்... படுத்திருந்த கதிரை ஆழ்ந்து பார்த்தாள்.

சிறு குழந்தை போல் வாயை பிளந்து கொண்டு உறங்கி கொண்டிருந்தவனைக் கண்டு பாவமாய் இருந்தது. மெல்ல அவனருகில் சென்றவள் அவனின் முன்னுச்சி முடியை வருடி கொடுத்தவள் அவனின் நெற்றியில் அழுந்த முத்தமிட்டு,

“உங்களை விட்டு எங்கும் போக மாட்டேன் கதிர்...” அவள் அவனிடம் சொல்லி கொண்டு இருக்கும் போதே ராகேஷ் அங்கு வந்து விட, சட்டென்று கதிரை விட்டு விலகியவள்,

“அவரைப் பார்த்துக்கோ ராகேஷ்...” என்றபடி அவள் வெளியேற... அவளுடன் இணைந்து நடந்த ராகேஷ்,

“மூர்த்தி அங்கிள் பொண்ணு...?” என்றபடி இழுக்க...

“ஆமாம்...” என்றவளை நன்றியுடன் பார்த்தவன்,

“தேங்க்ஸ் அண்ணி...” என்றவன் நாக்கை கடித்துக் கொண்டான்.

“நீ அப்படியே கூப்பிடலாம் ராகேஷ்...” என்று அவன் கன்னம் தட்டி சொன்னவள், “அப்புறம் ராகேஷ்... என்னைப் பத்தின உண்மைகளை உன் அண்ணாவிடம் சொல்ல வேணாம். நானே நேரம் வரும் போது சொல்லிக்கிறேன்” அவனிடம் சொல்லியவள் அவனின் ஒப்புதலை பெற்றுக் கொண்டு... அவனிடம் விடை பெற்று வெளியில் வந்தாள்.

“ஆதர்ஷ்... எனக்கு டயர்டா இருக்கு... நீங்களே காரை ஓட்டுங்க...” அவனிடம் கார் சாவியைக் கொடுத்தவள் காரிலேறி அமர்ந்தாள். காரை கிளப்பிய ஆதர்ஷ் சிறிது நேரம் மௌனமாய் இருந்தவன் பிறகு பொறுக்க முடியாமல்,

“ஏன் மேம்... உங்களுக்குத் தேவையில்லாத இந்த விசப்பரீட்சை?இவனெல்லாம் உங்கள் கால் தூசி பெற மாட்டான்... நீங்க என்னடான்னா?” அவனின் குரலில் கோபமும், சலிப்பும் சரிசமமாய்க் கலந்திருந்தது.

“ம்ப்ச்... ஆதர்ஷ் வொர்கிங் அவர் முடிஞ்சு போச்சு... சும்மா மதின்னே சொல்லுங்க” அலுப்பாய் சொன்னவள் காரின் இருக்கையில் சாய்ந்தமர்ந்தாள்.

“ஓகே மதி... நான் கேட்டதுக்குப் பதில் சொல்லு...”

“என்னன்னு பதில் சொல்ல சொல்றீங்க ஆதர்ஷ்... அப்பா முதன் முதல்ல அவரோட ஃபோட்டோவை காண்பிச்சு இவர் தான் உன் கணவர் அப்படிச் சொன்னதும்... அந்த நொடி நான் அவரை என் கணவரா நினைக்க ஆரம்பிச்சுட்டேன்... அதுக்கப்புறம் வந்து அவரைப் பத்தி தப்பு தப்பாய் கேள்விப்பட்டு... அவர் நல்லவரில்லை... நீ அவரை மறந்திடுன்னு சொன்னவுடனே நான் என் மனசை மாத்திக்க முடியுமா? என்னைப் பத்தி உங்களுக்கே நல்லா தெரியும்? ஒண்ணை நினைச்சா அதிலேயே தீவிரமாய் இருக்கிற ஆள் நான்... அப்படிப்பட்ட என்னிடம் சரியாய் முடிவெடுக்காமல் பேசியது அவங்க தப்பு தானே. இப்போ கதிரை மறந்திடுன்னு சொன்னா... என்னால் எப்படி மறக்க முடியும்?” அவள் பேச, பேச அவளின் நியாயம் அவனுக்குப் புரிய தான் செய்தது. ஆனாலும்...???

“எல்லாம் சரி மதி... இவனை எப்படித் திருத்தி உன் வழிக்குக் கொண்டு வரப் போற?ஒருவேளை அவன் உன் வழிக்கு வரலைன்னா...”

“கடமையைச் செய் பலனை எதிர்பாராதே... இதைத் தான் நான் ஃபாலோ பண்ண போறேன். நாளைக்கு என்ன

நடக்கும்ன்னு எனக்குத் தெரியாது. ஆனால் இன்னைக்கு உள்ள என் கடமையை நான் ஒழுங்கா செய்யலாம்ன்னு முடிவெடுத்துட்டேன்” என்று உறுதியாய் சொன்னவளை மறுத்து அவன் ஒன்றும் கூறாமல் மௌனமானான். அவனுக்குத் தெரியும் அவள் ஒன்றை நினைத்து விட்டால்... அதை அப்படியே பின்பற்றுபவள். அவளை மாற்ற யாராலும் முடியாது. அவளாய் மாறினால் தான் உண்டு. அவனின் நினைப்பு அப்படியிருக்க... அவளோ வேறு நினைவில் ஆழ்ந்திருந்தாள்.

“எனக்கு அப்புறம் கதிரை நீ தான்ம்மா பார்த்துக்கணும். அவன் கொஞ்சம் முரட்டு குழந்தை மாதிரி... அன்பா பக்குவமா எடுத்துச் சொன்னா கேட்டுக்குவான்... நீதான் அவனுக்கு எல்லாமுமாய் இருக்கணும்...” அப்பாவியாய் சொன்ன அந்தத் தாயின் குரல் அவளின் காதில் ஒலித்துக் கொண்டே இருந்தது.

அந்தத் தாயின் வார்த்தைகளும், அவளின் காதல் கொண்ட நெஞ்சமும் மேலும் மேலும் கதிரின் பக்கம் சாய்வதைத் தடுக்கும் வகையறியாமல் தன் கண்களை இறுக மூடி கொண்டாள்... கதிருக்காக அவனின் அன்னை அவனுக்குப் பார்த்திருந்த மணப்பெண் மதியழகி.

நெஞ்சு பொறுக்குதில்லையே உன்னியல்பை கண்டு
நெஞ்சு வெறுக்குதில்லையே உன்னைக் கண்டு
என் காதல் நெஞ்சம் தாகம் தீர!
உன்னை மாற்றி என்னுள் ஊற்ற வாராயா!!!

நாளை : 7

இருளை வெறித்துக் கொண்டிருந்த மதியின் மனம் கடலலை போல் ஓய்வில்லாமல் அலைப்பாய்ந்து கொண்டிருந்தது. வெகுநேரம் தூக்கம் வராமல் புரண்டவள் மெல்ல எழுந்து பால்கனியில் வந்து அமர்ந்திருந்தாள். அவளின் தூக்கமின்மைக்கும், மனம் அமைதியில்லாமல் தவிப்பதற்கும் காரணம் ஒன்றே ஒன்று தான் அது கதிர். அவனை அவள் உயிருக்குயிராய் நேசித்தது மட்டுமே காரணம்.

வாழ்கையில் எல்லாவற்றையும் தைரியமாக முடிவெடுக்கும் அவள் கதிரிடத்தில் எப்படிச் சறுக்கினாள்? என்பது தான் அவளுக்கே புரியாத புதிர். அவனை எந்தளவுக்கு நேசித்தாளோ... அந்தளவுக்கு அவன் மேல் வெறுப்பு இருந்தாலும்... அவன் தான் வேண்டும் என்று இந்த நெஞ்சம் அவனுக்காய் பிடிவாதம் பிடிப்பது கண்டு அவளுக்குத் தன் மேலேயே வெறுப்பாய் இருந்தது.

“அர்வி... நீ சொன்னதைக் கேட்காமல் வந்ததுக்கு நான் நல்லா அனுபவிக்கிறேன்... ஆனாலும் என்னால் அவரை மறக்க முடியலையே... நான் என்ன தான் செய்வது அர்வி?” வாய் விட்டு புலம்பியவள் மனக்கண்ணில் அவளின் அண்ணன் முகம் வலம் வந்தது. அத்தோடு அவன் கூறிய வார்த்தைகளும்... பேசாமல் பெற்றோருக்கு மகளாய், அன்பான அண்ணனுக்குத் தங்கையாய் நிம்மதியாய், சந்தோசமாய் இருந்திருக்கலாம்... பாழாய் போன காதல் வராமலேயே இருந்திருக்கலாம் என்று எண்ணாமல் அவளால் இருக்க முடியவில்லை.

ஹைதராபாத்தில் ஓரளவு வசதியான குடும்பத்தைச் சேர்ந்தது தான் அவளின் குடும்பம். தந்தை குணசேகர் நகைக்கடை வைத்திருந்தார். ஆந்திராவில் பல இடங்களில் அவர்களின் கடை இருந்தது. ஓரளவு பெயரும், புகழும் அவர்களின் கடைக்கு இருந்ததால் பல வாடிக்கையாளர்களை அது பெற்றுத் தந்திருந்தது.

குணசேகர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவராய் இருந்த போதிலும் அவரின் மனைவி மணிமாலா ஆந்திராவை சேர்ந்தவர். அவர் கணவன், குழந்தைகள் என்று குறுகிய வட்டத்துக்குள் இருந்து அவர்களின் முன்னேற்றத்தை கண்டு மகிழும் சாதாரண இல்லத்தரசி. ஒரே மகள் மதியழகி... அதே போல் ஒரே மகன் அர்விந்த், அவனின் மனைவி ஆதிரை. குணசேகர் சிறுவயது முதல் தன் பிள்ளைகள் இருவரையும் தொழிலில் பழக்கிவிட்டார். நாளை தான் இல்லாவிட்டால் பிள்ளைகள் தடுமாறி போகக் கூடாது என்ற நல்லெண்ணம் தான் அதற்குக் காரணம். அவர் நினைத்த மாதிரியே இருவரும் தொழிலை திறம்பட நடத்தவும் அவருக்கு மிகுந்த பெருமையாய் இருந்தது.

அதிலும் ஆணுக்கு நிகராய் அதாவது தன் சகோதரனுக்கு நிகராய் மதியும் தொழிலை ஈடுபாடுடன் கவனித்து முன்னேற்றியது அவருக்குச் சிறிது கர்வமாய்க் கூட இருந்தது. அதனால் பெண் பிள்ளை என்று கூடப் பாராமல் அவளுக்கு என்று சில கடைகளைக் கொடுத்து முழுவதையும் அவள் பொறுப்பில் விட்டார். பெண் குழந்தைகளுக்கு உண்டான நகை மீதான ஈர்ப்பு, அழகுணர்ச்சி எல்லாம் சேர்த்து அவளைத் தொழிலில் பல புதுமைகளைச் செய்ய வைத்தது. அது அவளை அடுத்தக் கட்டத்திற்கு முன்னேற்றியது. வெளிநாட்டிற்குப் போய் அங்குள்ள நுணுக்கங்களைக் கற்று தேர்ந்து அதை இங்கே வந்து புகுத்தி வியாபாரத்தை மேலும் பெருக்கினாள். அதைக் கண்டு அவளின் அண்ணனுக்கும் மிகுந்த சந்தோசம். அவளின் புத்திக்கூர்மை கண்டு பொறாமை அடையாமல் அவன் அவளைப் பாராட்டினான். அந்தளவுக்கு அண்ணன், தங்கை இடையில் பாசம் நிலவியது. அவளின் முன்னேற்றத்திற்கு இன்னொரு முக்கியக் காரணி... ஆதர்ஷ்.

ஆதிரையின் அண்ணன் தான் ஆதர்ஷ். இவர்கள் இருவரும் மணிமாலாவிற்குத் தூரத்துச் சொந்தம். அதாவது அவரின் ஒன்றுவிட்ட அண்ணன் மக்கள்.

சிறுவயதில் பெற்றோரை இழந்த அவர்கள் இருவரையும் தன் பொறுப்பில் கூட்டிக் கொண்டு வந்த மணிமாலாவிடம் குணசேகர் சண்டை போடாமல் அந்தப் பிள்ளைகளைத் தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டார். தங்கள் பிள்ளைகள் படிக்கும் பள்ளியில் சேர்த்து படிக்க வைத்தவர்கள் தங்கள் பிள்ளைகள் போல் பார்த்து கொண்டனர். பருவ வயது வந்ததும் அர்விந்திற்கு ஆதிரை மேல் ஈர்ப்பு வர அது திருமணத்தில் முடிந்தது. அதே போல் மதி, ஆதர்ஷ் இடையே ஏதும் உறவிருக்குமோ? என்று பெரியவர்கள் ஆவலுடன் எதிர்பார்க்க... அவர்களோ சாதரணமாய் நட்பாகத் தான் பழகி வந்தனர்.

ஒருநாள் மணிமாலா ஆதர்ஷிடம் நேரிடையாய் கேட்டும் விட்டார். “ஆது... உனக்கு ஏதும் அம்மு மேல் காதல்...” அவர் முடிக்கும் முன் அவன் குறுக்கிட்டான்.

“அப்படியெல்லாம் இல்லை அத்தை... அம்மு எனக்கொரு நல்ல தோழியே... என் தங்கச்சியை உங்க மருமகளாக்கியது உங்க பெருந்தன்மை. ஆனால் நான் என்னோட தகுதியை மறக்க விரும்பல. நான் என்னைக்கும் உங்க வீட்டு காவல் நாய் தான். அதை மீறி வீட்டுக்குள் வர எனக்கு விருப்பமில்லை. அம்மு தேவதைப் பெண். அவளுக்கேத்த ராஜகுமாரனா தான் நாம பார்க்கணும்” என்று திட்டவட்டமாய்ச் சொல்லியவன், “ஆனால் அம்மு கூடவே இருந்து அவளைப் பார்த்துக் கொள்ள வேண்டியது என் பொறுப்பு. அவளின் நிழலாய் அவள் கூடவே நான் இருப்பேன் அத்தை...” என்ற போது அவருக்குச் சற்று நிம்மதியாக இருந்தது.

ஆனாலும் அவர் மனதில் சிறு ஏமாற்றம் பரவத் தான் செய்தது. ஆதர்ஷ் எல்லா விதத்திலும் மதிக்கு பொருத்தமானவன் என்பது அவரின் கணிப்பு... அதைக் கணவனிடம் அப்படியே சொல்ல... அவரும் ஆதர்ஷ் சொன்னதை ஏற்றுக் கொண்டு மனைவியைச் சமாதானப்படுத்தினார். அர்விந்திற்கு மணிமாலா சொந்ததில் இருந்து பெண் எடுத்ததால், மதிக்கு குணசேகர் தன் சொந்தத்தில் இருந்து பெண் எடுக்க

நினைத்தார். அதன்படி பார்த்த மாப்பிள்ளை தான் கதிர். கந்தன், கமலா குடும்பத்தைப் பற்றி அவருக்கு ஏற்கெனவே தெரியுமாததால் கதிரை பற்றிக் கூடச் சரி வர விசாரிக்காமல் பெண்ணைக் கொடுக்கச் சம்மதித்தார். அந்நேரம் அர்விந்த் வெளிநாட்டில் இருந்தான்.

“அப்பா... மாப்பிள்ளையைப் பத்தி நல்லா விசாரிச்சுக்கோங்க... நாளைக்கு ஏதாவது பிரச்சினைன்னா அம்முவை சமாளிக்க முடியாது. அவள் ஒன்றை பிடித்தால் பிடித்தது தான். அவளின் பிடிவாதம் உங்களுக்குத் தெரிந்தது தானே... பிறகு கல்யாணமே வேண்டாம்ன்னு வெறுத்திடுவாள்” விசயம் கேள்விப்பட்ட அவன் கொஞ்சம் படபடக்கத் தான் செய்தான்.

“எல்லாம் விசாரித்து விட்டேன் அர்வி... நீ கவலைப்படாதே...” குணசேகர் சொன்ன சமாதானம் அவனுக்குப் போதுமானதாய் இல்லை. அவன் உடனே சென்னையில் உள்ள தன் நண்பனிடம் கதிரை பற்றிச் சொல்லி, அவனைப் பத்தின தகவல்களை விசாரிக்கச் சொன்னான். அடுத்த ஒரு வாரத்தில் கதிரை பத்தின எல்லா விவரங்களையும் அவனின் நண்பன் புட்டு புட்டு வைக்க... அர்விந்த் பதறி தான் போனான். தனது வேலையைக் கூட முடிக்காமல் உடனே ஊருக்கு திரும்பி விட்டான்.

“அம்மு... உனக்கு மாப்பிள்ளையைப் பிடிச்சியிருக்கா...?” வந்ததும் தன் தங்கையைப் பார்த்து அவன் கேட்க...

“ம்... பாவாவை ரொம்பப் பிடிச்சியிருக்கு அர்வி...” வெட்கத்தில் முகம் சிவந்தவளாய் சொன்ன மதியை அவன் யோசனையாய் பார்த்தான். அதிலும் அவளின் ‘பாவா’ என்றழைப்பு அவளின் மனதை எடுத்து சொல்வதாய்! ஏனெனில் உறவு முறையில் ஆதர்ஷை பாவா என்றழைக்கச் சொன்னதற்கு,

“ம்ஹூம்... அதெல்லாம் எனக்கே எனக்கு என்று வர போகும் என் கணவருக்கான பிரத்யேக அழைப்பு அது...” என்று பிடிவாதமாய் மறுத்து விட்டவள், இன்று கதிரை

பாவா என்று சொல்கிறாள் என்றால்... அவள் மனதில் கதிரை கணவனாய் வரித்து விட்டாள் என்று தானே அர்த்தம்.

‘அந்தப் பாவாவின் லீலைகள் இவளுக்குத் தெரிந்தால் என்ன ஆவாளோ?’ அர்விந்திற்கு அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் விழி பிதுங்கியது. தொழிலில் கூட இத்தனை தூரம் அவன் குழம்பியது இல்லை.

மதியோ கதிருடனான மணவாழ்க்கையைப் பற்றிய கனவில் சஞ்சரித்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு இந்தக் காதல் கத்திரிக்காயில் எல்லாம் பெரிதாய் நம்பிக்கையில்லை. அதனால் தான் அவளின் பெற்றோர் பார்த்த மாப்பிள்ளையான கதிரை நேசிக்க ஆரம்பித்தாள். இது ஒருவித பாதுகாப்பான காதல் என்று கூடச் சொல்லலாம். அதன் காரணமாகத் தான் திருமணத்திற்கு முன் கதிரிடம் பேசுவதற்குக் கூட அவள் துணியவில்லை.

அர்விந்திற்குத் தங்கையின் மனநிலை தெரிந்த பின் என்ன செய்வது என்று தெரியாமல் நேரே தன் தந்தையை நாடி சென்றான். அவரிடம் தான் விசாரித்ததை அப்படியே சொல்ல... அவர் அதிர்ந்து தான் போனார். தன் ஒரே செல்ல மகளை இருந்திருந்தும் ஒரு திறமையில்லாதவன், குடிகாரன், எல்லாவற்றிருக்கும் மேல் பொம்பளை பொறுக்கிக்கா கொடுக்க வேண்டும்? என்று அவர் மனம் பதைபதைத்தது.

“என்னை மன்னித்துவிடு அர்வி... நான் யோசிக்காமல் பெரிய பிழை செய்துவிட்டேன்” என்று மகனிடம் மன்னிப்பு கேட்டவர், “இப்போ என்ன செய்வது அர்வி?” என்று கேட்க,

“இதை நான் பார்த்துக் கொள்கிறேன்... நீங்க அமைதியாய் இருங்கப்பா...” தந்தையைச் சமாதானம் செய்தவன்... திருமணப் பந்தத்தை முறிப்பதற்கான காரியத்தில் இறங்கும் போது தான் கதிரின் பெற்றோர்கள் இறந்தது தெரிய கொஞ்ச நாட்கள் அமைதி காத்தான். பின்பு நேரே கதிரை சந்தித்துத் திருமணப் பந்தத்தை முறித்துவிட்டு வந்தான். இதெல்லாம் மதிக்குத்

தெரியாமல் பார்த்துக் கொண்டான். என்ன தான் அவன் செய்தாலும் கதிரின் பெற்றோர் இறந்தது அவளுக்குத் தெரிய வந்தது.

“ஏன்ப்பா சொல்லாம மறைச்சீங்க... இப்போ நான் உடனே சென்னைக்குப் போகணும்...” பதட்டமாய்ச் சொன்னவளிடம் குணசேகர் கதிரை பற்றி மெதுவே சொன்னார். ஆனால் அவனின் கெட்ட குணங்களை விலாவாரியாய்ச் சொல்லாமல், ‘அவனிடம் இல்லாத கெட்டப் பழக்கங்கள் இல்லை... ஆள் சரியில்லை...’ என்று மட்டுமே சொன்னார். அதனால் திருமணம் முறிந்து விட்டதை எடுத்துக் கூறினார்.

“என்னைக் கேட்காமல் நீங்களே முடிவெடுத்து எப்படி இப்படியொரு காரியம் பண்ணலாம்...” தந்தையையும், சகோதரனையும் பார்த்துச் சத்தம் போட்டாள். காதல் என்று வந்து விட்டால் மூளை வேலை செய்யாது போலும். மதியின் மூளையில் அவர் கூறியது எதுவும் ஏற மறுத்தது.

“அவன் எப்படியிருந்தாலும் உனக்குக் கட்டி வைக்கணும்ன்னு சொல்றியா?அதுக்கு நாங்களே உன்னைக் கொன்னு தூக்கி போட்டுறலாம்...” வெறுப்பாய் சொன்ன அர்விந்த் கடுகடுவென முகத்தை வைத்துக் கொண்டான். மதியின் பேச்சு அவனுக்கு எரிச்சலை உண்டு பண்ணியது.

“ஓ... இப்போ நீ என்ன சொல்ல வர்ற?” அண்ணனை கூர்மையாய் பார்த்தாள் அவள்.

“இந்தக் கல்யாணம் நடக்காது... அவன் உனக்கு வேணாம்...” அவன் தீர்மானமாய்ச் சொன்னான். அர்விந்த் அளவிற்கு மதியிடம் குணசேகரால் கடுமை காட்ட முடியவில்லை. மணிமாலாவோ மகளைத் தேற்றும் வகையறியாமல் அழுது கொண்டிருந்தார். ஆதிரையும், ஆதர்ஷும் என்ன பேசுவது என்று தெரியாமல் பார்வையாளராய் பார்த்துக் கொண்டு நின்றிருந்தனர்.

“ஓகே அர்வி... நீ சொல்றதை நான் கேட்கிறேன்...” என்று சொன்னவளின் பேச்சு கேட்டு பெற்றோர் மனம் குளிர்ந்தது. தங்கையைப் பற்றி நன்கு தெரிந்த அர்விந்தோ அவளை யோசனையுடன் பார்த்தான்.

“ஆனால்... இந்த ஜென்மத்தில் எனக்குக் கல்யாணம் என்பதில்லை... என் மனசை நீங்க நினைச்சபடி மாத்திக்க என்னால் முடியாது. அப்படி மாத்தினால்... அதுக்குப் பேரு வேறு... என் மனசில் நுழைந்த முதல் ஆண்மகனும் அவர் தான்... கடைசி ஆண்மகனும் அவர் தான்...” என்றவள் அந்த இடத்தை விட்டு விருட்டென்று அகன்றாள்.

“அப்பா... அம்மு மனசுல என்ன நினைச்சிட்டு இருக்கா? அவள் பேசுறது சுத்த பத்தாம் பசலித்தனமாய் இல்லை. இவள் எந்தக் காலத்தில் இருக்காள்? மணமேடை வந்து கூட மாப்பிள்ளை, பொண்ணு மாறியிருக்கு. நீங்களாவது எடுத்து சொல்ல கூடாதா?” அர்விந்த் பெற்றோரிடம் சத்தம் போட்டான்.

“அவளைப் பத்தி நல்லா தெரிஞ்சிருந்தும் நீ பேசுறது சரியில்லை அர்வி... இதில் என்னோட தவறும் அதிகமிருக்குப்பா... கொஞ்சம் அவளை விட்டு பிடிப்போம்” என்று குணசேகர் அவனைச் சமாதானப்படுத்தினார்.

குணசேகர் நினைத்த மாதிரி அவள் தன் மனதை மாற்றிக் கொள்ளவில்லை. மாறாக ஆதர்ஷை விட்டு கதிரின் நிலைமையைப் பார்த்து வர சொன்னாள். ஏனெனில் கதிரின் அன்னை கூறியது அவளின் காதில் ஒலித்துக் கொண்டே இருந்தது. அவன் தனியாக என்ன செய்கிறானோ என்ற கவலையில் அவள் ஆதர்ஷை அங்கே அனுப்பியது. ஆதர்ஷும் அவளின் பேச்சை தட்ட முடியாமல் கதிரின் நிலையைக் கண்டறிந்து வந்து அவளிடம் அப்படியே சொன்னான். அவள் நினைத்தது போல் அவன் தொழிலில் தடுமாறி கொண்டிருப்பதை அறிந்தவள் உடனே சென்னைக்குக் கிளம்பினாள்.

“அம்மு... நீ இப்படி உயிரை கொடுத்து காதலிக்கும் அளவுக்கு அவனிடம் அப்படி என்னயிருக்கு?தானாகத்

தொழில் செய்யக் கூடத் திறமையில்லாதவன்... இவன் எப்படி உன்னை வைத்துக் காப்பாற்றுவான்? அதிலும் ஏகப்பட்ட கெட்டப் பழக்கங்கள்... இப்படிப்பட்ட ஒருவனுக்காக எங்கள் பேச்சை மதிக்காமல் நீ போற... இது நல்லதுக்கில்லை" அர்விந்த் கோபத்துடன் பேச...

"காதல்ன்னா என்னன்னு அண்ணி கிட்டே கேளுண்ணா... அண்ணி நீங்க சொல்லுங்க... மனசுல ஒருத்தனை நினைச்ச பின்னாடி வேறொருத்தனை நினைக்க முடியுமா?" அவளின் கேள்விக்குப் பதிலளிக்க முடியாமல்... அவளின் உணர்வுகளைப் புரிந்தவளாய் ஆதிரை தலைகுனிய... மனைவியைக் கொலைவெறியுடன் பார்த்தான் அர்விந்த்.

"அவரோட கெட்டப் பழக்கங்கள் எல்லாத்தையும் மாத்தி அவரை நல்லபடியா கொண்டு வந்துட்டா... நீயே எங்க கல்யாணத்தைப் பண்ணி வைப்பியா அண்ணா?" அண்ணனை நோக்கி சாவால் விடும் பார்வையை அவள் பார்க்க...

"நீ சினிமா பார்த்து ரொம்பக் கெட்டுப் போயிருக்க அம்மு... நடைமுறை வாழ்க்கைக்கு நீ சொல்றது எதுவும் ஒத்து வராது..." அவன் எடுத்து சொல்ல அவள் கேட்பதாய் இல்லை. உண்ணாவிரதப் போராட்டத்தை அவள் கையில் எடுக்க, குணசேகரே மகனிடம் மகளுக்காகப் பேசினார்.

"அவளைக் கொஞ்சம் விட்டு பிடிப்போம் அர்வி... அவள் சொல்வது போல் நடந்தால்... எல்லோருக்கும் சந்தோசம் தானே..."

"அதுக்காக அப்பா... ஒரு பொம்பளை பொறுக்கி கிட்ட போய் இவளை அனுப்புவதா?ம்ஹூம்... எனக்குச் சரியாய் படல..." அவன் வேகமாய் மறுத்தான்.

"எனக்கு என் பொண்ணைப் பத்தி தெரியும்... அவள் அந்த மாதிரி போக மாட்டா..."

"நான் அம்முவை சொல்லலப்பா..."

“நீ சொல்றது புரியுது அர்வி... அவள் நெருப்பு மாதிரி... அந்த மாதிரி ஒரு சூழ்நிலை வந்தால் அவளே அவனை விட்டு விலகி வந்துருவா... அப்படி ஒரு சூழ்நிலை வந்தால் அது நமக்குச் சாதகம் தானே... அதனால் பொறுமையாய் இரு... நம்ம ஆது அவள் கூடயிருந்து பார்த்து கொள்வான்” தந்தையின் பேச்சில் அவன் சற்றுச் சமாதானமானான்.

மதி சென்னை கிளம்புவதற்கு ஆதர்ஷும் ஒரு காரணம் என்பதை அறிந்த அர்விந்த் மனைவியிடம் கோபப்பட்டான். “அவளுக்கு மட்டும் ஏதாவது ஒண்ணு ஆச்சு... உன் அண்ணன் தொலைஞ்சான்...”

“அப்படி அவளுக்கு ஏதாவது ஒண்ணுன்னா... அம்முவோட வாழ்க்கைக்கு நான் கியாரண்டி... என் அண்ணனையும் சேர்த்து தான் நான் சொல்றேன்... என் பேச்சை அண்ணன் தட்ட மாட்டார்...” அழுத்தமாய்ச் சொன்ன ஆதிரையின் பதில்... மெதுவாய் அவனுக்குப் புரிய...

“அப்படி மட்டும் நடத்தால்... எனக்கு வேறு எதுவும் வேண்டாம்... ஆது தான் அவளுக்கேத்த ஜோடி... அதை அவளும் புரிஞ்சிக்க மாட்டேங்கிறா... அவனும் புரிஞ்சிக்க மாட்டேங்கிறான்...” சந்தோசத்தில் துவங்கி ஆதங்கத்தில் முடித்தான் அர்விந்த். ஆதிரை அவனுக்கு ஆறுதல் அளிக்கும் விதமாய் அவனின் கை மேல் தன் கை வைத்து புன்னகைத்தாள்.

சென்னைக்குக் கிளம்பியவளை தடுத்து நிறுத்திய அர்விந்த், “எங்க பேச்சை கேட்காமல் நீ போற... ஆனால் உனக்கு அங்கே பெரிய ஏமாற்றம் காத்திட்டிருக்கு... ஒருவேளை நீ நினைச்சது நடக்கலன்னா...” சொல்லிவிட்டு தங்கையை ஆழ்ந்து பார்க்க... அவள் அவனைக் கூர்ந்து பார்த்தாள்.

“நாங்க என்ன சொல்றோமோ அதைக் கேட்கணும்” அவன் முடிவாய் சொல்ல... ‘அதற்கு அவசியம் ஏற்படாது...’ என்று மனதுக்குள் நினைத்த மதி வெறுமனே தலையசைத்து விட்டு, பெற்றோரிடம் விடைப்பெற்று சென்னையை நோக்கி பயணமானாள்.

அவள் விசாரித்த வரையில் மூர்த்தி ஒருவர் மட்டுமே கதிரின் குடும்பத்திற்கு விசுவாசமாய் இருப்பது தெரிய வர... அவரின் மூலமே காய் நகர்த்தினாள். அவளின் நோக்கம் கேட்டு அவரும் பிரமித்துப் போனார். அப்படியாவது கதிரின் வாழ்க்கை நல்லவிதமாய் அமையாதா? என்ற நம்பிக்கை அவருள் எழ, அவளுக்கு உதவுவதற்குச் சம்மதித்தார். அதன் விளைவு அவரின் மகளாய் அவனின் அலுவலகத்துக்குள் அவள் காலடி எடுத்து வைத்தாள்.

அவனை நேரில் பார்த்த இரண்டாவது நாளே அவனின் வண்டவாளம் தெரிந்து தன் நிலையை எண்ணி நொந்து போனாள். இந்த ஐந்து நாட்களும் அவளின் மனம் சுயஅலசலில் ஈடுபட்டது. என்ன தான் அவளின் அறிவு அவனை வேண்டாம் என்றாலும்... அவளின் மனம் அவனையே நாடியது கண்டு அவளுக்கே சற்று துயரமாய் இருந்தது. காலுக்கு உதவாத செருப்பைத் தூக்கி எறிவது போல் அவளால் அவனைத் தூக்கியெறிய முடியவில்லை. அவள் தனக்குள் குழம்பி போய்த் தவித்த போது தான் மீண்டும் அவனைச் சந்தித்தாள்.

மதுவின் போதையில் அவன் பேசியது கேட்டு மீண்டும் அவனிடமே சரணடைந்தது அவளின் காதல் நெஞ்சம். அதிலும் அவன் பெற்றோர் இறந்ததில் இருந்து பெண்கள் சகவாசம் இல்லை என்று கூறியதும், பின் அவள் மேல் சத்தியமாய் இனிமேல் குடிக்க மாட்டேன் என்று சொல்லியதும்... எல்லாம் சேர்த்து அவளின் மனதை கரைத்தது. 'இவன் முழுவதும் கெட்டவன் இல்லை... கொஞ்சம் நல்லவன் தான்... முயன்றால் இவனைத் திருத்திவிடலாம்' என்ற நம்பிக்கை அவளுள் எழுந்தது. இருந்தாலும் அவனைப் பார்க்கும் போது பழைய மாதிரி நேசம் பொங்குமா? இல்லை தன்னையும் அறியாமல் அவன் மீதான தன் வெறுப்பை, அருவருப்பைக் காட்டி விடுவோமோ? என்று உள்ளுக்குள் கலங்கி தான் போனாள்.

“ஐ லவ் யூ பாவா...” நாளை அவனைச் சந்திக்க வேண்டியதற்கான தைரியத்திற்காக மனதுக்குள் திரும்பத் திரும்பச் சொல்லி கொண்டாள் அவள். அவளின் காதல் அவனைப் போய்ச் சென்றடையுமா?

****

காலையில் எழுந்த கதிருக்கு நேற்று நடந்தது எல்லாமே கனவு போலிருந்தது. ‘உண்மையில் மதியை நான் பார்த்தேனா?அவள் தான் என்னை வீட்டில் கொண்டு வந்து விட்டாளா?’ யோசிக்க யோசிக்க அவனுக்குப் பைத்தியம் பிடித்துவிடும் போலிருக்க... வேகமாய்க் குளித்துவிட்டு அலுவலகத்துக்குக் கிளம்பி கீழே இறங்கி வந்தான். அங்கே ராகேஷ் பள்ளிக்கு செல்ல தயாராய் இருந்தான்.

“ராக்கி... இங்கே வா...” அவனை அழைக்க,

“என்ன அண்ணா?”

“நேத்து என்னை யாராவது கூட்டிட்டு வந்தாங்களா?”

“இல்லையேண்ணா...” ராகேஷின் அவசரமான பதிலில் அவனைச் சந்தேகமாய்ப் பார்த்தான் கதிர்.

“எப்பவும் போல நீங்களே தான் வந்தீங்க... அதைத் தான் சொன்னேன்...” என்றவன், “எனக்கு ஸ்கூலுக்கு நேரமாச்சு...’ என்று கூறியவாறு சிட்டாய் வெளியில் பறந்தான்.

கதிர் அதே யோசனையுடன் தன் அலுவலகத்திற்கு வந்தடைந்தான். அங்கே அவனின் அறையில் கணினியில் முன் அமர்ந்து வேலை செய்து கொண்டிருந்த மதியை கண்டதும் அவனின் யோசனை பின்னுக்குச் செல்ல... மகிழ்ச்சியாய் அறையினுள் நுழைந்தான்.

“குட்மார்னிங் கதிர்...” அவளின் காலை வணக்கத்திற்குப் பதில் சொல்லாமல் தன் இருக்கையில் அமர்ந்தவன்,

“இவ்வளவு நாள் எங்கே போயிருந்த மதி...?” நேற்று முழுவதும் யோசித்து வைத்திருந்த பதிலை எந்தவித தயக்கமும் இல்லாமல் அவனிடம் சொன்னாள்.

“ஒரு முக்கியமான விசயமான வெளியூர் போக வேண்டியதிருந்தது... அப்பாவிடம் சொல்ல சொன்னேனே...” அவனையே அவள் கேள்வி கேட்க... அவள் கூறியதை உண்மை என்று நம்பினான். அதிலும் அவள் தன்னைத் தவறாய் நினைக்காததை உணர்ந்து உள்ளுக்குள் சந்தோசமடைந்தான்.

“ம்... சொன்னார்... சொன்னார்...” இழுத்தவன், “ப்ளீஸ் மதி... இது மாதிரி அம்போன்னு விட்டுட்டு போயிறாதே...” பரிதாபமாய்க் கூறியவனைப் பார்த்து அவளுக்குப் பாவமாய் இருக்க...

“முடிக்க வேண்டிய வேலையைப் பாதியில் விட முடியுமா? அதான் நான் வரலை... இப்போ எல்லாம் வேலையும் முடிந்தது. இனி நான் உங்க கூட மட்டும் தான் இருக்கப் போறேன்...” அவளின் வார்த்தையில் அவன் உற்சாகம் அடைந்தான்.

“குட்... குட்...” தலையாட்டி சொன்னவனிடம் அவள் அன்றையை வேலைகளைப் பற்றிச் சொல்ல... அதைக் கவனமாய்க் கேட்டுக் கொண்டு அப்படியே செய்தான்.

மாலை வீட்டிற்குக் கிளம்பும் போது அவனின் முன் வந்து நின்றவள், “இனிமேலாவது கொஞ்சம் குறைச்சு குடிங்க...” என்றவளை பார்த்து ஒரு கணம் திகைத்தவன், மறுகணம் சந்தேகமாய்ப் பார்த்தான்.

“நான் குடிச்சதை நீ எப்போ பார்த்த?” அவன் அவளை ஒரு மாதிரி பார்வையில் மேலும் கீழும் அளவிட்டான். அவனின் பார்வையில் அவளுள் ஏதோ ஒன்று உருகியது. இருந்தாலும் சமாளித்துக் கொண்டு,

“அதான் நீங்க குடிச்சியிருக்கீங்கன்னு... உங்க கண்ணைப் பார்த்தாலே நல்லா தெரியுதே. குடிக்கிறது தப்பு தான்.

அதுக்காக உங்களைக் குடிக்கவே வேண்டாம்ன்னு சொல்லல... இந்த உலகத்தில் குடிக்காதவங்களை விரல் விட்டு எண்ணிடலாம். ஆனால் கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைச்சிக்க ட்ரை பண்ணுங்க. எதிலுமே லிமிட்டா இருக்கிறது நல்லதில்லையா?" அவள் 'எதிலுமே' என்ற வார்த்தையில் அழுத்தம் கொடுத்து சொல்லவும்... தாய் பேச்சை கூடக் கேட்காத அவனின் தலை தானாய் சம்மதமாய் ஆடியது.

"உங்க ஹெல்த்துக்காகத் தான் சொன்னேன்... சாரி... தப்பாயிருந்தா மன்னிச்சுக்கோங்க..." என்றவளை பார்த்து,

"தப்பேயில்ல... என் நல்லதுக்காகத் தானே சொல்ற..." என்றவனிடம் அவள் விடைப்பெற்று வெளியேற... அவள் போவதை புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருந்தான் அவன். அவனின் மனக்கண்ணில் கனவில் கண்ட சுடிதார் அணிந்த நவநாகரீக மங்கை மதி அழகாய் வலம் வந்தாள்.

நீ நனவில் ஒருவிதம்...
நீ கனவில் வேறுவிதம்...
நனவு முகம் எனை தோழமை கொள்கிறதே...
கனவு முகம் என் தோழமையைக் கொல்கிறதே!!!

நாளை : 8

காரில் இருந்து இறங்கி கொண்டிருந்த கதிரை அலுவலக ஜன்னல் வழியே விழி விலகாமல் பார்த்து கொண்டிருந்தாள் மதி. கம்பீரமாக இருந்தவனின் அழகு என்றும் போல் இன்றும் அவள் மனதை தடம் புரள செய்தது...! இந்த ஆறு மாத காலமாக அவனிடத்தில் ஏற்பட்டிருந்த வளர்ச்சி கண்டு அவள் பிரமித்துத் தான் போனாள். அவனுக்குச் சொல்லி கொடுத்தது என்னமோ அவள் தான்... ஆனால் அதைச் சிரத்தையுடன் பின்பற்றி அவன் முன்னேறிய விதம் அவனின் மேல் மரியாதை வர செய்தது.

எந்தவொரு வேலையையும் மிக மிக நிதானமாய்ச் செய்து தான் அவளுக்குப் பழக்கம்... ஆனால் அவனின் ஒவ்வொரு செயலிலும் வேகம் வேகம் தான்... அதில் சில சமயம் விவேகம் குறையும் போது அதை அவள் எடுத்துச் சொன்னால் மறுக்காமல் கேட்டு கொள்பவன்... மறுபடியும் அதே வேகப் பாதையில் தான் பயணிப்பான். இந்த ஆறு மாத காலத்தில் அவனின் தொழிலை சரிவில் இருந்து மீட்டு அதை முன்னேற்ற பாதையில் அவன் கொண்டு சென்று கொண்டிருக்கிறான் என்றால் அது மிகையில்லை. அவனிடத்தில் இத்தகைய மாற்றத்தை அவளே எதிர்பார்க்கவில்லை.

அவனின் அறிவுக் கூர்மை இப்போது அவனின் தோற்றத்தில் பிரதிபலித்து அவனை இன்னமும் ஆணழகனாகக் காட்டியது. சும்மாவே அவனிடம் மயங்கி நிற்பவள் இப்போது அவனின் கம்பீரத்தில் இன்னமும் மயங்கி நின்றாள். முதலில் சேயாய் அவளின் அருகாமையை எதிர்பார்த்தவன் இப்போது தோழியாய் அவளைப் பார்க்கும் போது அவனின் அந்தச் சாதாரணப் பார்வையில் கூட அவளிடத்தில் சிறு தடுமாற்றம் வந்து போனது. தடுமாறிய தன் மனதை சமன் செய்வதற்குள் அவளுக்குப் போதும் போதுமென்று ஆகிவிடும்.

அதையெல்லாம் விட இந்த ஆறு மாதத்தில் அவன் அன்று சொன்னது போல் மது அருந்துவதை அறவே நிறுத்திவிட்டான் என்பதை ராகேஷ் மூலமாக அறிந்த போது அவள் உண்மையில் அகமகிழ்ந்து தான் போனாள். போதையில் தன்னிடம் செய்த சத்தியத்தை அவன் காப்பாற்றுவானா? என்ற சந்தேகம் அவள் அடிமனதில் இருக்கத் தான் செய்தது. அன்றொரு நாள் அவனுக்கு அறிவுரை சொன்னதோடு சரி... பிறகு அதைப் பற்றி அவனிடம் அவள் பேசவில்லை. இருந்தாலும் அவள் சொன்னதைக் கருத்தில் கொண்டு அதை அவன் பின்பற்றியதை நினைக்கும் போது அவளுக்குப் பெரும் மகிழ்ச்சியாய் இருந்தது.

‘இனியும் என் காதலை பொத்தி வைக்க முடியாது... அவனருகில் வந்தாலே என் வசம் இழப்பதை இன்னமும் நான் அவனிடம் இருந்து மறைக்க முடியாது. அதிலும் அவன் பார்வை, பேச்சு, சிரிப்பு இதெல்லாம் என்னைக் கொல்லாமல் கொல்கிறதே... என் நெஞ்சை அழுத்தி கொண்டிருக்கும் காதலை விரைவில் அவனிடத்தில் சொல்லி அவன் நெஞ்சில் நிம்மதியாய் சாய்ந்து... அவனே எனக்குச் சகலமும் என்று சரணடைய வேண்டும்’ நினைத்தவளின் நினைவே தித்திப்பாய் இருக்க... அந்த நினைவு தந்த வெட்கத்தில் அவளின் முகம் செவ்வானமாய்ச் சிவந்தது.

“க்கும்...” கதிரின் தொண்டை கனைப்பில் அவள் திடுக்கிட்டு திரும்பினாள். அவளின் பின்னே வெகு அருகில் நின்றிருந்தவனைக் கண்டு அவள் திகைத்துப் போனவளாய்ப் பின்னால் நகர்ந்தவள் தட்டுத் தடுமாறி கீழே விழ போக... சட்டென்று சுதாரித்து ஜன்னலின் கம்பியை பிடித்துக் கொண்டாள். விழியகல தன்னைப் பார்த்து கொண்டிருந்தவளின் பார்வை என்றுமில்லாமல் இன்று புதிதாய் இருப்பதைக் கண்டவனுக்குக் குழப்பமாய் இருந்தது. ஆனாலும் அதை யோசிப்பதற்கு அவனுக்கு நேரம் இல்லை. அடுத்ததாய் ஏற்றுமதியாளர்களின் முக்கியக் கூட்டம் ஒன்றிற்குச் செல்ல வேண்டும்.

“ரிலாக்ஸ் மதி...” என்றவன் அருகிலிருந்த கண்ணாடி தம்ளரில் இருந்த நீரை எடுத்து அவள் புறம் நீட்டினான். அதை வாங்காமல் அவள் அவனையே பார்த்துக் கொண்டிருக்க,

“என்னாச்சு மதி... ஆர் யூ ஆல்ரைட்?” கேட்டபடி அவளின் வலதுகையைப் பிடித்து நீர் அடங்கிய தம்ளரை அதில் திணிக்க... அவனின் கை தொடுகையில் மதி என்ற சிலைக்கு உயிர் வந்தது. அவனின் தீண்டல் அவளின் மனதை மயிலறகு போல் இதமாய் வருடி சென்றது.

“ம்... ம்...” என்றவள் தண்ணீரை ஒரே மூச்சில் குடித்து முடித்தாள்.

“சம்திங் ராங்...” என்றவன் அவளைக் கூர்ந்து பார்த்துவிட்டு, “ஏதோ உன் கிட்ட மிஸ்ஸான மாதிரி இருக்கு?” என்றவன் மீண்டும் அவளை ஆழ்ந்து பார்த்தான்.

“என்னன்னு சொல்ல தெரியல... பட் சம்திங் மிஸ்ஸிங்...” முதல் பாதியை அவளிடம் சொன்னவன்... பிற்பாதியை தனக்குள் சொல்லி கொண்டான்.

‘ஐயோ கடவுளே... ஒருவேளை நான் மனதில் நினைத்தை முகத்தில் காட்டி விட்டேனோ?என்னை பத்தி என்ன நினைப்பாங்க...’ அவள் தனக்குள் நொந்து கொண்டாள்.

“மதி மீட்டிங் போகலாமா?” அவளிடம் கேட்டபடி அவன் அதற்குத் தயாராக...

“நான் எதற்கு?நீங்க போயிட்டு வாங்களேன்...” அவள் தயக்கமாய் அதை மறுத்தாள்.

“ஏன் என் கூட வெளியில் அதிகமா வர மாட்டேங்கிற?” அவனின் கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் அவள் அமைதி காக்க...

“இன்னமும் நீ என்னை நம்பவில்லை?அப்படித்தானே...” அவனின் கேள்வி கூர்மையாய் அவளை நோக்கி

பாய்ந்தது.

“அச்சோ... அப்படியெல்லாம் இல்லைங்க...” அவள் பதற்றத்துடன் மறுக்க... அவனின் சுணங்கிய முகம் பூவாய் மலர்ந்தது.

“அப்படின்னா வா...” அவன் சொல்லவும் மறுக்க முடியாமல் அவனுடன் சென்றாள்.

காரின் அருகில் வந்ததும் அவளிடம் காரின் சாவியைத் தூக்கி போட்டவன், “மதி... நீ காரை ஓட்டிட்டு வா...” என்றவன் காரிலேறி அமர, மறுபக்கம் ஏறியமர்ந்தவள் காரை கிளப்பினாள். சில சமயம் அவன் இது போல் சொல்வது உண்டு. அதனால் அவன் பேச்சை அவளால் மறுக்க முடியவில்லை.

கையிலிருந்த கோப்பில் ஆழ்ந்திருந்தவனை ஓரக் கண்ணால் பார்த்தவளுக்கு அவனை நினைத்து ஆச்சிரியமாய் இருந்தது. முன்பிருந்த கதிருக்கும் இவனுக்கும் தான் எத்தனை வித்தியாசங்கள். இந்தப் பொறுப்புடன் கூடிய கதிர் அவளின் இதயத்தில் சூறாவளி காற்றாய் நுழைந்து அவளைச் சுழற்றியடித்தான்.

சிறிது நேரம் சென்றதும் கோப்பை மூடி வைத்தவன் அலைபேசியை உயிர்பித்தவன் ஹெட்செட்டை அதில் இணைத்து பாட்டு கேட்க துவங்கினான். சிறிது நேரத்தில் அவனின் தலையும், கைகளும் வேகமாய் அங்குமிங்கும் ஆட அவன் சுவாரசியமாய்ப் பாட்டில் மூழ்கியிருந்ததைக் கண்டவளுக்குச் சற்று முன் தான் நினைத்தது நியாபகம் வந்தது.

‘ம்ஹூம்... பாவாவை நம்பி எதையும் யோசிக்கக் கூட முடியலையே...’ மனதில் நினைத்தவள் அவன் புறம் பார்த்தாள். அந்நேரம் அவனும் சட்டென்று தன் கண்களைத் திறந்தவன் அவளைப் பார்த்தான். அவள் தன்னைப் பார்த்து கொண்டிருந்ததைக் கண்டு கேள்வியாய் புருவத்தை உயர்த்த, அவள் ஒன்றுமில்லை

என்பது போல் தலையசைத்தவள் அவசரமாய்ச் சாலையில் கண்ணைப் பதித்தாள்.

“நீ ஒண்ணுமில்லைன்னு சொன்னாலும்... நீ எதுக்குப் பார்த்தேன்னு எனக்குத் தெரியும்...” என்றவன் சட்டென்று வலது ஹெட்செட்டை எடுத்து அவள் காதில் வைத்தான்.

“ஜிங்குனமணி ஜிங்குனமணி
சிரிச்சிப்புட்டா நெஞ்சுல ஆணி
ஹேய் வெண்கல கிண்ணி வெண்கல கிண்ணி
போல மின்னும் மந்திர மேனி
நான் வெட்கத்துக்குப் பக்கத்துல போகாதவ”

அடுத்த வரி ஒலிக்கும் முன் அவள் ஹெட்செட்டை தூக்கி அவன் மேல் போட்டாள்.

“என்ன பாட்டு இது?கர்மம்?” தலையில் அடித்துக் கொண்டாள் அவள்.

“என்ன இப்படிச் சொல்லிட்ட... எந்தச் சேனலை போட்டாலும் இந்தச் சாங் தான் ஓடிட்டு இருக்கு... இதைப் போய்க் குறை சொல்றியே...” மனத்தாங்கலுடன் சொல்லியவன் அந்தப் பாட்டை உரக்க பாட... அவள் மீண்டும் தலையில் அடித்துக் கொண்டாள்.

‘கொஞ்ச நேரத்துக்கு முன்னால் நான் நினைச்சதை நானே வாபஸ் வாங்கிக்கிறேன்... பாவா உங்களை எந்தவிதத்தில் நான் சேர்க்க...’ தனக்குத் தானே சொல்லி கொண்டவள் கோபத்தில் பற்களை நறநறவெனக் கடித்தாள்.

அவளின் முகச்சுளிப்பில் சற்று அமைதியானவன், “சாரி... உனக்குப் பிடிக்கலைன்னா நான் கேட்கல...” என்றவன் அலைப்பேசியை அணைத்துவிட்டுச் சாலையில் கண்ணைப் பதிக்க, கொஞ்ச தூரம் சென்றதும்,

“ஹேய் ஸ்டாப்... ஸ்டாப்...” திடீரென்று கத்தியவனின் குரலில் பயந்து போய் அவள் சடன் பிரேக் போட...

பின்னால் வந்த கார்க்காரன் இவர்களைத் திட்டி கொண்டு முன்னால் சென்றான்.

“அப்படி ஓரமாய் நிறுத்து மதி...” கதிரை கோபம் கொள்ளவும் முடியாமல் அதேசமயம் அவனின் சேட்டைகளையும் அவளால் பொறுத்துக்கவும் முடியவில்லை. மனதில் மூண்ட கோபத்துடன் காரை நிறுத்தியவள் அவனைத் திரும்பியும் பார்க்கவில்லை. அதைக் கவனிக்கும் மனநிலையில் அவனும் இல்லை. கார் கதவை திறந்து கொண்டு இறங்கியவன் சாலையைக் கடந்து எதிர்ப்பக்கமாய் ஓடினான். அவன் போவதை எரிச்சலுடன் பார்த்து கொண்டிருந்தாள் அவள்.

பத்து நிமிடங்கள் கழித்து வந்தவன் காரில் ஏறியவுடன் அவளிடம் ஒரு பாலித்தீன் கவரை நீட்ட... அவள் புரியாமல் அவனைக் கேள்வியாய் பார்த்தாள்.

“உன் கிட்ட மிஸ்ஸாச்சுன்னு சொன்னேன்ல... அது இது தான்...” அவன் சொன்னதும் அவசரமாய் அந்தக் கவரை பிரித்துப் பார்த்தவள் இன்பமாய் அதிர்ந்தாள். ஏனெனில் அதில் நெருக்கமாய், அழகாய்த் தொடுக்கப்பட்ட மல்லிகைப்பூ அவளைப் பார்த்துச் சிரித்தது.

“எப்பவும் பூ வச்சிட்டு வருவ... இன்னைக்கு அது இல்லாம உன்னைப் பார்க்க எப்படியோ இருந்தது... அதான்...” விளக்கம் சொன்னவனை நன்றியுடன் பார்த்தவள், மனதில் இன்பச் சாரலடித்தது. கதிர் தெரிந்து செய்தானோ இல்லை தெரியாமல் செய்தானோ... அவன் பூ வாங்கிக் கொடுத்தது கண்டு ஏனோ அவன் காதல் சொன்னது போல் அவள் மனம் சந்தோசத்தில் விண்ணில் பறந்தது.

“தேங்க்ஸ்...” என்றபடி காரை கிளப்ப போக,

“முதல்ல பூவை வை... பிறகு கிளம்பலாம்...” என்றவன் கை நீட்டி கார் சாவியைப் பற்ற... அவனின் கை விரல்கள் அவளின் கைவிரல்களோடு அழுத்தமாய்ப் பதிந்து மீண்டது. சரேலென்று தன் கையை உருவி கொண்டவள்...

அவன் சொன்னதைச் செய்ய... பூ வைத்த அவளின் முகத்தை அவன் திருப்தியுடன் பார்த்தான்.

“தட்ஸ் குட்...” என்றவன் புன்னகைத்தபடி, “இப்போ போகலாம் ரைட்...” என்க... அவனின் புன்னகையில் அவளின் இதயம் நழுவி அவனின் காலடியில் விழுந்தது.

அன்றைய கூட்டம் நல்லபடியாக நடந்து முடிய, எல்லோருக்கும் மதிய உணவு அங்கேயே கொடுக்கப்பட்டது. கதிரும், மதியும் கையில் ஆளுக்கொரு தட்டை ஏந்தியபடி அங்கிருந்த இருக்கையில் அமர்ந்து உணவை உண்ணும் போது அங்கு மற்றொரு தொழிலதிபனான திலீப் வந்தான்.

“ஹாய் மிஸ்டர். கதிர்...” என்று அவனிடம் கை குலுக்கியவன், “ஹாய் மிஸ். மதி...” அவளிடம் கை குலுக்கத் தன் கையை நீட்ட... “வணக்கம்...” என்று இருகரம் கூப்பியவளை அதிசயமாய்ப் பார்த்தான் கதிர்.

“கதிர் சொன்னான்... நீங்க தான் அவனுக்குப் பிசினெஸ் கன்சல்ட் பண்றதா... என்னோட கம்பெனிக்கும் நீங்க வர முடியுமா?உங்களின் அட்வைஸ் எங்களுக்கு மிகவும் தேவைப்படும்” அவனுக்கு மதி பதில் சொல்லும் முன் கதிர் அவளை முந்தி கொண்டான்.

“அவள் வேறு எங்கும் வர மாட்டாள். அவளின் சேவை எங்களின் கம்பெனிக்கு மட்டுமே... ஷி இஸ் மைன்...” அவன் சொன்னதைக் கேட்டு விழிகள் இரண்டும் தெறித்து விடுவது போல் அவனை அவள் பார்க்க... அவனோ தீர்க்கமாய்த் திலீப்பை பார்த்தான். அவனின் பதிலில் நாகரீகமாக எழுந்து விலகி போனான் திலீப்.

‘ஹய்யோ பாவா... இன்னைக்கு என்ன அதிர்ச்சி மேல அதிர்ச்சியா ஒரே இன்ப அதிர்ச்சியா தர்றீங்க... எனக்குச் சந்தோசத்தில் துள்ளி குதிக்கணும் போலிருக்கே...’ மனதுக்குள் கும்மாளமிட்டவள் வெளியில் அமைதியாய் அவனைப் பார்த்தாள்.

“ஏன் மதி அவனின் கையைப் பிடித்துக் குலுக்கல?இந்த மாதிரி பத்தாம் பசலித்தனமான எண்ணங்கள் உனக்கு உண்டா?” அவனின் கேள்வியில் அவனை ஆழ்ந்து பார்த்தவள்... பின் பெருமூச்சொன்றை வெளியிட்டு,

“என்னுடைய கொள்கையில் இதுவும் ஒண்ணு... சிலது எனக்கு வரப் போறவருக்கு மட்டுமே...” என்றவளை கண்ணிமைக்காமல் பார்த்தவன்,

“உனக்கு வரப் போறவன் கொடுத்து வச்சவன்...” அவனின் பதிலில் அவளுக்கு ஆயாசமாய் வந்தது.

‘அது நீங்க தான் பாவா...’ என்று அவனுக்கு உறைக்கும் படி கத்தி சொல்ல வேண்டும் போல் ஆவேசம் எழுந்தது. சூழ்நிலை கருதி அமைதியாய் இருந்தாள். அதன் பின் அவனும் அதிகம் பேசவில்லை... அவளும் பேசவில்லை.

****

அன்று கதிர் அலுவலகம் வரும் போதே ரொம்பவும் சோர்வாய் இருந்தான். அவனிடம் கேட்கலாமா வேண்டாமா என்று மனதுக்குள் அரைமணி நேரம் பட்டிமன்றம் நடத்திய மதி... கேட்டு விடுவது என்று முடிவு செய்து அவன் முன் வந்து நின்றாள்.

“என்ன பா...” பாவா என்றழைப்பை முயன்று கட்டுப்படுத்திக் கொண்டு, “என்ன கதிர் யோசனையா இருக்கீங்க?”

“ம்ச்சு... எல்லாம் இந்த ராக்கியால் தான்...”

“ஏன் அவனுக்கு என்னவாச்சு?”

“இப்போ எல்லாம் அவன் ஒழுங்கா படிக்கிறதே இல்லையாம்... எல்லாச் சப்ஜெக்ட்டிலும் ரொம்பக் குறைச்சலா மார்க் வாங்கியிருக்கான்... அவங்க மிஸ் என்னைக் கூப்பிட்டுச் சத்தம் போடுறாங்க... இதுல டென்த் வேற... அம்மா இருந்திருந்தா இது மாதிரி நடந்திருக்காதோன்னு எனக்குத் தோணுது” நெற்றியை

விரலால் நீவி கொண்டே சொன்னவனைக் கண்டு அவளுக்குப் பாவமாய் இருந்தது.

“நான் வேணும்ன்னா ராகேஷுக்குப் பாடம் சொல்லி கொடுக்கவா?” அவனின் வேதனை பொறுக்க மாட்டாமல் அவள் அவனிடம் கேட்டு விட்டாள். அதில் அவன் கண்கள் பளிச்சிட்டது.

“உனக்கு ஒண்ணும் பிரச்சினை இல்லையே...” அவன் யோசனையாய் கேட்கவும்,

“அப்படியெல்லாம் எதுவுமில்லை...” ‘உங்களை விட எனக்கு எதுவும் முக்கியமில்லை பாவா’ மனதுக்குள் சொல்லி கொண்டாள்.

“தேங்க்ஸ் மதி...” கவலை அகன்றவனாய் அவன் அவளைப் பார்த்து சிரிக்க... அதைப் பத்திரமாய்த் தன் இதயப் பெட்டகத்தில் பூட்டி வைத்து கொண்டாள் அவள்.

கதிரிடம் சொன்னது போல் ராகேஷுக்குப் பாடம் சொல்லி கொடுக்க அவனின் வீட்டிற்குச் சென்ற போது... அவன் அவளைப் பலமாய் வரவேற்றான்.

“அண்ணி வாங்க... வாங்க...” வரவேற்றவனைப் பார்த்துச் சிநேகமாய்ச் சிரித்தவள்,

“என்ன ராகேஷ் எப்படி இருக்க?” என்று அவனிடம் பொதுவாய் கொஞ்ச நேரம் பேசி கொண்டிருந்தவள் தான் வந்த விசயத்திற்குத் தாவினாள்.

“ஏன் ராகேஷ்... நீ சரியாய் படிக்கிறதில்லைன்னு உங்க அண்ணன் ரொம்பக் கவலைப்படுறார். அதனால் தான் நான் உனக்குச் சொல்லி கொடுக்கலாம்ன்னு இங்கே வந்தேன்”

“அப்படிப் படிக்காம இருக்கப் போய்த் தானே நீங்க இங்கே வந்திருக்கீங்க...” கண்ணைச் சிமிட்டி அவன் சொல்லிய விதத்தில் அவளுக்கு எல்லாம் புரிந்து போனது.

“ஏய் பொய்யாவா நடிச்ச?”

“பொய்யெல்லாம் கிடையாது அண்ணி... உண்மையில் இந்தத் தடவை மூணு சப்ஜெக்ட் பெயில் தான். உங்களை வரவழைக்கிறதுக்காக நான் எப்படி எல்லாம் கஷ்டப்பட்டுப் பெயிலானேன் தெரியுமா? எப்படியும் அண்ணன் கிட்ட நியூஸ் போனா... அவர் எப்படியும் உங்க கிட்ட தான் அட்வைஸ் கேட்பார். அவர் கவலைப்பட்டா உங்க மனசு தாங்குமா? உடனே கிளம்பி வந்துற மாட்டீங்க... அதான் அப்படிச் செய்தேன்...” அவன் சொன்ன விதத்தில் அவளின் கண்களில் கண்ணீர் துளிர்த்தது.

“அண்ணனை பார்த்துக்கவாவது நீங்க இருக்கீங்க... ஆனா என்னைப் பார்த்துக்க யார் இருக்கா அண்ணி... ஏனோ உங்களைப் பார்க்கணும்... பேசணும் போலிருந்தது... அதான் உங்களை வரவழைக்கத் திட்டம் போட்டேன். நான் செய்தது தப்பா அண்ணி...” அன்பிற்கு ஏங்கியவனாய் அவன் கேட்ட போது... அவளால் பார்த்துக் கொண்டு சும்மாயிருக்க முடியவில்லை.

“இல்லை ராகேஷ்... அப்படியெல்லாம் சொல்லாதே... உனக்கு நானிருக்கேன்...” என்று அவனைத் தோளோடு தாயாய் அணைத்து கொண்டாள் மதி. அவனும் சேயாய் அவளின் அணைப்பில் அடங்கினான்.

அன்று அவசரமாய் வீட்டிற்குக் கிளம்பி கொண்டிருந்தவளை பார்த்து கதிர், “எம்டி நான் உட்கார்ந்து வேலை பார்த்துக் கொண்டிருக்கிறேன்... நீ என்னடான்னா வீட்டுக்கு கிளம்பிட்டு இருக்க? கொஞ்சமும் பயமில்லை...” மிரட்டுவது போல் சொன்னவனை அவன் சொன்னது போல் பயமில்லாமல் பார்த்தவள்,

“முதலாளிக்கு தான் கம்பெனியை தூக்கி நிறுத்தணும்ன்னு தலையெழுத்து... தொழிலாளிக்கு அந்த மாதிரி தலையெழுத்து ஏதுமில்லையே...” சிரித்தபடி சொன்னவள்,

“ராகேஷ் எனக்காகக் காத்திட்டு இருப்பான் கதிர்... அவன் பாவமில்லையா?” அவள் கெஞ்சலாய் கேட்க...

“அவனின் அண்ணன் நானும் பாவம் தான்ம்மா...” என்றவனைத் திடுக்கிட்டு போய் அவள் பார்க்க...

“இல்ல... இப்படி மொத்த வேலையையும் என் தலையில் கட்டிவிட்டு போறியே அதைச் சொன்னேன்...” அவனின் பதிலில் நிம்மதி பெருமூச்சு விட்டவள் சிரித்தபடி அவனிடம் விடைப்பெற்று வெளியேறினாள்.

தினமும் அவள் கதிரின் வீட்டிற்குப் போய் ராகேஷுக்குப் பாடம் சொல்லி கொடுப்பதும், அது முடியும் போது கதிரும் வந்துவிடுவான். சிரிப்பும் அரட்டையுமாய்ச் சிறிது நேரம் பேசியிருந்து விட்டு அதன் பின்னரே அவள் தன் வீட்டுக்கு செல்லுவாள். கதிர், ராகேஷை விட மதி தான் இந்த நேரத்திற்காக ஆவலுடன் காத்திருந்தாள் என்று சொன்னால் மிகையில்லை. அந்தளவுக்குக் கதிரின் அருகாமையை அவள் விரும்பினாள்.

அன்றும் அதே போல் அலுவலகம் முடிந்து கிளம்பி வெளியில் வந்தவளை வாயிலேயே சத்யன் பிடித்துக் கொண்டான்.

“பரவாயில்லை... என் மச்சினனை இந்தளவுக்கு ட்ரைன் பண்ணி கொண்டு வருவேன்னு நான் நினைச்சு கூடப் பார்க்கல. அதில் உன் திறமையை மெச்சி தான் ஆகணும். நீ சொன்னால் அவன் எதையும் செய்வான்னு எல்லோரும் பேசிக்கிறாங்களே... அது உண்மையா?” ஏதோ உள்ளர்த்தம் வைத்து பேசியவனை உணர்ச்சியற்ற பார்வை ஒன்றை பார்த்தவள் அமைதியாய் நின்றிருந்தாள்.

“நான் சொல்ற மாதிரி நீ செய்தால்... அதில் வரும் லாபத்தில் உனக்கு ஒரு பங்கு தருகிறேன்... ஆனால் விசயத்தைக் காதும் காதும் வைத்த மாதிரி முடிக்க வேண்டும்” என்றவனைக் கூர்ந்து அவள் பார்க்க... அதைக் கண்டு கொள்ளாது சத்யன் தொடர்ந்தான்.

“நீ அவனிடம் கையெழுத்து வாங்கும் போது... நான் கொடுக்கும் சில பத்திரங்களிலும் சேர்த்து கையெழுத்து

வாங்கிவிடு... அந்த முட்டாள் என்ன எதுன்னு கூடப் பார்க்காமல் உனக்காகக் கையெழுத்து போட்டு விடுவான்" விகாரமாய் இளித்தபடி சொன்னவனைக் கன்னம் கன்னமாய் அப்பினால் என்னவென்று அவளுக்குத் தோன்றியது. முயன்று தன்னை அடக்கி கொண்டு,

"என்னை யாருன்னு நினைச்சு பேசிட்டு இருக்கீங்க... நான்... கதிருக்கு... துரோகம் பண்றதா?நான் மட்டுமில்ல... நீங்களும் அவருக்குத் துரோகம் பண்றதை... நான் கையைக் கட்டி சும்மா வேடிக்கை பார்த்துட்டு இருக்க மாட்டேன். அதையும் மீறி நீங்க அவருக்குத் துரோகம் பண்ண நினைச்சா... அதனோட விளைவுகளை நீங்க பயங்கரமாய்ச் சந்திக்க நேரிடும். இனிமேல் இது போல் பேசிக்கிட்டு என் முன்னால் வராதீங்க..." என்றவள் விறுவிறுவென நடந்தாள். சத்யனின் பேச்சு கேட்டு அவள் மனம் உலைக்களம் போல் கொதித்தது.

அவள் போவதை யோசனையுடன் சத்யன் பார்த்துக் கொண்டிருக்க... அந்நேரம் ஆதர்ஷ் அவள் அருகே காரை கொண்டு வந்து நிறுத்த... ஏதோ யோசனையில் இருந்த மதியும் சத்யனை பற்றிய நினைப்பு இல்லாமல் காரிலேறினாள். மதியையும் அவள் ஏறிச் சென்ற காரையும் கணக்கிட்ட சத்யன் மனதில் புதிதாய் ஒரு திட்டம் முளைத்தது. அதைச் செயலாற்ற எண்ணியவனின் கண்கள் பேராசையில் மின்னியது.

ஊனாய், உயிராய், காதலாய் நானிருக்க
நின் வஞ்சகத்தை என்றும் அனுமதியேன்
வீணனே! என்னை என்னவென்று நினைத்தாயடா???
என் காதலை என்னவென்று எண்ணினாயடா???
தொடரும்...!!!

நாளை : 9

ஆதர்ஷ் மௌனமாய்க் காரை ஓட்டி கொண்டே அருகில் அமர்ந்திருந்த மதியின் மேல் பார்வையைப் பதித்தான். ஏனோ இன்று அவளின் அமைதி அவனுக்கு வித்தியாசமாகப் பட்டது. எப்போதும் காரிலேறிய உடன் அவனின் காது ஜவ்வு கிழியும் அளவுக்குக் கதிரின் புராணம் பாடுபவள்... இன்று அமைதியாய் இருந்தது மட்டுமல்லாமல் ஏதோ யோசனையில் மூழ்கியிருந்தது அவனுக்குப் பெருத்த ஆச்சிரியமாய் இருந்தது.

“என்ன மேம் யோசனை பலமாயிருக்கு?” ஆதர்ஷின் கேள்வியில் தன் நினைவிலிருந்து களைந்தவள்... அவனின் ‘மேம்’ என்ற வார்த்தையில் அவனை முறைத்தாள்.

“ச்சு... என்ன ஆதர்ஷ் இது?எத்தனை தடவை தான் சொல்றது பேர் சொல்லி கூப்பிடுங்கன்னு... இங்கே நாம மட்டும் தானே இருக்கோம்...” சலிப்புடன் கூறியவள் வெளியில் வேடிக்கை பார்த்தாள்.

“இப்படிக் கூப்பிடுவது ஒரு சேப்டிக்காகத் தான்... மத்தவங்க முன்னிலையில் உன்னை அந்த மாதிரி கூப்பிட கூடாது இல்லையா அம்மு?” அவனின் அம்மு என்றழைப்பில் முகம் மலர்ந்து திரும்பியவள்,

“ஆது... எவ்வளவு நாளைக்கு அப்புறம் நீங்க என்னை அம்முன்னு சொல்லியிருக்கீங்க தெரியுமா?” அவளின் முகத்தில் தெரிந்த சந்தோசத்தைக் கண்டு கொண்டவனாய்,

“பாவம் பொண்ணு... வீட்டை விட்டு வந்து தனியா கஷ்டப்படுறியே... அம்மு கூப்பிட்டா ஆறுதலா இருக்குமேன்னு தான் கூப்பிட்டேன்...” என்று புன்னகைத்தவனை நன்றியுடன் பார்த்தவள்,

“நீங்க என் கூட இருக்கிறதே... வீட்டில் உள்ளவங்க கூட இருக்கிற மாதிரி தான் இருக்கு. ஏன்னா... நீங்களும் என்

வீட்டில் ஒருத்தங்க தான்...” என்றவளை பார்த்து தலையசைத்து அவளின் கூற்றை ஆமோதித்தான்.

“அப்புறம் உங்க பாவா என்ன சொல்றாரு...?” கேலி குரலில் கேட்டவனை அவள் முறைத்து பார்த்தவாறு,

“பாவாவை கிண்டல் பண்ணலன்னா உங்களுக்குத் தூக்கம் வராதே...”

“பின்னே இத்தனை நாள் கூடயிருக்கும் ஒரு பெண்ணோட மனசை புரிஞ்சிக்கத் தெரியாதவனைக் கிண்டல் பண்ணாமல் என்ன பண்ணுவாங்களாம்... சரியான மக்கு பாவா... உன் பாவா...”

“அவங்களை அப்படிச் சொல்லாதீங்க... அப்புறம் எனக்குக் கெட்ட கோபம் வரும்...” ஆள்காட்டி விரலை நீட்டி எச்சரித்தவளை கண்டு போலியாய் நடுங்கியவன்,

“ஐயோ... பயமாயிருக்கு...” என்றவனின் வார்த்தையில் இருந்த பயம் அவனிடத்தில் இல்லை. அதைக் கண்டு அவள் முறைக்க அவளைப் பார்த்து அவன் வாய்விட்டுச் சிரித்தான்.

“போங்க ஆது... பாவா அப்படியெல்லாம் கிடையாது... ஏனோ அவங்க என் கிட்ட மட்டும் நட்பை தாண்டி பழக மாட்டேங்கிறாங்க... இல்லை மூர்த்தி அங்கிள் பொண்ணுங்கிற மரியாதையாகக் கூடயிருக்கலாம்... அதையும் மீறி அவங்க என்னை லவ் பண்ணுவாங்களான்னு எனக்குச் சந்தேகமாயிருக்கு... பேசாம நானே போய் அவங்க கிட்ட என் லவ்வை சொல்லிறவா?” கொஞ்சம் கவலை, கொஞ்சம் பதற்றம் எல்லாக் கலந்த உணர்ச்சி கலவையாய் இருந்த மதியை கண்டு அவனுக்குள் இரக்கம் சுரந்தது.

“வேணாம் அம்மு... அதை மட்டும் செஞ்சிறாதே... அவனே உன்னைக் காதலிச்சு... அதை அவனே வந்து உன் கிட்ட சொல்லணும்... அது வரை நீ கொஞ்சம் பொறுமையாயிரு. நீயா வலிய போய் உன் காதலை சொன்னால்... அந்தக்

காதலுக்கு மரியாதை இல்லை... அவனாய் உணர்ந்து வரும் போது தான் உன் காதலுக்கும் மரியாதை... அந்தக் காதல் தான் நிலைச்சும் நிற்கும். ஏன்னா அர்வி பேசிய பேச்சால் உங்க ரெண்டு பேருக்கிடையில் பிரச்சினை வந்தா... அவன் உன்னைப் புரிஞ்சிக்கணும்ன்னா... அவன் உன்னைக் காதலித்தால் மட்டுமே முடியும்...” ஆதர்ஷின் பேச்சில் இருந்த உண்மை அவளைச் சுட அவள் கண்களில் நீர் கோர்த்தது.

“ஆது... பாவா என்னைப் புரிஞ்சிக்குவாரா?இல்லை அர்வி பேசிய பேச்சால் என்னை வெறுத்துடுவாரா?” அவளின் குரலில் கலக்கம் தென்பட்டது.

“உன்னை மாதிரி நல்ல பெண்ணை யாராவது வேணாம்ன்னு சொல்வாங்களா?அதிலும் நீ அவனுக்கு எவ்வளவு உதவி பண்ணியிருக்க... அப்படியிருக்கும் போது அவன் உன்னைப் புரிஞ்சிக்காமல் இருப்பானா? எல்லாம் நல்லபடியா நடக்கும்” அவளுள் நம்பிக்கையை விதைத்தவன் ஆறுதலாய் புன்னகைத்தான்.

“பாவா என்னைப் புரிஞ்சிப்பாருன்னு நானும் நம்பிக்கையோடு தான் இருக்கேன்...”

“இது தான் எங்க அம்மு...” என்று அவளைச் சிலாகித்தவன், “சரி அம்மு... கடைக்கு வர்றியா?நீ பார்க்க வேண்டிய கணக்கு வழக்கு எல்லாம் அப்படியே இருக்கு...”

மதியும், ஆதர்ஷும் சென்னையில் அதிகம் இருந்ததால் அர்விந்த் தான் முன் யோசனையுடன் அவர்களின் கடையின் கிளையைச் சென்னையில் திறக்க ஏற்பாடு செய்தான். மதி வேலைக்குச் செல்லும் போது ஆதர்ஷுக்கும் பொழுது போக வேண்டும்... சென்னையில் ஒரு கிளை திறக்க வேண்டும் என்ற நீண்ட நாள் எண்ணம் நிறைவேறி தொழிலுக்குத் தொழிலுமாச்சு... என்ற நினைவில் தான் அர்விந்த் இந்த ஏற்பாடை செய்தான். நகைக்கடை திறந்து கிட்டத்தட்ட இரண்டு மாதங்களாகி விட்டது. அதற்குத் தான் ஆதர்ஷ் வரச் சொல்லி கேட்டது.

“இல்ல ஆது... இன்னைக்குக் கவி வதின (நாத்தனார்) வந்துருக்காங்க... அதனால நான் அவங்களைப் பார்க்க போறேன்... சோ இன்னைக்கும் நீங்களே கணக்கு பார்த்திடுங்க...” என்றவள் நினைவில் கவிதாவுடன் அவளின் கணவன் சத்யனும் வந்தான். மதியின் முகம் சத்யனின் பேச்சை நினைத்து ஒரு மாதிரியாய் மாறியது. அதைக் கண்டு கொண்டவனாய் ஆதர்ஷ்,

“ஆமாம் நான் கேட்கணும்ன்னு நினைச்சேன்... வரும் போது ஏன் டல்லா இருந்த...?”

“எல்லாம் பாவாவோட மாமாவை நினைச்சு தான்...” என்றவள் சத்யன் தன்னிடம் பேசிய பேச்சுகளை அவனிடம் ஒன்றும் விடாமல் சொன்னாள். அதைக் கேட்டவன் சற்று நேரம் யோசித்துப் பின்பு,

“அவனைக் கொஞ்சம் தட்டி வைக்கலாமா?”

“ஐயோ... வேணாம்...” அவசரமாய் மறுத்தாள் மதி. “என்ன தான் பண்றார்ன்னு பார்ப்போம்... அளவுக்கு மீறினா யோசிப்போம்...” என்றவளின் பேச்சை ஆமோதித்தவன் அவளைக் கதிரின் வீடிருந்த தெருமுனையில் இறக்கி விட்டு,

“கிளம்புறதுக்கு முன்னாடி ஃபோன் பண்ணு...” என்றவனிடம் தலையாட்டியவாறு விடைப்பெற்றவள் கதிரின் வீட்டை நோக்கி நடந்தாள்.

“வா வா... மதி... ராகேஷ் சொன்னதில் இருந்து உன்னைப் பார்க்க வரணும்ன்னு நினைச்சிட்டே இருந்தேன்... எங்கே... ஒண்ணு மாத்தி மாத்தி ஒண்ணு வர விடாம பண்ணியிருச்சு... அம்மா உன் ஃபோட்டாவை காட்டினப்பவே நினைச்சேன்... நீ தான் கதிருக்கு ஏத்தவள்ன்னு... இடையில் அம்மா, அப்பா இறந்ததும்... இவனை நம்பி எப்படிப் பேசுறதுன்னு பேசாம இருந்துட்டேன்... கூடப்பிறந்த பிறப்பு நான் கூட அவனுக்காக இவ்வளவு கஷ்டப்படல... ஆனா நீ

அவனுக்காகப் பட்ட கஷ்டங்களை எல்லாம் ராகேஷ் சொன்னான். உன்னை நினைச்சா எனக்கு ரொம்பப் பெருமையா இருக்குமா? கதிர் கிட்ட இந்த மாதிரி மாற்றத்தை நான் எதிர்பார்க்கவில்லை... அம்மா, அப்பா இருந்திருந்தா ரொம்பச் சந்தோசப்பட்டிருப்பாங்க...” நீளமாய்ப் பேசி வரவேற்ற கவிதாவை மதிக்கு ரொம்பப் பிடித்துப் போயிற்று.

ராகேஷும் பள்ளியில் இருந்து வந்துவிட அரட்டையும் கச்சேரியுமாய்ப் பொழுது நகர்ந்தது. அதிலும் சரணின் குறும்புகள் அவளைப் பெரிதும் கவர்ந்தது. இங்கே இவர்கள் மகிழ்ச்சியாய் பொழுதை கழித்துக் கொண்டிருக்க... அங்கே சத்யன் கதிரிடம் மதியை பற்றி இல்லாததும் பொல்லாததுமாய்ப் போட்டு கொடுத்துக் கொண்டிருந்தான்.

“கதிர் அந்த மதி பொண்ணு கரெக்டர் எப்படி?” தன் அலுவலக அறைக்குள் அமர்ந்து கொண்டு... தன்னிடம் வேலை பார்க்கும் பெண்ணைப் பற்றி அதிலும் அவள் அவனுக்கு உற்ற தோழி.. அவளைப் பற்றி விசாரிக்கும் அக்காவின் கணவனைக் கொலைவெறியுடன் பார்த்தான் கதிர்.

‘என்ன பேசினாலும் இந்த மாமா அடங்க மாட்டேங்கிறாரே... இவரை என்ன தான் செய்வது?’ மனதுக்குள் சலிப்பாய் நினைத்தாலும்,

“நான் தான் ஏற்கெனவே சொல்லியிருக்கேனே மதியை பத்தி பேச வேணாம்ன்னு... திரும்பத் திரும்ப அதையே ஏன் பேசுறிங்க?”

“இல்ல கதிர்... ஆபிஸ் முடிஞ்சு போகும் போது அவள் ஒரு காஸ்ட்லி காரில் ஏறி போனாப்பா... சாதாரண வேலை பார்க்கும் பெண்ணுக்கு அவ்வளவு விலையுயர்ந்த கார் எப்படி வந்தது?”

“அவள் சாதாரணப் பெண்ணில்லை மாமா... அவளும் பிசினெஸ் பண்ணிக்கிட்டு இருந்தவத் தான்...” கதிரால்

மதியை விட்டு கொடுத்து பேச முடியவில்லை.

“சரி நீ சொன்ன மாதிரியே வச்சுக்குவோம்... நாமளே அந்த மாதிரி காரை வாங்க யோசிப்போம்...” என்று காரின் பெயரை சொன்னவன், “இவள் பிசினசே பண்ணினாலும் இப்ப தான் ஆரம்பிச்சிருப்பா... அதுக்குள்ள எப்படி இந்த மாதிரி காஸ்ட்லி கார்... சான்சே இல்லை. எனக்கு என்னமோ அவள் கரெக்டர் மேல் தான் சந்தேகமாயிருக்கு...” என்ற சத்யனை அவன் யோசனையாய் பார்த்தான்.

“வீட்டுக்குப் போகலாம் மாமா...” மதியை பற்றி ஒன்றும் சொல்லாமல் வீட்டிற்குக் கிளம்ப ஆயத்தமான மச்சினனை எரிச்சலாய் பார்த்தான் சத்யன்.

“நான் மதியை பத்தி கேட்டதுக்கு...” அவன் இழுக்க...

“நான் இப்போ வீட்டுக்கு போகலாம்ன்னு சொன்னேன் மாமா...” அழுத்தமாய்ச் சொன்ன கதிர் அறையின் வாயிலை நோக்கி செல்ல... வேறுவழியின்றிச் சத்யன் அவனைப் பின் தொடர்ந்தான்.

வீட்டிற்கு நுழைந்ததும் அங்கே இருந்த மதியை கண்டதும் சத்யனின் முகம் பேயறைந்தது போலானது. எங்கே தான் சொன்னதைக் கதிரிடம் போட்டு கொடுத்து விடுவாளோ? இல்லை கதிரிடம் தான் கேட்டதை அவன் அவளிடம் சொல்லி விடுவானோ? என்று உள்ளுக்குள் பயந்து கொண்டே அங்கிருந்த சோபாவில் அமர்ந்தான் சத்யன். கவிதா மதியை கணவனுக்கு அறிமுகம் செய்ய... அவன் ஒன்றும் அறியாதவன் போல் சிரித்து வைத்தான்.

காரை நிறுத்தி விட்டு வீட்டினுள் நுழைந்த கதிர், சத்யன் அருகில் அமர்ந்து, “மாமா என்னமோ டவுட் கேட்டீங்களே... இப்போ மதியே இங்கே இருக்கிறாள்... நீங்களே அவள் கிட்ட கேட்டுக்கங்க...” அசால்ட்டாய் சொன்னவனைக் குரோதத்துடன் பார்த்தான் சத்யன்.

‘இப்படியாடா என் பொண்டாட்டி முன்னாடி என்னைப் போட்டு கொடுப்ப...’ மனதுக்குள் நொந்தவன், “இப்போ அது எதுக்கு மச்சான்?” வெளியில் ஈயென வழிந்தான்.

“உங்களுக்கு வேண்டாம்ன்னாலும்... எனக்கு வேண்டுமே...” என்றவன் மதியை பார்த்து, “மதி இன்னைக்கு ஆபிஸ் முடிந்து நீ காஸ்ட்லி காரிலேறி போனதா மாமா சொல்றாரு... அது உண்மையா?” கதிரின் பேச்சில் மதி மட்டுமல்ல... கவிதா, ராகேஷ் இருவரும் சேர்ந்து அதிர்ந்தனர். அவர்களைக் கண்ணமர்த்திச் சமாதானம் செய்தாள் மதி. மடியில் கனமிருந்தால் தானே வழியில் பயமிருக்கும்.

“நான் முன்பு கன்சல்ட் பண்ணின கிளையன்டோட கார் அது... அந்தப் பக்கமா வந்தவர் என்னைப் பார்த்ததும் லிப்ட் கொடுத்தார்...” எந்தவித தடுமாற்றம் இல்லாமல் சொன்னவள் மனதுக்குள், ‘இனிமேல் ஆதர்ஷிடம் காரை எடுத்திட்டு வர சொல்ல கூடாது...’ உறுதியாய் நினைத்து கொண்டாள்.

“இப்போ என்ன சொல்றீங்க மாமா...?” கதிர் சத்யனை பார்த்த பார்வையில் மற்றொருவராக இருந்திருந்தால் நாக்கை பிடுங்கி கொண்டு செத்திருப்பார்கள். ஆனால் சத்யன் இதற்கெல்லாம் அப்பாற்பட்டவன்... அதற்கும் ஈ என்று இளித்து வைத்தான்.

“இல்ல கதிர்... உன் பெயர் கெட்டுப் போகக் கூடாதேங்கிற நல்ல எண்ணத்தில் தான் சொன்னேன்...” அவன் சமாளித்தான்.

“என் பெயர் கெடுவது பத்தி எனக்குக் கவலையில்லை... ஆனால் மதியை பத்தி தேவையில்லாமல் பேசுவதை இதோடு நிறுத்தி கொள்ளுங்கள்... அவளின் பெயரை கெடுக்க முயற்சி செஞ்சீங்கன்னு வைங்க... அதுக்கப்புறம் மாமான்னு கூடப் பார்க்க மாட்டேன்...” கதிரின் வார்த்தையில் மதியின் மனம் குளிர்ந்தது. ‘இது போதும்...

என் வாழ்நாள் முழுமைக்கும்’ அவனை நினைத்து மனதுக்குள் நெகிழ்ந்தாள்.

“அக்கா மாமாவுக்குப் புத்திமதி சொல்லி வை...” அவன் மேலே பேசும் முன் தான் அங்கே அதிகப்படியோ என்று நினைத்த மதி,

“அப்போ நான் கிளம்பறேன்...” என்று விடை பெற, அவளைப் பின் தொடர்ந்து வந்த கதிர், “சாரி மதி...” என்க...

“எல்லோரையும் ஒரே மாதிரி நினைக்க முடியுமா? ஒவ்வொருத்தர் ஒவ்வொரு விதம்... அதை நான் பெருசா நினைக்கல...” அவனைச் சமாதானப் படுத்தியவள் பளிச்சென்று அவனைப் பார்த்து சிரிக்க... அவளின் புன்னகையில் அவன் நிம்மதியடைந்தான்.

“குட் நைட்...” அவள் விடைபெற, பதிலுக்கு,

“குட்நைட்...” என்று கூறியவன் அவள் போவதை பார்த்துக் கொண்டு அப்படியே நின்றிருந்தான்.

“நீங்க இப்படியெல்லாம் பேசுவீங்கன்னு நான் நினைச்சு கூடப் பார்க்கல...” தங்கள் அறையில் தனிமையில் ஆதங்கத்துடன் கூறிய கவிதா முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

‘சமயம் பார்த்து என் பொண்டாட்டி கிட்ட போட்டு கொடுத்திட்டியே மச்சான்... உன்னை...’ மனதுக்குள் கதிரை நினைத்து கறுவிய சத்யன்,

“அப்படியெல்லாம் இல்லை செல்லம்... அவளைப் பார்த்தா கொஞ்சம் மோசமா, சந்தேகமா இருந்தது அதான்...” அவன் முடிக்கவில்லை... அவள் அவனைத் தீப்பார்வை பார்த்தாள்.

“உங்களை விடவா...?” அவளின் கேள்வியில் அவன் அதிர்ந்து போய் அவளைப் பார்த்தான்.

“என்ன சொல்ற...?”

“எல்லாம் எனக்குத் தெரியும் சத்யா... நீங்க மனசில் என்ன நினைச்சிட்டு இருக்கீங்கன்னு... எல்லாம் எனக்குத் தெரியும்...” என்றவள் முகத்தை மூடி கொண்டு அழ ஆரம்பித்தாள். மனைவி அழுததும் அவனுக்கு ஏதோ போலிருக்கப் பதறியவனாய் அவளருகில் அமர்ந்து,

“ஹேய் கவி... சாரி... சாரி... எல்லாத்துக்கும் சாரி...” என்றவன் அவளை ஆறுதலாய் அணைத்தான். அவள் தன்னை வெறுத்து தள்ளிவிடுவாளோ என்ற பயத்தில் அவனிருக்க... அவனின் எண்ணத்திற்கு மாறாய் அவள் அவன் நெஞ்சில் சரண் புகுந்தாள்.

“நான் உங்களைக் காதலிச்சப்போ நீங்க யாரு என்னன்னு?பார்த்தா காதலிச்சேன்... இல்லையே... உங்களை மட்டும் தானே காதலிச்சேன்... நான் விருப்பட்டேன் என்பதற்காக மட்டுமே உங்களை மருமகனாக்கிட்டாங்க என்னோட அப்பா, அம்மா. அவங்களும் உங்களின் அந்தஸ்தை ஒரு பொருட்டா நினைக்கக் கூட இல்லைங்க... ஆனா நீங்க அவங்க சொத்தை அபகரிக்க நினைக்கிறதை என்னால் தாங்க முடியல. உங்க புத்தி ஏன் இப்படிப் போச்சு? அடுத்தவங்க சொத்துக்கு ஏன் ஆசைப்படுறீங்க? அப்படியிருந்தும் என் அப்பா என் பேரில் சில சொத்துக்களை எழுதி வச்சார்... அதிலிருந்து வரும் வாடகை பணத்தில் தான் உங்க அப்பா, அம்மாவுக்குச் செலவுக்குப் பணம் அனுப்பிக்கிட்டு இருக்கேன். நம்ம வீட்டு செலவும் அதில் தான் ஓடுது. உங்க சம்பளம் முழுவதும் சேமிப்பில் தான் முடங்குது... இதெல்லாம் உங்களுக்குத் தெரியுமா... தெரியாதா?”

அவள் சொன்ன செய்தி அவனுக்குப் புதிதாய் இருந்தது. மாத சம்பளத்தில் தான் மட்டும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்க மாமனார் வீட்டில் சுகமாய் இருக்கிறார்களே என்ற குமுறல் தான் அவனைக் கெட்ட வழியில் போகத் தூண்டியது. மனைவியின் கேள்விக்குத் தெரியாது என்பது போல் மறுப்பாய் தலையாட்டியவன்,

“எனக்கு என்ன தெரியும் கவி... நான் தான் சம்பளம் வாங்கிய உடன் உன் கையில் கொடுத்திருவேனே...” பாவமாய்ச் சொன்னவனைக் கண்டு பரிதாபமாய் இருந்தது அவளுக்கு. அதிலெல்லாம் அவன் நல்லவன் தான்.

“நான் உங்களை ஒண்ணு கேட்கிறேன்... உண்மையா பதில் சொல்லுங்க...” கண்ணீரை துடைத்துக் கொண்டு அவனைப் பார்த்து அவள் கேட்க,

“கேளு கவி...”

“கதிரே இந்தளவுக்கு மாறி தொழிலை கவனிக்கும் போது... உங்களுக்கு என்னங்க குறை... நீங்க ஏன் புதுசாய் தொழில் தொடங்க கூடாது?”

“கவி...” அவளின் கேள்வியில் அவனின் கண்கள் ஆச்சிரியத்தில் விரிந்தது.

“அவனை விடவா நீங்க திறமையில் குறைந்தவர்... உங்க கிட்ட இல்லாத திறமையா?உங்களால சம்பாதிக்க முடியாத பணமா?” அவள் பேச பேச அவனின் மனம் பாகாய் உருகியது. கட்டிய மனைவி தன்னைப் பார்த்து திறமையானவன் என்று சொல்லி கேட்பதை விட ஒரு ஆண் மகனுக்கு வேறு என்ன வேண்டும்...

“கவி... என்னைப் புரிஞ்சிக்கிட்டதுக்குத் தேங்க்ஸ்...” என்றவன் மீண்டும் அவளை அணைத்துக் கொண்டான்.

“நீ சொன்ன மாதிரி நான் தொழில் ஆரம்பிக்கலாம்ன்னு முடிவு பண்ணியிருக்கேன்...” அவனின் வார்த்தையில் அவள் மனம் சந்தோசமடைந்தது.

“நான் வேணா கதிர் கிட்ட சொல்லி பணம் வாங்கிக் கொடுக்கவா?” அவள் கேட்க... அவன் மறுப்பாய் தலையசைத்தவன்,

“வேணாம் கவி... என் சொந்த முயற்சியில் நான் முன்னேறணும்ன்னு நினைக்கிறேன்...” என்றவனைக்

காதலுடன் பார்த்தாள் கவிதா.

“இப்போ தான் என் சத்யா...” என்றவள் இன்னமும் அழுந்த அவன் நெஞ்சில் முகம் புதைத்துக் கொள்ள...

“உன் சத்யாவே தான்...” என்றவன், “உன் சத்யாவின் திறமையைக் கொஞ்சம் பார்க்கிறாயா?” என்றவனைப் புரியாமல் நிமிர்ந்து பார்த்தவள் இதழின் மேல் அவனின் இதழ் முற்றுகையிட... அவள் மயங்கி போய் அவனிடத்தில் தன்னை ஒப்பு கொடுத்தாள்.

****

காரை ஓட்டி கொண்டிருந்த கதிரின் கண்ணில் புதிதாய்த் திறக்கப்பட்டிருந்த அந்த நகைக்கடை தென்பட, எல்லோரும் அதைப் புகழ்வதைக் கண்டு அங்குச் செல்லலாம் என்று முடிவு செய்தான்.

‘மாமாவை மாற்றிய அக்காவிற்கு ஏதாவது கிப்ட் கொடுக்கணுமே... நகையா வாங்கிக் கொடுத்தால் அக்கா சந்தோசப்படுவாங்க...’ என்று நினைத்தவன் அந்தக் கடையின் முன் காரை நிறுத்திவிட்டு இறங்கினான்.

கவிதா மூலம் சத்யனின் மனமாற்றத்தை அறிந்தவனுக்கு அது பெருத்த நிம்மதியை அளித்தது. தானும் இன்னும் கொஞ்சம் முன்னேறியதும் அக்காவிற்கு என்று ஏதேனும் பெரியதாய்ச் செய்ய வேண்டும் என்று மனதில் குறித்து வைத்துக் கொண்டான். அதற்கு முன் சிறிய அளவில் செய்வதற்குத் தான் நகைக்கடைக்கு வந்தான்.

உள்ளே வந்தவனைக் கடை சிப்பந்திகள் உட்கார வைத்து, நகைகளைக் காண்பிக்க அதில் அவனுக்குத் திருப்தியில்லாமல் வைர நகைகளைக் காட்டுமாறு சொன்னான்.

“வைர நகைகள் எல்லாம் மாடியில் இருக்கு சார்... நீங்க வாங்க...” என்று அவனை மாடிக்கு அழைத்துச் சென்ற கடை சிப்பந்தி அங்கிருந்த நகைகளைக் காண்பிக்க அதில் திருப்தியுற்றவன் அடுக்கடுக்காய் வைரங்கள்

பதிக்கப்பட்டு அதன் நடுவே மரகதப் பச்சை கல் ஒளிர இருந்த அந்தக் கழுத்தணி அவனுக்கு மிகவும் பிடித்துப் போய் விட அதைப் பில் போட சொன்னான்.

“கொஞ்சம் இருங்க சார்... இதன் விலையை மேடம் தான் சொல்லணும்... அவங்களைக் கூட்டிட்டு வர்றேன்...” என்றவன் உள்ளே செல்ல... கதிர் கடையைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தான்.

அப்போது அங்கே வந்து கொண்டிருந்த மதியை கண்டதும், “ஹேய் மதி நீ எங்கே இங்கே?” முகம் நிறையப் புன்னகையுடன் அவளைப் பார்த்தான். அவனைக் கண்டதும் மதியின் முகம் பேயறைந்தது போலானது.

“சார்... இவங்க தான் எங்க மேடம்...” மதியை சுட்டிக் காட்டி சொன்ன அந்த வேலைக்காரன் அங்கிருந்து நகர... கதிரின் பார்வை கூர்மையுடன் அவளை அளவிட்டது. அவன் கனவில் அடிக்கடி தோன்றும் மதியாய் நவநாகரீக மங்கையாய் நின்றிருந்தவளை மேலும் கீழும் அளவிடுவது போல் பார்த்தவனின் முகம் யோசனையில் சுருங்கியது. கொஞ்சம் கொஞ்சமாய் மதியின் உண்மை நிலை அவனின் மனதில் உறைக்க... அவனின் முகம் கோபத்தில் கல் போல் இறுகியது.

“ஆக நான் கனவில் கண்ட முகம் பொய்யில்லை... மெய் அப்படித்தானே...” அவளருகே வேகமாய் வந்தவன் அவள் கண்ணுக்குள் உற்று பார்த்து கேட்க... அதில் தன் திகைப்பில் இருந்து மீண்டவள் என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் அவனின் முகத்தைப் பாவமாய்ப் பார்த்தாள்.

“அப்போ மாமா சொன்னதும் பொய்யில்லை... மெய் அப்படித்தானே...” அவளின் தோளை உலுக்கியவன், “எல்லாம் மெய்யாய் இருக்க நீ மட்டும் எப்படிப் பொய்த்து போனாய் மதி?” அவனின் கேள்விக்கு அவளிடத்தில் பதிலில்லை.

“கதிர்... நான்...” பயத்தில் அவளுக்குத் தொண்டை வறண்டது.

“ச்சீ... மேலும் மேலும் பொய் சொல்ல நினைக்காதே...” அவளைப் பிடித்திருந்த தோளை பட்டென்று விடுவித்தவன், “உண்மையில் நீ யார்...? எதற்குப் பொய் சொல்லி என் வாழ்க்கையில் நுழைந்தாய்?” அவளுக்கு மட்டுமே கேட்கும் குரலில் அடக்கப்பட்ட கோபத்தில் கர்ஜித்தவனைக் கண்டு அச்சத்தில் முகம் வெளுக்க, தேகம் நடுங்க அவனைப் பயத்துடன் பார்த்தபடி நின்றிருந்தாள் அவள்.

கதிர் தன்னைக் காதலிக்கும் முன் எந்தச் சூழ்நிலை வரவே கூடாது என்று அறவே வெறுத்தாளோ... அந்தச் சூழ்நிலை வந்துவிட்டதை எண்ணி மனதுக்குள் கலங்கி தான் போனாள் மதி.

மெய் என்றால் நீ... உணர்ந்தேன் அன்று!
பொய் என்றால் நீ... உணர்ந்தேன் இன்று!
உயிர் மூச்சாய் எனை உயிர்த்தாய் அன்று...!
உயிர் வாங்கும் நோயாய் எனை கொன்றாய் இன்று!!!

நாளை : 10

கதிர் தன் கண்களைச் சுழற்றி அந்தக் கடையை நோட்டமிட்டான். மாடியிலிருந்த அந்தப் பகுதியே அவ்வளவு பெரியதாக இருந்தது. அதிலிருந்த வைர நகைகளின் மதிப்பு மட்டுமே சில, பல கோடிகளைத் தாண்டும். சென்னையில் இருக்கும் இந்தக் கடையின் மதிப்பே கணக்கிட முடியாது என்றால்... ஆந்திராவில் பல இடங்களில் இருக்கும் கடைகளின் மதிப்பு எல்லாம் சேர்த்து கணக்கிட்டு பார்த்த போது மதியின் உயரம் எத்தகையது? என்று அவனுக்கு நன்கு புரிந்தது. ஏனெனில் அவர்களின் கடைகளின் விபரத்தை அவனும் கேள்விப்பட்டிருந்தான். ஆனால் அதன் உரிமையாளர் மதியாய் இருப்பாள் என்று அவன் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

அவனின் எண்ணம் மதியிடம் தாவியதும் கடையை அளவிட்டு கொண்டிருந்தவனின் கண்கள் அவள் மீது படிந்து நிலைத்து நின்றது. அவனால் மதியின் குணத்தைக் குறைத்து மதிப்பு போட முடியவில்லை. அவள் இல்லையென்றால் கதிர் என்ற தொழிலதிபன் இன்று இல்லை. அவனை முன்னேற்ற அவள் எந்தளவுக்கு மெனக்கிட்டு இருக்கிறாள், பாடுபட்டிருக்கிறாள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாய் அவனுக்குத் தெரியும். ஆனால் அவள் ஏன் தன்னைப் பற்றிய உண்மைகளை மறைத்துக் கொண்டு சாதாரணப் பெண்ணாய் வந்து உதவி செய்தாள்? அதுவும் மூர்த்தியின் மகளாய்... அது தான் அவனுக்கு மிகுந்த குழப்பமாய் இருந்தது. என்னயிருந்தாலும் அவள் அவனுக்குக் கெடுதல் நினைக்கவில்லை... மாறாக எதற்கும் உபயோகம் இல்லாமல் தறுதலையாய் சுற்றி திரிந்த அவனைச் சமுதாயத்தில் உயந்த அந்தஸ்தில் நிறுத்தி இருக்கிறாள் என்றால் அது மிகையில்லை. அதை அவனின் மனம் ஒப்புக் கொள்ளத் தான் செய்தது. அதுவரை அவன் மனதிலிருந்த கோபம் கொஞ்சம் குறைந்தது.

“மதி நீ யார்ன்னு சொல்லு?ஏன் இப்படிச் செய்தே? இதெல்லாம் தெரியாமல் எனக்குத் தலையே வெடிச்சிடும் போலிருக்கு? ப்ளீஸ் மதி...” அவனின் கெஞ்சலில் மதியின் கண்களில் கண்ணீர் வழிந்தது.

“பாவா... நா... நான்....” மேலே என்ன சொல்வது என்று தெரியாமல் அவனின் முகத்தைப் பார்த்தவளின் கண்களில் கண்ணீர் மட்டும் நிற்கவில்லை.

“பாவா...வா...?” தாடையைத் தடவி கொண்டே அவன் குழப்பமாய் அவளைப் பார்த்தான். அவளின் இந்த அழைப்புக்கான அர்த்தம் அவனுக்குச் சுத்தமாய்ப் புரியவில்லை. ஆனாலும் அவள் ஏன் தன்னை அப்படி அழைக்கிறாள்? அவன் மனதுக்குள் குழம்பி கொண்டிருந்த போது ஆதர்ஷ் அங்கே வந்தான்.

கதிரும் மதியும் பேசி கொண்டிருப்பதைக் கண்டு அங்கு வந்தவன் கண்ணில்... வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஊழியர்கள் பட்டனர். இரவு நேரம் என்பதால் கடையில் அவ்வளவாய் கூட்டமில்லை. அதிலும் இந்த வைர நகை பகுதியில் ஆட்கள் சுத்தமாய் இல்லை. ஆங்காங்கு நின்று கொண்டிருந்த ஊழியர்களை ஒரு பார்வையில் வெளியேற்றியவன்,

“மேம்... ஏதும் பிரச்சினையா?” வேகமாய் அவளருகில் வந்தான். அருகில் வந்த ஆதர்ஷின் கண்களில் அவளின் அழுத விழிகள் பட... பதற்றத்துடன்,

“அம்மு... என்னடா ஆச்சு?ஏன் அழற?” அவளின் அழுத விழிகளைப் பரிவுடன் துடைத்து விட்டவன் அவளைத் தன் தோளோடு சாய்த்துக் கொண்டான்.

மதி சிறுவயதில் அழுது பார்த்தது. அதன் பின் அவள் அழுது அவன் அவ்வளவாய் பார்த்ததில்லை. இன்று அவளின் அழுகை காணவும் அவனுக்குள் இருந்த அவளின் சிறுவயது தோழன், காவலன் ஆது... சுற்றுப்புற சூழ்நிலை மறந்து சட்டென்று வெளிப்பட்டு விட்டான். என்ன செய்வது? என்று தெரியாமல் முழித்துக்

கொண்டிருந்த மதியும் அவனின் தோளில் சாய்ந்து அழ ஆரம்பித்தாள்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த கதிர் தன் மனதில் ஏதோ வெற்றிடம் தோன்றுவதை உணர்ந்தான். ஆனால் அதை என்னவென்று ஆராய அவன் முற்படவில்லை. அவன் ஆதர்ஷ் பேசிய வார்த்தைகளை யோசித்துக் கொண்டிருந்தான். 'மேம்' என்றழைத்தவன் அவளின் கண்ணீரை பார்த்ததும் 'அம்மு' என்றழைத்து ஆறுதல் படுத்தி அணைத்தது, அதிலும் மதி அவன் தோளில் சாய்ந்தது எல்லாம் அவனின் மனதில் வேறு சிந்தனையை ஏற்படுத்தியது.

'இவன் வேலைக்காரானா?இல்லை வீட்டுக்காரனா?' கண்கள் இடுங்க இருவரையும் கூர்மையாகப் பார்த்தான் கதிர். அவனுக்கு எங்கே தெரிய போகுது... இவர்களின் நட்பை பற்றி?

"என்னுடைய கொள்கையில் இதுவும் ஒண்ணு... சிலது எனக்கு வரப் போறவருக்கு மட்டுமே..." அசந்தர்ப்பமாய் அவனின் காதில் மதி கூறிய வார்த்தைகள் ஒலித்தது. அது நினைவில் வந்ததும் அவனின் மனம் இரும்பாய் இறுகியது. அவனின் முகம் பழையபடி கல் போல் கடினமானது.

"மதி நான் உன் கூடப் பேசியே ஆகணும்... இப்பவே என் கூட வா?" ஆதர்ஷ் முன் அவன் தன் உரிமையை நிலைநாட்ட முயன்றான். அவன் ஏன் அப்படிச் செய்கிறான்? என்று அவனுக்கு விளங்கவே இல்லை.

"மிஸ்டர்... இப்போ மணி எத்தனை தெரியுமா...? இந்த நேரத்தில் அவளை உன்னுடன் அனுப்ப முடியாது. எதுவாயிருந்தாலும் காலையில் பேசிக்கோங்க..." மதிக்கு பதிலாய் ஆதர்ஷ் பதில் சொல்லவும் கதிரின் கோபம் உச்சிக்கு ஏறியது. இதையெல்லாம் உணரும் நிலையில் மதி இல்லை. அவள் தனக்குள் கரைந்து கொண்டிருந்தாள்.

“எந்தக் காலத்தில் இருக்கீங்க மிஸ்டர்... நைட்ல மட்டும் தான் தப்பு நடக்குமா?ஏன் பகலில் நடக்காதா?” ஆதர்ஷின் பேச்சு கதிரின் மற்ற பக்கத்தை அவனுக்குத் தெளிவாய் எடுத்துரைப்பது போலிருக்க... கதிருக்குக் கோபம் வந்துவிட்டது. அதான் ஆதர்ஷை பார்த்து அப்படியொரு கேள்வியைக் கேட்டான்.

கதிரின் அருவருப்பான பேச்சில் ஆத்திரமடைந்த ஆதர்ஷ், “ஏய்...” ஆள்காட்டி விரலால் எச்சரிக்கை செய்தபடி கதிரின் சட்டையைப் பிடிக்க வர... ஆதர்ஷின் குரலில், அசைவில் மதி சுற்றுப்புறம் உணர்ந்தவள்... அவசரமாய் ஆதர்ஷின் கையைப் பிடித்துத் தடுத்தாள்.

“ஆது... ப்ளீஸ் எனக்காக...” அவளின் கெஞ்சலில் ஆதர்ஷ் தன் கைகளைக் கீழிறக்கினான். ஆனாலும் கதிரை முறைத்து பார்க்க தவறவில்லை. மதி தன்னிடம் பேசாமல் ஆதர்ஷிடம் மட்டும் பேசுவது கதிருக்கு எரிச்சலாய் வந்தது.

‘நான் ஒருத்தன் குத்துக் கல்லாட்டம் இங்கே இருக்கேன்... என்னை இவள் கண்ணுக்கு தெரியுதா?’ மனதுக்குள் பொருமியவன்,

“மதி... என் கேள்விக்கு இன்னமும் பதில் சொல்லல...” அவளின் கவனத்தைத் தன் பக்கம் திருப்ப நினைத்தான் கதிர்.

“நாளைக்கு ஆபிசில் வந்து பார்க்கிறேன்...” அவள் இறைஞ்சலுடன் சொல்ல... அதை ஏற்றுக் கொள்ளவும் முடியாமல், அதை மீறவும் முடியாமல் கோபத்தில் சிறுபிள்ளை போல் தன் வலது காலை தரையில் ஓங்கி உதைத்தவன் வேகமாய் அங்கிருந்து அகன்றான். அவன் போவதை ஏக்கமாய்ப் பார்த்து கொண்டிருந்தாள் அவள்.

“மதி... நல்லா யோசிச்சுக்கோ... இந்த மாதிரி அசிங்கமாய்ப் பேசுபவன் உனக்கு வேணுமா?என்னை கேட்டால் இவன் உனக்கு ஒரு சதவீதம் கூடப் பொருத்தமில்லை... இவன் உனக்கு வேண்டாம் அம்மு...

உனக்கேத்த ராஜகுமாரனா நாங்க தேடி தர்றோம்” கோபமாய் ஆரம்பித்த ஆதர்ஷ் உருக்கமாய் முடித்தான்.

“எனக்கு என் பாவா தான் ராஜகுமாரன்... ஆது...” கண்ணீரை துடைத்துக் கொண்டே சொன்னவளை பார்க்க பாவமாய் இருந்தது அவனுக்கு. மதியின் இந்தப் பிடிவாதம் எதில் கொண்டு போய் முடியுமோ? என்று அவனுக்குப் பயமாய் இருந்தது. ஆனால் அதை அவன் அவளிடம் சொல்லவில்லை.

நாளை கதிரை எப்படிச் சமாளிக்கப் போகிறோம் என்ற நினைவில் அன்றைய இரவு அவளுக்குத் தூங்கா இரவாகி போனது. அங்கோ அவனின் நிலையோ அதை விடப் பரிதாபமாய் இருந்தது. மதி ஏன் தன்னிடம் பொய் சொன்னாள்? என்ற கேள்வியை விட... அவள் தன்னை விட ஆதர்ஷிடம் காட்டிய நெருக்கம் தான் அவனுக்கு நெருடலாக இருந்தது. அந்த நெருடல் எதனால் என்று அவன் யோசிக்கவில்லை? ஆனால் அவர்களின் நெருக்கம் மட்டும் அவனுக்குப் பிடிக்கவில்லை... அதை மட்டும் நன்கு உணர்ந்தான். அவன் அவளை இன்னமும் தோழியாய் தான் நினைத்தான். காதல் என்ற வார்த்தையே அவனின் அகராதியில் தான் கிடையாதே... காதலில் மட்டுமல்ல நட்பிலும் இந்த மாதிரி தான் பழகும் நபர் தனக்கு மட்டுமே சொந்தம் என்று உரிமை கொண்டாடுவது உண்டு. அதனால் அவன் இது நட்பு என்பதில் மிகத் தெளிவாய் இருந்தான்.

மறுநாளின் பொழுது இருவருக்குமே குழப்பமாய் விடிந்தது. கதிர் அவளை விட முன்னதாக அலுவலகம் வந்துவிட்டான். ஆனால் உள்ளே செல்லாமல் கார் நிறுத்துமிடத்தில் நின்று கொண்டிருந்தவன் அவளின் வரவுக்காய் காத்துக் கொண்டிருந்தான். சிறிது நேரத்தில் ஆதர்ஷ் காரை ஓட்டி கொண்டு வர... அதிலிருந்து இறங்கிய மதியை கண்ணிமைக்காமல் பார்த்தான் கதிர். சத்யன் சொன்னது போல் அந்தக் காரின் விலையே கோடி பெறும். அதைக் கண்டு கொண்டவனின் முகம் இறுகி

தான் போனது. தன்னருகில் வந்து நின்ற மதியை பார்த்தவன்,

“நான் உன்னிடம் தனியா பேசணும்... இங்கே வேணாம்... வேற எங்கேயாவது போகலாமா?” அவன் கேட்க... அவள் தலை சம்மதமாய் அசைந்தது. அவனும் ஒன்றும் பேசாமல் காரிலேறி ஓட்டுனர் இருக்கையில் அமர, அவள் மறுப்பக்கம் ஏறியதும் கார் சாலையில் சீறிப் பாய்ந்தது. அலுவலகத்துக்குள் செல்லாமல் வெளியில் சென்ற இருவரையும் பார்த்த ஆதர்ஷுக்கு மனதில் ஏதோ தவறாகத் தோன்ற அவர்களைக் கொஞ்சம் இடைவெளி விட்டுப் பின் தொடர்ந்தான்.

கதிர் தான் எப்போதும் பெண்களுடன் வந்தால் தங்கும் நண்பனின் விருந்தினர் இல்லத்துக்கு அவளைக் கூட்டிக் கொண்டு வந்தான். ஏனெனில் தங்களது இடங்களில் இந்த மாதிரி அந்தரங்கம் அரங்கேறினால் அது தன் பெற்றோருக்கு தெரிய வரும் என்பதால் அவன் இங்குத் தான் அடிக்கடி வருவான். கிட்டத்தட்ட ஏழெட்டு மாதங்களுக்கு அப்புறம் இன்று தான் மதியை அழைத்துக் கொண்டு இங்கே வந்திருக்கிறான். அதை மட்டும் மதி அறிந்தால் உயிரோடு செத்து போவாள். பத்தோடு பதினொன்றாகத் தன்னை அவன் நினைத்து விட்டானே என்று உள்ளம் குமுறி போவாள். நல்லவேளை யார் செய்த அதிர்ஷ்டமோ அவளுக்கு அது தெரியவில்லை.

“இப்போதாவது நீ யார்ன்னு சொல்லு?” கதிர் கேட்ட கேள்விக்கு உண்மையைச் சொல்லலாமா?இல்லை வேறு ஏதும் கூறி சமாளிக்கலாமா? என்று ஒரு நிமிடம் யோசித்தவள்... பின்பு உண்மையைச் சொல்வதே மேல் என்றெண்ணி,

“நான்... உங்க அம்மா உங்களுக்காகப் பார்த்து வைத்த பெண்...” அவனின் கண்களை நேருக்கு நேராய் சந்தித்து அழுத்தம் திருத்தமாய்ச் சொன்னவளை அவன் புரியாமல் பார்த்தான்.

“என்னது...? என்ன சொன்ன?” அவள் சொன்னதின் அர்த்தத்தை அவனின் மூளை ஏற்றுக் கொள்ள மறுத்தது.

“உங்களுக்காக உங்க அம்மா பார்த்து வைத்த பெண் நான்... என்னோட ஊரு ஹைதராபாத்...” தெளிவாய் சொன்னவளின் பதிலில் அதிர்ந்து போனவன் தன் ஆற்றல் எல்லாம் வடிந்தார் போல் அங்கிருந்த சோபாவில் தொபென்று அமர்ந்தான்.

“அப்போ நீ... நீ...” அவனின் குரல் மட்டுமல்ல அவனின் தேகமும் ஆத்திரத்தில் நடுங்கியது. அது எதனால் என்பதை அவன் நன்கு அறிவானே... அது அவளின் அண்ணன் பேசிய வார்த்தைகளின் தாக்கத்தால் என்பதை அவனின் உள்ளம் அறியுமே.

“நல்லவேளை என் தங்கை தப்பித்தாள்... உன்னை மாதிரி திறமையில்லாத ஒருவனைக் கல்யாணம் பண்ணுவதற்குப் பதில் கல்யாணமே பண்ணாமல் இருப்பது எவ்வளவோ மேல்... உன் தொழில் நிலைமை உனக்குத் தெரியுமா?உன் அப்பா இல்லாமல் இந்த இருபது நாளில் அது எந்தளவுக்குச் சரிந்து கொண்டிருக்கிறது என்பதை நீ அறிவாயா? உன்னை மாதிரி ஒண்ணுமில்லாதவனைக் கல்யாணம் பண்ண என் தங்கச்சிக்கு விருப்பமில்லை... அவள் விருப்பத்துக்கு மாறாய் நாங்க நடப்பதும் இல்லை...” அவனின் வார்த்தைகள் மீண்டும் மீண்டும் கதிரின் காதில் ஒலிக்க... கதிரின் முகத்தில் வேதனையின் சாயல் படர அவன் தன் இரு காதுகளையும் இறுக மூடி கொண்டான்.

“பாவா...” அவன் முன் மண்டியிட்டு அமர்ந்தவள்... அவனின் கையைப் பிடித்துக் கொண்டு, “என்னாச்சு பாவா?ஆர் யூ ஆல்ரைட்...?” பதற்றத்துடன் வினவியவளை குரோதத்துடன் பார்த்தது அவனது விழிகள்.

அர்விந்த் பேசிய வார்த்தைகள் ஒவ்வொன்றும் அவனின் தன் மானத்தைச் சீண்டி விட்டதை அவனால் மறக்க முயலவில்லை. உயிர் இருக்கும் வரை அவன் அதை

மறக்க மாட்டான். ஏனெனில் அந்த வார்த்தைகள் கொடுத்த வலி, ரணம் இன்னமும் மாறாமல் அவன் நெஞ்சில் ஆறாமல் அப்படியே இருக்கிறது. அதன் முன் மதியின் அன்பு ஒன்றுமில்லாததாய்ப் போய்விட்டது தான் கொடுமை.பெண் என்பவள் அன்புக்கு அடி பணிவாள்... அடங்கிப் போவாள். ஆனால் ஆண் யாருக்கும் அடங்காமல் கம்பீரமாய் வலம் வர வேண்டும் என்று நினைப்பவன்... அப்படிப்பட்ட கதிரின் நினைவில் அர்விந்த் பேசிய வார்த்தைகள் அவனை மிகவும் கேவலப் படுத்திவிட்டது.அவையெல்லாம் ஒன்று சேர்ந்து மதியின் மேல் பாய்ந்தது.

“ச்சீ... என் கண் முன்னால் நிற்காதே... முதல்ல இங்கிருந்து போய் விடு... போ...” அவளின் அருகாமையை விரும்பாதவனாய் சோபாவில் இருந்து எழுந்தவன் வேறு பக்கம் திரும்பி நின்றான். அவனிடத்தில் முரட்டுத்தனமும், முன் கோபமும் நிறைந்த பழைய கதிர் திரும்பியிருந்தான்.

“பாவா நான் பண்ணியது தப்பு தான். நான் யார்ன்னு சொல்லாமல் உங்க கூடப் பழகியது தப்பு தான்... ஆனா நான் எதுக்கு இதெல்லாம் செஞ்சேன்னு கொஞ்சம் யோசிச்சு பாருங்க...” அன்று தன் வீட்டில் நடந்ததை எல்லாம் அவனிடத்தில் அவள் சொல்ல... அவனின் முகம் இன்னமும் அதிகமாய்க் கோபத்தைத் தத்தெடுத்தது.

“உன் அண்ணன் என்னைக் கேவலமா பேசுவான்... அப்புறம் உன்னைப் பெத்தவங்க... அதுக்கப்புறம் நேத்து உன் கூட இருந்தானே அவன்... இப்படி எல்லோரும் என்னை அசிங்கமா, கேவலமா பேசுவீங்க... அதைக் கேட்டுட்டு நான் சும்மாயிருக்கணுமா?” அவன் மேலே பேசும் முன் அவள் குறுக்கிட்டு,

“அர்வி பேசியதுக்கு உங்க கிட்ட நான் மன்னிப்புக் கேட்டுக்கிறேன்... ப்ளீஸ் எனக்காகப் பாவா...” அவளையோ, அவளின் காதலையோ கொஞ்சமும் உணராதவனிடத்தில் போய் அவள் ‘எனக்காக...’ என்றால் அது அவனுக்குப் புரியுமா?

“உனக்காக நான் ஏன் பொறுத்துக்கணும்?நீ யார் எனக்கு? நீயா என் வாழ்கையில் நுழைந்ததுக்கு நான் எல்லாத்தையும் கேட்டுட்டு அமைதியா புத்தன் போலிருக்கணுமா? நான் கேட்டேனா... இல்ல உன்னை நான் கேட்டேனா...? என்னைத் திருத்தி நல்லவனாக்குன்னு நான் உன் கிட்ட வந்து சொன்னேனா?” அவன் கோபத்தில் என்ன பேசுகிறோம் என்று தெரியாமல் கத்தினான்.

“ஏன்னா... நான் உங்களைக் காதலிக்கிறேன் பாவா... அதனால தான் வீட்டில் உள்ளவங்களை எதிர்த்திட்டு உங்களுக்காக இங்கே வந்தேன்... அந்தளவுக்கு உயிர்க்கு உயிராய் உங்களை நேசிக்கிறேன் பாவா...” அவளின் காதல் வார்த்தைகள் அவனின் செவியில் விழுந்ததாய் தெரியவில்லை. அவள் பேசியதை கேட்டு அவன் வாய்விட்டுச் சிரித்தான்.

“காதல்...? அதுவும் உனக்கு என் மேல் காதல்...?” ஏதோ நகைச்சுவை கேட்டது போல் விழுந்து விழுந்து சிரித்தவனைக் கண்டு... அவளது கண்கள் அச்சத்தில் விரிந்தது.

“உங்களுக்காக மட்டுமே வாழ நினைக்கும் என் மனசு காதல் இல்லாமல் வேறு என்ன பாவா?” அவனின் பேச்சில், செயலில் அவளுக்குக் கண்கள் கரித்தது.

“பின்னே இதுக்குப் பெயரா காதல்?வசதியில்லாதவனைக் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு சொன்னவ... இப்போ மட்டும் எதுக்கு வந்த? திறமையில்லாதவன்னு தட்டி கழிச்சவனைத் தேடி ஏன் வந்த? எதுக்கு வந்தன்னு நான் சொல்லட்டுமா? உனக்கு நான் வேண்டாம்... இந்தக் கே.கே இன்டஸ்ட்ரி வேணும்... இந்தப் பணம் வேணும்... இந்த வீட்டு மருமகள்ங்கிற பேர் வேணும்... இது தானே உன் ஆசை. பின்னே நீ சொல்றது எல்லாம் நம்பும்படியாவா இருக்கு? கெட்டவன், பொம்பளை பொறுக்கின்னு தெரிஞ்சும் நான் தான் வேணும்ன்னு நீ வந்ததுக்குக் காரணம் நானில்லை... என் பணம், புகழ்

எல்லாம் தான் காரணம். எந்த நல்ல பெண்ணாவது இப்படியொரு அபத்தமான முடிவு எடுப்பாளா? இதிலிருந்தே தெரியல... நீ எப்படிப் பட்டவள்ன்னு?” வார்த்தைக்கு வார்த்தை கத்தியை வீசி வலிக்கச் செய்தவனைப் பார்த்து,

“பாவா... ப்ளீஸ்...” அவனின் வார்த்தைகள் தந்த வலியில் அவள் உடைந்து போனாள்.

“என்னடி ப்ளீஸ்... நான் அப்படித்தான் பேசுவேன்... காதலாம், கத்திரிக்காயாம்... இதைக் கேனையன் வேற யார்கிட்டேயாவது போய்ச் சொல்லு... உன் அண்ணன் பேசிய பேச்சுக்கு உன்னை...” அவளின் கழுத்தை நெறிப்பது போல் கையைக் கொண்டு போனவன், “ச்சே...” என்று வெறுப்பாய் கையைக் கீழே போட்டான்.

“அன்னைக்கே உன் அண்ணன் கிட்ட சொன்னேனே... உன் தங்கச்சியே என்னைத் தேடி வந்து... காலில் விழுந்து கெஞ்சினாலும் அவள் எனக்கு வேணாம்ன்னு... அதைத் தான் உன் கிட்டேயும் நான் சொல்ல போறேன்... போடி... நீயே என் காலில் விழுந்து கெஞ்சினாலும் நீ எனக்கு வேணாம்... உன்னை விட்டால் உலகத்தில் பெண்களுக்கா பஞ்சம்...” அவளைப் பார்த்து அலட்சியமாய்ச் சொன்னான்.

“பாவா... கொஞ்சம் கூடவா என் காதலை நீங்க உணரல... நல்லா யோசிச்சு பாருங்க... என்னைக்காவது நான் உங்களுக்குக் கெடுதல் நினைச்சு இருக்கேனா?” அவளின் கேள்விக்கான விடையைத் தேடும் மனநிலையில் அவன் இல்லை. அவனின் கைகள் அலைப்பேசியை எடுத்து யாருக்கோ அழைத்தது.

“யா... மோகினி... கதிர் தான்... உடனே கிளம்பி இங்கே வா... ஆமாம்... வழக்கமாய்ச் சந்திக்கும் இடம் தான்...” அவனின் வார்த்தைகளைக் கோர்வையாக்கி அர்த்தம் புரிந்த மதி பதறினாள்.

“ப்ளீஸ் பாவா... என் மேலுள்ள கோபத்தில், ஆத்திரத்தில் அறிவிழந்து போய் முட்டாள்த்தனமா நடந்துக்காதீங்க... இந்தப் பழக்கம் எல்லாம் வேணாம் பாவா... சொன்னா கேளுங்க...” அவனின் கையைப் பிடித்துக் கொண்டு கெஞ்சியவளின் கையைப் பிடித்துத் தரதரவென இழுத்து வந்து வீட்டிற்கு வெளியில் தள்ளியவன்... கீழே பொத்தென்று விழுந்த அவளைப் பார்த்து ஆள்காட்டி விரலை நீட்டி,

“பொண்ணு பேசி முடிச்சிட்டா தாலி கட்டியதா நினைப்பா உனக்கு?நீ என்ன என் பொண்டாட்டியா? அட்வைஸ் எல்லாம் பண்ற... நீ யார் எனக்கு அட்வைஸ் பண்ண...? உன் எல்லை இது தான்...” வீட்டின் வாயிலை சுட்டி காட்டியவன், “இதைத் தாண்டி உள்ளே வர முயற்சிக்காதே... என்னைப் பார்த்துக்க எனக்குத் தெரியும்... தொழில் வேற... இது வேறன்னு பிரிச்சு பார்க்க எனக்குத் தெரியும்... இனி மேல் உன் உதவி எனக்குத் தேவையில்லை... என் கேர்ள் பிரெண்ட் வர்றதுக்கு முந்தி இடத்தைக் காலி பண்ணு...” தயவுதாட்சண்யம் இல்லாமல் சொன்னவனைக் கண்டு உறைந்து போயிருந்தவளின் மூளை வேலை செய்ய மறுத்தது. அந்தளவுக்கு அவளின் மனம் அவனின் வார்த்தையில் அடிப்பட்டு மரத்துப் போயிருந்தது.

அவள் போகும் வழி தெரியாததால் ஆங்காரமாய்க் கதவை மூட போனவன் பின் நின்று நிதானித்து, “ஆனாலும் உனக்கு நான் தேங்க்ஸ் சொல்லிக்கணும்... உன் உதவிக்கு நன்றி... நன்றி...” நமட்டு சிரிப்புடன் பேசியவனின் பேச்சு நன்றி சொல்லும் விதமாய் இல்லை. அதன் பின் ஒரு நொடி கூடத் தாமதிக்காமல் கதவை பட்டென்று மூடிக் கொண்டு அவன் உள்ளே சென்றுவிட்டான்.

அர்விந்த் பேசிய வார்த்தைகளால் உண்டான கோபம், வலி, ஆங்காரம்... ஆதர்ஷிடம் அவள் காட்டிய நெருக்கத்தால் உண்டான ஏமாற்றம் எல்லாவற்றையும் மதியிடம் காண்பித்த கதிர் ஒன்றை மட்டும்

உணரவில்லை... அவனுக்குத் தனிப்பட்ட முறையில் மதியின் மேல் எந்தவித கோபமும் இல்லையென்று... அதை அவன் அறியும் போது... அவளின் மாசற்ற காதலை அவன் உணரும் போது... காலம் அவனுக்காய் காத்திருக்குமா??????

உனக்காகத் துடிக்கும் என் இதயம்...
உனக்காக வாழும் என் உயிர்...
உனக்காக நான்... உணராமல் நீ...!!!

தொடரும்...!!!

நாளை : 11

விருந்தினர் இல்லத்தின் வெளியே காரில் காத்திருந்த ஆதர்ஷுக்கு அதற்கு மேல் காத்திருக்கப் பொறுமை இல்லை. மதியும், கதிரும் உள்ளே சென்று அரைமணி நேரமாயிற்று. இன்னமும் இருவரும் வெளியில் வந்த பாடாய் இல்லை. அவனின் மனதினுள் ஒருவித பயம் அழுத்த காரிலிருந்து இறங்கியவன் அந்த வீட்டை நோக்கி சென்றான். ஏனெனில் அவனுக்குக் கதிரின் கோபமும் தெரியும், மதியின் சுபாவமும் தெரியும். உள்ளே செல்ல முயன்றவனை அங்கிருந்த காவலாளி தடுத்து நிறுத்தினான். அங்கே அடிக்கடி வருபவர்களைத் தவிர மற்றவர்களை உள்ளே விட அவனுக்கு அதிகாரம் கிடையாது. அது அவனின் முதலாளியின் கண்டிப்பான உத்தரவு.

“சார்... நில்லுங்க... இப்போ உள்ளே போக முடியாது...” ஆதர்ஷை தடுத்தான் அவன்.

“நான் இப்போ போயே ஆகணும்... உள்ளே விடு...” என்றவன் பேண்ட் பையிலிருந்து ஆயிரம் ரூபாய் தாளை எடுத்து அவன் கையில் திணிக்க... பணம் என்றால் பிணமும் வாயை பிளக்கும் இந்தக் காலத்தில் சாதாரணக் காவலாளி வாயை பிளக்க மாட்டானா என்ன? வாயெல்லாம் பல்லாக வெளிவாசல் கதவை திறந்து விட்டு மரியாதையாய் அவன் நிற்க, அவனின் மரியாதையைக் கவனிக்கும் நிலையில் ஆதர்ஷ் இல்லை. அவன் அவசரமாய் உள்ளே ஓடினான்.

வீட்டின் போர்டிகோவில் தரையில் அமர்ந்திருந்த மதியின் நிலை அவனுக்கு வித்தியாசமாகப் பட... காலை வேக எட்டுக்கள் வைத்து அவளிடம் வந்தவன்,

“அம்மு... என்னம்மா... இங்கே உட்கார்ந்திருக்க...?” என்று கேட்டபடி அவள் முன் அவன் மண்டியிட்டு அமர... அவளோ அவனின் வரவை கூட உணர முடியாமல் மூடியிருந்த கதவை வெறித்துப் பார்த்து கொண்டிருந்தாள்.

“அம்மு... அம்மு...” உரக்க அழைத்தவன் அவளின் தோளைப் பற்றி உலுக்கினான்.

“ஆங்...” ஏதோ தூக்கத்திலிருந்து முழித்தவள் போல் மலங்க மலங்க விழித்தவளை கண்டு அவனுக்குப் பரிதாபமாய் இருந்தது.

“அம்மு... நீ எங்கே இப்படி?கதிர் என்ன சொன்னான்?” ஆதர்ஷின் கேள்வியில் ‘கதிர்’ என்ற சொல் மட்டும் அவளின் மூளையைச் சென்றடைய,

“ஆது... பாவா... பாவா...” என்றவள் அதற்கு மேல் தாங்கமாட்டாமல் தேம்பி தேம்பி அழ ஆரம்பித்தாள்.

“என்ன சொன்னான் அவன்?எதுவாயிருந்தாலும் சொல்லு... அவனை உண்டு இல்லைன்னு பண்ணிடறேன்...” அவனின் தேவதை பெண்ணின் கண்ணீருக்கு காரணமாய் இருந்த கதிரை வெட்டி போட்டால் தான் அவனின் ஆத்திரம் தீரும். அந்தளவுக்குக் கதிரின் மேல் கொலைவெறியில் இருந்தான் அவன்.

“ஆது... நான் யார்ன்னு தெரிஞ்சதும் என்னை வெளியில் போன்னு சொல்லிட்டார் ஆது...” என்றவள் தனக்கும் கதிருக்கும் நடந்த உரையாடலை அப்படியே சொன்னாள். கதிர் மோகினி என்ற பெண்ணை இங்கே வரவழைத்ததை மட்டும் சொல்லாமல் விட்டு விட்டாள். அதைக் கேட்டுக் கொண்டிருந்த ஆதர்ஷின் முகம் கோபத்தில் இறுகி போனது.

“இதுக்கு மேலும் உனக்கு அவன் வேணாம்... பெண்ணின் அருமை தெரியாதவனிடத்தில் பேசி பிரயோஜனம் இல்லை... நீ முதலில் எழுந்திரு...” அவளின் கையைப் பிடித்துத் தூக்கி விட்டவன், “வா... போகலாம்...” என்றவன் அவளைக் கைத்தாங்கலாய் அழைத்துச் செல்ல... அவளோ மனமே இல்லாமல் மூடிய கதவை திரும்பி திரும்பி பார்த்துக் கொண்டு சென்றாள்.

“ஆது... எதுக்கும் இன்னொரு முறை பாவா கிட்ட பேசிட்டு வரட்டுமா?அவர் ஏதோ கோபத்தில்...” அவள் சொல்லும் போதே கையால் போதும் என்பது போல் சைகை காட்டி அவளைத் தடுத்து நிறுத்தியவன்,

“இதுக்கு மேல் உன் தரத்தை இறக்கி கொள்ள வேணாம் அம்மு... உண்மையான மலருக்கும், காகித மலருக்கும் வித்தியாசம் தெரியாத முட்டாள் அவன்... அவன் உனக்கு வேணாம்... நாம நாளைக்கே ஹைதராபாத் போறோம்... இனி சென்னை நமக்குத் தேவையில்லை...” உறுதியான குரலில் சொன்னவன் அவளின் கையை அழுத்தமாய்ப் பிடித்துக் கொண்டு நடந்தான். அவனின் பேச்சை தட்ட முடியாமல் அவனோடு இணைந்து நடந்தாள் அவள்.

அழைப்பு மணியின் ஓசையைக் கேட்டு கதவை திறந்த கதிர் அங்கே மோகினி நிற்பதை கண்டு,

“வா... வா... உன்னைத் தான் எதிர்பார்த்திட்டு இருந்தேன்...” என்று உற்சாகமாய் அவன் அவளை உள்ளே அழைத்தாலும்... அவனின் கண்கள் வெளிப்புறத்தை அலசி ஆராய்ந்தது. அங்கே மதி இருப்பதற்கான சுவடு இல்லாததைக் கண்டவன் மனதில் ஏதோ ஒருவித உணர்வு குப்பென்று தாக்க... கதவை சாத்தி தாளிட்டான்.

ஏதோ ஒரு வேகத்தில் மோகினியை வர சொன்னாலும் அவனால் அவளை முழுமையாய் ரசிக்க முடியாமல் மனதில் ஏதேதோ எண்ணங்கள் உலா போனது. தன்னை அமர சொல்லி விட்டு எங்கோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த கதிரின் நிலை அவளுக்கு வித்தியாசமாய்ப் பட, அவள் அவனருகில் சென்று அமர்ந்து அவனின் தோளில் கை வைத்தாள். அவளின் ஸ்பரிசத்தில் அவளைப் பார்த்தவன் ஒன்றும் பேசாமல் புன்னகைத்தான்.

“என்ன ஏதும் டென்சனா?” அவனின் முகத்தை வைத்தே அவனின் மனநிலையை அவள் சரியாகக் கணித்தாள்.

“ம்... கொஞ்சம் டென்சன் தான்...” என்று ஒத்து கொண்டவன், வலது கையால் அவளை அணைத்துக் கொண்டு அவளின் கழுத்து வளைவில் முகம் புதைத்தவாறு, “அதைப் போக்க தான் நீ இருக்கியே...” என்றவனின் கைகள் அவளின் மேனியில் அத்துமீற... அவன் கைகள் செய்த ஜாலத்தில் மயங்கியவளாய் கண்களை மூடி கிறங்கி இருந்தவளை பார்த்தவன் இதழில் சிரிப்பு தவழ, அப்படியே தன் இரு கைகளில் அவளை அள்ளி எடுத்தவன் அறையை நோக்கி சென்றான். அந்த நொடி அவன் பழைய கதிராய் மாறிப் போயிருந்தான்.

பெற்றோரின் மறைவுக்குப் பின் பெண்கள் இருக்கும் திசைப் பக்கம் தலை வைத்து படுக்காதவன் இன்று மதியின் மேலுள்ள கோபத்தில், அவள் தந்த ஏமாற்றத்தில் மீண்டும் பழைய வாழ்க்கைக்குள் நுழைந்தான். அவனின் ஏமாற்றத்திற்கும், கோபத்திற்கும் வடிகாலாய் மோகினியை நினைத்தவன்... மனதில் தோன்றிய வெறுமையைப் போக்க அவளை நாடினான். அந்தோ பரிதாபம் அவளிடம் எதைத் தேடினானோ அது மட்டும் அவனுக்குக் கடைசி வரை கிடைக்கவில்லை. மோகினி என்னமோ பிரமாதமாய் அவனுடன் ஒத்துழைத்தாள் தான்... ஆனால் அவனின் வெறுமை மட்டும் மாறாமல் அப்படியே இருந்தது.

மோகினி கிளம்புவதை யோசனையுடன் பார்த்து கொண்டிருந்தவன் மனம் ‘மதியின் துரோகத்தை மறக்க வேண்டும் என்றால் அதற்கு மோகினியின் அருகாமை அவசியம்’ என்பதை உணர்ந்தது.

“மோகினி... உன்னால் தினமும் வர முடியுமா?” அவனின் கேள்வியில் அவள் அவனைத் திரும்பி பார்த்தாள். அவன் கொடுக்கும் பணத்திற்கு அவன் அவளை அதிகாரமாய் வா என்று உத்தரவு போடலாம்... அதற்கு அவனுக்கு முழுத்தகுதியும் இருக்கு. ஆனால் அதையெல்லாம் விட்டு விட்டு வர முடியுமா? என்று அவன் கேட்டதில் அவளுக்கு அவனை ரொம்பவும் பிடித்துப் போனது.

“நீங்க வான்னு சொன்னா வந்திட்டு போறேன்...” தோளில் கிடந்த சுடிதாரின் துப்பட்டாவை சரி செய்து கொண்டே அவள் சொல்ல... அவளின் பதில் அந்த நொடி அவனைக் குளிர்வித்தது.

“தேங்க்ஸ்...” என்றவன் அவளுடன் தானும் கிளம்பி அவளைப் பேருந்து நிறுத்தத்தில் இறக்கி விட்டவன் நேரே தன் அலுவலகத்துக்குச் சென்றான். அலுவலகத்துக்கு வந்தமர்ந்தவனுக்கு வேலை செய்வதில் கவனம் ஓடவில்லை. எங்குப் பார்த்தாலும் மதியின் நினைவுகளே அவனை முழுதாய் ஆக்கிரமித்தது.

‘ச்சே... என்னைப் பற்றித் தரக்குறைவாய் பேசியவனின் தங்கையை நான் இன்னமும் நினைத்து கொண்டிருப்பதா?அவன் மட்டுமா பேசினான்? அவளும் நான் வேண்டாம் என்று சொன்னவள் தானே... பிறகு எதற்கு இங்கே வந்தாள்? இவள் இல்லை என்றால் என்னால் தொழில் பார்க்க முடியாதா என்ன? இப்போ தான் இன்னமும் உழைக்க வேண்டும்... முன்னேற வேண்டும் என்கிற வெறி எனக்கு வருது. நீ இல்லைன்னா என்னடி... என்னால் முன்னுக்கு வர முடியாதா என்ன? நீயே திரும்பி பார்க்கும் அளவிற்கு நான் முன்னுக்கு வர்றேன் வந்து காட்டுறேன்...’ சவாலாய் நினைத்தவன் முதலில் அழைத்தது மூர்த்தியை தான்.

அவர் அனுமதி பெற்று உள்ளே நுழைந்ததும் அவரைக் கூர்மையாய் அளவிட்டவன், “அப்புறம் அங்கிள் எங்கே உங்க பொண்ணு இன்னமும் காணோம்?” அவனின் கேள்வியில் அவர் பதில் தெரியாமல் விழித்தார். அவரும் காலையில் இருந்து மதிக்கு அலைப்பேசியில் அழைத்துக் கொண்டே இருக்கிறார். அவள் தான் எடுக்கும் வகையைக் காணோம்.

“வந்திருவா தம்பி...” என்று சமாளித்தவரை தீர்க்கமாய்ப் பார்த்தவன்,

“நீங்களும் பொய் சொல்வீங்கன்னு நான் நினைச்சு கூடப் பார்க்கல அங்கிள்...” அவனின் வலி மிகுந்த குரலிலேயே

அவனுக்கு விசயம் தெரிந்து விட்டதை உணர்ந்தவர்,

“தம்பி... என்னை மன்னிச்சிருங்க... அந்த மதி பொண்ணு வந்து உதவி கேட்டப்போ என்னால் தட்ட முடியல... அவள் உங்களைக் காதலிக்கிறேன் சொன்னப்போ என்னால் மறுக்க முடியல... அவள் மூலமா உங்களுக்கு ஒரு நல்ல எதிர்காலம் அமையட்டும்ன்னு தான் நான் இதைச் செய்தேன்”

“அவள் குடும்பத்தால் நான் பட்ட அவமானங்கள் போதும் அங்கிள். நான் திறமையில்லாதவன், நான் கெட்டவன் தான் இல்லைன்னு சொல்லல... அதை நான் மறைக்கவும் இல்லை. ஆனா நானும் மனதுக்குள் சராசரியான மனுசன் தான் அங்கிள். அன்புக்கு, அரவணைப்புக்கு ஆசைப்படுற சாதாரண ஆள் தான் நான். இந்த உலகத்துல யார் தான் தப்பு பண்ணல... அதுக்காக அவள் அண்ணன் என்னவெல்லாம் பேசிட்டுப் போனான் தெரியுமா? அவன் என் ஈகோவை கிளறிவிட்டு குத்தி கொன்னுட்டு போயிட்டான். அந்த ரணம் என்னைக்கும் ஆறாது... என் மனசை விட்டு போகாது”

“ஆனா அந்த மதி பொண்ணு உங்களை உயிருக்கு உயிராய் விரும்புதே தம்பி... பாவம் அந்தப் பொண்ணு...” மதிக்காக அவர் பரிதாப்பட்டார்.

“காதல்... அவள்... அதைப் பத்தி இனி பேச வேண்டாம் அங்கிள்... இனி மதி இங்கே வர மாட்டாள். அவளைப் பத்தி நாம பேச வேண்டாம்... உங்களை நான் மன்னிக்கிறேன்... அவள் பண்ணிய தப்புக்குப் பாவம் நீங்க என்ன பண்ணுவீங்க... ஓகே லீவ் இட்... இன்னைக்குப் பார்க்க வேண்டிய வேலைகளை நாம பார்க்கலாமா?” பேச்சை மாற்றியவன் வேலையில் காட்டிய அசூர வேகத்தைக் கண்டு அவரே பிரமித்துப் போனார். இதற்கு எல்லாம் காரணமான மதியை அவரால் நினைக்காமல் இருக்க முடியவில்லை. நன்றியுடன் அவளை நினைத்துக் கொண்டார்.

மதியோ கதிரின் நிராகரிப்பையும், தன் காதல் நிறைவேறாததையும் நினைத்து நினைத்து தனக்குள் மறுகி கண்ணீர் சிந்தி கொண்டிருந்தாள். நேரம் விரைந்து செல்வதைக் கூட அறியாமல் தனக்குள் மூழ்கி கரைந்து கொண்டிருந்தவளை ஆதர்ஷ் தான் அதட்டி, மிரட்டி, உருட்டி சாப்பிட வைத்தான். அவள் இருக்கும் நிலையைக் கண்டு மனம் பொறுக்காமல் அர்விந்துக்கு அழைத்தான். சுருக்கமாய் நடந்ததை அவனிடம் சொல்லியவன்,

“அம்மு கஷ்டப்படுறதை என்னால பார்க்க முடியல அர்வி...” ஆதர்ஷின் தழுதழுத்த குரலிலிருந்து அவன் அழுகையை அடக்கி கொண்டு பேசுகிறான் என்று மறுமுனையில் இருந்த அர்விந்திற்குப் புரிந்தது. ஆதர்ஷ் கண் கலங்குகிறான் என்றால் எந்தளவிற்குத் தன் தங்கை துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறாள் என்று உணர்ந்த அவனின் கண்களிலும் கண்ணீர் துளிர்த்தது.

“முதல்ல அம்முவை இங்கே கூட்டிட்டு வா ஆது... போதும் அவனுக்காக அவள் கஷ்டப்பட்டது எல்லாம் போதும்... சனியனை அங்கேயே தலை முழுகிட்டு வர சொல்லு... அவளுக்கு என்ன யாரும் இல்லாமலா போயிட்டோம்... இப்படிக் கிடந்து அவன் கிட்ட அவஸ்தைப்படுவதற்கு...” அர்விந்துக்கு வந்த கோபத்தில் அந்தக் கதிர் மட்டும் அங்கே இருந்திருந்தால் கண்டந்துண்டமாய் வெட்டி போட்டிருப்பான்.

“ஆது... உன்னால சமாளிக்க முடியலைன்னா... நான் வேணா அங்கே வரவாடா?” கோபத்தைக் கட்டுக்குள் கொண்டு வந்த அர்விந்த் பாசம் மிகுந்த சகோதரனாய் வினவ,

“இல்லை அர்வி... நானே அவளைக் கூட்டிட்டு வர்றேன்...” என்றபடி அலைப்பேசியை வைத்தவன் அதற்கான ஏற்பாடுகளைப் பார்க்கலானான்.

மறுநாள் விடிந்ததும் மதிக்கு வீட்டில் இருப்பு கொள்ளவில்லை. என்ன தான் கதிர் அவளை அடித்து விரட்டாத குறையாக அவள் கழுத்தை பிடித்துத்

தள்ளினாலும் அவளின் மனம் அவனிடமே சென்றது. நேற்று ஏதோ கோபத்தில் அவன் அப்படிப் பேசியிருக்கலாம்... இன்று அவன் யோசிக்கும் போது தன் மீதுள்ள நியாயம் அவனுக்குப் புரிய வாய்ப்பு இருக்கிறது என்று நம்பியவள்... ஆதர்ஷ் வெளியில் கிளம்பி சென்றதும் அவனைத் தேடி அவனின் வீட்டிற்குச் சென்றாள்.

“அண்ணி... வாங்க... வாங்க...” என்று அப்போது தான் பள்ளி செல்ல தயராகிக் கொண்டிருந்த ராகேஷ் தான் அவளை வரவேற்றான். கதிரை பற்றி அவனிடம் விசாரித்தால் நேற்று இரவு அவன் வீட்டிற்கே வரவில்லை என்று கூறினான். எங்குச் சென்றிருப்பான் என்று யோசித்தவள் அலுவலகத்துக்கு அழைத்துப் பார்த்தாள். ம்ஹூம்... அங்கும் அவன் வரவில்லை. அப்போது தான் அவளுக்கு ஒன்று உறைத்தது. ஒருவேளை அவன் அந்தப் பெண்ணுடன்... அந்த நினைவே அவளுக்குக் கசப்பாய் இருந்தது.

“ஓகே ராகேஷ்... நீ ஸ்கூலுக்குக் கிளம்பு... நான் வர்றேன்...” என்றவள் அவனிடம் விடைப்பெற்று வெளியில் வந்தாள்.

நேரே அவள் சென்ற இடம் நேற்று கதிர் அழைத்துச் சென்ற விருந்தினர் இல்லம். நேற்று வந்த பெண் என்பதாலோ என்னமோ காவலாளி ஒன்றும் கேட்காமல் அவளை உள்ளே விட்டான். வீட்டின் கதவு வரை வந்து விட்ட மதிக்கு அதற்கு மேல் அழைப்புமணி அடிக்கத் தயக்கமாய் இருந்தது. நேற்று கதிர் அவளை இழுத்து வந்து வெளியில் தள்ளிய காட்சி கண் முன் படம் போல் ஓட... அவளின் புலன்கள் எல்லாம் செயலிழந்தது போல் உணர்வில்லாமல் போக நிற்க முடியாமல் தடுமாறியவள் அருகிலிருந்த சுவற்றைப் பற்றிக் கொண்டாள்.

அந்நேரம் பார்த்துக் கதவு திறக்கப்பட உள்ளிருந்து வெளிப்பட்ட கதிர் மற்றும் மோகினியின் நெருக்கம் கண்டு அவளின் காதல் கொண்ட மனம் சுக்கு நூறாய் உடைந்து

சிதறியது. ஏற்கெனவே நிற்க முடியாமல் தள்ளாடி கொண்டிருந்தவள் தன்னை நிலைப்படுத்திக் கொள்வதற்காகப் பற்றியிருந்த சுவற்றின் மீதே சாய்ந்து கொண்டாள். அவளின் கண்கள் அடிப்பட்ட பார்வை ஒன்றை கதிரின் மேல் பதித்தது. அவளின் பார்வை தன்னை ஒன்றும் செய்யாது என்பது போல் அலட்சியமாய் அவளைப் பார்த்த கதிர் அவளைக் கண்டு கொள்ளாமல் அவளைத் தாண்டி தன் காருக்கு செல்ல போனான். அவனின் செயலில் அவளுக்கு எங்கிருந்து தான் தைரியம் வந்ததோ வேகமாய் அவன் அருகில் சென்றவள் அவனின் முன் கை நீட்டி தடுத்து நின்றாள். அவளின் செய்கையில் கேள்வியாய் அவன் ஒற்றைப் புருவத்தை உயர்த்த,

“நான் உங்க கூடப் பேசணும் பாவா... ப்ளீஸ்...” கெஞ்சியவளின் கெஞ்சல் அவனைச் சென்றடைந்ததோ என்னமோ... மோகினிக்கு அவளைக் கண்டு பாவமாய் இருந்தது. என்ன தான் அவள் காசுக்காக உடலை விற்றாலும் அவளும் பெண் தானே. அவளுக்கு மதியின் முகத்தை வைத்தே ஓரளவுக்கு விசயத்தை ஊகித்தவள்,

“நான் கிளம்பறேன் சார்...” என்றவள் கதிரின் பதிலை எதிர்பாராமல் நடக்கத் துவங்க... கதிர் மதியை ஒரு பார்வை பார்த்து விட்டு உள்ளே சென்றான். தன்னைத் தொடர்ந்து உள்ளே வந்த மதியை பார்த்து,

“வந்த விசயத்தைச் சீக்கிரம் சொல்லு... எனக்கு வேலையிருக்கு...” அவளின் முகத்தைப் பார்க்க பிடிக்காமல் வேறு எங்கோ பார்த்துக் கொண்டு அவன் சொன்னான்.

“பாவா... இன்னுமா என் காதலை நீங்க உணரல... இன்னுமா என்னைப் புரிஞ்சிக்கல... கொஞ்சம் யோசிச்சு பாருங்களேன்... உங்களுக்கே புரியும்” அவன் பழைய கதிர் என்ற நினைவில் அவள் பேச முயன்றாள். அவன் மாறி முழுதாய் ஒரு நாளாகி விட்டது என்பது பாவம் அவளுக்குத் தெரியாது.

மீண்டும் பழைய பல்லவியைப் பாடி கொண்டிருந்தவளை கண்டு அவனுக்கு எரிச்சலாக வந்தது. “நான் இருந்த நிலைமையைப் பார்த்துமா இப்படியொரு கேள்வியைக் கேட்குற...? ஆச்சிரியமாய் இருக்கு...” போலியாய் வியந்தவனிடம் என்ன சொல்லி புரிய வைப்பது என்று தெரியாமல் அயர்ந்து போய் நின்றாள்.

“பாவா... இந்தப் பழக்கம் எல்லாம் வேணாம்... விட்டுருங்க... என்னைக் காயப்படுத்தறேன்னு நீங்க உங்களைத் தரம் தாழ்த்திக்காதீங்க...” அவளின் பேச்சில் கண்கள் பளபளக்க அவளருகில் வந்தவன்,

“ஓகே நீ சொல்ற மாதிரி இந்தப் பழக்கத்தை எல்லாம் விட்டுர்றேன்...” என்று சொன்னவனை உள்ளத்து மகிழ்ச்சி முகத்தில் தெரிய புன்னகையுடன் அவனைப் பார்த்தவள்,

“தேங்க்ஸ் பாவா...” என்க... அவளைக் கையமர்த்தித் தடுத்தவன்,

“ஹேய் இரு இரு... நான் பேசி முடிக்கிறதுக்குள்ள அவசரப்படுறியே...” என்றவன் அவளை மேலும் கீழும் ரசித்துப் பார்த்து விட்டு, “அந்தப் பொண்ணை வேணா விட்டுர்றேன்... அதுக்குப் பதிலா நீ வேணா வர்றியா? அவளுக்குக் கொடுத்ததை விட அதிகமாய் உனக்குத் தர்றேன்...” கண்களில் காமம் வழிய... உதட்டிலும் விசம புன்னகை வழிய அவன் நின்றிருந்த கோலம் அவளை அச்சுறுத்தியது. அர்விந்தை பழிவாங்குவதாய் நினைத்துக் கொண்டு மதியை உயிருடன் கொன்று கொண்டிருந்ததை அவன் அறியவில்லை.

கண்களில் பயத்தைத் தேக்கி அவனைப் புரியாது பார்த்தவளின் தோளின் மீது கிடந்த சுடிதார் துப்பட்டாவை கையிலெடுத்தபடி வெற்றி சிரிப்புடன் அவளின் முகம் நோக்கி அவன் குனிந்தான். அப்போது தான் அவன் செய்யப் போகும் காரியத்தின் வீரியம் புரிய அவள் பலம் கொண்ட மட்டும் தன் கைகளைக் கொண்டு அவனைப் பிடித்துத் தள்ளினாள். அவனின் வார்த்தைகள் விளக்காத

அர்த்தத்தை அவனின் செயல் அவளுக்கு நன்கு விளக்கி விட... அவள் மனதுக்குள் அருவருத்து போனாள்.

‘நான் காதலித்த கதிர் இவ்வளவு கேவலமானவனா? பெண் பித்துப் பிடித்தவனா? காதலை கொஞ்சமும் உணராத காம கிறுக்கனா? இனியும் இவன் எனக்குத் தேவை தானா? காதலுக்காகக் கற்பையும் கேட்கும் இவன் நல்லவனே இல்லை... மனிதனே இல்லை... வேண்டாம்... இவன் எனக்கு வேண்டாம்...’ அவளின் மனம் கூக்குரலிட்டது.

“என்னடி நீ தானே கேட்ட... உன் காதலை ஏத்துக்கோ ஏத்துக்கோன்னு... இப்போ என்ன பெரிய பத்தினி வேசம் போடுற?வாடி... வந்து உன் காதலை ப்ரூவ் பண்ணு” என்றவன் அவளின் கையைப் பிடிக்க வர, அவ்வளவு நேரம் அவன் மேலிருந்த காதல் பைத்தியம் அவளுக்குத் தெளிய அவனின் கையை உதறி தள்ளியவள் அவனை அருவருப்பாய், வெறுப்பாய் பார்த்தாள்.

“ச்சீ... நீயெல்லாம் மனிதப்பிறவியே இல்லை... காதலுக்கும் காமத்துக்கும் வித்தியாசம் தெரியாத மிருகம் நீ... தூ...” என்று அவனின் முகத்தில் காறி உமிழ்ந்தவள், “இதுக்கு மேலேயும் என் மேல் உன் சுண்டு விரல் பட்டாலும் நான் சும்மாயிருக்க மாட்டேன்... என் காதலுக்கு அருகதையானவன் நீ இல்லை. உன்னை மாதிரி தகுதியில்லாதவன் மேல் காதல் வைத்தது என்னுடைய தப்பு. அது எவ்வளவு பெரிய தவறுன்னு இப்போ நான் உணர்ந்திட்டேன்... இனி நீயே என்னைத் தேடி வந்தாலும் எனக்கு நீ தேவையில்லை... குட்பை...” கம்பீரமாய் அவனைப் பார்த்து முழங்கியவள் அவனின் பதிலை எதிர்பாராமல் வீர நடை போட்டு வெளியேறினாள்.

கவரிமானாய் நான்... நாயினமாய் நீ...
கற்புக்கு நான்... காமத்துக்கு நீ...
காமத்துடன் கூடிய காதல் அசிங்கம்...
காதலுடன் கூடிய காமம் அழகு...
அழகு நான்... அசிங்கம் நீ...

நாளை : 12

மதி வாயில் கதவை திறந்து கொண்டு வெளியேறும் முன் கதிர் அவள் கையைப் பிடித்துச் சுண்டி இழுக்க... எதிர்பாராத அவனின் செயலில் நிலை தடுமாறியவள் அவன் மீது சாய்ந்தாள். அந்த ஒரு நொடி நேரத்தை தனக்குச் சாதகமாக்கி கொண்டவன் தன் வலது கையால் அவளின் தாடையை அழுந்த பற்றி அவள் முகம் நோக்கி குனிந்தான். அவன் செய்யப் போகும் காரியத்தின் விபரீதம் புரிந்து அவள் அவன் கைகளில் இருந்து திமிர... அவளை அடக்குவதற்காக அவனின் இடது கை அவளின் இடையில் அழுத்தமாய்ப் படிந்தது. அவனை விலக்கி நிறுத்தவும் முடியாமல், போராடவும் முடியாமல் அவள் விழிகள் விரிய திகைப்பாய் அவனைப் பார்த்தாள். அவளின் பார்வையைக் கொஞ்சமும் லட்சியம் செய்யாமல் அவன் அவளின் சுடிதார் துப்பட்டாவில் அவள் காறி உமிழ்ந்த எச்சிலை நிதானமாய்த் துடைத்தவன் அவளின் இதழின் மீது தன் இதழை அதை விட நிதானமாய்ப் பொறுத்தினான்.

அவன் அவளின் காதலன் தான்... அவளின் ஆழ்மனதில் இருப்பவனும் அவன் தான். ஆனாலும் அவனின் குணம் தெரிந்ததும் அவனின் அருகாமை, அவனின் இதழொற்றல் எல்லாமே அவளுக்கு உமட்டி கொண்டு வந்தது. அவனோ அவளின் உணர்வுகளைக் கொஞ்சமும் மதிக்காமல் தன் காரியத்தில் கண்ணாய் இருந்தான். நீண்ட நேரம் கழித்து அவளை விடுவித்தவனின் பார்வை அவளைக் கோபமாய்ப் பார்த்தது.

"என்னடி எவ்வளவு தைரியம் இருந்தா என் முகத்தில் காறி துப்புவ... அப்புறம் என்ன சொன்ன...? என் சுண்டு விரல் உன் மேல் பட்டாலும் நடக்கிறதே வேறன்னு சொன்னேல்ல... என் சுண்டு விரல் மட்டுமா உன் மேல் பட்டிருக்கு..." என்றவனின் பார்வை அவளின் இதழில் பதிந்து பின் அவளின் நெஞ்சோடு உரசி கொண்டு நின்ற அவனின் நெஞ்சின் மீது நிலைத்து நின்றது.

"இப்போ என்ன பண்ணுவ... சொல்லுடி என் ஜான்சிராணி..." அவனின் எக்காள பேச்சில் அவள் கூனிக்குறுகி போனாள். அவளால் அவனிடம் இருந்து விலகி செல்லவும் முடியவில்லை. அந்தளவுக்கு இறுக்கமாய் அவளைப் பற்றயிருந்தான் அவன்.

"நான் நினைச்சேன்னா... இதுக்கு மேலேயும் போக முடியும்..." என்றவனைக் கண்டு உண்மையில் அவள் மனதில் திகில் ஏற்படத்தான் செய்தது. அச்சத்தில் கண்கள் விரிய தன்னைப் பார்த்தவளின் பார்வையில் என்ன கண்டானோ... கையிலிருந்த அவளின் துப்படாவை அவள் மீது போட்டவன்... அவளைப் பிடித்திருந்த தன் கைகளின் இறுக்கத்தை மெதுவே தளர்த்தி விடுவித்தான். அவன் விடுவித்ததும் தான் தாமதம் அங்கிருந்து வேகமாய் வெளியேற போனவளின் முன் அவசரமாய் வந்து நின்றவன்,

"நீங்கறதால இத்தோடு விடுறேன்... இதுவே வேற யாராவது இருந்திருந்தா நடக்கிறதே வேற..." என்றவனை நிமிர்ந்து பார்த்தவளின் பார்வையில் அருவருப்பு, வெறுப்பு மிகுதியாய் இருந்தது.

"என்னைச் சீண்டினா என்ன நடக்கும்ன்னு உனக்குத் தெரிய வேணாம்... அதுக்குச் சின்னச் சாம்பிள் தான் இது. இனியாவது நீயும், உன் அண்ணனும் என்னைச் சீண்டிவிட்டு வேடிக்கை பார்க்காதீங்க... உனக்கும், எனக்கும் இந்தக் காதல்,கல்யாணம் இதெல்லாம் ஒத்துவராது..." அவன் முடிக்கும் முன் அவனைச் சீற்றத்துடன் பார்த்தவள்,

"இதுக்கு மேலயும் உன்னை நான் கல்யாணம் பண்ணிக்குவேன் உனக்கு நினைப்பிருக்கா... நீ செஞ்ச காரியத்துக்கு உன்னை எல்லாம் செருப்பைக் கழட்டி அடிச்சிருக்கணும். அதுக்குக் கூட உன்னைத் தொடணும்ன்னு நினைக்கிறப்போ எனக்கு அருவருப்பா இருக்கு... நீயெல்லாம்... ச்சீ..." என்றவள் அவனைத்

தாண்டி கொண்டு வெளியில் வர... அவன் கோபத்துடன் அவளையே பார்த்துக் கொண்டு நின்னறிருந்தான்.

'இப்பவும் உன் திமிர் அடங்கல என்ன... கொழுப்புடி... உன் உடம்பெல்லாம் கொழுப்புடி...' என்றவனின் மனம் அவள் பேச்சை அசை போட்டு... அசை போட்டு அவள் மீதான வன்மத்தை வளர்த்துக் கொண்டது.

மதி எப்படித்தான் காரை ஓட்டி கொண்டு வீடு வந்து சேர்ந்தாளோ... அது அவளுக்கே தெரியாது. சோபாவில் அமர்ந்தவளின் கண்களில் அடக்கமாட்டாமல் கண்ணீர் வழிந்து கொண்டே இருந்தது. கதிர் இந்தளவுக்குக் கீழ்த்தரமாய் நடந்து கொள்வான் என்று அவள் கனவிலும் நினைத்தது இல்லை. அதிலும் அவனை முதன்முதலில் பார்த்த போது அறியா சிறுவனாய் தன்னை நோக்கிய அந்த நொடி அவனை அவள் சேயாய் எண்ணி தானே தாயாய் அரவணைத்தாள். அதன் பின் பழகிய போதும் எவ்வளவு கண்ணியமாய் நடந்து கொண்டான். அப்படிப்பட்டவனா இன்று வேறொரு பெண்ணுடன் இழைந்து கொண்டு இருந்தான். அதை அவளால் ஜீரணிக்க முடியவில்லை. அதிலும் தன்னை அந்த மாதிரி பெண்ணாய் எண்ணி கொண்டு நடந்தவிதம் கண்டு அவள் மனம் அவனை முற்றிலும் வெறுத்தது.

"வேண்டாம்... இந்த மாதிரி கேடு கெட்டவன் எனக்கு வேண்டாம்..." வாய்விட்டு பைத்தியக்காரி போல் திரும்பத் திரும்பச் சொல்லியவள்... திடீரென்று ஆவேசம் வந்தது போல் அறைக்குள் வந்தவள் குளியலறைக்குள் நுழைந்தாள்.

ஷவரை திருகிவிட்டு அதன் அடியில் நின்றவள் கைகள் தன் உதட்டினை பரபரவென்று தேய்த்தது. அவன் முத்தமிட்ட அந்த நொடி மனதுக்குள் படமாய் ஓட... அவள் கைகள் அழுத்தம் கொடுத்துத் தேய்த்தது. நடந்த அசம்பாவிதத்தை நினைத்து அவள் கண்கள் நீர் சொரிய... அது தண்ணீரோடு கலந்து வெளியேறியது. தன் உள்ளத்துத் துக்கத்தைக் குளிர்ந்த நீரில் கரைத்துக்

கொண்டு எவ்வளவு நேரம் நின்றிருந்தாளோ... உடல் வெடவெட என்று நடுங்கவும் குளியலறை விட்டு வெளியில் வந்தவள் உடையை மாற்றிக் கொண்டு கட்டிலில் அமர்ந்தாள்.

என்ன தான் அவள் தன்னை நிதானப்படுத்திக் கொண்டாலும் அவளின் மனதை கட்டுப்படுத்தியது போல் கண்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. மீண்டும் மீண்டும் கண்களில் இருந்து வழியும் கண்ணீரை துடைக்கும் வழியறியாது இருந்தவளின் மனம் யாரிடமாவது ஆறுதலை தேட எண்ணியது. அவள் கைகள் தொலைப்பேசியை எடுத்து ஆதர்ஷின் எண்ணை அழுத்தியது.

"தூங்கி எந்திருச்சிட்டியா அம்மு... சாப்பிட்டியாடா?" மறுமுனையில் ஒலித்த ஆதர்ஷின் அன்பு வார்த்தையில்... அதுவரை அடக்கி வைத்திருந்த அழுகை வெடித்துக் கொண்டு வெளியில் வந்தது.

"ஆது..." என்றவளால் வேறு வார்த்தை பேச முடியாமல் அழுகை வந்து தொண்டயை அடைத்தது.

"அம்மு என்னாச்சுடா...?" அவனின் குரல் பதற்றத்துடன் ஒலித்தது.

"ஆது... நீங்க உடனே கிளம்பி வாங்க..." மதியின் குரல் அவனை உலுக்க...

"இதோ இப்பவே வர்றேன் அம்மு... நீ எதுக்கும் கவலைப்படக் கூடாது... நானிருக்கிறேன் உனக்கு..." அவன் ஆத்மார்த்தமாய்ச் சொன்னான். அதில் அமைதியடைந்தவள் தொலைப்பேசியை அரைமனதாய் வைத்தாள்.

மதி தன்னைத் தேடுகிறாள் என்றால் அவள் மனம் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பது அவனுக்குத் தெளிவாகப் புரிய... பார்த்துக் கொண்டிருந்த வேலையை அப்படியே ஒதுக்கி வைத்துவிட்டு வீட்டிற்குக்

கிளம்பினான். இன்னும் மூன்று மணி நேரத்தில் ஹைதராபாத்திற்கு விமானம்... அதுவே அவனுக்குப் பெருத்த நிம்மதியளித்தது. அத்தை, மாமாவிடம் அவளைப் பத்திரமாக ஒப்படைத்தால் தான் அவன் மனம் அமைதியடையும். எவ்வளவு வேகமாய்க் காரை ஓட்ட முடியுமோ... அவ்வளவு வேகமாய்க் காரை ஓட்டி கொண்டு வீட்டை அடைந்தவன் அதே வேகத்தில் வீட்டினுள் நுழைந்தான்.

"அம்மு..." என்றழைத்தபடி வந்தவன் அவளை வரவேற்பறையில் தேட... அங்கு அவள் இல்லாததை உணர்ந்து அவளின் அறைக்குச் சென்றான். அவன் நினைத்தது போல் அவள் அங்கே தான் இருந்தாள்.

கட்டிலின் மறுபக்கம் திரும்பி துயில் கொண்டிருந்த அவளைக் கண்டதும் அவனின் முகத்தில் கனிவு வந்தது. அவளின் அருகில் சென்றவனின் கண்ணில் அவளின் அழுது சிவந்திருந்த முகம் பட... அந்தக் கதிரை நினைத்து அவனுக்கு ஆத்திரமாய் வந்தது.

‘நாய்ப்பயல்...’ மனதில் நினைத்தவன் பல்லை கடித்தான். அவனின் வரவை உணர்ந்தோ என்னமோ மதி கண்களைத் திறந்து பார்த்தவள் அங்கே ஆதர்ஷை கண்டதும்,

“ஆது...” கதறிக் கொண்டே படுக்கையில் இருந்து எழ... அவளின் கதறலில் அவன் பதட்டமாய் அவளருகே அமர்ந்து அவளைத் தாங்கி கொண்டவன் அவளைத் தோளோடு அணைத்துக் கொண்டான்.

சிறு வயதில் இருந்தே மதி எந்தவொரு துன்பமாய் இருந்தாலும் அதை ஆதர்ஷிடம் மட்டுமே சொல்லுவாள். பெற்றோரிடம் மரியாதை, அர்விந்திடம் பயம் என்றிருந்தவளுக்கு ஆதர்ஷ் நட்பு கரம் நீட்ட... அதைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள் அவள். அவளின் தோழன், ஆலோசகர் எல்லாமும் அவன் தான். அவனுக்கும் குட்டி தேவதை பெண்ணாய் இருந்த மதியை மிகவும் பிடிக்கும் ஆதாலால் அவளின் நிழலாய் அவனையும்

அறியாமல் அவன் மாறிப் போனான். இப்போது அந்தச் சிறு வயது மதியாய் தான் அவனுக்கு அவள் தோன்றினாள்.

“அம்மு... எதுக்குடா இவ்வளவு அழுகை?உன் கண்ணீருக்கு கூடத் தகுதியில்லாதவன் அவன்... அவனை நினைத்து நீ ஏன் உடலை கெடுத்துக்கற?” நேற்று நடந்த சம்பவத்திற்காக அழுகிறாள் என்று நினைத்து அவன் அவளைத் தேற்றினான்.

“அந்தக் கதிர்... அவன்...” மதியின் வார்த்தையில் கதிருக்கான ‘பாவா’ என்றழைப்பும் இல்லை... அவனுக்கான மரியாதையும் இல்லை என்பதை அவன் மனம் குறித்துக் கொண்டது. அதில் யோசனையாய் அவனின் புருவம் இரண்டும் சுருங்கியது.

“அவனுக்கு என்ன அம்மு?இங்கே வந்தானா?” அவனின் கேள்விக்கு அவள் மறுப்பாய் தலையசைத்தவள்,

“நான் தான் அங்கே போனேன்...” தயங்கி தயங்கி சொன்னவளை தன்னிடமிருந்து விலக்கி அவளின் முகத்தைக் கூர்மையாய் அளவிட்டான்.

“ப்ளீஸ் ஆது... நீங்களும் என்னிடம் கோபப்படாதீங்க... அர்வி கிட்ட சொன்னா கோபப்படுவான்னு தான் உங்க கிட்ட சொல்றேன். உங்களை விட்டா எனக்கு யாரு இருக்கா?” உருக்கமாய்க் கேட்டவளை கண்டு அவனின் உள்ளம் உருகிவிட்டது.

“சரி கோபப்படல... நீ ஏன் அங்கே போனே?” மறுபடியும் அவளைத் தன் தோளில் சாய்த்துக் கொண்டு அவன் கேட்டான்.

"நேத்து ஏதோ கோபத்தில் பேசிட்டான்னு நினைச்சு தான்... இன்னைக்கு அவனைத் தேடி போனேன்... அங்கே அவன்..." கதிர் அந்தப் பெண்ணை அணைத்திருந்த காட்சி அவள் கண்முன் வலம் வந்தது... தன்னை அந்த மாதிரி

பெண்ணாய் நினைத்தது, தன்னிடம் கேவலமாய் நடந்து கொண்ட முறை எல்லாம் அடுத்தடுத்து வலம் வர...

"அவன் என்னை ஏமாத்திவிட்டான் ஆது... என் காதலை, என் நம்பிக்கையை எல்லாத்தையும் ஒரு நொடியில் தீயில் போட்டு பொசிக்கிட்டான் ஆது..." அவன் தோளில் முகம் புதைத்து கதறியவள், "அவன் என்னையும் வேசின்னு சொல்லாமல் சொல்லிட்டான் ஆது..." அதற்கு மேல் அவளால் சொல்ல முடியவில்லை. அழுகை அதிகரிக்க... அதிகரிக்க வார்த்தைகள் பின்னுக்குத் தள்ளப்பட்டது. அவள் பட்ட அவமானத்தைக் கண்ணீரில் கரைத்து கொண்டிருந்தாள்.

மதியின் வார்த்தை கேட்டு ஆதர்ஷின் கண்கள் கோபத்தில் சிவந்தது. இந்த நொடியே அந்தக் கதிரின் உயிரை குடிக்க வேண்டும் என்ற வெறி எழுந்தது. ஆனாலும் அழுகையில் கரைகின்ற மதியை தேற்ற வேண்டிய மிக முக்கிய வேலை இருந்ததால்... அதைப் பின்னுக்கு ஒத்தி வைத்தான்.

"இப்பவாவது அவனைப் பத்தி தெரிஞ்சுக்கிட்டியே அதுவே சந்தோசம்... இந்த நொடி அவனை மறந்திட்டு புது வாழ்க்கையை வாழ பாரு..." அவளுக்குச் சமாதானம் சொன்னவன், "என்ன... உன்னால் முடியும் தானே?" அவள் முகம் நிமிர்த்திக் கேட்க... அவள் பதில் பேசாமல் வெறுமனே தலையை மட்டும் அசைத்தாலும் அவளின் முகத்தில் படிந்திருந்த வேதனையை அவனால் உணர முடிந்தது. மேலும் மேலும் பழங்கணக்கு பேசி பேசி அவளின் மனதை ரணமாக்குவதை விட்டு விட்டு அவளின் மனதை மாற்றும் பொருட்டு,

"இன்னும் மூன்று மணி நேரத்தில் ப்ளைட்... கிளம்பி ரெடியா இரு... எனக்கு ஒரு முக்கியமான வேலை இருக்கு" என்றவன் அவளின் சம்மதம் வேண்டி அவள் முகம் பார்க்க...

"சரி ஆது..." மெல்லிய குரலில் கூறியவளை வாஞ்சையுடன் பார்த்தவன்,

"ஒரு மணி நேரத்தில் வந்து விடுகிறேன்..." அவளிடம் விடைப்பெற்றவன் நேரே சென்ற இடம்... கதிரின் அலுவலகம்.

கதிரின் அலுவலக அறைக்கதவை திறந்து கொண்டு சென்ற ஆதர்ஷ் நேரே கதிரின் சட்டையைத் தான் பிடித்தான். "எப்படிடா உனக்கு மனசு வந்தது... எங்க வீட்டு தேவதைடா அவள்... அம்முவை போய் அப்படிப் பேசியிருக்கியே உன்னை... எனக்கு வர்ற ஆத்திரத்தில்..." அவனின் கைகள் ஆத்திரமாய்க் கதிரின் முகத்தில் ஓங்கி ஒரு குத்துவிட்டது. கதிர் பேசியது மட்டும் தான் ஆதர்ஷுக்கு தெரியும். நல்லவேளை கதிர் மதியிடம் நடந்து கொண்ட முறை அவனுக்குத் தெரியாது.

ஆதர்ஷின் வருகையை எதிர்பார்க்காத கதிர்... அவனின் அடியையும் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. "டேய்... என் ஆபிசில் வந்து என்னையே அடிக்கிறியா? உன்னை..." ஆதர்ஷின் மேல் பாய்ந்தான் கதிர்.

"ஆமாடா... அதுக்கு என்ன பண்ணுவ...?" என்ற ஆதர்ஷ் அவனின் கையைத் தட்டிவிட்டான். அவனின் செயலில் கதிர் அவனை ஆத்திரத்துடன் முறைத்துக் கொண்டிருந்தான்.

"இனி நீயே தேடினாலும் அம்மு உனக்குக் கிடைக்க மாட்டாள்... அவளின் காதலுக்குக் கொஞ்சமும் அருகதையில்லாதவன் நீ... உன்னை விட எல்லாவிதத்திலும் உயர்ந்த ஒருவனை அவளுக்குப் பார்த்துக் கல்யாணம் பண்ணி வைக்கத் தான் போறோம்... அதைப் பார்த்து நீ வயிறு எரிய தான் போற... இவ்வளவு நல்ல பெண்ணை மிஸ் பண்ணிட்டோம்ன்னு நீ கதற தான் போற... அப்போது அழுது புலம்பினாலும் அம்மு உனக்குக் கிடைக்க மாட்டாள்..." என்றவனை அலட்சியத்துடன் பார்த்த கதிர்,

"டேய் நான் தான் அவள் வேணாம்ன்னு திரும்பத் திரும்பச் சொல்றேனே... அது உங்க யார் காதிலேயும் விழல்லையா... இதுல அவளை நினைச்சிட்டு நான்

தவிப்பேனா... போடா பூல்..." கதிரின் பேச்சில் முகம் கருத்து போன ஆதர்ஷ்... 'ச்சீ' என்று அவனை அற்பமாய்ப் பார்த்தபடி அந்த அறையை விட்டு வெளியேறினான்.

****

"அம்மு..." ஓடி வந்து அணைத்துக் கொண்ட அன்னையின் அணைப்பில் மதியின் அடக்கப்பட்ட கண்ணீர் மீண்டும் உடைப்பெடுத்தது.

"அம்மா..." மணிமாலா மடியில் முகம் புதைத்து தேம்பியவளை என்ன சொல்லி ஆறுதல் படுத்துவது என்று தெரியாமல் வீட்டில் உள்ளவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்து கொண்டனர்.

"அம்மு... அழாதேடா... உனக்கு நாங்க இருக்கோம்..." குணசேகர் அவளை ஆறுதலாய் அணைத்துக் கொள்ள...

"இப்போ என்ன நடந்து போச்சுன்னு ஒப்பாரி வைக்கிற... முகம் கழுவிட்டு வா... மினிஸ்டர் பொண்ணு கல்யாணத்துக்குப் புதுவிதமான நகைகள் செஞ்சு கேட்டிருக்காங்க... அதைப் பத்தி டிஸ்கஸ் பண்ணலாம்... முடிஞ்சா அதுக்கான வேலையை இன்னைக்கே ஆரம்பிச்சாலும் நல்லது..." அவளது சிந்தனையை மாற்றும் விதமாய்ப் பேசிய அண்ணனை நன்றியுடன் பார்த்தவள்,

"அர்வி... சாரி... உன் பேச்சுக் கேட்காமல் போனதுக்கு நல்லா அனுபவிச்சிட்டேன்..." அர்விந்தை கட்டி கொண்டு அவள் அழ...

"அதை மறந்திடு அம்மு... கதிர்ன்னு ஒருத்தன் உன் வாழ்க்கையில் வரவே இல்லைன்னு நினைச்சுக்கோ..." அவன் சொன்னதற்குச் சரியென்பது தலையாட்டியவளை பாசத்துடன் அணைத்துக் கொண்டான் அந்த அன்பு சகோதரன். இதையெல்லாம் ஒருவித நிம்மதியான மனநிலையில் பார்த்துக் கொண்டிருந்தான் ஆதர்ஷ்.

அடுத்து வந்த நாட்கள் மதி வேலையில் மூழ்கி என்ன தான் சாதாரணமாய் இருப்பது போல் காட்டி கொண்டாலும்... அவளின் அடி மனதில் இருக்கும் வேதனையை மறக்க முடியாமல் தடுமாறி தான் போனாள். இறந்த காலத்துக்கும், நிகழ்காலத்துக்கும் இடையில் மனதுடன் போராடி போராடி அவள் ஓய்ந்து தான் போனாள். பெற்றோராலும், சகோதரனாலும் கண்டு பிடிக்க முடியாத அவளின் மனச்சோர்வை ஆதர்ஷ் கண்டு கொண்டான். அந்த மாதிரி அவள் மனம் சோர்வுறும் நேரம் எல்லாம் தோழனாய் அவளைத் தோள் தாங்கினான் என்றால் மிகையில்லை.

இதற்கிடையில் அர்விந்த் அவளின் திருமணப் பேச்சை ஆரம்பித்தான். அதைக் கேட்டு மதி மனம் அதிர்ந்தாலும் வாழ்வின் நிதர்சனத்தை முன்னிட்டு அமைதி காத்தாள்.

"அம்முவை நல்லா புரிஞ்சிக்கிட்டவனா... அவளை அனுசரிச்சு கண்ணுக்குள் வைத்துப் பத்திரமாய்ப் பார்த்து கொள்பவனாய் பாரு அர்வி... நான் பார்த்து தான் சரியில்லாமல் போச்சு... எனக்கு உன் மேல் நம்பிக்கை இருக்கு... நீயே உன் தங்கைக்குத் தகுந்த வரனை பாரு..." சொல்லிய குணசேகர் கலங்கிய கண்ணைத் துடைத்துக் கொள்ள... அதைக் கண்டு மதியின் உடல் விரைப்புற்றது.

"நான் கொஞ்சம் பேசலாமா...?" திடுமெனக் கேட்ட ஆதர்ஷை எல்லோரும் ஆச்சிரியமாய்ப் பார்க்க...

"நான் அம்முவை கல்யாணம் பண்ணிக்க விரும்பறேன்... உங்க எல்லோருக்கும் சம்மதமா?" மற்ற வார்த்தைகளை மற்றவர்களை நோக்கி கேட்டவன்... கடைசி வார்த்தையை மட்டும் மதியை நோக்கி கேட்டான். அவனின் வார்த்தையில் எல்லோரும் திகைத்துப் போனார்கள் என்றால் மதி அதிர்ந்து போய் அவனைப் பார்த்தாள்.

என் தேவதைப் பெண்ணே!
தன் காலில் போட்டு நசுக்கினான் ஒருவன் உனை...
உன் காலில் பூ போட்டு அர்ச்சிக்கிறேன் நான் உனை...

வாழும் வாழ்க்கை கொஞ்சம்... வாழும் வரை நாமாயிருப்போம்...

நாளை : 13

"என்ன எல்லோரும் அதிர்ச்சியா பார்க்கிறீங்க?எனக்கு அம்முவை கல்யாணம் பண்ண உரிமை இல்லையா?" எல்லோரின் திகைத்த முகத்தை நோக்கிய ஆதர்ஷ் நேரே குணசேகர் அருகில் சென்றான்.

"மாமா... என் மேல் உங்களுக்கு நம்பிக்கை இருக்கா? இல்லையா?" அவன் கேட்டதும் அவர் பதறிப் போனார்.

"ஆது... என்னப்பா இப்படிச் சொல்ற... நான் உன்னை நம்பாம வேற யாரை நம்பப் போறேன்"

"மாமா... அம்முவை நான் என் கண்ணுக்குள் வைச்சுப் பத்திரமா பாரத்துக்குவேன். அவளை நல்லா புரிஞ்சிக்கிட்டவன்கிற முறையில் கேட்கிறேன்... அம்முவை எனக்குக் கல்யாணம் பண்ணி கொடுப்பீங்களா?" குணசேகரின் கையைப் பிடித்துக் கொண்டு அவன் வேண்ட,

"என்ன ஆது... இப்படிக் கேட்கிற...? உனக்கு இல்லாத உரிமையா... எங்களுக்குமே அம்முவை உனக்குக் கொடுப்பதில் தான் விருப்பம்..." என்று நிறுத்தியவர் கலங்கிய கண்களைத் துடைத்துக் கொண்டு, "இடையில் ஏதேதோ நடந்து விட்டது... அம்மு உனக்குத் தான்னு அந்த ஆண்டவன் எழுதி வைச்சிருக்கிறான்..." தழுதழுத்த குரலில் கூறியவரை...

"உண்மை தான் மாமா... அம்மு எனக்குத் தான்..." என்றவன் அருகில் அமர்ந்திருந்த மணிமாலாவை பார்த்து,

"அத்தை நீங்க ஒண்ணும் சொல்லல..."

"இந்த அத்தையோட ஆசையை நிறைவேத்தி வைச்சுட்ட ஆது... உன்னை மாதிரி நல்லவன் கையில் என் மகளை

ஒப்படைப்பதற்கு எனக்குப் பூரணச் சம்மதம் மருமகனே..." அவர் சம்மதம் சொன்னதும் ஆதர்ஷின் கண்கள் அர்விந்தை பார்த்தது.

"என் கிட்ட நீ பெர்மிசன் கேட்கவே வேண்டாம்டா... இப்போன்னாலும் அம்முவை தூக்கி கொண்டு போய்த் தாலி கட்டு..." சொல்லியவன் ஆதர்ஷை அணைத்துக் கொண்டான்.

"அண்ணா... இப்போ தான் எனக்குச் சந்தோசமாயிருக்கு... நான் பாவா கிட்ட சொன்ன மாதிரி... நீங்க செஞ்சிட்டீங்க... என் வார்த்தையைக் காப்பாத்திட்டீங்க..." நெகிழ்ச்சியுடன் கூறிய ஆதிரையை வாஞ்சையுடன் அணைத்துக் கொண்டான் ஆதர்ஷ்.

இதிலெல்லாம் கலந்து கொள்ளாமல் நடப்பவற்றை வெறுமனே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த மதியை கவனித்த ஆதர்ஷ்... அங்கிருந்த பூச்சாடியில் இருந்த சிவப்பு ரோஜா ஒன்றை கையிலெடுத்துக் கொண்டு... அவள் முன் மண்டியிட்டு அமர்ந்தவன்,

"அம்மு என்னைக் கல்யாணம் பண்ணிக்கச் சம்மதமா?" அவன் கேட்ட விதத்தில் அவளுக்குமே சிரிப்பு வந்துவிட்டது. ஆனாலும்...

"ஆது..." அவள் தயக்கமாய், பரிதவிப்பாய் அவனைப் பார்க்க... அவனோ அவளைப் பார்த்துக் கண்ணமர்த்திச் சமாதானம் செய்தவன்,

"முதல்ல ரோஜாவை பிடி..." என்றவனின் கையிலிருந்த பூவை ஒன்றும் பேசாமல் அவள் வாங்கிக் கொள்ள... அங்கே பலத்த கரவொலி கேட்டது.

"தேங்க்ஸ் அம்மு..." என்றவன் எழுந்து அவளின் தோளில் கை போட்டு அணைத்துக் கொள்ள... அவளுக்கோ அது ஒரு மாதிரியாகத் தோண... அவஸ்தையுடன் நெளிந்தாள். ஆதர்ஷ் எப்போதும் அவளிடம் நடந்து கொள்வது போல் தான் நடந்து கொண்டான். ஆனால் இன்று ஏனோ

அவளுக்கு ஒரு மாதிரியாக இருந்தது. அவனுக்கு அது போல் தோன்றவில்லை போலும் அவளை அணைத்த கைகளை அவன் விலக்கவே இல்லை.

"மாமா, அத்தை நான் அம்மு கூடத் தனியா பேசணும்..." ஆதர்ஷ் இழுக்கும் போதே...

"தாராளமாய்..." பெரியவர்கள் இருவரும் சம்மதிக்க... மதியின் கையைப் பிடித்து அழைத்துச் சென்றான் அவன்.

"மாப்பிள்ளை... சரியா பத்து நிமிசம் தான் டைம்... அதுக்குள்ள பேசி முடிச்சிட்டு வந்துடணும்..." அர்விந்த் பின்னாலிருந்து குரல் கொடுக்க...

"நீ என் தங்கச்சி கிட்ட எவ்வளவு நேரம் பேசினியோ அவ்வளவு நேரம் நான் உன் தங்கச்சி கிட்ட பேசிட்டு தான் விடுவேன்..." திரும்பி பார்க்காமல் சொன்ன ஆதர்ஷ் மாடிப்படிகளில் ஏறினான்.

"டேய் பேச்சோடு நிறுத்திக்கோ..." அர்விந்த் கத்த...

"அதுவும் உன்னைப் போல் தான்..." ஆதர்ஷ் பதில் சொல்ல...

"சூப்பர்டா மாப்பிள்ள..." சொல்லிய அர்விந்த் சத்தமாய் விசில் அடிக்க... அதைக் கண்டு மற்றவர்கள் சிரித்தனர்.

"உன் அண்ணன் இருக்கானே..." மதியிடம் சொல்லியவன்... அவளை அழைத்துக் கொண்டு அவளின் அறைக்குச் சென்றான். உள்ளே நுழைந்ததும் கதவை சாத்தி தாள் போட்ட ஆதர்ஷை திரும்பி பார்த்த மதியின் கண்களில் கொஞ்சமே கொஞ்சம் பயம் எட்டி பார்த்தது. அவனைக் கண் கொண்டு பார்க்க முடியாமல் ஜன்னல் பக்கம் போய் நின்று கொண்டாள்.

"நான் என்ன அந்தளவுக்குக் கீழ்த்தரமானவனா அம்மு...?" அவனின் கேள்வியில் வெளிப்புறம் வேடிக்கை பார்த்து கொண்டிருந்தவள் திடுக்கிட்டு போய் அவசரமாய் அவனைப் பார்த்தாள்.

"ஆது... அப்படியெல்லாம் இல்லை..." தடுமாறிய அவளின் வார்த்தைகளே அவளின் மனதை கண்ணாடி போல் பிரதிபலித்தது.

"உன் வாய் அப்படிச் சொன்னாலும்... உன் கண் உன் மனசை அப்படியே காட்டி கொடுக்குதே... ஏன் அம்மு நான் உன்னை அணைச்சப்போ நெளிஞ்ச... இதுக்கு முன்னாடி நான் உன்னை அணைச்சது இல்லையா?அப்போ எல்லாம் நீ இப்படி நடந்துக்கிட்டது இல்லையே... இப்போ என்ன புதுசா?" அவனின் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் தலையைக் குனிந்து கொண்டாள் அவள்.

"ஏன்னு நான் சொல்லவா..." அவனின் வார்த்தையில் அவள் திகைப்பாய் அவனைப் பார்த்தாள்.

"ஏன்னா நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிறேன்னு சொன்னதால தான் நீ இப்படி நடந்துக்கிற... என்ன அப்படித் தானே...?" அவனின் கேள்வியில் அவள் தலை தானாக ஆமென்பது போல் அசைந்தது.

"எத்தனை நாளைக்கு இப்படிக் கல்யாணமே பண்ணிக்காமல் இருக்கப் போற... நான் இல்லைன்னா வேறொருத்தன் வர தான் போறான்... நீ அவனைக் கல்யாணம் பண்ணித்தான் ஆகணும்..." அவனின் பேச்சில் அவள் உடல் அதிர்ந்தது.

"உன்னைப் பத்தி நல்லா புரிஞ்சிக்கிட்டவன்ங்கிற முறையில் நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கக் கேட்டது தப்பா?நான் சொல்ல போறதை நல்லா கேட்டுட்டுப் பதில் சொல்லு..." என்றவன் அவளருகில் வந்து நின்றவன் வெளிப்புறத்தை வேடிக்கை பார்த்தான். பின்பு அவள் பக்கம் திரும்பி தீர்க்கமாய்ப் பார்த்தவன் தன் மனதில் உள்ளதை சொல்ல ஆரம்பித்தான். அதைக் கேட்க கேட்க அவளின் முகத்தில் வேதனை, துக்கம், ஆராய்ச்சி, குற்றவுணர்ச்சி, மகிழ்ச்சி எனப் பலவிதமான உணர்வுகள் வந்து போனது. கடைசியில் அவள் முகத்தில் தேங்கிய ஒரே உணர்வு நன்றி மட்டுமே...

"ஆது... தேங்க்ஸ்... தேங்க்ஸ்..." கண்கள் கலங்க அவனின் கையைப் பிடித்துக் கொண்டு நன்றி சொன்னவளை கண்டு அவனுக்கு இரக்கம் சுரந்தது.

'தகுதியில்லாதவனைக் காதலித்தது தவிர... அம்மு என்ன பாவம் செய்தாள்...' அவன் மனம் அவளுக்காகக் குமுறியது. தன் முகத்தைப் பார்த்து கொண்டிருந்தவளை கண்டு தன் முகபாவனையைச் சடுதியில் மாற்றிக் கொண்டவன்,

"அம்மு தேங்க்ஸ் எல்லாம் சொல்றளவுக்குப் பெரிய ஆள் ஆகிட்டியா?" அவள் மனதை மாற்ற எண்ணி அவன் பேச... அது மிகச் சரியாய் வேலை செய்தது.

"ஆமாம் பின்னே... கல்யாணம் பண்ணிக்கிற அளவுக்கு வளர்ந்துட்டேன் இல்லையா... அப்போ நான் பெரியவள் தானே..."

"ஆமாம் ஆமாம்... நீ நூற்று கிழவியே தான்..." அவன் கிண்டலடிக்க...

"நான் நூற்றுக்கிழவி என்றால்... என்னைக் கல்யாணம் பண்ணும் நீங்களும் நூற்றுக்கிழவன் தான்..." பதிலுக்கு அவனை அவள் வார... அதைக் கேட்டு அவன் வாய்விட்டு சிரிக்க... அவனின் சிரிப்பு அவளையும் தொற்றிக் கொள்ள அவளும் மனம் விட்டு சிரித்தாள். அவர்களின் சிரிப்புச் சத்தம் கீழே இருந்தவர்களின் காதை எட்ட... அனைவரின் முகத்திலும் மகிழ்ச்சி நிரம்பி வழிந்தது. இனி மதியை ஆதர்ஷ் பார்த்து கொள்வான் என்ற நம்பிக்கை அவர்கள் மனதில்ஆழமாய்ப் பதிந்தது.

"அம்மு என் மேல் உனக்கு நம்பிக்கை இருக்கு அல்லவா..."

"நூறு சதவீதம் இருக்கு..." அவளின் வார்த்தையில் மட்டுமல்ல... அவளின் முகத்திலும் அவன் மீதான நம்பிக்கை ஒளிர்ந்தது.

"தேங்க்ஸ் அம்மு... உன் நம்பிக்கையை நான் காப்பாற்றுவேன்... அதனால் சந்தோசமா கல்யாண

வேலையில் பங்கெடுத்துக்கோ... என்ன புரிஞ்சதா?" சரியென்பது போல் தலையாட்டியவளின் தலையை வாஞ்சையுடன் வருடி கொடுத்தான் அவன். வாழும் காலம் வரை அவனின் அம்முவை கண் கலங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று அவன் மனதுக்குள் உறுதியெடுத்துக் கொண்டான்.

****

"அண்ணா... வந்துட்டீங்களா?ஒரு நிமிசம் இருங்க... காபி போட்டு எடுத்திட்டு வர்றேன்..." கதிரிடம் கூறிய ராகேஷ் அவனின் பதிலை எதிர்பாராமல் சமையலறைக்குள் நுழைந்தான்.

"துரையண்ணன் எங்கே?" ராகேஷிடம் கேட்டுக் கொண்டே அவனைப் பின் தொடர்ந்தான் கதிர்.

"அவர் நேத்து தான் ஊருக்குப் போனார்... வர எப்படியும் ரெண்டு, மூணு நாளாகும்" கதிருக்குப் பதிலளித்துக் கொண்டே பாலை காய்ச்சி... அதைக் காபி கோப்பையில் ஊற்றிய தம்பியை மனதில் எழுந்த குற்றவுணர்வுடன் பார்த்தான்.

தான் இரவில் மோகினியுடன் சல்லாபித்து விட்டுப் பொறுப்பில்லாமல் காலையில் வீட்டிற்கு வர... பள்ளிக்குச் செல்லும் தம்பி வீட்டை பொறுப்புடன் பார்த்துக் கொள்வது கண்டு அவன் குற்றவுணர்வில் தவித்தான்.

"சாரி ராக்கி... ராத்திரி உன்னைத் தனியா விட்டுட்டு..." அதற்கு மேல் சொல்ல முடியாமல் சங்கடமாய் அவன் தம்பியை பார்க்க...

"அப்பா இல்லாம நீங்க தனியா கஷ்டப்படுறதை பார்க்கும் போது... நான் தனியா இருக்கிறது ஒண்ணும் பிரச்சினை இல்லை... நீங்க பிசினசை பாருங்க நான் வீட்டை பார்த்துக்கிறேன்... முதல்ல காபியை குடிங்க... அதுக்கு அப்புறம் பேசிக்கலாம்..." ராகேஷின் சொல் பேச்சு கேட்டு காபியை ஒரே மூச்சில் குடித்து முடித்தவன் மனதில்

தம்பியின் அறியாமையை எண்ணி குற்றவுணர்ச்சி எழுந்தது.

"அண்ணா... மதி அ..." அண்ணி என்று சொல்ல வந்தவன்..."மதி அக்கா வரவே இல்லையே... அவங்க எங்கே?" ராகேஷ் கேட்க... மதியின் நினைவில் கதிரின் முகம் கறுத்தது.

"அவளைப் பத்தின பேச்சை விடு... உனக்கு ட்யூசனுக்கு வேறு ஆளை ஏற்பாடு பண்றேன்"

"இல்லை வேண்டாம்... நானே படிச்சுக்குவேன்..." அவசரமாய் மறுத்த தம்பியை கதிர் யோசனையாய் பார்த்தான்.

"அண்ணா... இனி மதி அக்கா வரவே மாட்டாங்களா?" அவனின் குரலில் எழுந்த ஏக்கம் கண்டு அதிசயமாய் இருந்தது கதிருக்கு. இருந்தாலும் அவள் மேலுள்ள கோபம் தம்பியின் மீது திரும்பியது.

"வர மாட்டா... அவளைப் பத்திய எந்தப் பேச்சும் இனி நீ பேச கூடாது..." முடிவாய் அவன் சொல்ல... ராகேஷ் தான் காரணம் தெரியாமல் தவித்துப் போனான்.

'அண்ணனுக்குத் தெரியாமல் அண்ணிக்கு ஃபோன் பேசணும்...' என்று மனதில் நினைத்துக் கொண்டான்.

அதன் பின் வந்த நாட்களில் கதிர் இரவு வெளியில் தங்கும் பழக்கத்தை முழுதாய் குறைத்துக் கொண்டான். பகல் நேரம் முழுவதும் வேலையில் சென்றுவிட... இரவு சீக்கிரம் வீடு திரும்புபவன் தம்பியுடன் மீதி நேரத்தை செலவளித்தான். அதனால் அவனின் பெண்கள் பழக்கமும், மது பழக்கமும் கொஞ்சம் குறைய ஆரம்பித்தது. அதைப் பற்றி அவனை மேலும் சிந்திக்கவிடாமல் வேலை அவனைத் தன்னுள் இழுத்துக் கொண்டது.

****

அலைப்பேசி அழைப்பதை உணர்ந்த மதி அதை எடுத்து பார்க்க... அதில் கதிரின் வீட்டு எண் ஒளிர்ந்தது. அவளின் மூச்சு ஒரு நிமிடம் நின்று வெளிவந்தது. எடுத்துப் பேசுவதற்குப் பயந்தவளாய் அதைப் பார்த்து கொண்டிருந்தவளை கண்டு அருகிலிருந்த ஆதர்ஷ்,

"ஃபோனை எடுத்து பேசுவதுக்கு இவ்வளவு தயக்கமா அம்மு..." என்று கடிந்தவனை உணர்ச்சியற்ற பார்வை பார்த்தவளை கண்டு அவன் மனம் துணுக்குற்றது.

"யார் அம்மு?"

"அவன் வீட்டு எண்..." தயக்கத்துடன் கூறியவளை பார்த்து... கொஞ்சமும் தயக்கமில்லாமல்,

"பேச வேண்டியது தானே..." அவன் சொன்னதைக் கேட்டு ஆச்சரியத்தில் கண்கள் விரிய பார்த்தவளின் கன்னத்தைச் செல்லமாகத் தட்டியவன்,

"கதிர் உன் கூடப் பேச சான்ஸே இல்லை. ராகேஷா தான் இருக்கும்... அண்ணன் செய்த காரியத்துக்குத் தம்பி என்ன பாவம் செய்தான்... நீ பேசும்மா..." அவர்கள் பேசி முடிக்கும் முன் இரு முறை அழைத்து விட்டு அலைப்பேசி அமைதியாகி இருந்தது.

"நீ ஃபோன் போட்டு என்னன்னு கேளு..." அவன் ஊக்குவிக்க... அவள் கதிரின் வீட்டு எண்ணிற்கு அழைத்தாள். அவளின் நடுங்கும் கைகளைக் கண்ட ஆதர்ஷ்... அதை ஆதரவாய் பிடித்துக் கொள்ள... அவள் அவன் முகம் பார்க்க... அவனோ 'நானிருக்கிறேன் உனக்கு' என்பது போல் கண்மூடி திறக்க... அதில் அவள் மனம் அமைதியுற்றது.

"அண்ணி... எப்படியிருக்கீங்க?" அன்போடு கேட்ட ராகேஷின் குரல் அவள் காதில் விழுந்து அவள் கண்களைக் கலங்க செய்தது.

"நல்லாயிருக்கேன் ராகேஷ்... நீ எப்படியிருக்க...? படிப்பு எல்லாம் எப்படிப் போகுது...?" முதலில் சிறிது

தயங்கினாலும்... பின் பழைய மதியாய் பேச்சு மடை திறந்த வெள்ளம் போல் அடுத்தடுத்து வந்தது.

"நான் நல்லாயிருக்கேன் அண்ணி... படிப்புச் சூப்பரா போகுது... என்ன நீங்க இல்லாதது தான் குறை... நீங்க எப்போ வருவீங்க?அண்ணன் கிட்ட கேட்டா கோபப்படுறாங்க..." அவன் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் சிறிது நேரம் மௌனம் காத்தவள்,

"எனக்குக் கல்யாணம் நடக்கப் போகுது ராகேஷ்... நான் இப்போ ஹைதராபாத்தில் இருக்கேன்"

"அண்ணி என்ன சொல்றீங்க?அப்போ கதிர் அண்ணன்...?" ராகேஷ் அதிர்ச்சியில் கூவி விட்டான்.

"யாருக்கு யாருன்னு அந்தக் கடவுள் எழுதி வைச்ச கணக்கு தான் பலிக்குது... இடையில் நாம காண்கிற கனவு சில நேரம் பலிக்கிறது இல்லை... அது நனவாகாமல் கனவாகவே கலைந்து போய்விடுகிறது... இதுல யாரையும் குறை சொல்லி பிரயோஜனம் இல்லை..." அவளின் பேச்சு அவனுக்குச் சரியாகப் புரியாவிட்டாலும்...

"நிச்சயம் உங்க மேல் தப்பு இருக்காது அண்ணி... அண்ணன் மேல் தான் தப்பிருக்கணும்... அவங்களுக்காக நான் பரிதாபப்படுறேன்... போனதை விடுங்க அண்ணி... உங்க கல்யாணத்துக்கு என்னுடைய வாழ்த்துக்கள்..." கண்ணில் வழிந்த கண்ணீரை துடைத்துக் கொண்டே... தான் அழுகிறதை அவளுக்குத் தெரியா வண்ணம் குரலில் கூட அதை மறைத்தவனாய்ப் பேசினான் ராகேஷ்.

"தேங்க்ஸ்..." சொல்லும் போதே மதிக்கும் கண்கள் கலங்கியது. அதைக் கண்ட ஆதர்ஷ் ஒரு கையால் அவளை அணைத்துக் கொண்டு மறுகையால் அலைப்பேசியை வாங்கியவன்,

"ஏன் ராகேஷ் உங்க அண்ணிக்கு மட்டும் தான் வாழ்த்துச் சொல்வியா?எங்களுக்கு எல்லாம் கிடையாதா?" திடுமென

ஒலித்த அவனின் குரலில் திகைத்து போன ராகேஷ் பின் தன்னைச் சமாளித்துக் கொண்டு,

"நீங்க...?"

"மதியை திருமணம் செய்யப் போகும் அதிர்ஷ்டக்காரன்..."

"உண்மையில் அண்ணியைத் திருமணம் செய்ய நீங்கள் கொடுத்து வச்சிருக்கணும்.." என்றவன் தவறு புரிந்தவனாய்... நாக்கை கடித்துக் கொண்டு,

"அண்ணின்னு சொன்னதுக்குச் சாரி..."

"நானும் உன் அண்ணன் மாதிரி தான் ராகேஷ்... மதியை நீ தாராளமாய் அண்ணின்னு சொல்லலாம்..." பெருந்தன்மையாய் சொன்ன ஆதர்ஷை கண்டு மதி மற்றும் ராகேஷ் இருவரின் மனமும் நெகிழ்ந்தது.

"தேங்க்ஸ் அண்ணா..." மனதார நன்றியுரைத்தான் ராகேஷ்.

"வெறும் தேங்க்ஸ் மட்டும் போதாது... எங்க கல்யாணத்துக்கும் நீ வரணும்..." என்ற ஆதர்ஷ் மேலும் சில நிமிடங்கள் பேசிவிட்டு அலைப்பேசியை வைக்க... மதி அவனைக் கண்ணிமைக்காமல் பார்த்து கொண்டிருந்தாள். அவன் என்ன என்பது போல் பார்க்க...

"நீங்க சோ ஸ்வீட் ஆது..." அவன் தாடையைப் பற்றிச் சொன்னவளை பார்த்து அவன் புன்னகைக்க... இனி தன் வாழ்வு நிம்மதியாகச் செல்லும் என்ற நம்பிக்கை மதியின் மனதில் அழுத்தமாய் விழுந்தது.

****

"நீ எதுக்கு என்னைப் பார்க்கணும்ன்னு வந்திருக்க...?" கதிர் தன் முன் நின்றிருந்த ஆதர்ஷை வெறுப்பாய் பார்த்தான்.

"உன் கூட விருந்தாட நான் வரல... எங்க கல்யாண பத்திரிக்கையை உனக்கு வைக்கத் தான் வந்தேன்..."

அழுத்தமாய்ச் சொன்ன ஆதர்ஷ் கதிரிடம் ஒரு அழைப்பிதழை நீட்டினான். அதை வாங்காமல் அலட்சியமாய் அவனைப் பார்த்த கதிர்,

"உன் கல்யாணத்துக்கு நான் ஏன் வரணும்...?"

"என் கல்யாணம் மட்டுமல்ல... எனக்கும் மதிக்குமான கல்யாணம்..." அவன் சொல்லும் போதே அதை வாங்கிப் பார்த்த கதிர்,

"என்னை விடச் சிறந்த மணமகனை உன் மதிக்கு தேர்ந்தெடுப்பேன்னு சொன்னே... கடைசியில் நீ தானா அது...? நான் நினைத்தது சரியா போச்சு..."

"ஏன் எனக்கு என்ன குறைச்சல்... நிச்சயம் உன்னை விட நான் பல மடங்கு அவளுக்குப் பொருத்தமானவன் தான்..." ஆதர்ஷின் பதிலில் கதிரின் முகம் கறுத்துப் போனது.

"அழைப்பை வச்சாச்சு இல்லையா... அப்போ போய்க்கிட்டே இருக்க வேண்டியது தானே..." அழைப்பிதழை மேஜை மேல் அலட்சியமாய்த் தூக்கி போட்டவன் அதை விட அலட்சியமாய் ஆதர்ஷை பார்த்தான்.

"நீ சொன்னாலும் சொல்லைன்னாலும் நான் இங்கே இருக்கப் போறதில்லை... எங்க கல்யாணத்துக்கு நீ கட்டாயம் வரணும்..." ஆதர்ஷின் பேச்சில் கதிர் அவனைப் புரியாமல் பார்த்தான்.

"அப்போ தான் மதியின் இழப்பை நீ உணருவ..." அவனின் பேச்சில் மீண்டும் கதிரின் முகத்தில் அலட்சியம் குடி கொண்டது.

"அதுக்கு வேற ஆளை பாரு..."

"மதியின் அருமை, அவளின் காதல் எல்லாத்தையும் உணராத ஒரு முட்டாள் நீ... அங்கே வந்து பாரு... எவ்வளவு பெரிய பொக்கிஷத்தை நீ இழந்திட்டன்னு நீ உணருவ...

மதி அந்தளவுக்கு அருமையான பெண்..." ஆதர்ஷ் சொல்லும் போதே வலது கையை உயர்த்திய கதிர்...

"இப்போ என்ன நான் வரணும்... வந்து மதியை நீ கல்யாணம் பண்ணிக்கிட்டதால் எனக்கு எந்த இழப்பும் இல்லைன்னு சொல்லணும்... அவ்வளவு தானே... வர்றேன்... போதுமா..." கடுமையுடன் கதிர் சொல்ல... அதைக் கண்டு ஆதர்ஷுக்குச் சிரிப்பு வந்தது.

"உன் வரவை நான் எதிர்பார்ப்பேன்... ஆனால் நான் உன்னை மாதிரி மரியாதை தெரியாதவன் இல்லை... உன்னை மரியாதையாய் கவனிச்சு வழியனுப்ப வேண்டியது என் பொறுப்பு..." வந்த நேரத்தில் இருந்து தன்னை நிற்க வைத்து பேசி கொண்டிருக்கும் கதிருக்கு மறக்காமல் வார்த்தையால் கொட்டு வைத்த ஆதர்ஷ்... அவனின் முகம் அவமானத்தில் கன்றி கறுப்பதை நின்று நிதானமாய் ரசித்துப் பார்த்துவிட்டு விடைப்பெற்றான்.

****

"தம்பி... மதிம்மா வீட்டில் பெரிய ஆளுங்க போலிருக்கு... ஆந்திராவிலுள்ள அரசியல்வாதியில் இருந்து சினி ஸ்டார் வரை அத்தனை பேரும் வந்திருக்காங்களே..." கதிரிடம் பேசியபடி வாயை பிளந்தார் மூர்த்தி. அவருக்குப் பிரத்யேக அழைப்பை விடுத்திருந்தினர் மதியும், ஆதர்ஷும். கதிர், ராகேஷ், மூர்த்தி மூவரும் மதியின் திருமணத்துக்கு ஹைதராபாத் வந்திருந்தனர்.

"பணமிருந்தா எல்லோரும் வர தான் செய்வாங்க அங்கிள்... இதைப் போய்ப் பெருசா சொல்றீங்களே..." அலட்சியமாய்ச் சொன்ன கதிரை கண்டு கொள்ளாமல் வேடிக்கை பார்த்தார் அவர்.

"ஹய்... என்னோட பேவரிட் தெலுங்கு ஆக்டர்... நான் போய் ஆது அண்ணா கிட்ட சொல்லி ஆட்டோஃகிராப் வாங்க போறேன்" சொல்லிய ராகேஷ் துள்ளி குதித்துக் கொண்டு மணமகனை காண சென்றான்.

ராகேஷின் செயலை கண்டு பல்லை கடித்தான் கதிர். அதிலும் தம்பியின் ஆது என்றழைப்பு அவனின் கோபத்தை அதிகரித்தது. அடக்கப்பட்ட கோபத்துடன் அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தான். அருகிலிருந்த மூர்த்தி ஏதேதோ பேசி கொண்டிருக்க... அதில் கவனம் இல்லாதவனாய் சுற்றிலும் வேடிக்கை பார்த்தான் கதிர். கல்யாண மண்டபத்தின் ஒவ்வொரு இடத்திலும் பணத்தின் செழுமையைப் பார்க்க முடிந்தது. ஆனால் அதிலெல்லாம் கதிரின் கவனம் செல்லவில்லை. எப்போதடா திருமணம் முடியும்... கிளம்பலாம் என்று எரிச்சலுடன் அமர்ந்திருந்தான். ஏனெனில் ஆதர்ஷிடம் விட்ட சவாலுக்காகத் தான் அவன் இங்கே வந்ததே...

'உன் மதியை கண்டதும் நான் என் மதியை இழக்கவில்லை பார்... நான் அந்தளவுக்கு ஸ்டெடியானவன்...' மனதில் அவன் நினைத்துக் கொண்டிருக்கும் போதே மணமேடையில் சலசலப்பு எழ... அவனின் கண்கள் அங்கே சென்றது.

அங்கே மதி மஞ்சள் நிற கூரை புடவையில் அழகு தேவதையாய் உறவினர் பெண்கள் சூழ நடந்து வந்த காட்சியைக் கண்டவனின் கண்கள் அவள் மீதே நிலைத்து நின்றது. எப்போதுமே அவன் அவளை எந்தவித அலங்காரமும் இல்லாமல் எளிமையாய் தான் பார்த்திருக்கிறான். இந்த மாதிரி முழு அலங்காரத்தில் அவளை அவன் பார்த்தது இல்லை. முதன்முறையாக அவளின் அழகு அவனின் இதயத்தினுள் அவனையும் அறியாமல் நுழைந்தது.

மணவறையில் அமர்ந்து சடங்குகள் செய்து கொண்டிருந்த மதியை மீண்டும் மீண்டும் பார்த்து கொண்டிருந்தவனின் அடி வயிற்றில் இருந்து எழுந்த ஒரு உணர்வு அவனின் உடல் முழுவதும் சுகமாய்ப் பரவ... இதுநாள் வரை அவனின் மனதிலிருந்த வெற்றிடத்தை அந்த உணர்வு அழகாய் நிரப்பியது. அந்த உணர்வு எந்த வகையானது? என்பதை ஆராயந்தவனின் மனம் அவனின் உணர்வுக்கான விடையைச் சொல்ல... அந்த

விடையை உணர்ந்தவன் அதிர்ச்சியில் தன்னையும் அறியாமல் நாற்காலியில் இருந்து எழுந்துவிட்டான். அவனின் உடல் உணர்ச்சியின் தாக்கத்தில் நடுங்கியது. அவனின் இதயமோ தாங்க முடியாத வலியில் மரண ஓலமிட்டது.

காதல் உன்னதம்...!
காதல் சுகம்...!
உணர்ந்தேன் உன்னிடத்தில்...
காதல் வேதனை...!
காதல் வலி...!
அறிந்தேன் என்னிடத்தில்...

நாளை : 14

"தம்பி..." மூர்த்திக் கதிரின் கையைப் பற்றி இழுக்க... அதில் தன்னுணர்வு அடைந்தவனுக்குச் சுற்றுப்புற சூழ்நிலை மனதில் உறைக்கச் சட்டென்று நாற்காலியில் அமர்ந்தான்.

"தம்பி என்ன பண்ணுது...?" அவனின் முகத்தில் பெருகி வழிந்த வியர்வையைப் பார்த்து கவலையுடன் அவர் கேட்க,

"ஏன் அங்கிள் இப்படிக் கேட்கிறிங்க?" அவன் தன் உணர்வுகளை மறைத்துக் கொண்டு கேட்டான்.

"இல்ல... உடம்பெல்லாம் வியர்த்து விறுவிறுவித்து இருக்கீங்களே... அதான் கேட்டேன்... தம்பிக்கு உடம்பு முடியலன்னா நாம கிளம்பலாமா...?" அவர் அவனைக் கவலையுடன் பார்த்தார்.

அப்போது தான் உணர்ந்தான்... தன் மனதின் படபடப்பையும் அதனால் எழுந்த வியர்வைத் துளிகளையும்... தன் பேண்ட் பையிலிருந்து கைக்குட்டையை எடுத்து முகத்தை அழுந்த துடைத்தவன் மூர்த்தியை பார்த்து, "நத்திங்... அங்கிள்..." பதிலளித்து விட்டு மணமேடையை நோக்கி தன் கவனத்தைச் செலுத்தினான். அதில் மூர்த்தியும் நிம்மதியடைந்தவராய் மதியின் திருமண நிகழ்ச்சியை ஆர்வத்துடன் பார்க்கலானார்.

கதிரின் கண்கள் தான் மணமேடையில் இருந்ததே ஒழிய... அவனின் மனமோ ஏதேதோ எண்ணங்களில் சிக்கி தவித்தது. மதி அவனிடம் காதலை யாசித்த போதெல்லாம்... காதலா... அது கிலோ என்ன விலை என்று திமிராய் அவளைப் பார்த்து கேட்டவன்... இன்று அதே காதலில் சிக்கி தவிப்பது விந்தையிலும் விந்தை. இப்போதுமே தான் மதியை காதலிக்கிறோம் என்பதைக் கூட அவனால் நம்ப முடியவில்லை. அலங்கார தேவதையாய் கண்ட அவளின் தோற்றம் அவன்

இதயத்தில் அவன் அனுமதியில்லாமல் உள்ளே நுழைந்து சிம்மாசனம் போட்டு அமர்ந்தது என்னமோ உண்மை தான். அப்போது கூட அவன் தன் மனதை புரிந்து கொள்ளவில்லை.

கதிர் தன் காதலை உணர்ந்த கணத்தை நினைக்கும் போதே இப்போதும் ஒருவித வலி இதயத்தில் இருந்து எழுந்து உடல் முழுவதும் பரவுவதை உணர்ந்தான். மணமேடையில் ஆதர்ஷின் அருகில் அமர்ந்த மதி அவனின் கையோடு கை சேர்த்துத் திருமணச் சடங்குகளைச் செய்த அந்த நொடியில், 'என் மதியின் கையைத் தொடுகிறானே? எவ்வளவு தைரியம்...' அவன் மனம் வெகுண்டு எழுந்தது. அடுத்த நொடி அந்தத் தைரியத்தின் அளவை அவன் உணர்ந்த போதோ... அவனின் சப்தநாடியும் அடங்கி ஒடுங்கியது. அதிலும் 'என் மதி...' அவன் மனம் குறிப்பிட்ட அந்த வார்த்தைகள் அவனின் ஆழ்மனதை அவனுக்கே புதிதாய் அறிமுகப்படுத்தியது.

'என் மதி... அவள் என் மதி தானோ...? இதை எப்படி நான் உணராமல் போனேன்...?' வேதனையில் கண்களை இறுக மூடிக் கொண்டான். அவனின் மூடிய விழிகளில் மதியின் பிம்பமே ஊர்வலமாய் வந்து போனது. அதிலும் முதன்முதலாய் அவளைப் பார்த்த போது அவள் உடுத்தியிருந்த புடவையுடன், கையில் கோப்பை பிடித்துக் கொண்டு அவனை ஆர்வமாய்ப் பார்த்தபடி நின்ற மதியை நினைவில் கண்டதும் திடுக்கிட்டவனாய் கண்களைத் திறந்தான் அவன்.

'கடவுளே அப்போதிருந்தா மதியை எனக்குப் பிடித்திருந்தது... இது ஏன் எனக்கு இவ்வளவு நாள் புரியாமல் போனது...?' அவனின் கேள்விக்கான விடையை அவனின் மனம் உடனே சொல்லியது. அது... அர்விந்த் மேலிருந்த கோபம் எனும் மூடுபனி அவள் மீதான காதலை மறைத்திருந்தது. ஆனால் இன்று அவள் ஆதர்ஷுக்குச் சொந்தமாகப் போகிறாள் என்றவுடன் அவனின் தான் என்கிற அகங்காரம் அடிப்பட்டு அவள்

மீதான காதல் அணையை உடைத்துக் கொண்டு வரும் வெள்ளம் போல் ஆர்ப்பரித்துக் கொண்டு வெளிவந்து விட்டது.

'இப்போது என்ன செய்வது...? ஓடி போய்த் திருமணத்தை நிறுத்தி விடலாமா? இல்லை மதியின் கையில் காலில் விழுந்தாவது... நான் உன்னைக் காதலிக்கிறேன்... நீ அருகில் இருந்த போது உணராத உன் அருமையை நான் இப்போது உணர்ந்து கொண்டேன். என் தவறை மன்னித்து... எப்படியாவது என்னை ஏற்றுக் கொள் என்று கெஞ்சலாமா? அப்படிக் கெஞ்சினாலும் அவள் என்னை ஏற்றுக் கொள்வாளா? ஏனெனில் நான் செய்த காரியங்கள் அந்தளவுக்குக் கீழ்த்தரமானவை... அந்தளவுக்கு நானும் கீழ்த்தரமானவன் தானே... அவளை மாதிரி பரிசுத்தமான பெண்ணுக்கு ஆதர்ஷ் மாதிரி நல்லவன் தான் சரி... என்னை மாதிரி கெட்டவன், பொம்பளை பொறுக்கி வேண்டவே வேண்டாம்... என் காதல் என்னோடு போகட்டும்... அவளுக்குத் தெரிய வேண்டாம்... சொல்லவும் வேண்டாம்...'

கதிர் தான் மனதில் நினைத்ததைச் செயல்படுத்த எண்ணி தன் முகத்தை அழுந்த துடைத்தவன் நாற்காலியில் சாய்ந்தமர்ந்தான். மனதின் தெளிவு முகத்தில் பிரதிபலிக்க அமர்ந்திருந்தவன் எந்தவித சலனமும் இல்லாமல் மணமேடையைக் கவனிக்கலானான். என்ன தான் அவன் தன்னைக் காட்டி கொள்ளாமல் அமர்ந்த போதும் ஆதர்ஷ் மதியின் கழுத்தில் தாலி கட்டிய போது அவனின் மனம் சுக்குநூறாய் உடைந்ததை உணர்ந்தவனுக்கு அதற்கு மேல் அங்கிருக்கு முடியவில்லை.

"அங்கிள்... நான் வாஷ் ரூம் போய்ட்டு வந்திர்றேன்..." மூர்த்தியின் முகம் பார்க்காமல் கூறியவன்... அவர் பதிலை எதிர்பாராமல் செல்ல... அவர் அவனை விநோதமாய்ப் பார்த்தார்.

கதிரின் நல்ல நேரம் கழிவறையில் யாருமில்லை. அங்கிருந்த நிலைக்கண்ணாடியில் தன் பிம்பத்தைப் பார்த்தவனுக்குத் தான் தான் கண்ணாடியில் பிரதிபிலிக்கும் இந்த உருவமா...? என்று சந்தேகமாய் இருந்தது. ஏனெனில் பல நாட்கள் காய்ச்சலில் விழுந்தவன் போல் இருந்தான் அவன். கண்கள் கலங்கி சிவந்திருந்தது அவனின் மனதின் நிலையை நன்கு உணர்த்துவதாய் இருந்தது. அவனின் மனதில் திரும்பத் திரும்ப ஆதர்ஷ் மதியின் கழுத்தில் தாலி கட்டும் காட்சியே தோன்ற... அவன் அப்படியே உடைந்து போனான். தன் காதலி, தன் மனதுக்கினியவள் வேறொருவரின் மனைவி என்ற நினைவு தந்த வேதனையை அவனால் தாங்க முடியவில்லை.

'ஐம் சாரி மதி... நான் உன் காதலை நிராகரித்த போது... உனக்கும் இந்த மாதிரி தானே வலித்திருக்கும்... இந்த வலியை என்னாலேயே தாங்க முடியலியே... நீ எப்படித் தாங்கின...? உன் மனசு பட்ட வேதனையை நான் இப்போ உணர்றேன்... என்னால முடியல மதி... உன்னை இழப்பது என்பது எந்த மனிதனுக்குமே வேதனை தான் என்றாலும்... என்னை மாதிரி ஒருவனுக்கு...??? அய்யோ கைக்குக் கிடைத்த பொக்கிசத்தை அதன் அருமை தெரியாமல் காலால் எட்டி உதைத்து விட்டேனே... எனக்கு மட்டும் காலச்சக்கரம் இருக்குமானால்... நீ என்னைக் காதலித்த காலக்கட்டத்திற்கே போய்விடுவேன்... உன் காதலை ஏற்றுக் கொண்டு உன்னுடன் சந்தோசமாய் வாழ்வேனே...' அந்த நினைவே அவனுக்குத் தித்திப்பாய் இருந்தது.

'உன் அண்ணன் மேலுள்ள கோபத்தினால் உன் காதலை உணராமல் போனேனே... இப்போ புரியுது... உன் அண்ணன் என் மேல் கோபப்பட்டதும் சரி தான்னு... என்னை மாதிரி ஒரு முட்டாளை உன் அண்ணன் பேசியதில் தவறே இல்லை... என்னோட எல்லா வீக்னெசும் தெரிஞ்சு இருந்தும் நான் தான் வேணும்ன்னு பிடிவாதமாய் நின்னியே... அப்படி என்ன கண்டே என்னிடத்தில்...?' தன் முகத்தைக் கண்ணாடியில்

பார்த்தான். அப்படி ஒன்றும் பிரமாதமான அழகனாய், ஆதர்ஷை விட அழகனாய் அவன் ஒன்றும் இல்லை. அப்படி இருந்தும் தான் எவ்வளவு தான் உதாசீனப்படுத்தினாலும் நாய்க்குட்டி போல் தன்னைச் சுற்றி வந்த மதியின் காதலை உணர்ந்தவன் மனதில் எல்லையில்லா வேதனை, வலி எழுந்தது. அவனின் கண்கள் அவனையும் அறியாமல் கலங்கியது.

அதற்குள் யாரோ வரும் ஓசை கேட்க... முகத்தைக் கழுவுவது போல் அவன் தலையைக் குனிந்து கொண்டான். முகத்தில் குளிர்ந்த நீரை வாரி அடித்த போதும் மனதின் வெம்மையை அதனால் குளிர்விக்க முடியவில்லை. முயன்று மனதை சமன்படுத்திக் கொண்டவன் வெளியில் வந்தான். வந்த வேலையை முடித்துக் கொண்டு எவ்வளவு சீக்கிரம் முடியுமோ... அவ்வளவு சீக்கிரம் ஊருக்கு கிளம்பி செல்ல வேண்டும் என்று முடிவு எடுத்தான்.

"தம்பி எங்கே போயிருந்தீங்க...? பரிசு பொருளை கொடுக்கப் போகலாமா?" மூர்த்திக் கேட்கவும்... சரியென்று தலையசைத்தவன் அவருடன் இணைந்து நடந்தான். ஏற்கெனவே அங்குத் திரண்டிருந்த கூட்டத்தின் வரிசையில் இவர்களும் இணைந்து கொண்டனர்.

தூரத்தில் நின்றிருந்த இவர்களைக் கண்ட ஆதர்ஷ் அர்விந்த் காதில் ஏதோ சொல்ல... அவன் இவர்களின் பக்கம் வந்தான்.

"வாங்க கதிர்...வாங்க மூர்த்திப்பா..." இருவரையும் கைக் கூப்பி வணங்கி வரவேற்ற அர்விந்தை கண்டு மனதுக்குள் கூனிக்குறுகி போய்விட்டான் கதிர். அவன் தங்கை எந்த அளவிற்குப் படுத்தி எடுத்திருக்கிறான் என்று தெரிந்தும் கூட அர்விந்த் புன்னகை முகமாய் வரவேற்றது கண்டு கதிர் தலை குனிந்தான்.

"ஆது... உங்க ரெண்டு பேரையும் கூப்பிடுறான்..." என்றவன் கூட்டத்தைத் தாண்டி இருவரையும் ஆதர்ஷ் - மதி தம்பதியினரிடம் அழைத்துச் சென்றான்.

மணமேடை செல்கின்ற கொஞ்ச தூரத்தை கடப்பதற்குள் கதிருக்கு என்னமோ இமய மலை ஏறிய ஆயாசம் வந்தது. தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு முயன்று நடந்தவன் மணமக்களின் அருகே சென்றடைந்தான். மதியின் கழுத்தில் கிடந்த தாலி, நெற்றியில் பளிச்சிட்ட குங்குமம், தலையில் சூடியிருந்த பூ எல்லாவற்றையும் கண்ட போது அவன் இழந்த இழப்பு எத்தகையது என்பது அவனுக்குப் புரிந்தது. தான் மட்டும் அவளின் காதலை ஏற்றிருந்தால் இந்தப் பூவுக்கும், பொட்டுக்கும், தாலிக்கும் தான் மட்டுமே உரிமையாய் இருந்திருப்போம் என்ற உண்மை அவன் முகத்தில் அறைந்து அவனின் வேதனையை இன்னமும் அதிகரித்தது. ஆனாலும் மணமக்கள் எதிரில் எதையும் காட்டி கொள்ளக் கூடாது என்று முயன்று தன் முகத்தை மாற்றிக் கொண்டான்.

கதிரின் வரவை அங்கீகரிக்கும் பொருட்டு ஆதர்ஷ் அவனைப் பார்த்து புன்னகைக்க, மதியோ அவனின் வரவை உணர்ந்தவளாய் அவன் முகத்தைப் பார்க்க பிடிக்காமல் தலையைக் குனிந்து கொண்டாள்.

"வாழ்த்துக்கள்..." ஆதர்ஷின் கைகளைப் படித்துக் குலுக்கியவன் தான் கொண்டு வந்திருந்த பரிசு பொருளை நீட்டினான்.

கதிர் நீட்டிய பரிசு பொருளை ஆதர்ஷ் மனமுவந்து வாங்கிக் கொள்ள... மதியோ குனிந்த தலை நிமிராமல் தரையில் எதையோ தேடி கொண்டிருந்தாள். "மதி கிப்ட் கொடுத்தா... தேங்க்ஸ் சொல்லணும்... அது யாராயிருந்தாலும்..." ஆதர்ஷின் அழுத்தமான குரலில் அவனை நிமிர்ந்து உணர்ச்சியில்லாமல் ஒரு பார்வை பார்க்க... ஆதர்ஷ் அவள் மனம் புரிந்தவனாய் அவள் தோள் மேல் ஆதரவாய் கை வைத்து அணைக்க... அதில் என்ன உணர்ந்தாளோ... எந்தவித சலனமும் இல்லாமல் கதிரை நிமிர்ந்து பார்த்தவள்,

"தேங்க்ஸ்..." என்று சொன்னவள் இரு கரத்தையும் கூப்பினாள். அவளின் கண்ணில் தெரிந்த அந்நியத்

தன்மையில் கதிர் மனமுடைந்து போனான்.

"பாவா..." திடீரென்று ஒலித்த மதியின் அழைப்பில் கண்கள் மின்ன இயல்பு போல் கதிர் அவள் புறம் திரும்பி பார்க்க... அவளோ ஆதர்ஷை பாவா என்றழைத்து ஏதோ பேசி கொண்டிருந்தாள். தன்னை மட்டும் அழைத்த அவளின் பாவா என்ற வார்த்தை இப்போது ஆதர்ஷையும் அழைப்பது கண்டு சொல்ல முடியாத வலி ஒன்று கதிரின் நெஞ்சில் எழுந்தது. அதை மறைக்கும் வழி தெரியாமல் அவன் தடுமாறிக் கொண்டிருக்கும் போது... மதியின் கவனம் கதிரின் பின்னால் நின்று கொண்டிருந்த மூர்த்தியிடம் சென்றது.

"அப்பா..." அவரைக் கண்ட மதிக்கு அவளையும் அறியாமல் கண்கள் கலங்கியது.

"மதிம்மா..." அவரின் குரலும் தழுதழுத்தது.

"ஆது..." கணவனின் கையைப் பிடித்து அவள் சுரண்ட... அவளின் மனம் புரிந்தவனாய்... தம்பதி சமேதராய் இருவரும் சேர்ந்து அவரின் காலில் விழ... அதில் அவர் மனம் நெகிழ்ந்து போனது.

"நல்லாயிருங்க... நல்லாயிருங்க..." அவர் மனமார வாழ்த்தினார். பெரிய மனிதர்கள் பலர் முன்னிலையில் தன் காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கிய அவர்களின் பெருந்தன்மை கண்டு பூரித்துத் தான் போனார். ஆதர்ஷ், மதியின் செயலை கண்ட கதிருக்கும் இருவரின் குணமும் நன்கு விளங்க அவனுக்குப் பேச நா எழவில்லை.

"சாப்பிட்டு தான் போகணும்..." என்றபடி கதிரை அணைத்த ஆதர்ஷ், அவனுக்கு மட்டும் கேட்கும் குரலில், "கவலைப்படாதே கதிர்... மதியை விட நல்ல பெண் உனக்குக் கிடைப்பாள்..." கதிர் திடுக்கிட்டு போய் அவனைப் பார்த்தான். கதிரின் திகைத்த பார்வையைக் கண்டு கண்சிமிட்டி சிரித்தான் ஆதர்ஷ். அவனின் உயர்ந்த குணத்தைக் கண்ட கதிர்,

"உங்க அளவுக்குப் பெருந்தன்மை எனக்குக் கிடையாது... யூ ஆர் ரியலி க்ரேட்... பெஸ்ட் ஆப் லக்..." கதிர் சொன்னதன் அர்த்தம் புரிந்து சிரித்தான் ஆதர்ஷ்.

அதற்குள் அங்கு ராகேஷும் வந்துவிட மணமக்களிடம் விடைப் பெற்றவன் உணவு கூட உண்ணாமல் அங்கிருந்து வெளியேறி விட்டான். அவன் மனம் இருந்த நிலைக்குத் தனிமை மிகவும் தேவைப்பட்டது. அது சென்னையில் தான் கிடைக்கும் என்பதை உணர்ந்தவன் சென்னைக்குக் கிளம்ப ஆயத்தமானான்.

கதிர் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்த மதி ஆதர்ஷ் புறம் திரும்பி, "நீங்களா அவனை அழைத்தது...?" அவள் குரலில் அடக்கப்பட்ட கோபம் இருந்தது. அவளின் கோபம் புரிந்தவனாய் அவளின் கையைப் பிடித்து ஆறுதல் படுத்தியவன்,

"ஆமாம்... எத்தனை அருமையான பெண்ணை நீ இழந்திருக்கிறாய் என்று அவனுக்குக் காட்ட வேண்டாமா?"

"அது மட்டும் தான் காரணமா ஆது...?"

"இல்லை... அது மட்டும் காரணம் இல்லை... உன் மனம் எந்தளவு திடமடைந்து இருக்குன்னு தெரிஞ்சிக்கவும் தான்..." அவனின் பேச்சில் அவனை முறைத்தாள்.

"கொஞ்சம் சிரித்தார் போல் முகத்தை வச்சுக்கோ... எல்லோரும் நம்மைத் தான் பார்க்கிறாங்க..." என்றவன்... "நீ இதையும் தாண்டி தான் வரணும் அம்மு... அவனைப் பார்த்தால் தான் உன் மனசு திடப்படும்... நிதர்சனத்தைக் கண்டு ஓடி ஒளிய கூடாது... அதைத் தைரியமா எதிர் கொள்ளணும்... நீ கதிரை எதிர் கொண்டு தான் ஆகணும்... அவனால் உன் மனசில் எந்தவித சலனமும் இல்லை என்பதை நீ உணரணும்..." அவன் சொல்லும் போதே...

"இன்னமும் என்னை நம்பலையா ஆது..." அவளின் கண்கள் கலங்பியது.

"ஷ்... இதென்ன பேச்சு அம்மு... உன்னை நம்பாமலா... அவனால் நீ எந்தளவுக்குக் காயப்பட்டு இருக்கேன்னு எனக்கு மட்டும் தான் தெரியும்... புண் சீழ் பிடிக்காமல் இருப்பதற்காக அதைக் கீறி அறுவை சிகிச்சை செய்வது இல்லையா... அது போல் தான் இதுவும்... அவனின் நடத்தை உன்னை எந்தவிதத்திலும் பாதிக்கவில்லை என்பதை உன் மனதுக்கு உணர்த்திக் கொண்டிருப்பது மூலம் நாளடைவில் உன் மனம் தெளிவடையும்..." அவன் பேச பேச அவளுக்குப் புரிய ஆரம்பித்தது. அதாவது கதிரை கண்டு பயந்து பின் வாங்காமல் அவனை நேருக்கு நேர் தைரியமாக எதிர் கொள்ள வேண்டும் என்பதை அவள் உணர,

"இப்போ புரிஞ்சிடுச்சு ஆது... தேங்க்ஸ்..." என்க,

"இனி வரும் காலங்களில் நமக்குள் தேங்க்ஸ் வரவே கூடாது என்ன..." அவன் சிரிப்புடன் சொல்ல அவளும் சிரித்தபடி அவனின் சொல்லை ஆமோதித்தாள். அடுத்தடுத்து ஆட்கள் வர இருவரின் கவனமும் அங்கே செல்லலானது.

சென்னை வந்தடைந்த கதிர் நேரே சென்றடைந்த இடம் அவன் எப்போதும் செல்லும் விருந்தினர் இல்லம். தனிமையில் அவன் அசை போடுவதற்கு நிறைய விசயங்கள் இருந்தது. முதன் முதலாய் மதியை சந்தித்ததில் இருந்து... இன்று வரை அவன் மனம் நினைத்துப் பார்த்தது. தன் குண இயல்பு தெரிந்தும் தன்னைத் தாயாய் தாங்கியவளின் அன்பை எட்டி உதைத்த தன் மடமையை எண்ணி தனக்குள் உருகி, மறுகி கரைந்து கொண்டிருந்தவனைக் காவலாளியின் குரல் கலைத்தது...

"சார் நைட் ஆகிருச்சு... சாப்பிட ஏதாச்சும் வாங்கிட்டு வரட்டுமா..." என்றவனிடம் பணத்தைக் கொடுத்து சில மதுபானங்களையும், உணவையும் வாங்கி வர சொன்னான்.

காவலாளி சென்றதும் அவனின் மனம் மீண்டும் மதியிடத்தில் வந்து நின்றது. அவள் நினைவு வந்ததும் இருள் நிறைந்த அந்த இரவு பொழுது அவளுக்கு இது என்ன மாதிரியான இரவு என்பதை அவனுக்கு உணர்த்த... அவன் கண்கள் இயலாமையில் கலங்கி சிவந்தது. என்ன தான் இருந்தாலும் தன் மனதுக்கினியவள் வேறொருவன் கையில் என்ற நினைவே அவனுக்கு வேப்பங்காயாய்க் கசந்தது. அவன் பல பெண்களைப் பார்த்தவன் திருமணம் முடிந்த அன்று வரும் முதல் இரவு எத்தகையது என்பதும் அவனுக்குத் தெளிவாகத் தெரியும். அந்த நிலையில் ஆதர்ஷியும் மதியையும் நினைத்து பார்த்தவனுக்கு அந்தக் காட்சியே சகிக்க முடியாததாய்...

'ச்சீ... என்ன மாதிரியான நினைவு இது... என்ன இருந்தாலும் அவர்கள் கணவன், மனைவி. இனி மேல் மதி ஆதர்ஷுக்கு சொந்தமானவள்... திருமணமான ஒரு பெண்ணை... வேறொருவனுக்குச் சொந்தமானவளை நினைப்பது மிகவும் தவறு...' அவனின் புத்தி இடித்துரைத்தாலும்... அவனின் மனமோ எஜமானின் காலடியை தேடும் நாய்க்குட்டியாய் மதியையே சுற்றி சுற்றி வந்தது. அவளின் நினைவை மறக்க வேண்டுமானால் அவனக்கு இப்போது உடனடி தேவை ஒரு பெண்... அவனின் கை அவனையும் அறியாமல் மோகினியின் எண்ணை அழுத்தியது. அவன் கூப்பிட்டதும் உடனே வர ஒத்து கொண்டவள் அடுத்த அரை மணி நேரத்தில் அவன் முன் வந்து நின்றாள்.

அவளைக் கண்டதும் உணவை மறந்தவனாய்... மதுவை மறந்தவனாய் அவளை அள்ளி எடுத்தவன் படுக்கைக்குத் தூக்கி சென்றவன்... ஒருவித வேகத்துடன் அவளை அணைத்து மேலும் மேலும் முன்னேறினான். அவனின் கை மோகினியின் மென்மையை உணர்ந்த போதும்... அவனின் மனமோ மதியை தான் நினைத்துக் கொண்டிருந்தது. தன்னைப் பார்த்து புன்னகைக்கும் மதி, தன்னைக் காதாலாய் பார்க்கும் மதி, பாவா என்று காதலோடு அழைக்கும் மதி, காதல் யாசகம் கேட்டுத்

தன்னிடம் கெஞ்சிய மதி என விதவிதமான மதி அவன் மனக்கண்ணில் வலம் வர... அவன் தாங்க முடியாமல்,

"மதி..." என்று தாபத்தோடு அழைத்தவன் மோகினியின் கூந்தலில் முகம் புதைத்தான். அடுத்த நொடி சட்டென்று அறை வாங்கியது போல் அவளிடமிருந்து விலகினான். பூவின் வாசம் கூடப் பெண்ணுக்குப் பெண் மாறுபடுமா என்ன...??? ஏன் மோகினியின் கூந்தல் பூவின் நறுமணம் அவனுக்கு மதியின் கூந்தல் பூவின் வாசத்தை நியாகப்படுத்தியது. அது நியாபகம் வந்ததும் மோகினி சூடிய பூவின் வாசம் சற்றுக் குறைந்தார் போல் தோன்றியது அவனுக்கு.

"என்ன சார்...?" மோகினி அவனைக் கேள்வியாய் பார்க்க...

"ஒண்ணுமில்லை லேசா தலைவலி..." அவன் சமாளிக்க...

"ஓ... அதான் பூ வாசம் பிடிக்கலையா?" என்றபடி தலையிலிருந்த பூவை கழட்டி அருகிலிருந்த மேஜையில் வைத்தவள்... "பூ உங்களுக்குப் பிடிக்கும்ன்னு சொன்னதால தான் வைச்சேன் சார்..." அவள் சொல்லும் போது தான் அவனுக்கே அது உறைத்தது. மதியிடம் பழகிய பின்பு தான் அவனுக்குமே பூவாசம் பிடித்துப் போனது. பூவாசம் மட்டுமா... அவளையும் தான்... என்று நினைத்தவன் காலம் கடந்த தன் தெளிவை கண்டு மனம் நொந்து தான் போனான்.

"சாருக்கு இன்னமும் மூட் வரலையா..." என்று கேட்டவள் அவனின் மனதை மாற்றும் பொருட்டு அவனின் இதழின் மீது தன் இதழை பொருத்த... என்றும் இல்லாத திருநாளாய் இன்று அவனுக்கு உமட்டி கொண்டு வந்தது. அன்றொரு நாள் மதியின் இதழை வலுக்கட்டாயமாய்ச் சுவைத்தது நியாபகம் வர... அதோடு சேர்ந்து அவளின் இதழின் மென்மையும் சேர்ந்து நியாபகம் வந்தது. அவளுக்கு அவன் மீது என்ன தான் கோபம் இருந்தாலும் அன்று அவனின் தொடுகையில் அவள் சற்றே நெகிழ்ந்தது... அவனுக்கு இப்போது தான் புரிந்தது.

அதைப் புரிந்த, உணர்ந்தவன் நொடியில் மோகினியிடமிருந்து விலகினான்.

அவனின் செயலில் அவள் வியப்பாய் அவனைப் பார்த்தாள். அவனோ அவளின் பார்வையைக் கண்டு கொள்ளாதவனாய் அவளுக்குக் கொடுக்க வேண்டியதற்கு அதிகமாய்ப் பணத்தை அள்ளி கொடுத்தவன்,

"இனிமேல் நானே உன்னை அழைத்தால் கூடத் தப்பித் தவறி வந்துவிடாதே..." என்றவனைப் புரியாமல் பார்த்தவள்,

"சார்..."

"ப்ளீஸ் லீவ் மீ அலோன்..." கெஞ்சுதலாய் சொன்னவனைப் பரிதாபமாய்ப் பார்த்தவள் அடுத்த நொடி அங்கிருந்து வெளியேறினாள்.

அவள் சென்றதும் அங்கிருந்த மது பாட்டிலை கையிலெடுத்தவன் அதைத் திறந்து வாயில் ஊற்ற போனான். அப்போது எங்கிருந்தோ மதிக்கு அவன் செய்து கொடுத்த சத்தியம் நியாபகம் வந்தது.

'உன் மேல் சத்தியமா இனி மேல் நான் குடிக்க மாட்டேன்...' அவன் போதையில் உளறியது தெளிவற்ற காட்சியாய் அவனுக்குத் தெரிந்தது. கையிலிருந்த மது பாட்டிலை வெறித்துப் பார்த்துகொண்டிருந்தவனின் மனதை மதி என்னும் புயல் மையம் கொண்டிருந்தது. அது அவனை ஒருவழி பண்ணாமல் போகாது என்பதை உணர்ந்த அவன் இயலாமையுடன் கையிலிருந்த பாட்டிலை தரையில் ஓங்கி அடிக்க... அது சுக்கு நூறாய் உடைந்து சிதறியது.

"நீ அடுத்தவன் பொண்டாட்டியானா எனக்கென்ன... நான் லவ் பண்றது என் மதியை... எனக்கு மட்டுமே சொந்தமான மதியை... நீ என் மதி இல்லை... அவள் என் மனசுக்குள் பத்திரமா இருக்கா... அவளைத் தான் நான் லவ்

பண்றேன்... ஐ லவ் யூ மதி பேபி... ஐ லவ் யூ... ஐ லவ் யூ அழகி பேபி..." முதல் பாதியை ஆங்காரமாய்ச் சொன்னவன் பிற்பாதியை சொல்லும் போது அவனின் குரல் உடைந்தது. அவனின் முகம் அழுகைக்கு மாறியது.

"என் நெஞ்சின் வலி தாங்க முடியல பேபி... இப்பவே செத்து போகணும் போலிருக்கு பேபி... எனக்கு நீ வேணும் பேபி... இந்த நிமிசம் நீ வேணும் பேபி... என்னை மன்னிக்க மாட்டியா பேபி... மன்னிச்சு ஏத்துக்க மாட்டியா பேபி..." தான் பேசுவது அவளுக்குக் கேட்காது... தான் நினைப்பது ஒரு போதும் நடக்காது என்பதை அவனின் அறிவு உணர்ந்தாலும் மனமோ அதை ஏற்க மறுத்தது.

"ஐ லவ் யூ பேபி..." என்றவன் இழப்பின் வலியை தாங்க முடியாமல் வாய்விட்டுக் கதறினான். அவனின் காதலும், அவளுக்காய் அவன் சிந்தும் கண்ணீரும் அவளிடத்தில் போய்ச் சேருமா...??????

தவம் நீ... வரம் நீ...!
வாழ்வு நீ... வசந்தம் நீ...!
உயிர் நீ... உறவு நீ...!
உனை இழந்த நான் மூடன் இனி...!!!

நாளை : 15

"ஆது... நாம இப்போ சென்னைக்குப் போய்த் தான் ஆகணுமா?" மதியின் குரலில் ஏனோ கலக்கம் இருந்தது.

"ஆமாம்... அதுக்கென்ன...?" அவளைப் பார்த்து அசால்ட்டாய் சொல்லிய ஆதர்ஷ் தன் உடைகளைப் பெட்டியில் அடுக்க ஆரம்பித்தான்.

"நா... நான் அங்கே வரல... நீங்க மட்டும் போய்ட்டு வாங்களேன்..." சிறுபிள்ளை போல் புரியாமல் கூறியவளை ஆதூரத்துடன் பார்த்தவன்,

"நமக்குக் கல்யாணம் ஆகியிருச்சு அம்மு... அந்த நினைப்பு கொஞ்சமாவது உன் மனசில் இருக்கா...?"

என்று கேட்டவனைத் திடுக்கிட்டு பார்த்தவளுக்குத் தன் மடத்தனமான பேச்சு புரிய... தன் பின்னந்தலையில் தானே தட்டி கொண்டு... தவறு செய்த குழந்தையாய் உதட்டை கடித்தவள்,

"சாரி ஆது..." அவள் அவனிடம் மன்னிப்பு வேண்ட, அவளருகே அமர்ந்தவன் அவளின் கைகளைப் பற்றிக் கொண்டு,

"சென்னைக்குப் போறது உனக்குக் கஷ்டமாயிருக்கா...?" அவனின் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் அவள் தலையைக் குனிய... தன் ஒற்றை விரல் கொண்டு அவள் முகம் நிமிர்த்தியவன்,

"அங்கே கதிர் இருக்கிறான்ங்கிறதால வர யோசிக்கிறியா?" அதற்குப் பதில் சொல்லாமல் அவள் இமை தாழ்த்த...

"அம்மு... இங்கே பாரு..." அவனின் அதட்டலில் அவனைப் பார்த்தவளின் கண்கள் லேசாகக் கலங்கியிருந்தது.

"உன் மனசில் அவன் இருக்கானா?" அவன் கேட்டதற்கு இல்லை என்பது போல் தலையாட்டினாள்.

"இன்னமும் அவனைக் காதலிக்கிறியா?" கேட்டவனை உணர்ச்சியில்லாமல் அவள் பார்க்க... அவனோ அவளைக் கண்டு கொள்ளாமல்,

"திரும்ப அவனைப் பார்த்தா உன் கட்டுப்பாட்டை இழந்திடுவேன்னு நீ பயப்படுறியா?" அவனின் இந்தக் கேள்வியில்,

"ஆது..." என்று கத்திவிட்டாள் அவள். கத்தியவளை கண்டு பதறாமல் அவன் அவளையே பார்த்துக் கொண்டிருக்க...

"என்னை என்ன நினைச்சீங்க... இன்னமும் அந்தக் கேடு கெட்டவனை நினைச்சு உருகிற அளவுக்கு நான் ஒண்ணும் தரம் கெட்டு போயிடல... அதை விட இப்போ நமக்குக் கல்யாணமாகிருச்சு... நாம ரெண்டு பேரும்

கணவன் மனைவி... தயவுசெஞ்சு இனி மேல் இந்த மாதிரி பேசி என் மனசை நோகடிக்காதீங்க... ப்ளீஸ்..." என்றவளை கண்டு அவன் உள்ளம் வலித்தது... இருந்தாலும் இதைப் பற்றி முதலும் கடைசியுமாய் அவளிடம் பேசியே ஆக வேண்டும் என்று நினைத்தவன்,

"சரி நீ சொல்றதை நான் நம்பறேன்... அதே மாதிரி நீயும் சென்னைக்குக் கிளம்பு..." என்றவனை இயலாமையுடன் அவள் பார்க்க...

"இங்கே பாருடா... வாழ்க்கையோட நிசர்தனத்தை ஏத்துக்கிட்டு வாழ்ந்து தான் ஆகணும்... அப்படியே நீ அவனை எங்கேயாவது பார்த்தா கூட 'ஹாய்', 'பை'ன்னு அவனைப் பார்த்துச் சகஜமா பேசிட்டு போற அளவுக்கு நீ இருக்கணும்... அதை விட்டுட்டு அவனைப் பார்த்து ஓடி ஒளியறாதால எதுவும் மாறிட போறதில்லை... என்னைக் கேட்டா அவனைத் தைரியமா பேஸ் பண்ணனும்ன்னு தான் நான் சொல்வேன்"

"அவனைப் பேஸ் பண்றதுல எனக்கு எந்தத் தயக்கமும் இல்லை... ஆனால் அவனைப் பார்க்கும் போதெல்லாம் நான் செஞ்ச முட்டாள்தனம் தான் நியாபகத்துக்கு வருது... அவனை மாதிரி ஒரு பொறுக்கியை போய்க் காதலிச்சேனேன்னு என் மேலேயே எனக்குக் கோபம் வருது... என்னோட தூய்மையான காதலுக்குக் கொஞ்சமும் தகுதியில்லாதவனை விரும்பி வீட்டில் உள்ளவங்களை எதிர்த்துட்டு அவனுக்காக எல்லாம் செஞ்சேனே... அதை நினைச்சா எனக்கு உடம்பெல்லாம் பத்திட்டு எரியற மாதிரி இருக்கு... மொத்தத்துல என்னை நினைச்சே எனக்கு ஆத்திரம் ஆத்திரமா வருது... இந்த ஆத்திரம் அவனைப் பார்க்கும் போது பல மடங்கு அதிகரிச்சு... என்னைப் பார்க்க எனக்கே பிடிக்கல... அந்தளவுக்கு என்னைப் பார்த்தா எனக்குக் கேவலமா, அவமானமாயிருக்கு..." வாய்விட்டு கதறியவளை ஆதரவாய் அணைத்தவன்,

"அம்மு முதல்ல அழுகை நிறுத்து... உன்னை மாதிரி ஒரு பெண்ணை இழந்ததுக்கு அவன் தான் அழணும்... நீ ஏன் அழற?உன் கண்ணீருக்கு தகுதியானவன் அவன் இல்லை. நீ இந்த மாதிரி சுய இரக்கத்தில் கரைஞ்சேனா அதுவே உன்னை உருக்கி எடுத்துரும்... நீ என்ன தப்பு செஞ்ச... நீ இந்தளவுக்குப் பீல் பண்றதுக்கு... காதல் எல்லோர் வாழ்க்கையில் வர தான் செய்யும்... சிலருக்கு மலராய்... சிலருக்கு முள்ளாய்... உனக்கு அது முள்ளாய் மாறி வலியை கொடுத்திருக்கு... அதிலிருந்து நீ மீண்டு வரணும்... கதிரை நீ பார்த்தா கூட அவனைப் பார்த்து புன்னகைச்சிட்டு வர்ற அளவுக்கு நீ மாறணும்... அதுக்கு நான் உனக்குத் துணையா இருப்பேன்... என்ன சரியா? இப்போ சொல்லு... நாம சென்னைக்குப் போகலாமா...? தமிழ்நாட்டிலேயும் நம்ம நிறுவனம் கால் பதிக்கணும்ங்கிறது உங்க அப்பாவோட நீண்ட நாள் ஆசை... இப்போ சென்னையில் இருக்கும் நம்ம கடையை மேலும் பல சிட்டிக்குக் கொண்டு போகணும்... இதெல்லாம் நீ என்னுடன் வந்தால் மட்டுமே சாத்தியமாகும்... நீ வரலைன்னா... சென்னையில் இருக்கிற கடையை உன் அண்ணன் இழுத்து மூடிருவான்... அந்தளவுக்கு அவன் சென்னைங்கிற பேரில் வெறுப்பாய் இருக்கான். அப்புறம் உங்க அப்பா கண்ட கனவு கனவாகவே போய்விடும்" ஆதர்ஷின் இந்த வார்த்தைகள் அவளிடத்தில் வெற்றிகரமாகச் சென்றடைந்து அவளைச் சென்னைக்குக் கிளம்பச் சம்மதிக்க வைத்தது.

****

"அக்கா... வாட் அச் சர்ப்ரைஸ்... திடீர்ன்னு எங்க நியாபகம் வந்திருக்கு...?" இரவு வீடு திரும்பிய கதிர் அங்கே கவிதா வந்திருப்பதைக் கண்டு ஆனந்த அதிர்ச்சியடைந்தான்.

"ஏண்டா நான் என் பிறந்த வீட்டுக்கு வர்றது உனக்குச் சர்ப்ரைஸா இருக்கா... ஏன் நான் வர கூடாதா...?"

"இது உங்க வீடு தாராளமாய் வரலாம்க்கா..." அவளைப் பார்த்து தோளை குலுக்கியவன் சரணின் அருகில் அமர்ந்து அவனிடம் பேச துவங்கினான். கதிரை இந்த மாதிரி பார்ப்பதற்கு வெகு பாந்தமாய் இருந்தது. அவன் இந்த மாதிரி சரணிடம் அமர்ந்து பொறுமையாகப் பேசும் நபர் அல்ல. தாய்மாமன் என்ற சொல்லுக்கு அவன் எடுத்துக்காட்டாய் ஒரு போதும் இருந்ததில்லை. அந்த இடத்தை ராகேஷ் தான் நிரப்பிக் கொண்டிருந்தான்.

"என்ன ராகேஷ்... கதிர் இப்போ திருந்திட்ட மாதிரி இருக்கு..." அவள் தன் சின்னத் தம்பியின் காதை கடித்தாள்.

"ஆமாக்கா... அண்ணா இப்பெல்லாம் குடிக்கிறது இல்லை... தொழிலையும் நல்லா கவனிச்சிக்கிறதா மூர்த்தி அங்கிள் சொன்னார்... இந்த மன்த் ப்ராபிட் எப்பவும் இல்லாத அளவுக்கு அதிகமாம். அண்ணா இப்படி மாறியதை நினைச்சா பெருமையாயிருக்கு... அதே சமயம் மதி அண்ணியைக் கை நழுவ விட்டதை நினைச்சா வருத்தமாயிருக்கு..." பெரிய மனிதனாய் பேசிய சிறியவனைப் பார்த்து சிரித்தவள்,

"டேய் பெரிய மனுசா... போதும்டா உன் பீலிங்ஸ்... இப்போ எதுக்குக் கவலைப்படுற... அந்த மதி ஒண்ணு தான் உலகத்திலேயே பொண்ணா... வேற பொண்ணுங்களே கிடையாதா என்ன... நான் இப்போ எதுக்கு வந்திருக்கேன்னு நினைக்கிற... கதிர் கல்யாணத்தைப் பத்தி பேச தான்..." கவிதா சொல்லவும் ராகேஷ் முகம் மலர்ந்தது.

"இஸிட்... எப்படியோ எனக்கு அண்ணி வந்தா சரி..." தாயை போல் பேணி காக்க அண்ணி என்பவள் வந்தால் போதும் என்ற நிலையில் ராகேஷ் இருந்தான். இரு ஆண்கள் மட்டுமே இருக்கும் அந்த வீட்டில் ஒரு பெண்ணின் வரவு நல்வரவாய் இருக்கும் என்று அவன் நம்பினான்.

"கதிர்..." கவிதாவின் அழைப்பில் அவள் புறம் திரும்பியவன்...

"சொல்லுங்கக்கா..."

"அது வந்து..." எப்படி ஆரம்பிப்பது என்று தெரியாமல் அவள் தயங்க...

"மாமா ஏதாவது..." அவன் சொல்லும் முன்னே குறுக்கிட்டவள்,

"நான் தான் ஏற்கெனவே சொன்னேனே கதிர்... அவர் திருந்தி ரொம்ப நாளாச்சுன்னு... இது வேற..."

"எதுவாயிருந்தாலும் சொல்லுங்க..." அவன் ஊக்குவிக்க,

"மாமாவோட சித்தப்பா பொண்ணுக்கு உன்னைக் கேட்கலாம்ன்னு... பொண்ணு நல்லா படிச்சியிருக்கா... இப்போ அவங்க அப்பாவுக்கு உதவியா பிசினஸ் பார்க்கிறாள். எங்க மாமனார் வீட்டை விட வசதி கூடினவங்க... அதனால நீ ஸ்டேட்டஸ் பார்த்து தயங்க வேண்டியது இல்லை" தான் சொல்ல வேண்டியதை படபடவெனச் சொல்லியவள் தம்பியின் முகத்தை ஆர்வத்துடன் பார்த்தாள்.

கவிதாவின் பேச்சு அவனின் மன வேதனையை அதிகரிக்க... கதிர் கண்களை இறுக மூடி கொண்டான். அவனின் மூடிய விழியில் மதியின் பிம்பமே வலம் வந்தது.

"இப்போதைக்கு எனக்குக் கல்யாணம் வேணாம்க்கா... இன்னும் கொஞ்ச நாள் போகட்டும்..." விழிகளைத் திறந்தவன் தன் உள்ளத்து வேதனையை மறைத்துக் கொண்டு சொன்னான்.

"என்னடா இப்படிச் சொல்ற... நான் எவ்வளவு ஆசையா வந்தேன் தெரியுமா?" அவள் ஆற்றாமையில் புலம்பினாள்.

"அக்கா ப்ளீஸ்... இந்தப் பேச்சை இத்தோடு விட்டுருங்க... நான் தொழில் சாதிக்க வேண்டியது நிறைய இருக்கு... அதை அடைஞ்சதுக்கு அப்புறம் கல்யாணத்தைப் பத்தி

யோசிக்கிறேன்..." கதிர் சொல்வதில் ஓரளவு நியாயம் இருப்பதை உணர்ந்தவளாய் தம்பியின் வார்த்தைக்குச் சம்மதமாய்த் தலையை ஆட்டினாள். அதிலும் கதிருக்கு இருபத்தியாறு வயது தான் நடக்கிறது... இன்னும் கொஞ்ச நாள் திருமணத்தைத் தள்ளி போடுவது கூட நல்லது தான் என்றே அவள் எண்ணினாள். கதிருக்கு இன்னமும் பொறுப்பும், பக்குவமும் அதிகரிக்கும் என்று நம்பினாள்.

கவிதாவை சம்மதிக்க வைத்தவனின் மனம் நிம்மதியுற... தன் அறைக்குச் சென்றான். உடையை மாற்ற கூட மனமில்லாமல் படுக்கையில் விழுந்தவன் மனம் முழுவதும் மதியின் நியாபங்களே நிறைந்திருந்தது. மதிக்கு திருமணமாகி ஆறு மாதங்களாகி விட்ட போதிலும் அவனால் மதியை மறக்க முடியவில்லை. அவன் மானசீகமாய் அவளுடன் வாழ்ந்து கொண்டிருந்தான். அவனுக்குத் தெரியும் தன் காதலுக்கு, தன் நினைவுக்கு எதிர்காலம் இல்லை என்று... ஆனாலும் அவனால் தன் காதலை துறக்க முடியவில்லை.

என்று அவள் மீதான காதலை உணர்ந்தானோ அன்றிலிருந்து மது, பெண்கள் பழக்கம் எல்லாவற்றையும் அறவே ஒதுக்கி தள்ளி வைத்துவிட்டான். அவனின் செயல் குறித்து அவனுக்கே ஆச்சிரியமாய் இருந்தது... தானா ஒரு பெண்ணின் மீது காதல் கொண்டு தன் பழக்கவழக்கங்களை மாற்றிக் கொண்டிருக்கிறோம் என்று... இந்த மாற்றம் எப்படி நிகழ்ந்தது... என்பதை அவனால் உணர்ந்து கொள்ள முடியவில்லை.

அவன் ஒன்றும் நல்லவன் கிடையாது... மதியிடம் நட்பாய் பழகிய காலத்தில் கூட அவன் மதுவின் பழக்கத்தையோ இல்லை மாதுவின் பழக்கத்தை நிறுத்தவில்லை. அப்போதெல்லாம் எழாத குற்றவுணர்ச்சி மதியின் காதலை உணர்ந்த பின் எழுகிறதே... அது ஏன்? அவளின் காதலை உணர்ந்த மனதில் வேறொரு பெண்ணை நினைக்கவோ இல்லை கூடவோ முடியவில்லை... அது ஏன்? தான் உடலாலும், மனதாலும் அவளுக்கு மட்டுமே சொந்தம் என்று நினைவு எழுந்ததும் தவறு செய்ய மனம்

வருவதில்லை... அது ஏன்? அவனின் இந்த எல்லாக் கேள்விக்குமான விடை அவனுக்குத் தெரிந்து தான் இருந்தது. அது காதல்... மதி மீதான அவனின் காதல். காதல் இந்தளவுக்கு வேதனையை, வலியை தரும் என்று முன்பு யாராவது சொல்லியிருந்தால் அவர்களைப் பைத்தியம் போல் எக்காளமாய்ப் பார்த்திருப்பான். ஆனால் இன்று அதை அனுபவிக்கும் போது தான் தெரிகிறது... அதன் வலி, வேதனை எல்லாம்...

இந்த வலி, வேதனையையே அவனால் தாங்க முடியவில்லை... இந்த லட்சணத்தில் வேறு பெண்ணை அவனால் திருமணம் செய்ய முடியுமா? மதியை மறக்க முடியுமா? இந்தக் கேள்விகளுக்கு எல்லாம் ஒரே விடை... முடியாது என்பது தான். மதியை நினைத்த மனதால் வேறொருத்தியை... அவள் எந்தவூர் அரசியாய், அழகியாய் இருந்தாலும் அவளை நினைக்க... மணக்க அவனால் ஒரு போதும் முடியாது.

"ஐ லவ் மதி பேபி..." அவன் வாய் சத்தமாய்ச் சொல்லியது. ஒரு நாளைக்கு எத்தனை முறை சொல்வானோ அவனுக்கே அது தெரியாது. அவன் செய்யும் ஒவ்வொரு செயலிலும், பேசும் பேச்சிலும், விடும் மூச்சிலும் மதி... மதி... மதி மட்டுமே.

"மதி என்னை மன்னிச்சிரு..." என்று சொல்லியவன் தலையணையில் முகம் புதைத்தான். அவன் மனக்கண்ணில் மதியே வலம் வந்தாள். அவன் தன் காதலை உணர்ந்த போது அவள் இருந்த மணக்கோலத்தில் இல்லை... அவனின் தோழியாய், தாயாய் அவனைச் சீராட்டிய அவனின் மதியாய் சாதாரணத் தோற்றத்தில் இருந்தாளே... அந்தத் தோற்றத்தில் தான் அவன் மனதில் அவள் வாழ்கிறாள். அவளைத் தான் அவன் மதியாய் அவன் நினைத்திருந்தான். பணக்கார ஆடம்பர மதி ஆதர்ஷின் மனைவி என்ற நிதர்சனம் அவனுக்கு உறைக்க... அதனால் அவனுக்குத் தன்னை நேசித்த எளிமையான மதி தான் பிடித்திருந்தது.

மறுநாள் காரில் அலுவலகம் போகும் போது கதிரின் பார்வையில் பக்கத்தில் நின்று கொண்டிருந்த இரு சக்கர வாகனம் கண்ணில் பட்டது. பின்னால் அமர்ந்திருந்த நவநாகரீக மங்கையின் உடையைக் கண்டதும் அவனையும் அறியாமல் அவன் மனம் மதியினிடத்தில் சென்றது. அன்றொரு நாள் இப்படித்தான் அவனும் அவளும் அலுவலகம் சென்று கொண்டிருந்த போது... இதே போல் பெண்ணொருத்தியை கண்டு அவன் உல்லாசமாய் விசிலடித்தான்.

"வாவ் சூப்பர் பிகர்... என்னமாயிருக்கா..." அந்தப் பெண்ணைப் பார்த்து ஜொள்ளுவிட்டுக் கொண்டு பேசியவன் மதியிடம் இருந்து எந்தச் சத்தமும் வராமல் போக... என்னவென்று திரும்பி பார்த்தவன் அவளின் கலங்கிய கண்களைக் கண்டு அப்படியே பேச்சை நிறுத்திவிட்டான். தான் பேசிய விதம் பெண்ணான அவளுக்குப் பிடிக்கவில்லை என்று நினைத்தவன் தான் பேசிய பேச்சுக்கு உடனே மன்னிப்பும் கேட்டுக் கொண்டான். ஆனால் இப்போதல்லவா புரிகிறது... அவளின் கண்ணீருக்கான காரணம்... காதலிக்கும் எந்தப் பெண் தான் தான் காதலிப்பவன் வாயிலிருந்து வரும் இத்தகைய பேச்சை ரசிப்பாள்? அன்று புரியாதது இன்று அவனுக்கு எல்லாம் புரிந்தது. அவளின் காதலை உணர்ந்த அவனின் கண்கள் அவளை நினைத்து கலங்க தான் செய்தது.

****

அந்த ஐந்து நட்சத்திர விடுதியில் முன் பதிவு செய்யப்பட்ட மேஜையில்அமர்ந்த கதிர் தான் சந்தித்துப் பேச வந்த வாடிக்கையாளருக்காகக் காத்திருந்தான். பொழுது போகாமல் அவனின் கண்கள் அந்த அறையைச் சுற்றி வலம் வந்தது. அங்கே ஓரமாய் இருந்த மேஜையில் அமர்ந்திருந்தவரை கண்டதும் அவனின் விழிகள் இரண்டும் வெளியில் தெறித்து விடுவது போல் விரிந்தது. ஏனெனில் அங்கே அமர்ந்திருந்தது மதி... வேகமாய் எழுந்தவன் அவளை நோக்கி சென்றான்.

"எப்படியிருக்க மதி?" மெனு கார்ட்டை பார்த்துக் கொண்டிருந்த மதி எதிர்பாராமல் ஒலித்த குரலில் திடுக்கிட்டு போய் நிமிர்ந்து பார்த்தவள்... தன் முன்னே புன்சிரிப்புடன் அமர்ந்திருந்த கதிரை கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

அவள் சென்னைக்கு வந்த இந்த ஆறு மாதத்தில் ஒரு நாள் கூட அவனைச் சந்தித்ததில்லை. அதற்கு வாய்ப்பும் வரவில்லை. அதில் அவள் நிம்மதி தான் அடைந்தாள். ஆனால் இன்று தன் முன்னால் அமர்ந்திருப்பவனைக் கண்டு அவளுக்கு ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது. ஆதர்ஷ் சொன்ன வார்த்தைகள் காதில் ஒலிக்கத் தன்னை முயன்று கட்டுப்படுத்திக் கொண்டவள்... அவனைக் கண்டு கொள்ளாமல்... மீண்டும் மெனு கார்ட்டில் கண்ணைப் பதித்தாள். அவளின் செயலில் அவன் மனம் மிகவும் அடிப்பட்டுப் போனது. ஆனாலும் தான் அவளுக்கு அளித்த வேதனையை ஒப்பிடும் போது அவள் தனக்குக் கொடுக்கும் வேதனையின் அளவு குறைவு என்பதை உணர்ந்தவன் சற்று நேரம் அமைதி காத்தான்.

"என்னை ஒரு பிரெண்டா கூட நினைக்க உன்னால முடியலையா?" அவனின் குரலில் வலி மிகுந்திருந்தது.

தன் கையிலிருந்த மெனு கார்ட்டை மூடி வைத்தவள் தன் இரு கைகளையும் கட்டி கொண்டு அவனை நிமிர்ந்து தீர்க்கமாய்ப் பார்த்தாள். "எதிரியா நினைக்கக் கூடத் தகுதியில்லாத மனுசன் நீ..." அவளின் குரலில் அடக்கப்பட்ட கோபம் இருந்தது. அவளின் வார்த்தையில் அவன் முகம் கறுத்தாலும் வினாடியில் தன்னை மீட்டு கொண்டவன்...

"நீ சொல்றதும் ஒருவிதத்தில் சரி தான்... நான் உன்னிடத்தில் நடந்து கொண்ட முறை அந்த மாதிரி தான்..." வருத்த குரலில் கூறியவன்... "தவறு செய்தவன் திருந்த கூடாதா...?" அவன் கேட்கும் போதே அங்கு ஆதர்ஷ் வந்துவிட்டான்.

"ஹேய் கதிர்... பார்த்து எத்தனை நாளாச்சு..." கதிரை கண்டதும் நட்பாய் பேசியபடி அவனை அன்போடு அணைத்த ஆதர்ஷை கண்டதும் கதிரின் முகம் மலர்ந்தது.

"நான் நல்லாயிருக்கேன்... நீங்க...?" பரஸ்பர நலம் விசாரிப்புக்குப் பின் அவர்கள் நட்பாய் பேச மதி ஆதர்ஷை முறைத்து கொண்டிருந்தாள்.

அதற்குள் கதிரின் வாடிக்கையாளர் வர... அவன் ஆதர்ஷிடம் விடைப் பெற்றவன், பின் மதியின் புறம் திரும்பி, "செத்த பாம்பை எத்தனை முறை அடித்தாலும் வலிக்காது... ஏன்னா இப்போ நானொரு செத்த பாம்பு... இனி மேல் நான் உன்னைத் தொந்திரவு பண்ண மாட்டேன்" சொல்லிவிட்டு அவளைத் திரும்பி பார்க்காமல் செல்ல... மதியின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது.

"என்ன மதி ரொம்ப ஹாட்டா இருக்கிற மாதிரியிருக்கு..." ஆதர்ஷ் அவளைச் சீண்ட...

"ஆது... சும்மாயிருங்க... எனக்கு வர்ற ஆத்திரத்தில்..." என்று பல்லை கடித்தவள் கதிர் வந்து தன்னிடம் பேசியதை சொல்ல... ஆதர்ஷின் முகம் யோசனையில் ஆழ்ந்தது.

"ஒருவேளை அவன் சொல்லியது போல் திருந்தியிருந்தால்...?" ஆதர்ஷின் கேள்விக்கு அடக்கப்பட்ட கோபத்துடன் அவனைப் பார்த்தவள்...

"இப்போ அவனைப் பத்தின பேச்சு எதுக்கு..." கதிரின் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்தவள்... "ஆது... எனக்குப் பசிக்குது...." என்று சிணுங்க... அவளின் பசி கண்டு பதறியவன் பேரரை அழைத்து உணவை ஆர்டர் கொடுக்க ஆரம்பித்தான். அதன் பின் ஏதேதோ பேசி சிரித்துக் கொண்டு உணவு உண்டவர்கள் கதிரை மறந்து போயினர். ஆனால் கதிரின் பார்வையோ அவர்களை ஏக்கத்துடன் தழுவி சென்றதை அவர்கள் இருவரும் உணரவில்லை.

இரண்டு வருடங்களுக்குப் பிறகு...

"அங்கிள் இந்த டெண்டர் விசயத்தை நீங்களே சீக்ரெட்டா ஹண்டில் பண்ணுங்க... அந்த ரா மெட்டீரியல்ஸ்க்கு அமௌண்ட்டை நான் பிக்ஸ் பண்ணி சொல்லிட்டேன்... அதுக்கு மேலே கேட்டானான்னா... என் கிட்ட பேச சொல்லுங்க... அப்புறம்..." அடுத்தடுத்துத் தனக்குக் கட்டளையிட்ட கதிரின் கம்பீரத்தை பெருமையுடன் பார்த்தார் மூர்த்தி.

'விளையாட்டு பிள்ளையாய் இருந்த கதிர்... இப்படிப் பொறுப்பாய் இருக்கிறதை பார்க்க சார் இல்லாமல் போனாரே... அதுவும் இந்த இரண்டு வருடமாய்த் தம்பியிடத்தில் காணப்படும் மாற்றம் ரொம்பவே அதிகம்... அதிலும் தொழிலில் ஏற்பட்ட அசூர வளர்ச்சி.... யாராலும் செய்ய முடியாத ஒன்று... சாப்பாடு, தூக்கம்ன்னு எதுவும் இல்லாமல் பாடுப்பட்ட கதிர் தம்பி... இதுவரை நான் அறியாத ஒன்று... ஆனால் இதற்கு அவர் கொடுத்த விலையோ அதிகம்...' மனதில் நினைத்தவரின் மனக்கண்ணில் மதியின் முகம் வந்து போனது. அவரையும் அறியாமல் பெருமூச்சு வெளிவந்தது. கதிரின் மனதில் மதி இருக்கிறாள் என்று அவருக்குப் புரிய தான் செய்தது. ஆனால் அதற்கு அவரால் உதவ முடியாதே....

அந்நேரம் கதிரின் அலைப்பேசி அழைத்தது... அவன் எடுத்துக் காதில் வைக்க மறுமுனையில் ஒரு பெண் குரல் படபடத்தது.

"ஹலோ கதிர் அண்ணா தானே...?" என்று கேட்ட கேள்விக்குத் தன்னை அண்ணா என்று யார் அழைப்பது என்று யோசித்தவன்,

"எஸ் ஸ்பீக்கிங்..." அவன் சொல்லி முடிக்கும் முன்,

"நான் ஆதிரை... ஆதர்ஷின் தங்கை பேசுகிறேன்... என் அண்ணன் விபத்தில் மாட்டி இப்போது ஆபத்தான நிலையில் இருக்கிறாங்க... அவங்க உங்களிடம் பேசணும்ன்னு விருப்பப்படுறாங்க... அவங்களோட

கடைசி ஆசையை நிறைவேத்தி வைங்க... ப்ளீஸ் அண்ணா... நீங்க வாங்க..." அழுதபடி பேசிய ஆதிரையின் குரலில் உச்சக்கட்ட அதிர்ச்சியடைந்த கதிர் தன் அலைப்பேசியைத் தன்னையும் அறியாமல் நழுவவிட்டான்.

நீ எனக்கு வேண்டும் தான்...
நான் உன்னைக் காதலிக்கிறேன் தான்...
அதற்காக ஒருவனின் இறப்பில் ஆனந்தக் கூத்தாடும் பிணந்தின்னிக் கழுகு நானில்லை...
சதைப்பிண்டத்தை வேட்கையுடன் நோக்கும் காமுகன் நானில்லை...
ஆம்... நானும் மனிதன் தான்...

நாளை : 16

கதிர் அந்தப் பிரபலமான மருத்துவமனைக்கு எப்படித்தான் அரை மணி நேரத்தில் வந்து சேர்ந்தானோ... அது அவனுக்கே தெரியாது. ஐசியூக்கு வழி கேட்டு அங்குச் செல்ல அவன் கடந்த ஒவ்வொரு நொடியும் அவனுக்கு ஒரு யுகமாய் இருந்தது. ஆதர்ஷுக்கு ஒன்றுமாகக் கூடாது என்று அவன் மனம் பிரார்த்தித்துக் கொண்டிருந்தது. அது மதிக்காக மட்டுமல்ல... ஆதர்ஷ் என்ற தனி மனிதனுக்காக... ஆதர்ஷ் என்ற தோழனுக்காக... அவனின் ஆத்மார்த்தமான நட்புக்காக... கதிர் அவனிடத்தில் பேசியது ஒன்றிரண்டு முறையாக இருந்தாலும்... பார்த்த நிமிடத்தில் தோழமை கொள்ளும் ஆதர்ஷை அவனுக்குப் பிடித்துத் தான் இருந்தது.

ஐசியூவை நெருங்கும் போதே மதி வீட்டினர் எல்லொரும் அங்கு அமர்ந்திருப்பதை அவன் கண்டான். யாரிடமும் போய் என்ன கேட்பது என்று தெரியாமல் அவன் தயங்கி நிற்கும் போதே... அவனை நோக்கி ஒரு இளம்பெண் ஓடி வந்தாள். அவள் தான் தன்னிடம் பேசிய ஆதர்ஷின் தங்கை ஆதிரை என்பது அவனுக்குப் புரிய பதட்டமாய் அவளைப் பார்த்து,

"ஆதர்ஷுக்கு என்னாச்சு?" அவன் கேட்டதற்குப் பதில் சொல்ல முடியாமல் சுடிதார் துப்பட்டாவில் முகத்தை மூடி கொண்டு அழுதவள்... பின் தன்னைத் தேற்றிக் கொண்டு...

"மதியம் தான் ஆக்சிடெண்ட ஆகியிருக்கு... விசயம் கேள்விப்பட்டு நாங்களும் இப்பத்தான் வந்தோம்..." என்றவளால் அழுகையை அடக்க முடியாமல் தேம்பியவள்... "ஆது அண்ணா உங்க பேரை தான் திரும்பத் திரும்பச் சொன்னாங்க... அவங்க ஃபோனில் இருந்து தான் உங்க நம்பரை தேடி கண்டுப்பிடிச்சு பேசினேன்..."

கதிருக்கு மிகுந்த குழப்பமாய் இருந்தது. யாராவது தன் மனைவியின் முன்னால் காதலன் அலைப்பேசி எண்ணை பதிவு பண்ணி வைத்திருப்பானா? இவ்வளவு ஏன் அவன் கூட அந்தளவுக்குப் பெருந்தன்மையான குணம் கொண்டவன் கிடையாதே... அவன் மட்டுமல்ல... இந்த உலகத்தில் எந்த ஆணும் அதுக்கு விதவிலக்கு அல்ல... அப்படி இருக்கும் போது... ஆதர்ஷ் எப்படி இப்படி? கதிர் மனதில் சந்தேகம் எழும் போதே ஆதர்ஷின் புன்னகை முகம் ஒரு நொடி அவன் நினைவில் வந்து போனது. ஆதர்ஷ் அப்படிச் செய்யக் கூடியவன் தான்... ஏனெனில் எதிரியாக நினைக்க வேண்டிய அவனிடம் கூட நட்பு பாராட்டியவன் அவன் அல்லவா... அதை நினைக்கும் போதே அவன் மனம் துக்கத்தில் கனத்தது.

"இப்போ ஆதர்ஷை நான் பார்க்கலாமா...?" கேட்கும் போதே கதிரின் குரல் அவனையும் அறியாமல் நடுங்கியது.

"ம்... வாங்க..." என்றவள் அவனை அழைத்துக் கொண்டு ஐசியூ அறைக்குச் செல்ல... போகும் போது கதிர் அங்கு அமர்ந்திருந்த அர்விந்தை, மதியின் பெற்றோரை பார்த்தான். அவளின் பெற்றோர் தங்களுக்குள் துயரத்தில் கரைந்து கொண்டிருந்ததால் அவனைக் கவனிக்கவில்லை. ஆனால் அர்விந்த் அவனின் வருகை உணர்ந்து அவனை நிமிர்ந்து உணர்ச்சியில்லாமல் ஒரு பார்வையைப் பார்த்தவன் பின் தன் பார்வையை வேறு பக்கம் திருப்பிக் கொண்டான்.

"அண்ணா..." ஆதிரையின் அழைப்பில் அவளைப் பார்த்தவன் வேகமாக ஆதர்ஷ் இருந்த அறைக்குள் நுழைந்தான்.

அங்கே படுக்கையில் உடல் முழுவதும் கட்டுக்களுடன் படுத்திருந்த ஆதர்ஷை கண்டதும் எதற்குமே கலங்காத கதிருக்கு கூடக் கண்கள் கலங்கியது. அவன் மனக்கண்ணில் கம்பீரமான ஆதர்ஷின் உருவமே வலம் வந்தது. அவன் ஆதர்ஷை பார்த்து கிட்டத்தட்ட இரண்டு

வருடங்கள் இருக்கும். அதன்பின் இப்போது தான் பார்க்கிறான்.

"அண்ணா... கதிரண்ணா வந்திருக்காங்க..." ஆதிரை குனிந்து ஆதர்ஷின் காதில் சொல்ல... மெல்ல ஆதர்ஷிடம் அசைவு தெரிந்தது. அதைக் கண்டதும் கதிர் ஓடி வந்து அவனின் கையைப் பிடித்துக் கொண்டான். கண்களைத் திறந்து பார்த்த ஆதர்ஷ் கதிரை கண்டு கொண்டதன் அடையாளமாக அவனின் கண்களில் வெளிச்சம் பரவியது.

"க...தி...ர்..." ஆதர்ஷின் கைகள் கதிரின் கையை இறுக பற்றிக் கொண்டது.

"கதிர் தான்... சொல்லுங்க ஆதர்ஷ்..." கதிரும் தன் பிடியை இறுக்கினான். ஆதர்ஷின் நிலை அவனைப் பெரிதும் அதிர்வடையச் செய்திருந்தது.

ஆதர்ஷ் தன் தங்கையை ஒரு பார்வை பார்த்து 'போ' என்பது போல் சைகை செய்ய அவள் அழுது கொண்டே வெளியில் சென்றாள்.

"ம...தி..., பா...வ...ம்..., நீ...ங்...க, தா...ன், அ...வ...ளை, பா...ர்...த்...து...க்...க...ணு...ம்" ஒவ்வொரு வார்த்தைக்கும் இடைவெளி விட்டு இடைவெளி விட்டுச் சிரமப்பட்டுப் பேசிய ஆதர்ஷ்க்கு மூச்சு வாங்கியது. கதிரின் கைகள் அவனையும் அறியாது ஆதர்ஷின் நெஞ்சை நீவிவிட்டது.

"நான் எதுக்கு அவளைப் பார்த்துக்கணும் ஆதர்ஷ்... அவள் உங்க மனைவி... நீங்க தான் அவளைப் பார்த்துக்கணும்... அதுக்காகவாவது நீங்க நல்லபடியா குணமாகி வரணும்... அவளுக்காக நீங்க நூறாயுசு வாழணும்..." என்றவனின் கண்கள் கண்ணீரை சிந்தியது. கதிரின் வார்த்தை கேட்டு ஆதர்ஷின் தலை இடமும் வலமுமாய் மறுப்பாய் லேசாக அசைந்தது.

"என் கண் பட்டு தான் உங்களுக்கு இப்படியாகிருச்சு ஆதர்ஷ்... நான் பாவி... சந்தோசமா இருக்க வேண்டிய

உங்க வாழ்க்கை என்னால் தான் இப்படியாகி போயிருச்சா?" ஆதர்ஷின் செய்கையில் அப்படியே உடைந்து விட்டான் கதிர்.

"இ...னி, ம...தி...க்...கு..., நீ..., தா...ன், க...தி...ர்..."

"எனக்கு அவ வேணாம்... உங்க மனைவியை நான் காதலிக்கிறேன்னு உங்களுக்கு யார் சொன்னது...? நான் அந்தளவுக்கு ஈனப்பிறவி இல்லை... உங்க வைப்பை நீங்களே வச்சுக்கோங்க... எனக்கு வேணாம்..." கதிர் கோபத்துடன் சொல்வது போல் தோன்றினாலும் அவன் கண்களில் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது என்னமோ நிஜம்...

ஆதர்ஷின் கை விரல் நீண்டு கதிரின் இதயப்பகுதியை சுட்டி காட்டி... பின் தன் நெற்றியில் கை வைத்துக் கண்களை மூடி திறந்தான். அவனின் செய்கையிலேயே அவன் சொல்ல வருவது புரிய,

"அது வேற மதி ஆதர்ஷ்... நிச்சயம் உங்க மனைவி மதி இல்லை..." கதிரின் பேச்சுக்குப் பதில் பேசாமல் தன் கை மீது கதிரின் கையை எடுத்து வைத்த ஆதர்ஷ் அவனைப் பார்த்துப் புன்னகைத்தான்.

"வேண்டாம் ஆதர்ஷ்... என்னால் தாங்க முடியல..." புலம்பிய கதிரின் கை மேல் தன்னுடைய மற்றொரு கையை ஆறுதலாய் வைத்தவன்,

"போ...றே...ன்..." என்ற ஆதர்ஷ் தன் இறுதி மூச்சை நிறுத்தி கொண்டான். ஆதர்ஷின் கைகள் தொய்ந்து விழுவதைக் கண்ட கதிருக்கு உண்மை மூளையில் உறைக்க,

"ஆதர்ஷ்..." அவன் அலறிய அலறல் அந்த மருத்துவமனை முழுவதும் எதிரொலித்தது. கதிரின் கதறல் கேட்டு வெளியில் உள்ளவர்கள் உள்ளே வந்து பார்க்க எல்லாம் முடிந்திருந்தது. ஆதர்ஷ் என்னும் நல்ல மனிதனை ஆண்டவன் விருப்பப்பட்டுத் தனக்குத் துணையாக

அழைத்துக் கொண்டான். ஆதர்ஷின் இறப்பை எல்லோராலும் ஜீரணிக்க முடியவில்லை. அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்து போயினர்.

இன்னும் ஒரு மணி நேரத்தில் மருத்துவமனை சம்பிரதாயங்கள் முடிந்து ஆதர்ஷின் உடல் அவர்கள் வசம் ஒப்படைக்கப்படும் என்ற தகவல் கிடைத்தும் முதலில் சுதாரித்தது அர்விந்த் தான். நேரே தன் தந்தையிடம் சென்றவன்,

"நாம ஹைதராபாத் போயிரலாமா...?"

"வேணாம் அர்வி இப்போ இருக்கிற நிலமையில் அங்கே போறது கஷ்டம்... அங்கே உள்ளவங்களுக்குத் தகவல் மட்டும் சொல்லிடு... வர்றவங்க வரட்டும்... இன்னும் ரெண்டு நாளில் இங்கேயே எல்லாச் சடங்கையும் செஞ்சு முடிச்சரலாம்" சொல்லியவர் தளர்ந்து போய் அமர்ந்துவிட்டார்.

அவரின் அருகில் மணிமாலாவும், ஆதிரையும் அழுது கொண்டிருந்தினர். யாரும் யாரையும் தேற்றும் நிலையில் இல்லை. அவர் சொல்வது தான் சரியென்று அவனுக்குத் தோன்ற அதற்கான வேலைகளில் இறங்கினான். ஆதர்ஷின் இறப்பு அவனுக்குமே பெரிய இழப்பு தான்... ஆனால் இது அழுது கரைய வேண்டிய நேரமில்லையே... இதையெல்லாம் வெறும் பார்வையாளனாய் பார்த்துக் கொண்டிருந்தான் கதிர். அவனுக்கு இருந்த துக்கத்தில் அங்கு மதி இல்லாததைக் கூட அவனால் உணர முடியவில்லை.

****

ஆதர்ஷின் உடலை வீட்டிற்குக் கொண்டு வந்தாகிவிட்டது... அவனும் மதியும் வாழ்ந்து வந்த சென்னை வீடு தான் அது. துக்கத்தில் கலந்து கொள்ள வந்த கதிருக்கு தனது வீட்டிற்குப் போகவும் மனதில்லை... அதேசமயம் அங்கு அவனுக்குத் தெரிந்தவர்கள் யாருமில்லை. அதனால் என்ன செய்வது என்று

தெரியாமல் விழித்துக் கொண்டிருக்கும் போது நல்லவேளையாக மூர்த்தி அங்கு வந்து சேர்ந்தார். அவன் வரும் வழியில் அவருக்குத் தகவலை சொல்லிவிட்டான்.

"தம்பி எப்படியாச்சு...?" ஆதர்ஷை நினைத்து அவரின் கண்களும் கலங்கியது. அவரிடம் அவன் நடந்ததைச் சொல்ல...

"பாவம் தம்பி... மதிம்மா இதை எப்படித்தான் தாங்க போகுதோ... இந்தச் சின்ன வயசில் இந்த அவலம் வந்திருக்க வேணாம்..." கண்ணீரை துடைத்துக் கொண்டு அவர் சொல்லவும் தான்... அவனுக்குச் சுரீரென்று உறைத்தது.

'என்னோட துக்கத்தில் மதியை எப்படி மறந்து போனேன்... ஆதர்ஷின் இழப்பை அவள் எப்படித் தாங்குவாள்? கடவுளே...' என்று புலம்பியவனின் மனக்கண்ணில் பூவும், பொட்டும் இழந்து ஆழ்ந்த சோகத்தில் இருந்த மதியின் பிம்பம் தெரிய... அவன் அரண்டு போனான்.

"அங்கிள்... மதி இங்கே எங்கேயும் காணோம்... அவள் எங்கே இருக்கிறாள்?எப்படி இருக்கிறாள்ன்னு பார்த்திட்டு வந்து சொல்லுங்களேன்..." அவனின் கெஞ்சலில் மூர்த்தி உள்ளே சென்றார்.

மூர்த்திச் சென்றதும் கதிரின் மனதில் ஆதர்ஷ் கடைசியாக அவனிடம் சத்தியம் வாங்கிய காட்சியும், மதியின் விதவை கோலமும் மாறி மாறி வர... கண்களை இறுக மூடி கொண்டான்.

'கடவுளே... இதென்ன சோதனை... மதி என் காதலி என்றாலும் நண்பனின் மனைவியை என் மனைவியாய் எப்படி நினைப்பேன்...? ஆதர்ஷுக்குக் கொடுத்த சத்தியத்தை நான் காப்பாற்ற முடியும் போல் எனக்குத் தோன்றவில்லை... சாரி ஆதர்ஷ்... உன் கடைசி ஆசையை என்னால் நிறைவேத்த முடியாமல் போனதற்காக என்னை மன்னித்துவிடு நண்பா...' மானசீகமாய் ஆதர்ஷிடம் அவன் மன்னிப்பு வேண்டினான்.

அதற்குள் மூர்த்தியும் விசாரித்துவிட்டு அங்கே வந்து சேர்ந்தார். "தம்பி... மதிம்மா ஹாஸ்பிட்டல்ல ஐசியூவில் தான் இருக்காங்காளாம்..." அதைக் கேட்டதும் அவனுக்குப் பதற்றம் தொற்றிக் கொண்டது.

"அங்கிள் நான் உடனே அவளைப் பார்க்க போகணும்..." என்றபடி அவன் காரை நோக்கி நடக்க... அவரும் அவனைப் பின் தொடர்ந்தார்.

காரை ஓட்டி கொண்டு சென்ற அந்த அரை மணி நேரத்தில் அவன் மனம், மதிக்கு ஒன்றுமாகி இருக்கக் கூடாது என்று லட்சம் தடவை கடவுளை வேண்டி கொண்டது. மருத்துவமனை ஐசியூவை நோக்கி கதிர் வேக நடை நடக்க... அவனைப் பின் தொடர்ந்தார் மூர்த்தி.

"அங்கிள் ஆதர்ஷை மீட் பண்ணி பேசும் போது கூட மதி இங்கே இருப்பாள்ன்னு நினைச்சு கூடப் பார்க்கல... எப்படி அங்கிள்...?"

"ரெண்டு பேரும் போய்க்கிட்டு இருந்த கார் மேல தண்ணி லாரி மோதி..." அதற்கு மேல் சொல்ல முடியாமல் அவர் நிறுத்த... கதிரோ அந்தச் செய்தியை தாங்க முடியாமல் ஒரு நொடி நின்றவன்... மீண்டும் தன் நடையை எட்டி போட்டான்.

மதியை பார்க்க அனுமதி கேட்டு இருவரும் உள்ளே சென்றனர். மதிக்குத் தலையில் மட்டுமே கட்டு போடப்பட்டு இருந்தது. மற்றபடி வேறெந்த இடங்களிலும் காயம் இல்லை. அந்தத் தலைக்கட்டு மட்டும் இல்லையென்றால் அவள் உறங்குகிறாள் என்று அடித்துச் சொல்லலாம். அவளைக் கண்ட கதிர் தன் உடலின் சக்தி எல்லாம் வடிந்தார் போல் அங்கிருந்த சுவற்றில் சாய்ந்தான். அவனின் கண்கள் மட்டும் அவளைத் தலை முதல் கால் வரை வருடி கொண்டிருந்தது. கதிரின் நிலையை உணர்ந்து மூர்த்தி அவன் தோளில் கையை வைத்து ஆதரவாய் தட்டி கொடுத்தவர் அங்கிருந்து வெளியேறினார்.

கதிர் முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு அவளின் அருகில் சென்றான். தன் கையை நீட்டி அவளைத் தொட போனவன் பின் ஏதோ நினைத்தவனாய் கையைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டான். அவளைப் பார்க்க வரும் போது செவிலிப்பெண் சொன்னது அவன் காதில் ஒலித்தது.

"தலையில் பலமா அடிப்பட்டு இருக்கிறதால நினைவில்லாமல் இருக்காங்க... ஆனா நினைவு தான் எப்போ திரும்புதோ தெரியல... மத்தபடி உயிருக்கு எந்த ஆபத்தும் இல்லை..."

தன் நினைவில்லாமல்... கணவன் இறந்தது கூட அறியாமல் இருக்கும் மதியின் நிலையறிந்து அவன் இதயம் கசிந்தது.

"பூவும் பொட்டும் இல்லாமல் எப்படி உன்னைப் பார்க்க போகிறேன் மதி... அன்னைக்கு ஒரு நாள் நீ பூவில்லாமல் இருந்ததையே என்னால் தாங்கி கொள்ள முடியவில்லை. இப்போ நிரந்தரமாய்... உன்னை அந்தக் கோலத்தில் எப்படிப் பார்ப்பேன் நான்? உனக்கா இந்த நிலமை...?" வாய்விட்டு புலம்பியவன் ஒரு கட்டத்தில் தாங்க முடியாமல் அவளின் கையைப் பற்றிக் கொண்டு கதறிவிட்டான்... அப்போது தான் அதை அவன் உணர்ந்தான். தான் பிடித்திருந்த மதியின் கையில் ஒருவித சிலிர்ப்பு ஓடுவதை... அதை உணர்ந்தவன் திகைத்து போய் அவள் முகம் பார்க்க... அதுவோ நிர்மலமாய் இருந்தது.

"மதி நான் பேசிறது உனக்குக் கேட்குதா...? மதி பேபி... மதி பேபி..." தன்னை மறந்து அவன் அவள் கன்னங்களைத் தட்டி கொண்டிருந்தான். இப்போது அவன் கண்களுக்கு அவள் அவனின் காதலி மதியாகத் தான் தெரிந்தாள். தன் காதலியை உயிர்த்தெழச் செய்வது மட்டுமே அவனது ஒரே குறிக்கோளாய் இருந்தது.

"மதி... மதி... மதி..." அவன் கூப்பிட்ட ஒவ்வொரு முறைக்கும் அவளின் புருவங்கள் என்ன என்பது போல் உயர்ந்தது. அவளின் மூடிய கண்ணுக்குள் அவளின்

கருவிழி அங்குமிங்கும் அசைந்து ஓடியது. மெல்ல அவளின் உதடுகள் அசைந்தது. அவளின் உடல் மாற்றம் அவனுக்கு எல்லையில்லா சந்தோசத்தைக் கொடுக்க... அவள் என்ன சொல்கிறாள் என்பதற்காக அவன் தன் காதை அவளின் உதட்டருகே கொண்டு செல்ல... அவள் கூறிய வார்த்தையில் அவனுக்கு உலகமே ஸ்தம்பித்தது.

"க.....தி.....ர்..... பா.....வா....."

நீ எனை வெறுத்தாய்... நீ எனை மறந்தாய்...
வெம்மையில் மனம் வெதும்பி நான்...
நான் என்றும் உனை மறவேன்...
உன் உடல், உயிர், ஆவி அனைத்தும்
நான் என்றாய் நீ...!!!

நாளை : 17

"மதி... மதி பேபி..." கதிரின் குரல் உணர்ச்சிவசப்பட்டதில் நடுங்கியது. மதியின் வாயிலிருந்து 'கதிர், பாவா' என்ற அழைப்பை சத்தியமாய் அவன் எதிர்பார்க்கவில்லை. அதிலும் அவள் தன்னுணர்வு இல்லாத இந்த நிலையிலும் தன் பேரை சொல்லியது... இதுநாள் வரை அவன் நெஞ்சில் முணுக் முணுக்கென்று வலித்துக் கொண்டிருந்த வலியானது ஒரு நொடியில் காணாமல் போய் மாயாமாகி போனது. இதுநாள் வரை அவன் மனதில் ஆறாத ரணமாய் இருந்த காயத்திற்கு அவளின் வார்த்தைகள் மருந்தாய் அமைந்தது.

அதற்கு மேல் அவன் அதிகம் யோசிக்கவில்லை. மதியின் மனதில் தனக்கான இடம் இன்னும் இருக்கிறது என்பதற்கான சான்று அவளின் ஆழ்மனதில் இருந்து வெளிவந்த அவனுக்கான பிரத்யேக வார்த்தைகள். அவள் ஆதர்ஷுடன் எந்த மாதிரியான வாழ்க்கை வாழ்ந்தாள் என்பதைப் பற்றி அவன் அதிகம் ஆராயப் போவதில்லை. அது அவனுக்குத் தேவையும் இல்லை. அவனுக்கு வேண்டியது எல்லாம் அவளுக்கு அவன் மீது இன்னமும் நேசம் இருக்கிறதா? என்பது தான்... அவன் மீதான நேசம் அவள் மனதில் சாகவில்லை... இன்னமும் உயிரோடு தான் இருக்கிறது என்பதை அவளே அவனுக்கு உணர்த்திவிட்டாள். இவ்வளவு நேரமும் அவள் ஆதர்ஷின் மனைவி என்ற கண்ணோட்டத்தில் அவளை விட்டு தள்ளி விலகியிருந்தவன்... இப்போது அவளைத் தன் நேசத்துக்குரியவளாய்... காதலியாய் பார்க்க ஆரம்பித்தான்.

"மதி பேபி..." மீண்டும் அவன் அழைத்ததற்கு அவளிடமிருந்து 'ம்' என்று மெல்லிய முனங்கல் மட்டுமே பதிலாக வந்தது. அதில் தன் தயக்கத்தை முற்றிலும் கைவிட்டவனாய் தன் நடுங்கும் கரத்தை அவள் முகம் அருகே கொண்டு சென்று பரிவுடன், பாசத்துடன் வருடி கொடுத்தான். இத்தனை நாட்களில் அவளைத் தோழியாக

நினைத்து சினேகமான பார்வை பார்த்து வந்தவன்... முதன்முறையாக இன்று அவளைத் தன் காதலியாய் பார்த்தான்... உரிமையுடன் அவளைத் தொடவும் செய்தான்.

"ஐ லவ் யூ மதி பேபி..." அவள் முகத்தைப் பார்த்து சொன்னவன்... கட்டுப் போடாத அவளின் நெற்றியில் முத்தமிட்டான். முதல் முறையாக இன்று தான் கதிர் காமம் இல்லாமல் ஒரு பெண்ணை முத்தமிடுகிறான்... அதுவும் தன் காதலியை... காதல் என்ற ஒன்று வந்துவிட்டால் அங்கே காமத்துக்கு இடமில்லையோ...

அவனின் வார்த்தைகள் அவளின் உள்ளத்தைச் சென்றடைந்தோ என்னமோ... அவளின் கண்களிலிருந்து கண்ணீர் துளிகள் வழிந்தோடியது. ஆம்... எந்தவொரு வார்த்தை அவன் வாயிலிருந்து வர வேண்டும் என்று அவள் தவம் இருந்தாளோ... அந்த வார்த்தை ஆழ்ந்து துயில் கொண்டிருக்கும் அவளின் இதயத்தைத் தட்டி எழுப்பியதோ...! எவனின் காதலுக்காகப் பார்க்க கூடாததைப் பார்த்து, கேட்க கூடாததைக் கேட்டு... அப்போதும் அவன் தான் வேண்டும் என்று அவனின் காலை சுற்றிய நாய்க்குட்டியாய் சுற்றினாளோ... அந்தக் காதலனின் மனதில் தான் குடியிருக்கிறோம் என்பதைச் சியநினைவு இல்லாத அந்த நேரத்திலும் அவள் உணர்ந்ததினால் வந்த ஆனந்த கண்ணீரோ அது...?

"மதி நான் பேசுறது உனக்குக் கேட்குதா...?" அவளின் கண்ணீரை துடைத்துக் கொண்டே கேட்டவன், "போதும் மதி... இனிமேல் எதற்காகவும் நீ அழ கூடாது..." என்றவன் அவளின் கையை இறுக பற்றிக் கொண்டான். அந்த நிலையிலும் அவள் தன்னை உணர்கிறாள்... தன் பேச்சை கேட்கிறாள் என்பதே அவனுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்க... அவளையே பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தான்.

அப்போது அங்கே வந்த செவிலிப்பெண் மதியின் உடல்நிலையைக் கண்காணிக்கும் கருவியைப்

பார்த்துவிட்டு, "அவங்க உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் தெரியுது... நான் போய் டாக்டரை கூட்டிட்டு வர்றேன்..." சொல்லிவிட்டு சென்றவர் அடுத்தப் பத்தாவது நிமிடம் மருத்துவருடன் வந்தார். மருத்துவரும் அவர் சொன்னதை உறுதிப்படுத்த... அப்போது தான் கதிருக்கு நிம்மதியாய் இருந்தது. அடுத்து அவன் செய்ய வேண்டிய காரியங்களை ஒவ்வொன்றாய் நினைத்து பார்த்தவனின் முகம் உறுதியை தத்தெடுத்திருந்தது.

அடுத்த இரண்டாம் நாள் ஆதர்ஷின் உடல் தகனம் செய்யப்பட்டது. இன்னமும் மதிக்கு ஆதர்ஷ் இறந்தது தெரியாது... ஆம்... அவளுக்கு இன்னமும் நினைவு திரும்பவில்லை. அவளது வீட்டினருக்கு தான் பெருத்த துன்பமாய் இருந்தது. ஆதர்ஷின் இழப்பை எண்ணி அழுவதா...? இல்லை மதியின் நிலையை எண்ணி வருந்துவதா...? என்று தெரியாமல் பிரம்மை பிடித்தது போலிருந்தனர். இதில் சற்று தெளிந்து மருத்துவமனைக்கும், வீட்டுக்கும் ஓடி ஓடி அலைந்து கொண்டிருந்தது அர்விந்த் மட்டுமே. தன் துக்கத்தை மனதிற்குள் புதைத்துக் கொண்டு மற்றவர்களுக்காக அவன் செயல்பாடாய் இருந்தான்.

அன்றோடு ஆதர்ஷ் இறந்து ஐந்து நாள் முடிந்திருந்தது... அன்று காலையில் கதிர் ஒரு முடிவுடன் தன் வீட்டிலிருந்து மருத்துவமனைக்குக் கிளம்பினான். மருத்துவமனையை அடைந்தவன் அடுத்த நிமிடம் மதியின் அறையில் இருந்தான். ஆபத்துக் கட்டத்தை அவள் தாண்டி விட்டதால் தனியறை அவளுக்குக் கொடுத்திருந்தனர். நல்லவேளை இன்னமும் அர்விந்த் வரவில்லை. அவன் வரும் நேரத்தை கணக்கிட்டு தான் கதிர் சற்று முன்னதாக வந்திருந்தான்.

துயலில் இருப்பது போல் படுத்திருந்த மதியை பார்த்துக் கொண்டே அவளருகில் சென்றமர்ந்தவன், அவள் வலக்கையை எடுத்து தன் இரு கைகளிலும் பற்றிக் கொண்டவன், "மதி பேபி... சாரி டியர்... எதுக்குச் சாரின்னு கேட்கிறியா...? இப்போ உன் விருப்பமில்லாமல் ஒரு காரியத்தை நான் பண்ண போறேன்... அது உனக்குப்

பிடிக்குமா... பிடிக்காதான்னு எனக்குக் கன்பார்மா சொல்ல தெரியல... உன் மனசில் நான் தான் இருக்கேன்... என் மேலுள்ள உன்னோட காதல் கொஞ்சமும் அழியாமல் அப்படியே தான் இருக்கு... அது மட்டும் எனக்கு நல்லா புரியுது. ஆதர்ஷ் உன்னைக் கல்யாணம் பண்ணியதோ... இல்லை அவனுடனான உன் கல்யாண வாழ்க்கையைப் பத்தியோ... இது எதுவுமே எனக்குத் தேவையில்லை. எனக்கு வேண்டியதை நீயே எனக்கு உணர்த்திட்ட... எனக்கு அது போதும்... உன்னோட காதல் மட்டும் போதும்... வெளியில் இருந்து பார்ப்பவர்களுக்கு இது அசிங்கமாய்த் தெரியலாம்... கேவலமாய்ப் பேசலாம்... ஆதர்ஷ் எப்படா சாவான்னு காத்திருந்து இவன் இவளை திட்டம் போட்டுக் கரெக்ட் பண்ணிக்கிட்டான்னு அவதூறாய் சொல்லலாம். ஆனால் எனக்கு அதைப் பத்தியெல்லாம் கவலை இல்லை... எனக்கு வேண்டியது நீ... நீ மட்டுமே..." என்றவன் தன் சட்டை பையிலிருந்து அதை எடுத்தான். அது அவனின் அம்மாவின் தாலிக்கொடி.

மதியின் முகத்தருகே கொண்டு சென்றவன் ஒரு நிமிடம் தாமதித்தான். அவனின் மனக்கண்ணில் ஆதர்ஷின் புன்னகை முகம் தோன்றியது. "ஆதர்ஷ்... உனக்குக் கொடுத்த சத்தியத்தைக் காப்பாத்த முடியாமல் போய்விடுமோன்னு நினைச்சேன்... அதை மதி என் மேல் வைத்த காதல் நிறைவேத்தி வச்சிருச்சு... இனி அவள் உன் மனைவி இல்லை... என் மனைவி... என் காதலி... எல்லோரையும் சமாளிக்கிற தைரியத்தை நீ தான் எனக்குக் கொடுக்கணும்... முக்கியமா மதியை... நீ தான் எங்க வாழ்க்கையைக் கூட இருந்து வழி நடத்தணும்..." ஆதர்ஷிடத்தில் முதல் வேண்டுதலை வைத்தவன்,

"அம்மா... நீங்க ஆசைப்பட்ட மாதிரி... மதியே உங்களுக்கு மருமகளா வர போறா... இப்போ உங்களுக்குச் சந்தோசம் தானே..." தன் அன்னையிடம் மானசீகமாய் உரையாடியவன்... அதற்கு மேல் காலம் தாழ்த்தாமல் அவள் கழுத்தில் தாலிக்கொடியை அணிவித்தான். பிறகு

தன் கையோடு கொண்டு வந்திருந்த குங்குமத்தை எடுத்து அவள் நெற்றியில் வைத்தான். பின் அவள் முன்நெற்றியில் முத்தமிட்டவன், "உன் பாவாவின் எத்தனையோ தவறுகளை மன்னித்த மாதிரி... இந்தத் தவறையும் மன்னித்துவிடு... என் மீதான உன் கோபத்தின் அளவு தெரிந்ததால் தான் நான் இதைச் செய்தேன். எனக்கு வேறுவழியில்லை... கோபமோ, ஆத்திரமோ எதுவாயிருந்தாலும் என்னுடன் ஒரே வீட்டிலிருந்து காட்டு... அதைக் காதலோடு நான் தாங்கி கொள்வேன்... உனக்கும் என் காதலை உணர்த்துவேன்... உன் காதலையும் மீட்டெடுப்பேன்..." அவன் சொல்லும் போதே...

"டேய்... என்னடா பண்ற...?" அர்விந்தின் குரல் கேட்டு கதிர் அதிரவில்லை. மிக நிதானமாய் எழுந்தவன் அர்விந்த் புறம் திரும்பினான். அதற்குள் கதிரை எட்டியிருந்த அர்விந்தின் கைகள் அவனின் சட்டையைப் பற்றியிருந்தது.

"உனக்கு எவ்வளவு தைரியம்டா...?" என்று ஆத்திரமாய்த் தன் தங்கையைப் பார்த்தவன் கண்ணில் அவள் நெற்றியிலிருந்த குங்கும பொட்டும், கழுத்தில் கிடந்த தாலியும் பட... அது தந்த அதிர்வில் கதிரின் சட்டையைப் பிடித்திருந்த தன் கைகளைத் தளர்த்தினான். ஒரு அண்ணனாய் அர்விந்த் உணர்வுகள் எப்படியிருக்கும் என்று கதிர் உணர்ந்ததால் அசையாமல் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"டேய் நீயெல்லாம் மனுசனாடா... அவள் புருசன் செத்து போய் ஐந்து நாள் கூட ஆகல... அதுக்குள்ள இப்படியொரு காரியம் பண்ண உனக்கு எப்படி மனசு வந்தது?அப்போ ஆது எப்படா சாவான்னு காத்திருந்தியாடா...?" என்று கோபத்தில் கத்தியவன் கதிரின் முகத்தில் ஓங்கி குத்துவிட்டான். கதிர் அவன் கொடுத்த அடியை வாங்கிக் கொண்டானே தவிர... திருப்பி அடிக்கவும் இல்லை... அசையவும் இல்லை... பதில் பேசவும் இல்லை.

"அவள் காதலிச்சப்போ எல்லாம் அவள் வேணாம்ன்னு அவளை உயிரோட கொன்னுட்டு இப்போ எதுக்குடா அவளுக்கு வாழ்க்கை கொடுக்கிற... சொல்லுடா... சொல்லுடா..." அர்விந்த் கதிரை அடுத்தடுத்து அடிக்க... முகம் வீங்கி உதடுகள் கிழிய அடி வாங்கிய போதும்... கதிர் வாய் திறப்பதாய் இல்லை.

"ஒருவேளை ஆது சொன்னானா... என் பொண்டாட்டிக்கு வாழ்க்கை கொடுன்னு உன் கிட்ட கெஞ்சினானா... அதுக்குத் தான் அன்னைக்கு உன்னைக் கூப்பிட்டானா... பேசுடா..." கதிரின் கழுத்தில் கையை வைத்து அழுத்தி அர்விந்த் கேட்ட போதும் கதிர் அமைதி காக்க தான் செய்தான். அவன் நினைத்தால் 'ஆம்' என்று சொல்ல ஒரு நொடி போதும்... ஆனால் அது தன் காதலையும், மதியின் காதலையும் கொச்சைப்படுத்தியது போலாகிவிடும். இது அவன் காதலால் தான் செய்தானே தவிரக் கடமையால் அல்ல...

"அப்படியே என் தங்கச்சிக்கு வேற கல்யாணம் பண்ணனும்ன்னா... உன்னை விட நல்ல பையனா பார்த்துக் கல்யாணம் பண்ணி வைப்பேனே... தவிர உனக்கு என் தங்கச்சியைக் கட்டி கொடுக்க மாட்டேன்டா..." ஆங்காரமாய்க் கத்தியவன்... மதியின் கழுத்தில் கதிர் அணிவித்த சங்கிலியை கழட்ட போனான். அதில் அவ்வளவு நேரம் சிலையாய் நின்றிருந்த கதிருக்கு உயிர் வந்தது. வேகமாய் மதியின் அருகில் வந்தவன் அர்விந்தின் கையைப் பிடித்துத் தடுத்து நிறுத்தி,

"மிஸ்டர். அர்விந்த்... நான் உயிரோட இருக்கும் வரை இதைக் கழட்ட உங்களால் முடியாது..." தன் கையை அசைக்க முடியாமல் பற்றியிருந்த கதிரின் கையை எரிச்சலும் கோபமுமாய்ப் பார்த்தவன்,

"ஏன் முடியாது... என் தங்கச்சி விட்டே இதைக் கழட்டி உன் மூஞ்சியில் எறிய சொல்றேன்..." அர்விந்தின் கோபமான பேச்சுக்கு,

"அதையும் பார்க்கலாம்..." சிரித்தபடி கதிர் பதில் சொல்ல... அர்விந்த் மீண்டும் பொங்கிவிட்டான்.

"எவ்வளவு தைரியம்டா உனக்கு?" மீண்டும் கதிரை அடிக்க,

"உங்க அடியை வாங்கிட்டு நான் ஏன் திருப்பி அடிக்காம இருக்கேன் தெரியுமா...? ஏன்னா உங்க தங்கைக்கு நான் பண்ணிய பாவத்துக்காக..." அர்விந்த் அடித்த அவ்வளவு அடியையும் வாங்கிக் கொண்டு அமைதியாய் பேசிய கதிரை ஒரளவுக்கு மேல் அர்விந்தால் அடிக்க முடியாமல் போயிற்று.

"முதலில் இங்கிருந்து வெளியில் போடா..." கோபமாய்க் கத்திய அர்விந்த் மதியின் பக்கத்தில் சென்று ஆயாசமாய் அமர்ந்தான்.

"என் மனைவி கண் விழிக்காமல் நான் இங்கிருந்து போவதாய் இல்லை..." உறுதியான குரலில் கூறிய கதிர் அங்கே இருந்த நாற்காலி ஒன்றில் ஜம்பமாய் அமர்ந்தான்.

"அம்முவே உன்னை வெளியில் போகச் சொன்னால் தான் நீ போவ..." எரிச்சலுடன் மொழிந்தவன் தங்கையின் முகத்தைப் பார்த்தபடி அமைதியாகி விட்டான்.முன்னாள் கணவன் இறந்தது கூடத் தெரியாமல்... இன்னாள் கணவன் ரத்தம் வருமளவுக்கு அடி வாங்கியதை கூட உணராமல் பரிதாபமாய்ப் படுத்திருந்தாள் மதி.

அன்றும் அவள் கண் விழிக்கவில்லை... அதற்கடுத்து பத்துத் தினங்கள் சென்று தான் அவள் கண் விழித்தாள். கண் விழித்தவள் தன்னருகில் அமர்ந்திருந்த தன் அன்னையைத் தான் முதலில் கண்டாள்.

"அம்மா..." அவள் அழைப்பில் கண்கள் கலங்க...

"அம்மு..." என்று அவள் கன்னத்தை வருடினார் மணிமாலா. ஆதர்ஷ் இழப்பை நினைத்து வருந்துவதா... இல்லை இந்தச் சிறு வயதில் மகள் வாழ்வு பட்டுப் போகாமல் மறு வாழ்க்கை கொடுத்த கதிரை நினைத்து சந்தோசப்படுவதா... என்ன செய்வது என்று

தெரியவில்லை அவருக்கு. அவரின் மனநிலையில் தான் குணசேகர், ஆதிரை எல்லோரும் இருந்தனர்.

ஆம்... ஆதிரையும் அந்த எண்ணத்தில் தான் இருந்தாள். ஆதர்ஷின் தங்கை அல்லவா அவள்... அண்ணனின் குணத்தில் பாதியாவது அவளுக்கு இருக்காதா... அந்த நல்ல உள்ளத்துக்காகத் தானே அர்விந்த் பல பெரிய இடத்துப் பெண்களை எல்லாம் மறுத்துவிட்டு அவள் தான் வேண்டும் என்று பிடிவாதமாய்த் திருமணம் செய்து கொண்டான். ஆதர்ஷ் கதிரை அழைத்துப் பேசிய போதே அவள் விசயத்தை ஓரளவுக்கு ஊகித்துவிட்டாள். அர்விந்த்க்கு கதிரை பிடிக்காததால் அதைப் பற்றி அவள் வெளியில் மூச்சு விடவில்லை. அண்ணனின் கடைசி ஆசை மதியின் மறுமணமாய் இருந்தால்... அதை நிறைவேற்ற தான் அவள் எண்ணினாள். மதியின் வாழ்க்கை இந்தச் சின்ன வயதில் மூலையில் முடங்கி விடக் கூடாது என்று ஒரு பெண்ணாய் நினைத்தாள்.

அதனால் தான் மதியின் கழுத்தில் கதிர் கட்டிய தாலியை அர்விந்த் கழட்டி எறிய முயன்ற போது எல்லோரும் தடுத்துவிட்டனர். என்ன ஒன்று இந்த அதிரடி, அவசர திருமணத்தைத் தான் அவர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. என்ன இருந்தாலும் ஆதர்ஷ் என்ற மகத்தான மனிதன் இன்னமும் அவர்களின் மனதில் உயிர் வாழ்கிறான் அல்லவா... அவனின் இழப்பை மறக்க முடியாது... ஆனால் கலங்கிய மனதை தேற்ற கால அவகாசம் வேண்டாமா...

மதி தன்னைச் சுற்றிலும் இருந்தவர்களைப் பார்த்து புன்னகைத்தவள்... இடது பக்கம் ஓரமாய் நின்றிருந்த கதிரை கண்டதும் அவள் முகம் யோசனையில் சுருங்கியது. அடுத்த நொடி,

"இவன் எங்கே இங்கே வந்தான்... முதல்ல இவனை இங்கிருந்து போகச் சொல்லுங்க... இவன் முகத்தில் விழிக்கவே எனக்கு விருப்பமில்லை..." அவனைப் பார்த்து கத்தியவள் வெறுப்பாய் முகத்தைத் திருப்பிக்

கொண்டாள். அவளுக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் எல்லோரும் முழித்தனர்.

"மதி..." அவளை நோக்கி ஓரடி முன்னால் எடுத்து வைத்த கதிர் பின் ஏதோ நினைத்தவனாய் வெளியில் சென்று நின்று கொண்டான்.

"அம்மா... ஆது எங்கே...?" அன்று நடந்த விபத்து அவளுக்கு நியாபகம் இருந்ததால் அவள் அவனைக் கேட்டாள்.

"ஆது..." எல்லோரும் ஒன்று போல் அந்த வார்த்தைக்கு அடுத்த வார்த்தை பேச தெரியாமல் தடுமாறினர்.

"ஆதுக்கு என்னாச்சுன்னு சொல்ல போறீங்களா இல்லை..." கத்தியவளை மணிமாலா தான் சமாதானம் படுத்தினார்.

"வீட்டுக்குப் போய்ப் பேசிக்கலாம் அம்மு..."

"எனக்குப் பயமாயிருக்கு... ப்ளீஸ் சொல்லுங்க... ஆது எங்கே...?" என்று கேட்டவளுக்குப் பதில் சொல்ல முடியாமல் அனைவராலும் அழத்தான் முடிந்தது. அவர்களின் அழுகையே அவளுக்கு விபரீதத்தை உணர்த்த,

"ஆது..." பெருங்குரலெடுத்து கத்தியவள் அப்படியே மயங்கி சரிந்தாள். வெளியில் நின்று கொண்டிருந்த கதிர் அவளின் கதறல் கேட்டு உள்ளே ஓடி வந்தான்.

மருத்துவர்கள் வந்து மதியை பரிசோதித்துப் பயப்படும் படி ஒன்றுமில்லை என்று கூறிய பின் தான் எல்லோருக்கும் நிம்மதி வந்தது. கதிர் யோசனையுடன் மதியை பார்த்தான். தன்னை உயிருக்கு உயிராய் நேசிக்கும் அந்த மதி உண்மையா? இல்லை தன்னை அடியோடு வெறுக்கும் இந்த மதி உண்மையா? மொத்தத்தில் அவனுக்குக் குழப்பமே மிஞ்சியது. இனி மதியுடன் தான் வாழும் வாழ்க்கை தனக்குப் பெரிய

சவாலான ஒன்றாக இருக்கும் என்று மட்டும் உறுதியாய் எண்ணினான்.

****

"அம்மு இப்படிச் சாப்பிடாம இருந்தா உடம்பு என்னத்துக்கு ஆகும்... மனசை தேத்திக்கோடா..." மணிமாலா மதியின் தலையை ஆறுதலாய் வருடி கொடுத்துக் கொண்டு சொல்ல... அவரின் மடியில் படுத்துக் கொண்டிருந்த மதி கண்ணீரில் கரைந்து கொண்டிருந்தாள். வீட்டிற்கு வந்து இரண்டு நாட்களாகியும் ஆதர்ஷின் இறப்பை அவளால் ஜீரணிக்க முடியவில்லை. ஆதர்ஷ் என்ற அன்பு மனிதனின் அன்பில், பாதுகாப்பில் எந்தக் கவலையும் இல்லாமல்... தாயின் சிறகுக்கு அடியில் பாதுகாப்பாய் பதுங்கிய சேய் பறவையாய் இருந்தவளுக்கு அவனின் இழப்பு வார்த்தைகளில் அடக்க முடியாத துக்கமே...

"அம்மா... ஆது..." மதியின் புலம்பலை கையாலாகாமல் பார்த்தவர் தன் மகன் அர்விந்தை பார்த்தார். அவன் ஆதிரையிடம் கண்ணைக் காட்ட... அவள் பழச்சாறை எடுத்துக் கொண்டு வந்து மதியின் அருகில் அமர்ந்து,

"மதி... இதைக் கொஞ்சமாவது குடிம்மா..." படுத்திருந்த வாக்கில் அவள் வாயில் புகட்ட... வேறுவழியின்றி அதைப் பருகியவள் ஆயாசமாய்க் கண்ணை மூடி படுத்தாள்.

"அப்பா எத்தனை நாளுக்குத் தான் இங்கேயே இருக்கிறது... நம்ம ஊருக்கு போகலாம்ப்பா..." அர்விந்த் தான் பேச்சை ஆரம்பித்தான்.

"எப்படிப் போறது...?" குணசேகர் ஆழ்ந்து அவனைப் பார்த்தார். அவரின் பார்வையில் இருந்த அர்த்தத்தைப் புரிந்தவனுக்குக் கதிரின் மேல் ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது. எந்த மாதிரி நேரத்தில் அவன் என்ன மாதிரியான காரியத்தைச் செய்திருக்கிறான்.

"கதிர்..." அவன் ஆத்திரத்துடன் பல்லை கடிக்கும் போதே... அவனின் ஆத்திரத்திற்குக் காரணமான கதிர் அங்கு

வந்து சேர்ந்தான்.

மதியின் வீட்டினுள் உள்ளே நுழையும் போதே கதிர் ஒருவித அழுத்தத்துடன் தான் நுழைந்தான். அவனின் மனதின் உறுதி அவனின் நடையில் தெரிந்தது. மணிமாலா மடியில் கண்மூடி படுத்திருந்த மதியின் அருகில் வந்தவன்,

"மதி பேபி..." என்றழைக்க... அவனின் குரலில் விலுக்கென்று எழுந்தமர்ந்தவள்,

"ஏய்... நீ எப்படி உள்ளே வந்த...? அப்பா, அர்வி இவனை வீட்டை விட்டுப் போகச் சொல்லுங்க..." கோபமாய்க் கத்தியவளை வலுக்கட்டாயமாய் எழுப்பி நிற்க வைத்தவன்... அவளின் கையைப் பிடித்துத் தரதரவென இழுத்துச் சென்றான். அவனின் செயலில் அதிர்ந்தவள் அவளையும் அறியாமல் அவனின் செய்கைக்கு உடன்பட்டாள்.
கதிரின் நடவடிக்கையில் மற்றவர்களும் திகைத்து போய் அவர்களின் பின்னே சென்றனர்.

கதிர் அவளை நேரே பூஜையறைக்கு அழைத்துச் சென்றவன்... அங்கிருந்த குங்குமத்தை எடுத்து அவளின் வெற்று நெற்றியில் வைத்தவன், "நீ எப்பவும் பூவோடும் பொட்டோடும் தான் இருக்கணும்..." அவனின் செயலில் உடல் அதிர, உள்ளம் அதிர... திகைப்பாய் அவனைப் பார்த்தாள்.

"அம்மு... அந்த முட்டாள் கட்டிய தாலியை கழட்டி அவன் முகத்தில் விட்டெறி..." அர்விந்தின் கோப வார்த்தையில் அவன் புறம் திரும்பியவள் புரியாமல் அண்ணனை பார்த்தாள்.

அர்விந்த் அவள் அருகில் வேகமாய் வந்தவன் அவள் கழுத்திலிருந்த தாலியை தூக்கி காண்பித்து, "நீ ஹாஸ்பிட்டலில் சுயநினைவு இல்லாம இருந்தப்போ... இவன் திருட்டுத்தனமா உன் கழுத்தில் தாலி கட்டியிருக்கான்... நீ மனசொடிஞ்சு இருந்ததால நாங்க

உன் கிட்ட இதைச் சொல்லல... இவன் உனக்கு வேண்டாம்மா... அப்படியே உனக்கு மறுகல்யாணம் பண்றதா இருந்தா வேற மாப்பிள்ளை பார்க்கிறேன்..." அர்விந்த் மேலே பேசும் முன்...

"அர்வி... போதும்... போதும்... பெருமாளே இன்னும் என்னென்ன சோதனை எனக்கு வச்சிருக்கியோ..." தாங்க மாட்டாமல் இரு காதுகளையும் தன் இரு கை கொண்டு இறுக மூடி கொண்டவள் கண்ணில் கண்ணீர் ஆறாய் வழிந்தோடியது.

"போதுமாடா... ச்சீ... இதுக்கு மேலே இங்கே நிக்காதே... வெளியில் போ..." அர்விந்த் வாயில் பக்கம் கையைக் காட்ட...

"அதை என் மதி பேபி சொல்லட்டும்... நான் போறேன்..." அலட்சியமாய்ச் சொன்ன கதிர் மதியை பார்த்தான்.

மதிக்கு எங்கிருந்து தான் அவ்வளவு ஆத்திரம் வந்ததோ... ஆவேசமாய் அவனருகில் வந்தவள் அவனின் சட்டை காலரை இரு கையில் பிடித்துக் கொண்டு, "என்னடா சொல்லணும்... இன்னும் என் வாழ்க்கையைச் சீரழிக்க என்ன மிச்சம் இருக்கு...? சீரழிச்ச வரை பத்தாதா... நீ எனக்கு வேண்டாம்... போடா வெளியே..."

"இவ்வளவு நாள் நீ சொன்னதை நான் ஒரு தடவை கூடக் கேட்டதில்லை... இப்போ நீ சொல்றதை கேட்கிறேன்..." அவள் கண்களை ஆழ்ந்து பார்த்து சொன்னவன், "உனக்கு நான் வேண்டாம்... உனக்கும் எனக்கும் இடையில் எந்த உறவும் இல்லை... அப்படின்னு நீ சொல்றதால..." என்று நிறுத்தியவன் அவள் கழுத்தில் தான் கட்டிய தாலியை அவள் கண் முன் ஆட்டி, "இதை நீயே கழட்டி என்னிடம் கொடுத்திடு..." திமிராய் சொன்னவனை அதிர்ந்து போய்ப் பார்த்தவளின் வாய் அவளையும் அறியாமல்,

"பாவா..." என்றதோடு மட்டுமல்லாமல் அவனின் கையில் ஆடிய தாலியை அவனின் கையோடு சேர்த்து இறுக

பற்றியது. அவளின் செயலில் கதிரின் முகம் வெற்றி புன்னகையைப் பூசியது.

உள்ளே விருப்பு... வெளியில் வெறுப்பு...
புரியாத புதிர் நீ...
பாலையும் நீரையும் பிரித்துப் பருகும் அன்னமாய்...
உன் விருப்பையும் வெறுப்பையும் பிரித்து உணரும் நான்...!!!

நாளை : 18

மதியின் 'பாவா' என்ற வார்த்தையில் கதிரின் முகம் புன்னகையில் மலர, 'உன்னை நானறிவேன்...' என்ற கர்வத்துடன் அவள் முகத்தை இமைக்காமல் பார்த்தான்.

"அம்மு... அவன் கட்டிய தாலியை கழட்டி அவன் முகத்தில் தூக்கியெறி..." அர்விந்த் சொல்லி முடிக்கும் முன் அவனின் கன்னத்தை ஒரு கரம் பதம் பார்த்தது. ஆம்... மணிமாலா தான் அவனை அடித்திருந்தார். அவர் கண்களில் கோபத்துடன் அவனை முறைத்து பார்த்தார்.

அன்னை அடித்த சத்தத்தில் கதிரின் கையைப் பிடித்திருந்த தன் கையை அவசரமாய் விலக்கினாள் மதி. கதிர் கேள்வியுடன் அவளைப் பார்க்க... முதலில் அவளின் கண்கள் வெறுப்பு, கோபம் இரண்டையும் பிரதிபலித்தாலும்... பிறகு அதில் எஞ்சியிருந்தது ஆதங்கம் மட்டுமே...

'ஏண்டா... இப்படிச் செஞ்ச...?' என்ற ஆதங்கம் மட்டுமே அவளிடம் மிஞ்சியிருந்தது.

"அர்வி... உன் தங்கையின் கழுத்தில் இருக்கும் தாலியை கழட்ட சொல்ல... உனக்கு எப்படி மனம் வந்தது...? அந்தளவுக்கு உன் மனசு கல்லானது எப்போது? உன்னிடம் இருந்து இந்த மாதிரி ஒரு வார்த்தையை நான் எதிர்பார்க்கல..." மணிமாலாவின் குரல் கோபத்தில் துவங்கி ஆற்றாமையில் முடிந்தது.

"அம்மா... புரியாம பேசாதீங்க... இப்போ நாம என்ன மாதிரியான நிலமையில் இருக்கோம்... மதியின் நிலை அதை விட மோசம்... இப்போ இவன் பண்ணியிருக்கிற காரியத்தால... எல்லார் முன்னாடி அவமானப்படப் போறது நாம தானே... முக்கியமா மதி... அதை யோசிச்சு பாருங்க..." அர்விந்தின் வார்த்தைக்கு அங்கே யாரிடமும் பதில்லை.

அர்விந்தின் வார்த்தைகள் கதிரை சுடத் தான் செய்தது. ஆனாலும் தான் செய்த காரியத்தை அவன் தவறு என்று நினைக்கவில்லை.

"எல்லாத் தெய்வங்களும் சாட்சியாய், துணையாய் இருக்க... ஊர் கூடி... உறவினர் கூடி வாழ்த்திய கல்யாணம் தான் என் பொண்ணுக்கு நிலைக்காம போச்சு... இந்தக் கல்யாணமாவது அவளுக்கு நிலைச்சு நிக்கட்டும் அர்வி..." வேதனையுடன் சொன்ன மணிமாலா முகத்தை மூடி கொண்டு அழுதார். ஆதிரை அவர் அருகில் வந்து ஆதரவாய் நின்று கொண்டாள். அத்தையின் எண்ணம் தான் அவளுக்கும்... ஆனால் அதைச் சபையில் அனைவரின் முன்னிலையில் கணவனிடம் சொல்வது சரியாகப் படாததால் அமைதி காத்தாள்.

"சரிம்மா... நீங்க சொல்ற மாதிரியே வச்சுக்குவோம்... ஆது இறந்து இருபது நாள் கூட ஆகாத இந்த நிலையில்... எப்படிம்மா இதை ஏத்துக்க முடியும்? அப்படியே அம்முக்கு மறுமணம் பண்ணனும்ன்னா... அதுக்கு இவன் தான் கிடைச்சான்னா... ஊர் உலகத்துல இவனை விட நல்ல பையன் இல்லையா என்ன?" மிதமிஞ்சிய வெறுப்போடு பேசிய அர்விந்த்... அதே வெறுப்பைத் தன் பார்வையில் தேக்கி கதிரை முறைத்துப் பார்த்தான்.

'பார்டா... அண்ணனும் தங்கச்சியும் ஒரே மாதிரி முறைக்கிறதை...' மனதில் நினைத்த கதிர் அமைதியாய் நின்றிருந்தான்.

"அர்வி கொஞ்ச நேரம் பேசாமயிரு..." குணசேகர் மகனை அடக்கியவர், கதிரின் அருகில் வந்தார்.

"ஆது இறந்த அதிர்ச்சியையே நாங்க தாங்கிக்க முடியாம இருந்தப்போ... நீங்க அதை விடப் பெரிய அதிர்ச்சியை எங்களுக்குக் கொடுத்திட்டீங்க... ஒரு பெண்ணோட தகப்பனா உங்க செயலை நான் ஆதரிக்கத் தான் செய்றேன். ஆனா நான் மதிக்கு மட்டும் அப்பா இல்லை... ஆதுவுக்கும் அப்பா மாதிரி தான்... சின்ன வயசில் இருந்து அவனை வளர்த்தவன் நான்... அவனோட இழப்பை

இன்னமும் எங்களால் ஜீரணிக்க முடியல. அப்படியிருக்கும் போது... உங்க செயலை ஏத்துக்க எங்களுக்குக் கொஞ்ச நாள் தேவைப்படும்... அது வரைக்கும் நீங்க கொஞ்சம் ஒதுங்கியிருந்தா நல்லாயிருக்கும்" கையெடுத்து கும்பிட்டவரை கண்டு கதிர் பதறி தான் போனான்.

"அய்யோ என்ன அங்கிள்..." அவரின் கையைக் கீழே இறக்கினான்.

"நீங்க சொல்றபடி நான் கேட்கிறேன்... ஆனா அதுக்கு முன்னாடி மதி கிட்ட நான் கொஞ்சம் பேசணும்..." என்றவனிடம் சம்மதமாய் அவர் தலையசைக்க...

"மதி வா..." அவன் அவளை அழைக்க... அவளோ அவனை அழுத்தமாய்ப் பார்த்துக் கொண்டு நின்றிருந்தாளே தவிர... கொஞ்சமும் அசையவில்லை.

"நான் உன் கிட்ட பேசியே ஆகணும் மதி..." அழுத்தமாய்ச் சொன்னவன் அவள் கை பிடித்துக் கொண்டு அருகில் இருந்த அறைக்கு இழுத்துச் சென்றான். அவள் மனதுக்குள் முரண்டினாலும் அவனின் பின்னே செல்ல தான் செய்தாள்.

"அப்பா... அந்தப் பொறுக்கி கூட மதியை அனுப்பி இருக்கீங்களே..." அர்விந்த் படபடக்க... குணசேகர்,

"ம்ப்ச்... கொஞ்சம் பொறுமையா இரு அர்வி..." என்று அவனை அடக்கியவர்... யோசனையில் ஆழ்ந்தார். அவர் கதிரை நம்பவில்லை. ஆனால் ஆதர்ஷை நம்பினார். கடைசி மூச்சு விடும் நேரத்திலும் ஆதர்ஷ் கதிரை அழைத்துப் பேசியிருக்கிறான் என்றால்... ஏதோ விசயம் இருக்கு என்று அவரின் உள்மனம் சொல்லியது. ஒருவேளை மதியின் வாழ்வை ஆதர்ஷ் கதிரின் கையில் ஒப்படைத்துவிட்டானோ... அப்படி ஒன்று நடந்திருந்தால் ஆதர்ஷே தெய்வமாய் நின்று மதியின் வாழ்க்கையை வழி நடத்தட்டும் என்று மனிதனாய் பிறந்து கடவுளாய் மாறி போன ஆதர்ஷிடமே மதியின் பொறுப்பை ஒப்படைத்தார்.

அறைக்குள் நுழைந்ததும் கதிரை பார்த்து கோபத்துடன் மதி, "உனக்கு என்னத்தான்டா பிரச்சினை... நான் தான் நீ வேண்டாம்ன்னு விலகி வந்திட்டேன்ல... அப்புறம் எதுக்கு இப்படிச் செஞ்ச...?" தன் கழுத்தில் கிடந்த தாலியை தூக்கி காண்பிக்க...

"நான் தான் ஏற்கெனவே சொல்லிட்டேனே... உனக்குப் பிடிக்கலைன்னா கழட்டி போட்டிருன்னு..." அழுத்தமாய்ச் சொன்னவன் அதை விட அழுத்தமாய் அவளைப் பார்த்தான்.

"ஏன் செய்ய மாட்டேன்னு நினைச்சியா?"

"செஞ்சு தான் பார்றேன்னு நானும் சொல்றேன்..."

"இதோ இப்பவே செய்றேன்..." என்றபடி தன் கழுத்தில் அவன் கட்டிய தாலிக்கொடியை கழட்ட போனாள்.

வேகமாய் அவளருகில் வந்து, அவள் கையைப் பிடித்துத் தடுத்தவன், "நான் சாகிறப்போ தான் நீ இதைக் கழட்டணும்..." உறுதியான குரலில் கூறியவன், "அதையும் மீறி கழட்டணும்ன்னு நினைச்ச... அதுக்கப்புறம் நான் மனுசனா இருக்க மாட்டேன்..." கர்ஜித்தவனைக் கண்டு அவளுக்கு உள்ளுக்குள் நடுங்கியது. அன்று சேயாய் தன்னை நாடிய கதிர் இவனில்லை என்ற உண்மை அவளுக்குப் புலப்பட,

"என்னைக்குத் தான்டா நீ மனுசனா நடந்து இருக்க..." முகத்தை மூடி கொண்டு தேம்பியவளை கண்டு,

"அன்னைக்குக் கெட்டவனா இருந்த என்னை நேசிச்ச உன்னால... இன்னைக்கு நல்லவனா... உன் காதலை உணர்ந்தவனா மாறியிருக்கிற என்னை ஏன் புரிஞ்சிக்க முடியல...?" அவன் குரல் அவளிடம் கெஞ்சியது. அவன் பேச்சில் கண்களைத் துடைத்துக் கொண்டு,

"ச்சீ... என்ன பேசிற நீ... அடுத்தவன் மனைவி கிட்ட நல்லவன் ஒருவன் பேசற பேச்சா இது..." முகத்தை அருவருப்பில் சுளித்தாள்.

"அடுத்தவன் மனைவியா யாரது...? நான் என் மனைவி... என் மதி பேபி கிட்ட தான் பேசிட்டு இருக்கேன்..." நமட்டு சிரிப்புடன் சொன்னவனை அவளால் முறைக்கத் தான் முடிந்தது.

"என் விருப்பம் இல்லாமல் நீ தாலி கட்டிட்டா... நான் உன் மனைவியாகிருவேனா? நல்லாயிருக்கு உன் பேச்சு..."

"நான் தாலி கட்டியது உன் மனசை புரிஞ்சிக்கிட்டதால..." என்று சொன்னவனை அவள் அதிர்வுடன் பார்த்தாள்.

"உன் பாவா நான் தான் தெரிஞ்சிக்கிட்டாதால..."

"இல்லை நீ என் பாவா இல்லை... நீ இல்லை..." கோபத்தில் கத்தியவளை கண்டு அவன் சிறிதும் அசரவில்லை.

"நான் உன் பாவா தான்னு நிரூபிக்க நான் என்ன செய்யட்டும்..." என்று தாடையைத் தடவி கொண்டு யோசித்தவன், "ஆங்... நியாபகம் வந்திருச்சு... சிலது எனக்கு வர போகிறவருக்கு மட்டுமேன்னு நீ சொன்னேல்ல... அது உண்மையான்னு டெஸ்ட் பண்ணி பார்த்தரலாமா...?" ஏற்கெனவே அவளருகில் நின்றிருந்தவன் மேலும் அவள் அருகில் வர, அவள் அச்சத்தில் கண்களை இறுக மூடி கொண்டாள்.

சில நிமிடம் அவள் முகத்தை அமைதியாய் பார்த்துக் கொண்டு நின்றவன், தன் சட்டைப் பையில் இருந்து கைக்குட்டையை எடுத்து அவளின் நெற்றியில் பூத்திருந்த வியர்வை பூக்களை மென்மையாய் துடைத்துவிட்டான். அவனின் செயலில் மெதுவாய் கண்களைத் திறந்து பார்த்தவள் கண்களில் இன்னமும் அச்சம் மீதமிருந்தது.

"நான் ஒண்ணும் மிருகம் இல்லை பேபி..." என்றவன், "ஒரு காலத்தில் மிருகமாய் இருந்தவன் தான்... உன் காதலை உணர்ந்த பின்னாடி நான் முழுசாய் மனுசனா மாறிட்டேன்... உன்னால் இதை நம்ப முடியாமல் இருக்கலாம்... ஆனால் இது சத்தியமான உண்மை..."

"நீ நல்லவனா மாறு... இல்லை மாறாமல் இரு... அது உன் கவலை... நீ பேசிய பேச்சால் அன்னைக்கே உனக்கும், உன் காதலுக்கும் நான் பெரிய கும்பிடு போட்டுட்டேன்... என் மனசில் உன் மேல் காதல் இல்லை. நான் உன் காதலியும் இல்லை. நான் இப்போ ஆதர்ஷோட மனைவி மட்டும் தான்..."

"அதை நான் மறுக்கலியே... ஆனால் ஆதர்ஷ் இறந்த காலம்... இந்தக் கதிர் தான் உன் நிகழ்காலம், எதிர்காலம் எல்லாம்... அப்புறம் என்ன சொன்ன உன் மனசில் என் மேல் காதல் இல்லைன்னு சொன்னல்ல... அது இருக்குன்னு நான் அடிச்சு சொல்றேன்... அந்தக் காதலை உனக்கு நான் உணர்த்தும் காலம் வரும் அப்போ நீயே புரிஞ்சிப்ப..."

"நீ எதையும் உணர்த்த வேணாம்... என்னை என் போக்கில் வாழ விடு..." எரிச்சலுடன் மொழிந்தவள்... அவனை விட்டு தள்ளி நின்றாள்.

"உன் போக்கில் தான் விடப் போறேன்..." என்றவனை அவள் நிமிர்ந்தும் பார்க்கவில்லை.

"ஆதர்ஷோட திதி முடியற வரை நீ உன் அம்மா வீட்டில் இரு... அதாவது இன்னும் ஒரு வருசம்... அதுக்கப்புறம் ஒரு நொடி கூட உங்க அம்மா வீட்டில் உன்னை நான் விட்டு வைக்க மாட்டேன்..."

"அப்படியா ரொம்பச் சந்தோசம்... இப்ப நடையைக் கட்டு" அவன் முகத்தைப் பார்க்காமல் கடுப்புடன் கூறியவளை கண்டு அவனுக்குக் கோபம் வரவில்லை.

"வரட்டுமா மதி பேபி..." அவனின் ஏக்க குரலுக்கும் அவள் அவனைப் பார்க்கவில்லை.

"ஒரு வருசம் உன்னைப் பார்க்காம இருக்கணும்... என்னோட தவிப்பு உனக்குப் புரியலையா?" அவனின் குரலில் இருந்த தவிப்பு, தாபம் இதையெல்லாம் உணர்ந்த

மதி அவளையும் அறியாமல் திகைப்பாய் அவனை ஏறிட்டு பார்த்தாள்.

"தேங்க்ஸ் பேபி... இந்த நிம்மதியுடன் நான் ஒரு வருசத்தை ஒரு நொடியில் கடந்திடுவேன்... நான் வர்றேன் பேபி..." அவள் முகத்தைப் பார்த்த திருப்தியில் அந்த அறையை விட்டு அவன் வெளியேறினான். அவன் போவதை வெறித்துப் பார்த்துக் கொண்டு அசையாமல் நின்றிருந்தாள் அவள்.

வெளியில் வந்தவன் நேரே குணசேகரிடம் தான் சென்றான். "அங்கிள் நீங்க கேட்ட கொஞ்ச நாள் ஒரு வருசம் போதுமா...?" அவனின் பேச்சில் அதிர்ந்து போய்ப் பார்த்தனர் எல்லோரும். கதிரின் வார்த்தைகளை அர்விந்தால் கொஞ்சமும் நம்ப முடியவில்லை.

"ஆமாம் அங்கிள்... ஆதர்ஷ் திதி முடியும் வரை மதி இங்கே இருக்கட்டும்... இந்த ஒரு வருசமும் அவளை நான் பார்க்க கூட வர மாட்டேன். இது கூட உங்க எல்லோருக்காகவும் தான்... முக்கியமா மதிக்காக... என்ன இருந்தாலும் நீங்க சொன்ன மாதிரி ஊர், உலகம் பேச தான் செய்யும். நான் அதையெல்லாம் பெரிசா எடுத்துக்க மாட்டேன்... ஆனால் உங்க உணர்வுகளுக்கு நான் மதிப்புக் கொடுக்கேன்... இவ்வளவு பேசற நான் ஏன் இப்படி ஒரு காரியத்தைச் செய்தேன்னு நீங்க எல்லோரும் நினைக்கலாம்... ஆனால் அதை இப்போ நான் சொல்ல மாட்டேன்... அதை மதியே அவள் வாயால் சொன்னால் தான் நல்லாயிருக்கும்... நீங்களும் நம்புவிங்க... அப்புறம் ஒரு விசயம் இப்போ நான் திருந்திட்டேன்... உங்க பொண்ணை நான் நல்லா பார்த்துக்குவேன்..." அவனின் வார்த்தைகளில் குணசேகரால் பேச முடியவில்லை. கண்ணீர் மல்க கையெடுத்து கும்பிட மட்டுமே அவரால் முடிந்தது.

அடுத்து கதிர் சென்றது மணிமாலாவிடம், "ஆன்ட்டி... மதி இங்கே இருக்கும் வரைக்கும் அவளைப் பத்திரமா பார்த்துக்க வேண்டியது உங்க பொறுப்பு..." என்றவன் அர்விந்தை ஒரு பார்வை பார்த்துவிட்டு, "என்

மனைவியாய் அவளைப் பார்த்துக்கோங்க... என் மனைவியாய் அவளை என் கிட்ட பத்திரமா ஒப்படைச்சிருங்க..." அவனக்குப் பதில் சொல்ல முடியாமல் அவரும் கண்கள் கலங்க சம்மதம் என்பது போல் தலையசைத்தார்.

"தங்கச்சி நீயும் மதியை பத்திரமா பார்த்துக்கோம்மா..." ஆதிரையிடமும் அவன் சொல்ல...

"சரிங்கண்ணா..." என்றவளை அர்விந்த் முறைத்து பார்க்க... அவள் சட்டென்று வாயை மூடி கொண்டாள்.

எல்லோரிடமும் விடைப்பெற்று வெளியில் வந்த கதிரின் மனம் கனத்துப் போயிருந்தாலும்... மனதின் ஓரத்தில் சிறு நிம்மதி எழத்தான் செய்தது. அது அவனின் மனைவியாய் மதி இருப்பதால் விளைந்த நிம்மதியே.

விசயம் கேள்விப்பட்ட ராகேஷ் சந்தோசத்தில் துள்ளி குதித்தான் என்றால்... கவிதாவோ முகத்தைச் சுளித்தாள். "ஏண்டா கதிர்... உனக்குப் போயும் போயும் விதவை பொண்ணு தான் கிடைத்தாளா? அதுவும் முதல் கணவன் இறந்து கொஞ்ச நாள் கூட ஆகல... என்ன பெண் அவள்.." அக்காவின் பேச்சில்... அவனுக்கு அர்விந்த் நியாபகம் தான் வந்தது. அவன் சொன்னது சரியாகத் தான் இருக்கிறது என்பதை உணர்ந்தவன் வேதனையுடன் கண்களை மூடி கொண்டான்.

"ஷ்... கவி என்ன பேச்சு பேசுற... என்ன இருந்தாலும் அவள் கதிரின் மனைவி..." சத்யன் தன் மனைவியைக் கடிந்தான்.

சத்யனின் பேச்சில் கண்களைத் திறந்த கதிர் அவனைப் பார்த்துப் புன்னகைத்தான். "சாரிடா மச்சான்... அவ ஏதோ புரியாம பேசுறா..." சத்யன் அவனைத் தேற்ற...

"விடுங்க மாமா... அக்கா தானே பேசுறா... பேசிட்டு போகட்டும்..." சத்யனிடம் கூறியவன், கவிதாவிடம், "என் காதல் கதையை இப்போதைக்கு என்னால் விலாவரியா

சொல்ல முடியல... நேரம் வரும் போது நானே உங்களுக்குச் சொல்றேன்... அதுவரைக்கும் மதியை பத்தி ஒண்ணும் சொல்லாதீங்க..." அவனின் வருத்தம் கவிதாவை அசைத்து விட்டது.

" சாரி கதிர்... உன் மேலுள்ள பாசத்துல... அப்படிப் பேசிட்டேன்... உனக்கு அவளைப் பிடிச்சிருக்கில்ல... அப்போ எனக்கும் அவளைப் பிடிக்கத் தான் செய்யும்..." என்ற அக்காளை நிம்மதியுடன் பார்த்தான் கதிர்.

மூன்று நாட்களில் மதி ஹைதராபாத் கிளம்பிய போதும் கதிர் அவளைச் சென்று பார்க்கவில்லை. அவளைப் போய்ப் பார்க்க வேண்டும், அவளுடன் பேச வேண்டும் என்று அவனுக்கு நெஞ்சு நிறைய ஆசை இருந்த போதும்... கொடுத்த வாக்குக்காகத் தன் மனதை கட்டுப்படுத்திக் கொண்டு இருந்துவிட்டான்.

அடுத்து வந்த ஒரு வருடம் எப்படித்தான் ஓடியது என்று கதிரிடம் கேட்டால் அவனுக்குத் தெரியாது... பகல் முழுவதும் வேலையில் தன்னைத் தொலைத்தவன்.... இரவில் மதியின் நினைவில் கரைந்தான். முன்பு போல் சோகத்தில் கரையவில்லை... அவளின் நினைவில் சுகமாய்க் கரைந்தான்.

சரியாக ஒரு வருடம் கழித்து ஆதர்ஷின் திதி அன்று காலையில் மதியின் வீட்டில் நுழைந்தவனை எல்லோரும் ஆச்சரியமாய்ப் பார்த்தனர் என்றால் மதியோ எரிச்சலுடன் பார்த்தாள்.

'ஈட்டிக்காரன் மாதிரி சரியா வந்து நிற்கிறானே... கடங்காரன்... கடங்காரன்...' மனதில் அர்சித்தபடி அவள் அவனை முறைத்து பார்க்க... அவனோ அவளைக் கண்ணிமைக்காமல் காதலுடன் பார்த்தான்.

நான் கடங்காரனில்லை பெண்ணே...
உன் இதயத்தைக் களவாடிய கள்வன் நான்...
உன்னைக் கவர்ந்து செல்லும் பிரித்விராஜன் நான்...
என் சம்யுக்தை... கள்வனின் காதலி நீ...!!!

நாளை : 19

கதிரின் கண்கள் புகைப்படச் சட்டத்தின் உள்ளே சிரித்துக் கொண்டிருந்த ஆதர்ஷின் பிம்பத்தை இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தது. 'எதற்காக இவ்வளவு அவசரம் ஆதர்ஷ்...? மதியை என் கையில் ஒப்படைப்பதற்காகவா...?' அவனின் மனம் ஆதர்ஷிடம் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தது. அவனின் கேள்விக்கு ஆதர்ஷின் புன்னகையே பதிலாக அமைந்தது.

ஆதர்ஷின் திதிக்கான நிகழ்வுகள் அந்தப் பெரிய வரவேற்பறையில் நடைப்பெற்றுக் கொண்டிருந்தது. வீடு முழுவதும் நெருங்கிய உறவினர்கள், நண்பர்கள் நிறைந்திருந்தனர். கதிர் இதில் எல்லாம் கலந்து கொள்ளாமல் ஓரமாய் நின்று கொண்டிருந்தான். அங்கிருந்த யாரையும் அவனுக்குத் தெரியாது... யாருக்கும் அவனைத் தெரியாது. எதற்காக மற்றவர் பார்வையில், வாயில் விழ வேண்டும் என்று அமைதி காத்தான். ஆனாலும் அவனின் கண்கள் அவனையும் அறியாமல் மதியை தேடியது.

மதி அறையின் மூலையில் ஆதிரையின் அருகில் அமர்ந்திருந்தாள். தன் கண்களில் இருந்து வழிந்த கண்ணீரை துடைத்துக் கொண்டு ஆதர்ஷின் புகைப்படத்தைப் பார்த்து கொண்டிருந்தவளின் கண்களில் மீண்டும் மீண்டும் கண்ணீர் வழிந்து... அவளின் அதீத துக்கத்தை எல்லோருக்கும் பறை சாற்றியது. மதியின் நிலை கண்டு திடீரென்று கதிருக்கு மனதில் ஒருவித தடுமாற்றம் வந்தது. மதியின் கழுத்தில் தான் தாலி கட்டியது சரி தானா? அவள் இந்தளவுக்கு ஆதர்ஷ் மேல் அன்பு வைத்திருப்பாள் என்று அவனுக்குமே தெரியாததால் அவனின் மனம் பலவாறு எண்ணி குழம்பி போனது. அதிலும் அவளின் பொட்டிழந்த முகமும், பூவில்லா கூந்தலும் அவனின் மனதில் தாங்கொண்ணா வலியை எழுப்பியது. அவனின் கண்கள் அவசரமாய் அவளின் கழுத்தை அலசி ஆராய்ந்தது. நல்லவேளை

அவன் அணிவித்த அவனின் அன்னையின் தாலிக்கொடி அவளின் கழுத்தில் கிடப்பதை உணர்ந்து அவனையும் அறியாமல் அவனிடத்தில் இருந்து ஒருவித நிம்மதி பெருமூச்சு கிளம்பியது.

கதிரின் பார்வை மதியை துளைத்ததோ என்னமோ ஏதேச்சையாய் நிமிர்ந்து பார்த்தவளின் பார்வையில் கதிரின் பிம்பம் விழ அவளின் முகம் கல்லாய் இறுகியது. அவளின் முகம் தான் எந்தவொரு உணர்ச்சியையும் பிரதிபலிக்கவில்லை என்றாலும்... அவளின் கண்கள் பிரதிபலித்த உணர்வுகளை அவனின் மனம் குறித்துக் கொண்டது. கொஞ்சமே கொஞ்சம் என்றாலும் அவனைக் கண்டதும் அவளின் கண்ணில் தோன்றிய பரபரப்பை கண்டு அவனின் மனம் சந்தோசத்தில் துள்ளியது. அந்த மகிழ்ச்சியில் அதன் பின் தோன்றிய அவளின் கோபத்தைக் கூட அவனால் புறம் தள்ள முடிந்தது.

திதி முடிந்ததும் உறவினர், நண்பர்கள் கூட்டம் எல்லாம் ஒவ்வொன்றாய் புறப்பட... எஞ்சியிருந்தவர்கள் வீட்டிலுருந்தவர்கள் மட்டுமே. மதி கதிரின் முகத்தைப் பார்க்க பிடிக்காமல் அவளின் அறைக்குச் செல்ல... கதிரோ யாரிடம் என்ன பேசுவது என்று தெரியாமல் விழித்துக் கொண்டிருந்தான். அவனைப் பார்த்து மணிமாலா,

"நீங்க வேணும்ன்னா அம்மு கிட்ட பேசிட்டு இருங்க..." என்று சொல்ல... அவனுக்கும் அது சரியென்று தோன்றியது. ஆதிரை அவனை மதியின் அறைக்கு அழைத்துச் சென்றாள்.

கதிர் அங்கிருந்து நகர்ந்ததும் அர்விந்த் படபடவெனப் பொரிய தொடங்கினான். "அப்பா... அவன் கூட அம்முவை அனுப்ப போறீங்களா...? எனக்கு இதில் கொஞ்சமும் இஷ்டமில்லை..." தன் விருப்பமின்மையை வெளிப்படையாய்ச் சொன்னான்.

"அவளின் கணவனுடன் அனுப்புவதில் என்ன தவறு இருக்கு அர்வி?"

"அவன்... அவன்... ஒரு பொம்பளை பொறுக்கிப்பா... அதுவுமில்லாமல் சரியான குடிகாரன். இவனை நம்பி அம்முவை எப்படி அனுப்பறது? இவனைக் கட்டிட்டு அம்மு தான் ரொம்பவும் கஷ்டப்படணும்..."

மகனை ஆழ்ந்து பார்த்த குணசேகர், "ஒரு தடவை தப்பு பண்ணின மாதிரி இன்னொரு தடவை தப்பு பண்ண மாட்டேன் அர்வி... கதிரை பத்தி நான் நல்லா விசாரிச்சிட்டேன்... இந்த மூணு வருசமா... அதாவது நம் அம்மு - ஆதர்ஷ் கல்யாணம் முடிந்ததில் இருந்து அவன் ரொம்பவும் மாறிட்டதா தகவல் வந்தது. அதுவுமில்லாமல் இந்த மூணு வருசத்தில் அவனின் தொழில் வளர்ச்சி அபாரம்... நான் சொல்லல... டிடெக்ட்டிவ் ரிப்போர்ட் சொல்லுது. எனக்கென்னமோ அவன் திருந்தி விட்ட மாதிரி தான் தோணுது. அதுவுமில்லாமல் கதிர் ஆதர்ஷோட சாய்ஸ். இல்லைன்னா ஆதர்ஷ் கதிரை அழைத்துப் பேசியிருக்க வேண்டிய அவசியமே இல்லையே. நம்மிடமே அம்முக்கு மறுமணம் செஞ்சி வைங்கன்னு... சொல்லியிருக்கலாமே. ஏன் செய்யல...? கதிரை கூப்பிட்டு ஏன் பேசினான்...?"

"அப்பா..." அதிர்வுடன் பார்த்தான் அர்விந்த். அதிர்ந்தது அவன் மட்டுமல்ல மணிமாலாவும் தான். கதிரை மதியின் அறையில் விட்டு வந்த ஆதிரையும் இதைக் கேட்டு அப்படியே நின்றுவிட்டாள். மூவரும் இந்தக் கோணத்தில் யோசிக்கவில்லை. ஆதர்ஷின் கடைசி விருப்பம் கதிர் மதியை திருமணம் செய்ய வேண்டும் என்பது மட்டுமே... அவர்களின் எண்ணமாய் இருந்தது. அதன் பின்னால் இவ்வளவு விசயம் இருக்குமென்று யாரும் நினைத்து கூடப் பார்க்கவில்லை.

ஆமோதிப்பது போல் தலையசைத்த குணசேகர், "அம்மு விசயத்தில் நிறையப் புதிர் இருக்கு. அது தெரியணும்ன்னா அம்மு வாயை திறக்கணும்... அது இப்போதைக்குச் சாத்தியமில்லை. அதுக்கு நாம பொறுமையா காத்திருக்கணும்... காத்திருந்து தான் ஆகணும் வேற வழியில்லை... அம்மு கதிரோட போறது

தான் நல்லது... அவனால் மட்டும் தான் அவளைச் சரி பண்ண முடியும்... மீதியை அந்தப் பெருமாள் பாதத்துல சமர்ப்பிப்போம்... அவருக்குத் தெரியும் யாருக்கு என்ன செய்யணும்ன்னு..." என்று அவர் முடித்துக் கொள்ள... மூவரும் அதை ஏற்று அமைதி காத்தனர்.

அர்விந்த் மனம் மட்டும் 'கிளியை வளர்த்து குரங்கு கையில் கொடுத்த கதையாய்... கதிரின் கையில் அம்முவை ஒப்படைப்பதா...' என்று மிதமிஞ்சிய வெறுப்பில் கோபப்பட்டது.

மதியின் அறைக்குள் மெதுவாய் நுழைந்த கதிர், கட்டில் முழக்காலிட்டு அமர்ந்து... கால்களில் முகத்தைப் புதைத்துக் கொண்டிருந்த மதியை கண்டு அவளருகில் சென்றான். அவள் முதுகு குலுங்குவதில் இருந்து அவள் அழுகிறாள் என்பது புரிய அவள் அருகில் அமர்ந்தான். யாரோ தன்னருகில் அமரும் உணர்வில் தன்னிச்சையாய் நிமிர்ந்த மதி கதிரை கண்டதும்,

"என் ரூமில் நீ எப்படி...? முதல்ல வெளியில் போ..." கோபமாய் இரைந்தவள் கட்டிலிலருந்து எழப் போனாள். அவளைக் கையமர்த்தித் தடுத்தவன் அவளை அமர வைத்தான்.

"ச்சீ... என் கையை விடு..." தன் கையை அவனின் பிடியிலிருந்து உதறிக் கொள்ள முயல... அவனின் பிடியோ உடும்பு பிடியாய் இருந்தது. பிறகு என்ன நினைத்தானோ அவளின் கையைப் பிடித்திருந்த தன் பிடியை விலக்கினான்.

"மனுசனா நீ... மிருகம்..." அவன் இறுக்கி பிடித்திருந்ததால் கன்றிச் சிவந்திருந்த மணிக்கட்டை தடவி கொண்டே முணுமுணுத்தவளை ஏறிட்டு பார்த்தவன்...

"கிளம்பு... நம் வீட்டுக்கு போகலாம்..." நிறுத்தி நிதானமாய்ச் சொன்னாலும் அவனின் குரல் உறுதியாய்

ஒலித்தது. அந்த உறுதி அவளின் மனதை அசைக்கத் தான் செய்தது.

"உன் கூட நான் வர முடியாது..." கோபமாய்ச் சொன்னவள் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

"வரணும்... வந்து தான் ஆகணும்..." என்றவன் அவள் கைப்பற்றி எழுப்பி விட்டவன், "இன்னும் பத்து நிமிசம் தான் டைம்... அதுக்குள்ள உன்னோட ட்ரெஸை மாத்திட்டு... அப்புறம் இப்படிப் பொட்டில்லாமல் வராம... நெத்தி நிறையப் பொட்டு வச்சிட்டு... வா பார்க்கலாம்..." முகத்திலும், குரலிலும் கொஞ்சமும் இரக்கமில்லாமல் பேசியவனைத் திகைத்துப் போய்ப் பார்த்தவள்,

"உனக்குக் கொஞ்சம் கூட மனசாட்சி கிடையாதா?"

"மனசாட்சி இருப்பதால் தான் பேசிட்டு இருக்கேன்... இல்ல என் கை தான் பேசியிருக்கும்... பின்ன புருசன்காரன் உயிரோட இருக்கும் போது... பொண்டாட்டி இப்படியிருந்தா யாருக்கு தான் கோபம் வராது..."

"என்னோட புருசன் ஆது தான்... நீயில்லை..." என்றவளை ஆழ்ந்து பார்த்தவன்,

"இப்போ உன் புருசன் நான் தான்... அதை நீ மறக்காதே. போ... போய் நான் சொன்னதைச் செய்..." கடுமையுடன் கூறியவனைக் கண்டு உடல் அதிர்ந்தவள்... மறுத்துப் பேசாமல் உடை மாற்றும் அறைக்குள் சென்றாள்.

வெகுநேரம் கழித்தும் வராமல் இருந்தவளை கண்டு அவனுக்குப் பயம் எழ... உடை மாற்றும் கதவை தட்டினான். பதில் வராததால் அவன் கதவை தள்ள சாத்தியிருந்த கதவு தானாகத் திறந்து கொண்டது. அவள் எப்போதும் உடை மாற்றும் அறைக் கதவை தாளிடும் பழக்கம் இல்லாததால் வெறுமனே சாத்தியிருந்தாள். ஏனெனில் அவளின் அறைக்குள் யாரும் அவளின் அனுமதியின்றி உள்ளே நுழைந்தது கிடையாது. அதனால் தான் அவள் கதிரை மறந்திருந்தாள்.

மனதில் எழுந்த பயத்துடன் அவன் உள்ளே நுழைந்தான். கோபத்தில் தன்னை ஏதும் அடித்துவிடுவாளோ என்று மனதுக்குள் பயந்தான். பெண்களைக் கிள்ளுக்கீரையாய் நினைத்தவன் இன்று முதன்முதலாய் மதியிடம் பயம் கொண்டான்.

அங்கே அவன் கண்ட காட்சி அவன் இதயத்தில் ரத்தத்தை வரவழைத்தது. கண்ணாடியின் முன் நின்றிருந்த மதி கைகளில் குங்குமத்தை வைத்துக் கொண்டு தேம்பி தேம்பி அழுது கொண்டிருந்தாள். அவளைக் கண்டு இரக்கம் சுரந்ததா இல்லை அவளின் நிலை கண்டு இரக்கம் சுரந்ததா... ஏதோ ஒன்று அவன் மனதை தொட்டது. அவள் பின்னே வந்து நின்றவன்... அவளை அணைத்தார் போன்று தன் கரங்களை அவளின் முன் கொண்டு சென்றவன்... அவளின் நடுங்கும் கைவிரல்களைத் தன் கையால் பற்றினான். அவள் திகைத்து போய் அவனைப் பார்க்க... அவன் அவளின் பார்வையைப் பொருட்படுத்தாது தன் கைகளால் குங்குமத்தை எடுத்து கண்ணாடியை பார்த்துக் கொண்டு அவளின் உச்சி வகிட்டில் அழுந்த வைத்தான்.

"ஏன் இப்படியெல்லாம் பண்ற...? நீ இப்படிச் செய்றதால... நான் ஆதுவோட மனைவி இல்லைன்னு ஆகிருமா? நான் ஒரு விதவை என்பதை மறுக்க முடியுமா... மறக்க முடியுமா? ஏன் என்னை உயிரோட கொல்லுற... என்னை விட்டுரு..." அவன் பக்கம் திரும்பி கண்களில் கண்ணீர் வழிய... அவனின் சட்டை காலரை பற்றி இழுத்து கேட்டவளுக்கு என்ன பதில் சொல்வது என்று அவனுக்குத் தெரியவில்லை. அவனின் தைரியம் எல்லாம் அவளின் கண்ணீரை கண்டதும் சொல்லாமல் கொள்ளாமல் விடை பெற்றுச் சென்றது.

"ப்ளீஸ் பேபி... சாரி பேபி... உன்னுடைய இந்த நிலைக்குக் காரணம் என் முட்டாள்தனம் தான்... ஐயம் சாரி பேபி..." அவளின் கண்ணீரை துடைத்து விட்டவன் அவளைத் தன்னோடு ஆறுதலாய் அணைத்துக் கொண்டான்.

"நீ முட்டாள் தான்டா... முட்டாளே தான்டா..." அவன் நெஞ்சில் தன் மெல்லிய, மென்மையான கைகளைக் கொண்டு குத்தியவள் ஒரு கட்டத்திற்கு மேல் முடியாமல் அவன் நெஞ்சில் சாய்ந்து கண்ணீர் உகுத்தாள். அவனின் மார்பு பகுதி அவளின் கண்ணீரை உணர்ந்ததும் அவனுக்குச் சுற்றுப்புறம் உறைக்க...

"மதி பேபி..." அவனின் வார்த்தையில் கண்ணீரோடு நிமிர்ந்து பார்த்தவளின் அகன்ற விழியில் தானும் தொலைந்து போக மாட்டோமா என்றிருந்தது அவனுக்கு. அவளின் பார்வையில் இருந்த வருத்ததில் தான் செய்த தவறுகளைக் கால அழிப்பானால் அழிக்க முடியாதா என்று ஏக்கமாய் இருந்தது அவனுக்கு.

"என்னை மன்னிக்கக் கூடாதா... என் தவறுகளை மறக்க கூடாதா?" அவன் குரல் அவளிடத்தில் மண்டியிட்டு கெஞ்சியது. அவனின் கெஞ்சலில் தன்னை மீட்டுக் கொண்ட மதி, அவனிடத்தில் இருந்து விலகி நின்றவள்,

"எதை மன்னிக்கச் சொல்ற... எதை மறக்க சொல்ற..." கைகளைக் கட்டி கொண்டு அவனை வெறித்துப் பார்க்க... அவளின் நிதானத்தில் கதிரிடமும் பழைய நிமிர்வு வந்து சேர்ந்தது.

"எல்லாம் தெரிந்தும் தெரியாதது போல் பேசறவங்க கிட்ட எல்லாம் மல்லு கட்ட முடியாது..." என்று அலுப்பாய் சொன்னவன், "மேக்கப் முடிந்ததா... அப்புறம் லிப்ஸ்டிக் போடல... பெர்ப்யூம் அடிக்கலன்னு ஏதாவது சாக்கு போக்கு சொல்லிட்டு கிளம்ப லேட் பண்ணாதே..." சிரிப்புடன் சொன்னவனை முறைத்து பார்த்தவள்,

"நான் வரல..."

"மதி..." அழுத்தமாய்க் கூப்பிட்ட அவனின் குரலில் திடுக்கிட்டவள் அவனை நிமிர்ந்து பார்க்க... அவள் கண்ணில் பயம் மட்டுமே பிரதானமாகத் தெரிய... அதைக் கண்டு அவன் மனம் வலித்தது. ஆனாலும் கடுமை

காட்டினால் மட்டுமே அவளை வழிக்குக் கொண்டு வர முடியும். ஆதலால்,

"உன் கைகளைப் பிடித்துத் தரதரவெனப் பிடித்து இழுத்து செல்ல எனக்கு ரொம்ப நேரமாகாது... என்னைக் கற்கால மனிதன் அளவுக்குத் தரம் தாழ்த்துவதும்... தாழ்த்தாமல் இருப்பதும் நீ நடந்து கொள்வதில் தான் இருக்கு... என்ன நீயே வருகிறாயா... இல்லை..." அவள் கையைப் பிடிப்பது போல் அருகில் வந்தவனைக் கண்டு பதறியவளாய்,

"இல்லை... இல்லை... நானே வர்றேன்..." அவசரமாய் மறுத்தவள் கதவை திறந்து கொண்டு அறையை விட்டு வெளியேறியவளை பின் தொடந்தவனின் மனம் அவளை நினைத்து கனத்துப் போயிருந்தது.

மதியின் பொட்டு வைத்த பூ முகத்தைப் பார்த்ததும் வெளியிலிருந்த நால்வரின் கண்களும் கலங்கியது. குணசேகர், மணிமாலா, ஆதிரை மூவரும் மதியை இப்படிப் பார்க்க மாட்டோமா என்று ஏங்கிருந்த மதியின் மங்களகரமான தோற்றத்தை அவளுக்கு மீண்டும் அளித்த கதிரை நன்றியுடன் பார்த்தனர். தன் தங்கையை மீண்டும் இப்படி மாற்றியத்தற்காகவே கதிரை மன்னிக்கலாம் என்று நினைத்தான் அர்விந்த். அந்தளவுக்கு வீட்டின் இளவரசியின் வாழ்க்கையை எண்ணி கவலை கொண்டிருந்தனர் அனைவரும்.

"அம்மா..." அன்னையின் தோளில் முகம் புதைத்தவள்... கண்களை மட்டும் மலர்த்திக் கதிரை பார்த்து, "நான் இவன் கூடப் போக மாட்டேன்... நீங்களாவது சொல்லுங்கம்மா..." அவளின் பாவனையில் தன்னைத் தொலைத்தவனாய் நின்றிருந்த கதிரின் காதில் அவள் கூறிய வார்த்தைகள் விழவில்லை.

"அம்மு..." மகளிடம் என்ன சொல்வது என்று தெரியாமல் மணிமாலா விழித்தார்.

குணசேகர் மகளின் அருகே வந்து அவளின் தலையை ஆறுதலாய் கோதி விட்டு, "அப்பா... உன் நல்லதுக்குத்

தானே சொல்வேன் அம்மு... கதிர் கூடப் போம்மா..." என்றவரை நிராசையுடன் பார்த்தாள் அவள்.

"அப்பா... எனக்கு அவனைப் பிடிக்கல... ஐ ஹேட் ஹிம்..." அவளின் பேச்சில் எல்லோரும் திகைத்தனர் என்றால் கதிர் சுதாரித்தான்.

"இங்க யாரும் உன் பெர்மிசன் கேட்டு நிக்கல... உங்க வீட்டில் எல்லோர் கிட்டேயும் சொல்லிட்டு வா..." என்றவன் அவள் கைப்பிடித்து இழுக்க... அவளோ அசையாமல் நிற்க,

"என்னைக் கற்கால மனிதானாய் மாற்றாதே..." அவள் காதோரம் குனிந்து வார்த்தைகளைக் கடித்துத் துப்பியவன் வலுக்காட்டாயமாய் அவள் கையைப் பிடித்து மீண்டும் இழுக்க...

"டேய்... ஆம்பிள்ளைங்கிற திமிரா... முதல்ல அம்மு கையை விடுடா..." மதியை பிடித்திருந்த கதிரின் கையின் மேல் தன் கையை வைத்துத் தடுத்தான் அர்விந்த்.

"நீங்க முதல்ல கையை எடுங்க அர்விந்த்... மதி என்னோட வெய்ப்... அவளை என்ன பண்ணனும்ன்னு எனக்குத் தெரியும்... அதை நீங்க சொல்லணும்ங்கிற அவசியம் இல்லை..." கதிரின் குரலில் அடக்கப்பட்ட கோபம் தெரிந்தது.

"அர்வி என்ன பேச்சு பேசுற...? என்னயிருந்தாலும் அவர் மதியின் கணவர்... நம் வீட்டு மாப்பிள்ளை... நீ இப்படிப் பேசுறது தப்பு..." குணசேகர் மகனை கண்டிக்கும் போதே... மணிமாலாவின் குரல் இடையிட்டது.

"மாப்பிள்ளை... என்ன அவசரம்...? இருந்து சாப்பிட்டு போகலாமே...?"

"இல்ல வேணாம் ஆன்ட்டி..." என்றவன், அர்விந்தை பார்த்தவாறு "இன்னும் சிலரால் என்னை ஏத்துக்க முடியல... அவங்களும் என்னை ஏத்துக்கிற காலம் வரும்... அப்போ நான் இங்கே வந்து விருந்து சாப்பிடறேன்..."

என்ன முயன்றும் கதிரின் வருத்தம் அவனின் வார்த்தையில் வெளிவர தான் செய்தது.

"அப்படியெல்லாம் இல்ல மாப்பிள்ளை..." ஒருமித்த குரலில் கூறிய குணசேகர் மற்றும் மணிமாலாவிற்குப் புன்னகையைப் பதிலாக அளித்தவன்... தன் முடிவிலிருந்து மாறவில்லை.

இறுதியில் கதிரை மிகவும் வற்புறுத்தி அர்விந்த், ஆதிரை இருவரும் மதியை அவனின் வீட்டில் விட்டு விட்டு வர முடிவு செய்யப்பட்டது. அதன்படி நால்வரும் சென்னைக்குப் பயணமானர். இதில் மதியின் விருப்பு, வெறுப்புக்கு கொஞ்சமும் இடமில்லாமல் போனது.

சென்னையில் அவர்களை ஆவலுடன் இன்முகத்துடன் வரவேற்ற கவிதா, ராகேஷ் முன் மதியால் தன் உள்ளத்து உணர்வுகளை வெளிக்காட்ட முடியவில்லை. அவர்களிடம் முகத்தைத் திருப்பிக் கொள்ளவும் முடியவில்லை. ஏனெனில் கதிரை விட அவர்கள் இருவரிடமும் அவளுக்கு ஒட்டுதல் அதிகம். கவிதாவையும், ராகேஷையும் பார்த்த பின் தான் அர்விந்த் மனதில் சிறு நம்பிக்கை தோன்றியது. அதுவரை கதிரை நம்பி மதியை விடப் பயந்தவன்... இப்போது சற்று நிம்மதியடைந்தான். ஆதிரைக்குக் கதிரின் மேல் நம்பிக்கையிருந்தது. ஆதர்ஷின் தேர்வு சோடை போகாது என்பதை உறுதியாக நம்பினாள். அந்தத் திருப்தியுடன் அவர்கள் இருவரும் தங்கள் ஊருக்கு கிளம்பி சென்றனர்.

"கதிர்... இப்போ உன்னைப் பார்க்க எவ்வளவு அழகா இருக்கு தெரியுமா...?" கவிதா தம்பியை பார்த்து சொல்ல...

"ஏன்க்கா... இதுக்கு முன்னாடி நான் அழகாயில்லையா என்ன?"

"ச்சு... அதைச் சொல்லலடா... இப்படி உன்னைக் குடும்பம் சகிதமா பார்க்க நல்லாயிருக்குன்னு சொன்னேன்"

அக்காவின் பேச்சில் அவன் பெருமையுடன் தன்னருகில் அமர்ந்திருந்த மதியை பார்க்க... அவளோ குனிந்த தலை நிமிராமல் அமர்ந்திருந்தாள். 'கதிர்... உன் பாடு ரொம்பக் கஷ்டம் போலிருக்கே...' மனதில் நினைத்தவன் யோசனையுடன் அவளைப் பார்த்தான்.

"அண்ணி... இப்போ தான் எனக்குச் சந்தோசமாயிருக்கு... எத்தனை நாள் கனவு இது..." குதூகலித்த ராகேஷை நிமிர்ந்து பார்த்த மதி வேறுவழியில்லாமல் அவனைப் பார்த்து சிரித்து வைக்க... அதைக் கண்டு கதிரின் மனம் அமைதியடைந்தது.

'அப்போ கோபம் எல்லாம் என்னிடம் மட்டும் தானா?என் வீட்டு ஆட்களிடம் இல்லை போல... ம்ஹூம்... நான் பேசிய பேச்சுக்கு, நடந்து கொண்ட முறைக்கு அவள் கோபப்படாமல் இருந்தால் தான் அதிசயம்' மனதில் நினைத்தவன் மதியை எப்படிச் சமாளிப்பது என்று யோசிக்க ஆரம்பித்தான்.

"மதி நீ போய் ரெஸ்ட் எடும்மா..." மதியிடம் சொன்ன கவிதா, கதிரிடம், "உன் ரூமுக்கு கூட்டிட்டு போடா..." என்க... அவன் உற்சாகத்துடன் அவளைப் பார்க்க... அவளோ ஒன்றும் பேசாமல் எழுந்து நின்றாள். எதையும் எதிர் கொண்டு தான் ஆக வேண்டும் என்று மனதுக்குள் முடிவெடுத்தவள் அவனைத் தைரியமாக எதிர் கொள்ள ஆயத்தமானாள்.

கதிரின் அறைக்குள் நுழைந்தவளின் கண்கள் அவளையும் அறியாமல் கலங்கியது. முதன்முதலில் இந்த அறைக்கு வந்த போது எவ்வளவு எதிர்பார்ப்புடன், கனவுகளுடன் அந்த அறையைச் சுற்றி பார்த்தாள். இது கதிர் உபயோகப்படுத்தும் அறை என்று அதில் நிரம்பியிருந்த காற்றைக் கூட எவ்வளவு ஆசையுடன் இழுத்து சுவாசித்தாளே... ஏனோ அவனின் மூச்சு காற்றுடன் கலந்தது போல் எண்ணி மகிழ்ந்தாளே... அதையெல்லாம் நினைத்து பார்த்தவள் ஓவென்று கதறிவிட்டாள்.

"ஹேய் பேபி... என்னதிது... ஏன் அழற...?" அவன் பதறி போய் அவளை அணைக்க வர, அவனிடமிருந்து திமிறி விலகியவள்...

"தகுதியில்லாத உன்னைக் காதலிச்சதை தவிர நான் என்னடா பாவம் செய்தேன்... என்னை ஏன் இப்படி இம்சிக்கிற...? என்னை விட்டுரு..." கையெடுத்து கும்பிட்டவளை கண்டு இளகிய தன் மனதை முயன்று கட்டுப்படுத்திக் கொண்டு...

"விட்டு விடுவதுக்கா யாரை பத்தியும் கவலைப்படாமல் உனக்குத் தாலி கட்டி கூட்டிட்டு வந்திருக்கேன்... இனிமேல் இதைப் பத்தின பேச்சை விடு... என் மனைவியாய் என் வீட்டில் வாழும் வழியைப் பாரு... முடியலைன்னாலும் முயற்சி பண்ணி பழகிக்கப் பாரு... இன்னைக்கு ஒரு நாள் தான் உனக்கான நேரம்... என்னுடனான வாழ்க்கையைப் பத்தி நல்லா யோசிச்சுக்கோ... இல்லை நீ இப்படியே தான் பேசிட்டு முரண்டிட்டு இருப்பேன்னா..." நிறுத்தி இடைவெளி விட்டவன் அவளருகில் வந்து அவள் கண்ணுக்குள் உற்று பார்த்து,

"எனக்கான வாழ்க்கையை எனக்கு வாழ்ந்துக்கத் தெரியும்... அதுக்கு உன்னோட பெர்மிசன் தேவையில்லை..." ஒவ்வொரு வார்த்தையும் அழுத்தம் திருத்தமாய்ச் சொன்னவன் அவளின் பதிலை எதிர்பார்க்காமல் அறையை விட்டு வெளியேறினான்.

அவன் சொன்ன மாதிரி அன்று முழுவதும் அவன் அவளின் எதிரில் வரவில்லை. இரவும் அவளுக்கு யோசிக்கத் தனிமை கொடுத்து வேறு அறையில் தங்கி கொண்டான். அதனால் அவன் சொன்னதை அவள் வேறு மாதிரி அர்த்தம் எடுத்து கொண்டாள். விட்டது தொல்லை என்று நிம்மதியாய் படுத்து உறங்கினாள். அவள் நிம்மதி எல்லாம் மறுநாள் அவன் அவளைத் தேடி வரும் வரை தான்.

மறுநாள் இரவு தன்னோடு அறைக்குள் நுழைந்த கதிரை கண்டு மதி ஆத்திரத்தில் முகம் சிவக்க... "நீ எதுக்கு

இங்கே வந்த... வெளியில் போ..."

"என்ன பேபி இது... சின்னப் பிள்ளை மாதிரி... பொண்டாட்டியை தேடி புருசன் எதுக்கு வருவான்..." அவனின் கேலியில்... 'ஆங்' என்று திகைத்து போய் விழி விரிய நின்றவளின் அழகை ரசித்தபடி அவளருகில் வந்தவன்...

"இவ்வளவு அழகான உன்னைப் பக்கத்தில் வச்சிட்டு விரதம் காக்கிற அளவுக்கு நான் நல்லவன் இல்லை பேபி..." அவளின் இடையில் கை கொடுத்துத் தன்னருகில் இழுத்தவனின் கைகளை உதறி தள்ள முயன்றவளின் முயற்சி தோல்வியடைய... இயலாமையுடன் அவனின் முகத்தைப் பார்த்தவள்,

"நேத்து சொன்ன மாதிரி உன் வாழ்க்கையை நீ வாழ்த்துக்கோ... அதில் நான் தலையிட மாட்டேன்... என்னை விட்டுரு..." அவள் சொன்னதன் அர்த்தம் புரியாமல் சிறிது நேரம் விழித்தவன்... பின் புரிந்ததும் அவனின் முகம் செந்தணலாய் மாறியது.

"ஓஹோ... விட்டு கொடுக்கிறீங்களோ... நான் என்ன சொல்ல வந்தேன்னு கூடப் புரிஞ்சிக்காத உன்ன எல்லாம்..." ஆத்திரத்தில் பல்லை கடித்தவன்... பின்பு நிதானமாய்,

"என் வாழ்க்கை நீ தான்னு... நீ எப்போ புரிஞ்சிக்கப் போற பேபி..." ஏக்கமும் தாபமும் நிறைந்த குரலில் கூறியவனை அச்சத்துடன் அவள் பார்க்கும் போதே... அவளைத் தன் கைகளில் ஏந்தியவாறு அவன் படுக்கைக்குச் செல்ல...

"கதிர் வேண்டாம் கதிர்... என் மனசு ரொம்பக் காயப்பட்டு இருக்கு... எனக்கு இதெல்லாம் பிடிக்கல... ப்ளீஸ்..." அவளின் கெஞ்சல் திமிறல் எதுவுமே அவனை அசைக்கவில்லை.

படுக்கையில் அவளோடு சேர்ந்து சரிந்தவனின் கைகள் அவளின் அனுமதி வேண்டாமலே அத்துமீற... "ப்ளீஸ்

பாவா... எனக்குப் பயமாயிருக்கு..." அவளின் வார்த்தையில் அவன் உடல் விறைத்தது. எல்லாம் ஒரு நொடி தான் அதன் பின் அவனின் கைகள் வேகமெடுக்க... அவளின் கண்கள் இயலாமையில் கண்ணீர் உகுத்தது.

மதியின் முகத்தில் முத்தமிட்ட கதிரின் உதடுகள் அவளின் கண்ணீரை உணர்ந்தது. அதைக் கண்டு அவன் ஒரு நொடி இளகினாலும் மறு நொடி, "சாரி பேபி... என் காதலை, அன்பை உனக்கு உணர்த்த எனக்கு வேறு வழி தெரியல... இன்னொரு முறை உன்னை இழக்கும் சக்தி எனக்கு இல்லை..." என்றவன் அவள் கழுத்தில் முகம் புதைக்க... அவளோ செய்வதறியாது திகைத்தாள்.

மதியின் உள்ளத்து மொழியை அறிந்த கதிர்... அவளின் உடல் மொழியை அறிந்து கொள்வதற்காக அவளை ஆவலுடன் அணுகினான். அவளின் உடல் மொழி உணர்த்திய அர்த்தத்தை அவன் உணர்ந்த போது...??????

என்ன தவம் செய்தேனடி பெண்ணே... நீ கிடைப்பதற்கு... முற்பிறவி தவத்தின் பலனா... இல்லை ஏழேழு ஜென்ம தவத்தின் பலனா...?
தவத்தின் விளைவால் வந்த நல்வரம் நீயடி...
எனை ஆளும் நல்லுறவு நீயடி பெண்ணே!!!

நாளை : 20

"ஐ லவ் யூ பேபி..." என்று பிதற்றியபடி மதியின் முகம் முழுவதும் அழுத்தமாய், ஆழமாய், முத்தமிட்டான் கதிர். அவள் மீதான காதலின் மயக்கமா... இல்லை நடந்து முடிந்த கூடல் கொடுத்த இன்பத்தின் விளைவா... எதுவென்று தெரியவில்லை... மொத்தத்தில் அவன் மகிழ்ச்சியின் எல்லையில் இருந்தான். தனது உள்ளத்து மகிழ்ச்சியை அவளுக்கு உணர்த்திட வேண்டும் என்ற எண்ணத்தோடு இருந்தது அவனின் வேகமான இதழொற்றல்கள்.

தன் முகத்தருகே இருந்த அவனின் முகத்தைப் பார்க்க பிடிக்காதவளாய் கண்களை மூடியிருந்த மதியின் கண்களில் இருந்து உற்பத்தியான கண்ணீரானது கீழே வழிந்து தலையணையை நனைத்தது. அதை அவனின் உதடுகள் உணர... சட்டென்று அவள் முகத்தில் படிந்திருந்த தன் முகத்தை விலக்கியவன் அவளை யோசனையாய் பார்த்தான். இயலாமையில் உதடுகள் துடிக்க, ஆற்றாமையில் மூக்கு விடைக்க முகம் சுணங்கி படுத்திருந்தவளை கண்டு அவனுக்கு இரக்கம் வருவதற்குப் பதிலாக... உல்லாசமே பொங்கி வழிந்தது.

"ஹேய் பேபி... இப்போ என்ன நடந்து போச்சுன்னு இப்படி அழுற...? எல்லா ஹஸ்பண்ட் அன்ட் வொய்ப்க்கும் இடையில் நடப்பது தானே நமக்குள்ளும் நடந்தது... இதில் அழ என்னயிருக்கு...?" அவளின் இதழ்களைத் தன் வலக்கை கட்டை விரல் கொண்டு மென்மையாய் வருடியபடி சொன்னவனின் வார்த்தையில் பட்டென்று கண்களைத் திறந்தவள்... அவனை முறைத்து பார்த்தாள்.

"பேபி நீ முறைச்சா... அது கூட எனக்கு ரொமான்ட்டிக்கா தான் இருக்கு..." என்றவன் அவளின் இதழின் மீது தன் இதழ் கொண்டு அவசரமாய் ஒரு ஹைக்கூ கவிதை எழுத ஆரம்பித்தான். ஹைக்கூ கவிதையை அவன் தொடர்கதையாக மாற்ற எண்ணிய வினாடி அவனைத் தள்ளிவிட்டு அவள் எழுந்தமர்ந்தாள். அவளின்

புறக்கணிப்பை கண்டு கொள்ளாமல் அவளின் கையைப் பிடித்து அவன் சுண்டி இழுக்க... அதை எதிர்பாராதவள் அவன் நெஞ்சின் மீது விழுந்தாள். இருந்தாலும் தன்னைச் சமாளித்துக் கொண்டு நிமிர்ந்தவள்... தன் வலக்கையை அவன் முன் நீட்டினாள்.

"என்ன... என்ன வேணும்?" புரியாமல் அவளைப் பார்த்தான் அவன்.

"எனக்கான ரேட்..." முகத்தில் எந்தவித சலனமுமில்லாமல் சொன்னவளை கண்டு அவன் முகம் ஓராயிரம் உணர்வுகளைப் பிரதிபலித்து அதிர்ந்தது.

"ஹேய் பேபி... விளையாடாதே..." சொல்லும் போதே அவன் குரல் நடுங்கியதோ...!

"அன்னைக்கு நீ தானே சொன்ன... மத்த பொண்ணுங்களுக்குத் தர்றதை விட எனக்கு அதிகமா தர்றேன்... வர்றியான்னு என்னைக் கூப்பிட்டல்ல... நீ சொன்ன மாதிரி நானும் வந்துட்டேன். அதே மாதிரி நீயும் கொடுத்திடு..." அமைதியாய் பேசியவளை கண்டு அவன் மனதில் பூகம்பம் வெடித்தது.

"மதி... பேபி..." வார்த்தைகள் வெளிவராமல் அவனின் தொண்டை சதி செய்தது. அவளின் வார்த்தையில் அவனின் உயிர் கொஞ்சம் கொஞ்சமாய்ச் செத்துக் கொண்டிருந்தது.

"என்ன மதி பேபி...? அந்த மாதிரி பேசியவன் தான்டா நீ... ரொம்ப நல்லவன் மாதிரி எதுக்கு வேசம் போடுற...? யாரை ஏமாத்த இந்த மாதிரி வேசம் போடுற? என்னை ஏமாத்தவா...? ஐயம் வெரி சாரி... உன்னைப் பத்தி நல்லா புரிஞ்சிக்கிட்டவள் நான் தான்... காதல்ன்னா என்னன்னு தெரியாத நீயெல்லாம் காதல் மன்னன் மாதிரி காதல் வசனம் பேசறது... கொஞ்சம் கூடச் சகிக்கல..." என்றவள் அவனின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு எழுந்தமர்ந்தாள்.

அவளின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் அவனின் உயிர் பறவையை உயிரோடு சாகடித்தது. ஆனாலும் அவன் மனம் தளரவில்லை. தான் பேசிய வார்த்தைகளைத் தன்னாலேயே சகிக்க முடியவில்லை எனும் போது பாவம் அவளால் எப்படி அதைச் சகித்துக் கொள்ள முடியும். அதிலும் அவன் மீதான அவளின் காதலை அவன் நன்கு அறிவானே... அந்தக் காதலினாலேயே அவனின் உயிர் பறவை நெருப்பில் இருந்து மீண்டு எழும் அந்தப் பீனிக்ஸ் பறவை போல் மீண்டும் உயிர்த்தெழுந்தது.

அவளின் பேச்சுக்குப் பதிலளிக்காமல் அவனின் வலக்கை அவளின் பின்புற வெற்று முதுகில் கோலம் போட... "கொஞ்சம் கூட அறிவுங்கிறதே கிடையாதா... கையை எடுடா..." அவனைத் திரும்பி பார்த்து முறைத்தவள்... நெஞ்சை தழுவியிருந்த போர்வையை முதுகிற்கும் சேர்த்து மூடியவள் முதல் வேலையாய் தன் உடையைத் தேடி அணிந்தாள். அவளின் இயல்பான செய்கையை உதட்டில் புன்முறுவலுடன் பார்த்து கொண்டிருந்தவன் எழுந்து அவளருகில் அமர்ந்தான்.

அவனின் அருகாமை உணர்ந்தவள் மீண்டும் அவன் முன் அவள் தன் கையை நீட்ட... அவளை ஆழ்ந்து பார்த்தவன் அவளின் கையைப் பற்றி அதில் தன் உதடுகளை அழுந்த பதித்தான்.

"ச்சீ..." என்ற ஒற்றைச் சொல்லோடு வார்த்தையில் மட்டுமல்லாது முகத்திலும் அருவருப்பைக் காட்டியவளை கண்டு அவன் கோபம் கொள்ளவில்லை.

"உன்னை மாதிரி தேவதை பெண்ணுக்குப் பணம் கொடுத்தால் ஈடாகுமா...?" என்றவன், "என் சொத்து, சுகம் மட்டுமல்ல... நானே உனக்குத் தான் பேபி... என் உடல், உயிர் எல்லாம் உனக்குத் தான் பேபி..." உணர்ச்சிவசப்பட்டுச் சொன்னவன் அவளின் தோளில் கையைப் போட்டு இழுத்து அணைத்து அவளின் கழுத்தில் முகம் புதைத்தான்.

"இந்தக் காதல் வசனம் எல்லாம் உன் வாயிலிருந்து வருதா... நம்ப முடியலையே..." வெறுப்போடு சொல்லியவளின் கைகள் அவனைத் தன்னிடம் இருந்து விலக்குவதில் குறியாய் இருந்தது.

"இவ்வளவு பக்கத்தில் இருந்துமா உன்னால் நம்ப முடியல...?" என்றவனின் இதழ்கள் அவளின் காது மடலில் ஆரம்பித்த ஊர்வலத்தை அவளின் இதழில் வந்து இளைப்பாற, "இப்போவாவது என் காதலை உணர முடியுதான்னு பார்ப்போம்..." என்றவன் அவளின் இதழில் முடிவில்லா முற்றுகை போராட்டத்தை நடத்த... அவளோ திமிறிக் கொண்டு அவனிடமிருந்து விடுபட்டவள்,

"கதிர் தப்பு மேல தப்பு பண்ற..." கண்ணில் நீர் வழிய சொன்னவளை கண்டு இரக்கம் கொள்ளாமல்,

"என்ன செய்யப் பேபி... இந்தத் தப்பு எனக்கு ரொம்பப் பிடிச்சியிருக்கே... வேணும்ன்னா என் தப்புக்கு தண்டனையைக் கொடு... தாராளமாய் ஏத்துக்கறேன்..." சொல்லியபடி விட்ட இடத்தில் இருந்து தன் விளையாட்டை அவன் தொடர... அவனை எதிர்க்க முடியாமல் அவள் அவனின் கைகளில் தொய்ந்தாள்.

காலையில் எழும் போதே கதிரின் கைகள் பக்கத்தில் மதியை தேடி துளாவியது. அருகில் அவள் இல்லாததை உணர்ந்தவன் மனதில் ஏமாற்றம் கவிழ படுக்கையில் இருந்து எழுந்தான். வெளியில் வந்தவன் அவளைத் தேட... கீழே வரவேற்பறையில் ராகேஷுடன் பேசி கொண்டிருந்த அவளின் குரல் அவன் காதில் தேனாய் ஒலித்தது.

"மதி... மதி... மதி..." அவளின் பெயரை அவன் ஏலம் போட... அதை அவள் கவனிக்காமல் ராகேஷுடன் பேச... ராகேஷே அவளைப் பார்த்து,

"அண்ணி... நீங்க அண்ணனை கவனிங்க... நாம பிறகு பேசலாம்..." அவன் சொன்னதும் வேறுவழியின்றி அவள் மேலே சென்றாள்.

"எப்படி உன்னை என்னைத் தேடி வரவழைச்சேன் பார்த்தியா... இன்னையிலிருந்து நீ தான் எனக்கு எல்லா வேலையும் செய்யணும்... அதையெல்லாம் விட முக்கியமானது நான் எந்திருக்கும் போது காபியோட நீ என் முன்னால் இருக்கணும்..."

"காபி கொண்டு வர்றது என்ன... அதை உன் மூஞ்சிலேயே ஊத்தவும் செய்றேன்..." கோபமாய் முணுமுணுத்தவளை கண்டு அவன் கொஞ்சமும் அலட்டி கொள்ளவில்லை.

"என்ன மசமசன்னு நிக்கிற... போய் நான் சொன்னதைச் செய்..." அதிகாரமாய்ச் சொன்னவனைக் கண்டு மனதில் எரிச்சல் அடைந்தாலும் அவன் சொன்னதைத் தட்டாமல் அவள் செய்தாள். காபி எடுத்துக் கொண்டு வந்து அவனிடம் கொடுத்தவள் அவன் அதைப் பருகும் போதே அவன் குளிப்பதற்குத் தேவையானவற்றை எடுத்து வைத்தவள் அவன் முன் வந்து நின்றாள்.

"இன்னும் என்ன வேணும்...?" எரிச்சலுடன் கேட்டவள், "உன்னைக் குளிக்க வைக்கணுமா...?" நக்கலுடன் சொன்னவளை பார்த்தவனின் கண்கள் பளிச்சிட்டது.

"பார்த்தியா... நானே மறந்த விசயத்தை எனக்கு நியாபகப்படுத்திட்ட... தேங்க்ஸ்..." என்றவனின் பதிலில் அவள் திகைத்து விழித்த நொடியில் அவளை இழுத்துக் கொண்டு குளியலறையின் கதவை சாத்தியிருந்தான் அவன். இது எதையும் உணராமல் திகைத்து போயிருந்தவளை கதவில் சாய்த்தவன் அவளின் இருபுறமும் கையை ஊன்றி அவளை இமைக்காமல் பார்த்தவன்,

"என்ன குளிக்க வைக்க ரெடியா...?" கண் சிமிட்டியவனின் செயலில் சுற்றுப்புறம் உணர்ந்தவள் அவனின் கைகளுக்குள் தான் வசமாய்ச் சிக்கியிருப்பதை உணர்ந்து,

"ப்ளீஸ் கதிர்... என்னை விட்டுரு..." கண்ணீர் மல்க கெஞ்சியவளை கண்டு,

"நானும் நேத்துல இருந்து பார்க்கிறேன்... என்னை என்னமோ வில்லன் மாதிரியே பார்க்கிற... வில்லன் கிட்ட பேசுற மாதிரியே பேசி வைக்கிற... ஆமாம் உன் மனசில் நீ என்ன தான் நினைச்சிட்டிருக்க..." அதட்டலாய் அவன் கேட்ட விதத்தில் அவளின் கண்ணீர் துளிகள் கன்னத்தில் வழிந்தோடியது. அவளையும் அறியாமல் அவள் மனம் ஆதர்ஷை நாடியது.

"ஆது இது மாதிரி எல்லாம் பேச மாட்டாங்க... நீ ரொம்பக் கோபப்படுற..." கண்ணீரை துடைத்துக் கொண்டு பேசியவளை ஒரு நொடி உற்று பார்த்தவன்,

"போ..." என்றான் முகத்தில் எந்தவித உணர்வும் இல்லாமல்... அதில் தப்பித்தோம் பிழைத்தோம் என்று கதவை திறந்து கொண்டு அவள் வெளியில் ஓடி வந்தாள்.

வெளியில் வந்த மதிக்கு அந்த அறை மூச்சு முட்டுவது போலிருக்க... அதையொட்டி இருந்த பால்கனியில் போய் நின்றாள். வெளிக்காற்றை ஆழமாய் இழுத்து சுவாசித்த பின்னரே அவளின் படபடப்பு சிறிது அடங்கியது. கதிருடனான வாழ்க்கையை ஒரு நாள் கடப்பதற்குள் அவளுக்கு ஒரு யுகம் கழிந்தது போலிருந்தது. இலக்கற்று வெறித்துக் கொண்டிருந்தவளை கதிரின் குரல் கலைத்தது.

"சாப்பிட போகலாமா...?" அவனின் கேள்விக்குப் பதில் பேசாமல் அவள் முன்னே செல்ல அவன் யோசனையுடன் அவளைப் பின் தொடர்ந்தான்.

கீழே வரும் போது ராகேஷ் வெளியில் கிளம்புவதற்கு ஏதுவாக உடுத்தி கொண்டு, கையில் தோள் பையுடன் நின்றிருந்தான். அதைக் கண்டதும் அவள் கேள்வியாய் அவனைப் பார்த்தாள்.

"நான் இப்போ காலேஜ் டெல்லியில் தான் சேர்ந்திருக்கேன்... நீங்க வர்றீங்கன்னு சொன்னதால லீவ் எடுத்திட்டு வந்தேன்... உங்களைப் பார்த்தாச்சு... இப்ப கிளம்ப வேண்டியது தான்..." சிரிப்புடன் சொன்னவளை

அவள் அதிர்ச்சியுடன் பார்த்தாள். இந்த வீட்டிலிருந்த அவளுக்குப் பிடித்த ஒரே நபர் ராகேஷ்... அவனும் அங்கிருந்து செல்வது அவளுக்கு வேதனையாய் இருந்தது.

கதிர் மதியின் முகத்தைப் பார்த்துக் கொண்டே, "ராக்கி... முதல்ல தான் வீட்டில் தனியா இருக்கப் போரடிக்குது... அதனால காலேஜ் லைப்ல ஹாஸ்டல் வேணும்ன்னு உன் ப்ரெண்டோட டெல்லிக்குப் படிக்கப் போன... இப்போ தான் மதி வந்துட்டாளே... நீ இங்கே வர கூடாதா...? உன் கோர்ஸை இங்குள்ள காலேஜுக்கு நான் மாத்தி தர்றேன்..." அவன் மதிக்காகப் பரிந்து பேசினான்.

"இல்ல அண்ணா... எனக்கு அங்கே பிடிச்சு போச்சு... அதுவும் இல்லாம ஐஏஎஸ் கோச்சிங் கிளாஸ் போறதுக்கு அங்கே இருந்தா தான் சரி வரும்..." ராகேஷ் உறுதியாக மறுக்க... கதிர் மதியை பார்த்து உதட்டை பிதுக்கி தோளை குலுக்கினான்.

'ஆமா... இது எல்லாம் பார்த்து பார்த்துச் செய்வானாம்... ஆனா அந்த விசயத்தில் மட்டும்...?' கடுப்புடன் நினைத்தவள் முகம் கடுமையைப் பூசியது. அவளின் முகப் பாவனைகளை அவன் பார்த்தாலும் அதைக் கண்டு கொள்ளாமல்,

"ராக்கி... இந்தா... இதைச் செலவுக்கு வச்சுக்கோ..." தன் பர்சில் இருந்து பணத்தை அள்ளியெடுத்தவன் அதைத் தன் தம்பியின் கையில் திணிக்க... ராகேஷோ அதை மறுத்தான்.

"வேணாம்ண்ணா... ஏற்கெனவே நீங்க கொடுத்தது இருக்கு..." ராகேஷின் வயதில் தான் இருக்கும் போது ஊதாரித்தனமாகத் தான் செலவு செய்ததை நினைத்து பார்த்தவனுக்குத் தன் மேலேயே வெறுப்பு வந்தது.

"உன்னைப் பார்த்து நான் நிறையக் கத்துக்கணும்டா ராக்கி..." கண்கள் கலங்க... மனம் நெகிழ கதிர் தம்பியை அணைத்துக் கொண்டான். அதைக் கண்டு மதியின்

மனதில் ஏதோ ஒரு உணர்வு பாரமாய் அழுத்த அந்தக் காட்சியைக் காண பிடிக்காதவளாய் தலையைத் திருப்பிக் கொண்டாள்.

ராகேஷ் விடைப்பெற்றுச் சென்றதும் இருவரும் மட்டுமே தனித்திருக்க... அங்கே மௌனம் மட்டுமே ஆட்சி செய்தது. கதிருக்கே அந்த அமைதி சகிக்க முடியாததாய் இருக்க, "சாப்பிடலாமா..." அவனின் கேள்விக்கு மௌனமாய்த் தலையசைத்தவளை விசித்திரமாக அவன் பார்த்தான். பின்னே கல்யாணமான இத்தனை நாளில் அவனின் பேச்சுக்கு எதிர்ப்புத் தெரிவிக்காமல் அமைதியாய் அவள் இருந்தால்... அது அதிசயம் அல்லவா...!

அவனுக்குத் தட்டு வைத்து பரிமாறியவள்... அமைதியாய் நிற்க, "நீ சாப்பிடலையா...?" அவளின் கைப்பிடித்துத் தன்னருகில் இருந்த நாற்காலியில் அமர வைத்தான்.

"பசிக்கல..." அவன் முகம் பார்க்காமல் சொன்னவளை ஒரு பார்வை பார்த்தவன்... தன் தட்டிலிருந்து உணவை எடுத்து அவள் வாயருகே கொண்டு போக... அவள் திகைத்து போய் அவனைப் பார்த்தாள்.

"வேணாம்..." அவள் குரல் நலிந்து ஒலித்தது.

"உம்... சாப்பிடு..." அவனின் குரல் அதிகாரமாய் அதட்டலாய் ஒலிக்க... அதில் உடல் நடுங்கியவள்,

"ப்ளீஸ் வேணாம்..." அவளின் கெஞ்சலை கண்டு கொள்ளாதவனாய் உணவை வைத்திருந்த அவனின் கை அசையாமல் அவளின் உதட்டருகே நிலைத்து நிற்க... அவளின் கண்களில் கண்ணீர் நிரம்பியது.

"ஏன் கதிர் இப்படிப் பண்ற...? ஆது இப்படியெல்லாம் கம்பெல் பண்ண மாட்டாங்க..." அவளின் கண்ணீர் கண்டோ இல்லை ஆதர்ஷின் பெயரை சொன்னதாலோ ஏதோ ஒன்றில் அவனின் கை தானாக இறங்கியது.

அதன் பின் அவன் அவள் புறம் திரும்பியும் பார்க்கவில்லை. பேசாமல் சாப்பிட்டு விட்டு எழுந்தவன்,

"போய்ட்டு வர்றேன்..." என்றவன் அவளின் பதிலை எதிர்பாராமல் வெளியேறினான்.

கதிர் சென்றதும் அவளுக்குக் கண்களைக் கரித்துக் கொண்டு வர... அவள் மனதில் பல எண்ணங்கள் அலையடிக்க... அதில் அவள் மூழ்கி போய்த் தன்னைக் கரைத்து கொண்டாள்.

பின் மாலை பொழுதில் வீடு திரும்பிய கதிரிடம் காலையில் இருந்த மனநிலை மாறி இப்போது உற்சாகம் குமிழிட்டது. "மதி... மதி..." அவளை அழைத்துக் கொண்டே அறைக்குள் நுழைந்தவன் அங்கிருந்த அவளின் கையில் பூ பொட்டலத்தை வைத்தான்.

"உனக்குத் தான் வச்சிக்கோ..." அவன் சொன்னது கூட அவள் காதில் விழுந்தது போல் தெரியவில்லை. அவள் பூவையே வெறித்துப் பார்த்து கொண்டிருந்தாள்.

"மதி உன்னைத் தான் சொல்றேன்..." அவன் குரலில் இருந்த அழுத்தத்தில் அவனை நிமிர்ந்து பார்த்தவள் ஒன்றும் பேசாது பூவை அருகிலிருந்த மேசையின் மேல் வைத்து விட்டு அகல முயல... அவளால் ஒரு இன்ச் கூட நகர முடியவில்லை. ஏனெனில் அவளின் கையைப் பிடித்து அவன் தடுத்து நிறுத்தியிருந்தான்.

"நீயெல்லாம் சொன்னால் கேட்டுக்கிற ஜாதியில்லை..." என்றவன் பூவை பிரித்து அவளின் கூந்தலில் அவனே வைத்துவிட்டான்.

"அது எப்படிப் பேபி... நீ வைக்கும் பூவுக்கு மட்டும் அப்படியொரு ஸ்மெல் இருக்கு..." என்றவன் குனிந்து அவளின் தலையில் சூடியிருந்த பூவின் மீது முகத்தை வைத்து அதன் நறுமணத்தை ஆழமாய் மூச்சிழுத்து நுகர்ந்தான். அவனைத் தடுக்கும் வகையறியாது திகைத்தவளுக்குக் காலையில் அவன் அவளிடமிருந்து தானாக விலகிய தருணங்கள் நினைவுக்கு வர அதைச் செயலாற்ற எண்ணினாள்.

"கதிர் ஏன் இப்படிப் பண்ற?" அதற்கு மேல் அவள் பேச முடியாதபடி அவனின் கை அவளின் வாயை இறுக மூடியிருந்தது. மற்றொரு கை கொண்டு அவளைத் தன் புறம் திருப்பியவன் பார்வை அனலாய் அவளைத் தகிக்கச் செய்தது. அவனின் பார்வையில் அவள் திகைத்து நிற்கும் போதே அவனின் கைகள் அவளைத் தூக்கியது. அவள் வாய் திறந்து பேசும் முன் அவளைக் கட்டிலில் கிடத்தியவன், குனிந்து அவளின் நெற்றியில் முத்தமிட்டவன்,

"அந்த ஆதர்ஷ் இங்கே முத்தமிட்டானா..." என்றவன் அவளின் கண்களில் முத்தமிட்டு, "இங்கே..." அதன் பின் அவளின் முகமெங்கும் முத்த ஊர்வலத்தை நடத்தியவன் அதைத் துவங்கும் முன் 'இங்கே' 'இங்கே' என்று கேள்வி கேட்டு வேறு அவளை இம்சித்தான்.

"என்னமோ ஆது அதைச் செய்ய மாட்டான்... இதைச் செய்ய மாட்டான்னு சொன்னியே... நான் செய்றதை எல்லாம் அவன் செஞ்சானா... சொல்லுடி... சொல்லுடி..." அவளின் தோள் பிடித்து ஆக்ரோசமாய் அவன் உறுமிய உறுமலில் அவளின் பூமேனி அதிர்ந்தது.

"நான் ஆது இல்லை... கதிர்... அதை நல்லா நியாபகம் வச்சிக்கோ... கதிர் இப்படித்தான் இருப்பான்... என்ன புரிஞ்சதா..." என்றவனின் கைகள் அவளின் மேனியின் மென்மையைப் பரிசோதிக்க ஆரம்பித்தது.

"ஏண்டி என்னைப் புரிஞ்சிக்க மாட்டேங்கிற... ஐ லவ் யூ பேபி..." மேலும் மேலும் முன்னேறியவன் ஒரு கட்டத்தில் அவளை விடுவித்து விட்டு அவள் முகத்தைப் பார்த்தான். அவனின் முகத்தில் குறும்பு சிரிப்பு ஒன்று தானாய் வந்தமர்ந்தது.

கதிர் விலகியதை கூட உணராமல் கண்களை இறுக மூடியிருந்த மதியின் கைகள் அவனை ஆரத் தழுவியிருந்தது. உணர்ச்சியின் பிடியில் அவள் சிக்கியிருந்ததின் அடையாளமாய் அவளின் உதடுகள்

துடித்தது. அவளின் நிலையைக் கண்டவன் மனதில் காதல் பெருக்கெடுக்க...

"மதி பேபி..." காதலாய் அழைத்தவன் அவளின் கன்னத்தை நேசத்துடன் வருடி கொடுக்க...

"பாவா..." காதலும் தாபமும் கலந்த குரலில் அவனின் கையைத் தன் கன்னத்தோடு வைத்து அழுத்தி கொண்டாள் அவள்.

"உன் பாவா தான்டி நான்..." சொன்னவன் அவளின் நெற்றியில் தன் இதழை பதிக்க... அவனின் குரலில் திடுக்கிட்டுக் கண்களைத் திறந்தவள் அவனை அச்சத்துடன் பார்த்தாள்.

"என் மேல் இவ்வளவு காதலை நீ வச்சியிருக்கிற அளவுக்கு... அப்படி என் கிட்ட என்னயிருக்கு பேபி...?" என்று கேட்டவனைத் திகைப்புடன் பார்த்தபடி அவள் படுத்திருக்க...

"இப்போ சொல்லு... அந்த ஆதர்ஷை பாவான்னு சொல்லாத நீ... என்னை ஏன் பாவான்னு சொல்ற...?" கூர்மையாய் கேள்வி கேட்டவனைப் பார்த்து,

"பா... வா..." அவளுக்கு வார்த்தைகள் வெளிவராமல் சதி செய்தது.

"ஏன்னா... உன்னோட காதலன், கணவன் எல்லாம் நான் தான்... அது அன்றைக்கும் சரி... இன்றைக்கும் சரி... என்ன நான் சொல்றது சரி தானே மதி பேபி..." கண்ணைச் சிமிட்டி கேட்டவனின் முகத்தில் அவளை இனம் கண்டு கொண்ட பரவசமும், அவளின் மனதை வென்று விட்ட கர்வமும் மாறி மாறிப் பிரதிபலித்தது.

கணவனுக்காக நீதி கேட்ட கற்புக்கரசி கண்ணகியை நான் கண்டதில்லை...
கணவனே தெய்வமாய் வாழ்ந்த சீதையை நான் கண்டதில்லை...

எமனிடமிருந்து கணவனை மீட்ட சாவித்திரியை நான் கண்டதில்லை...
நான் கண்டதெல்லாம் உன்னைத் தான்... எனக்காக வாழும் உன்னை மட்டும் தான்...!

நாளை : 21

கதிர் பேச பேச மதியின் கண்களில் இருந்த அச்சம் விலகி போய் ஒருவித அமைதி, நிமிர்வு வந்து குடியேறியது. கண்ணிமைக்காமல் அவனைப் பார்த்தவளின் பார்வையில் மயங்கிய கதிர் அவளின் கையை எடுத்து முத்தமிட்டவன்,

"ஐ லவ் யூ பேபி..." ஆத்மார்த்தமாய்ச் சொன்னவனின் காதல் அவளைச் சென்றடையவில்லை என்பது அவளின் முக இறுக்கத்தில் இருந்தே தெரிந்தது. அவனின் நெஞ்சில் கை வைத்து தள்ளிவிட்டவள் கட்டிலில் சாய்ந்தமர்ந்தாள்.

"என்னைப் பத்தி தெரிஞ்சிக்கிட்டீல்ல... இப்போ என்ன செய்றதா உத்தேசம்...?"

"இதென்ன பேபி கேள்வி... எல்லோரையும் போல் சந்தோசமா வாழ தான் உத்தேசம்..." அவளைப் போல் சொல்லியவன் அவளருகில் நெருங்கி அமர்ந்து, "உன் மனசிலும் காதல் இருக்கு... என் மனசிலும் காதல் இருக்கு... பின்னே எதுக்கு இந்தக் கோபம் பேபி...?"

அவனின் அமைதியான இந்தப் பேச்சு அவளின் ஆத்திரத்தை அதிகரிப்பதாய் இருந்தது. அவனைத் திரும்பி பார்த்தவள் பார்வையில் கோபத்தீ பறந்தது. "எதுக்குக் கோபம்... ஏன் கோபம்ன்னு உனக்குத் தெரியாது...?" அவளின் கோபத்தில் அவன் விக்கித்துப் போனான்.

"உன்னைப் பத்தி எல்லாம் தெரிஞ்சிருந்தும் நீ தான் வேணும்ன்னு என்னைப் பெத்தவங்க, அண்ணன் எல்லாரையும் பகைச்சிட்டு உன்னைத் தேடி... உன் காதலை தேடி வந்தேனே... அதுக்கு நீ என்ன கைம்மாறு செஞ்ச...? என்னோட காதலை கொஞ்சமும் புரிஞ்சிக்காம... என்னைக் கேவலப்படுத்தின... என் காதலை கேவலப்படுத்தின... இருந்தும் திரும்பவும் உன்னைத் தேடி வந்த என்னை வேசியளவுக்குத்

தரமிறக்கி அவமானப்படுத்தின. அன்னைக்கு மட்டும் ஆது ஆதரவு கொடுக்கலைன்னா இன்னைக்கு நான் செத்த இடத்துல புல் முளைச்சிருக்கும்" அவளின் வார்த்தையில் அவன் உடல் மட்டுமல்ல... உள்ளமும் சேர்ந்து அதிர்ந்தது. அவனின் கை அவனையும் அறியாமல் அவளின் கையை இறுக பற்றியது. மனம் கொந்தளித்துக் கொண்டிருந்த அவள் எரிச்சலுடன் அவனின் கையை உதறி தள்ளினாள்.

"நான் ஆதுவை கல்யாணம் பண்ணி இரண்டு வருசம் நிம்மதியாய் இருந்தேன். ஆது போனாங்க... அவங்க கூடயே என் நிம்மதியும் சேர்ந்து போயிருச்சு. நான் கேட்டேன்னா... எனக்கு வாழ்க்கை பிச்சை கொடுன்னு நான் வந்து உன் கிட்ட கெஞ்சினேனா...? இப்போ வந்து காதலிக்கிறேன்னு சொல்ற... அது இதுன்னு பேசுற... இவ்வளவு நாள் இல்லாத காதல் இப்போ எப்படி வந்துச்சு...? எந்தப் போதி மரத்தடில உனக்கு ஞானோதயம் வந்துச்சு. எதுக்குடா என்னைக் கல்யாணம் பண்ண...? என்னை உயிரோடு கொல்றதுக்கா...?"

"ஆமான்டா... வெக்கத்தை விட்டு சொல்றேன்... நான் உன்னைக் காதலிக்கிறேன் தான்... என் மனசில் நீ தான் இருக்க... என்னோட பாவா நீ தான்... இதைச் சொல்ல எனக்குக் கேவலமாயில்லை. ஏன்னா... என் காதல் உண்மையானது... தூய்மையானது. உன்னை மாதிரி நான் பொய்யாய் காதலிக்கல... அதே சமயம் ஆதுவோட நடந்த கல்யாணமும் உண்மையானது. ஆதுவோட நான் வாழ்ந்த வாழ்க்கையும் உண்மையானது. அதை மறக்கவோ இல்லை மறைக்கவோ முடியாது. கல்யாணத்துக்கு அப்புறமும் உன்னை மறக்க முடியாம நான் இரட்டை வாழ்க்கை வாழ்ந்ததுக்குக் காரணம் நீ தான்டா... நீ மட்டும் தான்டா. அப்போ கூட நான் ஆது கூட நிம்மதியாய் தான் இருந்தேன்... ஆனா இப்போ கல்யாணம்ங்கிற பேரில் உன் கூட வாழ்றது தான் எனக்குக் கொடுமையாயிருக்கு..." முகத்தை மூடி கொண்டு அழுதவளை என்ன சொல்லி

சமாதானப்படுத்துவது என்று அவனுக்குத் தெரியவில்லை.

"நீ இந்தளவுக்கு வேதனைப்படுவேன்னு எனக்குத் தெரியாது பேபி... சாரிம்மா... ரியலி சாரிம்மா..." அவளின் வேதனை அவனையும் தாக்கியதோ என்னமோ அவனின் குரல் நலிந்து ஒலித்தது. அவனின் கை அவளின் தலையை ஆறுதலாய் தடவி கொடுத்தது. அவள் ஆத்திரத்தில் அவனின் கையை வெடுக்கென்று தட்டி விட்டாள்.

"ஆது எப்போடா சாவாங்கன்னு காத்திருந்தியா...? உனக்கு வெக்கமாயில்ல... அடுத்தவன் பொண்டாட்டின்னு தெரிஞ்சும் என்னைக் கல்யாணம் பண்ண..." அவளின் பேச்சில் ஏதோ சொல்ல வாயெடுத்தவன் தன்னை அடக்கி கொண்டு அமைதி காத்தான்.

"நான் என் காதலி மதி பேபியை தான் கல்யாணம் பண்ணினேன்... ஆதர்ஷின் மனைவியைக் கல்யாணம் பண்ணல..." அதை மட்டும் அழுத்தம் திருத்தமாய்ச் சொன்னவனை அவள் உக்கிரமாய்ப் பார்த்தாள்.

"அது எப்படிடா உன் சௌகரியத்துக்கு எல்லாத்தையும் மறந்துட்டு பேசுற... அப்போ ஆதுவுக்கும் எனக்கும் நடந்த கல்யாணம் பொய்யா... நாங்க வாழ்ந்த வாழ்க்கை பொய்யா...?" அதற்குப் பதிலளிக்காமல் அவன் தோளை மட்டும் குலுக்கினான்.

"சொல்லுடா... பெரிய இவன் மாதிரி பேசின... வாயை திறடா..."

"இங்கே பார் பேபி... நான் ஒண்ணும் ரொம்பப் பொறுமைசாலி எல்லாம் கிடையாது... நீயாய் இருக்கப் போய் அமைதியாய்ப் பேசிட்டிருக்கேன்... என் அம்மாவுக்கே நான் செய்ற காரியங்களுக்கு விளக்கம் கொடுத்தது இல்லை... அதே போல் உனக்கும் விளக்கம் சொல்லணும் அவசியம் இல்லை... முடிஞ்சு போனதை நினைச்சு அதையே தொங்கிட்டு இருக்கிறதா இரு...

அதை நான் ஒண்ணும் செய்ய முடியாது. நான் இப்போ உள்ள வாழ்க்கையை மட்டும் தான் யோசிக்கிறேன்... இப்பவும் சொல்றேன்... ரெண்டு பேர் மனசிலும் காதலிருக்கு... நமக்கான வாழ்க்கையை வாழ்றதை மட்டும் யோசி... தேவையில்லாததை யோசிச்சிட்டு பிரச்சினையைப் பெரிசாக்காதே..."

"எப்படி எப்படி ரெண்டு பேர் மனசிலேயும் காதலிருக்கா...? என்னோட காதலுக்குக் கொஞ்சமும் தகுதியாவனா நீ...? என் கண் முன்னாடியே பெண்களோட கூத்தடிச்சவன் தானே நீ... உனக்கெல்லாம் காதல் ஒரு கேடு... காதலாம்... காதல்... மண்ணாங்கட்டி" பல்லை கடித்துக் கொண்டு பேசியவளின் தாடையைப் பற்றித் தன் புறம் திருப்பியவனின் முகம் கோபத்தில் ஜொலித்தது.

"ஆமான்டி... நான் பல பெண்களோட கூத்தடிச்சவன் தான்... உன் காதலை உணர்ந்தவுடனே எல்லாப் பழக்கத்தையும் விட்டுட்டேனா இல்லையா? இந்த மூணு வருசமா உன் நினைவா தான்டி வாழ்றேன். இல்ல நம்ம கல்யாணம் முடிஞ்சு ஒரு வருசம் பிரிஞ்சியிருந்தோமே... அப்போ நான் எந்தப் பெண்ணோடாவது பழகி நீ பார்த்தியா...? உன்னோட காதலுக்குக் கொஞ்சமும் குறையாத காதல் தான் என்னோடது... தகுதி வேணுமாம் தகுதி... அப்படி என்னடி தகுதி வேணும்...? நான் ஆண்... நீ பெண்... அந்தத் தகுதி மட்டும் போதும்ன்னு நினைக்கிறேன்..." ஆவேசமாய்க் கத்தியவன், அதே ஆவேசத்தோடு அவளின் இதழை முற்றுகையிட்டான்.

முதலில் அவனின் செயலை எதிர்த்து திமிறியவள்... அடுத்தச் சில நொடிகளில் அவனின் கைகளில் தொய்ந்து அவன் மீதே சரிந்தாள். அவளின் செயலில் அவன் முகத்தில் வெற்றி பெருமிதம் வந்து சேர்ந்தது.

"இப்போ சொல்லு பேபி... இதை விட வேறென்ன தகுதி வேணும்... வேறென்ன பொருத்தம் வேணும்...?" அவளின் முகத்தைப் பார்த்து கேட்டவனின் கண்ணைக் காண முடியாமல் அவளின் கண்கள் கூசியது.

"நீங்க சொல்லிய மாதிரி நான் வேசியே தான் பாவா... ஆதுவை கல்யாணம் பண்ணி அவங்களோட மனைவியாய் வாழ்ந்திட்டு... இதோ இப்போ உங்க அணைப்பிலும் மயங்குறேனே... நான் எந்த மாதிரியான பெண்...? ரொம்பக் கேவலமானவள் இல்ல... என்னைக் கண்டா எனக்கே வெறுப்பாயிருக்கு..." அவனின் நெஞ்சில் சாய்ந்து கண்கள் கலங்கியவளை கண்டு என்ன சொல்வது என்று அவனுக்குத் தெரியவில்லை.

"ஒருத்தனை மனசுல நினைச்சிட்டு... இன்னொருத்தன் கூட வாழ்றளவுக்கு என் பேபி ஒண்ணும் ஈனப்பிறவி இல்லை..." அவளுக்கு ஆறுதல் சொன்னவன் அவளின் துன்பத்தைப் போக்கும் விதமாய் அவளை இறுக அணைத்துக் கொண்டான். அவனின் ஆறுதல் வார்த்தையையோ... அணைப்பையோ உணராமல் கழிவிரக்கத்தில் அவள் தனக்குள் கரைந்து கொண்டிருந்தாள்.

அவன் நினைத்திருந்தால்... 'ஆதர்ஷ் சொல்லி தான் நான் உன்னைக் கல்யாணம் பண்ணி கொண்டேன்... அதை விட உன் மனதில் நானிருக்கிறேன் என்பதை உணர்ந்த பின்பு தான் உன்னை என் மனைவியாக்கி கொண்டேன்...' என்று கூறி அவளின் வாயை அடைத்திருக்கலாம். ஆனால் அவன் அதைச் செய்யவில்லை. அதை அவன் சொன்னால் அவள் நம்ப மாட்டாள் என்பது ஒருபுறம் இருந்தாலும்... மேலும் மேலும் அவளைக் குற்றவுணர்ச்சிக்கு உள்ளாக்குவதை அவன் விரும்பவில்லை. அவளே அவளின் காதலையும் உணர்ந்து, தன் காதலையும் உணர்ந்து... தன்னைப் புரிந்து ஏற்றுக் கொள்ளும் காலம் வரும்... அப்போது சொல்லி கொள்ளலாம் என்று எண்ணினான்.

"பேபி இங்கே பார்..." அவளின் முகத்தை நிமிர்த்த அவன் முயற்சிக்க... அவள் நிமிரும் வழியையும் காணோம்... அவனை விட்டு விலகும் வழியையும் காணோம்.

"ஹேய் பேபி... மனுசனை ரொம்பவும் சோதிக்காதே..." என்றவனின் குரல் குழைந்து ஒலித்தது.

அதற்கும் பதில் சொல்லாத அவளின் நிலையை அவன் உணர்ந்தாலும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாதவனாய் அவள் கழுத்தில் முகம் பதித்தவனின் கைகள் சுதந்திரமாய் அவளின் மேனியில் முன்னேறியது. அவனின் பேச்சில் வராத அவளின் சுயவுணர்வை அவனின் செயல் வெளிக் கொண்டு வர அவளின் கைகள் அவனை விலக்கி தள்ளியது.

"பொறுக்கி தான்டா நீ... பொம்பளை பொறுக்கி... விட்றா என்னை... ஐ ஹேட் யூ..." அவளின் பேச்சையோ செயலையோ கொஞ்சமும் கண்டு கொள்ளாமல் முன்னேறியவன் அவளைத் தன் வசம் கொண்டு வந்து,

"ஐ ஹேட் யூவா... இப்போ சொல்லுடி ஐ ஹேட் யூ..." என்று சொல்லியபடி அவள் மேனி எங்கும் முத்த ஊர்வலம் நடத்தியவனின் கைக்குள் வாகாய் அடங்கினாள் அவள். தனக்கு வேண்டியதை அவளிடம் இருந்து களவாடி கொண்டவன் திருப்தியுடன் அவளை விட்டு விலகினான். விலகியவனை விலக விடாமல் தடுத்தவளை ஆச்சரியத்துடன் பார்த்தவன்,

"என்ன பேபி..." கொஞ்சமும் தாபம் குறையாத குரலில் கூறியவனை உணர்ச்சியில்லாமல் பார்த்தவள்,

"இப்படிக் கொஞ்சம் கொஞ்சமாய் என்னைக் கொல்றதுக்கு... மொத்தமாய் என்னைக் கொன்னுடு... உனக்குப் புண்ணியமாய்ப் போகும்..." இறைஞ்சி கேட்டவளை கண்டு அவன் இதயம் நின்று துடித்தது.

"ஏண்டி இப்படியெல்லாம் பேசற..." அவளை நெஞ்சோடு ஆரத்தழுவி கொண்டவன், "அதுக்கு முன்னாடி நீ என்னைக் கொன்னுடு... உன் கையால் சாகுறதுன்னா... நான் சந்தோசமா செத்து போறேன்... அதுக்காக உயிரோடு என்னை வதைக்காதடி..." என்றவனின் பேச்சில் அவள் அப்படியே உடைந்தாள்.

"பாவா..." என்று கதறியபடி அவனின் வாயை மூடியவள், "எவ்வளவு சந்தோசமாய் வாழ்ந்திருக்க வேண்டியவங்க நாம... இப்படி வாழ வேண்டிய கட்டாயம் வந்திருச்சே... எனக்கு முடியல பாவா... ஏதோ தப்பு பண்ற மாதிரி... உடம்பெல்லாம் கூசுது..." என்று கதறியவள்...

"எல்லாத்துக்கும் காரணம் நீங்க தான் பாவா... ஏன் பாவா என் காதலை புரிஞ்சிக்கல...? ஏன் என்னைப் புரிஞ்சிக்கல...? ஏன் தப்பு மேல தப்பு பண்ணிட்டே போனீங்க...? இப்போ வந்து காதலாய் வாழலாம்ன்னு சொன்னா... உடனே சரின்னு வாழ்றதுக்கு நான் என்ன இயந்திரமா...? உயிரும் உணர்வும் நிறைஞ்ச மனுசியில்லையா...? இடையில் நடந்ததை எல்லாம் மறந்துட்டு வாழ என்னால் முடியலியே..." என்றவளின் கோபம், ஆதங்கம் எல்லாம் அவனுக்குப் புரிய அவன் அமைதி காத்தான். அவளை மென்மையாய் அணைத்தவன் மௌனமாய் அவளின் தலை கோதி கொடுக்க... அவளும் சத்தமில்லாமல் அவனின் கைகளுக்குள் அடங்கினாள்.

அவன் மீது அவளுக்குக் காதலிருக்கு... நேசமிருக்கு... எல்லாம் இருக்கிறது. ஆனால் அதை விட அவன் மேல் அவளுக்குக் கட்டுக்கடங்கா கோபமும் இருக்கிறது. நேசத்துக்கும், கோபத்துக்கும் இடையில் ஊஞ்சலாடும் அவளின் மனதின் நிலை அவனுக்குப் புரிய தான் செய்தது. ஆனால் தான் என்ன செய்து அவளின் மனதை மாற்ற என்று அவனுக்குத் தெரியவில்லை. காலம் ஒன்றே காயத்தை ஆற்றும் சிறந்த மருந்து என்று எண்ணியவன்... குனிந்து அவளின் முகத்தைப் பார்த்தான். அவனின் இதமான வருடல் தந்த சுகத்தாலோ இல்லை உடல் மற்றும் மன அயர்ச்சியினாலோ என்னமோ அவள் கண்ணயர்ந்து வெகு நேரமாகி இருந்தது.

"நீ கேட்ட அத்தனை கேள்விக்கும் என்னிடம் பதில் இருக்கு... ஆனால் அதைச் சொன்னால் நீ தாங்க மாட்ட... அதனால் தான் அமைதியா இருக்கேன்... நிச்சயம் ஒரு நாள் இல்லை ஒரு நாள் என்னைப் புரிஞ்சிக்குவ... அந்த

நாள் வரும் வரை நான் அமைதியாய் இருப்பதைத் தவிர வேறுவழியில்லை. என்னையும் அறியாமல் என் பேச்சு உன்னைக் காயப்படுத்திருமோன்னு பயமாயிருக்கு... ஏன்னா அந்தளவுக்கு நான் உன்னைக் காதலிக்கிறேன் பேபி..." என்றவன் அவளின் நெற்றியில் முத்தமிட்டு அவளை அணைத்துக் கொண்டு படுத்தான். இரவு உணவு உண்ணாத போதும் அவனின் மனம் நிறைந்திருந்ததாலோ என்னமோ உறக்கம் வந்து அவனைச் சுகமாய்த் தழுவி கொண்டது.

மறுநாள் காலையில் கதிர் அலுவலகம் கிளம்பும் போது அவனருகில் வந்து நின்றவள், "வீட்டில் இருந்து போரடிக்குது.... நான் கடைக்குப் போகவா...?" அவன் முகம் பாராமல் தலையைக் குனிந்து கொண்டு பேசியவளை கண்டு அவனின் முகம் மென்மையானது. நேற்றைய கோபம், ஆதங்கம் எதுவும் அவள் முகத்தில் இல்லை. அதேசமயம் அவளிடத்தில் இளக்கமும் இல்லை.

"இதுக்கெல்லாம் என் கிட்ட எதுக்குப் பர்மிசன் கேட்டுட்டு... நீ தாராளமாய்ப் போய்ட்டு வா..." தன்னை மதித்து அவள் தன்னிடம் கேட்டதே அவனுக்குச் சந்தோசமாய் இருந்தது.

"நீயும் கிளம்பினா... நானே உன்னைக் கொண்டு போய் விட்டுட்டு போயிருவேன்..."

"ம்... சரி..." என்று தலையை ஆட்டியவள்... அவனோடு சேர்ந்து கிளம்பினாள்.

பூஜையறைக்குள் சாமி கும்பிட வந்தவள் அங்கே இருந்த கதிரின் பெற்றோரின் புகைப்படத்துக்கு அருகே ஆதர்ஷின் புகைப்படம் இருப்பதைப் பார்த்து திடுக்கிட்டவள் கதிரை கேள்வியாய் பார்த்தாள்.

"முதல் மனைவி இறந்தா ஆண்கள் மட்டும் அவங்க முதல் மனைவி ஃபோட்டோவுக்கு மாலை போட்டுக் கும்பிடறது இல்ல.... அதை அவங்களோட இரண்டாவது மனைவியும் சேர்ந்து செய்றது இல்லையா...? அது மாதிரி நானும் ஆதர்ஷோட ஃபோட்டோவை வச்சி கும்பிடறேன்..."

கிண்டலாய் கூறியவனை முறைத்து அவள் பார்க்க... அவளின் பார்வையை உணர்ந்தவனாய் அவன் சாமியை கும்பிடுவது போல் கண்களை இறுக மூடி கொண்டான். வேறுவழியின்றி அவளும் கண்களை மூடி கொண்டு கடவுளை வேண்ட ஆரம்பித்தாள்.

"ஆதர்ஷோட ஃபோட்டோ ஒரு வருசமா இங்கே தான் இருக்கு... ஏன்னா என்னைப் பொறுத்தவரை அவன் எனக்குக் கடவுள்... என் வாழ்க்கையைப் பாதுகாப்பாய் என் கையில் திருப்பி ஒப்படைத்த மனித தெய்வம் அவன்..." அவளின் காதோரம் ஒலித்த கதிரின் குரலில் கண் திறந்த மதி அவனை அதிசயமாய்ப் பார்த்தாள்.

"பூஜை ரூமில் இருந்திட்டு இந்தப் பார்வை பார்க்கிறியே பேபி... இதே இது பெட் ரூமில் இருந்து பார்த்தேன்னு வை... நடக்கிறதே வேற..." என்று சொல்லியவனின் கண்ணில் வழிந்த உணர்வில் அவளின் முகம் கோபத்தைத் தத்தெடுத்தது.

"நீயெல்லாம் திருந்தாத ஜென்மம்..." அவள் பல்லை கடிக்க...

"தேங்க்யூ... தேங்க்யூ..." என்றவன் அதற்கு மேல் அங்கே நிற்க மடையனா என்ன...?

காரில் செல்லும் போது அவர்களிடையே நிலவிய மௌனத்தைக் கலைக்க அவனும் விரும்பவில்லை... அவளும் விரும்பவில்லை. அவள் இறங்கும் போது,

"மதியம் லன்ச்சுக்கு கூட்டிட்டு போக வரவா...?"

"இல்ல வேணாம்... ரொம்ப நாள் கழிச்சு வந்திருக்கேன்... பார்க்க வேண்டிய வேலைகள் நிறைய இருக்கும்... ஈவ்னிங் சீக்கிரம் நானே வீட்டுக்கு வந்திடறேன்..."

"ஈவ்னிங் எனக்கு ஒரு மீட்டிங் இருக்கு... இல்லைன்னா நானே வந்திருவேன்... ஓகே நீயே வந்திரு..." என்றவன் காரை கிளப்ப போக... அவளோ கடைக்குள் செல்லாமல் அங்கேயே நிற்பதை கண்டு,

"என்ன...?" புருவம் உயர்த்தி அவன் கேட்க,

"இல்ல... மீட்டிங்...?" முழுவதும் சொல்லாமல் அவள் இடையில் நிறுத்த... அவள் சொல்ல வருவதை உணர்ந்தவன் வாய்விட்டுச் சிரித்தான்.

"எனக்குச் சொல்லி கொடுத்த டீச்சர் ரொம்ப நல்லாவே சொல்லி கொடுத்திருக்காங்க... இப்போல்லாம் நான் டிஸ்டிங்சன் ஸ்டூடண்ட் தெரியுமா..." அவளைப் பார்த்துக் கண் சிமிட்டி அவன் சொல்ல...

"ஐயோ பாவம்ன்னு கேட்டேன் பாரு... என் புத்தியை..." பல்லை கடித்தவளை கண்டு உல்லாசமாய்ச் சிரித்தவன்,

"உன்னோட அக்கறைக்கு ரொம்ப நன்றி பேபி..." என்றவன் அவள் பதில் பேசும் முன் காரை கிளப்பினான். அவன் போவதை ஒரு சில நிமிடம் வெறித்துப் பார்த்தவள் பின்பு தன்னுடைய கடைக்குச் சென்றாள்.

அன்றைய நாளை உற்சாகமாய்க் கடந்து முடித்த கதிர் எப்போதடா வீட்டிற்குச் செல்வோம் என்று நேரத்தை கணக்கிட்டுக் கொண்டிருந்தான். வீட்டிற்குச் செல்லும் நேரமானவுடன் உற்சாகமாய்க் காரை கிளப்பியவன் அடுத்த அரைமணி நேரத்தில் வீட்டில் இருந்தான்.

வரவேற்பறையில் மதி இல்லாததை உணர்ந்து தங்களுடைய அறைக்கு உற்சாகமாய்ச் சென்றவனை இருட்டான அறை வரவேற்றது. யோசனையுடன் அவன் அறையின் மின்விளக்குகளை எரிய விட... அங்கே கட்டிலில் குப்புற படுத்திருந்த மதி தான் அவன் கண்ணில் பட்டாள். என்னமோ ஏதோ என்று மனம் பதறியவன் அவளருகே சென்று,

"மதி பேபி..." அவளின் தோளின் மேல் கையை வைக்க... அவ்வளவு தான்,

"பாவா..." என்று கதறிக் கொண்டு அவனின் இடுப்பை கட்டி கொண்டவள் அவனின் வயிற்றில் முகம் புதைத்து அழுதாள்.

"பேபி... என்னாச்சு...? யாராவது ஏதாவது சொன்னாங்காளா?" அவனின் ஒவ்வொரு கேள்விக்கும் மறுப்பாய் தலையாட்டியவள்,

"வேற எதுக்கு அழற?" அவனின் கேள்வியில் நிமிர்ந்து பார்த்தவள்,

"ஐ மிஸ் ஆது... கடைக்குள் நுழைஞ்சதும் அவங்க நியாபகம் தான் வந்தது... என்னால வேலை செய்யக் கூட முடியல... எதை எடுத்தாலும், எதைச் செஞ்சாலும் ஆதுவோட நியாபகமா தான் இருக்கு... ஐ மிஸ் ஆது..." என்று அழுது தேம்பியவளை அவன் ஒன்றும் பேசாது அணைத்து கொண்டவனின் கைகள் அவளின் முதுகை ஆறுதலாய் தடவி கொடுத்தது. அதில் அவளின் அழுகை கொஞ்சம் கொஞ்சமாய் மட்டுப்பட... அப்போது தான் அவளுக்குக் கதிரிடம் தான் பேசியது நியாபகம் வர அவள் அச்சத்துடன் அவனைப் பார்த்தாள்.

அவள் தன்னைப் பார்ப்பதை உணர்ந்தவன் அவளைப் பார்த்துப் புன்னகைத்தான். அவளின் முகத்தைத் தன் இரு கைகளால் தாங்கி அவள் நெற்றியில் மென்மையாய் முத்தமிட்டவன், "ஆதர்ஷோட இறப்பு மிகப் பெரிய இழப்பு தான். அவனைப் போல் ஒரு நல்ல மனிதனை பார்க்கவே முடியாது. உனக்கு அவன் எந்தளவுக்கு முக்கியமானவன்னு எனக்குத் தெரியும். உன் மனசும் எனக்குப் புரியுது. ஆனாலும் என்ன செய்ய... இழப்பை தாங்கிட்டு வாழ்ந்து தான் ஆகணும்... என் பெற்றோர் இழப்பை தாங்கிட்டு நான் வாழல அது மாதிரி... ஆதர்ஷ் உனக்கு எவ்வளவு முக்கியமோ... அது மாதிரி எனக்கும் அவன் முக்கியம் தான்... அவனோட இழப்பின் வலி உனக்கு மட்டுமல்ல... எனக்கும் இருக்கு... அவனை மறந்துட்டு வாழுன்னு சொல்லல... எனக்கே அவனை மறக்க முடியல... உனக்கு அது ரொம்பவே கஷ்டம்... ஆனால் அவனைத் தெய்வமாய் வணங்கிட்டு வாழ பழகு... அவன் உன் கூடயிருந்து உன்னை வழி நடத்துவான்..." கதிர் பேச பேச அவனைப் பிரமிப்பாய் பார்த்தவளின்

பார்வையில்... அந்தப் பிரமிப்பையும் மீறி வேறு ஏதோ ஒரு உணர்வு வந்து சேர்ந்தது.

கனவுக்கும் நனவுக்கும் இடையில் நான்...
பொய்மைக்கும் உண்மைக்கும் நடுவில் நீ...
கனவு உண்மையாகுமா... பொய்மை நனவாகுமா...???
நீ... நான்... நாமாவோமா...???

நாளை : 22

மதியின் கண்கள் கதிரை பிரம்மிப்பாய்ப் பார்த்தது. அவள் கண்ட கதிர் இவனில்லையே... இவனின் பேச்சில் தான் எத்தனை முதிர்ச்சி...! எத்தனை பக்குவம்...! நேற்று தன்னோடு மல்லு கட்டிய கதிர் இவன் தானா? என்று அவளுக்குப் பிரம்மிப்பாய் இருந்தது.

"என்ன...?" இரு புருவங்களையும் உயர்த்திக் கேள்வியாய் பார்த்தவனைக் கண்டு ஒன்றுமில்லை என்பது போல் அவள் தலையசைத்தாள்.

"ஒண்ணுமே இல்லையா...?" அவளைப் போல் தலையசைத்தபடி பாவனையுடன் கேட்டவன், அவள் முகத்தைத் தாங்கியிருந்த இரு கைகளின் கட்டை விரல் கொண்டு அவளின் கன்னத்தின் கண்ணீரை துடைத்து விட்டான்.

"நான் ரெப்ரெஷ் பண்ணிட்டு வர்றேன்... ரெண்டு பேரும் சாப்பிட போகலாம்..." என்றவன் அவள் சிந்திக்கத் தனிமை கொடுத்து குளியறைக்குள் புகுந்தான்.

ஷவரின் அடியில் நின்றிருந்த கதிரின் மனம் ஆதர்ஷை தான் சுற்றி வந்தது. ஆதர்ஷ் எவ்வளவு அற்புதமான மனிதன் என்று அவன் மனதுக்குள் சொல்லி கொண்டான். மதி ஒவ்வொரு விசயத்துக்கும் ஆதர்ஷை நினைத்து வருந்துவதைக் கண்டு அவன் கொஞ்சம் கூடப் பொறாமை படவில்லை. மாறாக அவளுக்கும் வருத்தம் இருக்கும் தானே என்று தான் நினைத்தான். முதலில் இருந்த கதிராய் இருந்திருந்தால் அவளிடம் சந்தேகப்பட்டுக் கோபப்பட்டிருப்பான். ஆனால் இப்போது இருக்கும் கதிர் திருந்திய நல்லவன் அன்றோ... இந்தத் திருத்தம் மதியின் காதலினால் வந்ததில்லை... ஆதர்ஷின் இறப்பினால் வந்தது. என்ன நம்ப முடியவில்லையா... அவனுக்கே அவனை நம்ப முடியவில்லை தான்.

ஆம்... கதிர் தன் பெற்றோர் இறப்பை கூடக் கண்டதில்லை... இவ்வளவு ஏன் எந்தவொரு உயிரும்

அவனின் கண் முன் துடித்து இறந்தது இல்லை. தன் உலக வாழ்க்கையில் முதன் முறையாய் இறப்பை கண்டு அதிர்ந்த அந்தக் கௌதம புத்தனை போன்ற ஒரு மனநிலையில் அவன் இருந்தான். அதிலும் ஆதர்ஷ் அவனின் வாழ்க்கையை, உயிரை இவன் கையில் ஒப்படைத்துவிட்டு... அடுத்த நொடி மரணத்தைத் தழுவிய அந்தக் கணத்தை அவன் எப்படி மறப்பான்...? அது அவன் உடம்பில் உயிர் இருக்கும் வரை மறக்காது. அன்று அவனடைந்த துக்கத்தை வார்த்தைகளில் வடிக்க இயலாது. யாராவது கேட்டால் அவனைப் பைத்தியக்காரன் என்பார்கள்.

ஆமாம் அவன் பைத்தியக்காரன் தான்... அன்று முதல் ஆதர்ஷின் மேல்... அவனின் நட்பின் மேல் பைத்தியமாகி தான் போனான். அந்தக் கணம் முடிவு செய்தான்... ஆதர்ஷ் மாதிரி இல்லையென்றாலும் அதில் பாதியளவாவது பெருந்தன்மையுடன் நடந்து கொள்ள வேண்டுமென்று... ஒரு நல்ல உள்ளத்தின் இறப்பு... ஒரு கெட்ட உள்ளத்தைப் புடம் போட்ட தங்கமாய் மாற்றியிருந்தது. இதை மதியிடம் சொல்லலாம் தான்... ஆனால் அதைச் சொல்வதற்கான நேரம் இதுவல்ல என்று அவன் நினைத்தான். அவனின் காதலை மதி உணர்ந்த பின்பே சொல்ல வேண்டுமென்று எண்ணினான். ஆனால் அப்படியொரு காலம் அவன் வாழ்க்கையில் வரவே போவதில்லை என்று அப்போது அவனுக்குத் தெரியவில்லை... பாவம்!!!

வெகுநேரம் ஷவருக்கு அடியில் இருந்தை உணர்ந்து அவசரமாய்க் குளித்துக் கொண்டு வெளியில் வந்தான். இன்னமும் மதி அமர்ந்த இடத்தை விட்டு அசையாமல் இருப்பதைக் கண்டு...

"பேபி..." அவனின் அழைப்பில் அவனை நிமிர்ந்து பார்த்தவள் ஒன்றும் பேசாது முன்னே நடக்க... அவன் அவளைப் பின் தொடர்ந்தான்.

உணவு உட்கொள்ளும் போதும் இருவரிடத்திலும் எந்தவொரு பேச்சுமில்லை. இருவருமே தத்தம்

எண்ணங்களில் மூழ்கியிருந்ததால் மற்றவர் என்ன உட்கொள்கிறார்கள் என்பதைக் கூடக் கவனிக்கவில்லை. ஆனால் ஒரு ஒற்றுமை என்னவென்றால் இருவரின் மனதிலும் ஆதர்ஷே நிறைந்திருந்தான் என்றால் மிகையில்லை. அறைக்கு வந்ததும் அவன் பால்கனியில் போய் முடங்க... அவள் படுக்கையில் சுருண்டாள். நேரம் போவது தெரியாமல் பால்கனியில் எதை எதையோ யோசித்துக் கொண்டிருந்தவன்... வெகுநேரம் கழித்தே உள்ளே வந்தான்.

மதியின் அருகில் படுத்தவன் அவளின் மதி முகத்தைப் பார்க்கும் படி திரும்பி படுத்தான். அந்த வானத்து மதியை ஒத்த அழகுடன் படுத்திருந்தவளை பார்த்தவன் மனதில் காதல் பெருக்கெடுத்தது. அவளைப் பார்த்த கணத்தில் இருந்து இன்று வரை நினைத்து பார்த்தவனுக்கு அவளின் காதலின் ஆழம் பிரம்மிப்பை தருவதாய்... அதேசமயம் அவனின் புறக்கணிப்பால் வேதனையடைந்த மதியின் இன்னொரு பக்கம் அவனையும் வேதனை அடைய செய்வதாய்... அவளின் தலையை வருடி கொடுத்தவன்,

"உன்னை ரொம்பவும் படுத்தி எடுக்கிறேனோ பேபி...? உன் மனசை புரிஞ்சிக்காம நடந்துக்கிறேன்னு என் புத்திக்கு உறைச்சாலும்... என் மனசுக்கு அது உறைக்க மாட்டேங்குதே... மூணு வருசமா உனக்காக நான் தவிக்கிறது எனக்கு மட்டும் தான் தெரியும்... அதிலும் இந்த ஒரு வருசமா நான் தவிச்ச தவிப்புச் சொல்லில் அடங்காதது. அதான் இந்த முட்டாள்தனமான வேகம் பேபி... அதுக்காக உன் மனசை காயப்படுத்தணும்ன்னு நான் நினைச்சதில்லை... எனக்கான தேடலை உன்னிடத்தில் கண்ட பின்பு தான் நான் உன்னைத் தொட்டேன்... உன் மனசுல நான் இருக்கேன்னு தெரிஞ்சதுக்கு அப்புறம் தான் நான் உன்னைக் களவாட ஆரம்பித்தேன்.... ஆனா அது எதையும் நீ உணர மாட்டேங்கிற... என் மேலுள்ள கோபத்தில் உன்னை நீயே ஏமாத்திக்கிற... எப்போ என்னைப் புரிஞ்சிக்கப் போற பேபி...?" அவனின் வார்த்தைகள் அவளைச்

சென்றடைந்ததோ என்னமோ மெதுவே கண்விழித்துப் பார்த்தாள் அவள்.

"தூங்கலையா பாவா..." அவள் தூக்க கலக்கத்தில் தான் தன்னைப் பாவா என்று அழைக்கிறாள் என்று தெரிந்திருந்தாலும்... அவளின் அழைப்பில் அவன் முகம் மலர்ந்தது.

"இல்ல... தூக்கம் வரல... நீ தூங்கு..." என்றவன் மென்மையாய் அவள் தலையைக் கோதி கொடுத்தான்.

"ம்... ம்..." முனங்கியவள் அவனின் கையை எடுத்து தன் நெஞ்சோடு அணைத்துக் கொண்டு விட்ட தூக்கத்தைத் தொடர... அவன் தான் அவஸ்தையில் நெளிந்தான்.

"பேபி கையை விடு..." தன் கையை விடுவிக்க அவன் போராட... அது எதையும் உணராது அவள் சுகமாய்த் துயில் கொள்ள... அவளின் செய்கையில் அவனின் முகத்தில் புன்னகை பெரியதாய் விரிந்தது.

அவளருகில் நெருங்கி படுத்து இதமாய் அணைத்து கொண்டவன் அவளின் நெற்றியில் முத்தமிட்டு அவளின் நுனி மூக்கோடு தன் மூக்கை உரசி... "பேபி... யூ ஆர் சோ ஸ்வீட்..." வாய்விட்டு சொன்னவன் மனம் அமைதியான நதி போல் நிர்மலமாய் இருந்தது. கூடலை விட இந்த மெல்லிய அணைப்பு அவனுக்குக் கோடி சுகம் அள்ளி கொடுத்ததை மனதில் வியப்பாய் எண்ணியவன்... அந்தச் சுகத்தை அனுபவித்தபடி அப்படியே உறங்கி போனான்.

மறுநாள் விடியல் எந்தவித கோபமும், துக்கமும் இல்லாமல் விடிய... இருவரும் ஒருவரை ஒருவர் காயப்படுத்தாமல் மௌனத்தைக் கடைப்பிடித்தனர். ஆனாலும் கதிரால் மதியளவுக்கு அமைதியாய் இருக்க முடியவில்லை. ஒரு சில வார்த்தைகள் பேச தான் செய்தான். அதற்கு அவளின் பதில் ஆம், இல்லை... அதுவுமில்லை என்றால் வெறும் தலையசைப்பு மட்டுமே... அதற்கெல்லாம் அசைவானா கதிர்... அப்படி அவன் மனம் கசந்தால் அவன் கதிர் இல்லையே...

இரவு வேலை முடிந்து களைத்து போய் வந்த கதிர் நேரே தங்கள் அறைக்கு வந்தான். ஏற்கெனவே அவன் வர தாமதமாகும் என்று மதியை அழைத்துச் சொல்லியவன்... தனக்காக அவள் காத்திருக்க வேண்டாமென்று கூறிவிட்டான். அவள் தனக்காகக் காத்திருப்பாளா... மாட்டாளா என்று அவன் கொஞ்சமும் யோசிக்கவில்லை. தனது வேலையைத் தவறாமல் செவ்வன செய்து முடிப்பதே அவனின் தலையாயக் கடமை என்பது போலிருந்தது அவனின் செயல்.

இருளில் மூழ்கியிருந்த அறைக்கு மின்சார விளக்குகளை உயிர்ப்பித்து ஒளி கொடுத்தவன் அறையிருந்த நிலை கண்டு திடுக்கிட்டான். ஏனெனில் அறையிருந்த பொருட்கள் எல்லாம் ஆங்காங்கே இறைந்து கிடந்தது. அவன் திகைத்து போனவனாய் மதியை தேட... கட்டிலில் முழங்கால் மேல் முகம் புதைத்து அமர்ந்திருந்த மதி தோற்றத்தில் அவனின் மனம் திக்திகென்று அடித்துக் கொண்டது.

'இன்னைக்கு என்ன பிரச்சினை காத்திருக்கோ...? எல்லோரையும் படுத்தி எடுத்த எனக்குப் பேபியை கண்டால் மட்டும் கை, கால் உதறுவது ஏனோ தெரியல... கடவுளே அவளைச் சமாளிக்கும் தைரியத்தை எனக்குத் தா...' மனதில் வேண்டி கொண்டே சிதறி கிடந்த பொருட்களின் மீது கால் வைக்காமல் அதைத் தாண்டி அவளருகே சென்றவன்...

"பேபி..." அவனின் அழைப்பில் நிமிர்ந்து பார்த்தவளின் கண்களில் இருந்த அக்னியில் அவன் எரிந்து சாம்பலாகாமல் இருந்ததே அதிசயம்... இருந்தாலும் வரவழைத்துக் கொண்ட தைரியத்துடன் அவளின் நெற்றியில் களைந்து விழுந்த முடியை மிருதுவாய் விலக்கி விட்டு,

"என்னடா...?" என்க... அவள் கோபத்துடன் அவனின் கையைத் தட்டிவிட்டாள். அதைக் கண்டு கொள்ளாமல் அவளருகே அமர்ந்தவன்,

"பேபி... எதுக்கு இவ்வளவு கோபம்...?" அவளின் தோளின் மீது கையைப் போட்டு கொண்டவன் மனதில்,

'அட... கதிர் உனக்கு இவ்வளவு பொறுமையிருக்கா...? நம்பவே முடியலியே... முழுக் குடும்பஸ்தனுக்கான எல்லா யோக்கியதையும் உனக்கு வந்தாச்சுன்னு நினைக்கிறேன்... ஜமாய் ராஜா... ஜமாய்...' தனக்குத் தானே சிலாகித்துக் கொண்டவனின் கையை அவள் மனையாள் வெடுக்கென்று தட்டிவிட்டாள். அதில் சட்டென்று எழுந்த அவனின் கோபம் அவளின் கண்ணீர் நிறைந்த விழிகளைக் கண்டதும் அப்படியே பெட்டி பாம்பாய் அடங்கியது.

"எதுக்குக் கோபம்ன்னா கேட்கிற... இன்னைக்கு நீ கடையில இறக்கிவிட்டுட்டுப் போனதும் என்ன நடந்ததுன்னு தெரியுமா...?" அவனை எதிர் கேள்வி அவள் கேட்க, அதைத் தெரிந்து கொள்ளும் சக்தி தனக்கு இல்லாமல் போனதை நினைத்து அவன் வருந்தினான். அப்படி ஒரு சக்தி மட்டும் அவனுக்கு இருந்திருந்தால் அவளின் மனதில் புகுந்து அதில் என்னயிருக்கிறது என்பதையும் அவன் அறிந்து கொண்டிருப்பானே... ம்ஹூம்... அவனையும் அறியாது அவனிடத்தில் இருந்து பெருமூச்சு கிளம்பியது. அவளைப் பார்த்துத் 'தெரியாது' என்பது போல் தலையசைத்தான்.

"உனக்கு என்ன தான் தெரியும்... ஒரு மண்ணும் தெரியாது..." மனைவியின் புத்திசாலித்தனமான பேச்சை அவன் மண் மாதிரி கேட்டுக் கொண்டிருந்தான். அவனுக்குத் தெரியும் இந்த நேரத்தில் தான் ஏதும் வாயை விட்டால் அவளிடம் இருந்து தான் தப்ப முடியாது என்று...

"என்ன செய்யப் பேபி... உன்னளவுக்கு அறிவு எனக்குக் கிடையாதுன்னு உனக்கே தெரியும்..." அவளிடம் தன்னைத் தாழ்த்தி கொள்வதைக் கூட அவனுக்கு இதமாய்த் தான் இருந்தது. மனதிற்குப் பிடித்தவர்களிடம் மண்டியிடுவது கூடச் சுகம் தான் என்பதை அக்கணம் அவன் உணர்ந்தான்.

"ஒண்ணும் தெரியாதவன் மாதிரி நடிக்காதே... உனக்கா எதுவும் தெரியாது... எனக்குத் தெரியாம என் கழுத்தில் தாலி கட்ட தெரியும்... என் சம்மதமில்லாமல் வழுக்கட்டாயமாய் என்னைப் பலவந்தப்படுத்த தெரியும்... என் விருப்பமில்லாமல் என்னோட குடும்பம் நடத்த தெரியும்... ஏன்னா இதுல எல்லாம் நீ பிஹெச்டி வாங்கியவனாச்சே..." அவளின் எகத்தாளத்தில் அவனின் அடக்கப்பட்ட கோபம் வீறு கொண்டு கிளம்பியது. அவனின் கடந்த காலத்தை... அவனே மறக்க நினைக்கும் தன் தவறுகளை அவள் சுட்டிக்காட்டி பேசியது... அவனின் ஆத்திரத்தை அதிகரித்தது.

"நிறுத்துடி... என்ன சும்மா பேசிட்டே போற... நீ என்ன பேசினாலும் வாயை மூடிக்கிட்டு கேட்டுட்டு இருக்க நான் என்ன பொட்டை பையலா...? ஓங்கி கன்னத்துல ஒரு அப்பு அப்பினேன்னு வை... முப்பத்திரெண்டு பல்லும் உதிர்ந்திடும்..."

அவனின் முன் கோபம், முரட்டுத்தனம் எல்லாமும் சேர்ந்து அவன் தன்னையும் அறியாமல் தன் கையை ஓங்கியிருந்தான். அவனின் ஓங்கிய கையைப் பார்த்தவள் திகைத்து போய் அப்படியே பின்னால் சாய்ந்தாள். அவளின் அச்சத்தில் வெளுத்த முகத்தைக் கண்டவனின் கோபம் சற்று வடிய... அப்பொழுது தான் தன்னை உணர்ந்தான்... அவளை அடிக்கத் தான் ஓங்கிய கையை உணர்ந்தான்.

"ச்சே..." தன் மேலேயே கோபம் கொண்டவனாய் எரிச்சலுடன் கையைக் கீழேயிறக்கினான். அவளின் மனம் தெரிந்தும்... புரிந்தும்... தான் காட்டிய கோபத்தை அவன் அறவே வெறுத்தான். சற்று முன் தான் காட்டிய பொறுமை எங்கே போனது? என்று தனக்குத்தானே கேட்டு கொண்டவன் தன்னை அமைதிப்படுத்திக் கொண்டு,

"பேபி சாரிடா..." அவளைத் தொட போனவனின் கைகளுக்குள் அடங்காமல் அவனை விட்டு தள்ளியமர்ந்தவள் தலையைக் குனிந்து கொள்ள...

"சரி என் கிட்ட வர வேணாம்... இன்னைக்குக் கடையில என்ன நடந்துச்சு சொல்லு...?" தன்மையாய் கேட்டான். அவன் கேட்ட விதத்தினலோ அல்லது தன் மனக்குமுறலை யாரிடமாவது சொல்ல வேண்டுமென்ற எண்ணத்தினாலோ... அவள் தன் வாயை திறந்தாள்.

"அங்கே வேலை செய்றவன்ல ஒருத்தன்... நம்ம ரெண்டு பேரையும் இணைச்சுத் தப்பா பேசினான். ஏற்கெனவே நீங்க வந்ததுல அவனுக்கு உங்களைத் தெரியும் போல... ஆது இறந்து ஒரு வருசம் எப்படா முடியும்ன்னு காத்திருந்திட்டு நான்... நான்..." மேலே சொல்ல முடியாமல் அவளின் கண்ணிலிருந்து கண்ணீர் வடிந்தது.

"என்ன சொன்னான்...?" அவளின் முகத்தை நிமிர்த்திக் கேட்டவனின் முகத்தில் ரௌத்தரம் தாண்டவமாடியது.

"என்ன சொல்வான்... என்னோட கள்ளக்காதலனான உங்க மேல ஆசைப்பட்டு உங்க கூடத் தாலி கட்டாம வாழ்றேன்னு கேவலமா சொன்னான்... ஆது ஆக்சிடெண்ட் கூட விபத்து இல்லை... திட்டமிட்ட கொலை... அதுவும் நீங்க செஞ்சதா சொல்றான்..." அவள் சொல்ல சொல்ல அவனின் முகம் ஆத்திரத்தில் ஜொலித்தது.

"ராஸ்கல் அவனை..." கோபத்தில் பல்லை கடித்தான்.

"அவனைச் சொல்லி என்ன பிரயோஜனம்... இதுக்குத் தான் தலைப்பாடா அடிச்சுக்கிட்டேன்... இந்தக் கல்யாணம் கருமாதி எல்லாம் வேணாம்ன்னு... நீ தான் கேட்கல... இப்போ உன் கூடச் சேர்ந்து நானும் அனுபவிக்கிறேன்..." அவளின் பேச்சில் தன்னை அமைதிப்படுத்திக் கொண்டவன்,

"நம் வாழ்க்கையை நாம் தான் வாழணும் பேபி... அடுத்தவங்க என்ன சொல்வங்களோன்னு பயந்து பயந்து வாழ்ந்தா... நம்ம சந்தோசம் நம்ம கிட்டயிருந்து சொல்லாமல் கொள்ளாமல் விடைப்பெற்று போயிரும்... இதுக்குத் தான் உன் கோபத்தை இதில் காண்பிச்சியா...?"

இறைந்து கிடந்த பொருட்களைப் பார்த்து கூறயவனை எரிச்சலுடன் பார்த்தவள்,

"உனக்கு யாரை பத்தி தான் கவலை... உனக்கு உன் சுகம் மட்டும் தான் பெரிசு... நான் இப்படியெல்லாம் கேவலப்படக் காரணம் நீ தான்டா... நீ என் கரெக்டரையே கேவலப்படுத்திட்ட... உன்னை..." அவனைத் தான் ஏதும் செய்ய முடியாத ஆதங்கத்தில் அவளின் கண்கள் கண்ணீரை வடிக்க... அதைக் கண்டு அவனுக்குப் பாவமாயிருந்தாலும் இப்போது அவளிருக்கும் மனநிலையில் தான் என்ன பேசினாலும் அவளின் காதில் ஏற போவதில்லை என்பதை உணர்ந்தவனாய் கட்டிலிலிருந்து எழுந்தவன் சிதறி கிடந்த பொருட்களை எல்லாம் எடுத்து வைத்து ஒழுங்குப்படுத்தத் தொடங்கினான்.

"நான் லூசு மாதிரி பேசியிட்டு இருக்கேன்... நீ பாட்டுக்கு எனக்கென்ன விருந்துன்னு இருக்கிற... என் வார்த்தைக்குக் கொஞ்சம் கூட மதிப்பு கிடையாதா...?" அதற்கும் அவனிடத்தில் கத்தியவளை ஒன்றும் பேசாது நிமிர்ந்து பார்த்தவன் தன் வேலையைத் தொடர்ந்தான். அவளின் பார்வை தன்னைக் கோபமாய்ப் பின் தொடர்வதை உணர்ந்தாலும் அவளை ஏறிட்டு பார்க்கவில்லை.

அறையைச் சுத்தப்படுத்தியவன் தன்னையும் சுத்தப்படுத்திக் கொண்டு வந்த போது அவள் கட்டிலின் ஓரமாய்ச் சுருண்டிருந்தாள். அவளருகே வந்து படுத்தவன் அவள் இடையில் கையைப் போட்டு அவளை அணைக்க... அவனின் கைகளை அவள் கோபமாய்த் தட்டிவிட்டாள். அவளின் செயலிலேயே அவள் விழித்திருப்பது புரிய... அவளை வலுக்கட்டாயமாய்த் தன் புறம் திருப்பியவன்,

"கையைப் போடாதே... காலை போடதேன்னு சொன்ன... அப்புறம் நான் என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது... அது தான் உன் ஆசைன்னா... எனக்கு ஒண்ணும்

பிரச்சினையில்லை..." என்றவன் அவளின் முகம் நோக்கி குனிய...

"ஐய்யோ வேணாம்..." பதறியவளாய் அவனின் முகம் மீது கை வைத்து தடுத்தாள். அவளின் கை மீது தன் இதழை பதித்தவன்...

"இப்போ தான் குட் பேபி..." என்றவன், "நீ பேசாம படுத்திருந்தா... நானும் அமைதியா படுத்திருப்பேன்... ஆனா நீ அதைச் செய்யல... அதனால இப்போ நான் சொல்றதை தான் நீ கேட்கணும்..." என்றவனை அச்சத்துடன் அவள் பார்க்க... அவனோ சிரித்தபடி...

"பயப்படும் படியா ஒண்ணும் செய்ய மாட்டேன் பேபி..." அவளின் காதில் கிசுகிசுத்தவன் சட்டென்று அவள் நெஞ்சில் முகம் புதைத்துப் படுத்தான். அவனின் அதிரடி செயலில் விதிர்த்து போனவள்,

"ஏய்... என்ன பண்ற...?" அவனின் தலை முடியை பிடித்து இழுத்து அவனின் முகத்தை நிமிர்த்த பார்க்க... அவனோ சட்டமாய் அவளின் நெஞ்சில் சுகமாய்த் துயில் கொண்டு,

"ப்ளீஸ் பேபி..." என்க...

"என் மனசை கொல்றதே... உனக்கு வேலையா போச்சு..." என்றவளின் கண்ணீரை அவனின் உச்சந்தலை உணர... விழியுயர்த்தி அவளைப் பார்த்தவன் அடுத்த நொடி அவளை விட்டு விலகினான்.

"சாரி பேபி..." அவள் முகம் பார்க்காமல் சொன்னவன் அவளுக்கு முதுகு காட்டி படுத்துக் கொண்டான். சிறிது நேரம் கழித்து அவனின் முதுகில் தயக்கமாய் ஒரு கை படர்ந்தது. அதில் முகம் பிரகாசிக்கத் திரும்பியவன் அவள் கண்ணில் தென்பட்ட ஏக்கத்தில் தன்னைத் தொலைத்தான்.

"பேபி..." என்றபடி அவளின் புறம் திரும்பியவனின் நெஞ்சில் வாகாய் தலை சாய்ந்தாள் அவனது பேபி...!

அவனின் கைகள் எல்லையில்லா மகிழ்ச்சியோடு அவளைத் தழுவி கொண்டது.

தாமரை இலை நீர் போல் பட்டும் படாமல் இருக்கும் இவர்களின் உறவுக்கிடையில் புதிதாய் பூத்த அல்லி பூவாய் வந்து சேர்ந்தாள் சந்தனா. அவளின் வரவு இவர்களின் உறவை மேலும் இறுக்கி பிணைக்குமா...? இல்லை இவர்களின் உறவை உடைத்துப் பிணக்கை ஏற்படுத்துமா...???

வெளியே கோபமென்ற கடும் பாறையாய்...
உள்ளே காதலென்ற மென்பூவாய்...
மொத்தத்தில் சாக்கோ லாவா கேக்காய் நீயடி...
உன் சுவையில் மயங்கி நானடி...

நாளை : 23

"ஏய்... இந்த வேலையைச் செஞ்சது நீ தானே...?" காரில் ஏறியமர்ந்ததும் படபடப்புடன் கேட்ட மதியை விளங்காத பார்வை ஒன்றை பார்த்து வைத்தான் கதிர். இரவு வேலை முடிந்து அவளை அழைக்க வந்தவனைப் பார்த்து இப்படியொரு கேள்வி கேட்டால் அவனும் என்ன தான் செய்வான்.

"நான் எத்தனையோ வேலை பார்க்கிறேன்... அதுல நீ எந்த வேலையைச் சொல்ற...?" யோசனையாய் புருவத்தைச் சுருக்கியவன் காரை கிளப்பினான்.

"தெரியாத மாதிரி நடிக்காதேடா... நேத்து சொன்னேனே என் கடையில் வேலை பார்ப்பவனைப் பத்தி அவனைத் தான் சொல்றேன்..." அவளின் சிடுசிடுப்பில்... அவனின் முகத்தில் புன்னகை விரிந்தது.

"ஏன் அவனுக்கு என்ன...?" சாலையில் கவனத்தைப் பதித்தவாறு கேட்டவனின் கேள்வியில்,

"அவனுக்கு என்னவா... மதியம் அவன் பொண்டாட்டி வந்து ஒரே அழுகை... அவன் ஆக்சிடெண்ட்டில் மாட்டிக்கிட்டானாம்... பார்க்கவே பரிதாபமாயிருந்தது... அவள் கையில் பணத்தைக் கொடுத்து சமாதானப்படுத்தி அனுப்பி வைச்சேன்... நேத்து வரைக்கும் நல்லாயிருந்தவன் இன்னைக்கு ஆக்சிடெண்ட்டாகி படுத்திருக்கான்னா... எனக்கு என்னமோ உன் மேல் தான் டவுட்டா இருக்கு..." சொல்லி கொண்டு போனவளின் பேச்சில் குறுக்கிட்டவன்,

"அப்படியா... அடி ரொம்பப் பலமோ...?" அவனின் கேள்விக்கு ஆமாம் என்று சொல்ல போனவள் அவனின் இதழில் வழிந்த விசம புன்னகையில் அவனைக் கண்டு கொண்டவள்,

"அப்போ நீ தான் இதுக்குக் காரணமா...?" கோபத்துடன் முறைத்தவளை...

"நானா... நான் ரொம்ப நல்லவன்ம்மா..." என்று நடுங்கினார் போன்று சொன்னவனின் உடலிலிருந்த நடுக்கம் அவன் கண்களில் இல்லை... மாறாக அது ரகசிய சிரிப்பில் மலர்ந்திருந்தது.

"ம்... பரவாயில்லை நம்ம பசங்க... காலையில் தான் சொன்னேன்... இவ்வளவு க்விக்கா வேலையை முடிப்பாங்கன்னு நான் நினைச்சு கூடப் பார்க்கல..." தனக்குத்தானே சிலாகித்துப் பேசி கொண்டவனின் தோள் பட்டையில் தன் கை கொண்டு ஓங்கியடித்தவள்,

"ஏண்டா இப்படிப் பண்ணின... பண்றது எல்லாம் ரௌடித்தனம்... இதில் நல்லவன்னு பட்டம் வேற..." மீண்டும் அடிக்க வந்தவளை பார்த்து,

"ராட்சசி அடிக்காதடி... வலிக்குது..." என்று அவளிடம் பரிதாபமாய்ச் சொல்லியவன் அவள் புறம் லேசாகச் சாய்ந்தபடி, "அது எப்படிப் பேபி... பகல்ல ராட்சசியா இருக்கிற நீ... ராத்திரியில் மட்டும் மயக்கும் மோகினியாய் மாறி என்னை மயக்குற... அப்படியென்ன வசிய மருந்து வைச்சிருக்கப் பேபி...?" கண்களில் காதல் வழிய சொன்னவனைக் கண்டு அவளின் மனம் தட்டு தடுமாறியது. அதை மறைத்துக் கொண்டு,

"ரோட்டை பார்த்து காரை ஒழுங்கா ஓட்டு..." என்று அவனை அதிகாரம் பண்ணியவள், "என்ன பாவம் செய்தோமோ... இந்த ஜென்மத்தில் இப்படியொரு வாழ்க்கை அமைஞ்சியிருக்கு... இதில் நீ மேலும் மேலும் பாவத்தின் கணக்கை கூட்டிட்டே போற... நீ ஏன் இப்படிப் பண்ணின...?" அவளின் பேச்சில் அவளைக் கூர்ந்து பார்த்தவன் கார் ஓட்டுவதில் கவனத்தைச் செலுத்தியபடி,

"அவன் பேசிய பேச்சுக்கு... அவனை எல்லாம் உயிரோட விட்டதே தப்பு... என் மனைவியைத் தப்பா பேசிட்டு ஒருத்தன் உயிரோட இருக்க முடியுமா...? அவனை இப்படி அரை உயிராய் விட்டு வச்சிருக்கிறதே உனக்காகத் தான்... உன் கடையில் வேலை பார்ப்பதால் தான்... இல்லை நடக்கிறதே வேற..." பல்லை கடித்து வார்த்தைகளை

மென்று துப்பியவன் முகம் கடினத்தைத் தத்தெடுத்திருந்தது.

இத்தனை நேரம் அவளிடம் விளையாட்டாய் பேசி அவளைச் சீண்டி கொண்டிருந்த கதிர் இவனில்லை... அவனின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த மதியின் முகத்தில் அச்சம் வருவதற்குப் பதிலாகக் காதல் பொங்கி வழிந்தது. தனக்காக அவன் இருக்கிறான்... என்ற நினைவே அவளுக்குத் தித்திப்பாயிருந்தது. கதிரின் செயலில் அவள் ஆதர்ஷை கண்டாள். அவனும் அப்படித்தான் அவள் கல்லூரி படிக்கும் போது அவளைக் கிண்டலடித்த பையன் ஒருவனை ஓட ஓட விரட்டியடித்தான். அவளுக்கு ஒன்று என்றால் அவன் துடி துடித்துப் போவான். ஆதர்ஷின் நினைவில் இருந்தவள் மனதில் கதிர் அவளைக் காயப்படுத்தித் தருணம் நியாபகம் வர... கதிரின் மீதான அவளின் ஆத்திரம் அதிகரித்தது.

'எல்லாம் இவனால் தான்... இவ்வளவு நாள் எங்கே போயிருந்தது இவனின் காதல்... இவன் மட்டும் ஒழுங்கா என்ன...?' என்ற நினைவு எழுந்ததும் அவளின் கோபம் வார்த்தைகளாய் மாறி அவன் மீது திராவகத்தை அள்ளி வீசியது.

"அவனை மட்டும் சொல்ற... நீ மட்டும் ஒழுங்கா என்ன...? அவனுக்குத் தண்டனை கொடுக்க நீ யார்டா...? நீயென்ன கடவுளா...? அப்படி அவன் பேசியது தப்புன்னா... நீ பேசிய பேச்சுக்கு... செஞ்ச செயலுக்கு... உனக்கு யார் தண்டனை கொடுப்பது...?" சாட்டையடியாய் விழுந்த அவளின் வாரத்தைகள் கொடுத்த வலியை ஊமையாய் வாங்கி விழுங்கி மனதில் புதைத்து கொண்டவன்... அவள் புறம் திரும்பி ஆழமாய்ப் பார்த்தான். பின்பு சாலையில் கண் பதித்தவன்,

"வேறு யார்... நீ தான்..." அமைதியாய் ஆழ்ந்து ஒலித்த அவனின் குரலில் அதிர்ந்து போனவள் அவனை ஏறிட்டு பார்த்தாள்.

"நீ என்ன தண்டனை கொடுத்தாலும் ஏத்துக்கத் தயாராய் நானிருக்கேன்... தண்டனை கொடுக்க நீ தயாரா பேபி...?" கேட்டவனின் குரல் அவளை எக்காளம் செய்யவில்லை... மாறாக அவளை யாசித்தது. 'அப்படியாவது உன் மனம் அமைதியுறும் என்றால்... அந்தத் தண்டனையைத் தலைவணங்கி நான் ஏற்றுக் கொள்கிறேன்...' என்ற கெஞ்சல், பணிவே அதில் இருந்தது. அவனின் பேச்சில் அவளின் கண்களில் கண்ணீர் கரை கட்டியது. அவனுக்குக் கொடுக்கும் தண்டனையின் வலி... அவனுக்கு வலிப்பதை விடக் கோடி மடங்கு திருப்பி அவளுக்கு அல்லவா வலிக்கும்...

"அது எனக்குத் தான் தண்டனை..." என்றவள் தன் கலங்கிய விழிகளை அவன் பார்க்காமல் இருப்பதற்காக வெளிப்புறமாய் வேடிக்கை பார்ப்பது போல் தன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அப்படியிருந்தும் இருட்டில் வைரமாய்ப் பளபளத்த அவளின் கண்ணீர் துளி அவன் பார்வையிலிருந்து தப்பவில்லை. அதைக் கண்டு அவன் முகம் மிருதுவாய் மாறியது. அதன் பிறகு காரில் அமைதி நிலவ... அதைக் கலைக்க இருவருக்குமே மனம் வரவில்லை.

வீட்டிற்கு வந்தும் நீடித்த மௌனத்தை அவன் விரும்பவில்லை. படுக்கப் போனவளின் கையைப் பிடித்துத் தடுத்தவன்... "இப்போ என்ன இழவா நடந்து போச்சு... இப்படி அமைதியாய் இருக்க...? அவனுக்காக வருத்தப்படுறன்னா... அதுக்கு அவசியமில்லை..." தன்னுடைய பேச்சில் அவள் உடல் அதிர்ந்ததை அவன் உணர்ந்தான். கேள்வியாய் பார்த்தவனை... யாசிப்பது போல் பார்த்தவள்,

"தயவுசெஞ்சு இப்படியெல்லாம் பேசாதீங்க..." கலக்கத்துடன் சொன்னவளின் கலக்கம் அவனின் மனதுக்கு இதத்தைத் தருவதாய்... அவளின் அன்பில் அவனின் முகம் மென்மையுற்றது. அவளின் மனதை மாற்றும் பொருட்டு,

"அதுயென்ன கோபம் வந்தா வா போன்னு பேசுற... ஆனா 'அப்போ' மட்டும் பாவா... வாங்க போங்கன்னு பேசற... ஏன்...?" 'அப்போ'வில் அழுத்தம் கொடுத்தவன் பேச்சு அவளின் முகத்தைச் செந்தாமரையாய் சிவக்க செய்தது.

"அது வந்து... வந்து..." இழுத்தவளை பார்த்துக் குறும்பு சிரிப்புடன்,

"அது வரப்போ வந்துட்டு போகட்டும்... இப்போ நீ வா..." அவளை இழுத்து தன் மீது வாகாய் சாய்த்து கொண்டவனின் கையில் பாந்தமாய் அடங்கினாள் அவள்.

மறுநாள் காலையில் பரபரப்புடன் அலுவலகத்துக்குக் கிளம்பிய கதிரை ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டே அமைதியாய் கிளம்பி கொண்டிருந்தாள் மதி. அவனின் பரபரப்பிற்கான காரணம் அவளுக்குத் தெரியவில்லை. ஆனாலும் அவனிடம் வாய்விட்டு கேட்க அவளுக்குத் தயக்கமாய் இருந்தது. அதற்கு அவசியமே இல்லாமல் அவனே அவளிடம் பேசினான்.

"பேபி... நான் போடுறதுக்கு நல்ல ட்ரெஸ் எடுத்து கொடேன்..." அலமாரியை திறந்து வைத்துக் கொண்டு அதைப் பார்வையிட்டவாறு கேட்டவனின் பேச்சை அவளால் தட்ட முடியவில்லை. அவளின் கால்கள் தாமாக நடந்து சென்று அவளை அவன் முன் நிறுத்தியது. அவளின் வரவை உணர்ந்து திரும்பியவன்,

"வா பேபி... வந்து சீக்கிரம் எடுத்து கொடு..." அவளை அவசரப்படுத்த, அவள் அவனின் ஆடைகளில் கவனத்தைச் செலுத்தியவாறு...

"என்ன மாதிரி இடம்ன்னு சொன்னா... அதுக்குத் தகுந்த மாதிரி ட்ரெஸ் எடுத்து கொடுப்பேன்..."

"இன்னைக்கு டெல்லியில் இருக்கும் ஒரு லீடிங் கம்பெனியோட பிசினெஸ் அக்ரிமென்ட் போட போறேன்... அதுக்கு ஏத்த மாதிரி ட்ரெஸ் எடு..." அவன்

சொன்னதற்கேற்ப உடையைத் தேர்ந்தெடுத்தவள் அதை அவனிடம் நீட்டினாள்.

"குட் செலக்சன்..." அவளைப் பாராட்டியவன் உடையை அவசரமாய் அணிந்தான். அவன் புறப்பட்டதும்,

"போலாமா..." என்றவளின் கையைப் பிடித்துத் தடுத்தவனைப் புரியாமல் ஏறிட்டு பார்த்தவள்... அவன் முகத்தில் கலக்கத்தைக் கண்டதும் அப்படியே நின்றாள். முன்பிருந்த கதிராய்... தாயின் அரவணைப்புக்கு ஏங்கும் சேயாய் நின்றிருந்தவனை அணைத்து ஆறுதல் படுத்த விளைந்தது அவளின் காதல் மனம்.

"உங்களால இதைச் சக்ஸஸ்புல்லா முடிக்க முடியும் பாவா... டோண்ட் வொர்ரி..." அவனிடம் நம்பிக்கை வார்த்தையைச் சொன்னவள்... அவனின் கையைப் பிடித்து அழுத்தி ஆறுதல் படுத்த... அதில் உள்ளம் நெகிழ்ந்த அவனோ அவளைத் தன்னோடு அணைத்துக் கொண்டான்.

"பாவா... கிளம்பும் நேரத்தில் என்ன பண்றீங்க...? உங்க ட்ரெஸெல்லாம் கசங்குது பாருங்க..." அவனின் பிடியிலிருந்து விலக முற்பட்டவளை,

"ப்ளீஸ் பேபி... ஒன் மினிட்..." என்றவன் அவளைத் தன் கையணைப்பில் அமைதியாய் வைத்திருந்தான். சொன்னது போல் ஒரு நிமிடத்தில் அவளை விடுவித்தவன்,

"தேங்க்ஸ் பேபி..." என்று அவளின் உச்சியில் இதழை பதித்தான். "நீ என் கூடயிருந்தா... அதுவே எனக்கு யானை பலத்தைக் கொடுக்குது..." என்றவனின் பேச்சில் அவளின் மனம் நெகிழ்ந்தது. அவனின் நேற்றைய பேச்சில் நெகிழ்ந்திருந்த அவளது மனம் இப்போது முற்றிலும் அவனிடத்தில் சரணாகதியடைந்தது. அது அவனை நோக்கி அவளைச் செலுத்த, அவளையும் அறியாமல் அவனின் உயரத்துக்கு எம்பியவள் அவனின் கன்னத்தில் அழுத்தமாய்த் தன் இதழை பதித்தாள்.

"பேபி..." அவள் முத்தமிட்ட கன்னத்தை நம்ப முடியாமல் தடவியவனின் பார்வை பிரம்மிப்பாய் அவளின் மேல் பதிந்தது. அவளின் பார்வையில் லஜ்ஜையுடன் அவள் தலைகுனிய...

"நிஜம் தானா...?" அவள் முகத்தருகே குனிந்து கேட்டவனின் கையைப் பிடித்து நறுக்கென்று கிள்ளியவள் கலகலவெனச் சிரித்தபடி அறையை விட்டு வெளியில் ஓடினாள்.

முதன் முறையாய் தானாக மனமுவந்து அவள் பதித்த இதழொற்றல் அவனின் உயிர் வரை சென்று இன்பமாய் ஊடுறுவ... அந்தச் சிலிர்ப்பை கண்ணை மூடி அனுபவித்தவனின் இதழ் தானாய் சீழ்க்கை ஒலியெழுப்ப... மனதில் எழுந்த உற்சாகத்துடன் மகிழ்ச்சியாய் அவளைப் பின் தொடர்ந்து சென்றான்.

****

அந்த ஐந்து நட்சத்திர விடுதியின் வாகன தரிப்பிடத்தில் காரை நிறுத்திய கதிர் உள்ளே சென்றான். அங்கே இருந்த மதுபான விடுதியை கண்டவனின் கால்கள் ஒரு நொடி தயங்கி பின்பு மேலே நடந்தது. முன்பொரு காலத்தில் இதே மதுபான விடுதியில் ஆளை மறக்குமளவுக்குக் குடித்துவிட்டு தான் தன்னிலை மறந்து விழுந்து கிடந்ததை எண்ணி பார்த்தவன் மனதுக்குள் வெட்கினான். அதேசமயம் மதியின் காதலில் தான் மனிதனாய் மாறிவிட்டதை எண்ணி பார்த்தவன் மனதுக்குள் பெருமையடைந்தான். மனைவியின் நியாபகத்தில் உதட்டில் அரும்பிய புன்னகையுடன்... மலர்ந்த முகத்துடன் தனக்காகப் பதிவு செய்யப்பட்ட மேஜையில் சென்றமர்ந்தவனின் அழகு பன்மடங்காகி பிரகாசித்தது. மனதுக்குப் பிடித்தவளுடன் மனதுக்கு நிறைவான மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்வதை அவனின் முகம் பிரதிபலித்தது.

"ஹாய் யங்மேன்..." உற்சாகமாய் அழைத்தபடி அங்கே வந்தார் ராம்... அவனுடன் தொழில் ஒப்பந்தம் செய்ய

டெல்லியிலிருந்து வந்திருக்கும் தொழிலதிபர்.

"ஹாய் சார்..." என்றவன் மரியாதை நிமித்தம் எழுந்து அவரின் கையைப் பிடித்துக் குலுக்கினான். பரஸ்பர அறிமுகத்துக்குப் பின்,

"கதிர்... நானும் தமிழ்நாட்டுக்காரன் தான்... மூணு தலைமுறைக்கு முன் டெல்லியில் செட்டிலாகிட்டோம்..." தன்னைப் பற்றி அவர் சொல்லி கொண்டிருக்க... அதை அவன் புன்சிரிப்புடன் கேட்டுக் கொண்டிருந்தான்.

"டாட்..." என்ற குரலில் திரும்பி பார்த்த ராமின் முகம் மலர்ந்தது.

"வா... வா..." உற்சாகமாய் அழைக்க... அங்கே அழகு பெட்டகமாய், நவநாகரீக மங்கையாய் வந்து நின்றாள் சந்தனா.

"கதிர்... மீட் மை டாட்டர் சந்தனா... எனக்கு அடுத்துப் பிசினசை ஏத்து நடத்த போகிறவள்..." என்று அவர் அவனிடத்தில் அவளை அறிமுகப்படுத்தியவர், மகளிடம் திரும்பி, "மீட் மிஸ்டர். கதிர்..."

"ஹாய்..." என்று சிரித்தபடி அவனிடம் கை குலுக்கத் தன் கையை நீட்டியவளின் கையைப் பிடித்துக் குலுக்காமல்,

"வணக்கம்..." என்றவன் தன் இரு கரத்தையும் குவித்து வணக்கம் சொல்ல... அவனின் செயலில் அவள் வியப்பாய் அவனைப் பார்த்தாள்.

அவளைக் கண்டதும் கண்களில் ஆர்வம் வழிய ஆசையுடன் பேச வரும் ஆண்களை மட்டும் கண்டு பழகியவளுக்குக் கதிரின் இந்தச் செயல் வியப்பை அளித்து அவன் மேல் மதிப்பு, மரியாதையை வரவழைத்தது. அவனின் செயல் மதிப்பை அளித்தது என்றால் அவனின் உருவம் அவள் மனதில் புகுந்து அவளின் பருவத்தின் கனவை உரம் போட்டு வளர்த்தது.

கதிரின் இந்தச் செயலுக்குக் காரணமானவள்... அவனின் மேல் எல்லையில்லா காதல் கொண்டவள்... அவனின் மனதை கவர்ந்தவள்... அவனின் அன்புக்கு பாத்திரமானவள் ஒருத்தியிருக்கிறாள் என்பதை அறியாத சந்தனா முதல் சந்திப்பிலேயே கதிரிடத்தில் தன் மனதை பறி கொடுத்தாள்.

நானும் நீயும் யாரோ எவரோ...
உன்னைக் கண்ட நொடி...
நானும் நீயும் வேறு வேறோ...!!!

நாளை : 24

சந்தனாவின் அஞ்சனம் எழுதிய விழிகள் இமைக்காமல் கதிரையே பார்த்திருந்தது. அவளுக்கே அவள் செய்வது சரியென்று படவில்லை... முதன் முறையாய் பார்க்கும் ஒரு ஆணை இப்படி வைத்த கண் வாங்காமல் பார்ப்பது அவளுக்கே ஒரு மாதிரியாக இருந்த போதும்... அவளால் தன் விழிகளை அங்குமிங்கும் திருப்ப முடியாமல் ஏதோ மந்திர சக்திக்கு கட்டுப்பாட்டார் போல் அவனை வெறித்துப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தாள். அந்தளவுக்கு அவனின் கம்பீரம் அவளைச் சுண்டியிழுத்தது.

கதிரோ அவளின் பார்வையையோ இல்லை அவனிடத்தில் மயங்கியிருந்த அவளின் மனதையோ கொஞ்சமும் அறியாமல் அவளின் தந்தை ராமிடத்தில் தொழில் பேச்சுக்களைப் பேசி கொண்டிருந்தான். அவன் பேசும் போது அடிக்கடி தன் இடது கையால் தலையை அழுந்த கோதி கொண்ட அழகு... எதிரில் இருப்பவரின் பேச்சை ஆமோதிக்கும் விதமாய் அவன் மெல்லமாய்த் தலையாட்டிய விதம்... அவனின் ஒவ்வொரு அசையும் ரசித்துப் பார்த்து கொண்டிருந்தவளின் கண்களில் அவன் மீதான மயக்கம் அப்பட்டமாய்த் தெரிந்தது.

ராமிற்குப் பல தொழில்கள் இருந்தது. அதில் ஒன்று தான் மருத்துவம்... ஆம் அவரின் 'ராம் ஐ கேர்' வட இந்தியா முழுவதும் பரந்து விரிந்திருந்தது. அதைத் தெற்கே கொண்டு வரும் பொருட்டு அவர் தமிழ்நாட்டைத் தேர்ந்தெடுத்திருந்தார். அவரின் மருத்துவமனை கட்ட பல கட்டுமான தொழில் நிறுவனங்கள் போட்டி போட்ட போதும் அதில் வெற்றிப் பெற்றது கதிரின் கட்டுமான நிறுவனம். அவனின் பல தொழில்களில் இதுவும் ஒன்று.

"கதிர்... நான் இந்த அக்ரிமென்ட்ல சைன் பண்ணிட்டு டெல்லி போயிருவேன்... மத்த எல்லா வேலைகளையும் என் பொண்ணு தான் இங்கேயிருந்து பார்த்துக்குவா... அதனால எந்த விசயமாய் இருந்தாலும் அவளிடம்

கேட்டுக்கோங்க..." ராம் சொன்னதை ஆமோதிப்பது போல் தலையாட்டியவன் அப்போது தான் அவள் இருப்பதை உணர்ந்தவன் போல் அவளைப் பார்த்துப் புன்னகைத்தான்.

'சரியான மாக்கானா இருப்பான் போல... ஹப்பா... இப்போவாவது நான் இங்கே இருக்கேன்னு இவனுக்குக் கண் தெரிஞ்சதே... ஆனாலும் நீ ரொம்ப மோசம்டா... இவ்வளவு அழகான பெண் ஒருத்தி இருக்கிறது கூடக் கண்டுக்காம அப்படி என்னடா பிசினஸ் பேசற...? தத்தி... தத்தி...' மனதுக்குள் செல்லமாய் அவனை வைதாள். தத்தி என்றழைக்கப்பட்டவனின் பழைய வாழ்க்கையை அறியாத இந்தத் தத்தி பெண் அவ்வாறு அவனை நினைத்தது.

"ஓகே சார்... நோ ப்ராப்ளம்..." என்றவனிடம்,

"ஓகே கதிர்... நாளைக்கே இதை லீகலா முடிச்சிறலாம்..."

"உங்க விருப்பப்படியே செஞ்சிரலாம் சார்..." என்றவன் அவரிடம் விடைப்பெற்றுக் கிளம்பப் போக... அதில் சந்தனாவின் முகம் வாடியது. அவன் தன்னைக் கண்டு கொள்ளாதது அவளை வருந்த செய்தது. நாற்காலியில் இருந்து எழுந்த கதிர் ஏதோ நினைத்தவனாய் அவள் புறம் திரும்பியவன் மெல்லிய தலையசைப்புடன் அவளிடம் விடைப்பெற்றான். அதில் அவள் முகம் சூரியனாய்ப் பிரகாசித்தது. அவளின் மனம் தாமரை பூவாய் மலர்ந்து மணம் வீசியது.

காரை கிளப்பிய கதிரின் மனம் மகிழ்ச்சியில் நிரம்பி வழிந்தது. ஏனோ அவனுக்கு மதியை பார்க்க வேண்டும்... தன் சந்தோசத்தை அவளிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும் போலிருக்க அவளின் நகைக்கடை நோக்கி காரை விரட்டினான்.

'எதிர்பாராமல் என்னைப் பார்க்கும் போது பேபியின் கண்கள் ஆச்சிரியத்தில் எப்படி விரியும்...?' மனதில் மதியின் அந்தத் தோற்றத்தை கற்பனை பண்ணி

பார்த்தவனின் நினைவில் காலையில் அவள் கொடுத்த முத்தம் நியாபகம் வந்து... அவனையும் அறியாது அவனின் கைகள் தன் கன்னத்தைத் தடவியது. மீண்டும் அதே போல் ஒரு இதழொற்றலுக்காக அவனின் மனம் ஏங்கியது.

கடை வந்ததும் காரை நிறுத்திவிட்டு இறங்கியவன் கடைக்குள் நுழைந்தான். நேரே வைர நகை பகுதிக்கு சென்றவன் தன் மகிழ்ச்சியைப் பகிரும் விதமாக மதிக்கு நகை வாங்கிக் கொடுக்க முடிவு செய்தான். எல்லா நகையையும் பார்வையிட்டவன் வளையல், மோதிரத்துடன் இருந்த வைர கழுத்தணியைத் தேர்வு செய்தவன் அதைப் பில் போட சொன்னான். அவனுக்குத் தெரியும்... பில் போடுவதற்கு எப்படியும் மதி இங்கே வருவாள் என்று. சட்டமாய் நாற்காலியில் சாய்ந்தமர்ந்தவன் அவளின் வரவுக்காய் வழி மேல் விழி வைத்துக் காத்திருந்தான்.

நகைக்குப் பில் போடுவதற்காக அறையை விட்டு வெளியில் வந்த மதி அவனைக் கண்டு அதிர்ந்தவள்... பிறகு ஆச்சரியத்தில் மூழ்கி அதன் பின் அவளின் முகம் மகிழ்ச்சியைத் தத்தெடுத்தது. அவளின் ஒவ்வொரு உணர்வையும் கையைக் கட்டி கொண்டு ஒரு பக்கமாய்த் தலையைச் சாய்த்தவாறு அவன் ரசித்துக் கொண்டிருந்தான்.

"இங்கே எங்கே...?" கேட்டபடி அவனருகே அவள் வர,

"என் மனைவிக்கு நகை வாங்க வந்தேன்..." சொல்லியபடி எழுந்தவனை ஆச்சிரியமாய்ப் பார்த்தவள்,

"ம்ஹூம்... ஆனா அவங்களுக்கு நகைகள் அவ்வளவா பிடிக்காதே... அது உங்களுக்குத் தெரியாதா...?" அவனைக் கேள்வி கேட்டவளை... அவன் பரிதாபமாய்ப் பார்த்தான்.

"ஓ... உனக்கு நகை பிடிக்காதா..." அவன் குரல் இறங்கி போயிருந்தது. அதைப் பொறுக்க மாட்டாமல்,

"பிடிக்காது தான்... ஆனால் நீங்க தர்றதால ஓகே..." என்றவள் அவன் தேர்வு செய்த நகையை அழகாய் பெட்டியில் வைத்து மூடி அதை அவனிடம் நீட்டினாள்.

"பில் போடலையா...?"

"உங்களுக்கு மட்டும் ப்ரீ..." சொல்லிவிட்டு சிரித்தவளின் சிரிப்பில் ஒரு நொடி மயங்கியவன்,

"இது என் மனைவிக்கு நான் கொடுக்கும் கிப்ட்... அது என் பணத்தில் வாங்கியதாய் இருக்கணும்..." என்று கூறியவன் அவள் மறுக்க... மறுக்க... பணத்தைக் கொடுத்தான்.

"அப்பா... எல்லாத்துலேயும் பிடிவாதம்..." சலித்துக் கொண்டாலும் அவனிடமிருந்து பணத்தை ஒருவித பெருமிதத்தோடு வாங்கிக் கொண்டாள்.

"வா... போகலாம்..." என்றவனைப் புரியாமல் அவள் பார்க்க...

"சந்தோசத்தைக் கொண்டாட..." என்றவன், "இன்னைக்கு டீலிங் சக்ஸஸ்..." கட்டை விரலை உயர்த்திக் காட்டியவனின் உற்சாகம் அவளையும் தொற்றிக் கொண்டது.

"ஓ... வாழ்த்துக்கள்..." என்று அவனை வாழ்த்தியவள் உள்ளே சென்று கைப்பையை எடுத்துக் கொண்டு அவனுடன் கிளம்பினாள். கணவன் தன்னைத் தேடி வந்ததில் மகிழ்ந்தவள் சுற்றுப்புறத்தை மறந்து அவனின் கையோடு கை கோர்த்து நடந்தாள்.

****

"வாவ் சூப்பராயிருக்கு..." கடற்கரைக்கு அருகில் இருந்த அந்தப் பண்ணை வீட்டை ரசித்தபடி கூறியவள் சுற்றிலும் தன் கண்களை ஓட்டினாள்.

"உனக்குப் பிடிச்சியிருந்தா சரி..." என்றவன் அவளை உள்ளே அழைத்துச் சென்றான்.

"ஆமாம் யார் வீடு இது...?"

"ஹேய் மக்கு... இது நம்மளோடது..." அவளின் தலையில் செல்லமாய் முட்டியபடி சொல்லியவன்... அவளின் முகம் இருள்வதைக் கண்டு முகம் சுருங்கினான்.

"பேபி..." அவளின் முகத்தை நிமிர்த்தியவனின் கண்ணில் அவளின் கலங்கிய கண்கள் பட...

"என்னதிது பேபி... இன்னைக்குத் தான் நீ என் கூடச் சந்தோசமா சிரிச்சு பேசியிருக்கன்னு நான் நிம்மதியடைஞ்சேன்... ஆனா நீ கண் கலங்கிட்டு... ச்சு... என்ன பேபி...?"

"இங்கே நீங்க பெண்களோட..." அதுக்கு மேலே பேச முடியாமல் அவள் கண்ணிலிருந்து கண்ணீர் கரகரவென வழிந்தது. அவளின் கண்ணீருக்கான காரணம் தெரிந்ததும் அவனுக்கு ஐய்யோ என்றிருந்தது.

"இல்லடா... இது உனக்காக மட்டுமே வாங்கியது... நான் உன்னைத் தவிர எந்தப் பெண்ணையும் இங்கே அழைச்சிட்டு வந்ததில்லை... உன் மேல ப்ராமிஸ் பேபி..." என்றவனை நிமிர்ந்து பார்த்தவளின் கண்ணீர் அப்போதும் நிற்கவில்லை.

"இன்னமும் நீ என்னை நம்பல தானே... ஓகே... என் மேல ப்ராமிஸா சொல்றேன்..." என்றவன் தன் தலை மீது கை வைக்கப் போகும் போது... அவளின் கை தானாக எழும்பி அவனின் கையைத் தடுத்தது. அவள் தலை வேண்டாம் என்பது போல் இடமும் வலமுமாய் ஆடியது. தன் மீதான அவளின் அக்கறை கண்டு அவன் மனம் நெகிழ்ந்தது.

"என் மேல இவ்வளவு லவ் இருக்கில்ல... அப்புறம் எதுக்குடி... இந்தக் கோபம்... இந்த வருத்தமெல்லாம்... ஒண்ண மட்டும் நியாபகம் வச்சுக்கோ... இந்தக் கதிர் மனசுல நீ மட்டும் தான் பேபி..." என்றவன் அவளை அங்கிருந்த சோபாவில் அமர வைத்து, அவள் முன்

மண்டியிட்டவன் அவளின் இரு கையையும் பிடித்துக் கொண்டு,

"ஐ லவ் யூ பேபி..." ஆத்மார்த்தமாய்ச் சொல்லியவன் கையோடு கொண்டு வந்திருந்த நகைப்பெட்டியில் இருந்து மோதிரத்தை அவளின் வலது கை விரலில் அணிவித்தவன் அதைப் பற்றி அழுந்த முத்தமிட்டான். அதில் அவளின் உடலில் ஓடிய சிலிர்ப்பில் அவனின் மனம் கர்வம் கொண்டது. தன் அருகாமையில் மட்டும் பொங்கியெழும் அவளின் உணர்வுகளை அறிந்தவனின் முகத்தில் பழையபடி சந்தோசமும், குறும்பும் மீண்டது.

அதே மகிழ்வுடன் கழுத்தணியைக் கையில் எடுத்து அவளின் கழுத்தில் வைத்து அணிவிக்கப் போனவனின் கையைத் தடுத்தவள், "இது எதுக்கு இப்போ...? வேணாமே..."

"ஷ்... இன்னைக்கு நான் சந்தோசமாய் இருக்கேன்... என் சந்தோசத்தை அனுபவிக்க விடு..." என்றவன் அவளின் இடது தோள் வழியாகக் குனிந்தவன் கையிலிருந்த நகையை மாட்டிவிட்ட பின்பே நிமிர்ந்தான். அவனின் செயலில் அவள் தான் செங்கொழுந்தாய் மாறியிருந்தாள். அதை ரசனையுடன் பார்த்தவன் அவளின் கன்னம் வருடி,

"இதே போல் நீ எப்பவும் சந்தோசமா இருக்கணும்... கண்டதையும் நினைச்சுக் கவலைப்படக் கூடாது என்ன...?" அவனின் குரலில் வசிய மருந்து ஏதும் தடவியிருந்தானோ... அவளையும் அறியாமல் அவளின் தலை மகுடிக்கு மயங்கும் பாம்பு போல் ஆடியது.

"பேபி... எனக்கு ஏதும் கிடையாதா..." ஏக்க குரலில் கேட்டவனைக் கண்டு அவள் திடுக்கிட்டு பார்க்க...

"உனக்குக் கொடுக்கத் தயக்கமாயிருந்தா... நானே எடுத்துக்கவா...?" என்றவனை 'அடப்பாவி' என்பது போல் பார்த்தவளின் இதழை சற்றும் தாமதிக்காமல் சிறை செய்தான் கணவன் என்னும் அந்தக் கள்வன். அவன்

கள்வன் என்று தெரிந்த போதும் அவனிடம் மயங்க தான் செய்தது அந்தப் பேதை நெஞ்சம்.

****

"இன்னும் நாலஞ்சு இடம் காண்பிக்கிறேன்... உங்களுக்குப் பிடிச்சியிருந்தா சொல்லுங்க... முடிச்சிரலாம்..." கதிரின் பேச்சில் கவனமில்லாமல் அவனின் உருவத்தை நெஞ்சில் நிரப்பிக் கொண்டிருந்த சந்தனா,

"ம்... முடிக்கணும்ன்னு தான் நினைக்கிறேன்... ஆனால் முடிக்க முடியலையே..." மனதுக்குள் சொல்வதாய் நினைத்து வாய்விட்டு சொல்லிவிட்டாள்.

"என்ன சொன்னீங்க...?" கதிர் புரியாமல் கேட்க,

"இல்ல... இடத்தை முடிக்கணும்ன்னு தான் நினைக்கிறேன்... ஆனா மனசுக்கு பிடிச்ச மாதிரி அமைய மாட்டேங்குதே... அதைச் சொன்னேன்..." தன்னைச் சமாளித்துக் கொண்டு அவள் மழுப்ப...

"ஓ..." என்றவன் தன் கண்களைச் சிக்னல் மீது பதித்தான். அவனும், அவளும் சேர்ந்து மருத்துவமனை கட்டுவதற்காக நல்ல இடத்தைத் தேடி கொண்டிருக்கின்றனர். எதைக் காண்பித்தாலும் பிடிக்கவில்லை... பிடிக்கவில்லை என்று கூறி சந்தனா அவனை அலைக்கழித்துக் கொண்டிருந்தாள். அப்படியாவது அவனுடன் தான் செலவழிக்கும் நேரத்தை அவள் நீட்டிக்க விரும்பினாள். அதையறியாத கதிர் அவளுடன் அலைந்து கொண்டிருந்தான்.

அப்போது ஒரு சிறுமி ஒருத்தி பிச்சை கேட்டுச் சந்தனா பக்கமிருந்த கண்ணாடியை தட்ட, "ஐய்யோ... பாவம்..." என்றவள் அந்தச் சிறுமிக்குப் பிச்சை போடுவதற்காகக் கண்ணாடியை கீழேயிறக்கி காசை கொடுக்க... நன்றி சொல்லி அதை வாங்கிய சிறுமி அருகிலிருந்த காரை நோக்கி சென்றாள்.

அந்தச் சிறுமியின் நடவடிக்கையை அசுவாரசியமாய்ப் பார்த்து கொண்டிருந்தவனின் கண்ணில் பக்கத்திலிருந்த காரின் ஓட்டுநர் இருக்கையில் அமர்ந்திருந்த மதியை கண்டதும் அவனுக்குத் தூக்கிவாரி போட்டது. அவன் சந்தனாவோடு தொழில் நிமித்தமாய் அலைவதால் அவளுக்கு என்று ஒரு காரை வாங்கிக் கொடுத்து... அவளின் வேலைகளை அவளே பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டான்.

மதி அவனையும், சந்தனாவையும் மாறி மாறி பார்த்தவள் ஒரு உணர்வற்ற பார்வையை அவன் புறம் செலுத்தினாள். அந்தப் பார்வையில் அவன் உயிரோடு மரித்துப் போனான். அவன் பார்த்துக் கொண்டிருக்கும் போதே சிக்னல் விழுந்துவிட மதி காரை விருட்டென்று கிளப்பிக் கொண்டு போய்விட அவன் அப்படியே ஸ்தம்பித்தான்.

"கதிர்... காரை எடுங்க..." சந்தனாவின் குரலில் தன்னினைவு களைந்தவன் காரை கிளப்பினான். அதன்பின் சந்தனா பேசியது எதுவும் அவன் காதில் விழவில்லை. அவன் மனம் மதியிடத்தில் மாட்டி சிக்கி தவித்துக் கொண்டிருந்தது.

"கதிர் பசிக்குது... சாப்பிட்டுட்டு வேலையைப் பார்க்கலாமா...?" சந்தனாவின் விருப்பத்திற்கேற்ப ஐந்து நட்சத்திர விடுதி ஒன்றின் முன் காரை நிறுத்தியவன் அவளை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றான்.

உணவை அளந்து கொண்டிருந்த சந்தனா, "கதிர்... நான் உங்க கிட்ட ஒரு விசயம் சொல்லணும்..." அவள் பீடிகை போட...

"ம்... சொல்லுங்க..." என்றவன் உணவில் கவனமாயிருக்க...

"கதிர்... ஐ லவ் யூ கதிர்..." அவளின் பேச்சில் அதிர்ந்து போனவனுக்கு அடுத்த நொடி புரையேறியது. ஒருவேளை மதி அவனை நினைக்கிறளோ...??????

கண்ணனாய் இருந்தவன் ராமனாய் மாறி பல
யுகங்களாகிவிட்டதடி...
மீண்டும் தசரதனாய் என்னை மாற்றிவிடாதடி
பெண்ணே...!
ஒரு சொல்... ஒரு செயல்... ஒரு நினைவு...
ஒரு உயிர்... ஒரு மனம்... ஒரு காதல்...
எல்லாம் அவள் ஒருத்தி மட்டும் தானடி...!!!

நாளை : 25

கதிர் புரையேறி சிரமப்படுவதைக் கண்ட சந்தனா தன் கையைக் கொண்டு அவனின் தலையில் தட்ட போக... கதிர் அவள் கைக்கு அகப்படாமல் லாவகமாய் விலகியவன் அருகிலிருந்த நீரை எடுத்து பருகி தன்னைச் சரி செய்து கொண்டு அவளை நிமிர்ந்து பார்த்தான். பின்பு என்ன நினைத்தானோ வாய்விட்டு சிரித்தவன்,

"என்னைப் பார்த்தா என்ன எலிஜிபில் பேச்சிலர் மாதிரியா தெரியுது...? உங்க கண்ணுக்கு நான் அப்படித் தெரிஞ்சேன்னா அதுக்குக் காரணம் என் மனைவி எனக்குக் கொடுக்கும் சந்தோசம், காதல், நிம்மதி தான். எஸ்... எனக்குக் கல்யாணமாகி ஒரு வருசத்துக்கும் மேலாகிருச்சு... என் மனைவி பெயர் மதி..." மனைவி பெயரை அவன் சொல்லும் போதே அவன் கண்ணில் எல்லையற்ற காதல் வழிந்தது. அதைக் கண்டு சந்தனாவின் உள்ளம் வலித்தது. என்ன தான் பார்த்தவுடன் வந்த காதலென்றாலும் அவளும் ஒரு பெண் தானே... நொடியில் தன்னைச் சமாளித்துக் கொண்டு,

"சாரி மிஸ்டர். கதிர்... உங்களுக்குக் கல்யாணமான விசயம் எனக்குத் தெரியாது... ஐம் ரியலி சாரி... இனி இந்த மாதிரி பேச்சு நம்மிடையே வராது..." உண்மையான வருத்தத்துடன் சொல்லியவளை பார்த்து,

"ஓகே... லீவிட்..." என்றதோடு முடித்துக் கொண்டவன்... அந்த விடுதியில் சொல்லி காரை வரவழைத்தவன் அதில் அவளை ஏற்றிவிட்டு,

"எனக்கு முக்கியமான வேலையிருக்கு..." என்க... அவள் சரியென்பது போல் தலையாட்டியவள் கிளம்பி செல்ல... அடுத்த நொடி அவன் தன் காருக்குள் பாய்ந்தான். காரை கிளப்பும் முன் அவனின் கைகள் அலைப்பேசியை எடுத்து மதிக்கு அழைத்தது. அவள் எடுக்க மாட்டாளோ என்று மனதில் பயந்து கொண்டிருந்தவனின் நினைவுக்கு

மாறாய் ஒரே அழைப்பில் அவள் எடுத்தாள். அதில் மனம் நிம்மதியடைந்தவன்,

"பேபி என் மேல் கோபம் எல்லாம் இல்லையே..."

"இல்லை..." அவனும் ஏன் என்று சொல்லவில்லை... அவளும் ஏன் என்று கேட்கவில்லை.

"நான் உன்னை இப்பவே பார்க்கணும்... நான் அங்கே வரவா...?"

"வேணாம்... இன்னைக்கு வேலை அதிகமாயிருக்கு... நைட் பார்க்கலாம்..." என்று மறுத்தவளை வற்புறுத்த அவனுக்கும் விருப்பமில்லை. ஏனெனில் அவனுக்கும் நிறைய வேலைகள் காத்திருந்தது. சந்தனாவுடன் வெளியில் அலைந்ததில் அவனின் வேலைகளும் தேங்கி நின்றது.

"ஓகே..." என்றவன் அலைப்பேசியை வைக்கும் முன், "ஐ லவ் யூ பேபி..." அலைப்பேசி வாயிலாக அழுத்தமாய் முத்தமிட... அவளிடமிருந்து எந்தவித பதிலும் வரவில்லை.

"பேபி... என்ன சத்தத்தைக் காணோம்...?" அவனின் குரல் மென்மையாய் ஒலித்தது.

"ஒண்ணுமில்லை... நான் வைக்கிறேன்..." என்றவள் அவனின் பதிலுக்குக் காத்திராமல் வைத்துவிட...

"வெட்கமாக்கும்... ம்..." அலைப்பேசியைப் பார்த்து காதலோடு சொன்னவன், "எனக்குத் தெரியும் பேபி... எப்பவும் நீ என்னைச் சந்தேகப்பட மாட்டேன்னு..." மனதில் எழுந்த உற்சாகத்துடன் காரை கிளப்பினான்.

சிக்னலில் மதியை கண்டதும் அவன் பயந்து தான் போனான். ஏற்கெனவே அவனின் தகாத பழக்கத்தால் அவளை இழந்தவன்... மறுபடியும் சந்தனாவோடு தன்னைப் பார்த்த மதி தன்னை வெறுத்துவிடுவாளோ என்று மனதுக்குள் பயந்து தான் போனான். அந்தக் கணமே அவளிடம் பேசி தன் நிலையை விளக்கி சொல்ல

வேண்டுமென்று அவன் மனம் துடித்தது. அதற்குள் சந்தனா பசிக்குது என்று சொல்லவும்... தன் நினைவை ஓரம் தள்ளி வைத்துவிட்டு அவளை உணவு விடுதிக்கு அழைத்துச் சென்றான். ஏனெனில் அவளுக்குச் சென்னை பழக்கமில்லாத ஊர்... அவளின் தந்தை வேறு அவனை நம்பி இங்கே விட்டு விட்டுச் சென்றிருக்கிறார். அதிலும் இளம்பெண்ணான அவளை எப்படியும் போ என்று அப்படியே விட்டு செல்ல அவனுக்கும் மனமில்லை. ஆனாலும் அவனின் மனம் ஒவ்வொரு நொடியும் மதியை தான் நினைத்துக் கொண்டிருந்தது.

மதியை நினைத்து கொண்டிருந்தவன் மனம் சந்தனாவிடம் வந்து நின்றது. முதலில் அவள் தன் காதலை சொன்னதும் கொஞ்சம் அதிர்ந்தாலும்... பின் தன்னைச் சமாளித்துக் கொண்டான். அவளிடம் தனக்குக் கல்யாணமாகி விட்டதைக் கடுமையாகச் சொல்லி அவளை எச்சரிக்கலாம் என்று நினைத்தவன் பின் அதைக் கைவிட்டு நகைச்சுவை பாணியில் அவள் காதலை மறுத்தவன் தனக்குத் திருமணமான விசயத்தை அவள் மனம் வலிக்காமல் சொல்லிவிட்டான். அதை அவள் அப்படியே ஏற்றுக் கொண்டது அவனுக்கு ஆச்சரியம் தான்... அந்த மட்டும் அவள் தன்னைப் புரிந்து கொண்டு விலகி போனாளே என்று மனதுக்குள் நிம்மதியாய் உணர்ந்தான்.

அவன் மனம் மீண்டும் தன்னவளிடமே வந்து நின்றது... தான் பிடிக்கவில்லை என்று சொல்லியும், தகாத வார்த்தைகள் (இதை நினைக்கும் போது அவனின் முகம் வேதனையைப் பிரதிபலித்தது) பேசிய போதும் தன்னை நினைத்து வாழும் தன் மனைவியை எண்ணி அவன் நெஞ்சம் பெருமிதத்தில் விம்மியது.

"உன்னை அடையறதுக்கு எந்த ஜென்மத்திலோ நான் என்ன புண்ணியம் பண்ணினேனோ தெரியல பேபி... ஐ லவ் யூ பேபி..." வாய்விட்டு சொன்னவன் மகிழ்ச்சியோடு அலுவலகம் நோக்கி பயணமானான்.

சந்தனா தனது வீட்டிற்கு வந்ததும் நேரே சென்று முடங்கிய இடம் அவளது படுக்கையறை. ஏனோ தெரியவில்லை அவளுக்கென்று யாருமில்லாத ஒருவித தனிமை உணர்வு வாட்டி வதைத்தது. அவள் எதை விரும்பினாலும் ஏன் எதற்கு என்று கேள்வி கேட்காமல் வாங்கிக் கொடுக்கும் பெற்றோர்கள், கை சொடக்கினால் விரைந்து வந்து பணிவிடை செய்யும் வேலைக்கார்கள், நினைத்ததை நினைத்த நேரத்தில் வாங்குமளவுக்குக் கொழுத்த பணம் என எல்லாமிருந்தும் அவளின் மனதில் எல்லையில்லா துக்கம் நிரம்பி வழிந்தது. தன்னை நினைத்து மனம் குமைந்தவள் அந்தத் துக்கத்தை எல்லாம் கண்ணீராய் வெளியேற்றினாள்.

'யாரிடமும் மயங்காத என் மனம் ஏன் இந்தக் கதிரை கண்டதும் மயங்கியது? ஏன்... ஏன்... ஏன்...???' கேள்விகள் மனதில் படையெடுத்த போதும் அதற்கான பதில் அவளிடத்தில் இல்லை. வாழ்க்கையில் நாம் செய்யும் கிறுக்குத்தனங்களில் இந்தக் காதலும் ஒன்று. சிலருக்கு அந்தக் கிறுக்குத்தனம் அழகானதாய் உருமாறி அவர்களின் வாழ்க்கையை வண்ணமயமாக்கி விடும். ஒரு சிலருக்கு மட்டும் அது அவர்களையே கிறுக்கு பிடிக்க வைத்துவிடும். சந்தனா இப்போது அந்த ஒரு சிலரின் மனநிலையில் இருந்தாள். வெகுநேரம் அழுதவள் ஒரு முடிவுடன் தன் அழுத விழிகளை அழுந்த துடைத்தாள்.

'ச்சீ... ச்சீ... இந்த அற்ப காதலுக்கா இவ்வளவு நேரம் அழுதேன்...?' தன்னைக் குறித்து அவளுக்கே வெட்கமாகி போய்விட்டது.

'இப்போ என்ன நடந்து போச்சுன்னு இப்படி அழணும்...? இந்த உலகத்தில் கதிர் மட்டும் தான் ஆண் மகனா... வேறு ஆண்களே இல்லையா என்ன? எனக்கென்று ஒருவன் இனிமேலா பிறக்க போகிறான்? வேறு எங்கேயாவது பிறந்திருப்பான்... என்னைச் சேரும் நேரம் வரும் போது என்னைத் தேடி வருவான்... யாரை மாதிரியிருப்பான்...? என் மேல் உயிரையே வைத்திருப்பானா...? அந்தக் கதிர் அவனின் மனைவி பத்தி பேசும் போது கண்ணில் காதல்

வழிந்ததே அது போல் கண்ணில் காதல் வழிய என்னை நேசிப்பானா...?' முதலில் தெளிவாய் யோசித்த அவளின் மனம் மீண்டும் கதிரிடத்தில் வந்து நின்றதும் அவள் நொந்தே போய்விட்டாள்.

'என்னதிது... ஏற்கெனவே திருமணமான ஒருவனை நேசிக்குமளவுக்கு நான் என்ன தரங்கெட்டவளா... இல்லை டிவி நாடகத்தில் வரும் சீரியல் வில்லியா...? கதிரிடமிருந்து அவன் மனைவியைப் பிரித்து அவனை அடையுமளவுக்கு நான் என்ன மோசமான பெண்ணா...? ச்சே... ச்சே... நினைக்கவே அருவருப்பாய் இருக்கு... இனி கதிரை பத்தி நினைக்கக் கூடாது... முடிஞ்சா இந்த வேலையை எவ்வளவு சீக்கிரம் முடிக்கிறோமோ... அவ்வளவு சீக்கிரம் முடித்துவிட்டு ஊரை பார்க்க கிளம்பி போயிறணும்...' மனதில் தீர்க்கமாய் முடிவெடுத்த பின்னரே அவளால் நிம்மதியாய் இருக்க முடிந்தது.

இரவு வேலை முடிந்து வந்த கதிரை அவனின் மனைவி மதி அவனுக்கு முன்னரே வந்து அவனை வரவேற்பது போல் வரவேற்பறையில் அமர்ந்திருந்ததைக் கண்டு அவன் மனம் மகிழ்ந்தது. அவனின் வருகையை உணர்ந்தவளாய் அவனைக் கண்டதும் அவள் எழுந்து நிற்க... அவளின் தோள் பற்றிச் சோபாவில் அமர வைத்தவன் தானும் அவளருகில் அமர்ந்து கொண்டு, அவளின் கையைப் பற்றியவாறு,

"பேபி... இன்னைக்குக் காலையில..." அவன் பேச தொடங்கும் போதே...

"சாப்பிடலாமா...?" அவளின் கேள்வியில் தான் பேச வந்ததை மறந்தவனாய்...

"ஹேய்... நீ இன்னும் சாப்பிடலையா...?" அவனின் கேள்விக்கு ஆம் என்பது போல் தலையசைத்தவளை கண்டு,

"உனக்குப் பசிச்சா நீ சாப்பிடணும்... என்னை எதிர்பார்த்திட்டு இருக்கக் கூடாது..." என்றவன், "ஒன்

மினிட்..." சொல்லிவிட்டுத் தங்கள் அறைக்கு விரைய... போகும் அவனின் முதுகை வெறுத்து பார்த்து கொண்டிருந்தாள் அவள்.

இரவு உணவை முடித்து விட்டு வந்ததும் அவளைப் பிடித்துக் கட்டிலில் அமர வைத்தவன், "பேபி... காலையில் என்னை ஒரு பொண்ணுடன் பார்த்ததும் உனக்குக் கோபம் வந்திருக்கணும்... அது நியாயமும் கூட... ஏன்னா நான் அந்த மாதிரிப்பட்டவன் தானே..." என்றவனின் வாய் மேல் கை வைத்து அவன் பேசுவதைத் தடை செய்தவள்,

"நான் உங்களைச் சந்தேகப்பட்டேன்னு யார் சொன்னது? நான் சொன்னேன்னா...?" அவன் முகம் பார்த்து அவள் சொல்ல... அதைக் கேட்டு அவன் முகம் மலர்ந்தது. தன் உதட்டின் மீதிருந்த அவளின் கையில் முத்தமிட்டவன் அவளின் கையை எடுத்து தன் நெஞ்சோடு வைத்துக் கொண்டான்.

"தேங்க்ஸ் பேபி..." அவனின் கண்கள் கலங்கியிருந்தது. "என்னை மாதிரி ஒருத்தனை நம்பறது நீ ஒருத்தியா தான் இருக்கணும்... ஐயம் சோ லக்கி..." என்றவன், "நீ கேட்காதது உன்னுடைய பெருந்தன்மையா இருக்கலாம்... ஆனா என்னால் சொல்லாமல் இருக்க முடியாது" என்றவன் சந்தனாவை பற்றி முழுவதும் சொல்லி முடித்தான்... அவள் தன்னிடத்தில் காதல் சொன்னது உட்பட...

"எனக்கு வந்த ஆத்திரத்தில் அவளைச் சப்பு சப்புன்னு நாலு அறை விடணும் போலிருந்தது. எதுக்குத் தேவையில்லாத பிரச்சினைன்னு சும்மா விட்டுட்டேன்... அதிலயும் அவள் சின்னப் பெண் வேற... அதான் சிரிச்சிட்டே எனக்குக் கல்யாணமாகிருச்சு... என்னைக் காதலிக்க என் காதல் மனைவி இருக்கிறாள்ன்னு எடுத்து சொல்லிட்டு வந்தேன்... நான் பேசியது சரிதானே பேபி..." அத்தனையையும் அமைதியாய் கேட்டுக் கொண்டிருந்த மதி ஒன்றே ஒன்று மட்டும் கேட்டாள்.

"ரொம்ப அழகாயிருக்காயில்ல..." என்றவளை கூர்ந்து பார்த்தவன்,

"யாரை சொல்ற... அந்தச் சந்தனாவையா...?"

"ம்..."

"உன்னை விடவா அழகு...? அந்தச் சந்தனா என்ன... அந்தத் தேவலோக அழகிகள் கூட அழகில் உன்னை விட மட்டம் தான்..." என்றவனை நிமிர்ந்து பார்த்தவள் அவனின் கண்ணில் ததும்பிய காதலில் கட்டுண்டாள்.

"என்ன...?" தன்னைப் பார்த்து வினவியவனின் கழுத்தில் தன் கரங்களை மாலையாகக் கோர்த்தவள் அவனின் முகத்தைத் தன் முகம் நோக்கி இழுத்தாள்.

"ஹேய் பேபி..." கிறங்கி ஒலித்தது அவனது குரல். அதன் பிறகு அவனின் வாயிலிலிருந்து வார்த்தைகள் வெளிவரவில்லை. ஆம்... தன் இதழ் கொண்டு அவனது இதழை மூடியவள் முதன்முறையாக இவ்வளவு நாள் அவன் தனக்குச் சொல்லி கொடுத்த பாடத்தை அவனுக்கே திருப்பிக் கற்பிக்க ஆரம்பித்தாள். ஏற்கெனவே அவளிடத்தில் மயங்கி சிக்கி தவிக்கும் அவன்... அவளது இந்தச் செயலில் கள்ளுண்ட வண்டாய் அவளில் மூழ்கினான்.

"என் பேபிக்கு என்னாச்சு...? புதுசா தெரியறா... புதுசு புதுசா நடந்துக்கறா... என்னடி ஆச்சு உனக்கு...?" தன் ஆள்காட்டி விரலால் அவளின் நெற்றியிலிருந்து கோலம் போட்டு வந்தவன் அவளின் இதழின் மேல் தங்கி அங்கேயே கோலம் போட்டுக் கொண்டிருக்க... அவளோ அவனை இமைக்காமல் பார்த்தாள்.

"பார்வையும் புதுசாயிருக்கு... ம்..." என்றவனை இழுத்து அணைத்தவளின் கைகளில் வாகாய் அடங்கியவன்,

"ஆனா எனக்கு இதெல்லாம் பிடிச்சியிருக்கு பேபி... இந்த மதி பேபியை ரொம்ப... ரொம்பப் பிடிச்சியிருக்கு..." என்றவன் தன் காதலை அவளுக்கு உணர்த்த

ஆரம்பித்தான். என்றுமில்லாத அதிசயமாய் அவனை நாடிய மதியின் இந்தக் காதல் பித்துக் கூட அவனுக்குப் பிடித்துத் தான் இருந்தது. அவன் ஆசைப்பட்டதும் அதைத் தானே...

மறுநாள் விடிந்த போதும் அவளை விடவே மனமில்லாமல் விட்டவனைக் கண்டு அவள் மனம் பொறுக்காமல் அவனின் நெஞ்சில் தஞ்சம் புக... அவனுக்குக் கேட்கவா வேண்டும்... அவளை அள்ளியெடுத்து கொண்டவன் தான் நினைத்ததைச் சாதித்த பின்னரே அவளை விடுவித்தான். அந்நேரம் பார்த்து அவனின் அலைப்பேசி அழைக்க எடுத்து பேசியவன் முகம் யோசனையாய்ச் சுருங்கியது. அவள் என்னவென்பது போல் பார்க்க...

"அந்தச் சந்தனா தான்... இன்னைக்கு இடம் பார்க்க வர முடியாது... நாளைக்கு வர்றேன்னு சொன்னா... அவளுக்குன்னு இன்னைக்கு நேரத்தை ஒதுக்கியிருந்தேன்... அதான் யோசிச்சிட்டு இருக்கேன்..." என்றவன் தன்னைப் பார்த்துக் கொண்டிருந்த மனைவியைப் பார்த்து அவளின் கன்னம் தட்டி, "சரி வேற வேலையைப் பார்க்க வேண்டியது தான்..." சொல்லியவாறு அவன் குளியலறைக்குள் புக... அவள் ஒரு முடிவுடன் அவனின் அலைப்பேசியை எடுத்து சந்தனாவின் அலைப்பேசி எண்ணை தனது அலைப்பேசியில் பதிந்து கொண்டாள். அந்த நேரம் அவளின் முகம் எல்லையில்லா துயரத்தை பிரதிபலித்தது.

"ஐ லவ் யூ பாவா..." முணுமுணுத்தவளின் கண்கள் கண்ணீரை சொரிந்தது. குளியலறை கதவு திறக்கும் சத்தம் கேட்டு... அவசரமாய்த் தன் கண்களைத் துடைத்து கொண்டவள் தானும் வேலைக்குக் கிளம்பத் தயாரானாள்.

"இன்னைக்கு நானே உன்னை ட்ராப் பண்றேன்" என்றவனை அவள் மறுக்கவில்லை.

நகைக்கடையின் முன் இறக்கிவிடப் போன கதிரை பார்த்து மதி, "அண்டர் கிரவுண்ட் கார் பார்க்கிங்கில் இறக்கி விட முடியுமா...?" சில சமயம் அவள் கடையின்

பின்புறமாக இருக்கும் வழியின் மூலம் கடைக்குச் செல்வாள்... அதனால் அவனும் அவளைத் தவறாக எடுத்துக் கொள்ளாமல் அங்கே சென்று காரை நிறுத்தினான். அவள் இறங்கு முன் அவனின் முகத்தை ஆசையுடன் பார்த்தவள்,

"பாவா..." அவளின் அழைப்பில் அவனின் உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை ஒருவித சிலிர்ப்பு எழ...

"என்ன பேபி... சொல்லு..." அவளின் காதோரம் வழிந்த முடிக்கற்றையை விலக்கி விட்டவனின் கைகள் அவளின் கன்னத்தில் தங்க... அதைத் தன் கன்னத்தோடு வைத்து கொண்டவள்... ஏக்கமாய் அவனைப் பார்த்தாள். அவளின் பார்வை அவனின் உயிருக்குள் ஊடுறுவ...

"ஹேய்... என்ன பேபி இது... இப்படியெல்லாம் பார்த்தா என்னால் தாங்க முடியாது..." என்றவனின் குரல் கரகரத்தது. அவள் பதில் பேசாமல் அவனின் முகத்தைத் தன் இரு கரங்களில் தாங்கி அவன் முகம் முழுவதும் அவனுக்குப் பிடித்தமான பரிசு மழையைப் பொழிந்தாள்.

'ஐ லவ் யூ பாவா... என்னை மன்னிச்சிடுங்க பாவா...' என்று ஒவ்வொரு முத்தத்துக்கும் அவனிடம் மானசீகமாய்ச் சொல்லி கொண்டாள். அவள் மனதுக்குள் சொல்லியது... பாவம் அவனுக்குக் கேட்கவில்லை.

"ஹேய்... இது பப்ளிக் ப்ளேஸ்டி..." என்றவனின் கண்கள் சுற்றுப்புறத்தை அவசரமாய் ஆராய்ந்தது. நல்லவேளை அங்கே அவர்களைத் தவிர யாருமில்லை. அதில் சற்று நிம்மதியுற்றவனின் இதழில் எதிர்பாராத விதமாய் அவள் தனது அடுத்தத் தாக்குதலை நடத்த... அதில் அவன் நிலைக்குலைந்து விடாமல் அவளோடு சேர்ந்து ஒத்துழைத்தான். நீண்ட நேரம் கழித்து அவர்கள் விடுபட்ட போது இருவருக்குமே மூச்சிரைத்தது. ஏனோ அந்த நொடி இருவரின் மனமும் நிறைந்திருந்தது.

"நான் கிளம்பறேன்..." தன் கைப்பையை எடுத்துக் கொண்டு இறங்கியவளை அவன் புன்னகையுடன்

பார்த்துக் கொண்டிருக்க... பின் ஏதோ நினைத்தவளாய் அவன் பக்கம் வந்து நின்றவள்,

"நைட் நான் வர லேட்டாகும்... அதனால நீங்க வீட்டுக்கு போங்க... வேலை முடிஞ்சி நானே வந்திருவேன்..." என்றவளை இடைமறித்தவன்,

"எவ்வளவு நேரமானாலும் நான் வெய்ட் பண்ணி கூட்டிட்டு போறேன்... நீ தனியா வர வேணாம்... என்ன?" என்றவனைப் புரியாத பார்வை ஒன்றை பார்த்து வைத்தவள்,

"நேரா நேரத்துக்குச் சாப்பிடுங்க... உடம்பை பத்திரமா பார்த்துக்கோங்க..." என்றவளை பார்த்துக் குறும்பு சிரிப்புடன்,

"சரிங்க மேடம்... வேற ஏதாவது இருக்கா...?" போலி பணிவுடன் கிண்டலாய் கேட்க... இல்லையென்பது போல் தலையசைத்தவள் அவன் புறம் குனிந்து அவன் நெற்றியில் மென்மையாய் முத்தமிட்டு,

"வர்றேன்..." என்றவளை உன்னிப்பாய் பார்த்தவன்,

"இன்னைக்கு உனக்கு என்னமோ ஆச்சு பேபி... ஆனா இதுவும் எனக்கு ரொம்பப் பிடிச்சியிருக்கு பேபி... ஐ லவ் யூ பேபி..." அவளின் கையைப் பிடித்துச் சொல்லியவன் அதில் சிறு அழுத்தம் தந்து தன் மனதை அவளுக்கு உணர்த்தியவன் காரை கிளப்பிச் சென்றான்.

"மீ டூ பாவா... மீ டூ..." வாய்விட்டு சொன்னவளின் மனம் அவனின் காதலில் தடுமாற... அதில் அவளின் கால்களும் தடுமாறியது. தன்னைச் சமாளித்துக் கொண்டவள் கடையினுள் நுழைந்தாள். அங்குச் சிறிது நேரம் வேலை செய்தவள் ஒரு முடிவுடன் சந்தனாவின் எண்ணிற்கு அழைத்தாள்.

****

சந்தனா தன் முன் அமர்ந்திருந்த கதிரின் மனைவியைத் தன் பார்வையால் அளந்து கொண்டிருந்தாள். மாநிறமாய், கண்களைச் சுற்றி கருவளையம் விழுந்து, கூந்தலை மொத்தமாய்த் தூக்கி கொண்டை போட்டுச் சாதாரணத் தோற்ற பொழிவுக்கும் கீழிருந்த மதியை கண்டு சந்தனா திகைத்து தான் போனாள். ஏனெனில் கதிரின் கம்பீரம், அழகு கண்டு அவனின் மனைவி அவனை விட அழகியாய் இருக்க வேண்டும் என்றெண்ணியவள் மனதுக்குள் ஒரு கற்பனையான உருவத்தை உருவகித்து வைத்திருந்தாள். ஆனால் அந்தக் கற்பனைக்கும்... இந்த நிஜத்திற்கும் தான் எத்தனை வேறுபாடு. மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேறுபாடு... இந்தப் பெண்ணிடத்திலா கதிர் அவ்வளவு காதலை வைத்திருக்கிறான்...? என்ன முயன்றும் அவள் மனதில் ஏமாற்றம் கவிழ்வதைத் தடுக்க முடியவில்லை.

அவளுக்கெங்கே மதியின் அழகை பற்றித் தெரிந்திருக்கப் போகிறது. இந்த ஒரு வருட காலமாய் ஆதர்ஷ் இறந்த துக்கம், கதிரின் நடவடிக்கை கொடுத்த துன்பம் என்று தன் தோற்றப் பொழிவை பற்றிக் கூடக் கவலைப்படாதவளாய் தன் மனக்கவலையில் அவள் ஆழ்ந்திருந்தாள். அதிலும் கதிருடனான இந்த வாழ்க்கையில் அவளின் மனம் குற்றவுணர்ச்சியில் தவிக்க... அவள் இன்னமும் தனக்குள் ஒடுங்கி போனாள். இதில் அவள் எங்கே தன் அழகை பற்றிச் சிந்திக்கப் போகிறாள். மொத்தத்தில் கவனிப்பாரற்று கிடக்கும் குத்துவிளக்கு போல் நிறம் மங்கி காணப்பட்டாள்.

மதியோ தான் பேச வந்த விசயத்தை எப்படி ஆரம்பிப்பது என்று குழம்பி போய்த் தவித்திருந்தாள். இருந்தாலும் தான் பேச வேண்டியதை பேசி தானாக வேண்டும் என்று நினைத்தவள் தொண்டையைச் செறுமி கொண்டு,

"நீங்க கதிரை ரொம்பக் காதலிக்கிறீங்களோ...?" அவளின் கேள்வியில் சந்தனாவுக்கு வியர்த்து வழிந்தது. மதி ஏதும் தன்னிடம் சண்டை போட வந்திருப்பாளோ என்று மனதுக்குள் பயந்து போனாள். இந்தக் கதிர் இப்படியா

உண்மையைச் சொல்லி தன் மானத்தை வாங்க வேண்டும் என்று அவனை மனதுக்குள் திட்டி தீர்த்தாள்.

"நீங்க அவரை விரும்பினால்... நீங்க அவரைக் கல்யாணம் பண்ணிக்கறதுல எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை..." மதியின் வார்த்தையில் சந்தனாவின் கண்கள் வியப்பில் அகல திறந்தது.

"என்ன சொல்றீங்க...?" சந்தனாவுக்குப் படபடப்பாய் இருந்தது.

"உங்க மனசில் என்ன நினைக்கிறீங்கன்னு எனக்குப் புரியுது... என்னடா கட்டிய மனைவியே இன்னொரு பெண்ணைப் பார்த்து என் கணவனைக் கல்யாணம் பண்ணிக்கோன்னு சொல்றாளேன்னு தானே பார்க்கறீங்க... எஸ்... கதிரோட மனைவி நான் தான் சொல்றேன்... நீங்க என்னை நம்பலாம்... எங்க கல்யாணம் நிர்பந்தத்தால் ஏற்பட்ட கல்யாணம்..." அவள் பேசும் போதே சந்தனா குறுக்கிட்டாள்.

"ஆனா அவர் உங்களை ரொம்பக் காதலிக்கிறார்..." அதைக் கேட்டதும் மதியின் முகம் மென்மையுற்றது.

"இருக்கலாம்... ஆனால் எனக்கு இந்த வாழ்க்கை மூச்சடைப்பது போலிருக்கு... இதிலிருந்து எனக்கு விடுதலை வேணும்... அது உங்க பதிலில் தான் இருக்கு..."

"நான் கதிரை காதலித்தேன் தான்... ஆனால் இன்னொருத்தி கணவனைக் காதலிக்கும் அளவுக்கு நான் ஈனப்பிறவி இல்லை..." தன் மனதை மதிக்கு எடுத்துரைத்தாள் அவள்.

"நான் தான் விலகிக்கிறேன் சொல்றேனே... என்னால உங்களுக்கிடையில் எந்தப் பிரச்சினையும் வராது... லீகலா எங்க கல்யாணம் பதிவு கூடச் செய்யப்படல... அதனால நீங்க பயப்படுறதுல எந்த அர்த்தமும் இல்லை... அதையெல்லாம் விட உங்களை அவருக்கு இரண்டாம்தாரம்ன்னு கூட யாரும் சொல்ல மாட்டாங்க...

ஏன்னா எங்க கல்யாணத்தைப் பத்தி யாருக்கும் எந்தவித அறிவிப்பும் கொடுக்கல..." நீளமாய்ப் பேசிய மதியின் வார்த்தைகளில் இருந்த உண்மை சந்தனாவின் காதல் மனதை தட்டி எழுப்ப...

"நீங்க சொல்றது உண்மைன்னா... நான் இதுக்குச் சம்மதிக்கிறேன்..." மகிழ்ச்சியாய் சந்தனா தன் சம்மதத்தை அளிக்க... மதி மன நிறைவுடன் எதையோ சாதித்துவிட்டது போன்ற உணர்வுடன் அவளிடமிருந்து விடைப்பெற்றாள். இரு பெண்களும் கதிரின் மனதை அறியாமல் தாங்களாகவே தங்களுக்குள் ஒரு முடிவுக்கு வந்திருந்தனர்.

சந்தனாவிற்கு மனம் வானத்தில் பறப்பது போல் உற்சாகமாய் இருந்தது. உடனே கதிரை சென்று பார்க்க வேண்டும் போலிருந்தது. ஆனால் புதுசாய் முளைத்த வெட்கம் அவளைச் செல்ல விடாமல் தடுத்து நிறுத்தியது. அதனால் அவனின் அலைப்பேசிக்கு அழைத்துப் பேச எண்ணினாள். அதே போல் அவனுக்கு அழைத்தவள் அவனின் குரலுக்காக ஆர்வமுடன் காத்திருந்தாள். மறுமுனையில் அவன் எடுத்ததும்...

"ஹலோ நான் சந்தனா பேசறேன்..." சந்தனாவின் குரலிலிருந்த குழைவில்... கதிர் தன் காதிலிருந்த அலைப்பேசியை எடுத்து ஒரு பார்வை பார்த்தவன் மீண்டும் அதைக் காதில் வைத்தான்.

"சொல்லுங்க சந்தனா..."

"என்னைப் பார்க்க உங்க வொய்ப் வந்திருந்தாங்க..." அதில் அவனின் காதுகள் கூர்மையடைந்தது.

"எதுக்கு வந்திருந்தா...?" அவனின் கேள்விக்குச் சந்தனா மதி வந்த விசயத்தைச் சொல்ல... அதில் கதிரின் முகம் ஆத்திரத்தில் சிவந்தது. அவனின் மனநிலை அறியாமல் அவள் பேசி கொண்டே போனாள்.

"இவ்வளவு சீக்கிரம் என் காதல் கை கூடும்ன்னு நான் நினைச்சு கூடப் பார்க்கல கதிர்..." என்றவளை பார்த்து, 'சரி தான் போடி... யாருக்கு வேணும் உன் காதல்...' என்று அவனுக்கு உரக்க கத்த வேண்டும் போலிருந்தது. ஆனால் முயன்று தன்னை அடக்கி கொண்டான். இவள் வெறும் அம்பு மட்டும் தான்... இந்த அம்பை எய்த வில் அவன் மனைவியன்றோ இதற்குக் காரணம்... அதனால் சந்தனாவிடம் எதுவும் பேசாமல்,

"நீங்க ஃபோனை வைங்க... நாம நேரில் பேசிக்கலாம்..." என்று அலைப்பேசியை வைத்தவன் மனம் எரிமலையாய் குமுறியது.

நேரே மதியின் நகைக்கடைக்கு வந்தவன் அங்கே அவள் இல்லாததை உணர்ந்து வீட்டிற்குச் சென்றான். அங்கேயும் அவளில்லை. அவளின் அலைப்பேசிக்கு அவன் அழைக்க முயல அது அணைத்து வைக்கப்பட்டிருந்தது. அவள் தன்னை விட்டு வெகு தொலைவு சென்று விட்டதைப் போன்ற உணர்வு தோன்ற... அதைத் தாங்க முடியாத அவன் மனதில் ஆத்திரமும், ஏமாற்றமும் போட்டி போட தன் கையிலிருந்த அலைப்பேசியைத் தரையில் வீசி எறிந்தான்.

"ரெண்டு பொம்பளைங்களும் சேர்ந்து என் வாழ்க்கையைக் கையில் எடுத்திட்டு விளையாட்டா காண்பிக்கிறீங்க...? நீங்க விளையாடுறதுக்கு நான் என்ன உயிரில்லாத பொம்மையா...? உயிருள்ள மனுசனடி... என் குணம் தெரியாம ரெண்டு பேரும் என்னைச் சீண்டிவிட்டுட்டீங்க... உங்க ரெண்டு பேருக்கும் இந்தக் கதிர் யாருன்னு காட்டல... நான் ஆம்பளையே இல்லைடி..." இருவரையும் நினைத்து ஆத்திரப்பட்டவனின் ஆத்திரம் எல்லாம் இப்போது தன் மனைவி மீது மட்டுமே திரும்பியது.

"தாலி கட்டியது நான்... உன் கூட வாழ விரும்புவது நான்... நீ போகச் சொன்னா 'சரிங்க மேடம்'ன்னு சொல்லிட்டு போறதுக்கு நான் என்ன வழிப்போக்கனா...? உன்

புருசன்டி.... உன் மேல் வைத்த காதலுக்காக உன்னிடத்தில் நான் கொஞ்சம் அடங்கிப் போனா... என்னைய கேனையன்னு நீ நினைச்சிட்ட இல்ல... இருடி என் அருமை பொண்டாட்டியே... முதல்ல அந்தச் சந்தனாவை கவனிச்சிட்டு வந்து உன்னைக் கவனிக்கிறேன்... பெரிய தியாகின்னு நினைப்போ...? போடி நீயும் உன் தியாகமும்..." கோபத்தில் என்ன செய்வது என்று தெரியாமல் பல்லை கடித்தான் அவன். அந்த இக்கட்டான நிலையிலும் அவளின் செயல் மீது தான் அவன் கோபம் கொண்டானே தவிர... அவளின் காதல் மீது சந்தேகமோ, கோபமோ கொள்ளவில்லை. அந்தளவு அவன் மீதான அவளின் காதலின் மேல் அவனுக்கு நம்பிக்கையிருந்தது.

நானாகிய நீ... நீயாகிய நான்... நாமன்றோ...!!!
நாம் நானாய்... நீயாய் மாறுவது முறையோ...???

நாளை : 26

சந்தனாவிடம் பேசிவிட்டு வந்த மதிக்கு கதிரின் வாழ்க்கையைச் செப்பனிட்டு விட்டதில் ஒரு புறம் நிம்மதியும், மகிழ்ச்சியும் ஏற்பட்டாலும், மறுபுறம் நிம்மதியின்மையும், துக்கமும் ஒரு சேர எழுந்தது. நேரே கதிரின் வீட்டிற்கு வந்து தனக்குத் தேவையான உடமைகளை மட்டும் எடுத்தவள் கண்ணில் கட்டிலின் பக்கவாட்டு மேஜையில் வீற்றிருந்த அவர்களின் புகைப்படம் பட்டது. அதை எடுத்தவள் அதிலிருந்த கதிரின் முகத்தை ஆசையுடன் தடவினாள். அவள் கண்ணிலிருந்து வழிந்த கண்ணீரானது அதன் மேல் சொட்டியது. அவளை வலுக்கட்டாயமாய்த் தன்னுடன் சேர்த்து வைத்து எடுத்த செல்பி புகைப்படம் தான் அது. வேண்டாமென்று அவள் மறுத்த போதும் அவன் அவளை விடவில்லை. அந்தளவுக்கு அவன் பிடிவாதம் பிடித்தவன். அவன் எந்த மாதிரி விசயங்களில் பிடிவாதம் பிடிப்பான் என்று நினைத்து பார்த்தவள் முகம் செவ்வானமாய்ச் சிவந்தது.

முயன்று தன் மனதை கட்டுப்படுத்திக் கொண்டவள் புகைப்படத்தைத் தனது பையில் வைத்துவிட்டு திரும்பியும் பார்க்காமல் அந்த வீட்டை விட்டு வெளியேறினாள். அவனது வீட்டை விட்டு தான் வெளியேறினாளே தவிரச் சென்னையை விட்டு வெளியேறவில்லை. அவளும் ஆதர்ஷும் வாழ்ந்த சென்னையிலிருந்த வீட்டிற்குத் தான் வந்தாள். உலகத்தில் எந்த மூலைக்குச் சென்றாலும் தன்னைத் தேடி கதிர் வந்துவிடுவான் என்பது அவளுக்கு உறுதியாய் தெரியும். அதனால் அவனைத் தவிர்ப்பது என்பது இயலாத காரியம். தன்னை அவனுக்குப் புரிய வைத்துவிட்டு ஒதுங்கியிருப்பது சாலச் சிறந்தது என்ற முடிவை அவள் எடுத்திருந்தாள்.

அவளைக் கண்டதும் அங்கே வேலை செய்து கொண்டிருந்த தோட்டக்காரன் வீட்டின் சாவியை எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தான். கதவை திறந்து கொண்டு

உள்ளே சென்றவள் அங்கே வரவேற்பறையின் சுவற்றில் நடுநாயகமாய் வீற்றிருந்த ஆதர்ஷின் புகைப்படத்தைப் பார்த்து அவளது கண்கள் கலங்கியது.

"ஆது... உங்களிடமே நான் வந்துட்டேன்..." சொல்லியவள் அவனது புகைப்படத்தின் அருகே வந்து நின்றாள்.

"ஆது... என்னை ஏன் தனியாய் தவிக்க விட்டுட்டு போனீங்க...? நீங்க இருந்திருந்தா இந்த நிலைமை எனக்கு வந்திருக்குமா...?" தவிப்புடன் கேட்டவளை பார்த்து ஆதர்ஷ் ஆறுதலாய்ச் சிரிப்பது போலிருந்தது.

"என்னால முடியல ஆது... பாவாவோட வாழ்க்கையைப் பாழாக்குறேனோங்கிற குற்றவுணர்ச்சி ஒரு புறம்ன்னா, நீங்க இறந்ததும் இது தான் சாக்குன்னு பாவாவை கல்யாணம் பண்ணி நான் மட்டும் சந்தோசமா வாழ்றேனேங்கிற குற்றவுணர்ச்சி மறுபுறம்ன்னு... எல்லாம் சேர்ந்து என்னை உயிரோடு கொல்லுது... இது எல்லாத்தையும் விடப் பாவா என்ன தான் என்னைக் கேவலமா பேசினாலும் அவங்க என் பக்கம் வரும் போது என்னையும் அறியாமல் அவர் கையில் நான் உருகி இழைகிறேனே... அப்படின்னா நான் என்ன மாதிரியானா பொண்ணு ஆது...? ரொம்பக் கெட்ட பொண்ணு தானே நான்..."

"பாவா என்னைப் பேசியது நினைச்சு எனக்குக் கோபமும் இருக்கு... அதேசமயம் அவர் மேல அதிகக் காதலும் இருக்கு... விருப்புக்கும், வெறுப்புக்கும் நடுவுல போராட முடியாம தான் நான் பாவாவை விட்டு விலகி வந்துட்டேன். நான் சொல்ல வர்றதை உங்களால புரிஞ்சிக்க முடியுதா ஆது? இந்த மாதிரி இரண்டு மனநிலையோட என்னால் அங்கே நிம்மதியாய் வாழ முடியல... அதிலயும் அவரோட அதீத காதலை உணரும் போதெல்லாம் அவர் என்னைப் பேசிய கீழ்த்தரமான வார்த்தைகள் தான் எனக்கு நியாபகம் வருது. என்னோட அறிவுக்குப் புரியுது அவர் திருந்திட்டார்ன்னு, ஆனா மனசு அவர் பேசிய வார்த்தையிலேயே சிக்கி தவிக்குதே... அவரோட கூடுற

ஒவ்வொரு தடவையும் அவருக்கு உண்மையா இல்லாத மாதிரி பீல் பண்ணி குற்றவுணர்வில் தினமும் செத்து செத்துப் பிழைக்கிறேன்... இப்போ விலகி வந்த பின்னால உயிர் போற மாதிரி வலிக்கிறது எனக்கு மட்டும் தான் தெரியும்... எனக்கு மட்டும் தான் தெரியும்..." முகத்தை மூடி கொண்டு அழுதவள் அங்கேயே தரையில் சரிந்தமர்ந்தாள். அவளின் மனதில் ஆதர்ஷ் தன்னிடம் திருமணத்துக்குச் சம்மதம் வாங்குவதற்காகப் பேசியது நினைவுக்கு வந்தது. அது மட்டுமா நினைவுக்கு வந்தது... அவர்களின் திருமண வாழ்க்கையும் தான்.

அன்று அவளைத் தனியே பேச வேண்டுமென்று அழைத்து வந்த ஆதர்ஷ்... இன்னமும் அவள் முகம் தெளியாமல் இருப்பதைக் கண்டு அவளிடம் பேச ஆரம்பித்தான்.

"அம்மு உன்னால் அவனை மறந்துட்டு வேறொரு வாழ்க்கை வாழ முடியுமா...?" அவனின் கேள்விக்கு என்ன சொல்வது என்று தெரியாமல் விழித்தவள் பின் மெதுவே,

"மனசுல அவன் மேல் காதலை வச்சிட்டு இன்னொருத்தன் கூட வாழ்றதுங்கிறது என்னால நினைச்சு கூடப் பார்க்க முடியல... ஏன்னா இன்னமும் நான் அந்த இடியட்டை தான் லவ் பண்றேன்..." என்று ஆவேசமாய்க் கூறியவள் சற்று நிறுத்தி, "அது நீங்களா இருந்தாலும் என் முடிவு அது தான் ஆது... அதனால தான் சொல்றேன்... எனக்காக உங்க வாழ்க்கையைப் பாழாக்கிக்க வேணாம்... நீங்க வேற நல்ல பெண்ணாய் பார்த்துக் கல்யாணம் பண்ணிக்கோங்க..." அதற்கு மேல் என்ன சொல்வது... எப்படிச் சொல்வது என்று தெரியாமல் நிறுத்தினாள்.

"சரி நீ சொல்ற மாதிரி வச்சுக்குவோம்... அதுக்காக நீ இப்படியே இருந்துற முடியுமா? இல்லை அர்வி தான் உன்னை இப்படியே விட்டு விடுவானா...? நான் இல்லைன்னா... வேறு யாரையாவது மாப்பிள்ளையா கொண்டு வந்து நிறுத்த தான் போறான்... அப்போ என் கிட்ட சொன்ன மாதிரி அந்த மாப்பிள்ளை கிட்டேயும் சொல்லுவியா? சரி அவன் நீ சொன்னதைக் கேட்டு விலகி

போனாலும்... இப்படி எத்தனை பேரை உன்னால் விரட்ட முடியும்..." அவனின் கேள்விக்கு அவளிடம் பதிலில்லை. ஆதர்ஷ் சொல்வதும் சரி தானே... எத்தனை நாளைக்குத் தான் அவளும் திருமணத்தைத் தள்ளி போட முடியும்?

"ஏங்க மேடம்... காதல் தோல்வி உங்களுக்கு மட்டும் தான் ஏகபோக உரிமையா என்ன? ஏன் எங்களுக்கு எல்லாம் அது இருக்காதா...?" அவனின் கேலி குரலில் திகைப்பாய் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

"ஆது...?"

"ஆமாம்... இந்த ஆதுக்குள்ளேயும் ஒரு காதல் தோல்வியிருக்கு..." என்றவனின் முகம் வேதனையைத் தத்தெடுத்திருந்தது.

"அவங்க யாரு...? அவங்க பேரு என்ன...?" அவள் ஆர்வமாய்க் கேட்டாள்.

"அவள் பேரு சாரதா... நான் சாருன்னு தான் கூப்பிடுவேன்... அவள் காலேஜ்ல என்னோட ஜூனியர்..." காதலியின் பெயரை சொல்லும் போதே அவனின் முகம் மிருதுவானது.

"எப்போ எங்களுக்குள்ள காதல் வந்திச்சுன்னு எனக்குத் தெரியல... ஆனா எப்படியோ எங்களுக்குள்ள காதல் மலர்ந்திடுச்சு... நான் ரொம்ப அமைதின்னா... அதுக்கு ஜஸ்ட் ஆப்போசிட் அவ... சரியான வாயாடி... அவ இருக்கிற இடம் அவ்வளவு கலகலப்பா இருக்கும்... கொஞ்ச நேரம் சும்மாயிருக்க மாட்டா... துருதுருன்னு எதையாவது செஞ்சிட்டு... அங்கேயும் இங்கேயும் ஓடிட்டே இருப்பா... ஒருவேளை அந்தக் குணங்கள் தான் அவள் பக்கம் என்னை ஈர்த்துச்சோ என்னமோ எனக்கே தெரியல..."

சாருவை பத்தி சொல்லும் போதே அவனின் கண்ணில் தோன்றிய காதல், மயக்கம் எல்லாம் கண்டு மதியின் மனம் வலித்தது. என்றாவது ஒரு நாள் கதிர் தன்னை இது

போல் காதலிக்க மாட்டானா என்று மனதுக்குள் ஏங்கினாள். அவளுக்கே அவளை நினைத்து ஆச்சிரியமாக இருந்தது. கதிரிடத்தில் அந்த மாதிரி திட்டிவிட்டு வந்துவிட்டு... இப்போது அவனை நினைத்து தான் உருகுவது நினைத்து அவளுக்கே கேவலமாய் இருந்தது. கெட்டவன் என்று தெரிந்திருந்தும் அவனுக்காக ஏங்குகிறாள் என்றால் அந்தளவுக்கு அவனிடத்தில் காதல் கொண்டிருக்கிறாளா? இல்லை அந்தளவுக்கு அடிமையாய் அவனின் சுகத்துக்கு ஏங்குகிறாளா...? தன் நிலை குறித்து அவளுக்கே அவமானமாய் இருந்தது.

"அப்புறம் எப்படி ஆது பிரிஞ்சிங்க...?" அதைக் கேட்கும் போது அவளுக்கு வருத்தமாயிருந்தது. ஆதர்ஷ் கதிரை போல் கிடையாது. அவனைத் திருமணம் செய்யும் பெண் கொடுத்து வைத்தவள். அவனைப் போல் ஒருவனைத் திருமணம் செய்யாமல் அந்தப் பெண் என்னவானாள்...? அவளின் மனதில் அதைப் பற்றித் தெரிந்து கொள்ளும் ஆர்வம் எழுந்தது.

"அவங்க வீட்டில் எங்க காதல் தெரிஞ்சி போச்சு... அவள் காதலிக்கிறாள்ன்னு தான் அவங்களுக்குத் தெரியும்... ஆனா அது என்னைத் தான்னு தெரியாது... அவளுக்கு வேற மாப்பிள்ளை பார்க்க ஆரம்பிச்சாங்க... சாரு என் கிட்ட வந்து அழுதா... எனக்கும் என்ன செய்றதுன்னு புரியல... அவளோட அப்பா கிட்ட போய்ப் பேச போனேன்... அப்போ தான் அவளோட வீட்டோட நிலமை எனக்குத் தெரிஞ்சது... ரொம்ப ஏழ்மையான நிலமை... அவளுக்குக் கீழே நாலு தங்கச்சி... அந்த நிலமையிலும் அவங்க எனக்குச் சாருவை கல்யாணம் பண்ணி கொடுக்கச் சம்மதிக்கல... ஆனாலும் அவங்க மேல எனக்குக் கோபம் வரல... அதுக்குப் பதிலா மரியாதை தான் வந்தது. நானும் எவ்வளவோ பேசி பார்த்துட்டேன்... அவங்க கடைசி வரை சம்மதிக்கல..."

"ஏன் ஆது... என்ன காரணம்...? உங்களைப் போய் யாராவது வேணாம்ன்னு சொல்வாங்களா...?"

"உனக்கு நான் முக்கியம்... அதுக்காக எல்லோருக்கும் நான் முக்கியமா தெரிய முடியுமா? அவங்களுக்கு அவங்க ஜாதி பெரிசா தெரிஞ்சது... அடுத்து இருக்கிற நாலு பொண்ணுங்க வாழ்க்கை பெரிசா தெரிஞ்சது... அவங்க குடும்ப மானம் பெரிசா தெரிஞ்சது... இதுல எங்க காதல் பெரிசா தெரியல... இதுக்கெல்லாம் முடிவு கட்டுறதுக்குச் சாரு ஒரு அருமையான ஐடியா சொன்னா... அதைக் கேட்டிருந்தா இன்னைக்கு நான் இப்படிப் புலம்பிட்டு இருக்க வேண்டிய நிலை வந்திருக்காது..." விரக்தியாய் சொல்லியவன் ஒரு பெருமூச்சை விட்டான்.

"வீட்டை விட்டு ஓடி போயிறலாம்ன்னு அருமையான யோசனை சொன்னா... அதைக் கேட்டு நான் சந்தோசமா அவளைக் கூட்டிட்டுப் போய்த் தாலி கட்டாம... நல்ல பையனா கொஞ்சம் பொறுமையா இரு... அவங்க சம்மதிப்பாங்க... அவங்க சம்மதத்தோட நம்ம கல்யாணம் நடக்கும்ன்னு அவளுக்கு ஆறுதல் சொல்லி அவளை வீட்டுக்கு அனுப்பி வச்சேன்... அதுக்கடுத்த ஐஞ்சாம் நாள்..." அதை நினைத்து கூடப் பார்க்காதவனாய் வேதனை தாங்க முடியாமல் கண்களை மூடிக் கொண்டான்.

"சாரு விசம் குடிச்சிட்டான்னு தகவல் வந்தது... ஹாஸ்பிட்டலுக்கு ஓடி போனேன்... அவளைப் பொண்ணு பார்க்க வர்றாங்கன்னு தெரிஞ்சிட்டு விசம் குடிச்சிருக்கா... என்னைப் பார்த்ததும் அவ... உடனே அவளைக் கையோடு கூட்டிட்டுப் போகச் சொல்லி ஒரே அழுகை... எனக்கு என்ன பண்றதுன்னு தெரியல... அவளைச் சமாதானப்படுத்தி ட்ரீட்மென்ட் எடுக்கச் சொல்லிட்டு மறுநாள் வந்து பார்க்கிறதா சொல்லிட்டு வெளியில் வந்தேன்... வரந்தாவில் நின்னுக்கிட்டு இருந்த அவ அப்பா அத்தனை பேர் முன்னால என் காலில் விழுந்து கெஞ்சினாரு... அவங்க பெண்ணை விட்டுற சொல்லி... அவரு கோபமா பேசியிருந்தா கூட எதிர்த்துச் சண்டை போட்டிருப்பேன்... ஆனா அவர் தன்னோட மத்த பொண்ணுங்களுக்காக வாழ்க்கை பிச்சை கேட்டு கெஞ்சினார். நான் சாருவை

கல்யாணம் பண்ணிக்கிட்டா குடும்பத்தோட தற்கொலை பண்ணிக்கிறதை தவிர வேற வழியில்லைன்னு கெஞ்சினப்போ... என்னால் அவருக்கு நம்பிக்கை துரோகம் பண்ண முடியல... வேறுவழியில்லாமல் அவரோட பெண்ணை விட்டு விலகறதா சத்தியம் பண்ணி கொடுத்தேன்... ஒரு குடும்பம் உயிர் வாழ்றதுக்காக நான் என் காதலை தியாகம் செஞ்சேன்... அப்படித்தான் நான் நினைச்சேன்... சாரு என்னைப் பார்த்துக் கேள்வி கேட்கும் வரை..."

"இப்போ சொல்றதை கேட்டு நீ என் கிட்ட கோபப்படக் கூடாது அம்மு" மதியை பார்த்து சொன்னவன், "மறுநாள் சாருவை சந்திச்ச நான்... உனக்கும் எனக்கும் திருமணம் பேசி முடிவு பண்ணியிருக்கிறதா சொன்னேன்... வளர்த்த கடன் பாசம் அத்தை, மாமா பேச்சை தட்ட முடியலன்னு அவ கிட்ட சொன்னேன். நம்ம வீட்டை பத்தி உன்னைப் பத்தி எல்லாம் அவளுக்கு நல்லா தெரியும். அப்போ கூட அவ நம்பாத ஒரு பார்வை பார்க்க தான் செஞ்சா... ஆது நீ பொய் சொல்ற... எனக்காக, என் குடும்பத்துக்காக நீ மாத்தி பேசற... நான் நம்ப மாட்டேன்னு ஓன்னு அழுதா... இல்ல உண்மையா தான் சொல்றேன்னு சொன்னப்போ என்ன சொன்னா தெரியுமா அம்மு...?" அதை அவன் சொல்லும் போது அவனின் கண்கள் கலங்கியிருந்தது.

"ஆது... ப்ளீஸ்..." மதி அவனின் கையை ஆறுதலாய் பிடித்து அழுத்த அதில் தன்னைத் தேற்றி கொண்டவன்,

"இப்பவும் நீ சொன்னதை நான் நம்பல ஆது... நீ இந்த மாதிரி பேசறன்னா ஏதோ காரணம் இருக்கணும்... உன் வார்த்தையை நான் நம்பல... ஆனா உனக்காக நான் என்ன செய்யணும்ன்னு மூஞ்சிக்கு நேரா பளிச்சுன்னு கேட்டா... எனக்கு என்ன சொல்றதுன்னு தெரியல... நான் கல்யாணம் பண்ணிக்கற மாதிரி நீயும் கல்யாணம் பண்ணிக்கிட்டு சந்தோசமா இருக்கணும்ன்னு சொன்னேன். எனக்காகச் சரின்னு சொன்னா... என் சந்தோசத்துக்காகக் கல்யாணமும் பண்ணிக்கிட்டா... அவ கல்யாணத்தன்னைக்கு என்ன சொன்னா தெரியுமா...

ஆது நீ இஷ்டப்பட்ட மாதிரி கல்யாணம் பண்ணிக்கட்டேன்... இப்போ உனக்குச் சந்தோசமா...? ஆனா நீ எப்போ ஆது கல்யாணம் பண்ணிக்கப் போறன்னு கேட்டா... என்னால பதில் சொல்ல முடியல... எங்க அப்பா சொன்னதுக்காக என்னை நீ விட்டு கொடுத்திட்டல்ல... மனசுல உன்னை நினைச்சிட்டு உடலால வேறொருத்தன் கூட வாழற வேசியாய் என்னை மாத்திட்டல்லன்னு அன்னைக்கு அவ கதறின கதறல்... இன்னைக்கும் என் காதுல ஒலிச்சிட்டே இருக்கு..." சொல்லும் போதே அவ்வளவு வலி கலந்திருந்தது அவனின் குரலில்.

"இப்போ எங்கே இருக்காங்க...?"

"தெரியல அம்மு... ஆனா அவளாவது எங்கேயாவது சந்தோசமாயிருக்கணும்ன்னு நான் தினமும் அந்தக் கடவுள் கிட்ட வேண்டிக்கிட்டு தான் இருக்கேன்..." என்று சொல்லிவிட்டு நிறுத்தியவன் சிறிது நேரம் எதுவும் பேசவில்லை. அவனின் மனம் புரிந்து அவளும் அமைதி காத்தாள். அங்கே கனமான அமைதி நிலவியது.

"அம்மு... நான் சொல்றதை நல்லா கேட்டுட்டு முடிவு பண்ணு... எனக்கும் கல்யாணத்துல பெரிசா இன்ரஸ்ட் இல்ல... உனக்கு அப்படித்தான்... என் மனசில் சாரு இருக்கிற மாதிரி... உன் மனசில் கதிர் இருக்கிறான்... இவங்களை மறந்திட்டு நமக்குன்னு ஒரு வாழ்க்கையை நாம வாழ போறதில்ல... இப்போ சொல்லு... நாம ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணிக்கிட்டு கடைசி வரை ப்ரெண்ட்ஸா இருந்தா என்ன...?" அவன் கேட்டதற்கு அமைதி காத்தவளை யோசனையாய் பார்த்தவன்,

"என் மேல் நம்பிக்கை இருக்கிறதல்லவா... என்னால் உனக்கு எந்தத் தொந்தரவும் கிடையாது... நான் கடைசி வரைக்கும் அதாவது என் வாழ்நாள் முழுமைக்கும் உனக்குக் காவலானா இருப்பேன்... என்னை நம்பு அம்மு..."

"ச்சே... ச்சே... என்ன ஆது இப்படிப் பேசுறீங்க... உங்களை நம்பாமல்... வேறு யாரை நம்பப் போறேன்... ஆனா எனக்கு ஒரே குற்றவுணர்ச்சியா இருக்கு..." என்றவளை பார்த்து,

"இதில் எங்கே இருந்து குற்றவுணர்ச்சி வந்தது...?"

"ஆயிரங்காலத்துப் பயிரான கல்யாணத்தை நாம் கேலி கூத்தாக்குவது சரியா ஆது...? இது நம்மை நம்பி திருமணப் பந்தத்தில் சேர்த்து வைக்கும் நம் பெற்றோருக்கு நாம் செய்யும் துரோகமில்லையா...? விசயம் தெரிஞ்சா அப்பா, அம்மா என்ன சொல்லுவாங்க...? எனக்கு என்னமோ ரொம்பப் பயமாயிருக்கு ஆது...?"

"இங்கே பாரு அம்மு... நீயும், நானும் கல்யாணம் பண்ணிக்காம இருந்தா மட்டும் அவங்க கவலைப்பட மட்டாங்களா? இல்லை கேள்வி தான் கேட்க மாட்டாங்களா? இந்த விசயம் நமக்குள் இருந்திட்டு போகட்டும்... யார் கிட்டேயும் சொல்ல வேண்டாம்... என்ன... ஆனால் ஒண்ணு திருமணத்தில் செய்கிற மத்த சத்தியங்கள் எல்லாவற்றையும் நான் காப்பாற்றுவேன்... ஒன்று தவிர..." என்று நிறுத்தியவன்,

"உன் அப்பா, அம்மா, அண்ணா எல்லாரையும் விட உன்னைப் பத்தி எனக்குத் தான் நல்லா தெரியும்... கதிரை மறந்திட்டன்னு சொல்ற நீ தனிமையில எந்தளவுக்கு அவனை நினைச்சு வருந்தறன்னு எனக்குத் தான் தெரியும். இந்தக் கல்யாணம் எனக்காக இல்லை அம்மு... உனக்காக மட்டும் தான்... கடைசி வரை நான் கல்யாணம் பண்ணிக்காமலே இருந்திருவேன்... ஆனா உன்னால் அப்படியிருக்க முடியாது... அப்படியிருக்க விடவும் மாட்டாங்க..." என்று நிறுத்தியவன்,

"என்னடா இப்படியெல்லாம் பேசறவன்... நல்ல புத்தமதி சொல்லி உன் மனதை மாற்றி வாழ்க்கையை வாழ சொல்லாமல் இப்படிப் பேசுறானேன்னு நீ நினைக்கலாம்... உன்னைப் பத்தி... உன் மனதை பத்தி நல்லா தெரிஞ்சவன்ங்கிற முறையில நல்லா யோசிச்சு எடுத்த

முடிவு தான் இது... ஏன்னா நீ மூன்று முறைக்கு மேல தற்கொலை முயற்சி பண்ணியதை நான் பார்த்திட்டேன்..." என்றவனை அதிர்ச்சியாய் பார்த்தாள் அவள்.

"என்ன அதிர்ச்சியா இருக்கா... கடவுள் புண்ணியத்துல அந்த மூணு தடவையும் நான் வந்து உனக்கே தெரியாமல் உன்னைக் காப்பாத்தினேன்..." அவன் சொன்னதும் அந்தத் தருணங்கள் அவளுக்கும் நியாபகம் வந்தது. ஒருநாள் கத்தியை கொண்டு கையை அறுக்கும் போது ஆதர்ஷ் வந்து அவளிடம் பேச்சு கொடுத்தபடி அவளை வெளியில் அழைத்துச் சென்றுவிட்டான். மறுமுறை தூக்கிலிட முயன்ற போதும் அதே மாதிரி தான் நடந்தது. அடுத்தத் தடவை நடந்தது தூக்க மாத்திரையைப் பாலில் கலந்து குடிக்கும் போது... அதெல்லாம் எதேச்சையாய் நடந்தது என்று பார்த்தால்... ஆதர்ஷ் அனைத்தும் தெரிந்து வைத்துத் தன்னைக் காப்பாற்றியிருக்கிறான் என்பது புரிய நன்றியுடன் அவனைப் பார்த்தாள் அவள்.

"ஆது... உங்க மேல எனக்கு நம்பிக்கையிருக்கு... நான் இந்தக் கல்யாணத்துக்குச் சம்மதக்கிறேன்..." என்றவளை பார்த்து,

"உன் நம்பிக்கையை நான் காப்பாற்றுவேன்... அதனால் சந்தோசமா கல்யாண வேலையில் பங்கெடுத்துக்கோ..." சிரித்தபடி சொன்னவனைப் பிரம்மிப்பாய் பார்த்தாள் அவள். தன்னைப் பற்றி எப்போதுமே சிந்திக்காமல் அடுத்தவர்கள் நலத்தை மட்டுமே பெரிதாக எண்ணி வாழும் ஆதர்ஷ் அவளுக்கு தெய்வமாகத் தெரிந்தான். அவனுக்கு மட்டும் காதல் தோல்வியில்லையா என்ன...? இருந்தாலும் அதை வெளிக்காட்டி கொள்ளாமல் எப்போதும் புன்னகையுடன் காட்சியளிக்கும் அவனைப் பார்த்து அவளும் தன் துக்கத்தை வெளிக்காட்டி கொள்ளாமல் இருக்கப் பழகி கொண்டாள்.

கதிரை திருமணத்துக்கு அழைத்த போது அவள் ஆதர்ஷிடம் சண்டை போட தான் செய்தாள். அப்போது அவன் சொன்ன விசயம் அவளுக்குப் புரிய அமைதி

காத்தாள். கதிரை கண்டு பயந்து ஓடுவதால் என்ன பயன்? அவனை நேருக்கு நேராய் தலை நிமிர்ந்து சந்திப்பதில் தான் அவளுக்குப் பெருமை... அதனால் தான் கதிரின் முன்னால் வேண்டுமென்றே ஆதர்ஷை 'பாவா' என்றழைத்து இந்தத் திருமணத்தை விரும்பி ஏற்றுக் கொண்டது போல் கதிரிடம் காட்டி கொண்டாள். ஏன் அப்படிச் செய்தாள் என்று இன்று வரை அவளுக்குமே புரியவில்லை.

திருமணம் முடிந்து எல்லாத் தம்பதிகளைப் போல முதலிரவு அறைக்குள் நுழைந்த போது மதிக்கு வியர்த்து விறுவிறுத்துப் போய்விட்டது. என்ன தான் இதில் உண்மையென்றாலும் வெளியில் இருந்து பார்ப்பவர்களுக்கு இது உண்மையானதாகத் தானே தெரியும்... அவளுக்கு அழுகை அழுகையாய் வந்தது.

"அம்மு... எதுக்கு டென்சன்... ரிலாக்ஸ்ம்மா..." ஆதர்ஷ் ஆதரவாய் பேசிய போதும் அவளின் கண்களில் கண்ணீர் நிற்கவில்லை.

"உங்க சாரு சொன்ன மாதிரி... நானும் வேசி போலாகிட்டேனே ஆது... என்னை இந்த நிலைக்குப் பாவா ஆக்கிட்டாங்களே..." என்று கதறியவளை,

"அம்மு..." என்று கோபமாய் அதட்டினான் ஆதர்ஷ். "இந்த மாதிரி பேசின அப்புறம் அம்முன்னு இரக்கம் பட மாட்டேன்... அறைஞ்சு பல்லை பேர்த்திடுவேன்... என்ன வார்த்தை சொல்ற... நீ சீதா தேவி மாதிரி புனிதமானவள் தான்... அவன் ராமனாய் இல்லாமல் போனா நீயென்ன பண்ணுவ...? அந்த அயோக்கியனுக்கு உன் கூட வாழ கொடுத்து வைக்கல... இனி மேல் நீ இதை நினைச்சு பீல் பண்ண கூடாது..." என்றவன் மறு நாளே சென்னைக்குக் கிளம்பத் தயாரானான்.

ஏன் என்று கேட்டவளிடம், " இங்கே இருந்தா மத்தவங்களுக்காக நடிக்க வேண்டி வரும்... சில சமயம் நம்மளையும் அறியாமல் நம்மைக் காட்டி கூடக் கொடுத்திடுவோம்... அதுக்குத் தான்..." என்றவன்

அவளைச் சென்னைக்கு அழைத்து வந்துவிட்டான். கதிரை சந்தித்துவிடுவோமோ என்று மனதுக்குள் மதி பயந்து கொண்டிருந்தாள். மனதில் பயம் ஒருபுறம் இருந்தாலும் அவளின் காதல் கொண்ட மனம் அவனை மீண்டும் காண விழைந்தது. சில சமயங்களில் தன்னைக் கண்டு அவளுக்கே வெட்கமாய் இருந்தது. மறையாமல் அதை ஆதர்ஷுடன் பகிர்ந்து கொண்ட போது... அது இயற்கை தான்... இது தப்பில்லை என்று அவன் சொல்லவும் தான் அவள் சற்று சமாதானமானாள். அவள் நினைத்தது போல்... விரும்பியது போல் கதிருடனான அவளுடைய சந்திப்பு நடந்தது.

தன்னிடம் பேச வந்தவனிடம் சூடாய் பதிலடி கொடுத்த போதும் அவன் தன்மையாய் பேசியதை அவளின் மனம் ஆச்சிரியமாய்க் குறித்துக் கொண்டது. கடைசியில் அவன் பேசிவிட்டுச் செல்லும் போது தான் திருந்திவிட்டதாகவும், செத்த பாம்பை திரும்பத் திரும்ப அடிப்பதால் பிரயோஜனம் இல்லை என்று கூறிவிட்டுச் சென்ற போது அவள் அப்படியே உடைந்து விட்டாள். கதிர் தன் இருக்கையில் போய் அமர்ந்தது கொண்டு இவர்களையே பார்க்க... அவன் முன் தன்னைக் காட்டி கொள்ளாதிருக்கப் பெரிதும் முயற்சி செய்து அதில் வெற்றியும் பெற்றாள்.

"அவன் திருந்திட்டானோன்னு தோணுது அம்மு..." ஆதர்ஷ் சொன்ன போது கூட அவள் பேச்சை மாற்றிவிட்டாள். கதிரின் தோற்றம் அவன் கண்ணிலிருந்த உண்மை எல்லாம் அவன் மாறிவிட்டதை அவளுக்குப் பறை சாற்றிய போதும் அவளால் அவனை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. தன்னைக் கேவலப்படுத்தியவன் தானே என்ற கோபம் மட்டுமே அவள் மனதில் வியாபித்திருந்தது.

இரண்டு நாள் கழித்து ஆதர்ஷ் அவளிடம் வந்து, "உண்மையில் கதிர் திருந்திட்டான் அம்மு... நான் விசாரிச்ச வரைக்கும் நல்லா தான் சொல்றங்க..." என்றவனை அமைதியாய் பார்த்தவள்,

"இப்போ இதை ஏன் சொல்றீங்க ஆது...?"

"உன் மனசுல அவன் தான் இருக்கான்... அதுவும் இப்போ திருந்தி நல்லவனா இருக்கான்... நான் வேணும்ன்னா உனக்கு டிவோர்ஸ் தந்துடறேன்... நீ அவங்கூடச் சந்தோசமா வாழு அம்மு... நீ சந்தோசமா கதிர் கூட வாழ்றது தான் எனக்கும் சந்தோசம்..."

"இல்ல ஆது... அது மட்டும் என்னால் முடியாது... பாவாவை நான் நேசிக்கிறேன் தான்... இல்லைன்னு சொல்லல... ஆனா அவர் பேசிய பேச்சுக்களை மறந்திட்டு என்னால அவர் கூடச் சேர்ந்து வாழ முடியாது... அந்த மாதிரி ஒருத்தனை காதலிச்சதுக்கு எனக்கு இந்தத் தண்டனை தேவை தான்... தயவுசெஞ்சு என்னை விட்டுருங்க..." என்றவளின் மனதில் கதிர் அவளின் இதழை வலுக்கட்டாயமாய்க் கவ்வி இழுத்துச் சுவைத்ததும், அதில் தன் உடல் தன்னையும் அறியாமல் நெகிழந்ததும் நியாபகம் வர... தன்னைக் குறித்து அவளுக்கே அருவருப்பாய் இருந்தது. அவளையும் மீறி ஓவென்று கதறி அழுதுவிட்டாள்.

அதிலிருந்து ஆதர்ஷ் அவளிடம் கதிரை பற்றிய பேச்சை எடுக்கவில்லை. யார் செய்த புண்ணியமோ அவள் மீண்டும் கதிரை பார்க்கவில்லை. இரண்டு வருடங்கள் எந்தவித மாற்றங்களும் இல்லாமல் கடந்து சென்றது. பகலில் எல்லாம் வேலையில் மூழ்கி தன்னைத் தொலைக்கும் மதி இரவில் கதிரை நினைத்து மௌனமாய் அழுவதை ஆதர்ஷ் கையாலாகாமல் பார்த்துக் கொண்டிருந்தான். கதிர் மீதான மதியின் காதல் அவனுக்குப் புரிந்து தான் இருந்தது. ஆனால் இதற்கு மதியின் சம்மதம் இல்லாமல் அவனும் ஒன்றும் செய்ய முடியாது. அதற்கும் முடிவு கட்ட எண்ணிய விதி சாரதாவின் உருவில் வந்து சேர்ந்தது.

இவர்களின் நகைக்கடையில் நகை எடுத்துக் கொண்டிருந்த சாரதாவை கண்டதும் கடைக்குள் நுழைந்து கொண்டிருந்த ஆதர்ஷின் கால்கள் ஸ்தம்பித்து நின்றுவிட்டது. சாரதாவிற்கு அவனைத் தெரியும், அவன் குடும்பத்தாரையும் தெரியும். ஆனால் அவன் தொழில்

என்ன... அவன் யார் வீட்டை சேர்ந்தவன் என்று அவளுக்குத் தெரியாது. ஏனெனில் அவனும் தனக்குச் சொந்தமில்லாத ஒன்றை இருப்பதாய் காட்டி கொள்ள விரும்பவில்லை.

"சாரு..." அவனையும் அறியாமல் அழைத்தவன் வேகமாய் அவளருகே சென்றான். அவனைக் கண்டதும் ஆச்சிரியத்தில் விழி விரிய எழுந்து நின்ற சாரதா,

"ஆது நீங்க எப்படி இங்கே...?" அவளுக்கு மகிழ்ச்சியில் கண்கள் கலங்கியது.

"ஆது... உள்ளே வராமல் இங்கே என்ன பண்றீங்க...?" மதி அலுவலக அறையிலிருந்து வெளியில் வந்தாள்.

சாரதா யோசனையாய் மதியை பார்க்க ஆதர்ஷ் மதியை அவளிடத்தில் அறிமுகப்படுத்தினான். "சாரு... இவள் என் மனைவி மதி..." அதைக் கேட்டதும் சாரதாவின் முகம் மாறியது.

"ஆது... கடைசியில் நீயும் பணத்துக்கு விலை போயிட்ட இல்ல..." அவளின் வார்த்தைகள் தாங்க முடியாமல் அவன் வேதனையுடன்,

"சாரு ப்ளீஸ்..." என்க,

"போதும் நிறுத்து ஆது... உன் நல்லவன் வேசம் கலைஞ்சு போச்சு... உனக்குப் பணம் பெரிசுன்னா அன்னைக்கே அதைச் சொல்லிட்டு விலகி போயிருக்கலாமே... அதை விட்டுட்டு வளர்த்த கடன், பாசம்ன்னு ஏன் பொய் சொன்ன...? என் குடும்பத்துக்காக நீ என்னை விட்டு கொடுத்தியோன்னு இன்னைக்கு வரை ரெண்டு மனசோடு வாழ்க்கை நடத்துற என்னோட மனதின் வலி... உனக்கு எங்கே தெரிய போகுது... ஆம்பிளை நீ எல்லாத்தையும் மறந்திட்டு சந்தோசமா வாழுவ... ஆனா என்னை மாதிரி பெண் ஜென்மம் மறக்கவும் முடியாம... வாழவும் முடியாம, சாகவும் முடியாம வாழ்றது கொடுமை... பச்சை வேசித்தனம்... அப்படியொரு வாழ்க்கையை நீ

எனக்குக் கொடுத்திருக்க... ஆனா இப்போ என் புத்தி தெளிஞ்சு போச்சு... இனிமேலாவது என் புருசனுக்கு உண்மையா வாழ போறேன்... ஒரு காலத்தில் உன்னைப் போய்க் காதலிச்சேனே என்னைச் சொல்லணும்..." என்றவள் அவனை நிமிர்ந்தும் பாராமல் வெளியேறினாள்.

"ஆது... நான் வேணா அவங்க கிட்ட போய்ப் பேசவா..." என்ற மதியை தடுத்தவன்,

"போகட்டும் விடு அம்மு... இனிமேல் அவள் சந்தோசமாயிருப்பான்னு நம்பிக்கை இருக்கு... நான் வேண்டிய அந்தக் கடவுள் என்னைக் கை விடல..." என்றவனை மதி பிரம்மிப்பாய் பார்த்தாள். இவன் என்ன மனிதப்பிறவியா? இல்லை தெய்வப்பிறவியா?

"இங்கே என்ன வேடிக்கை... வேலையைப் பாருங்க..." கடை ஊழியர்களைச் சத்தம் போட்டவன் அலுவலக அறைக்குள் நுழைய மதியும் அவனைப் பின் தொடர்ந்தாள். அத்தோடு அவன் சாரதாவை மறந்துவிட்டதாய் அவள் எண்ணி கொண்டாள். ஆனால் அவன் சாரதாவை மறக்கவில்லை... எப்போதும் போல் தனது துக்கத்தை மனதுக்குள் போட்டு பூட்டி வைத்துக் கொண்டான்.

இரவில் காரில் வீடு திரும்பும் போது ஆதர்ஷ் ஏதோ யோசனையில் காரை ஓட்ட... "என்ன ஆது... அமைதியாய் வர்றீங்க? சாரு நியாபகமா?" மதி மெதுவே கேட்டாள்.

"ம்..." என்றவன் அவளைப் பார்த்துப் புன்னகைத்தான். அவனின் புன்னகையில் ஜீவனில்லை என்பது அவளுக்குப் புரிந்தது.

"ஏன் ஆது... நமக்கு மட்டும் இப்படி நடக்குது...?" கேட்டவளின் முகம் எல்லையற்ற வேதனையைப் பிரதிபலித்தது.

"ச்சு... இதெல்லாம் பெரிய விசயமே இல்லை அம்மு... நம்மை விடச் சாப்பாடு இல்லாமல், இருக்க வீடில்லாமல் கஷ்டப்படுறவங்களைப் பாரு... அதுக்கு நம் நிலைமை பரவாயில்லை..." அவளைச் சமாதானப்படுத்தினாலும் அவனின் மனம் சாரதா பேசிய வார்த்தையில் இருந்து வெளிவர முடியாமல் தவித்தது. தவறு செய்யாமலேயே குற்றவாளி என்று ஒருவன் குற்றம் சாட்டப்பட்டால் அவனின் மனம் எப்படித் துடிக்கும்... அந்த மாதிரி ஒரு மனநிலையில் தான் அவன் இருந்தான். மதியும் கதிரின் நினைவில் மூழ்கி தன்னைத் தொலைத்து கொண்டிருந்தாள்.

அப்போது தான் அந்த எதிர்பாராத விபத்து நடந்தது. தன் யோசனையில் இருந்த ஆதர்ஷ் முன்னால் வந்து கொண்டிருந்த அந்த அரசு பேருந்தை கவனிக்கத் தவறிவிட்டான். அருகில் வந்ததும் அவன் சுதாரித்தாலும் அவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அந்த நேரத்தில் அவன் மனதில் இருந்தது எல்லாம் மதியை காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் மட்டும் தான்... வேகமாய் அவள் புறமிருந்த கதவை திறந்தவன் சற்றும் தாமதிக்காமல் அவளை வெளியே தள்ளிவிட்டான்.

"ஆது..." என்ற மதியின் குரல் மட்டுமே அவனின் காதில் கேட்டது அடுத்தக் கணம் பேருந்தின் மீது பெருஞ்சத்தத்துடன் கார் மோதியது. ஆதர்ஷுக்குக் கண்ணை இருட்டி கொண்டு வந்த போதும் அவனுக்கு மதியை பற்றிய கவலை தான் அவனின் மனதை ஆக்கிரமித்திருந்தது. அவளின் நிலை தான் அவனைப் பயமுறுத்தியது. அவன் சாவை கண்டு அஞ்சுபவன் அல்ல... ஆனால் மதியின் எதிர்காலம் தான் அவனை அச்சப்பட வைத்தது. அந்த அச்சம் தான் அவனைத் தன் கடைசி மூச்சு இருக்கும் வரை அவளுக்காகச் செயல்பட வைத்தது. அவளின் எதிர்காலத்துக்காகத் தான் என்ன செய்ய வேண்டுமென்று வேகமாய் அவனை யோசிக்க வைத்தது. அதன் விளைவே கதிரை அழைத்து அவன் பேசியது. ஆதர்ஷுக்கு தெரியும் கதிரை தவிர மதியை

யாராலும் நன்றாகப் பார்த்துக் கொள்ள முடியாது என்று... இது தெரியாத மதியோ எதை எதையோ நினைத்து கலங்கி கொண்டிருந்தாள்.

தன்னைத் தவறாகப் பேசி விடுமோ என்று இந்தச் சமுதாயத்தின் மீதான பயம், கதிர் தன்னைப் புரிந்து கொள்ளாமல் போனானே என்ற ஏக்கம், தன்னை இகழ்ந்து பேசியவன் கையில் பாகாய் உருகி குழைகிறோமே என்று தன் மீது தான் கொண்ட கழிவிரக்கம், தன்னிடம் காதலாய் இருப்பவனிடம் பொய்யாய் கொஞ்சி குலாவ முடியாமல் தவிக்கும் தனது கோபம், அவனின் காதலை புரிந்து கொண்டவள் அவனின் காதலுக்குத் தான் உண்மையாக இருக்கவில்லையோ என்ற குற்றவுணர்வு... இதெல்லாம் சேர்த்து அவளைக் கதிரிடம் ஓரளவுக்கு மேல் அணுகவிடவில்லை. இதை எல்லாம் அவளின் பாவா மாற்றியமைப்பானா...? அவளைப் புரிந்து கொள்வானா...? இல்லை கோபத்தில் அவளிடம் வந்து சண்டை போடுவானா...??? கதிரின் வருகைக்காகக் காத்திருப்போம்...

விருப்புக்கும் வெறுப்புக்கும் இடைவெளி நூலளவு
உன் மீதான விருப்புக்கும் வெறுப்புக்கும் இடைவெளி...???
என் காதலா... உன் காதலா... இல்லை நம் காதலா...???

நாளை : 27

அடுத்து என்ன செய்வது... யாரை அணுகுவது... என்று தெரியாமல் தலையைப் பிடித்துக் கொண்டமர்ந்து விட்டான் கதிர். மதியை எங்கே சென்று தேடுவது... எப்படித் தேடுவது என்று அவனுக்குச் சத்தியமாய் ஒன்றுமே புரியவில்லை. அவன் வாழ்க்கையில் இந்த மாதிரி ஒரு சூழ்நிலையை அவன் முன்பின் கண்டதும் இல்லை. மனைவியைக் காணோம் என்பதில் செயலிழந்த மூளையை அமைதிப்படுத்தித் தனது அடுத்தக்கட்ட நடவடிக்கை பற்றிச் சிந்திக்க ஆரம்பித்தான். சிந்தித்ததின்

விளைவால் முதல் வேலையாகச் சிதறி கிடந்த தன் அலைப்பேசியை எடுத்து மீண்டும் பொருத்தினான். அவனின் நல்ல நேரமோ என்னவோ மீண்டும் அது வேலை செய்தது.

விமான நிலையத்தில் வேலை செய்யும் தன் நண்பன் ஒருவனுக்கு அழைத்தவன் இன்று ஹைதராபாத் செல்லும் விமானம் எத்தனை மணிக்குப் புறப்பட்டது... அதில் பயணம் செய்தவர்கள் பட்டியலில் மதியழகி என்ற பெயர் இருக்கிறதா என்று பார்க்க சொன்னான். அந்த நண்பனும் இன்னும் பத்து நிமிடத்தில் பார்த்துவிட்டு அவனுக்கு அழைப்பதாகக் கூறினான். சொன்னபடி பத்து நிமிடங்களில் அவனை அழைத்துப் பேசிய அந்த நண்பன்... ஹைதராபாத் செல்லும் விமானம் இரண்டு மணி நேரத்திற்கு முன் தான் புறப்பட்டுச் சென்றதாகவும்... அதில் மதியழகி என்ற பெயரில் யாரும் பயணிக்கவில்லை என்றும் கூறினான். அதைக் கேட்டு கதிரின் சக்தி அனைத்தும் வடிந்து போனது... அவனது முதல் தேடலுக்கான கதவு மூடி போனதை உணர்ந்தவன் மனம் தளர்ந்து போனான். மதி மீண்டும் தனக்குக் கிடைப்பாள் என்பதில் நம்பிக்கையிழந்தும் போனான்.

பின் மனதில் ஏதோ தோன்ற அவன் ஆதிரைக்கு அழைத்தான். மதியின் வீட்டினரில் மனம் விட்டு பேச கூடியவர்களில் அவள் மட்டும் தான்.

"கதிரண்ணா... எப்படியிருக்கீங்க... மதி எப்படியிருக்கா...?" உற்சாகமாய் ஒலித்த ஆதிரையின் குரலில் அவனுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. அவள் பேசிய விதத்திலேயே மதி அங்கே செல்லவில்லை என்பதை உணர்ந்தான்.

"ம்... நல்லாயிருக்கேன்..." என்றவன் மேலும் சிறிது நேரம் பேசிவிட்டு அலைப்பேசியை வைத்தவனின் மனம் ஓய்ந்து தான் போனது.

தன் போக்கில் யோசித்துக் கொண்டிருந்தவனுக்குத் திடீரென்று அவனின் மூளையில் மின்னலடிக்க...

ஆதர்ஷும், மதியும் இருந்த வீட்டின் தோட்டக்காரனுக்கு அழைத்தான். ஏனெனில் இந்த ஒரு வருட காலமாக அவன் தான் வேலைக்கு ஆள் வைத்து அந்த வீட்டை பராமரித்து வருகிறான். ஆதர்ஷ் இறந்த துக்கத்திலிருந்த மதியின் பெற்றோர் அதைப் பற்றி யோசிக்கவில்லை. அர்விந்த் அதை விற்றுவிடத் தீர்மானிக்க... ஆதிரை தான் அதைத் தடுத்து மதியை பார்க்க சென்னை வந்தால் வீடு வேண்டுமென்று சொல்ல... வேறுவழியின்றி அர்விந்த் அந்த எண்ணத்தைக் கைவிட்டான். அதன்பின் தான் ஆதிரை கதிரிடம் அந்த வீட்டை பராமரிக்கும் படி வேண்டி கொள்ள... கதிரும் அதற்குச் சம்மதித்தான்.

தோட்டக்காரனிடம் கதிர் எதையும் கேட்க வேண்டிய தேவையில்லாமல் அவனே மதி வந்த விசயத்தைச் சொல்லிவிட்டான். அதைக் கேட்டதும் கதிர் அடைந்த சந்தோசத்திற்கு, நிம்மதிக்கு அளவே இல்லை. தன் உள்ளத்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் விதமாக வாய்விட்டு சிரித்தவன் கண்களிலிருந்து நீர் வரும் வரை சிரித்துக் கொண்டே இருந்தான். ஆனாலும் மனதின் ஓரத்தில் அவள் அளித்த வலியானது கோபமாய் உருமாறி அவனை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது.

"பேபி... முதல்ல அந்தச் சந்தனாவை கவனிச்சிட்டு வந்து... பிறகு உன்னைக் கவனிச்சிக்கிறேன்... அவள் இருக்கிறதால தானே உனக்கு இந்த மாதிரி தேவையில்லாத இல்லாத எண்ணம் வருது... அவளை டெல்லிக்கு பேக் பண்ணி அனுப்பிவிட்டு... உன்னை என் கூடப் பேக் பண்ண வர்றேன்..." என்று சொல்லி கொண்டவன் சந்தனாவிற்கு அழைத்தான்.

"கதிர்... சொல்லுங்க கதிர்... நீங்களே கூப்பிட்டது எனக்குச் சந்தோசமா இருக்கு கதிர்..." வார்த்தைக்கு வார்த்தை கதிர் போட்ட அவளின் பேச்சை கேட்டுக் கோபத்தில் பல்லை கடித்தான் அவன்.

"நீங்க வீட்டிலா இருக்கீங்க...?"

"ஆமாம்..." என்றவளிடம்,

"நான் உங்களைப் பார்க்க தான் வந்துட்டிருக்கேன்..." அவன் சொல்லி முடிக்கும் முன் குறுக்கிட்டவள்...

"வாங்க கதிர்... நான் ஆவலுடன்..." அடுத்த வார்த்தை அவள் பேசும் முன் அலைப்பேசியை எரிச்சலுடன் அணைத்தான்.

கதிர் தன்னைத் தேடி வருகிறான் என்றதும் சந்தனாவிற்கு உற்சாக ஊற்று பீறீட்டது. தன் அலமாரியை திறந்து உடைகளை ஆராய்ந்தவள்... சந்தன நிறத்தில் கறுப்புப் பூக்கள் தையல் வேலைப்பாடு கொண்ட அந்த அழகிய சுடிதாரை எடுத்தவள் தன் மேல் வைத்துக் கண்ணாடியில் பார்த்தாள். அதை அணிந்தால் நிச்சயம் தான் அந்தத் தேவதை போல் தோற்றமளிப்போம் என்று மனதில் கர்வமாய் எண்ணினாள். சாதாரணத் தோற்றத்தில் இருக்கும் அந்த மதியிடமே மதி மயங்கி போயிருக்கும் கதிர்... அழகான தன்னைக் கண்டு மயங்காமல் இருந்தால் தான் ஆச்சிரியம்... மனதில் கனவுகள் பல கண்டவள் அடுத்தப் பதினைந்து நிமிடங்களில் தயாராகி அவனுக்காகக் காத்திருந்தாள்.

அழைப்புமணி ஓசை கேட்டு ஆவலுடன் கதவை திறந்தவள் கதிர் நின்ற நிலையைக் கண்டு அதிர்ந்து தான் போனாள். அணிந்தருந்த உடை கலைந்து, தலைமுடி கலைந்து போதையில் தள்ளாடியபடி இருந்தவனைப் பார்த்து அருவருப்படைந்தவள் முகத்தைச் சுளித்தாள். ஆனால் அதைப் பற்றியெல்லாம் சிறிதும் கவலைப்படாத கதிர்,

"ஹாய் ஹனி..." என்றபடி உள்ளே வர முயற்சிக்க... அதில் அவள் பயந்து போனவளாய் சற்று பின்னடைய... அது தான் சாக்கு என்று அவன் உள்ளே நுழைந்தான்.

"என்ன ஹனி... லவ் பண்றன்னு சொல்லிட்டு பத்தடி தள்ளியிருந்தா எப்படி...?" அவளருகே அவன் வர முற்பட, அவளோ பின்னால் நகர்ந்தாள்.

அன்று திருத்தமாக உடையணிந்து தன் தந்தையுடன் தொழில் பேசிய கதிரா இவன்...? இவன் யார்... எவர் என்று தெரியாமல் காதலித்துத் தொலைத்துவிட்டோமோ... ஆழம் தெரியாமல் காலை வைத்துவிட்டோமோ என்று மனதுக்குள் கலங்கியவள் கதிரை எப்படிச் சமாளிப்பது என்று யோசிக்க ஆரம்பித்தாள்.

"கதிர்... எதுவாயிருந்தாலும் பிறகு பேசிக்கலாம்... நீங்க உங்க வீட்டுக்கு போங்க..." தன்மையாய் சொன்னவளை பார்த்து வாய்விட்டு சிரித்தவன்,

"என்ன ஹனி... சின்னப் பாப்பா மாதிரி பேசற... நீ என்ன லவ் பண்ற... நீயும் நானும் கல்யாணம் பண்ணிக்கப் போறோம்... அப்போ உன் வீடு எனக்கு என்ன வேணும்...?" அவளிடம் கேள்வி கேட்டவன் பின்பு தானே தொடர்ந்தான்.

"உன் வீடு என் வீடு போல... அதனால இது என் வீடு... என்ன நான் சொல்றது சரி தானே...?" என்று உளறுபவனிடம் என்ன பேசுவது என்று தெரியாமல் வெறுமனே தலையை மட்டும் ஆட்டினாள்.

"குட்... இப்போ தான் நீ நல்ல பொண்ணு..." அவளைப் பாராட்டியவன், "உன் வீடு என்னதுன்னா... நீயும் எனக்குச் சொந்தம் தானே..." என்று கேட்டவன், "சோ... சோ... இப்போ எனக்கு நீ வேணும்..." சொல்லியபடி மேலும் அவளின் அருகில் நெருங்கி வர...

"கதிர்... திஸ் இஸ் தி லிமிட்... மரியாதையா வெளியில் போங்க... நீங்க குடிகாரன், இந்த மாதிரி ரோக்ன்னு தெரியாம நான் உங்களை லவ் பண்ணிட்டேன்... என் வாழ்க்கையில் நான் செஞ்ச முதல் தப்பும் கடைசித் தப்பும் இது தான்... நீங்க இப்படின்னு தெரிஞ்சிருந்தா நீங்க இருந்த திசைப்பக்கம் தலை வச்சு கூடப் படுத்திருக்க மாட்டேன்..."

"என்னடி பெரிய இவ மாதிரி பேசற... நான் பொறுக்கி தான்... குடிகாரன் தான்... அதுக்கு இப்ப என்னடி...? நீ தான சொன்ன என்னை லவ் பண்றதா... நானா உன் கிட்ட வந்து

வல்வை சொன்னேன்... எனக்கு நீ இப்போ வேணும்... நான் ட்ரிங்க்ஸ் அடிச்சா எனக்கு ஒரு பொண்ணு வேணும்... அது என்னை லவ் பண்ற நீயாயிருந்தா பெட்டர் இல்லையா... உனக்கும் நான் துரோகம் பண்ணாத மாதிரியும் ஆச்சு..." அவனின் அந்தக் கீழ்த்தரமான பேச்சில் திகைத்து விழித்தவள் அச்சத்துடன் நோக்கினாள்.

"கதிர்..." பயத்தில் விழி விரித்து அவனைப் பார்க்க...

"பேசி பேசியே டையத்தை வேஸ்ட் பண்ணாத ஹனி..." என்று சொல்லியபடி தன்னை நெருங்கிவிட்டவனை ஒன்றும் செய்ய முடியாமல் தன் கண்களை இறுக மூடி கொண்டாள். அவள் கண்ணிலிருந்து கண்ணீர் வழிந்தது. சிறிது நேரம் அமைதியாய் கழிய கதிர் தன்னை ஏதும் செய்யாததில் தன் பயத்தை உதறியவள் மெதுவே கண்களைத் திறந்து பார்த்தாள். கதிர் அவளை விட்டு விலகி நின்று தன் கைகளைக் கட்டி கொண்டு அவளை ஆழ்ந்து பார்த்தான்.

"இப்பவும் இந்தக் கதிர் உங்களுக்கு வேணுமாங்க...?" நிதானமான அவனின் கேள்வியில், அவளை மரியாதையாய் விளித்ததில் அவள் ஒன்றும் புரியாமல் அவனைப் பார்த்தாள். ஆனால் முதலிலிருந்த அச்சம் இப்போது அவளிடத்தில் இல்லை...

"நான் குடிக்கலைங்க... சும்மா சட்டை மேல தெளிச்சு விட்டுக்கிட்டேன்... என் மனைவி மேல சத்தியம் பண்ணியிருக்கேன்... நான் குடிக்க மாட்டேன்னு... வாழ்க்கையில் அந்தக் கர்மத்தை கையிலெடுக்கக் கூடாதுன்னு முடிவு பண்ணியிருந்தேன்... ஆனா நீங்க பண்ணின கூத்தால திரும்பவும் அதைக் கையிலெடுக்க வேண்டியதா போச்சு... சரி அதை விடுங்க... நான் கேட்ட கேள்விக்கு இன்னமும் நீங்க பதில் சொல்லலையே..." அவனின் நிதானத்தில் வாயைப் பிளந்து கொண்டு பார்த்து கொண்டிருந்தவள்... அவனுக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் விழித்தாள்.

"இந்தக் குடிகாரனை, பொம்பளை பொறுக்கியை வேணாம்ன்னு தானே நீங்க நினைச்சீங்க..." அவனின் இந்தக் கேள்விக்கு அவளின் தலை தாமாகக் குனிந்தது.

"ஆனா இந்தக் குடிகாரனையும், பொம்பளை பொறுக்கியையும் ஒருத்தி உயிருக்கு உயிரா காதலிச்சா... தாயாய் மடி தாங்கி நம்பிக்கை கொடுத்து... தகப்பனாய் மாறி நல்ல வழியைக் காட்டினாள்... அது யாருன்னு உங்களுக்குத் தெரியுமா...?" அவனின் கேள்விக்கு, தெரியாது என்று தலையசைத்தவளை பார்த்து,

"அது என் மனைவி... என் மதி பேபி.. என் பேபி..." என்றவனின் முகத்தில் பெருமிதம் வழிந்தது.

"ஒரு காலத்தில் இப்படிப்பட்டவனாய் ஊரை சுத்திட்டு இருந்தவனைத் தன் காதலால் மாற்றி... இன்னைக்கு மனுசனா மாத்தியிருக்கான்னா அவளோட காதலோட சக்தி எப்படிப்பட்டதுன்னு இப்பவாவது புரிஞ்சிக்கங்க... நான் கெட்டவன்னு தெரிஞ்சதும் அடுத்த நொடி மனசை மாத்திக்கிட்ட உங்க காதல் எங்கே... இல்லை எல்லாம் தெரிச்சிருந்தும் நான் தான் வேணும்ன்னு நின்னாளே... அவள் காதல் எங்கே... நிச்சயம் அவள் காதல் தான் உயர்ந்ததுன்னு அடிச்சு சொல்வேன்... என் பேபியோட காதல் முன்னாடி உங்க காதல் எல்லாம் தூசு... இவ்வளவு ஏன் அவள் முன்னாடி நீங்க கூட எனக்குத் தூசுக்குச் சமானம் தான்..." என்றவனின் பேச்சில் சந்தனா கொதித்து எழுந்துவிட்டாள்.

அவனை மாதிரி ஒருத்தனை காதலித்த பாவத்திற்கு அவளின் காதலை வேண்டுமானால் அவன் கேவலமாய்ப் பேசிவிட்டு போகட்டும். அதற்காக அழகான, தேவதை மாதிரியான தன்னை அந்தச் சாதாரணப் பெண் மதியோடு ஒப்பிடுவதைத் தான் அவளால் தாங்க முடியவில்லை.

"போதும் நிறுத்துங்க... என்னை யாருன்னு நினைச்சீங்க... தி க்ரேட் ராமோட ஒன்லி டாட்டர்... என்னைப் போய்ப் போயும் போயும் உங்க பொண்டாட்டி கூடக் கம்பேர்

பண்றீங்களே... நான் என்ன அவங்கள மாதிரி அசிங்கமாவா இருக்கேன்... உங்கள மாதிரி ஆளுக்கு அந்த மாதிரி பெண் தான் சரி... அடங்கிப் போறதுக்கு... உங்க மனைவி சொன்னதால தான் நான் உங்களைக் கல்யாணம் பண்ணிக்கவே சம்மதிச்சேன்... எனக்கு இருக்கிற வசதிக்கு உங்களை மாதிரி ஒருத்தனை கல்யாணம் பண்ணிக்கனும்ன்னு தலையெழுத்தா என்ன...?" ஆவேசமாய்ப் பேசியவளை அடித்து நொறுக்க வேண்டும் என்று ஆத்திரம் எழுந்தது அவனுக்கு.

அது தன்னைப் பேசியதால் அல்ல... தன் மனைவியைப் பேசியதால்... முதலில் இருந்த கதிராய் இருந்தால் அவனின் கை தான் முதலில் பேசியிருக்கும். ஆனால் இவன் மதியின் காதலுக்குக் கட்டுப்பட்ட காதல் கணவன் கதிரன்றோ... தன்னவளை தவிர மற்ற பெண்களை நினைப்பதற்கே யோசிப்பவன்... அடிப்பதற்கா அவளைத் தொட போகிறான். அதனால் கண்களை அழுந்த மூடி, கை முஷ்டியை இறுக்கி தன் கோபத்தைக் கட்டுக்குள் கொண்டு வந்தவன் பின் மெதுவே அவளை நிமிர்ந்து பார்த்தான்.

தன் அலைப்பேசியை எடுத்து அதிலிருந்த மதியின் புகைப்படத்தை அவளின் முகத்தின் முன் நீட்டியவன், "நல்லா பார்த்துக்கிட்டீங்களா... என் பேபி உங்களை விட அழகாயிருக்கல்ல...?"

கதிர் சொல்வது போல் அலைப்பேசியில் இருந்த மதி அப்படியொரு அழகியாய் இருந்தாள். உண்மையில் தன்னை விடப் பல மடங்கு அழகாயிருந்த மதியை கண்டு வாயடைத்து போனாள் சந்தனா.

"என்ன பேச முடியலையா? அவ அழகு தான்... என் பேபி எப்படியிருந்தாலும் என் கண்ணுக்கு அவள் மட்டும் தான் அழகு... அப்புறம் என்ன சொன்னீங்க... நீங்க வசதின்னா... உங்களை விடவும் வசதியானவள் தான் என் மனைவி..." என்றவன் அவளின் நகைக்கடை பேர் சொல்லியவன், "உங்க ஊரில் கூட ஒரு ப்ரான்ஞ் இருக்குமே... நீங்க

கேள்விப்பட்டது இல்லை... அவங்க வீட்டு பொண்ணு தான் மதி... இதைக் கூட நான் ஏன் உங்க கிட்ட சொல்றேன்னா... அவளைப் பத்தி தவறா பேசியதால தான்... இல்லைன்னா இது எதையும் நான் சொல்லியிருக்க மாட்டேன்... ஏன்னா காதல் என்பது அந்தஸ்து பார்த்து வர்றது இல்லை... மனசை பார்த்து வர்றது... இதை உங்க கிட்ட போய்ச் சொல்றேனே நானொரு லூசு... மத்தவங்க ப்ளஸ், மைனஸை அப்படியே ஏத்துக்கிட்டு உண்மையா நேசிக்கிறது பேரு தான் காதல்... இல்லைன்னா அதுக்குப் பேரு வேற... இனியாவது புத்தியோட பொழைச்சுக்கோங்க..." என்றவன் அங்கே இருந்து செல்ல முற்பட்டான். பின் நின்று அவளிடம்,

"உங்களுக்கு என்னை விட நல்ல பையன் மாப்பிள்ளையா கிடைப்பான்... அப்புறம் உங்களை ஹனின்னு கூப்பிட்டதுக்கு என்னை மன்னிச்சுக்கோங்க... வேற வழியில்லாமல் சொல்ல வேண்டியதா போச்சு... இந்த வார்த்தைகள் எல்லாம் என் பேபிக்கு மட்டுமே சொந்தமானது..." என்றவன், "இனியும் உங்களோடு பிசினஸ் காண்டாக்ட் வச்சிக்க நான் விரும்பல... நீங்களே உங்க அப்பா கிட்ட என்ன சொல்ல முடியுமோ... அதைச் சொல்லி இதைக் கேன்சல் பண்ணும் வழியைப் பாருங்க... இனியொரு முறை உங்க முகத்தில் விழிக்கக் கூட எனக்கு விருப்பமில்லை..." என்றவன் அவளின் பதிலை எதிர்பாராமல் அவளின் வீட்டை விட்டு வெளியேறினான். அவனின் பேச்சில் கல்லாய் சமைந்து நின்ற சந்தனா என்ற சிலைக்கு உணர்வு வர வெகுநேரம் பிடித்தது.

சந்தனாவின் வீட்டிலிருந்து வெளியேறிய கதிருக்கு இப்போது தான் மனம் லேசான மாதிரியிருந்தது. நேரே தன் வீட்டிற்கு வந்தவன் மதுபானம் தெளித்திருந்த உடையைக் களைந்து குளித்துவிட்டு புத்துணர்வோடு வந்தவன் தன் அலமாரியிலிருந்து மதிக்கு பிடித்த உடையை எடுத்து அணிந்து கொண்டான். வெகு உற்சாகமாகக் காரிலேறியவன் மதியின் வீட்டை நோக்கி பயணமானான். அவளின் வீட்டின் அழைப்புமணியை

அடித்தவன் அவளின் வரவிற்காக ஆவலுடன் காத்திருந்தான். அவளுக்காய் ஒரு வருடம் காத்திருந்தவனுக்கு இந்தச் சில நொடி காத்திருப்பது கொடுமையாய் இருந்தது. காத்திருந்த ஒவ்வொரு நொடியும் நரகமாய் நகர்வதை அன்று தான் உணர்ந்தான். அவனின் எண்ணப்படி கதவை திறந்த மதியை வெகு வருடங்கள் பிரிந்தவன் போல் ஆவலுடன் பார்த்தவன் அவளைப் பார்வையால் விழுங்கினான்.

கதிரை அங்கே சற்றும் எதிர்பாராத மதி முதலில் திகைத்தவள் பின் அவனின் வருகையைக் கண்டு உள்ளுக்குள் மகிழ்ந்தாள். அவனின் வரவில் மனம் பாகாய் உருக நின்றவள்... அவனின் உருவத்தை ஆழமாய் மனதுக்குள் பதிய வைக்க எண்ணி அவனைக் கண்ணிமைக்காமல் பார்த்தாள். அவளின் அந்தப் பார்வையில் அவனின் முகம் கொஞ்சம் கொஞ்சமாய் மாறத் துவங்கியது. அடுத்த நொடி அவனது வலது கை அவளின் இடது கன்னத்தை ஓங்கி பதம் பார்த்திருந்தது.

நீ எங்குச் சென்றாலும் நிழலாய் உனை தொடர்வேன்...
நீ என்னை விட்டு நீங்கி சென்றாலும் காற்றாய் உனை தொடர்வேன்...
நீ உயிர் நீத்தாலும் உயிராய் உனை தொடர்வேன்
அன்பே!!!
இப்படிக்கு,
நீ...

நாளை : 28

திடீரென்று தன்னை அடித்த கதிரை அச்சத்துடன் பார்த்த மதியின் கை அவளையும் அறியாமல் தனது கன்னத்தின் மீது பதிந்தது. அவளால் இன்னமும் நம்ப முடியவில்லை... அவன் தன்னை அடித்துவிட்டான் என்பதை. அவனின் செயலில் அவளின் கண்களில் கண்ணீர் அணையை உடைத்துக் கொண்டு வரும் வெள்ளம் போல் பெருகி வழிந்தது.

"பாவா..." என்றவளின் குரல் அவளுக்கே கேட்கவில்லை.

"என்ன கோவா... இப்பத்தான் நான் உன் பாவாங்கிற நினைப்பு வந்துச்சோ... எவ்வளவு தைரியமிருந்தா என்னை விட்டு ஓடி வருவ...? உன்னையெல்லாம்..." பேசி கொண்டே உள்ளே நுழைந்தவன் மீண்டும் அடிப்பதற்குத் தன் கையை ஓங்கினான். அப்போது அவனின் கண்ணில் அங்கே மாட்டப்பட்டிருந்த ஆதர்ஷின் புகைப்படம் பட... முயன்று தன் கோபத்தைக் கட்டுக்குள் கொண்டு வந்தவன்,

"கிளம்பு..." அவன் சொன்னதைக் கேட்டு மொழி தெரியாத குழந்தை போல் விழித்தவளை கண்டு அவனுள் இரக்கம் சுரந்தாலும்... அவள் செய்து வைத்த காரியத்தின் விளைவால் ஏற்பட்ட கோபம் அவன் கண்ணை மறைக்க அவளை முறைத்துப் பார்த்தான்.

"கிளம்புன்னு சொன்னேன்..." அடிக்குரலில் உறுமியவனின் கோபத்தில் அவளின் தளிர்மேனி தூக்கிவாரி போட்டது. அதைக் கண்டவன் சினம் இன்னமும் அதிகரித்தது.

"நான் ஒண்ணும் காட்டுக்கு கூப்பிடல... என்னோடு வாழ என் வீட்டுக்கு தான் கூப்பிடறேன்..." அவனின் பேச்சில் அவளின் மனம் சுணங்கியது.

'அவனோட வீடாமே... அப்போ அவன் வீட்டில் எனக்கென்ன வேலை...' அவள் மனம் முரண்டியது.

"உங்க வீட்டில் நீங்க இருக்கிறது முறை... அது போல் என் வீட்டில் நான் இருக்கிறது தான் முறை..." அவளின் பேச்சில் ஒரு நொடி நெற்றியை சுருக்கி யோசித்தவன் முகம் மறுநொடி மலர்ந்தது. அவளின் பேச்சின் அர்த்தம் புரிந்ததும் அவனின் கோபம் கூடச் சற்று மட்டுப்பட்டு விட்டது.

'ஓகோ... பேபிக்கு கோபமா...?' என்று மனதுக்குள் சிரித்துக் கொண்டவன் அதை அவளிடம் காட்டி கொள்ளாமல்,

"ஹப்பாடி... சேர்ந்தாப்பல நாலு வார்த்தை பேசிட்ட... அதிசயம் தான் பேபி..." தன் கைகளைத் தட்டியவன், "சரி நம்ம வீடு... ஓகேவா... இப்போ கிளம்பலாமா...?" தன்மையாகக் கேட்டான்.

"இல்ல நான் வரல... வேணாம்..." மறுத்தவளை கண்டு அவனின் கோபம் மீண்டும் முருங்கை மரம் ஏறியது.

"உன் கிட்ட பெர்மிசன் கேட்டு செய்றளவுக்கு எனக்குப் பொறுமை இல்லை..." என்றவன் அவளின் பதிலை எதிர்பாராமல் தன் இரு கரம் கொண்டு அவளைத் தூக்கினான். அவனின் செயலில் முதலில் திகைத்தவள்... பின் அவனின் பிடியிலிருந்து திமிறினாள்.

"என்னை விடுங்க பாவா..." என்றபடி அவனின் கைப்பிடியிலிருந்து அவள் துள்ள... அவனோ அவளை நழுவாமல் பிடிப்பதற்காக அவளின் இடையைப் பற்றியிருந்த தனது கையில் அவனையும் அறியாமல் அழுத்தம் கொடுக்க... அதில் அவளின் உலகம் ஸ்தம்பித்தது.

எவனின் அருகாமை கிடைக்கவே கிடைக்காது என்று நினைத்து ஏங்கினாளோ... அவனின் அருகாமையில் அவனின் அந்தத் தொடுகையில் அவளின் உடலும், உள்ளமும் உருகி குழைந்தது. அவளையும் அறியாமல் அவளின் கரங்கள் அவனின் கழுத்தில் மாலையாகக் கோர்க்க... அவனிடமிருந்து எழுந்த அவனின் பிரத்யேக

நறுமணத்தை நுகர்ந்தது அவளது நாசி. என்னமோ அவனையே தன்னுள் நிரப்பிக் கொள்வது போல் அவனின் வாசனையை மூச்சை இழுத்து பிடித்து நுகர்ந்தவள் முகம் பரவசத்தில் திளைத்தது.

"ப்ளீஸ் பாவா விடுங்க..." அவளின் குரல் குழைந்து ஒலித்தது. அவனிடமிருந்து எந்தப் பதிலும் வரவில்லை... அவளையும் கீழே இறக்கிவிடும் வழியையும் காணோம். மெதுவே கண்களைத் திறந்து பார்த்தவளின் விழி வட்டத்தில் அவளையே குறும்பு புன்னகையுடன் பார்த்து கொண்டிருந்தவனின் முகம் தெரிய... அப்போது தான் தன் நிலையை அவள் உணர்ந்தாள். படக்கென்று அவன் கழுத்தில் கோர்த்திருந்த கைகளை விடுவித்துக் கொண்டவள் அவனின் முகம் பார்க்க கூசினாள்.

அவளின் நிலை கண்டு கதிருக்கு ஒரு பக்கம் பெருமிதமாக இருந்தது... மறுபக்கம் சந்தோசமாகவும் இருந்தது. அவளிடம் நிறையப் பேச வேண்டும் என்று அவன் மனம் ஆசை கொண்டது. ஆனால் இருக்கும் சூழ்நிலை கருதி தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டவன்... அவளைக் கீழே இறக்கிவிட்டான்.

"போகலாமா..." என்றவனைப் பார்த்து ஏதோ சொல்ல வந்தவளை கையமர்த்தித் தடுத்தவன்,

"எதுவாகயிருந்தாலும் நம் வீட்டில் போய்ப் பேசிக்கலாம் பேபி..." என்றவன் "எதுவும் எடுத்து வந்திருந்தால் அதையும் எடுத்துட்டு வா..." என்றவனின் பார்வையில் அங்கே இருந்த அவளது பை விழ அவளைக் கேட்காமல் அதைக் கையில் எடுத்து கொண்டவன் அவளின் கையைப் பிடித்துக் கொண்டு அங்கிருந்து வெளியேறினான். தான் என்ன பேசினாலும் அதற்கு மதிப்பில்லை... அதை அவன் கேட்க போவதும் இல்லை என்பதை உணர்ந்தவளாய் அவனுடன் அமைதியாய் நடந்தாள். இல்லை அவளின் காதல் கொண்ட மனதின் விருப்பமும் அது தானோ என்னமோ...?

வீடு வரும் வரை அவர்களிடையே எந்தவித பேச்சும் இல்லை. தங்கள் அறைக்குள் நுழைந்ததும் அவளின் உடலில் நடுக்கம் ஏற்பட்டது. இதுவரை இருந்த இணக்க நிலை மாறி அவன் சிங்கமாய் மாறி கர்ஜித்துத் தன்னைக் குதறியெடுக்கப் போகிறான் என்பதை உணர்ந்தவளாய் அச்சத்துடன் அவள் நின்றிருந்தாள். அவனும் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். அவளின் உருவத்தில் தெரிந்த மாறுபாட்டை அவன் இப்போது தான் உணர்ந்தான்.

அந்தச் சந்தனா சொன்னது போல் உருக்குழைந்து காணப்பட்ட அவளின் தோற்றம் அவனின் மனதில் இரத்த கண்ணீரை வடிக்கச் செய்தது. அவளோடு படுக்கையைப் பகிர்ந்து கொண்ட தான் அவளைக் கொஞ்சமும் உணராமல் போனதை நினைத்து மனதில் வெந்தான். எல்லோரும் சொல்வது போல் தானொரு காமுகன் தான்... அதனால் தான் அவளோடு உடலோடு உறவாடிய தான்... அவளின் மனதோடு உறவாட தவறி போனதை உணர்ந்தவனுக்குக் குற்றவுணர்ச்சி மிகுதியாகி அது அவனின் இதயம் முழுவதும் பரவி வலிக்கச் செய்தது. தன்னைப் புரிந்து கொள்ள மறுக்கிறாளே என்று ஆதங்கமடைந்தவன்... இப்போது அவளைத் தான் புரிந்து கொள்ளாமல் போனோமே என்று ஆதங்கமடைந்தான்.

அதிலும் புற தோற்றத்தில் அவள் காட்டாத அக்கறையில் வாழ்க்கை மீதான அவளின் பற்றற்ற நிலையை உணர்ந்தான். தன் காதலுக்காகவாவது அவள் வாழ்க்கையை நேசிக்கக் கூடாதா என்று எண்ணினான். நகைக்கடை அதிபரான அவள் தன் கழுத்தில் அவன் அணிவித்த தாலிக்கொடியுடன், காதில் சிறிய தோடு, கையில் மெல்லிய வளையல் என அவளிருந்த கோலம் அவனை மிகவும் உறுத்தியது. அப்போது தான் அவளின் கை விரலில் அவன் அணிவித்த அந்த வைர மோதிரத்தை கண்டான். அதைக் கண்டதும் அவனின் மனதில் மகிழ்ச்சி பொங்கியது. தன்னை உணரவில்லையோ... தன் காதலை உணரவில்லையோ என்று கழிவிரக்கத்தில் சிக்கி

தவித்தவன் இப்போது அவளின் காதலில் சுகமாய்ச் சிக்கி தவித்தான். தன் மீது அவளுக்குக் காதல் இருக்கிறது... ஆனால் அதைவிட ஏதோ ஒன்று அவளின் மனதை உறுத்துகிறது என்று முதன்முறையாய் அவளின் மனதை சரியாய் படித்தான் அவன்.

"பேபி..." மெதுவே அழைத்தவன் குரல் கேட்டும் அவளால் நிமிர்ந்து பார்க்க முடியவில்லை. அவளின் அருகில் சென்றவன் தன் கரத்தால் அவளின் முகத்தை நிமிர்த்தியவன்... தான் அடித்ததால் கன்றி சிவந்த அவளது கன்னத்தைக் கையால் வருடியவன்...

"சாரி பேபி... ரியலி சாரி..." மெய்யான வருத்தத்தோடு கூறியவனைப் பார்த்தவளின் பார்வை அவனைக் குற்றம் சாட்டியதோ இல்லை அவன் அப்படி நினைத்தானோ என்னவோ...,

"அதான் சாரி கேட்கிறேன்ல... என்னை மன்னிக்கக் கூடாதா...?" என்றவன் சட்டென்று தன் முரட்டு உதடுகளை அவளின் பூப் போன்ற கன்னத்தில் அழுத்தமாய்ப் பதித்தெடுத்தான். அவன் அடித்ததால் சிவந்த கன்னம் இப்போது அவனின் முத்தத்தினால் இன்னமும் சிவந்து அவளை அழகாய்க் காட்டியது. ஏற்கெனவே கலாரசிகன் அவன்... இப்போது இன்னமும் அவளின் ரசிகனாய் மாறி அவளை ரசித்துக் கொண்டிருந்தான். அவனின் வெட்கங்கெட்ட பார்வையில் பாவையவள் மேலும் மேலும் சிவந்து செங்கொழுந்தாய் மாறி நின்றாள்.

"பேபி... ஏன் என்னை விட்டுட்டு போன... நீ போனதும் என் உலகமே அஸ்தமித்தது போலாகிருச்சு... என் வாழ்க்கையில் இப்படியொரு வேதனையை அனுபவிச்சது கிடையாது. அப்படிச் சொல்லாமல் கொள்ளாமல் என்னை விட்டு பிரியற அளவுக்கு நான் என்ன தப்பு செஞ்சேன்...? முதல்ல இருந்த கதிராவது தப்பு செஞ்சவன் தான்... தப்பானவன் தான். ஆனா இப்போ இருக்கிறவன் உனக்கு மட்டுமே சொந்தமான பாவா மட்டும் தான்... அப்படியே என் மேல் தப்பிருந்தா... என் சட்டையைப் பிடிச்சுக் கேட்டிருக்க

வேண்டாமா... ஏண்டா இப்படிப் பண்றன்னு? அந்தளவுக்கு உரிமை உனக்குக் கொடுத்திருக்கிறதா தான் நான் நினைக்கிறேன்..." அவனின் பேச்சில் இதுவரை அவளைச் சூழ்ந்திருந்த மாயவலை அறுந்து விழ... அவனை விட்டு விலகி ஜன்னல் பக்கம் போய் நின்றவள் வெளியே வெறித்துப் பார்த்தாள். அவளின் செயலில் அவன் முகம் சுருங்கியது... யோசனையாய் அவளைப் பார்த்தான்.

இலக்கற்று வெறித்துக் கொண்டிருந்த மதியோ உள்ளத்துக்குள் பெரும் போராட்டம் ஒன்றை போராடி கொண்டிருந்தாள். தான் என்ன நினைத்து விலகியது... ஆனால் தான் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்ற நினைவில் தன்னைக் குறித்து உடலளவில், உள்ளமளவில் அருவருத்து போனாள். அவனின் அருகாமையில் வெட்கங்கெட்டு போய் இப்படியா தன்னை மறப்பது...? அவனின் அணைப்பில் மானங்கெட்டு போய் இப்படியா உருகி குழைவது...? என்று மனதில் தன்னை வெறுத்தாலும், திட்டினாலும்... மீண்டும் மீண்டும் அவனை நாடிய உள்ளத்தை அவளால் என்ன செய்வது என்று தெரியவில்லை. முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு வரவழைத்துக் கொண்ட தைரியத்துடன் அவனைத் திரும்பி பார்த்தவள்,

"நாம பிரிஞ்சறலாம்..." அவளின் வார்த்தைகள் அவன் எதிர்பார்த்த ஒன்று தான் என்றாலும் அதை அவள் வாயால் கேட்கும் போது அவன் அதிர தான் செய்தான். அவனின் முகத்தில் கடுமை பரவியது. அவனுக்கு எழுந்த ஆத்திரத்தில் அவளை மீண்டும் அடித்து விடுவோமோ என்ற பயத்தில் தன் கைகள் இரண்டையும் பேண்ட் பையில் விட்டுக் கொண்டு அருகிலிருந்த மேஜையில் சாய்ந்து நின்றவன்,

"ஏனோ...?" என்றான் ஒற்றைச் சொல்லாக... என்னவென்று தான் அவளும் சொல்வாள்.

"நமக்குள் ஒத்துவராது..." மெல்லமாய்ச் சொன்னவளை பார்வையால் சுட்டெரித்தான் அவன்.

"ம்... அருமையான கண்டுபிடிப்பு... அப்புறம்..." கதை கேட்கும் சுவாரஸ்யத்துடன் பேசியவனின் முகத்தில் மருந்துக்கும் அந்த எண்ணம் இல்லை.

"இந்த அங்கீகரிக்கப்படாத கல்யாணத்தால் வீண் தலைகுனிவு தான்..."

"யாருக்கு...?"

"ரெண்டு பேருக்கும் தான்..."

"சோ..." ஆழ்ந்து பார்த்தவனின் பார்வை தாங்க முடியாமல் தலை குனிந்தவள்,

"உங்களுக்கு நான் பொருத்தமானவள் இல்லை..."

"ஆமாம்... ஆமாம்... நான் அந்த ஏகபத்தினி விரதன் ராமன் பாரு... தப்பே செய்யாதவன் இல்லையா... அதனால நீ எனக்குப் பொருத்தம் இல்லை தான்..." அவனின் வார்த்தைகளில் பரவி கிடந்த கேலியில் அவளின் இதழ்கள் புன்னகையில் வளைந்தது. அதைக் கண்டு அவனின் மனதில் சிறு நிம்மதி பரவியது.

"அம்மா... தாயே... இப்படி இன்சால்ட்மென்ட் பேசிசில் பேசி என் உயிரை வாங்காமல்... மொத்தமாய்ச் சொல்லி முடிச்சு ஒரேடியா என் உயிரை வாங்கிரு..." என்றவனின் பேச்சில் மனமுடைந்தவள்,

"பாவா..." அவனைப் பரிதாபமாய்ப் பார்த்தாள். 'இதுக்கு ஒண்ணும் குறைச்சல் இல்ல...' மனதுக்குள் நொடித்துக் கொண்டான் அவன்.

"சரி... சரி... சொல்ல வந்ததைச் சொல்லு..."

"நீங்க சொல்ற மாதிரி சமுதாயத்தை மதிக்காம நாம வாழ முடியாது... நீங்க ஆம்பிளை... நீங்க என்ன தப்பு செஞ்சாலும் பெருசா பேசாது இந்தச் சமுதாயம்... இதே இது நாங்க அதாவது பெண்கள் தப்பு செஞ்சா அதுக்குக் கண்ணு மூக்கு காது வச்சு பேசுவாங்க... அன்னைக்கு அந்தப் பையன் பேசிய மாதிரி..." அவள் சொல்லும் போது

அவனுக்குப் பெண்களை நினைத்து பரிதாபமாய் இருந்தது. அன்று பெண்களைப் போகப் பொருளாய் பார்த்தவன் இன்று மதியின் காதலில் கட்டுண்டு பெண்ணினத்திற்காக வேதனைப்பட்டான்... அதுவும் தன் பெண்ணிற்காக... அவள் அருகில் சென்று 'நானிருக்கிறேன் உனக்கு...' என்று ஆறுதல் சொல்ல விழைந்தது அவனது காதல் மனம். ஆனால் அவளின் மனத்திறப்பிற்காகப் பொறுமை காத்து நின்றான்.

"எனக்கு இந்த மாதிரி வாழ்றது மூச்சடைக்கிற மாதிரியிருக்கு... இப்படியே போனால் ஒருநாள் இல்லை ஒருநாள் நான் செத்து போவது உறுதி..." என்றவளின் வார்த்தையில் அவனின் உடல் இறுகியது.

"என்னமோ யாருக்கும் தெரியாமல் தப்பு செய்யற மாதிரி... இரட்டை வாழ்க்கை வாழற மாதிரி எனக்கு உடம்பெல்லாம் கூசற மாதிரியிருக்கு... நான் என்ன தான் செய்வேன்... அதான் உங்களை விரும்பற சந்தனா கிட்ட உங்களைச் சேர்த்து வச்சிட்டு உங்களை விட்டு போனேன்... நான் உங்களுக்கு வேணாம்..." அழுத்தமாய்ச் சொன்னவளின் வார்த்தையில் அவனின் பொறுமை காற்றில் பறந்தது. வேக எட்டுக்கள் வைத்து அவளருகில் வந்தவன் அவளின் தோளை அழுந்த பற்றி அவளின் கண்களை உற்று நோக்கி,

"ஓகோ... இதுக்குத் தான் நேத்து அப்படி என் கிட்ட உருகி குழைஞ்சீங்களோ...?" எந்த வார்த்தை அவனின் வாயிலிருந்து வந்துவிடும் என்று பயந்தாளோ அதை அவன் சொன்னதும்... ஆடைகளற்று நிற்பது போல் அவள் உடல் கூசி போனது... அந்த நினைவில் அவள் மனம் அருவருத்துப் போனது. அதை உணராமல் அவன் பேசி கொண்டே போனான்.

"இங்கே பாரு நீ என் கூடச் சேர்ந்து வாழ்றியான்னு தான் நான் கேட்டேன்... நான் யார் கூட வாழணும்ன்னு உன்னைக் கேட்கல... இந்தச் சந்தனா, வந்தனான்னு ஏதாவது ஏழரையைக் கூட்டின... அப்புறம் நான் மனுசனா

இருக்க மாட்டேன்... இப்போ தான் அந்தச் சந்தனா தொல்லை முடிஞ்சதுன்னு நிம்மதியாயிருந்தா திரும்ப அவளைப் பத்தி பேசி என் மூடை ஸ்பாயில் பண்ணாதே..." என்றவனைத் தன் மனதை மறைத்துக் கொண்டு புரியாமல் பார்த்தவள்,

"அவளை என்ன செஞ்சீங்க...?" கண்களின் பயத்துடன் கேட்டவளை பார்த்து,

"ம்... ரே பண்ணிட்டேன்..." கோபமாய்ச் சொன்னான்.

"ஆங்..." திகைத்து போனவளாய் விழி விரிய நின்றவளின் முகத்தில் என்ன கண்டானோ... அவள் முகம் நோக்கி குனிந்தவன் அவள் கண்ணிரண்டிலும் மிருதுவாய் முத்தமிட்டான். பின்பு தான் சந்தனாவிடம் பேசியதை கூறினான். ஆச்சிரியமாய் அவனைப் பார்த்தவளை,

"நான் எதைச் சொன்னாலும் நம்பிருவியாடி... லூசு... லூசு..." அவள் தலையில் தட்டியபடி சொன்னவன் வாய்விட்டுச் சிரித்தான்.

"ப்ளீஸ்... இப்படியெல்லாம் பேசாதீங்க..." கண்களில் வலியுடன் கூறியவளை கண்டு அவனின் சிரிப்பு அப்படியே நின்றது.

"சும்மா சொன்னதையே உன்னால் தாங்க முடியல... இதுல நீங்க என்னை அவளுக்குத் தாரைவார்த்து கொடுக்கிறீங்களோ... இன்னொரு தடவை அப்படிச் சொன்ன பல்லை உடைப்பேன்..." அவனின் வார்த்தையில் திகைத்தவள் பின் தலையைக் குனிந்தாள்.

"உன் மனசை ஆட்டுவிக்கிற விசயம் இது மட்டும் தானா... இல்லை வேறு ஏதுமிருக்கா...?" அவன் கேட்ட போதே அவள் தன் மனதை குழப்புகிற எல்லா விசயங்களையும் சொல்லியிருக்கலாம்... ஏனோ அந்த நிமிடம் அவளுக்கு எதுவும் தோன்றவில்லை.

"நம்ம கல்யாணத்தைச் சமூகம் அங்கீகரிக்கணும்... அவ்வளவு தானே... அதை நான் பார்த்துக்கிறேன்... ஆனா அதுவரை நீ என்னை விட்டு ஓடி போக மாட்டேன்னு சத்தியம் செய்..." அவள் முன் கை நீட்ட... அவளோ தன் கரங்களை இறுக மூடி கொண்டு அசையாமல் நின்றாள்.

"ஆக நீ நான் சொல்றதை கேட்க மாட்ட... அப்படித்தானே..." என்றவன் அவளின் கையைப் பிடித்து வலுக்கட்டாயமாய்த் தன் கை மீது வைத்தவன், "இங்கே நல்லா பார்த்துக்கோ... நீ தான் ப்ராமிஸ் பண்ணியிருக்க... அப்படி இதை மீறணும்ன்னு நீ நினைச்சின்னா..." என்று நிறுத்தியவன் அவள் கண்களைக் கூர்ந்து பார்த்தான். அவனின் முகம் தீவிரமாய் மாறியிருந்தது.

"உன் காலை உடைக்கக் கூடத் தயங்க மாட்டேன்..." என்றான் தீவிரமாகக் காதல் தீவிரவாதியாய்...

"அப்படி உடைச்சு போட்டா... நீ என் கூடத் தானே இருந்தாகணும்... உன்னை என் கூட வச்சிக்கிறதுக்கு நான் எந்த எல்லை வரைக்கும் போவேன்..." அவனின் எல்லையைத் தெரிந்து வைத்திருந்தவள் பேச வார்த்தை இல்லாமல் வாய் மூடி மௌனியானாள்.

அவள் பல்லால் கீழுதட்டை இறுக கடித்துக் கொண்டு நின்றிருந்த விதம் அவனைக் கவர... தன் கை விரல் கொண்டு அவளின் உதட்டை விடுவித்தவன் அதை மென்மையாய் அளந்தான். பின்பு என்ன நினைத்தானோ அவள் இதழை தன் உதட்டால் இறுக கவ்வினான். அவனின் செயிலில் முதலில் அதிர்ந்தவள் பின் கண்மூடி கிறங்கி போய் நின்றாள். வெகு நேரம் கழித்து அவளை விடுவித்தவன்,

"இன்னும் ஒரு மாதம் இது தாங்கும்..." தனக்குள் பேசியவனைப் பார்த்து அவள் புரியாமல் விழிக்க... அவளின் தலையை மென்மையாய் வருடி கொடுத்தவன்,

"ஓகே லீவிட்... நீ சொன்னதை நான் செஞ்சுட்டு வந்து அதுக்கப்புறம் நான் உன் புருசன்ங்கிறதை

நிரூபிக்கிறேன்... அது வரைக்கும் நான் உன்னைத் தொட மாட்டேன்... சரி தானே பேபி..." அவன் சொன்னதைக் கேட்டு அவளின் உள்ளம் அதிர்ந்தாலும்... அப்படி என்ன செய்து தங்கள் திருமணத்தை அங்கீகரிக்க வைப்பான் என்ற குறுகுறுப்பு அவள் உள்ளத்தில் எழுந்தது என்னமோ நிஜம்...!

"அது சஸ்பென்ஸ்..." அவளின் மனதை படித்தவனாய் சொல்லியவன் கண்ணைச் சிமிட்டி சிரித்தான் அவளின் ஆசை கணவன் கதிர்.

காதலுக்காய் மெழுகுவர்த்தியாய் உருகி கரைபவளே...
உன்னை என்னுள் ஊற்றும் அகல் விளக்காய் நான் வரவா...???
மீண்டும் மீண்டும் நீ உருகி கரைந்தாலும்... மீண்டும் மீண்டும் உனை என்னுள் ஊற்றி...
மீதி தொலைவையும் இணைப் பிரியாமல் கடப்போமா...???
வா... நாளை நாமாக...!!! வாழ்வோம் நாம் காதலாக...!!!

நாளை : 29

"குட்மார்னிங் பேபி..." கதிரின் குரலில் கண் விழித்த மதி அவனைக் கண்டு ஆச்சிரியம் அடைந்தவளாய் விழி விரித்தவள் பின் தன் கண்களைக் கடிகாரத்தின் புறம் திருப்பினாள். அதிகாலை ஐந்து மணியாகி இருந்தது. அவனைக் கேள்வியாய் பார்த்தவளை,

"நேத்தே சொன்னேனே கல்யாணத்துக்குப் போகணும்ன்னு... சீக்கிரம் எழுந்திருச்சுக் கிளம்பு... கிளம்பு..." அவளை அவசரப்படுத்தினான் அவன்.

"அதுக்கு நான் எதுக்கு...? நீங்க மட்டும் போயிட்டு வாங்க..." மெல்லிய குரலில் தன் மறுப்பைத் தெரிவித்தாள்.

"ம்... பொண்டாட்டி இல்லாமல் போனால் மண்டபத்துக்குள் விட மாட்டாங்களாம்... அதான் உன்னைக் கூப்பிடறேன்..."

நக்கலாய் சொன்னவன், "இந்த மாதிரி லூசுத்தனமா பேசாம... ஒழுங்கா கிளம்பும் வழியைப் பாரு... குடும்பத்தோடு வரணும்ன்னு தான் அழைப்பு வந்திருக்கு..." அவன் அவ்வளவு சொல்லியும் யோசனையாய் அமர்ந்திருந்தவளை கண்டு, "இப்போ நீயே குளிக்கப் போறியா... இல்லை நான் உன்னைக் குளிக்க வைக்கவா...?" என்றபடி அருகில் வந்தவனை அழுத்தமாய்ப் பார்த்தபடி இருந்தவளை கண்டு அவனுக்கு அலுப்பாய் வந்தது. தான் சொன்னதை நிறைவேற்ற முடியாமல் நிற்கும் தன் நிலை கண்டு அவனுக்கே சலிப்பாய் வந்தது.

"இவ ஒருத்தி... நேரம் காலம் தெரியாமல் லுக் விட்டுட்டு..." தனக்குள் முணுமுணுத்தவன், "ப்ளீஸ் பேபி... படுத்தாதடி... உன் பாவா பாவம்ல..." ஏறக்குறைய கெஞ்சியவனைக் கண்டு பரிதாபப்பட்டவளாய் எழுந்தவள்,

"பெருசா பேச்சுக்கு மட்டும் குறைச்சல் இல்லை..." வெடுக்கென்று கடுகடுத்தவள் நேரே குளியலறைக்குள் நுழைந்து அதன் கதவை அறைந்து சாத்தினாள்.

அவள் பேசியதன் அர்த்தம் புரிந்தவனின் உதடுகள் புன்னகையில் வளைந்தது. அவள் சொல்லவதும் உண்மை தான். அன்று அவன் சொன்னது போல் இந்த ஒரு மாத காலமாக அவளை அவன் தொடவில்லை. கணவன் என்ற உரிமையை அவளிடம் எடுக்கவும் இல்லை. அது இந்தளவுக்கு அவளைப் பாதிக்கும் என்று அவன் நினைத்து கூடப் பார்க்கவில்லை. குற்றவுணர்வில் தவிக்கும் அவள் இப்போது நிம்மதியாக உணர்வாள் என்றே அவன் நினைத்திருந்தான். ஆனால் மதி சொன்னதை வைத்து பார்க்கும் போது அவளுள்ளும் தன்னைப் போல் தேடல் இருப்பதை உணர்ந்தவனுக்குச் சந்தோசமாய் இருந்தது.

"கவலைப்படாதே பேபி... இன்றோடு நான் இதுக்கு ஒரு முடிவு கட்டுறேன்..." தனக்குள் சொல்லி கொண்டவன்

கடந்த ஒரு மாத கால வாழ்க்கையை நினைத்துப் பார்த்தான்.

சந்தனா தன் தந்தையிடம் என்ன சொன்னாளோ தெரியாது... ராமே அவனை அழைத்துப் பேசினார். "கதிர்... பெர்சனல் லைப்பையும் பிசினஸையும் எப்பவுமே ஒண்ணா சேர்த்து வச்சு பார்க்க கூடாது... எங்களோட ப்ராஜெக்ட்டை நீங்க தான் பண்றீங்க..." வலியுறுத்தி கூறியவர் தங்கள் சார்பாக அவரின் உதவியாளரை அனுப்பி வைத்தார். அந்த மட்டும் சந்தனா முகத்தில் விழிக்கத் தேவையில்லை என்பதை உணர்ந்தவன் சற்று நிம்மதியடைந்தான்.

தொழிலை சமாளித்தவனால் வீட்டில் மதியை தான் சமாளிக்க முடியாமல் போனது. அவளைப் பழைய மாதிரி கொண்டு வருவதற்குள் அவன் தலையால் தண்ணி குடிக்க வேண்டியிருந்தது. அவளின் தோற்றத்தில் மாற்றம் கொண்டு வந்த அவனால் அவளின் கண்களின் ஒளியை மட்டும் திரும்பக் கொண்டு வரவே முடியவில்லை. தன்னை முதன் முதலாய் பார்த்த போது அவள் கண்கள் மின்ன, உற்சாகம் பொங்க நின்றிருந்த தோற்றத்தை மனக்கண்ணில் கொண்டு வந்தவன் அதை இப்போது இருக்கும் மதியுடன் ஒப்பிட்டு பார்த்து மனம் நொந்து தான் போனான். அவனும் அவளை மகிழ்விக்க என்னவெல்லாமோ செய்து பார்க்கிறான்... ஆனால் பலன் என்னமோ பூஜ்யம் தான். இதோ முதன்முறையாக அவளின் உள்ளத்து ஏக்கத்தை அவனிடம் வெளியிட்டு இருக்கிறாள். அதை உடனே நிறைவேற்றி வைக்க அவனின் காதல் கொண்ட நெஞ்சம் துடித்தது. ஆனாலும் தன் மனைவிக்குக் கொடுத்த வாக்குறுதியை முன்னிட்டு முயன்று தன்னை அடக்கி கொண்டான்.

குளியலறை கதவு திறக்கும் ஓசையில் தன்னினைவு கலைந்தவன் மாசுமருவற்ற அழகுடன் எந்தவித ஒப்பனையும் இல்லாமல் பளிங்கு சிலை போலிருந்த மதியை கண்டதும் அவன் உள்ளம் மயங்க தான் செய்தது. அவளோ அவன் பார்வையை... அவனைக் கண்டு

கொள்ளாமல் அலமாரியை திறந்து உடைகளை ஆராய்ந்தாள்.

"பேபி..." அவனின் அழைப்பில் திரும்பியவள் அவன் கையிலிருந்தவற்றைக் கண்டு புருவம் சுருக்கினாள்.

"இந்தப் பட்டுப் புடவை, நகையெல்லாம் போட்டுக்கோ..."

"எதுக்கு இவ்வளவு க்ராண்டா... வேணாம்... சிம்பிளா ஏதாவது புடவை கட்டறேன்..."

"ம்ப்ச்... நான் சொல்றதை கேட்கவே கூடாதுன்னு முடிவோடு தான் இருக்கியா...?" சலிப்பும் ஆதங்கமும் சற்று கோபமும் கலந்த குரலில் கூறியவனைப் பார்த்து என்ன நினைத்தாளோ... ஒன்றும் பேசாமல் வாங்கிக் கொண்டாள்.

அவள் உடையை மாற்றிக் கொண்டு வரும் போது அவனும் தன் உடையை மாற்றிப் பட்டு வேஷ்டி கட்டியிருந்தான். இதுநாள் வரை தன் மனக்கண்ணில் அவன் இது போல் உடை தரித்துப் பார்த்திருந்தவள் இப்போது நனவாய் அது போல் நின்றவனைக் கண்டு கண்ணிமைக்க மறந்தாள். கம்பீரமாய் ஆண்மையின் இலக்கணத்திற்குச் சான்றாய் இருந்தவனின் தோற்றத்தை தன் மனப்பெட்டகத்தில் பத்திரமாகச் சேமித்துக் கொண்டாள்.

"என்ன அழகாயிருக்கறேனா பேபி...?" ஆவலாய் கேட்டவனின் முகத்தைப் பார்த்தவளால் பொய்யுரைக்க முடியவில்லை.

"உங்க அழகுக்கு என்ன... நல்லா தான் இருக்கீங்க..."

"ஹேய் பேபி... உன் கிட்ட இருந்து கிடைத்திருக்கும் முதல் காம்ப்ளிமென்ட்... தேங்க்ஸ் பேபி..." முகம் மலர உண்மையான சந்தோசத்துடன் சொன்னான் அவன். எத்தனையோ பேர் அவனை அழகு என்று புகழ்ந்திருக்கின்றனர்... ஆனால் அதிலெல்லாம் வராத மகிழ்ச்சி மனைவி சொன்னதில் பொங்கி வழிந்தது. இப்போது அவனின் கண்கள் அவளை அளவெடுத்தது.

தான் வாங்கிய பட்டுச் சேலையில் அழகாயிருந்தவளை கண்டு அவளை அள்ளி அணைக்க அவனின் கைகள் பரபரத்தது. முயன்று தன்னை அடக்கி கொண்டவன்,

"பேபி... இங்கே வா..." என்று அவளை ட்ரெஸ்சிங் டேபிள் முன் அழைத்துச் சென்றவன்... தான் வாங்கி வைத்திருந்த மல்லிகைப்பூவை எடுத்து அவள் தலையில் வைத்துவிட்டான். பின் அங்கிருந்த குங்குமச்சிமிழில் இருந்து குங்குமத்தை எடுத்து அவள் முன் நெற்றியில் வைத்துவிட்டவனின் கைகள் அழுத்தமாய்ப் பதிந்தது. ஒருவேளை அவளின் பூவுக்கும், பொட்டுக்கும் தான் தான் சொந்தக்காரன் என்பதை அவளுக்கு அழுத்தி சொன்னானோ... அவளின் அருகாமையில், அவள் சூடியிருந்த பூவின் வாசத்தில் அவன் கொஞ்சம் கொஞ்சமாய்த் தன்னை இழந்து கொண்டிருந்தான். ஒரு மாத காலப் பிரிவு வேறு அவனின் தாபத்திற்குத் தூபம் போட்டுக் கொண்டிருந்தது. தலையைக் குலுக்கி தன்னைச் சமன் செய்து கொண்டவன்,

"போகலாமா..." அவளின் கையோடு தன் கையைக் கோர்த்துக் கொண்டு அறையை விட்டு வெளியில் வந்தான்.

அந்தத் திருமண மண்டபத்திற்குள் சென்று கார் நின்றதும் இறங்கியவள் அங்குக் குழுமியிருந்த கூட்டத்தைக் கண்டு பிரம்மித்துப் போனாள். அதை அவனிடம் வாய்விட்டு வேறு பகிர்ந்து கொண்டாள்.

"பாவா... இது கல்யாணமா... இல்லை திருவிழாவா...?" ஆச்சிரியமாய் வலம் வந்த அவளின் கண்களைப் பார்த்தவனுக்குச் சிரிப்பு பீறிட்டது.

"கல்யாணம் தான்..." என்றவன் காரை பூட்டிவிட்டு அவளுடன் இணைந்து நடந்தான்.

"அண்ணி..." எங்கிருந்தோ ஓடி வந்தான் ராகேஷ்.

"ராகேஷ்... நீயெப்படி இங்கே... உங்க சொந்தக்காரங்க வீட்டு கல்யாணமா...?" கேள்வி ராகேஷிடம் கேட்டாலும் அவளின் கண்கள் கணவனைக் கேள்வியாய்ப் பார்த்தது.

"அண்ணா... அண்ணிக்கிட்ட சொல்லலையா..."

"என்ன என் கிட்ட சொல்லணும்...?" ராகேஷிடம் கேட்டவள், "என் கிட்ட என்ன சொல்லாம மறைச்சீங்க பாவா... ப்ளீஸ் சொல்லுங்க..." சிறுபிள்ளையாய் கெஞ்சியவளை கொஞ்ச வேண்டும் என்றெண்ணிய மனதை கட்டுப்படுத்திய அவளின் கணவன்,

"உள்ளே வந்தா தன்னால தெரிய போகுது... வா..." அவளை அழைக்க...

"நீங்க ஒண்ணும் சொல்ல வேணாம்... நானே பார்த்து தெரிஞ்சிக்கிறேன்..." பொய் கோபத்துடன் சொல்லியவள் முன்னே விறுவிறுவென நடக்க...

"ஹேய் பேபி... சொன்னா கேளுடா..." கெஞ்சியபடி அவளைப் பின் தொடர்ந்தான் கதிர். கடைசியில் ராகேஷை அம்போவென விட்டு விட்டு இருவரும் சென்றுவிட்டனர். இருவரையும் பார்த்த ராகேஷுக்குச் சந்தோசமாயிருந்தது.

மண்டபத்தின் வாயிலில் இருந்த மூர்த்தி அவளைப் பார்த்ததும் அவசரமாய் அவளருகே வந்தார்.

"மதிம்மா... எப்படியிருக்கம்மா...?" வெகுநாள் கழித்து அவரைப் பார்த்ததும் அவளுக்குக் கண்கலங்கியது.

"நல்லாயிருக்கேன்ப்பா... நீங்க...?"

"எனக்கென்னம்மா நல்லாயிருக்கேன்..." அவரின் கண்கள் அங்கே தள்ளி நின்று அலைப்பேசியில் பேசி கொண்டிருந்த கதிரை கண்டதும் பனித்தது.

"இவ்வளவு வருசத்துல தம்பி இப்போ தான்ம்மா சந்தோசமாயிருந்து பார்க்கிறேன்... உன்னால தான்ம்மா...

இது சாத்தியமாச்சு..." மனம் நெகிழ அவர் சொல்லும் போதே... கதிர் அங்கு வந்துவிட்டான்.

"அங்கிள் எல்லா ஏற்பாடும் சரியாயிருக்கா...? நாளைக்கு முக்கியமான க்ளையண்ட் மீட்டிங் இருக்குல்ல... அதுக்குத் தயார் பண்ணிட்டீங்களா..."

"எல்லாம் நான் பார்த்துக்கிறேன் தம்பி... நீங்க விழாவை போய்ப் பாருங்க..." அவர் சொன்னதும் சிரித்தபடி அவரிடம் விடைப்பெற்றவன் மனைவியை அழைத்துக் கொண்டு மண்டபத்தினுள் நுழைந்தான்.

மண்டபத்தினுள் நுழைந்த மதியை அங்கே குழுமியிருந்த அவளின் வீட்டினர் வரவேற்றதை கண்டு அவளுக்கு எல்லாம் புரிந்து போனது. தங்களுக்கு மீண்டும் திருமணம் நடத்தவே தன்னை இங்கு அழைத்து வந்தருக்கிறான் என்று...

'ஏற்கெனவே கல்யாணம் பண்ணிய பொண்டாட்டிக்கு எத்தனை தடவை தான் தாலி கட்டுவான்... சரியான லூசு பாவா...' மனதில் அவனை அர்சித்தவள் திட்டுவதற்காக அவனைத் திரும்பி பார்க்க, அதற்குள் அவளின் பெற்றோர் அங்கு வந்துவிட்டனர்.

"அம்மு எப்படிம்மா இருக்க...?" குணசேகர் மகளின் தலையை வருடியபடி கேட்க,

"உன்னை இந்த மாதிரி பார்க்க மாட்டேனான்னு ஏங்கிட்டு இருந்தேன்... இப்போ தான் சந்தோசமாயிருக்கு..." கண்கலங்கிய மணிமாலா அவளை அணைத்துக் கொண்டார்.

"மதி... நீ இப்படி மாறுனதுக்கு அண்ணாவுக்குத் தேங்க்ஸ் சொல்லணும்..." சொன்ன ஆதிரை கதிரை நன்றியுடன் பார்த்தாள். அர்விந்த் அவளை விட ஒரு படி மேலே போய்,

"எங்க அம்முவை பழைய மாதிரி மாத்தியதுக்கு உங்களுக்கு ரொம்பத் தேங்க்ஸ் மாப்பிள்ளை..." கதிரிடம் சொல்லியவன் அவனை ஆரத்தழுவி கொண்டான். உலக

அதிசயம் போல் இருவரையும் ஆவெனப் பார்த்தாள். கிழக்கும் மேற்கும் என்று ஒன்று சேர்ந்தது என்று அவள் தனக்குள் குழம்பி போனாள். அவளின் பார்வையை உணர்ந்தவனாய் கதிர் அவளருகில் வந்து,

"உன்னைக் கரெக்ட் பண்ணின எனக்கு உன் அண்ணனையா கரெக்ட் பண்ண முடியாது... இதெல்லாம் எனக்கு ஜுஜுபி..." தாழ்ந்த குரலில் கூறியவன் அவளைப் பார்த்துக் கண்சிமிட்டினான்.

"ஆமாம் உங்க திறமையை நீங்க தான் மெச்சிக்கணும்... ஏற்கெனவே தாலி கட்டிய மனைவிக்கு இன்னொரு முறை தாலி கட்ட போகும் நீங்க... உலகத்திலேயே அதிபுத்திசாலி தான்..." அவளின் கிண்டல் குரலில் அவளை ஆழ்ந்து பார்த்தவன் அசல்ட்டாய் தோளை குலுக்கியபடி,

"நான் புத்திசாலி இல்லைன்னு என் மக்கு மனைவிக்கு நாலு வருசத்துக்கு முன்னமே தெரியுமே..." பதிலுக்கு நக்கலடித்தவனைப் பார்த்து ஏதோ சொல்ல வந்தவள் அங்கே வந்த கவிதாவின் குடும்பத்தைப் பார்த்து அமைதி காத்தாள்.

சத்யன் இப்போது சொந்த தொழில் செய்கிறான்... அதற்குப் பணம் கொடுத்து உதவிட வந்த கதிரின் உதவியை மறுத்தவன் வங்கியில் கடன் வாங்கித் தொழிலை ஆரம்பித்தான். இப்போது வங்கி கடனையும் அடைத்து ஓரளவு நல்ல நிலையில் இருக்கிறான். கவிதாவின் காதல் அவனை இந்தளவிற்கு மாற்றி நல்லவனாக்கி... வல்லவனாக்கியிருக்கிறது. பெண்ணின் அன்பிற்கு இத்தனை சக்தியா என்று பிரம்மிப்பை ஏற்படுத்தும் அளவுக்குச் சத்யனிடத்தில் மாற்றங்கள் ஏற்பட்டிருந்தது.

கதிர் தன் மனைவியுடன் அக்கா குடும்பத்தினருடன் சிறிது நேரம் அளவளாவிட்டு அதன் பின் அவளை மேடையை நோக்கி அழைத்துச் சென்றான். மேடையை நோக்கி அழைத்துச் செல்லும் போதே மதியின் கால்கள் வலுவிழந்தது போல் தோய்ந்து போய்த் தடுமாறியது.

"பாவா... எனக்குப் பயமாயிருக்கு..." என்றவளை அதிசயமாய்ப் பார்த்தவன்,

"இதில் பயப்பட என்னயிருக்கு...?" கேலியாய் கூறியவன் அவளின் முகத்தில் அரும்பிய வியர்வைத் துளிகளைக் கண்டு உண்மை உணர்ந்தவனாய்...

"நீ பயப்படும்படியாய் எதுவும் நடக்காது... நானிருக்கேன்ல்ல... தைரியமாயிரு..." அவள் தோளில் கைப்போட்டு ஆறுதலாய் அணைக்க, அதில் அவள் நெளிந்தாள்.

"எல்லோரும் பார்க்க போறாங்க... என்ன நினைப்பாங்க...?" சொன்னவளை எரிச்சலுடன் பார்த்தவன்,

"இதுக்கு இன்னைக்கு முற்றுப்புள்ளி வைக்கிறேன்டி... எப்ப பாரு... அவன் பார்க்கிறான்... இவன் பார்க்கிறான்னுட்டு..." கோபத்துடன் சொன்னவனின் கைகள் அவள் தோளில் பிடிவாதமாய் அழுத்தமாய்ப் படிந்தது. இனி என்ன சொன்னாலும் அவன் தன் பேச்சை கேட்க போறதில்லை என்பதை உணர்ந்தவளாய் அமைதியாய் அவனுடன் நடந்தாள்.

அங்கே மேடையில் மணவறை அலங்காரம் இல்லை, அய்யர் இல்லை, ஹோம குண்டலம் இல்லை... எதுவுமே இல்லாமல் வெறுமனே நாற்காலிகள் மட்டுமே போடப்பட்டிருக்க... அவள் கேள்வியாய் அவனைப் பார்த்தாள்.

"என்ன...?" அவளின் பார்வையில் அவன் கேள்வி கேட்டான்.

"இல்ல... இங்கே கல்யாணம் நடக்கிறதுக்கான அறிகுறியே இல்லை..." அவள் இழுத்ததில் அவனின் உதட்டோரம் கேலியில் துடித்தது. தன்னை முயன்று கட்டுப்படுத்திக் கொண்டவன்,

"இது சீர்திருத்த கல்யாணம்... அதான் அதெல்லாம் போடல..." சீரியஸ் குரலில் கூறியவன் முகத்தில் அது இல்லை... மாறாகக் குறும்பு வழிந்தது. என்ன என்று அவள் யோசிக்கும் போதே...

"என் அறிவாளி பொண்டாட்டியே... மேடையில் என்ன எழுதியிருக்கு பாரு..." அதற்குள் அவர்கள் மேடையேறி வந்திருந்தனர்.

"என்ன படிக்க முடிகிறதா... இல்லை கண்ணாடி வாங்கி வரவா...?" கிண்டலில் அவனை முறைத்தவள் மேடையிலிருந்த பேனரில் கண்களைப் பதித்தாள்.

அதன் சாராம்சம் இது தான்... கேகே இன்ட்ஸ்ட்ரீஸ் சார்பாக அதன் உரிமையாளர் திருக் கதிரும் அவரின் மனைவி திருமதி மதியழகியும் இணைந்து இன்று ஐம்பது இலவச திருமணங்களை நடத்தி வைக்கப் போவதை வாழ்த்தி அதில் எழுதியிருந்தது. அவளை மீண்டும் திருமணம் செய்து அவளை மற்றவர்கள் முன் காட்சி பொருளாக்காமல்... இவள் என் மனைவி என்று ஆணித்தரமாய் எல்லோருக்கும் ஓங்கி உரைத்துவிட்டானே... யாரும் எதுவும் பேசுவதற்கு இடம் கொடாமல் அவன் செய்த செய்கை அவளின் உள்ளத்தைத் தொடுவதாய்...

"பேபி உனக்கு ஒண்ணு தெரியுமா... இதில் பாதி ஜோடி நம்மைப் போல் மறுமணம் செய்ய வந்திருக்கிறார்கள்... அதில் பலர் நம்மிடம் வேலை பார்ப்பவர்கள்... இந்தத் திருமணங்களை உன் கையால் தாலி எடுத்து கொடுத்து நடக்கப் போகிறது. இனி உன்னை யாராவது ஏதாவது பேச முடியுமா...? அவர்களின் வாழ்க்கையில் ஓளியேற்றிய எஜமானியை நாக்கில் பல் போட்டு யாராலும் பேச முடியுமா...? இப்போ சொல்லு நம்ம திருமணத்தை நான் முறையாக அங்கீகரித்து விட்டேனா...?" என்றவன் அவள் முகத்தில் இன்னமும் கலக்கம் தெளியாமல் இருப்பதைப் பார்த்து...

"இந்த நிகழச்சியை எல்லாப் பத்திரிக்கையில் போட செய்துவிட்டேன்... சில தொலைக்காட்சியிலும் ஒளிபரப்புச் செய்ய ஏற்பாடு செய்தாகி விட்டது... இது நம் உறவினர்களுக்கு நம் திருமணத்தைப் பற்றிய அறிவிப்பு தானே ஒழிய... அழைப்பில்லை... ஒருநாள் அவர்களுக்கும் அழைப்புக் கொடுப்பேன்... நம் குழந்தைகளின் பேர் வைக்கும் விழாவிற்கு..." தனக்காக யோசித்துச் செயல்பட்டவனின் செயல் அவளின் இதயத்தை உருக்க... கண்கள் விரிய கணவனைத் திரும்பி பார்த்தவள்,

"பாவா..." உணர்ச்சிமிகுதியில் அவள் உடல் நடுங்கியது. குரல் உடைந்தது. கண்கலங்க அவனை ஏறிட்டவளின் உணர்வுகளைப் புரிந்து கொண்டவனாய்,

"எல்லோரும் நம்மைத் தான் பார்க்கிறாங்க... ப்ளீஸ் பேபி கண்ட்ரோல் யுவர் செல்ப்..." என்றவனின் பேச்சை ஆட்சேபிக்கும் விதமாய்த் தன் தலையை மறுப்பாய் இடமும் வலமுமாய் ஆட்டியவள், அவனின் கரத்தோடு தன் கரத்தை கோர்த்தவள் அவனின் தோளில் சாய்ந்து,

"யார் பார்த்தா எனக்கென்ன...? என் புருசன் நான் கையையும் பிடிப்பேன்... கட்டியும் பிடிப்பேன்... அவர்களுக்கு என்ன வந்தது...?" என்றவளின் குரலிருந்தது குழைவும், மகிழ்ச்சியுமே...

"ம்... ரொம்பப் பெரிய மாற்றம் தான்..." என்றவனின் கண்கள் ஆசையுடன் தன்னவளை வருடியது. அவள் கண்களின் ஒளியை மீட்டுத்துவிட்ட கர்வம் அவன் முகத்தில் நிரம்பி வழிந்தது.

"மாப்பிள்ளை... உங்க மனைவியைச் சைட் அடிச்சது போதும்... எல்லோரும் நீங்க ரெண்டு பேரும் எப்போ தாலி எடுத்து கொடுப்பீங்க... நாமளும் எப்போ இவங்களை மாதிரி கொஞ்சி பேசலாம்ன்னு உங்களையே ஏக்கமாய்ப் பார்க்கிறாங்க பாருங்க..." அர்விந்த் கிண்டலடிக்க... கூடச் சத்யனும் சேர்ந்து கொள்ள அந்த இடம் கலகலப்பானது.

அங்கு வந்த மணமக்களிடம் தாலியெடுத்து கொடுக்கும் போது மதியின் கைகள் அவளையும் அறியாமல் நடுங்கியது. கதிர் நடுங்கும் அவளின் கரத்தின் மேல் தன் கையை வைத்து அழுந்த பிடித்தவன்... தாலியை மணமக்கள் கையில் கொடுத்தான். அவனை நன்றியுடன் பார்த்தவள் கண்கள் கலங்கியது. அவளுக்குக் கண்களால் ஆறுதல் சொன்னவன் அடுத்த மணமக்களைக் கவனிக்க ஆரம்பித்தான். இனிதாய் திருமண நிகழ்ச்சி முடிய... எல்லாத் திருமணங்களையும் சட்டப்படி பதிவு செய்யச் சொல்லியவன்... தங்கள் திருமணத்தையும் பதிவு செய்தான்.

"இனி என்னை விட்டு போக மாட்டேல்லடி..." கையெழுத்து போட்டுவிட்டு நிமிர்ந்தவன் அவளுக்கு மட்டும் கேட்கும் குரலில் கூற... அவனின் வார்த்தையிலிருந்த ஆதங்கத்தைப் புரிந்து கொண்டவளாய்,

"நிச்சயமாய் நான் உங்களை விட்டு பிரிய மாட்டேன்... நீங்களாய் என்னை விட்டு பிரியும் வரை..." சொன்னவளின் நாக்கில் சனி புகுந்திருந்தானோ...? தான் சொன்னது நடக்கப் போவதை அறியாதவாளாய் அவனைப் பார்த்து சிரித்தாள்.

"நானா... உன்னை விட்டு போவதா...? குட் ஜோக்..." என்று தோளை குலுக்கியவன்... அதைத் தான் இன்றே செய்யப் போவதை உணர்ந்திருக்கவில்லை...

அதன் பின் வீட்டில் எல்லோரும் குழுமியிருந்த போது மதி தன் அண்ணனிடம் அடக்கமாட்டாமல் கேட்டுவிட்டாள்.

"அர்வி உனக்குப் பாவாவை கண்டாலே பிடிக்காதே... இப்போ எப்படி...?" ஆச்சிரியமாய்க் கேட்டவளை வாஞ்சையுடன் பார்த்தவன்,

"என் தங்கையை இவ்வளவு சந்தோசமா வைச்சிருக்கும் போது... எனக்கு இதை விட வேறு என்ன வேணும்... அதிலும் இன்னைக்கு நடந்தது பார்த்து நான் மாப்பிள்ளை கண்டு பிரமிச்சுப் போயிட்டேன் அம்மு... மாப்பிள்ளை

மாறியிருக்கிறது ரொம்பச் சந்தோசம்... அது உன்னால் தான்ங்கிறப்போ இன்னும் சந்தோசமாயிருக்கு... இங்கே நடத்தியது போல் நம்ம ஊரிலும் திருமண நிகழ்ச்சி நடத்த வேணும். அதை நீயும், மாப்பிள்ளையும் தான் நடத்தி கொடுக்கணும்..." அர்விந்த் கதிரை மாப்பிள்ளை என்றழைத்ததைக் கண்டு அவளுக்குச் சந்தோசமாயிருந்தது. எல்லோர் மனதையும் கவர்ந்த அவளின் பாவாவை நினைத்து அவளுக்குப் பெருமையாயிருந்தது.

அப்போது குணசேகரிடம் பேசி கொண்டிருந்த கதிரின் அருகில் வந்தமர்ந்தாள் மதி. அவளைக் காதலோடு பார்த்தவன் பின்பு குணசேகரிடம், "மதியை நான் ஆதுவை விட நல்லா பாரத்துக்குவேன் மாமா... என்னை நம்பலாம்..." என்றவனைப் பார்த்து,

"இப்போ எங்களுக்கு முழு நம்பிக்கையிருக்கு மாப்பிள்ளை..." என்றார் மகளின் மலர்ந்த முகத்தை அன்போடு பார்த்தவாறு...

"அப்பா உங்க கிட்ட ஒண்ணு சொல்லணும்..." என்றவளை கூர்மையாய் பார்த்தான் கதிர். "அது வந்து... நானும் ஆதுவும்...." அவள் மேலே பேசும் முன் கதிர் குறுக்கிட்டு,

"மதி... எல்லோருக்கும் உணவு ரெடியான்னு பார்த்திட்டு வா..." அவன் சொல்லும் போதே... அங்கு வந்த ராகேஷ்,

"எல்லோரும் பேசிக்கிட்டே இருந்தா எப்படி... சாப்பிடணும்ன்னு ஐடியா இருக்கா இல்லையா... எனக்கு ரொம்பப் பசிக்குது..." என்ற ராகேஷை பார்த்து அனைவரும் சிரிக்க... அதில் கதிர் சற்று நிம்மதியடைந்தான்.

"போச்சுடா... இன்னைக்கு ஜோக்கர் நானா..." தலையில் கையை வைத்தவனை,

"இவ்வளவு நாள் உங்க அண்ணி என்னை ஜோக்காராக்கி வேடிக்கை பார்த்தா... இன்னைக்கு ஒருநாள் உன்

பாசமான அண்ணனுக்குப் பதில் நீ ஜோக்கரா இருக்கக் கூடாதா...?" சிரியாமல் சொன்ன கதிரை முறைக்க முயன்று தோற்றாள் மதி. கணவனின் பேச்சில் தானும் கலகலவெனச் சிரித்தாள். அவளின் சிரிப்பை ஆசையுடன் பார்த்துக் கொண்டிருந்தான் கதிர்.

எல்லோரும் வேலை நிமித்தம் கிளம்பி செல்ல... கவிதா சிறியவர்களுக்குத் தனிமை கொடுக்க எண்ணி ராகேஷை தன்னுடன் அழைத்துச் சென்றுவிட்டாள். இரவில் தங்கள் அறைக்குச் சாதாரணமாக நுழைந்தவள் அங்கிருந்த அலங்காரத்தைக் கண்டு திகைத்து போனவளாய் பின்னடைந்தாள். அவளின் வருகை உணர்ந்து அவளின் அருகில் வந்தவன்,

"என்ன பேபி... நான் போட்ட சபதத்தில் ஜெயித்துவிட்டேனா... இப்போ உன்னைத் தொடும் முழு உரிமை எனக்கு இருக்கிறதல்லவா...?" அவனின் வார்த்தைகள் அவளின் செவியில் விழுந்ததாய் தெரியவில்லை.

"இது... இது..." கட்டிலின் அலங்காரத்தைச் சுட்டி காட்டி அவள் வினவ, அதைப் பார்த்து நகைத்தவன்,

"அக்காவோட வேலை அது..." என்றவன், "நல்லது தான் பண்ணியிருக்காங்க இல்லையா..." அவளைத் தன் கைகளில் ஏந்தி மஞ்சத்தில் கிடத்தினான். அதற்குள் அவளின் எண்ணங்கள் கடந்த காலத்தைச் சுற்றி ஒருமுறை ஊர்வலம் போய்விட்டு வந்தது. அவனோ அவளின் மனதை உணராமல் அவளில் தன் தேடலை தொடங்கியிருந்தான். முகத்தில் முத்தமிட்டவன் அவளின் கண்ணீரை உணர்ந்து யோசனையாய் அவளைப் பார்த்தான்.

"இன்னும் என்ன பேபி... இப்போது தான் எல்லாம் சரியாகிவிட்டதே..." அவனுக்குப் பதிலளித்தவளின் பதிலில் அவன், "ச்சீ..." என்று கோபத்துடன் அவளை உதறித் தள்ளினான்.

என் மாசிலா காதலை நீ உணரவில்லையா...?
உன் காலடியில் துடிக்கும் என் இதயம் பேசும் மொழி புரியவில்லையா...?
உணர்ந்தும் உணராமல்... புரிந்தும் புரியாமல்... நீ நடத்தும் காதல் நாடகம்...
உணர்ந்தும் புரிந்தும் விரக்தியில் நான்...
கானல் நீராய்... விழலுக்கு இறைத்த நீராய் என் காதல்...
போதுமடி பெண்ணே... காதலால் உயிரோடு கொல்லாதே...
நான் உயிரற்ற உடலடி... என் உயிர் நீ தானடி...

நாளை : 30

கதிரின் தொடுகையில் மதியின் உடல் குழைந்து உருகி அவன் வசம் சரணடைந்ததை அவள் உணர்ந்தாலும் தன்னைக் கட்டுப்படுத்த அவளால் முடியவில்லை. தன் வெட்கங்கெட்ட உடலை நினைத்துத் தனக்குத் தானே அருவருத்தவள் கண்ணிலிருந்து கண்ணீர் வழிந்தது. அவளின் கண்ணீர் உணர்ந்து கேள்வி கேட்ட கணவனிடம் தன் மனதை மறையாமல் உரைத்துவிட்டாள்.

"பாவா... உங்க மனசில என்னைப் பத்தி தப்பான எண்ணம் ஏதுமிருக்கா...? ஆது இறந்த கொஞ்ச நாளிலேயே உங்க கூட உறவாடுறதை நினைச்சு... என் மேல் உங்களுக்கு அருவருப்பாயிருக்கா...? அன்னைக்குக் கூடச் சொன்னீங்களே... அதுக்குத் தான் உருகி குழைஞ்சியோன்னு... உங்க வாயிலிருந்து அந்த வார்த்தைகளைக் கேட்டதும் செத்துட்டேன் பாவா... என்னைக் கண்டா எனக்கே அருவருப்பாயிருக்கு... ஆனா நான் அந்த மாதிரி பொண்ணு இல்லை பாவா..." அவள் பேசி முடிக்கும் முன்,

"ச்சீ..." அருவருப்பில் முகம் சுளிக்க... அவளை உதறித் தள்ளினான் அவன்.

"என்னைக் கொலைக்காரனாக்காதே..." சுட்டு விரல் நீட்டி அவளைப் பார்த்து கர்ஜித்தவனைக் கண்டு பயத்தில் முழங்காலை கட்டி கொண்டு கட்டிலின் ஓரமாய் ஒடுங்கினாள் அவள்.

"உன் மனசுல இன்னமும் என்ன தான்டி நினைச்சிட்டு இருக்க... உன்னைப் புரிஞ்சிக்கல... உன் காதலை புரிஞ்சிக்கலன்னு பெருசா பேச மட்டும் தெரியுதுல... ஆனா நீ எப்போடி என் மனசை புரிஞ்சிக்கப் போற...? நானும் நீ இப்போ மாறுவ... அப்போ மாறுவன்னு எத்தனை நாள் தான்டி பொறுமையாயிருக்கிறது. சும்மாவே நான் பொறுமையில்லாதவன்... ஆனால் உன் விசயத்தில் நான் காட்டிய பொறுமை ரொம்பவே அதிகம்... இதுக்கு

மேலேயும் என்னைப் புரிஞ்சிக்காத... என் காதலை புரிஞ்சிக்காத நீ..." அவளை ஆங்காரமாய்ப் பார்த்தவன்,

"நீ எனக்கு வேண்டாம்டி... இந்தப் பாழாப் போன காதலுக்காக நான் பட்ட பாடு போதும்... அம்மா... பரதேவதை என்னை விட்டிரும்மா..." இரு கையையும் கூப்பியவனைப் பரிதாபமாய்ப் பார்த்தவள்,

"பாவா... நான் சொல்றதை..." பேச வந்தவளை கையமர்த்தித் தடுத்தவன்,

"பேசாத... இதுக்கு மேல ஒரு வார்த்தை பேசாதே... நீ பேசி... நான் வேணுங்கிற அளவுக்கு வாங்கிக் கட்டியாச்சு... இதுக்கு மேல உன் கிட்ட வாங்கிக் கட்டிக்க நான் ஆளில்லை... அதனால நான் பேசறதை மட்டும் வாயை மூடிட்டு கேளு..." ஆள்காட்டி விரலை உதட்டின் மீது வைத்து எச்சரித்தவன் தன் மனதிலிருந்ததை அவளிடம் கொட்டினான். அப்படியாவது தன் காதலை அவளுக்குப் புரிய வைத்திட எண்ணினானோ...?

"நான் கெட்டவன் தான்... பொம்பளை பொறுக்கி தான் ஒத்துக்கிறேன்... ஆனா இந்தக் கெட்டவனைத் தானே நீ லவ் பண்ணின... அன்னைக்கு ஏதோ கோபத்துல உன்னை அப்படிப் பேசிட்டேன்... உன் கிட்ட மோசமா நடந்துக்கிட்டேன் தான் இல்லைங்கல்ல... நானும் நான் பண்ணிய காரியத்தைச் சரின்னு வாதாடல்ல... இப்போ உணரும் போது அது தப்புன்னு புரியுது... அந்தத் தப்பு இன்னைக்கு வரைக்கும் என் மனசை கொல்றது எனக்கு மட்டும் தான் தெரியும்... அதுக்காக இப்போ உன் கிட்ட நான் மன்னிப்புக் கேட்டுக்கிறேன்... என்னை மன்னிச்சுக்கோ... ஆனா இந்த ஒரு வார்த்தையில் நடந்ததை உன்னால் மறக்கவும் முடியாது... என்னை மன்னிக்கவும் முடியாது... அது எனக்கு நல்லாவே புரியுது..."

"அப்படியெல்லாம் இல்லை பாவா..." என்றவளை தீப்பார்வை பார்த்தவன்,

"மூச்..." என்றவன் மேலே தொடர்ந்தான்.

"ஆனா நான் என்ன சொல்றேன்னா... என் வார்த்தைக்குக் கொடுக்காத மன்னிப்பை... என்னோடு வாழ்ந்து பார்த்து என்னோட அன்புக்கு கொடுன்னு தானே உன்னை நான் கெஞ்சுறேன்... இந்த முரடனை... உன் முட்டாள் பாவாவை மன்னிக்கக் கூடாதா...? இதுக்கு மட்டும் தான் நான் மன்னிப்பு கேட்பேன்... ஆனா கல்யாணத்துக்கு அப்புறம் நடந்த பேச்சுக்கு நான் மன்னிப்பு கேட்க மாட்டேன்டி... நான் என்ன பொய்யா சொன்னேன்... என் தொடுகையில் நீ உருகி குழையல... உன் மனசாட்சி தொட்டு சொல்லு..." அவனின் கேள்விக்கு அவள் 'ஞே' என்று விழித்தாள்.

"நான் சொல்ல வந்ததை நீ சரியா புரிஞ்சிக்கல... யார் உன்னைத் தொட்டாலும் நீ மயங்குறன்னு நான் பேசியிருந்தா தான் அசிங்கம்... கணவனான என் தொடுகையில் மயங்குறன்னு தான் நான் சொன்னேன்... ஏன்னா உன் மனதையும் சரி... உன் உடலையும் சரி... தொட்ட முதல் ஆம்பிளையும் நான் தான்... கடைசி ஆம்பிளையும் நான் தான்..." இதைச் சொன்ன போது அவன் முகத்தில் கர்வமும், பெருமிதமும் போட்டி போட்டுக் கொண்டு நிரம்பி வழிந்தது. அவளோ அதிர்ச்சியாய் அவனைப் பார்த்தாள். தன் நிலையை எப்படிக் கண்டு கொண்டான் என்று அதிசயித்தாள்.

"என்ன அப்படிப் பார்க்கிற... நான் பல பெண்களுடன் பழகியவன்... என்னால் உன்னை உணர முடியும்... உன் மனதை உணர்ந்த எனக்கு... உன் உடலையா உணர முடியாது...?" அவனின் பேச்சில் அவன் சொல்லும் அர்த்தம் புரிந்து அவள் முகம் செவ்வானமாய்ச் சிவந்தது. இப்படியொரு விசயத்தை அவள் கொஞ்சம் கூட யோசிக்கவே இல்லை.

"ஆதுவும் நீயும் என்ன மாதிரியான வாழ்க்கை வாழ்ந்திருக்கீங்கன்னு உன்னைத் தொட்ட அன்னைக்குத் தான் நான் புரிஞ்சிக்கிட்டேன்... ஆது உன்னைக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்லி சத்யம் வாங்கினப்போ

கூட நான் அதை நிறைவேத்தணும்ன்னு நினைச்சது இல்லை... ஆதுவின் மனைவின்னு தான் உன்னைத் தள்ளி நின்னு பார்த்தேன்... ஆனா நீ அந்த மயக்க நிலையிலும் என் பேரை சொன்னப்போ தான் உன் காதலோட ஆழத்தை உணர்ந்தேன்... நீயும் ஆதுவும் எப்படி வாழ்ந்தாலும் கவலையில்லை... உன் மனசில் நான் தான் இருக்கேன்ங்கிற கர்வத்தில் தான் நான் உனக்குத் தாலி கட்டினேன்... உன் மனசில் நானிருக்கிறேன்னு தெரிஞ்சதுக்கு அப்புறம் தான் நான் உன்னைத் தொட்டேன்... நான் காமுகனாய் வாழ்ந்தவன் தான்... ஆனா காதலியை, மனைவியை உடல் தேவைக்குத் தொடுற அளவுக்கு மூர்க்கத்தனமானவன் இல்லை..." இதெல்லாம் அவளுக்குத் தெரியாத சேதி... வாழ்வின் கடைசி நேரத்திலும் தனக்காக யோசித்த ஆதர்ஷின் தோழமை அவள் நெஞ்சில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது என்றால்... தன்னை உணர்ந்து தன் மனதை உணர்ந்து செயலாற்றிய தன் கணவன் மீது காதல் பெருக்கெடுத்தது.

"இப்பவும் சொல்றேன் ஆதுவோட நீ வாழ்ந்ததைப் பத்தி எனக்கு எதுவும் தெரிய வேண்டியதில்லை... அது அவசியமும் இல்லை... நான் உன்னை அந்தளவுக்கு நம்பறேன்... நம் காதலை நம்பறேன்... என்னடா இவனுக்கும் காதல் நோய் எப்படித் தாக்குச்சுன்னு தானே யோசிக்கிற...? உன் கல்யாணத்தன்னைக்கு ஆது பக்கத்துல நீ உட்கார்ந்து சடங்குகள் செஞ்சியே அப்போ வந்துச்சு பாரு எனக்குள்ள ஒரு கோபம்... அந்தக் கோபம் ஆது உன் கழுத்துல தாலி கட்டும் போது காதலாய் மாறுச்சு... என் பேபி கழுத்துல எவனோ தாலி கட்டுறானேன்னு மனசுக்குள்ள உடைஞ்சி போயிட்டேன்... அப்போ உணர்ந்தேன் உன் காதலை... என் காதலை... நாம் இழந்த காதலை..." அன்றைய தினம் அவனின் மனக்கண்ணில் ஓடியதோ என்னமோ அவன் சோர்வுடன் கட்டிலில் அமர்ந்தான். தன் இடக்கையால் தலையை அழுந்த கோதியவன் தன்னைச் சமன்படுத்திக் கொண்டு மீண்டும் தொடர்ந்தான்.

"அப்பவும் கல்யாணமான உன்னை நினைக்கக் கூடாதுன்னு நினைச்சு என் வாழ்க்கையில் பழையபடி வாழலாம்ன்னு நினைச்சு தான் அந்த மோகினியை வரவழைச்சேன்..." இதைச் சொல்லும் போது அவனின் கண்கள் அவனையும் அறியாமல் மனைவி பக்கம் திரும்பியது. அவள் முகத்திலிருந்த வேதனை அவனையும் தாக்க...

"ப்ளீஸ் பேபி... இதை நான் சொல்லி தான் ஆகணும்... இனியும் என் மனதை நீ காயப்படுத்தினால் அதைத் தாங்கும் சக்தி எனக்கு இல்லை..." என்றவன் தொடர்ந்தான்.

"ஆனா அன்னைக்கு மோகினி கூட என்னால சந்தோசமாயிருக்க முடியல... அவ கிட்ட போனா உன் நினைப்பு தான்... உன் வாசம் தான்... அப்போ தான் உணர்ந்தேன்... உன்னைப் பார்த்த கணம் முதல் நீ என் மனதில் நுழைச்சிட்டேன்னு... அதனால தான் உன்னைப் பார்த்த போது... இன்னும் கொஞ்சம் நீ அழகாயிருந்திருக்கலாமோன்னு நான் நினைச்சேன் போலும்... ஆனா காதலை உணர்ந்த போது அந்த மதியை தான் ரொம்பப் பிடிச்சது... பணக்கார மதியை ஆதுவோட மனைவியா தான் நினைச்சேன்... மூர்த்தி அங்கிள் பொண்ணா எளிமையாயிருந்த அந்த மதி தான் என் காதலின்னு கற்பனையான ஒரு உலகத்தில் உன்னுடன் வாழ ஆரம்பித்தேன்..." அவனின் காதல் அவளின் இதயத்தை ஒருவித சிலிர்ப்புடன் ஊடுருவி சென்றது.

"கிட்டத்தட்ட இரண்டு வருசம் கழிச்சு ஆதுக்கு ஆக்சிடெண்ட்ன்னு ஃபோன் வந்திச்சு... அடிச்சு பிடிச்சுப் போய்ப் பார்த்தா... அவன் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கோன்னு சொல்றான்... அப்பவும் உன் பொண்டாட்டி எனக்கெதுக்குன்னு தான் நான் சொன்னேன்... நீ பிழைச்சு வந்து அவளைப் பார்த்துக்கோன்னு தான் அவன் கிட்ட சொன்னேன்... என்ன சொல்லியும் அவன் கேட்கல... சத்யம் வாங்கிய கையோடு அவன் உயிர் பிரிந்து போச்சு... அதுக்கப்புறம்

உன் மனசை உணர்ந்து நீ மயக்க நிலையில் இருக்கும் போது தாலி கட்டினேன். ஆனா அதுக்காக மன்னிப்பெல்லாம் கேட்க மாட்டேன்... ஏன்னா நீ முழிச்சிருந்தா என்னை உன் பக்கத்துல விட மாட்ட... அந்தளவுக்கு வெறுப்பாயிருந்த... இடையில கொஞ்சம் மாறிட்டன்னு நினைச்சேன் ... ஆனா நீ கொஞ்சமும் மாறல... அப்போ இருந்து இப்போ வரைக்கும் உன் மனசுல என் மேலுள்ள வெறுப்புக் கொஞ்சம் கூடக் குறையல என்ன..." அவளைப் பார்த்துக் கேள்வி கேட்டவன் முகம் கொஞ்சம் கொஞ்சமாய் ஆத்திரத்தை தத்தெடுத்தது.

"உன் வெறுப்பு மாறவும் போறதில்லை... நீயும் மாறப் போவதில்லை... என் காதலையும் உணரப் போவதில்லை... இனியும் நான் முட்டாளில்லை... என்னைப் புரிந்து கொள்ள மறுக்கிற உன் கிட்ட காதல் பிச்சை கேட்பதற்கு. ஆனா ஒண்ணு சொல்றேன்... உன் வாழ்க்கையை அழிச்சி... என் வாழ்க்கையை அழிச்சி... கடைசியில் அந்த ஆதுவோட வாழ்க்கையையும் அழிச்சவள் நீ தான்டி... எல்லோரோட வாழ்க்கையையும் நிம்மதியில்லாமல் பண்ணியது நீ தான்டி... இதுல குற்றவாளி நீ மட்டும் தான்டி... நான் பாட்டுக்கு என் லைப்பை என்ஜாய் பண்ணிட்டு இருந்தேன்... எங்கிருந்து தான் வந்தியோ... காதல்ன்னு சொல்லிட்டு என் வாழ்க்கையை நாசாமாக்குவதுக்கு... இப்போ நான் சொல்றேன்... என்னைப் புரிஞ்சக்காத நீ எனக்குத் தேவையில்லை... எனக்கு நீ வேணாம்..." படபடவெனப் பொரிந்தவன் எழுந்து கார் சாவியைத் தேடி எடுத்துக் கொண்டு அறையை விட்டு வெளியேற போகவும் தான் மதியென்ற சிலைக்கு உயிர் வந்தது.

"பாவா..." கூவியவள் அவன் முன் வந்து நின்று... "ப்ளீஸ் பாவா... நான் பேசியது தப்பு தான்... ஏதோ ஒரு நினைப்புல அப்படிப் பேசிட்டேன்... என்னை மன்னிருச்சுங்க..." அவள் மன்னிப்பு கேட்டும் அவன் அசையாமல் இருக்க... அவளுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை.

"ப்ளீஸ் பாவா..." மீண்டும் கெஞ்சியவளை தீர்க்கமாய்ப் பார்த்தவன்,

"அன்னைக்கு ஒரு நாள் நீ சொன்னல்ல... மூச்சு முட்டுற மாதிரியிருக்குன்னு... இப்போ எனக்கு இங்கே இருக்கிறதுக்கு மூச்சு முட்டுற மாதிரியிருக்கு... என்னை என் போக்கில் விட்டுரு... மீண்டும் மீண்டும் உன் கிட்ட கெஞ்சுறதுக்கு எனக்கே அசிங்கமாயிருக்கு... அந்தளவுக்கா நான் உன் கிட்ட அடிமைப்பட்டுக் கிடைக்கேன்னு நினைக்கிறப்போ எனக்கு என் மேலேயே வெறுப்பாயிருக்கு... என்னை விட்டுரு..." என்றவன் அவள் முகத்தைப் பார்க்க கூடப் பிடிக்காமல் அங்கிருந்து வெளியேறினான். அவன் போவதை தடுத்து நிறுத்தும் வகையறியாதவளாய் அவள் திக்பிரம்மை பிடித்து நின்றாள்.

கார் கிளம்பும் ஓசையில் தன்னுணர்வு அடைந்தவள் அவன் தன்னை விட்டு சென்றுவிட்டான் என்பதை உணர்ந்தவளுக்குக் கண்ணீர் பொங்கி கொண்டு வந்தது. கட்டிலில் செய்திருந்த அலங்காரம் அவளைப் பார்த்து கேலி பேசுவது போலிருக்க... ஆவேசம் வந்தவளாய் அதில் தொங்கவிட்டிருந்த மலர் சரத்தை எல்லாம் பிய்த்து தூர எறிந்தாள். அப்படியிருந்தும் அவள் வேதனையடங்காமல் இருக்க... அதே கட்டிலில்,

"பாவா..." என்று கதறிக் கொண்டு விழுந்தாள். அவளின் மனதில் அவனின் நேசம் மட்டுமே வலம் வந்தது. தன்னைக் காதலாய் நோக்கும் கதிர், பேபி என்று ஒரு வார்த்தையில் தன் ஒட்டுமொத்த காதலையும் அடக்கி அழைக்கும் கதிர், தன் அருகாமையில் மயங்கி கிறங்கும் கதிர், காதலில் பிடிவாதமாய் நின்று தன்னை வெற்றிக் கொள்ளும் கதிர் என அவளின் ஒவ்வொரு அணுவிலும் கதிரே கலந்திருந்தான்.

"சாரி பாவா... உங்களைப் புரிஞ்சிக்காம போயிட்டேன்..." என்று வெகு நேரம் கதறி அழுதாள். பின்பு என்ன நினைத்தாளோ எழுந்து தன் அலைப்பேசியை எடுத்து

அவனுக்கு அழைத்தாள். அவனின் அழைப்பேசி அங்கிருந்த மேஜை மீதிருந்து இசைத்தது. அதைக் கண்டு அவளுக்குள் பயம் பிடித்துக் கொண்டது. இந்த அர்த்த ராத்திரியில் அவனைத் தேடி எங்குச் செல்வது என்று தெரியாமல் அறையின் மூலையில் ஒடுங்கினாள். அழுது கொண்டே இருந்தவள் எப்போது தூங்கினாள் என்று தெரியாது... எங்கோ கேட்ட பறவையின் ஓசையில் எழுந்தவள் கடிகாரத்தைப் பார்த்தாள்... மணி ஆறாகியிருந்தது.

எழுந்து முகத்தைக் கழுவி கொண்டு வந்தவள் தன் பெற்றோர்க்கு அழைக்க எண்ணினாள்... பிறகு அதைக் கைவிட்டவளாய் சோர்ந்து போய் அமர்ந்தாள். இப்போது தான் பெண்ணின் வாழ்க்கை சரியாகி சந்தோசமாயிருக்கிறாள் என்ற நிம்மதியுடன் இருப்பவர்களின் நிம்மதியை குலைக்க அவள் விரும்பவில்லை. கவிதாவுக்கு அழைக்கலாம் என்றால்... நம் விசயத்தை ஏன் அக்காவிடம் சொன்னாய் என்று கதிர் வந்து அவளிடம் சண்டை போட்டால்... அந்த எண்ணத்தையும் கைவிட்டாள். அப்போது அவள் நினைவுக்கு வந்தது மூர்த்தித் தான். அதிலும் நேற்று கதிர் அவரிடம் சொன்னது நியாபகம் வர எட்டு மணி வரை நேரத்தை நெட்டி தள்ளியவள்... எட்டு மணியானதும் முதல் வேலையாய் மூர்த்திக்கு அழைத்தாள்.

"அவர் அங்கே மீட்டிங்ல இருக்காரா...?"

"தம்பிக்கு உடம்பு முடியலன்னு சொல்லி எல்லாத்தையும் கேன்சல் பண்ணிட்டாரு... முக்கியமான பைல்ல கையெழுத்து வாங்க மட்டும் என்னைப் பண்ணை வீட்டுக்கு வர சொன்னாரும்மா... நீ அவர் கூட இல்லையாம்மா...?" மூர்த்தியின் குரல் கவலையுடன் ஒலித்தது. கதிர் திரும்பவும் தவறான வழிக்கு போய்விட்டனோ என்று கவலை கொண்டார் அவர்.

"நான் இங்கே வீட்டில் தான் இருக்கேன்... ஒரு சின்ன மனஸ்தாபம்ப்பா... நீங்க பைலை என் கிட்ட கொடுங்க...

நான் போய் அவரைப் பார்க்கிறேன்..." அவளின் மனநிலை உணர்ந்து சரியென்றவர் அடுத்த அரைமணி நேரத்தில் கோப்புகளை அவளிடத்தில் ஒப்படைத்தார்.

அதை எடுத்துக் கொண்டு கதிரை காண சென்றவளின் இதயம் பயத்தில் வேகமாய்த் துடித்தது. ஆனாலும் அவளிடத்தில் ஒரு உறுதி வந்தது. அவன் என்ன கோபமாய்ப் பேசினாலும் தான் தழைந்து போய் அவனைச் சமாதானப்படுத்த வேண்டும் என்று உறுதியாய் எண்ணி கொண்டாள்.

அழைப்ப மணி ஓசை கேட்டு மூர்த்தித் தானோ என்றெண்ணி கதவை திறந்த கதிர் அங்கே நின்றிருந்த மதியை சத்தியமாய் எதிர்பார்க்கவில்லை.

"இப்போ எதுக்கு இங்கே வந்த...? இருக்கிற கொஞ்ச நஞ்ச உயிரை எடுக்கிறதுக்கா..." கோபமாய்க் கேட்டவனைப் பார்த்து கண்களால் இறைஞ்சியவள்,

"உள்ளே போய்ப் பேசலாமே...?" கெஞ்சியவளை முறைத்து பார்த்தவன் அவளுக்கு வழிவிட்டு ஒதுங்கி நின்றான். அவள் நுழைந்ததும் கதவை தாளிட்டவன் அவளைக் கூர்ந்து பார்த்தான்.

"என்னை வேவு பார்க்க வந்தியா...?" அவனின் கேள்வியில் அடிப்பட்டார் போன்ற ஒரு பார்வை பார்த்தாள் அவள். அதை அவன் கொஞ்சமும் கண்டு கொள்ளவில்லை.

"என்னை என்ன உன்னை மாதிரின்னு நினைச்சியா...? உன் மேல கோபப்பட்டுட்டு... வேறொருத்தியை தேடி போறதுக்கு..." சாட்டையடியாய் வந்து விழுந்தது அவனின் வார்த்தைகள்.

"என் கிட்ட கோபிச்சிக்கிட்டு ஆதுவை ஏன் நீ கல்யாணம் பண்ணின... நான் கெட்டவன் தெரிஞ்சு தானே என்னைக் காதலிச்ச... அந்தக் கெட்டவன் பிடிக்காத ஒண்ணைச் செஞ்சா... நாலு அடி அடிச்சு என்னைத் திருத்திக்கணும்...

அதை விட்டுட்டு ஆதுவை கல்யாணம் பண்ணிக்குவியா? இப்போ நீ பேசிய வார்த்தைக்கு உன்னைத் தண்டிக்கிறதா நினைச்சு வேறொருத்தி கழுத்தில நான் தாலி கட்டவா...? காதலாம் காதல்... மண்ணாங்கட்டி காதல்... கணவன் மனச புரிஞ்சிக்கத் தெரியாத உனக்கெல்லாம் காதல் எதுக்கு...?" இத்தனை நாள் அவன் மனதில் அழுத்தி கொண்டிருந்ததை அவன் கேட்டுவிட்டான். கேட்ட பின்பு தான் தான் பேசிய வார்த்தைகளின் வீரியத்தை உணர்ந்தவன் தன் நெற்றியில் அறைந்து கொண்டான்.

"இன்னும் என் கண் முன்னாடி ஏண்டி நிக்கற... உன்னைப் பார்க்க... பார்க்க... நான் என்ன பேசறேன்... என்ன பண்றேன்னு எனக்கே புரிய மாட்டேங்குது... முதல்ல போடி இங்கிருந்து..." வாயில் பக்கம் கையைக் காட்டியவன் சோபாவில் அமர்ந்து அவளைப் பார்க்க பிடிக்காதவனாய் கண்களை மூடி கொண்டான்.

அவனையே பார்த்து கொண்டிருந்தவள் அவனருகில் வந்து அவனின் முகத்தைத் தன் இரு கரத்தால் தாங்க... அதில் திடுக்கிட்டுக் கண் விழித்தவன் ஏதோ சொல்ல வர, அவன் வாய் மீது கை வைத்து தடுத்தவள்,

"ப்ளீஸ் பாவா... போதும்... ஒருத்தரை ஒருத்தர் காயப்படுத்திக்கிட்டது போதும்... நான் பேசியது தப்பு தான் மன்னிச்சுக்கோங்க..." என்றவள் அவன் பேசுவதற்கு இடம் கொடாமல் அவனின் இதழை தன் இதழ் கொண்டு மூடினாள். முதலில் அவளின் செய்கையில் திகைத்து விழித்தவன் பின் சுகமாய் அதில் கரைந்தான். அவளின் முத்தத்தில் தன் உள்ளத்து வெம்மை எல்லாம் கண நேரத்தில் தீர்ந்ததை ஆச்சிரியமாய் உணர்ந்தான். வெகுநேரம் கழித்து விடுவித்தவளை வேட்கை அடங்காமல் பார்த்தவன்,

"பேசுறது எல்லாம் பேசிட்டு மன்னிப்பா கேட்கிற... மன்னிப்பு" என்றவனை அச்சத்துடன் அவள் பார்க்க... அடுத்த நொடி அவளைத் தன் கையில் அள்ளியெடுத்தவன்... அவளைத் தூக்கி கொண்டு

அறைக்குச் சென்றான். அங்கிருந்த மஞ்சத்தில் அவளைக் கிடத்தி அவளின் மீது ஆவேசமாய் விழுந்தவனைக் கண்டு அச்சம் கொள்ளாமல் காதலோடு சேர்த்தணைத்தவள்... அவனின் காதில்,

"உண்மை சொன்னால் நேசிப்பாயா... மஞ்சத்தின் மேல் மன்னிப்பாயா..." என்று பாட...

"உனக்கு மன்னிப்பெல்லாம் கிடையாதுடி... உனக்குத் தண்டனை தான் உண்டு..." என்றவனின் இதழ்கள் அவளின் மேனியில் ஆவேசமாய் முற்றுகையிட்டது. அவனின் கோபத்தைத் தணிக்கும் வித்தை அவளுக்குத் தெரியுமாதலால்... அதை அவள் செயல்படுத்த அதில் கொஞ்சம் கொஞ்சமாய் அவனின் கோபம் தணிந்தது.

களைத்திருந்த அவளின் முகத்தைத் தாபத்துடன் வருடியவன், "தண்டனை எப்படியிருந்துச்சு பேபி..." அவளைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்ட... அவனின் கோபம் குறைந்ததில் அவளின் முகம் மலர்ந்தது. அவனைத் தன்னோடு அணைத்து கொண்டவள்,

"என்ன கோபம் இருந்தாலும் என் கூடவே இருங்க பாவா... இப்படி என்னைத் தவிக்க விட்டுட்டு வந்துராதீங்க... என்னால தாங்க முடியல..." அவளின் கண்ணீர் குரலில் அவனின் உடல் விரைப்புற்றது.

"பாவா..." அச்சத்துடன் அவள் அவனைப் பார்க்க...

"உனக்கு மட்டுமா... எனக்கும் தான் பேபி..." என்றவனின் அணைப்பு இறுகியது.

"பாவா நான் ஆதுவை கல்யாணம் பண்ணியது..." என்று ஆரம்பித்தவளின் உதட்டின் மீது கை வைத்தவன்,

"வேணாம் சொல்லாதே..."

"இல்லை நான் சொல்லி தான் ஆகணும்... உங்களைப் பிரிஞ்ச பிறகு நான் எத்தனை தடவை தற்கொலைக்கு

முயன்றேன் தெரியுமா...?" திகைத்து போய் அவளைப் பார்த்தவன்,

"லூசாடி நீ... காதல் இல்லைன்னா செத்துறதா... சரியான லூசு நீ..." அவளைக் கடிந்தான் அவன். வாய்க் கடிந்தாலும் அவனின் கை அதற்கு நேர்மாறாய் அவளை அணைத்திருந்தது.

"எனக்கு வேற வழி தெரியல அதான்..." என்று அவனைச் சமாதானப்படுத்தியவள், "அர்வி... வேற என் கல்யாணத்துக்கு அவசரப்படுத்த ஆரம்பிச்சான்... அதுல இருந்து தப்பிக்கிறதுக்காகத் தான் நான் ஆதுவை கல்யாணம் பண்ணிக்கிட்டேன்..."

"உன்னால ஆதுவின் லைப்பும் வீணாய் போச்சு..." குற்றம் சாட்டியவனின் ஆதர்ஷ் மீதான அன்பை உணர்ந்தவள் அவனைப் பார்த்து புன்னகைத்தாள்.

"அவங்களுக்கும் என்னை மாதிரி காதல் தோல்வி..." என்றவளை நம்ப முடியாமல் பார்த்தவனிடம் ஆதர்ஷின் காதலை சொல்ல ஆரம்பித்தாள். கடைசியாய் சாரதாவை சந்தித்தது வரை கூறியவள், "சாரு நினைப்புல இருந்ததுல தான் ஆது எதிரே வந்த பஸ்ஸை கவனிக்கப் போல... உங்க நினைப்புல இருந்ததால நானும் அதைக் கவனிக்கல... கண் மூடி கண் திறக்கிறதுக்குள்ள எல்லாம் நடந்து முடிஞ்சு போச்சு..." அன்றைய நினைவின் தாக்கத்தில் அவளின் முகம் வேதனையைப் பிரதிபலித்தது.

விபத்து நடந்த போதும் தன்னை நினைத்திருந்தவளை கண்டு அவனுக்குக் காதல் பெருகியது. "ஐயம் சாரி பேபி... உன்னைப் புரிஞ்சிக்காம... உன் வேதனையைப் புரிஞ்சிக்காம..." என்று உருகியவனைப் பார்த்து மெல்ல சிரித்தவள்,

"விதி என் வாழ்க்கையில் கொஞ்சம் கடுமையா விளையாடியிருச்சு பாவா..."

"இதுக்கெல்லாம் நான் தான்டி காரணம்..." என்றவன் அவளின் வேதனையைப் போக்கும் விதமாக அவளை முத்த மழையில் குளிக்க வைத்தான்.

"ஹய்யோ... போதும் பாவா... மூச்சு முட்டுது..." அவள் சொன்னதும் தான் விட்டான். சிறிது நேரம் மௌனமாய் இருந்தவன்,

"பேபி... ஆது விசயம் நமக்குள் இருக்கட்டும்... உன் வீட்டார் யாருக்கும் தெரிய வேணாம்..." சீரியசாய் சொன்னவனைப் பார்த்தவள்,

"ஓ... அதான் அன்னைக்கு அப்பா கிட்ட சொல்ல வந்தப்போ தடுத்தீங்களா..." ஆம் என்பது போல் தலையசைத்தவன்,

"ஆது வாழ்ந்த கொஞ்ச நாளில் உன்னோடு வாழ்ந்திட்டு நிம்மதியா தான் இறந்தான்னு அவங்க நினைச்சுட்டு இருக்காங்க... அதை நாம ஏன் மாத்தணும்? அப்படியே இருந்திட்டு போகட்டுமே..." என்றவனைக் காதலாய் பார்த்தவளின் பார்வையில் மதி மயங்கியவன்,

"இன்னும் கொஞ்சம் தண்டனை பாக்கியிருக்கு... அதைத் தரவா... வேறு மாதிரி..." என்றவனின் பார்வையில் பாவையவள் நாண... அதைச் சம்மதமாய் எடுத்து கொண்டவன் அவளுக்குத் தண்டனை தர ஆரம்பித்தான்... அவளுக்குப் பிடித்த விதத்தில்... அவனுக்குப் பிடித்த விதத்தில்... அவன் கொடுக்கும் தண்டனையைச் சுகமாய் வாங்கிக் கொண்டாள் மன்னவனின் மனம் நிறைந்த வஞ்சியவள்.

****

ஐந்து ஆண்டுகளுக்குப் பின்...

"அப்பா நான் அழகாயிருக்கேனா...?" பட்டுப் பாவாடை குடை போல் விரிய தன்னைச் சுற்றி காட்டி மழலை குரலில் கேட்ட நிலாவை பார்த்த கதிர்...

"அடடே... என் குட்டிம்மா என்ன அழகு..." ஆசையுடன் மகளைத் தூக்கியவன் அவள் கன்னத்தில் முத்தமிட்டான். தந்தையின் முத்தத்தில் கிலுக்கி சிரித்தது அந்தச் சின்னச் சிட்டு.

நிலா... கதிர், மதியின் மூத்த மகள். அவளுக்கு மூன்று வயதாகிறது. அன்று கதிர் சொன்னது போல் ஊரை கூட்டி மகளின் பெயர் சூட்டும் வைபவத்தை மிகவும் ஆடம்பரமாய் நடத்தினான். அத்தோடு மட்டுமில்லாமல் தன் மகளுக்குத் தன் தாயின் நினைவாகக் 'கமலா' என்று பெயர் வைத்தான். ஆனால் கூப்பிடுவது நிலா...

"பாவா... நான் எப்படியிருக்கேன்...?" என்று கேட்டபடி அங்கே வந்த மதியை கண்டு அவன் தனக்குள் சிரித்துக் கொண்டான். அம்மாவும் பெண்ணும் எல்லா விசயங்களிலும் ஒரே மாதிரி... அது தன் மேல் காட்டும் அன்பிலும் அப்படியே...

மதியையும், நிலாவையும் மாறி மாறி பார்த்தவன்... "நிலாப்பெண் முன்னாடி மதிப்பெண் ஒளி கொஞ்சம் மங்கி தான் இருக்கு..." அதைக் கேட்டு மகள் குதூகலித்தாள்.

"ஐய்... அப்பா சொல்லிட்டாங்க... நான் தான் அழகுன்னு..." கத்தி கொண்டே அவனிடமிருந்து நழுவியவள், "நான் போய் மாமா கிட்ட சொல்லிட்டு வர்றேன்" என்று சிட்டாக வெளியில் ஓடினாள். ஏனெனில் அர்விந்த் அவளிடம் எப்போதும் வம்பிழுப்பான்... அவளை விடத் தன் தங்கை தான் அழகு என்று...

மகள் சென்றதும் மகளின் அம்மா மீது கதிரின் பார்வை திரும்பியது. முகம் சுணங்க நின்ற மதியை அணைத்தவன், "உன் பொண்ணைத் தான்டி சொன்னேன்... என்னமோ அடுத்த வீட்டுப் பொண்ணைச் சொன்ன மாதிரி கோபிச்சுக்கற..." என்றவன் அவளின் அருகாமையில் கிறங்கி கழுத்தில் முகம் புதைக்க...

"ஒண்ணும் வேணாம் தள்ளுங்க... உங்க பொண்ணு கிட்டேயே போங்க..." தன்னைத் தள்ளிவிட்டவளை வாகாய் தன் கைகளில் அடக்கியவன்,

"இப்போ எனக்குப் பொண்ணோட அம்மா தான் வேணும்..." தாபத்துடன் அவள் இதழ் நோக்கி குனிய... அதற்குள்,

"அம்மா... உங்களை அவ்வா கூப்பிடுறாங்க..." மகளின் சத்தத்தில் அவளிடமிருந்து வேகமாய் விலகினான் கதிர். இடக்கையால் தன் தலையைக் கோதி தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டவனைக் கண்டு நமட்டுச் சிரிப்பு சிரித்தாள் மதி.

"அம்மா வாங்க... தம்பி பாப்பாவுக்குப் பேர் வைக்கணுமாம்... எல்லாரும் வந்தாச்சாம்... அப்பா வாங்க..." மகள் அழைக்க மகழ்ச்சியாய் அவளோடு நடந்தனர் அந்தக் காதல் தம்பதியர்.

இன்று கதிர் - மதியின் பிறந்து ஒரு மாதமேயான இரண்டாவது மகனுக்குப் பெயர் சூட்டும் விழா. மனைவி, மகள், மகன் சூழ சபையின் நடுவே அமர்ந்தவனுக்கு அந்த வானத்தை வசப்படுத்திய மகிழ்ச்சி... தன் மகனை கையில் வாங்கியவன் அவனின் காதில்,

"கந்தன் அலைஸ் ஆதர்ஷ்..." என்று மூன்று தரம் சொல்ல... அதைக் கேட்டு அங்கிருந்தவர்கள் ஆனந்த அதிர்ச்சியுடன் அவனைப் பார்த்தனர். ஆதிரை கண்கள் கலங்க அவனை நன்றியுடன் பார்த்தாள். மதியோ கண்ணீர் வழிய கதிரின் தோளில் சாய்ந்தாள்.

"நல்ல நாளும் அதுவுமா... என்ன பேபி இது...?" அவளைக் கடிந்தவன் அவளின் கண்ணீரை துடைத்து தன்னுடன் சேர்த்து அணைத்துக் கொள்ள...

"நானு... நானு..." என்று இருவருக்கிடையில் இடைப் புகுந்தாள் நிலா.

"நீயில்லாமலா குட்டிம்மா..." மகனை மனைவியிடம் கொடுத்தவன் மகளைத் தன் கைகளில் அள்ளி கொண்டான்.

"ஸ்மைல் ப்ளீஸ்..." என்றபடி அந்தக் காட்சியைத் தன் கையிலிருந்த அலைப்பேசியில் அழகாய் பதிவு செய்தான் ராகேஷ். அதைக் கண்டு அனைவரின் மனமும் நெகிழ்ந்திருந்தது.

அன்றிரவு தங்கள் அறையில் குட்டி ஆதுவை தூங்க வைத்துக் கொண்டிருந்த மதியின் அருகில் வந்து நின்ற கதிர் மகனை எட்டி பார்த்தான்.

"தூங்கிட்டானா...?"

"ம்..." என்றவள், "தேங்க்ஸ் பாவா..." என்றாள் ஆத்மார்த்தமாக...

"நீ அடி தான் வாங்க போற... இதுக்கெல்லாமா தேங்க்ஸ் சொல்வாங்க... ஆது எனக்கும் நண்பன் தான்..."

"எனக்குத் தோழனா இருந்து என்னைத் தன் தோளில் தாங்கிய ஆதுவை... நான் தாயாய் மடி தாங்கி காலம் பூராவும் பத்திரமாய்ப் பார்த்துக்குவேன் பாவா..." என்றவள் அடக்க மாட்டாமல் விம்ம... அவளைத் தன் வயிற்றோடு ஆறுதலாய் அணைத்துக் கொண்டான்.

அப்போது அங்கே வந்த நிலா, "அப்பா கதை சொல்லுங்க..." என்க... அவளைத் தூக்கி கொண்டு படுக்கையில் படுக்க வைத்தவன் அவளுக்குக் கதை சொல்ல ஆரம்பித்தான். கதை சொல்லும் கணவனைப் பார்த்தவளுக்கு அவனின் மாற்றம் பெரிதும் வியப்பை தருவதாய்... அவனின் முன் கோபம் கூட மகள் பிறந்தது முதல் குறைந்து போனது. அவனை நினைத்து ஆனந்தத்தில் அவளின் கண்களில் கண்ணீர் துளிர்த்தது. அதைக் கண்டு அவன் மகளிடம்,

"குட்டிம்மா... உங்க அம்மா சும்மா சும்மா அழுறா...எனக்கு இந்த அழுகாச்சி அம்மா பிடிக்கல... உனக்கு...?"

என்றவனை முறைத்து பார்த்தாள் மதி.

"எனக்கும் தான்..." என்றாள் மகள் தந்தைக்குத் தப்பாமல்...

"நாளைக்குக் கடைக்குப் போய் நாம வேற அம்மா வாங்காலாமா...?" என்ற தந்தைக்கு,

"ஓ... போலாமே..." கடைவீதிக்குச் செல்லும் உற்சாகம் நிலாவிடம்...

"வேற அம்மாவா வேணும் உனக்கு...? உன்னை..." அவளை அடிக்க மதி வர... அவளிடமிருந்து லாவகமாய் மகளைக் கதிர் காப்பாற்ற... அதில் கோபமுற்ற மதி,

"போ... நீ வேற அம்மா வாங்கினா... நான் வேற பாப்பா வாங்கிக்குவேன்..." மகளிடம் சின்னக் குழந்தையாய் முறுக்கி கொள்ள...

"எனக்கு வேற அம்மா வேணாம்... நீங்க தான் வேணும்..." தகப்பனிடமிருந்து அன்னையிடம் சரண்டைந்த அந்த இளம்கன்று அன்னையை அணைத்து அவள் கன்னத்தில் முத்தமிட... அதில் மகிழ்ந்தது அன்னையவள் நெஞ்சம்.

"உங்க அப்பாவுக்கு வேற அம்மா தான் வேணுமான்னு கேட்டு சொல்லு குட்டிம்மா..." மதியின் பேச்சில்,

"அம்மா, மகள் ஒண்ணு சேர்ந்துக்கு அப்புறம்... நான் மட்டும் தனியா இருந்து என்ன செய்ய... எனக்கு என் மதி பேபி தான் வேணும்... என் மனைவியே சரணம்..." இரு கரம் கூப்பி மனைவியிடம் அவன் சரணடைய... அதைக் கண்டு நிலா அவனை ஆசிர்வாதம் செய்வது போல் தன் பிஞ்சு கைகளை அவன் தலை மேல் குவிக்க... அதைக் கண்டு மதி கலகலவென வெள்ளி சதங்கையாய் சிரித்தாள். மனைவி சிரிக்கும் அழகில் மயங்கிய அந்தக் காதல் கணவன் என்றும் போல் இன்றும் அவளைத் தன் மனதில் நிறைத்துக் கொண்டிருந்தான்.

வாழ்க்கையில் பாதை மாறிய கதிரை... "வா... நாளை நாமாக...!!!" என்று நம்பிக்கையூட்டிய மதி... அதே போல் மதியின் வாழ்க்கை ஸ்தம்பித்த போது அந்தப் பொறுப்பைத் தன் கையில் எடுத்துக் கொண்ட கதிர்... இருவரின் காதலும் ஒன்றுக்கு ஒன்று சளைத்தது அல்ல... இருவரின் காதலும் போற்றதலுக்குரியதே... இனி அவர்களின் வாழ்க்கையில் சந்தோசம் மட்டுமே...!!!

காமக் காட்டின் இருட்டில் என்னைத் தொலைத்து...
என் வாழ்வை தொலைத்து... என் பெற்றோரை தொலைத்து...
சமுதாயம் என்ற வெட்டவெளியில் ஆடைகளற்று கூசி நின்ற என்னை...
வானில் தோன்றிய விடிவெள்ளியாய் என்னை வழிகாட்டியவளே...
வரம் தர வந்த தேவதையே... வரமாய் வந்தால்...???
தேவதையாய் வந்து என்னை ரட்சித்தவளே...
உன் அன்புக்கு... நேசத்துக்கு... காதலுக்கு...
என் உயிர் மட்டுமே ஈடு இணையடி...
என் இதயத்தைச் சமர்ப்பிக்கிறேன் உன் காலடியில்...
நம் காதலுக்குப் பரிசாக... சாட்சியாக...!!!

நாமாகினோம்...!!!